தாயுமான சுவாமிகள் பாடல்கள்

வடிவேலு முதலியார்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

"அறிவுச் செல்வங்கள் அனைத்தையும்
தமிழுக்குக் கொண்டுவர வேண்டும்.
இனிவரும் நூற்றாண்டுகளுக்கும்
அருந்தமிழை ஆற்றல் படுத்த வேண்டும்"

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
புரட்சித் தலைவி
அம்மா அவர்கள்

தாயுமான சுவாமிகள் பாடல்கள்

வடிவேலு முதலியார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

நூல் விவரக் குறிப்பு

நூல் தலைப்பு	: **தாயுமான சுவாமிகள் பாடல்கள்**
பதிப்பாசிரியர்	: வடிவேலு முதலியார்
வெளியீட்டாளரும் பதிப்புரிமையும்	: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மை சாலைமையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை - 600 113.
தொலைபேசி எண்	: 044 22542992
வெளியீட்டு எண்	: 811
மொழி	: தமிழ்
பதிப்பு ஆண்டு	: 2014 : முதற்பதிப்பு
பயன்படுத்திய தாள்	: 16 கிகி டி.என்.பி.எல்.வெள்ளை
நூலின் அளவு	: 1/8 டெம்மி
எழுத்தின் அளவு	: 11 புள்ளி
பக்க எண்ணிக்கை	: 624
அச்சுப்படிகளின் எண்ணிக்கை	: 1200
விலை	: ரூ.390 (ரூபாய் முன்னூற்றி தொன்னூறு மட்டும்)
பொருண்மை	:
அச்சகம்	: ராஜ் எண்டர்பிரைஸஸ் திருவல்லிக்கேணி சென்னை - 600 005.
	: அரிய நூல் வெளியீடு - 3

முனைவர் **கோ.விசயராகவன்** எம்.ஏ., எம்.ஃபில்.,எம்.பிஏ.,பி.எட்., பிஎச்.டி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

அணிந்துரை

தமிழ்மொழியைப் பக்தியின் மொழி என்று வாய்மக்கச் சொல்லி மகிழ்ந்தனர். அதற்குக் காரணம் வேறு எம்மொழி யிலும் இல்லாத அளவு சாத்திரங்களும் தோத்திரங்களும் மிகுதியாக தமிழ்மொழியில் காணப்படுதலே எனலாம். பன்னிருசைவத் திருமுறைகள், நாயாயிரத் திவ்ய பிரபந்தம், பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம், திருப்புகள், திருவருட்பா என ஆயிரக்கணக்கான பக்திப் பாடல்கள் தமிழ்மொழியில் பெருகிச் சிறந்துள்ளன. இவை தவிர பலவகையில் தனிப்பாடல்களும் தடம் பதித்துள்ளன. அந்த வரிசையில் இடம் பெறுவதே தாயுமான சுவாமிகள் பாடல்கள் என்னும் இத்தொகுப்பும் அடங்கும். பதிகங்கள் கண்ணிகள், வண்ணங்கள் என அவர் பாடிய பாடல்கள் ஏறக்குறைய 1452 என்பர்

தாயுமானார் கி.பி.17ஆம் நூற்றாண்டினர். அவருடைய தந்தையார் திரு.கேடிலியப்ப பிள்ளை, தாயார் கெஜவல்லி யம்மை. அவருடைய மனைவி மட்டுவார் குழலி என்பவர் மகன் கனகசபாபதி. அன்னையும் துணையும் அமரரான பிறகு வாழப் பிடிக்காதவராகி துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். திருச்சி மலைக்கோட்டையில் எளியராய் அருளும் தாயுமானார் சுவாமி திருவருளால் பிறந்தவர் என்பதால் பெற்றோர் அவருக்கும் தாயுமானார் சுவாமி எனப் பெயரிட்டு அழைத்தர். அதுவே நிலைத்து விட்டது. தத்துவச் செறிவும், எளிய சொல் ஆட்சியும் பழகுதமிழில் கைவரப் பெற்றுள்ளது அவருடைய பாடல்கள். பொருள், வணக்கம், பரம் பொருள் வணக்கம், நாயகிப் பதிகம், பெரிய நாயகியம்மைப் பதிகம், கருணாகரப் பதிகம், கண்ணிகள் என மொத்தம்1452 பாடல்களைப் பாடியுள்ளார். அவருடைய

பாடல்கள் தொகுக்கப்பட்டு பல பதிப்புகள் வந்திருந்தாலும் வடிவேறு முதலியார் தெளிவுரையுடன் வெளிவரும் இந்நூல் தனித்தன்மை கொண்டது. எளிதில் அனைவர்க்கும் கிடைக்கும் வகையில் இந்நூல் அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் மூலம் வெளிவந்துள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் மீதும், தமிழர் மீதும், தமிழ்நாட்டின் மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பிரியன. ஆதலால், இவற்றின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றேன்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாட்டுத் துறை, தொல்லியல் துறை (ம) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கே. சி. வீரமணி அவர்களுக்கு நன்றி.

தமிழ் வளர்ச்சிப் பணிகளில் ஆர்வத்தோடு நாட்டம் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றிவரும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும் இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் சிறப்பான முறையில் மறு அச்சுப் பெற முனைந்து உழைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன அனைத்துப் பணியாளர்களுக்கும் அச்சகத்தார்க்கும் எம் நன்றி.

இயக்குநர்

உள்ளே

தாயுமான சுவாமிகள் வரலாறு
தாயுமான சுவாமிகளின் பாடல்கள்
அருள்வாக்கிய அகவல்
திருப்பாடற்றிரட்டு 1
திருவருள்விலாசப் பரசிவ வணக்கம் 1
பரிபூரணானந்தம் 8
பொருள்வணக்கம் 25
சின்மயானந்தகுரு 37
மௌனகுரு வணக்கம் 52
கருணாகரக் கடவுள் 63
சித்தர்கணம் 74
ஆனந்தமானபரம் 87
சுகவாரி 97
எங்கும் நிறைகின்ற பொருள் 108
சச்சிதானந்த சிவம் 120
தேசோமயானந்தம் 132
சிற்சுகோதய விலாசம் 145
ஆகாரபுவனம் 159
தேன்முகம் 189
பன்மாலை 209

நினைவொன்று 216
பொன்னைமாதரை 222
ஆரணம் 250
சொல்லற்கரிய 257
வம்பனேன் 261
சிவன்செயல் 265
தன்னையொருவர் 270
ஆசையெனும் 275
எனக்கெனச் செயல் 300
மண்டலத்தின் 310
பாயப்புலி 316
உடல் பொய்யுறவு 340
ஏசற்ற அந்நிலை 373
காடுங்கரையும் 376
எடுத்த தேகம் 378
முகமெலாம் 379
திடமுறவே 379
தன்னை 382
ஆக்குவை 383
கற்புறு சிந்தை 383
மலைவளர் காதலி 386
அகிலாண்ட நாயகி 393
பெரியநாயகி விருத்தம் 394
தந்தை தாய் 395
பெற்றவட்கே 397
கல்லாலின் 401
பராபரக் கண்ணி 410
பைங்கிளிக் கண்ணி 485
எந்நாட்கண்ணி 497
1. தெய்வ வணக்கம் 497
2. குருமரபின் வணக்கம் 499
3. அடியார் வணக்கம் 501

4. யாக்கையைப் பழித்தல் 503
5. மாதரைப் பழித்தல் 505
6. தத்துவ முறைமை 508
7. தன்னுண்மை 512
8. அருளியல்பு 514
9. பொருளியல்பு 517
10. ஆனந்தவியல்பு 520
11. அன்பு நிலைமை 523
12. அன்பர் நெறி 526
13. அறிஞருரை 528
14. நிற்குநிலை 531
15. நிலைபிரிந்தோர் கூடுதற்குபாயம் 535
காண்பேனோ என்கண்ணி 538
ஆகாதோ என்கண்ணி 544
இல்லையோ என்கண்ணி 548
வேண்டாவோ என் கண்ணி 549
நல்லறிவே என் கண்ணி 550
பலவகைக்கண்ணி 551
நின்றநிலை 555
பாடுகின்ற பனுவல் 556
ஆனந்தக் களிப்பு 557
அகவல் 566
வண்ணம் 568
தாயுமானவர் திருப்பாடல் முதற் குறிப்பு 572

செந்திலாண்டவன் துணை

தாயுமான சுவாமிகள் பாடலின் தொகை

"விண்ணுறுந்தே வர்கள்முனிவர் கணங்கள்சித்தர்
புகழ்மௌனி வியப்பால் ஞானத்
தண்ணுறுதண் டமிழ்மாலை ஐஞ்ஞூற்றெண்
பத்தேழுந் தாயு மானோன்
எண்ணுறங்கண் எண்ணூற் றறுபத்தைந்து
அகல்வண்ணம் இரண்டும் பாடி
மண்ணுறுநால் வகைமாந்தர் தமக்காகப்
பக்குவர்பால் வைத்தான் அன்றே."

-தனிப்பாடல்

1 முதல் 39 முடிய பாடல்கள்	587
40 முதல் 54 முடிய கண்ணிகள்	863
அகவல், வண்ணம்	9
ஆக	1459

தாயுமானசுவாமிகள் பாடலின் சிறப்பு

சிராப்பள்ளி மலைமேவுந் தட்சிணா
மூர்த்தியருள் நல்கப் பெற்று
பராபரமும் எந்நாளும் பைங்கிளியும்
பலபாவும் பாடிப் பாடித்
தராதலமா னிடர்க்கெல்லாந் தண்ணமிர்தாய்த்
தந்தருளுந் தாயு மான
நிராமயனார் அருட்பெரிய கவிதையினால்
பொருளதனை நினைந்து வாழ்வோம்.

-தனிப்பாடல்

தாயுமான சுவாமிகள் வரலாறு

அண்ணலை வானவர் ஆயிரம் பேர் சொல்லி
உன்னுவர் உள்மகிழ்ந்து உண்ணின்று அடிதொழக்
கண்ணவன் என்று கருதும் அவர்கட்குப்
பண்ணவன் பேரன்பு பற்றி நின்றானே.

-திருமந்திரம் 1506

இன்று வேதாரணியம் என்னும் திருமறைக்காடு சோழநாட்டில் உள்ள தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம். அத்திருமறைக்காட்டில் வேளாளர் குடியில் தோன்றியவர் **கேடிலியப்ப பிள்ளை**. கேடு இல் அப்பன் என்னும் இறைவன் பெயர் அது! அவர் **கெஜவல்லியம்மையை** மணந்து இல்லறம் போற்றினார். அவருடைய தூய வாழ்வைக் கண்ட சைவ ஆதீனத்தார் திருமறைக்காட்டு மாமறைக் காடனார் திருக்கோயிலின் இறைபணியாளராகப் பணித்தனர். கேடிலியப்ப பிள்ளை வெகு திறமையுடனும் இறைப்பற்றுடனும் பணியாற்றி வந்தார். அவருக்குச் சிவசிதம்பரம் என்ற மகன் உண்டு. தம்முடைய அண்ணன் மகப்பேறு இல்லாது வருந்த, தம் மகனை வளர்ப்புப் பிள்ளையாகத் தந்தார்.

திருச்சியில் முத்துக்கிருஷ்ண நாயக்கர் (கி.பி.1602-1608) என்பவர் நாயக்கர் மன்னராகத் திகழ்ந்தார். திருமறைக் காட்டுக்கு அவர் வர, அன்புடனும் மகிழ்வுடனும் கேடிலியப்ப பிள்ளை அவரை வரவேற்று, இறை வழிபாட்டுக்குத் துணை செய்தார். மன்னர், அவருடைய பண்பையும் திறமையையும் அறிந்து, தம்முடைய அரசில் பெருங்கணக்கர் (பெரிய சம்பிரதி) பொறுப்பினை வழங்கினார். முத்துக்கிருஷ்ண நாயக்கரை அடுத்து (1608-1625) முத்து வீரப்ப நாயக்கர் ஆட்சிக்கு வந்தார்.

கேடிலியப்ப பிள்ளைக்கு மலைக்கோட்டையிலுள்ள தாயுமானவர் திருவருளால் ஓர் ஆண் மகவு பிறந்தது!

தாயுமானவர் என்று பெயரிட்டு வளர்த்துத் தந்தையின் கடமையாகிய சான்றோனாக்கும் செயலைச் சிறப்பாகச் செய்தார்.

தாயுமானவர் இளமையிலே திருவருட் செல்வர்களைப் போன்று அறிவு, அறம், இலக்கியம், தருக்கம், சமயக் கல்வி, சித்தர் பாடல்கள் யாவையும் ஆழ்ந்து கற்றார்! சிறந்த கவிதை எழுதும் ஆற்றலும் அடைந்தார். சைவாச்சாரியார்களிடம் தீட்சைகளைப் பெற்றார். பன்னிரு திருமுறைகள், திருப்புகழ், பட்டினத்தார் பாடல்கள், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி யாவையும் முறையாகக் கற்றுத் தெளிந்தார். சைவ ஒழுக்கச் சீலர் என்னும் சிறப்புற்றார். தமது தந்தையார் இறைவன் திருவடி சேர்ந்ததும், அவர் ஆற்றிய பெருங்கணக்கர் பொறுப்பேற்றார். அப்போது விசயரங்க சொக்க நாய்க்கர் (1627-1658) மன்னர், அரசியார் மீனாட்சி.

திருச்சி மலைக்கோட்டைத் திருவாயிலின் அருகே இருக்கும் மடாலயத்தில், அப்போது மௌனகுரு என்பார் வந்தருளினார். அவருடைய சிறப்பால் அம்மடம் மௌன மடம் என்னும் பெயர் பெற்றது. அம்மடத்துள் திருமுருகன் கோயில் உண்டு. வழக்கம் போல் திருச்சிராமலைத் தாயுமானவரை வழிபட்டு முருகக் கடவுளை வணங்கும் போது, மௌன குருவைக் கண்டார்; வணங்கினார்; மௌன குருவின் அருள் பெற்றார்; பரிச தீட்சை செய்து வைத்தார். சிவஞான சித்தியார் என்னும் நூலையும் கற்பித்தார். ஞானம், யோகம் என்பனவும் கற்பித்தார் மௌன குருவின் அருள் பெற்ற நம் தாயுமானார், அம்மலையில் கல்லாலடிக்கீழ் உள்ள இறைவன் முன்பு நிட்டையில் நின்றார். அப்போது, திருவருள் விலாசப் பரசிவ வணக்கம், பொருள் வணக்கம், பரிபூரணானந்தம், சின்மயானந்த குரு பதிகம், மௌன குருவணக்கம், அகிலாண்ட நாயகிப் பதிகம் ஆகியவற்றைப் பாடி அருளினார்.

தாயுமானவர் அவர்களின் சிறந்த பண்பு, அழகு கண்ட அரசி மீனாட்சி, அவரை விரும்பிக் கலந்திட முயன்றாள். தாயுமானார், அரசிக்குத் “தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும்” என்னும் அறம் கூறிவிட்டுத் தமது சிறிய தாயின் மகன் **அருளையப் பிள்ளையுடன்** திருச்சியை விட்டுச் சென்றார். நல்லூரில் கருணாகரக்

கடவுள் பதிகம் பாடினார். பின்பு விராலி மலைக்குப் புறப்பட்டுச் சென்று, அங்கே தங்கிச் சித்தர்களுடன் நெருங்கிப் பழகினார். சித்தர்கணம், ஆனந்தமானபரம், சுகவாரி எனப் பல பதிகங்கள் அருளினார். அங்கிருந்து புதுக்கோட்டை சென்ற சுவாமிகள் திருக்கோகர்ணம் எனப்படும் கபிலையை அடைந்து அம்மனைப் பாடிப் பரவினார். பெரிய நாயகியம்மைப் பதிகம் பாடினார். அங்கிருந்து இராமேசுவரம் சென்று இராமநாதரை வழிபட்டு மலைவளர் காதலியம்மைப் பதிகம் பாடினார்.

அவருடைய அண்ணன் சிவசிதம்பரம் வந்து தாயுமானவரைத் திருமறைக்காட்டிற்கு அழைத்து வந்தார். மௌனகுரு அருளிய படியே மட்டுவார் குழலி என்னும் பெண்ணை மணந்து இல்லறம் நடத்தி வந்தார். கனகசபாபதி என்னும் ஆண் மகவு பிறந்தது. அந்த இல்லற வாழ்விலும் பல பதிகங்களும் கண்ணிகளும் பாடியருளியுள்ளார். அவர் தன்னுடைய தாயையும் மனைவியையும் இழந்தார். தன் மகனைத் தன் அண்ணனிடம் விட்டு விட்டு கோவண ஆசை புனைந்த துறவு மேற்கொண்டார். அவருடன் அருளைய்ய பிள்ளையும் சென்றார். திருச்சி மலைக்கோட்டை மௌன மடம் வந்து, குருவின் அருள் பெற்றுக் கி.பி. 1644 முதல் சில ஆண்டுகள் தங்கிக் குருவிடம் விடைபெற்று இராமநாதபுரம் வந்தார்.

காட்டூரணி எனுமிடத்தில் ஒரு புளிய மர நிழலில் நிட்டையில் அமர்ந்தார். அது கண்ட இலட்சுமி என்பவர், நீர் நிலையுடன் பூங்காவும் அமைத்து, நிட்டை கொள்ளச் செய்தார். அதுவே இன்று இலட்சுமிபுரம் என்று அழைக்கப்படுகிறது. அங்கே கி.பி. 1661இல் தைத் திங்கள் விசாகத்தன்று மாலை இறைவன் அடி சேர்ந்தார்.

✪ ✪ ✪

தாயுமான சுவாமிகளின் பாடல்கள் ஆய்வுரை

"கோடி மா தவங்கள் செய்து
குன்றினார் தம்மை யெல்லாம்
வீடவே சக்க ரத்தால்
எறிந்துபின் அன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயில்
திரு இராமமேச்சுரத்தை
நாடிவாழ் நெஞ்ச மேநீ
நன்னெறி யாகும்அன்றே"

என்று அப்பரால் போற்றப்படும் இராமனால் கட்டி வணங்கப்பட்ட திருக்கோயிலில் இராமநாதர் மலைவளர் காதலியுடன் அருள்பொழியும் திருத்தலம் திரு இராமேச்சுரம்.அத்தலத்தில் இறைவன் திருவடி சேர்ந்த தாயுமானவர் தன்னை அறிந்த துறவி! இறைவன் திருவருள் பெற்றவர். மனம், மொழி, மெய் மூன்றாலும் தூய்மையாக வாழ்ந்த உண்மைத் துறவி ஆவார். 'தலைப்பட்டார் தீரத் துறந்தார்!" என்றும், 'அடல் வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும், வேண்டிய எல்லாம் ஒருங்கு' என்றும், திருவள்ளுவர் இயம்பிய உண்மைத் துறவு மேற்கொண்டவர் தாயுமான சுவாமிகள். அவர் இறைவன் அருளால் அளித்த பாடல்கள் ஆயிரத்து நானூற்று ஐம்பத்திரண்டு (1452) திருப்புகழ் போன்று இசைபொங்கும் இனிய இறைப் பற்றூட்டும பாடல்கள் அவை! சரியை கிரியை, யோகம், ஞானம் கைவரப் பெற்றவர்.

ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா
ஞானத்தின் மிக்கார் நரரின்மிக் காரே!

-திருமந்திரம் 1467

ஞானநிலை அடையப்பெற்ற தாயுமான சுவாமிகள் சமரச சன்மார்க்கம் என்னும் தமிழ் மரபு நெறியைப் போற்றினார்.

சாற்றும் சன்மார்க்கமாம் தற்சிவ தத்துவத்
தோற்றங்கள் ஆன சுருதிச் சுடர்கண்டு
சீற்றம் ஒழிந்து சிவ யோக சித்தராய்க்
கூற்றத்தை வென்றார் குறிப்பறிந் தார்களே!
-திருமந்திரம்:1477

திருமூலர் வழிவகுத்தது சன்மார்க்கநெறி-ஞானானுபூதியில் இன்பமும், தான் அவனாய் உறலான சன்மார்க்கமே" என்றார்.

எல்லா உலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்
நல்லார் உள்ளத்து மிக்கருள் நக்கலால்
எல்லாரும் உய்யக் கொண்டிங்கே அளித்தலாற்
சொல்லார்ந்த நற்குருச் சுத்த சிவமே.
-திருமந்திரம்: 157

சிவகுரு தரிசனம் எங்கும் நிறைந்து இலங்கும் இறைவன் நல்ல உள்ளமுடைய உயர்ந்தோர் வழியாக உலக உயிர் இன்பம் பெற்றிட அருள் மொழிகளை அருளுவன் என்னும் திருமந்திர நெறிக்கு ஏற்ப இறைவன் தாயுமானவர் வழியாகத் தமிழ் அமிழ்து ஊற்றி உயிர்கள் தேன் சுரக்கும் உள்ளம் பெற்றிடச் செய்துள்ளார்.

ஐவகை யெனும் பூத மாதியை வகுத்ததனுள்,
அசரசர பேதமான
யாவையும் வகுத்து, நல் லறிவையும் வகுத்து, மறை
யாதி நூலையும் வகுத்துக்,

சைவமுத லாமளவில் சமயமும் வகுத்து, மேற்
சமயங் கடந்த மோன
சமரசம் வகுத்தநீ! உன்னை யான் அணுகவும்
தண்ணருள் வகுக்கவிலையோ?

பொய் வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்யர் அறிவில்
போதபரி பூரண வகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்ற பொருளே!

தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே!
சித்தாந்த முத்தி முதலே!
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே!
சின்மயா னந்த குருவே!

கடவுள் காட்சி: சின்மயானந்தகுரு:4

தாயுமானவரின் இப்பாடலைப் பாம்பன் சுவாமிகள், மறைமலை யடிகள், முனைவர் மு. வரதராசனார், தமிழ்த் தென்றல் திரு.வி.கலியாண சுந்தரனார் எனப் பல அறிஞர் பெருமக்களும் துறவிகளும் போற்றிப் பாராட்டியுள்ளனர். இப்பாடலில் தாயுமானார், ஐவகை எனும் பூதம் ஆதியை வகுத்து அதனுள், அசர சர பேதமான யாவையும் வகுத்து, நல்லறிவையும் வகுத்து, மறையாதி நூலையும் வகுத்துச் சைவம் முதலாம் அளவில் சமயமும் வகுத்து, மேற் சமயங்கடந்த மோன சமரசம் வகுத்த நீ! உன்னை நான் அணுகவும் தண்ணருள் வகுக்கவில்லையோ? பொய் வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே! பொய்யிலா மெய்யர், அறிவில் போகு பூரண அகண்டிதாகாரமாய்ப் போக்கு வரவற்ற பொருளே! என்னும் படிநிலையில் இறைவனிடம் முறையிடும் ஓர் ஒழுங்கு முறையை வகுத்தருளியுள்ள சிறப்பே, இப்பாடலின் பெருமைக்கும் அருமைக்கும் ஏதுவாகும்.

இவ்வாறு முறையிடல், வணங்கிடல், வேண்டுதல் தமிழர் தொன்று தொட்டுப் போற்றிவரும் இறை, வழிபாட்டு நெறியாகும். ஆதிபகவன் முதற்றே உலகு, வாலறிவன், மலர் மிசை ஏகினான், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்கு உவமையில்லான், அறவாழி அந்தணன், எண்குணத்தான், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணன் என்று திருவள்ளுவர் வழிகாட்ட,

தீயினுள் தென்றல் நீ! பூவினுள் நாற்றம் நீ!
கல்லினுள் மணியும் நீ! சொல்லினுள் வாய்மை நீ!
அறத்தினுள் அன்பு நீ! மறத்தினுள் மைந்து நீ!
வேதத்து மறை நீ! பூதத்து முதலும் நீ!
வெஞ்சுடர் ஒளியும் நீ! திங்களும் அணியும் நீ!
அனைத்தும் நீ! அனைத்தின் உட்பொருளும் நீ!...
பிறவாப்பிறப்பு இலை! பிறப்பித்தோர் இலையே!...
தொல்லியல் புலவ! நல் யாழ்ப்பாண!

என்று பரிபாடலில் கடுவன் இளவெயினார் திருமாலைப் போற்றி, யாம் இரப்பவை, பொருளும் பொன்னும் போகமும் அல்ல, நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும், உருள் இணர்க் கடம்பின் ஒளி தாராயோ என்று அவரே, முருகனை வேண்டுவர். சமரச சன்மார்க்க நெறிக்கு வித்திட்டவர் அவர் என்றால் தவறாகாது.

இந்தச் சங்ககால இறை நெறியிலேயே மாணிக்க வாசகர், 'அறிவுறுத்தல்' என்னும் திருச்சதகத்துள்,

"நாடகத்தால் உன்னடியார் போல்
நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான்
மிகப்பெரிதும் விரைகின்றேன்!
ஆடக்க சீர் மணிக்குன்றே! இடையறா
அன்பு உனக்கு என்
ஊடகத்தே நின்று உருகத்
தந்தருள் எம் உடையானே!"

என்று இறைவன் உயிர்களிடத்து அருள் பொழிய, அவற்றின் உள்ளத்தே அன்பு ஊற்றுத் தொடர்ந்து சுரந்திட வேண்டுகின்றார். தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானைப் பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற், கண்ணார் சுழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட, அண்ணாமலையானைப் பாடுதுங்காண் அம்மானை, என்று தன்னை ஒரு பெண்ணாக வைத்து இறைவன், நாயினைப் போன்ற தன்னை ஆட்கொண்டு அருளிய பெருமையை வியந்திடுவார். இந்த வியப்புணர்வு தாயுமானவர் இராமேசுவரத்தில் பாடிய பதிகங்களில் நிறைந்திடல் காணலாம்.

எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே!
ஆடிஓய் பம்பரம் போல் ஆடையுடன் எங்கும்
உனைத்
தேடி ஓய்கின்றேன்! என் ஓய்வேன்! பராபரமே!
தம்முயிர் போல் எவ்வுயிருந்தானென்று
தண்ணருள்கூர் செம்மையருக்கு ஏவல் என்று
செய்வேன் பராபரமே!
துன்பக் கண்ணீரில் துளைந்தோற்கு உன் ஆனந்த
இன்பக் கண்ணீர் வருவது எந்நாள் பராபரமே!

"பொய்யினேன்! புகையினேன்! கொலையினேன்! நின்னருள்
புலப்பட அறிந்து நிலையாப்
புன்மையேன்! கல்லாத தன்மையேன்!நன்மைபோற்
பொருளலாப் பொருளை நாடும்
வெய்யனேன்! வெகுளியேன்! வெறியனேன்! சிறியனேன்!
வினையினேன்! என்று என்னை நீ
விட்டுவிட நினைவயேல், தட்டழிவ தல்லாது
வேறு கதியேது புகலாய்!"

"நாய்க்கும் கடையானேன் நாதாநின் இன்பமயம்
வாய்க்கும் படியினியோர் மந்திரந்தான் இல்லையோ?"

என்றெல்லாம் இறைவனிடம் தாயுமானவர் முறையிடுகிறார். மாணிக்க வாசகர்.

உண்டோர் எண்பொருள் என்றுணர் வார்க்கெலாம்
பெண்டிர் ஆண்அலி என்று அறியொண்கிலை!
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டும் கண்டிலேன் என்னகண் மாயமே!

என்று இறைவன் காட்சியைக் கண்டு, அருள்தேன் உண்டு வியப்பார். அவரைப் போன்றே தாயுமானாரும் ஆனந்தக் களிப்பு அடைந்துள்ளார்.

"ஆதியநாதியு மாகி- எனக்
கானந்த மாயறி வாய் நின்றிலங்குஞ்
சோதி மவுனியாய்த் தோன்றி- அவன்
சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி!

சங்கர சங்கர சம்பு- சிவ, சங்கர, சங்கர சம்பு!
கடலின் மடைவிண்டதென்ன - இரு
கண்களும் ஆனந்தக் கண்ணீர் சொரிய
உடலும் புளகித மாக - என
துள்ள முருக உபாயஞ் செய்தாண்டி -சங்கர"

நலமேதும் அறியாத என்னைச் - சுத்த
நாதாந்த மோனமாம் நாட்டந் தந்தே சஞ்
சலமேதும் இல்லாமல் எல்லாம் - வல்லான்
தாளால் என் தலைமீது தாக்கினான் தோழி! - சங்கர"

என்றெல்லாம் இறைவன் அருள் அமிழ்து உண்டு, களித்துக், கண்ணீர் பொழிந்து, தன்னை யறிந்து, சும்மா இருக்கும் சுகம் கண்ட மோன நிலை இன்பமெல்லாம் இந்த வையத்து உயிரெலாம் பெற்று, உயர்ந்து சிறந்து இன்புற்றிட எண்ணி, இறைவனைத் தொழுது, அவன் அருளாலே அவன் தாளில் கலந்தவர் தாயுமானவர். தமக்கு முன் வாழ்ந்த அருணகிரியார், சிவவாக்கியர், திருமூலர், பட்டினத்தார், அப்பர், சுந்தரர், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், மெய்கண்டார், அருள்நந்தி என்று இறையருள் பெற்ற யாவரையும் போன்று, தாமும் அருள்பெற வேண்டும் என்னும் இறையருள் வேண்டும் பாதையைப் பட்டினத்தாரைப் போல் போற்றியுள்ளார்.

✪ ✪ ✪

தாயுமானசுவாமிகள் மாணாக்கர்
அருளையர்
தாயுமானசுவாமிகளைத் துதி செய்த

அருள்வாக்கிய அகவல்

திருவளர் கருணைச் சிவானந்த பூரணம்
ஒருவரும் அறியா ஒருதனிச் சித்து
நவந்தரு பேதமாய் நாடக நடத்துற்
பவந்தனை நீக்கிப் பரிந்தருள் பராபரங்
கண்ணுங் கருத்துங் கதிரொளி போல

நண்ணிட எனக்கு நல்கிய நன்மை
ஒன்றாய்ப் பலவாய் ஒப்பிலா மோனக்
குன்றாய் நிறைந்த குணப்பெருங் குன்றம்
மண்ணையும் புனலையும் வளியையுங் கனலையும்
விண்ணையும் படைத்த வித்திலா வித்து

பந்த மனைத்தையும் பாழ்பட நூறியென்
சிந்தையுட் புகுந்த செழுஞ்சுடர்ச் சோதி
விள்ளொணா ஞானம் விளங்கிய மேலோர்
கொள்ளைகொண் டுண்ணக் குறைவிலா நிறைவு
தாட்டா மரைமலர்த் தாள்நினைப் பவர்க்குக்

காட்டா இன்பங் காட்டிய கதிநிலை
வாக்கான் மனத்தான் மதித்திட அரிதென
நோக்கா திருக்க நோக்கிய நோக்கம்
ஆதியாய் அறிவாய் அகண்டமாய் அகண்ட
சோதியாய் விரிந்து துலங்கிய தோற்றம்.

பரவெளி தன்னிற் பதிந்த வென் னுளத்தின்
விரவி விரவி மேற்கொள்ளும் வெள்ளஞ்
சுட்டுக் கடங்காச் சோதி யடியார்
மட்டுக் கடங்கும் வான்பெருங் கருணை
எல்லைக் கடங்கா ஏகப் பெருவெளி

தில்லைப் பொதுவில் திருநடத் தெய்வம்
வாதவூர் எந்தையை வரிசையாய் விழுங்கும்
போதவூர் மேவுகர்ப் பூர விளக்குச்
சுடரை அகண்டத் தூவெளி எல்லாந்
திகழவே காட்டுஞ் சின்மய சாட்சி.

செழுந்தமிழ் அப்பரைச் சிவலிங்க மாக்கி
விழுங்கிய ஞான வித்தக வேழம்
எழில்தரு பட்டினத் திறைவரை யென்றும்
அழிவிலா இலிங்க மாக்கிய அநாதி
சாந்த பூமி தண்ணருள் வெள்ளம்

ஆர்ந்த நீழ லசையாக் ககனம்
பரவுவார் நெஞ்சிற் பரவிய மாட்சி
இரவுபக லற்ற ஏகாந்தக் காட்சி
ஆட்சிபோ லிருக்கும் அகிலந் தனக்குச்
சாட்சியா யிருக்குந் தாரகத் தனிமுதல்

ஆணும் பெண்ணும் அலியுமல் லாததோர்
தாணுவாய் நின்ற சத்தாந் தனிச்சுடர்
எள்ளும் எண்ணெயும் எப்படி அப்படி
உள்ளும் புறம்பும் உலாவிய ஒரு பொருள்
அளவிலா மதத்தொறும் அவரவர் பொருளென

உளநிறைந் திருக்கும் ஒரு பொற் பணிதி
துள்ளு மனப்பேய் துடிக்கத் தறிக்கக்
கொள்ளு மோனவாள் கொடுத்திடு மரசு
பெரிய பேறு பேசாப் பெருமை
அரிய உரிமை அளவிலா அளவு

துரிய நிறைவு தோன்றா அதீதம்
விரியுநல் லன்பு விளைத்திடும் விளைவு
தீராப் பிணியாஞ் செனன மறுக்க
வாரா வரவாய் வந்தசஞ் சீவி
ஆலைக் கரும்புபா கமுதக் கட்டிநீள்

சோலைக் கனிபலாச் சுளைகத லிக்கனி
பாங்குறு மாங்கனி பால்தேன் சருக்கரை
ஓங்குகற் கண்டுசேர்த் தொன்றாய்க் கூட்டி
அருந்திய ரசமெனறிஞர் சமாதியில்
பொருந்திய இன்பம் பொழிசிற் சுகோதயம்

எங்கணும் நிறைந்த இயல்பினை எனக்குச்
செங்கையால் விளங்கத் தெரித்தமெய்த் தேசிகன்
தன்னையறி வித்துத் தற்பர மாகி
என்னுளத் திருத்தருள் ஏகநாயகன்
அடிமுடி இல்லா அரும் பொருள் தனக்கு

முடியடி இதுவென மொழிந்திடு முதல்வன்
மெய்யலான் மற்றவை மெய்யல வெல்லாம்
பொய்யென அறியெனப் புன்னகை புரிந்தோன்
அருளும் பொருளும் அபேதமா யிருந்தும்
இருதிற னென்னும் இயலுமுண் டென்றோன்

அருளுனுக் குண்டேல் அருளும் வெளிப்படும்
பொருள்மயந் தானே பொருந்துமென் றுரைத்தோன்
சத்தசத் திரண்டு தன்மையுந் தானே
ஒத்தலாற் சதசத் துனக்கென உரைத்தோன்
ஆணவ மறாவிடின் அருளுறா தென்னக்

காணரு நேர்மையாற் காணவே உரைத்தோன்
சென்மமுள் ளளவுந் தீரா திழுக்குங்
கன்மம் விடாதெனக் காட்டிய வள்ளல்
உளதில தெனவும் உறுதலான் மாயை
வளமில தெனவும் வகுத்தினி துரைத்தோன்

இல்லறத் திருந்தும் இதய மடக்கிய
வல்லவன் தானே மகாயோகி என்றோன்
துறவறத் திருந்துஞ் சூழ்மனக் குரங்கொன்
றறவகை யறியான் அஞ்ஞானி என்றோன்
இறவா மனந்தான் இறக்க உணர்த்திப்

பிறவா வரந்தரும் பேரறி வாளன்
அத்தன தருளால் அனைத்தையும் இயக்குஞ்
சுத்தமா மாயையின் தோற்றமென் றுரைத்தோன்
இருள்மல மகல இசைந்தததில் அழுத்தும்
பொருளருட் டிரோதைப் பொற்பெனப் புகன்றோன்.

வீறு சிவமுதல் விளம்பிய படியே
ஆறும நாதிஎன் றறிஞருக் குரைப்போன்
கொல்லா விரதங் குவலயத் தோர்கள்
எல்லாம் பெறுமினென் றியம்பிய தயாநிதி
தருமமுந் தானமுந் தவமும் புரிபவர்க்

குரிமையா யவரோ டுறவு கலப்பவன்
தன்னுயிர் போலத் தரணியின் மருவிய
மன்னுயி ரனைத்தையும் வளர்த்திடும் வேந்தன்
களவுவஞ் சனைகள்செய் கருமிகள் தமக்குந்
தெளிவுவந் துறவருள் செய்திடுந் திறத்தோன்

தான்பெறும் பேறு சகமெலாம் பெறவே
வான்பருங் கருணை வழங்கய மாரி
தஞ்சமென் றடைந்த தாபதர் தம்மை
அஞ்சலென் றாளும் அறிஞர் சிகாமணி
சீவகோ டிகளுஞ் சித்தர் கோடிகளும்

யாவரும் புகழ யாவையும் உணர்ந்தோன்
யானென தென்னா இறைவனெம் பெருமான்
தானவ னாகிய தலைவனெங் கோமான்
அருண கிரியார்க் காறு முகன்சொலும்
பொருள்நல மல்லது பொருளென மதியான்

பூத முதலாப் பொலிந்திடு நாத
பேதமுங் கடந்த பெருந்தகை மூர்த்தி
மூலா தார முதலா யுள்ள
மேலா தாரமும் வெறுவெளி கண்டவன்
மண்டல மூன்றிலும் மன்னிய உருவிலுங்

கண்டவை யனைத்திலுங் கடவுளாய் நின்றோன்
பகர்சம யந்தோறும் பரமே யிருந்து
சுகநடம் புரியுந் தொழிலெனச் சொன்னான்
பேத அபேத பேதா பேத
போத மிதுவெனப் புகன்றிடும் புண்ணியன்

அதுநா னெனவே யாற்றிடும் அனுபவஞ்
சதுர்வே தாந்தத் தன்மையென் றுரைத்தோன்
அல்லும் பகலும் அறிவா னோர்க்குச்
சொல்லும் பொருளுஞ் சுமைஎனச் சொன்னோன்
சுதனே குருவாஞ் சுவாமிநா யகற்கெனின்

அதிகமெய்ஞ் ஞான மல்லவோ வென்றோன்
நேசயோ கத்துறு நிருபரெல்லாந் தொழும்
இராசயோ கத்திறை இராச யோகத்தான்
பொறுமை தெளிவு புனித வாசாரம்
மறுவிலா வண்மை வார மியற்கை

தண்ணமர் சாந்தந் தயங்கிய கீர்த்தி
எண்ணெண் கலைபயி லிணையிலாக் கல்வி
நல்ல இரக்கம் நடுநிலை சத்தியம்
இல்லை என்னாம லெவர்க்குந் தருங்கொடை
நற்குண னெல்லாம் நண்ணிய பெருந்தகை

சிற்குண வாரி திருவருட் செல்வன்
கரமே லெடுத்துக் கருத்துற வணங்கிப்
பரமே யுனக்குப் பரமெனப் பகர்ந்தோன்
ஆலடி மேவும் அரசினை அடுத்தே
சீலமெய்ஞ் ஞானத் தெளிந்தன னெனவுஞ்

சித்த மவுனி திடசித்த மாக
வைத்த நிலையின் வளர்ந்தன னெனவும்
மூலம் மரபில் முளைத்த மவுனிதன்
பாலன்யா னெனவும் பரிவொடும் பகர்ந்தோன்
வடமொழி இயற்கையின் மகிமையை உணர்ந்து

திடமுற முப்பொருள் திறத்தையுந் தெளிந்து
கண்டமு தென்னக் கனிரச மென்னத்
தண்டமிழ் மாரி தன்னைப் பொழிந்து
சித்தியும் முத்தியுஞ் சிறந்தருள் கொழிக்கும்
நித்திய நிரஞ்சன நிராலம்ப நிறைவைப்

பாடியும் நாடியும் பணிந்தெழுந் தன்பால்
ஆடியும் அரற்றியும் அகங்குழை வெய்தியும்
உடலங் குழைய உரோமஞ் சிலிர்ப்பப்
படபடென் றுள்ளம் பதைத்துப் பதைத்துப்
பாங்குறு நெட்டுயிர்ப் பாகிப் பரதவித்

தேங்கி ஏங்கி இரங்கி இரங்கி
ஓய்ந்த பம்பரம்போ லொடுங்கியே சிறிதும்
ஏய்ந்த விழிக ளிமைப்பது மின்றிச்
சோர்ந்து சோர்ந்து துவண்டு துவண்டுமெய்
ஆர்ந்த அன்போ டவசமுற் றடிக்கடி

உண்ணடுக் குறவே உருகியே சற்றுத்
தண்ணமர் மொழியுந் தழுதழுத் திடவே
உள்ளும் புறமும் ஒருமித் துருகி
வெள்ள நீர்போல் விழிநீர் பெருகிக்
கன்று பசுவைக் கருதிக் கதறிச்

சென்றுசென் றோடித் திகைப்பது போல
என்புநெக் குடைய இருகரங் குவித்துப்
புன்புலால் யாக்கை பொருந்தா தினிஎன
உணர்ந்துணர்ந் தன்பா யுவகைமேற் கொண்டினிக்
கணம்பிரி யேனெனக் கருதியே குறித்துத்

திருவுரு வெல்லாந் திருநீ றிலங்க
இருகர நளினம் இயன்முடி குவித்துப்
பூரண சந்திரன் போலொளி காட்டுங்
காரண வதனங் கவின்குறு வெயர்வுற
இளநிலா வெனவே இலக்கியச் சிறுநகை

தளதள வென்னத் தயங்கி எழில்பெற
இத்தன்மை எல்லா மிசைந்து மிவனருட்
சித்தெனச் சிவகதி தேர்ந்தவ ருரைப்பப்
பாத்திர மாடப் பிரிவுட னாடிச்
சாத்திரங் காட்டித் தயவுசெய் தருளும்

வல்லவ னெனவே மன்னுயிர்க் காக
எல்லையி லன்ப னிவனென விளங்கி
ஈன வுலகத் தியற்கைபொய் யென்றே
ஞானநூல் மெய்யென நவின்றினி திரங்கிக்
கேவல சகலங் கீழ்ப்பட மேலாய்

மேவருஞ் சுத்த மெய்யினை நல்க
அருளே யுருவுகொண்ட வனியில் வந்த
பொருளே இவனெனப் பொலிந்திடும் புனிதன்
சைவஞ் சிவனுடன் சம்பந்த மென்பது
மெய்வளர் ஞானம் விளக்குமென் றிசைத்தோன்

கதிர்விழி யொளியுறக் கலத்தல் சித்தாந்த
விதிமுறை யாமென விளம்பிய மேலோன்
முடிவினில் ஆகம முறைமையி னுண்மையை
அடியாரைக் குறித்துரைத் தருளிய அண்ணல்
சிதம்பர நேர்மை திறமா வுரைத்திறை

பதம்பர வெனப்பகர் பரமமெய்ஞ் ஞானி
முத்திபஞ் சாக்கர முறைமையி லயிக்கியஞ்
சத்திய மிதுவெனச் சார்ந்தவர்க் குரைத்தோன்
அஞ்செழுத் துள்ளே அனைத்தையுங் காட்டிஎன்
நெஞ்சமுழுத் தியகுரு நீதி மாதவன்

எல்லா நிறைந்த இறைவன் செயலெனக்
கல்லா எனக்குங் கருணைசெய் கடவுள்
குருவரு ளாலே கூடுவ தல்லால்
திருவரு ளுறாதெனத் தெரிந்திட உரைத்தோன்
குருவுரு வருளெனக் கொண்டபின் குறையாப்

பொருள்மய மாமெனப் புகன்றிடு போதன்
எந்த மூர்த்திகளையு மெழிற்குரு வடிவெனச்
சிந்தையில் தியக்கறத் தேர்ந்தவர்க் குரைத்தோன்
சதாசிவ மென்றபேர் தான்படைத் ததுதான்
எதாவதே பொருளென் றெடுத்தெடுத் துரைத்தோன்

கல்லாணை கன்னல் கவர்ந்திடச் செய்தவன்
எல்லாம் வல்லசித் தெம்மிறை என்றோன்
எவ்வுயிர் தோறும் இறைமே வியதிறஞ்
செவ்விய பிரம்படி செப்பிடு மென்றோன்
எவ்வண மெவரெவ ரிசைத்தன ரவரவர்க்

கவ்வண மாவனெம் மானென அறைந்தோன்
ஒருபாண னுக்கே யொருசிவ னாட்படின்
வருமடி யார்திறம் வழுத்தொணா தென்றோன்
சிவனடி யாரைச் சிவனெனக் காண்பவன்
எவனவன் சிவனே என்றெடுத் துரைத்தோன்

விருப்பு வெறுப்பினை வேரறப் பறித்துக்
கருப்புகா தென்னைக் காத்தருள் செய்தோன்
இருசொல் லுரையா தியானின்ப மெய்த
ஒருசொல் லுரைத்த உயர்குண பூதரன்
அத்துவா மார்க்கம் ஆறையு மகற்றித்

தத்துவா தீதத் தன்மையைத் தந்தோன்
திருமகள் மருவிய திகழ்வள மறைசையில்
வருமுணர் வாளன் மருளிலா மனத்தான்
எண்ணிய எண்ணமெல் லாந்தெரிந் தெனக்குத்
தண்ணருள் செய்வன் தாயு மானவன்

ஒருமொழி பகர்ந்த உதவியா லவன்றன்
இருபத முப்போ திறைஞ்சி வாழ்த்துவனே.

அருள்வாக்கிய அகவல்
முற்றிற்று

சிவமயம்

தாயுமான சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய

திருப்பாடற்றிரட்டு

மூலமும்-பொழிப்புரையும்

திருவருள்விலாசப் பரசிவ வணக்கம்

பன்னிருசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்

1. அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள்
வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வம் எந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற எல்லையுள தெது அது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதிஅஞ் சலிசெய்குவாம்.

(பொ-ரை) அவ்விடத்தில்தான் உள்ளது. இவ்விடத்தில் தான் உள்ளது என்று சுட்டிக் கண்ட பொருளாய்ச் சொல்லாவண்ணம், எவ்விடத்திலுங் காணப்படுந் தேஜோமயமாகி, சுக நிரம்பியதாகி, தனது கிருபாசத்தியோடு பரவியிருப்பது எந்தப்பொருள்; தனது அருள்வடிவாகிய ஆகாயத்தில் சர்வலோகங்களும், அவற்றினுள்ளீடாய சராசரங்களும் நிலைத்திருக்க அன்புவைத்து, அவ்வவை

களின் உயிருக்குயிராய்த் தழைத்திருப்பது எந்தப் பொருள்; மனத்துக்கும், வாக்குக்கும் அதீதமாய் அழியாமல் நித்தியமாயிருப்பது எந்தப்பொருள்? சமயக்கூட்டங்கள் யாவும், தம்முடைய தெய்வமென்றும், எம்முடைய தெய்வமென்றும், எவ்விடத்திலும் சென்று, நேர்நின்று வாதிக்க இடமாகவும் இருப்பது, எந்தப்பொருள்? எவ்விடத்திலும் தீராத பெரிய வழக்காகி, எல்லாவற்றிலும் வல்லமையுடைய ஒப்பற்ற ஞானவடிவாகியும், அன்பு வடிவாகியும், எந்நாளும் ஒரே படித்தாய் இருப்பது எந்தப் பொருள்? பின்னரும், இராப்பகலற்ற விடத்திலுள்ளது எந்தப் பொருள்? அந்தப் பொருளே எமது மனத்திற்குப் பொருந்தினது; (ஆதலால்) அந்தப் பொருளையே, பார்த்த எல்லாப் பொருள்களாகவும், மௌன ரூபத்தின் வெளிப் படுதலாகவும் நினைத்துக் கைகுவித்து வணங்குவோம். (என்றவாறு)

உயிர்கடோறும் உள்ளீடாய் நின்றியக்கலின், உயிர்க் குயிராய்த் தழைத்ததெது, எனவும், அவாங்மனோ கோசரனாகலின், மனவாக்கினில் தட்டாமனின்ற தெது எனவும்; அன்றி, மனமும், வாக்கும், சடமாகலின், அவை சித்தினை யறியா என்பார், மனவாக்கினில் தட்டாம னின்றதெது; எனவும் உலோகாயதன்: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, என்னும் நான்கு பூதங்களுமே கர்த்தாவென்பன், அருகன்:- உலகமெல்லாம் இப்படியே நித்தியமாயிருக்கும். அருகே கூவரன் குருத்துவ மாத்திரத்தில் கர்த்தாவா யிருப்பனென்பன். பௌத்தன்:- சுகதன் கர்த்தா வென்பன். மீ மாஞ்சகன்:- உலகம் நித்தியமாகவேயிருக்கும், சரீராதி உற்பத்தியில் கன்மங் கர்த்தா வென்பன். பாஞ்சராத்திரி:- ஸ்ரீமந் நாராயணன் அபின்ன நிமித்தோபா தானனாய் ஜகத்கர்த்தா வாயிருப்பனென்பன். மாயாவாதி:- பிரமந் தன்னிடத்தில் பரிணாமத்தினால் சகத்கர்த்தாவாயிருக்கு மென்பன், இவ்வாறாய சமயத் தொகுதியோர் அவ்வவர் களுடைய சமயங்கட்கேற்பப் பலவேறு நாமங்களைப் பிரமாண ரூபமாய் எடுத்துக்காட்டி, எந்தெய்வம், எந்தெய்வம் என வாதித்தலின் சமயகோடிகளெலாந் தந்தெய்வ மெந்தெய்வமெனறெங்குத் தொடர்ந்தெதிர் வழிக்கிடவு நின்றதெது, எனவும், தனக்கோர் முதலின்றித் தானே முதலாய என்றும், அழியாமல் நித்தியமாயிருத்தலின், என்றைக்கு முள்ளதெது எனவுங் கூறினார்.

ஈண்டுச் சமய கோடிகள் என்றது-சமயவாதிகளை.

இனி, இந்நூலாசிரியர், "ஆசீர்நமஸ்கிரியாவஸ்து நிர்த்தேஸோ வாபித்னமுகே" என்னும் மூவகை வாழ்த்துள், முதற்கண் இடையூறு நீக்கியருள்பவராகிய விநாயகக்கடவுள் வாழ்த்துக் கூறாராயினார் எனக், குற்றங் கூறுவாருமுளர். அங்ஙனங் கூறுவோர் அபேதமுடைமை யால் எனக் கொள்க. அன்றி, இச்செய்யுளின் முதலடியில் அவ்விநாயகர்க்குரிய பிரணவ பீஜாட்சரங்களில் ஒன்றாகிய அகரத்தை, முதற்கண் வைத்திருத்தலின், இனம்பற்றி மற்றைய உகரமகரங்களையுங் கொள்கவெனக், கூறாமல் விட்டனர் எனலுமொன்று.

விநாயகக் கடவுள் வாழ்த்துக் கூறவேண்டுமெனல் :-

பூர்வத்தில் கஜமுகாசுரன் தான் பெற்றுள்ள வரத்தினிறுமாப்பால், தேவர்களுக் கெல்லாந் துன்பஞ் செய்துவர, தேவர்கள் அதனை ஆற்றாதவர்களாகி, ஒன்றாய்க் கூடித் திருக்கைலாயமலையைச் சேர்ந்து, திருநந்திதேவர் உத்தரவால் உட்சென்று, சிவபெருமானைத் தரிசித்துத் தமக்கு நேர்ந்த குறைகளை விண்ணப்பஞ் செய்யச் சிவபெருமான் "அவன் என்னைநோக்கி அருந்தவஞ்செய்து, தேவராலும், மனிதராலும், அசுரராலும், மிருகங்களாலும், இறவாமலிருக்க வரம் பெற்றனன். ஆனால், தன்னுடைய உருவாகி வருவோனால், இறவாதிருக்க வரங் கேட்கவில்லை. ஆதலால் நாம் யானை முகத்தோடு சென்று அவனை யடக்குவோம்" என்று அவர்கட்கு விடை கொடுத்தனுப்பிப் பார்வதி தேவியோடும், அம்மலைக்குச் சமீபத்திலுள்ள சித்திரச்சாலையை யடைந்து, விசுவ கருமனால் எழுதப்பட்டுள்ள மந்திர வடிவாகிய சித்திரங் களைப் பார்வதி தேவியாருக்குக் காட்டிப் "பெண்ணே! முதலிலுள்ள பிரணவவடிவமாகிய இரண்டு யானைகளில் முற்பட்டது திருமூர்த்திகளையும் தந்தது. அது என் வடிவாகும். அடுத்தது பராசக்திகளையும் பெற்றது. அது நின் வடிவாகும். ஆதலின் யாம் அப் பிரணவ வடிவ மாகுவோம், என்று திருவாய் மலர, உமையம்மையும் அக் கருத்துக் கிசைந்தனர். அப்பொழுது இறைவர் ஆங்கோர் திருவிளையாடல் செய்ய, அதனால் அப்பிரணவ வடிவத்தினின்றும் விநாயகர் திருவவதாரஞ் செய்தனர். பிறகு விநாயகரைக் கைலைமலையிற் கொண்டு வந்து மகுடஞ்

சூட்டி "உன்னை வணங்கி உனதருள் கொண்டு செய்யுங் காரியங்களை நிறைவேற்றவும், வணங்காமல் செய்யுங் காரியங்களைத் தவிர்க்கவும், உனக்கு விக்கின விநாயக னெனப் பெயர் தந்தோம்" என்று சொல்லித் தேவர்களை நோக்கி "இவன் நமது மூத்தபிள்ளை. இவனை எம்மைப் போன்று உபசரியுங்கள்" எனத் திருவாய் மலர்ந்தருளினர். பிறகு தேவர்கள் விநாயகக்கடவுளை உபாசிக்க, அவர் கஜமுகாசுரனுடன் யுத்தஞ் செய்து அவனெவ்வகை ஆயுதங்களாலும், இறவாமலிருத்தலால், தமது கொம்பை யொடித்தெறிய அவன் பெருச்சாளி வடிவாயினன். அதனை விநாயகர் வாகனமாக்கிக் கொண்டனர் என்பது.

விநாயகபுராணம் கஜமுகனுற்பத்திப் படலம்

"வான நாட்டுறை யும்பரான் மன்னுமா னுடரால்
தான வர்குலத் தவர்களான் மற்றுளோர் தம்மால்
கான கத்துறு விலங்கினாற் கருதுயி ரிறந்தே
ஈன முற்றிடா வகையுமெற் கீந்தரு ளென்றான்."

"மும்மதம்பொழி கறையடிக் கைம்மலை முகமுடை
யசுரன்றான்
தம்மு ருத்தனில் விளிந்திடா வரமெனைக் கேட்டில
னதுதன்னால்
தெம்மு னைக்கடி னின்னையா தியர்களாற் றீர்கிலாத்
தீயோனைச்
செம்மை மிக்குயர் கரிமுகத்திறைவனாய்ச்
சென்றடுகின்றேமால்"

எனவும்,

மேற்படி புராணம் திருவவதாரப் படலம்

"முராரி யாதிய தேவர்கண் முதலுறு முழுதுல கினிலுள்ளோர்
விராவி யாதொரு காரிய மாயினும் விளங்குறச்
செயவென்றே
பராவி யுன்னருச் சனைசெய்வோர் மனத்துறு பான்மைதந்
தருளுன்னன்
பிராது செய்பவர் காரிய மூறுசெய் திடுதியென்
றிவைசொன்னான்"

எனவும்,

கந்தபுராணம் கஜமுகனுற்பத்திப் படலம்

"நின்றவன் றன்னை நோக்கி நெடியபல் படைகளேவிச்
சென்றிவன் றன்னைக் கொல்லாச் சிவனருள் வரத்தின் சீரா
லின்றினிச் செய்வ தென்னென் றிறைவரை யுன்னியெந்தை
தன்றிருக் கோட்டி லொன்று தடக்கையின் முறித்துக் கொண்டான்.

தடக்கையி லேந்துங் கோட்டைத் தந்தியா மவுணன்மீது
விடுத்தலு மனையன் மார்பை வெய்தெனக் கீண்டு போகி
யுடற்படி மிசையே வீழ்த்தி யொல்லையி லோடித் தெண்ணீர்க்
கடற்படிந் தமலன் மைந்தன் கரத்தில்வந் திருந்த தன்றே."

எனவும், வருவனவற்றானுணர்க.

இச்செய்யுளில் யாம் என்னும், எழுவாய் எஞ்சிநின்றது-யாம் அந்தப் பொருளைக் கண்டனவெல்லாமாகவும், மோனவுரு வெளியாகவுங் கருதி, யஞ்சலி செய்குவாம், என முடிக்க.

செய்குவாம்-உளப்பாட்டுத் தன்மைப் பன்மை.

2. **ஊரனந் தம்பெற்ற பேரனந் தஞ்சுற்றும்**
உறவனந் தம்வினையினால்
உடலனந் தஞ்செயும் வினையனந் தங்கருத்
தோ அனந் தம்பெற்றபேர்
சீரனந் தஞ்சொர்க்க நரகமும் அனந்தநற்
றெய்வமும் அனந்தபேதந்
திகழ்கின்ற சமயமும் அனந்தமத னால்ஞான
சிற்சத்தி யாலுணர்ந்து
காரனந் தங்கோடி வருடித்த தென அன்பர்
கண்ணும்விண் ணுந்தேக்கவே
கருதரிய ஆனந்த மழைபொழியும் முகிலைநங்
கடவுளைத் துரியவடிவைப்
பேரனந் தம்பேசி மறையனந் தஞ்சொலும்
பெரியமௌ னத்தின்வைப்பைப்
பேசரும் அனந்தபத ஞான ஆனந்தமாம்
பெரியபொரு ளைப்பணிகுவாம்.

(பொ-ரை) பிறந்த ஊர்களநேகம், அவ்வப் பிறவிகளிற் பெற்ற பேர்களநேகம், நெருங்கிய உறவினர்களநேகம், வினைகளிவைக்குத் தக உண்டாகும் சரீரங்களநேகம். செய்யும் வேலைகளநேகம், எண்ணங்களோ அநேகம், வேண்டியடைந்த பெரிய சிறப்புகளநேகம், சொர்க்கங்களும், நரகங்களும் அநேகம், நல்ல தெய்வங்களுமநேகம், மிகுதியும் வேறுபாடு விளங்குஞ் சமயங்களும் அநேகம், ஆகையால் (அவற்றை யெல்லாம்) ஞான சக்தியின் அருளாலறிந்து, எண்ணிறந்த மேகங்கள் ஒன்றாய்க் கூடி மழை பொழிந்தது போல, அடியவர்கள் கண்களும், இதயாகாயங்களும், ததும்பும் வண்ணம், நினைத்தற்கரிய இன்பமழை பொழியுமேகமும், நம்முடைய தெய்வமுமாகிய துரியரூபத்தை, வேதங்கள் அநேகம் பேர்களைச் சொல்லி இடைவிடாமற் புகழ்கின்ற பெரிதாகிய மௌன நிதியை, கூறுதற்கரிய முடிவில்லாத பதமாகிய ஞானானந்தமான பெரிய பொருளை வணங்குவோம்-(எ-று)

இருவினைப் பாகுபாட்டாற் பல சரீரமுண்டாதலின், வினையினால் உடலனந்தமெனவும், அவ்வுடலெடுத்த வூர்களும், ஆங்கடைந்த பேர்களும், அங்ஙனஞ் சூழ்ந்த உறவினரும், அநேகமாதலின் ஊரனந்தம் பெற்ற பேரனந்தஞ்சுற்று முறவனந்தம் எனவும், இவ்வா று உலகத்திற் கூடிவாழுங் கால் செய்யுந் தொழில்களும் அத்தொழில் செய்ய எண்ணங்களும் ஆண்டடையுங் கீர்த்திகளு மநேகமாதலின் செயும் வினை யனந்தங் கருத்தோவனந்தம் பெற்ற பேர் சீரனந்தம் எனவும், அவ்வினைகளா லடைவது சொர்க்க நரகங்களாதலின் சொர்க்கநரகமு மனந்த மெனவும், அவர் வணங்குந் தெய்வங்களும், அத்தெய்வங்களைச் சார்ந்த சமயங்களு மநேகமாதலின், தெய்வமு மனந்தபேதந் திகழ்கின்ற சமயமு மனந்த மெனவும், கூறினார்.

இனி, இந்நூலாசிரியர், "தெய்வமிகழேல்" என்பதைக் கடைப்பிடித்துத் தெய்வம் என்னுஞ் சொல்லுக்கு முன்னர் நல் என்னும் அடைமொழி கொடுத்துக் கூறினர். துரியம்-நின் மலாவத்தையில் நான்காவது. காரனந்தங் கோடி வருட் சித்தது என்பது - பன்மையினொருமை வந்தவழுவமைதி.

யாம் பெரிய பொருளை வணங்குவோம் என முடிக்க.

(2)

3. அத்துவித வத்துவைச் சொற்பிரகா சத்தனியை
அருமறைகள் முரசறையவே
அறிவினுக் கறிவாகி ஆனந்த மயமான
ஆதியை அநாதியேக
தத்துவ சொரூபத்தை மதசம்ம தம்பெறாச்
சாலம்ப ரகிதமான
காசுவத புட்கல நிராலம்ப ஆலம்ப
சாந்தபத வ்யோம நிலையை
நித்தநிர் மலசகித நிட்ப்ரபஞ் சப்பொருளை
நிர்விடய சுத்தமான
நிர்விகா ரகத்தைத் தடத்தமாய் நின்றொளிர்
நிரஞ்சன நிராமயத்தைச்
சித்தமறி யாதபடி சித்தத்தில் நின்றிலகு
திவ்யதே சோமயத்தைச்
சிற்பர வெளிக்குள்வளர் தற்பரம தானபர
தேவதையை அஞ்சலிசெய்வாம்.

(பொ.ரை) தனிமையாகிய பொருளை, ஒருவரால் விளக்கப்படாமல், தானே விளங்கும் ஒப்பற்ற பொருளை, அரிய வேதங்கள் முரசொலித்து நிற்க அறிவுக்கறிவாகி, இன்பரூபமான முதற்பொருளை, பழைமையதாகிய ஒருண்மைப் பொருட்டன்மையுடைய வடிவை, எம்மதத்தின் சம்மதத்தையு மடையாமல் யாதொன்றினும் பற்றில்லாத, என்றைக்கு முள்ளதும், எங்கு நிறைந்ததும், ஆதாரமில்லதும், ஆதாரமுள்ளதுமான சாந்த பதத்தையுடைய சிற்ககனத்தில் அறியப்படும் பொருளை அழியாமலும், மலரகிதமாயும், பிரபஞ்சா தீதமாயுமுள்ள பொருளை, யாதொரு விஷயமுமில்லாமல் பரிசுத்தமான அகண்டப் பொருளை, நேராய் நின்று விளங்கும் குற்றமற்றதும், நோயற்றதுமான பொருளை, கருத்தினாலறியப் படாமல் கருத்தினின்றே பிரகாசிக்கின்ற தேஜோமயத்தை மேலான பரமாகாயத்தில் வளர்கின்ற தனக்குத்தானே பரமாகிய உண்மைத் தெய்வத்தை யாம் கைகுவித்து வணங்குவோம் (எ-று)

அத்துவிதம் என்றது-பிரமம் உயிர்களின் வேற்றுமை யின்றி நிற்கும் எனல், சிலர், வேதம் அத்துவிதமென்று சொல்லுவது மன்றி, ஏகமெனவுஞ் சொல்லுதலின், இங்ஙனம் பேதப்படக் கூறுவானேனென்பர். வேதம் ஏகமென்றது, பதியை, பசுவையுஞ் சேர்த்துச் சொன்னதன்று.

பதிபோன்று வேறொரு பதியின் றென்பதாகலின் பசு, அநாதியே பாசத்தோடு சம்பந்தப்பட்டிருப்பது. பதி, அப்பாசமற்றது, ஆகலின், பாசமுள்ளதாகிய பசுவைப் பாசமில்லதாகிய பதியோடு சேர்த்து இரண்டு மொன்றென்று வேதமெங்ஙனங் கூறும். இதனை,

ஒன்றென்ற தொன்றேகா ணொன்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடுளைகா -
ணொன்றின்றா
லக்கரங்க ளின்றா மகர வுயிரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு

என ஆசிரியர் மெய்கண்ட சுவாமிகள் அருளிச்செய்த சிவஞான போதம், இரண்டாவது சூத்திரம், முதலதி கரணத்தால் அறிக. அன்றி.

அருளுடைய பரமென் றோவன்று தானே
யானுளனென் றும்மெனக்கே யாண வாதி
பெருகுவினைக் கட்டென்று மென்னா ற்கட்டிப்
பேசியதன் றேயருணூல் பேசிற்றன்றே

என இந்நூலாசிரியரே பின்னர் கூறியவாற்றானு முணர்க.

மதச் சம்மதம் பெறாத தென்பது:- "சமயவாதி கடந்த மதத்தையே, யமைவதாக லரற்றி மலைந்தனர்" என்பத னானறிக.

சாந்தபதவ்யோமநிலை-குருமுகத்தானறியப்படுவது.

யாம் பரதேவதையை யஞ்சலிசெய்வாம் என முடிக்க. இம்மூன்று செய்யுட்களும்,ஒருபொருட் டன்மையுள்ள பொது வணக்கமெனக் கொள்க. (3)

பரிபூரணானந்தம்

இது முதல் சிற்சுகோதய விலாசம் வரைக்கும் மகுடநோக்கிப் பெயரிடப்பட்டுள்ளது. ஆயின், பொருள் வணக்கத்தில் சில செய்யுட்களில் பொருளை வணங்குவாம் என வருதலின் அப்பெயரிடப்பட்டுள்ளது.

4. **வாசா கயிங்கரிய மன்றியொரு சாதன**
மனோவாயு நிற்கும்வண்ணம்
வாலாய மாகவும் பழகியறி யேன்துறவு
மார்க்கத்தின் இச்சைபோல

நேசானு சாரியாய் விவகரிப் பேன் அந்த
நினைவையும் மறந்தபோது
நித்திரைகொள் வேன்தேகம் நீங்குமென எண்
நெஞ்சந் துடித்தயருவேன் (ணிலோ
பேசாத ஆனந்த நிட்டைக்கும் அறிவிலாப்
பேதைக்கும் வெகுதூரமே
பேய்க்குண மறிந்திந்த நாய்க்குமொரு வழிபெரிய
பேரின்ப நிட்டை அருள்வாய்
பாசா டவிக்குளே செல்லா தவர்க்கருள்
பழுத்தொழுகு தேவதருவே
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

(பொ-ரை) பாசமாகிய காட்டிற் போகாத முத்தர்கட்கு அருட் கனியானது பழுத்து (ஆனந்தத்தேன்) ஒழுகுகின்ற கற்பகத்தருவே! பார்க்கு மிடந்தோறும் சற்றும் பிரிதலில்லாமல் நிறைந்திருக்கின்ற பரிபூரண வின்பமே! (சொன்மாலை சூட்டலாகிய) வாசிக்கயிங் கரியத்தி லல்லாமல் மனமும், வாயுவும், அடங்கும் படியான ஓரப்பியாசத்தை எப்பொழுதும் பழகியறியேன். துறக்கும் வழியில் விருப்பமிருப்பது போல், தொண்டர்கட் கநுசரணை யுள்ளவனாய் விவகாரஞ் செய்வேன், சரீரம் (நிலையாம்) அழியுமென்று நினைத்தாலோ, மனம் பதைத்துச் சோர்வேன், ஆகையால் (இத்தன்மை யாகுமென்று) சொல்லுதற்காகாத வின்பங்கொடுக்கு மௌன நிட்டைக்கும், அஞ்ஞானனாகிய எனக்கும், மிகுந்த தூரமேயாகும். ஆயினும் (இங்ஙன நடக்கும்) என்னுடைய விகாரகுணத்தை யறிந்து இந்த நாயொத் தவனுக்கும் பெரிய இன்பத்தை விளைக்கும் சதா நிட்டையை (யொருவாறு) அருள் செய்வாய். எ-று.

ஒரு சாதன மனோவாயு நிற்கும் வண்ணமென்றது. இபமம், நியமம், ஆதநம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தியானம், தாரணை, சமாதி, இவைகளை இவற்றின் முறை விரிக்கிற் பெருகுமாதலின் விடப்பட்டது. மனோவாயு என்பதற்கு-மனமாகிய வாயு, எனினும் பொருந்தும். துறவென்றது, அகப்பற்றுப் புறப்பற்றுகளை விடுதலை.

தேகம் நிலையில்லாத தாகலின், தேகநீங்குமென வெண்ணிலோ நெஞ்சந் துடித் தயருவேன், என்றார்.

இதனை,

புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
யின்னினியே செய்க வறலினை-பின்னினியே
நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்றா னெனப்படுத லான் என்பதனா னறிக.

அன்றி,

உறங்கு வதுபோலஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு,

எனப் பிறர் கூறுவதனானுமறிக. (1)

5. **தெரிவாக ஊர்வன நடப்பன பறப்பன**
செயற்கொண் டிருப்பனமுதல்
தேகங்க ளத்தனையும் மோகங்கொள்
பௌதிகஞ்
சென்மித்த ஆங்கிறக்கும்
விரிவாய பூதங்கள் ஒன்றாடொன் றாயழியும்
மேற்கொண்ட சேடம் அதுவே
வெறுவெளி நிராலம்ப நிறைசூன்யம் உபசாந்த
வேதவே தாந்தஞானம்
பிரியாத பேரொளி பிறக்கின்ற வருள்அருட்
பெற்றோர்கள் பெற்றபெருமை
பிறவாமை யென்றைக்கும் இறவாமை யாய்வந்து
பேசாமை யாகுமெனவே
பரிவா யெனக்குநீ யறிவிக்க வந்ததே
பரிபாக காலமலவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

(பொ-ரை) பார்க்குமிடந் தோறுஞ் சற்றும் விரிதலில்லாமல் நிறைந் திருக்கின்ற பரிபூரண வின்பமே! தெளிவுடன் நகர்வனவும், நடப்பனவும், பறப்பனவும், செய்கைகளைக் கொண்டிருப்பனவும் முதலாகிய சரீரங்களெல்லாம் மயக்கங் கொண்ட பௌதிக மாகலானும், பரந்த பூதங்கள் ஐந்தும் ஒன்றுக்குள் ஒன்றாக ஒடுங்குந் தன்மையவாகலானும், உற்பவித்தது போலவே நாசமடையும். ஆகையால் (அங்ஙன நாசமடையாத) அவைகட்கு

மேற்பட்ட அந்தப் பொருளே சுத்தாகாயமெனவும், ஆதாரமற்ற தெனவும், பெரும்பாழெனவும், உபசாந்தந்தரும் வேதவேதாந்தங்களால் கூறப்படும் ஞானமெனவும், நீங்காத பெருஞ்சோதியெனவும், உதயமாகும் அருள் எனவும், அவ்வருள் பெற்றோர்களால் அநுபவிக்கப்படும் கீர்த்தி யெனவும், பிறவாததும், எக்காலத்தும் இறவாததுமாய், வந்து பேசாததுமான மோன நிலையாகு மெனவும் நீ அடியேனுக்கு உபதேசிக்கக்கிருபையோடு எழுந்தருளி வந்தது எனது மலபரிபாக காலமல்லவோ? ஆம். (எ-று)

ஊர்வன-எறும்பு முதலியன. நடப்பன-விலங்கு முதலியன. பறப்பன-கருடன் முதலியன. இருப்பன - மரமுதலியன. பௌதிகம் என்றது பூதசம்பந்தம்.

"தெரிவாக ஊர்வன நடப்பன பறப்பன செயற் கொண்டிருப்பன முதற்றேகங்கள்" என்றது-எழுவகைப் பிறவிகளை விளக்கற் கென்க.

தோன்றும் பொருளெல்லாம் பூதசம்பந்த மாகலானும், அப்பூதங்களில் மண் நீரிலும், நீர் நெருப்பிலும், நெருப்பு காற்றிலும், காற்று ஆகாயத்திலும் ஒடுங்க வேண்டியிருத்த லினாலும், அப்பூதங்களா லாயபொருள்களும் உண்டான வாறே அழியுமென்பார். 'தெரிவாக வூர்வன நடப்பன பறப்பன செயற் கொண்டிருப்பன முதற்றேகங்க ளத்தனையு மோகங் கொள் பௌதிகஞ் சென்மித்தவாங் கிறக்கும் எனவும், என்றும் பிறப்பிறப் பற்றதாகலின் 'பிறவாமை என்றைக்கு மிறவாமை' எனவும், அங்ஙனமாய பொருள் மௌனரூபத்ததாகலான், 'பேசாமை யாகும்" எனவும், இருவினையொப்பு மலபரிபாகம் வந்தவர்க்கே, குருமூர்த்த மாயெழுந்தருளி உபதேசிப்பதாகலான், 'பரிவாயெனக்கு நீ யறிவிக்க வந்ததே பரிபாககாலமலவோ' எனவுங் கூறினார்.

முன்னர், "மேற்கொண்ட சேடமதுவே" என அப்பொருளையும், பின்னர் அப்பொருள் இப்படிப் பட்டதாகு மென்றும், குருமூர்த்தமா யெழுந்தருளி உபதேசிப்பதை, அப்பொருளை யடைந்தவரது தன்மையாகக் கொண்டு, "அருட் பெற்றோர்கள் பெற்றபெருமை" என்பதுடன் "பிறவாமை" என்பதையுஞ் சேர்த்து, அதைப் பெற்றோர், இரும்புண்ட நீரிற்றிரும்பாத முத்தியடைவ ராதலின், 'பெற்றோர்கள் பெற்ற பெருமை பிறவாமை' என்றுங் கூறினார், என எழுதினாருமுளர். 2)

6. ஆராயும் வேளையில் பிரமாதி யானாலும்
ஐயவொரு செயலுமில்லை
அமைதியொடு பேசாத பெருமைபெறு குணசந்த்ர
ராமென இருந்தபேரும்
நேராக வொருகோபம் ஒருவேளை வரஅந்த
நிறைவொன்று மில்லாமலே
நெட்டுயிர்த் துத்தட் டழிந்துளறு வார்வசன
நிர்வாக ரென்றபேரும்
பூராய மாயொன்றும் பேசுமிட மொன்றைப்
புலம்புவார் சிவராத்திரிப்
போதுதுயி லோமென்ற விரதியரும் அறிதுயில்
போலேயிருந்து துயில்வார்
பாராதி தனிலுள்ள செயலெலாம் முடிவிலே
பார்க்கில்நின் செயலல்லவோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

(பொ-ரை) பார்க்குமிடந்தோறும் சற்றும் பிரிதலில்லாமல் நிறைந்திருக்கின்ற பரிபூரணவின்பமே! யோசிக்குங்கால் பிரமன் முதலியோரானாலும், அவர்கட்கு ஒரு செய்கையுமில்லை, பொறுமையுடன் பேசாமலிருக்கும் பெருமையைப் பெற்ற சந்திரனைப் போன்ற சாந்தகுண முடையவர்களாகு மென்றும் மற்றோரால் சொல்லப் பட்டவர்களாயிருந்தவர்களும், நேராக ஒரு சமயத்தில் ஒரு கோபம் உண்டாயின், அந்தப் பொறுமை சிறிது மில்லாமல், பெருமூச்செறிந்து தடுமாறிப் பிதற்றுவார்கள், வார்த்தை சொல்வதில் (பிறருக்கிடங்கொடாத) சமர்த்தர்களும், ஒரு விஷய முழுமையும் பேசுங்கால் தவறி, மற்றொரு விஷயத்தைப் பேசுவர், சிவராத்திரியில் நித்திரை செய்வோம் என்ற அவ்விரதங் கொண்டவரும் விழித்திருப்பது போற் காட்டி உறங்குவார், (ஆதலான்) பூமி முதலிய இடங்களி லுள்ள செய்கைகளெல்லாம். முடிவில்யோசிக்கு மிடத்தில் உன்னுடைய செய்கைகளாகவே இருக்கின்றன. (எ-று)

அகோராத்திரம் இடைவிடாமல் தவஞ்செய்யும் பெரியோர்களுக்கும் சிறிது பொழுதாயினுங் கோபநிகழுமென்பார். 'அமைதியோடு பேசாத பெருமை பெறுகுணசந்த்ரராமென விருந்த பேரு நேராக வொருகோப மொரு வேளைவர', எனவும், அங்ஙனங் கோப நிகழுங்கால், தங்கள் நிலையழிந்து பிதற்றுவராகலான், 'அந்த

நிறைவொன்று மில்லாமலே நெட்டுயிர்த்துத் தட்டழிந்துளறுவார்' எனவும், எப்பொருட்களுந் தொழிற்படுவது இறைவனாலாகலின் 'பாராதி தனிலுள்ள செயலெலாமுடிவிலே பார்க்கினின் செயலல்லவோ' எனவும் கூறினார்.

பாராதி என்றது பூமி, பாதல, சொர்க்கங்களை.

பெரியோர்கட்குச் சிறிது பொழுதே கோப நிகழுமென்பதை:-

**" குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது"**

எனவும்,

**" விற்பிடித்து, நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்"**

எனவுங் கூறியவாற்றானறிக.

கோபத்தால் யாவு மழியுமென்பதை:-

**" கோபத்தாற் கௌசிகன் றவத்தைக் கொட்டினான்
கோபத்தான குடனுங் கோல மாற்றினான்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே"**

என்பதனானறிக.

எல்லாம் இறைவனாலென்பதே:-

**" அவனசைந்திடி லொருவனு வசைந்திடு
மவனசையா விடிலனு வசைந்திடா
சிவன் சக்தியோ டுறிற்செகம் விரிந்திடுஞ்
சிவன்றனித்திடில் விரிசெகமொடுங்குமால்"**

என்பதனானறிக (3)

**7. அண்டபகி ரண்டமும் மாயா விகாரமே
அம்மாயை யில்லாமையே
யாமெனவும் அறிவுமுண் டப்பாலும் அறிகின்ற
அறிவினை யறிந்துபார்க்கின்
எண்டிசை விளக்குமொரு தெய்வஅரு ளல்லாமல்
இல்லையெனு நினைவும் உண்டிங்
கியானென தறத்துரிய நிறைவாகி நிற்பதே
இன்பமெனும் அன்பும் உண்டு**

கண்டன எலாம் அல்ல என்றுகண் டனைசெய்து
கருவிகர ணங்களோயக்
கண்மூடி யொருகண மிருக்களன் றாற்பாழ்த்த
கர்மங்கள் போராடுதே
பண்டையுள கர்மமே கர்த்தா வெனும்பெயர்ப்
பட்சம்நான் இச்சிப்பனோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

(பொ-ரை) பார்க்குமிடந்தோறும் சற்றும் பிரித வில்லாமல் நிறைந் திருக்கின்ற பரிபூரணவின்பமே! உள்ளண்டங்களும், வெளியண்டங்களும், மாயையின் விகார ரூபமேயாகும் எனவும், அந்த மாயையோ, பொய்யே யாகுமெனவும், உணரும் உணர்ச்சியுமுண்டு. அதற்கு மேலும் அறிகின்ற அறிவினை யுணர்ந்து பார்க்குங்கால், எட்டுத் திக்குகளையும் விளங்கச் செய்யும் ஒரு தெய்வக் கிருபையின்றி, (ஒன்றும்) இல்லை யென்னு மெண்ணமு முண்டு, (அன்றி) இந்நிலவுலகில் யானென்னு மகங்காரமும், எனதென்று மமகாரமுமற்றுத், துரியபதத்தில் நிறைந் திருப்பதே ஆனந்தமாகு மென்கிற இச்சையு முண்டு (ஆயின்) திருஷ்டிப் பொருள்களெல்லாம் நிலையுள்ளதல்ல வென்று கண்டித்துக், கருவிகளுங், கரணங்களும் ஒடுங்கும்படி, ஒரு ஷணமேனும் கண்களை மூடிக்கொண்டு, நிட்டை கூடியிருப்போமென்றால் தீமையை விளைக்கும் கருமங்கள் (முன்னின்று) போராடுகின்றனவே, (ஆகலான்) பழைமை யாயுள்ள கருமத்தையே கர்த்தாவென்று சொல்பவர் பட்சத்தை நான் விரும்புவேனோ. (எ-று) அங்ஙனம் விரும்பின் எல்லாம் நீயென்பது இல்லையாய்விடும். ஆகலான், விரும்பேன் என்பது குறிப்பு.

ஈண்டு, உள்ளண்டமென்றது-தத்துவமார்க்கமன்று. துருவ சக்கரத் திற்குட்பட்டதை. தநுவாதி நான்கும் மாயையே யென்பார். 'அண்டப கிரண்டமும் மாயாவிகாரம்' எனவும், அம்மாயை பொய்யென்பார், 'அம்மாயை யில்லாமையே யாம்' எனவும், இவற்றை யறிந்து பார்க்குங்கால், அவனன்றி யொன்று மில்லையாகலான், 'எண்டிசைவிளக்கு மொருதெய்வ வருளல்லாமலில்லை யெனு நினைவு முண்டு' எனவும் துரியபதத் திருப்பதே பேரின்ப மாகலான், 'துரிய நிறைவாகி நிற்பதே யின்பமெனு மன்பு முண்டு' எனவும் கூறினார்.

கருவி-அந்தக் கரணங்கள் நீங்கிய அக்கருவி, புறக் கருவிகளை. கரணங்கள்-மனம், புத்தி, சித்தம், அகங்காரம், என்பன. கருவி-அகக்கருவி, புறக்கருவிகள் என்றும், கரணங்கள், மனமுதலிய அந்தக்கரணங்கள் என்றும், வரைந் தாருமுளர். இவர் கரணங்களை அகக் கருவியிற் சேர்ந்ததல்ல வெனக் கொண்டார் போலும். கண்மூடி யென்றதற்கு-அதன் இதழ்களை மூடி என்பது பொருள். கண்களை மூடி என்பதற்குக் கண்மூடி என்றது, உலகவழக்கு. கர்மங்கள் போராடுதே என்பது-பன்மையில் ஒருமை வந்த வழுவமைதி. இதில் நிகழ்கால இடைநிலை தொகுத்தல். (4)

8. சந்ததமும் எனதுசெயல் நினதுசெயல் யானெனுந்
தன்மைநினை யன்றியில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவமிதுவே
இந்தநிலை தெளிய நான் நெக்குருகி வாடிய
இயற்கைதிரு வுளமறியுமே
இந்நிலையி லேசற் றிருக்கஎன் றால்மடமை
இதசத்ரு வாகவந்து
சிந்தைகுடி கொள்ளுதே மலமாயை கன்மந்
திரும்புமோ தொடுவழக்காய்ச்
சென்மம்வரு மோஎனவும் யோசிக்கு தேமனது
சிரத்தையெனும் வாளும்உதவிப்
பந்தமற மெய்ஞ்ஞான தீரமுந் தந்தெனைப்
பாதுகாத் தருள்செய்குவாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

(பொ-ரை) பார்க்கு மிடந்தோறுஞ் சற்றும் பிரிதலில்லாமல் நிறைந்திருக்கின்ற பரிபூரணவின்பமே! நானென்று சொல்லுந் தன்மை, உன்னையல்லாம லில்லாத தன்மையால், உனக்கு வேறல்லாதவனா யிருக்கிறேன், (ஆகலான்) சதாகாலமும் என்னுடைய செய்கைகள், உன்னுடைய செய்கைகளே. இந்த நிலையே வேதாந்த சித்தாந்தங்களுக்கும் பொதுவான இயற்கையாகும். நான் இந்த நிலையை யுணர்ந்து கொள்ள, மனந் தளர்ந்துருகி வாடிய தன்மையை உனது திருவுளமறிந்திருக்குமே. ஆயினும், (அங்ஙனமறிந்த) இந்த நிலையில் சிறிது போழ்தே இருக்கலா மென்றால், அஞ்ஞானமானது, நன்மை செய்யும்

பகைவன் போல் வந்து, மனத்திற் குடியேறுகின்றதே, அன்றி, (அந்த அஞ்ஞானத்தால்) மலமாயா கன்மங்கள் மறுபடியும் வருமோ எனவும், (அவற்றால்) சென்மமுந் தொடர் வழக்காய் வருமோ வெனவும், என் மனமானது நினையா நின்றதே, ஆகலான், அச்சென்மக்கட் டொழியச் சிரத்தை யென்னும் வாளையும், மெய்ஞ்ஞானமாகிய தைரியத்தையுங் கொடுத்து, என்னைக் காப்பாற்றியருள் புரிவாய். எ-று.

எல்லாம் இறைவனாற் றொழிற்படுவதாகலான், 'சந்ததமு மெனது செயனினது செயல்' எனவும், எவ்வகை ஆன்மாக்களினும் அத்துவிதமாய் நிற்றலான், 'யானெனுந் தன்மை நினையன்றி யில்லாத்தன்மையால் வேறலேன்' எனவும், இதுவே வேதாந்தத்திற்குஞ் சித்தாந்தத்திற்கும் சம்மதமாகலான், 'வேதாந்த சித்தாந்த சமரச சுபாவமிதுவே' எனவும் இதையறிந்து கொள்ளுதல் பெருந்துன்பமாகலான், 'இந்தநிலை தெளிய நானெக்குருகி வாடிய வியற்கை,' யெனவும், இறைவன் எல்லாவற்றையும் அறியும் முற்றுணர் வினனாகலின், 'திருவுள மறியுமே' எனவும், அங்ஙன முணர்ந்தநிலையில் இருக்கப்புகின் அஞ்ஞானம் வந்து தாக்கலின், 'இந்நிலையிலே சற்றிருக்க வென்றால் மடமையித சத்ருவாக வந்து சிந்தைகுடி கொள்ளுதே,' எனவும், அந்த அஞ்ஞானங் காரணமாய்ப் பாசங்கள் அடர்தலின், 'மனமாயாகன்மந் திரும்புமோ', எனவும், அப்பாசங்களால் சென்மமுண்டாதலின், 'தொடுவழக்காய்ச் சென்மம் வருமோ எனவும் யோசிக்குதே,' எனவும் அச்சென்மத்தை, நிஷ்டாமுயற்சியினாலேயே களைய வேண்டுமாதலினாலும், அந்நிஷ்டை கைகூட, ஞானங் காரணமாதலினாலும், 'சிரத்தையெனும் வாளுமுதலிப்பந்த மற மெய்ஞ்ஞான தீரமுந்தந்து' எனவும், அவ்விரண்டையுந் தந்தும், என் சகசமல வாதனையால் அதைக் களைக்கூடாமல் பின்னிடுங்கால், நீயே முன்னின்று அப்பிறவியிற் புகுத்தாமல் இரட்சிக்க வேண்டுமென்பார், ' எனைப் பாதுகாத்தருள் செய்குவாய்' எனவுங் கூறினார்.

இச்செய்யுளில் மலமென்றது-ஆணவத்தை. இது உயிர்க்குச் சகசமலம் மாயாகன்மங்கள், ஆகந்துகம், இடையில் வருதல். பிறவி, சமுத்திர அலைகள் போற் றொடர்ந்து வருதலின், 'தொடுவழக்காய்ச் சென்மம் வருமோ' என்றார். இதசத்ரு-வெளியில் சிநேகித்து உள்ளே

பகைபாராட்டுவோன். கொள்ளுதே - இதினும் நிகழ்கால இடைநிலை தொகுத்தல். (5)

9. **பூதலய மாகின்ற மாயைமுத லென்பர்சிலர்**
பொறிபுலன் அடங்குமிடமே
பொருளென்பர் சிலர்கரண முடிவென்பர் சிலர்
போனஇட மென்பர் சிலபேர் (குணம்
நாதவடி வென்பர்சிலர் விந்துமய மென்பர்சிலர்
நட்டநடு வேயிருந்த
நாமென்பர் சிலர் உருவ மாமென்பர் சிலர்கருதி
நாடில்அரு வென்பர்சிலபேர்
பேதமற வுயிர்கெட்ட நிலையமென் றிடுவர்சிலர்
பேசில்அரு ளென்பர்சிலபேர்
பின்னும்முன் னுங்கெட்ட சூனியம தென்பர்சிலர்
பிறவுமே மொழிவர் இவையால்
பாதரச மாய்மனது சஞ்சலப் படுமலால்
பரமசுக நிட்டைபெறுமோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே

(பொ-ரை) பார்க்குமிடந்தோறுஞ் சற்றும் பிரிதலில்லாமல் நிறைந்திருக்கின்ற பரிபூரணவின்பமே! சிலர் பூதங்கள் ஒடுங்குகின்ற மாயையே ஆதிவஸ்துவென்பார்கள்; சிலர், மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் ஐம்பொறிகளும், ஸ்பரிசம், ரசம், ரூபம், கந்தம், சப்தம் என்னும் ஐம்புலன்களும், ஒடுங்குமிடமே வஸ்துவென்பார்கள். சிலர், மனம், புத்தி, சித்தம், அகங்காரம், என்னும் அந்தக் கரணங்கள் நான்கும் அற்றவிடமே வஸ்துவென்பார்கள். சிலர் குணமிறந்தவிடமே வஸ்துவென்பார்கள், சிலர் நாதரூபமே வஸ்து வென்பார்கள், சிலர் விந்து ரூபமே வஸ்து வென்பார்கள், சிலர் நடுவிலிருந்ததாமே வஸ்து வென்பார்கள், சிலர் ரூபமே வஸ்துவென்பார்கள். சிலர் நன்றாயோசிக்கின் அரூபமே வஸ்துவென்பார்கள், சிலர் வேற்றுமை கெடத் தற்போதமற்றவிடமே வஸ்து வென்பார்கள். சிலர் சொல்லுங்கால் அருளே வஸ்து வென்பார்கள், சிலர், பின்னு முன்னுமற்ற பாழே வஸ்து வென்பார்கள். சிலர் வேறு இடங்களையும், வஸ்துவென்று சொல்லுவார்கள், இவற்றால் என் மனமானது பாதரசம் போலத் தங்காம

வலையுமே யன்றி, மேலான சுகம் விளைக்கும் நிஷ்டையைக் கூடுமோ? கூடாது (எ-று.)

'நட்டநடுவேயிருந்தநா மென்போர்' நாம் பிரமமென்னு மகங்காரவாதிகள் 'பின்னு முன்னுங் கெட்ட சூனிய மென்போர்' சூனிய வாதிகள். இங்ஙனம் பலரும் பலவாறு சொல்லுகின்றமையால், இதுவே உண்மைவஸ்து வென்றறியக் கூடாமையின், 'பாதரசமாய் மனது சஞ்சலப்படமலாற் பரமசுக நிஷ்டை பெறுமோ, என்றார். பாதரசம்-ஓரிடத்தில் நிலைபெறாமல் அங்குமிங்கு மோடுதலின், அதனை மனத்திற் குவமித்தனர். குணமென்றது-முக்குணங்களை. அவை ராஜசம், தாமஸம், சாத்துவிகம், என்பன. (6)

10. அந்தகா ரத்தையோர் அகமாக்கி மின்போல் என்
அறிவைச் சுருக்கினவரார்
அவ்வறிவு தானுமே பற்றினது பற்றாய்
அழுந்தவுந் தலைமீதிலே
சொந்தமா யெழுதப் படித்ததார் மெய்ஞ்ஞான
சுகநிட்டை சேராமலே
சோற்றுத் துருத்தியைச் சதமெனவும் உண்டுண்டு
தூங்கவைத் தவரார்கொலோ
தந்தைதாய் முதலான அகிலப்ர பஞ்சந்
தனைத்தந்த தென தாசையோ
தன்னையோ நோவனோ பிறரையே நோவனோ
தற்கால மதைநோவனோ
பந்தமா னதுதந்த வினையையே நோவனோ
பரமார்த்தம் ஏதுமறியேன்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே

(பொ-ரை) பார்க்குமிடந்தோறுஞ் சற்றும் பிரிதலில்லாமல் நிறைந்திருக்கின்ற பரிபூரண வின்பமே! அஞ்ஞானமாகிய இருட்டை ஓரிடமாக்கி, (அவ்விடத்தில்) என்னுடைய அறிவை மின்னலைப்போலச் சுருக்கி வைத்தவர் யார், அந்த வறிவு பிடித்ததையே உறுதியாய்க்கொண்டு, (அவ்விடத்தில்) ஆழ்ந்தவும், சொந்தமாய் என் தலையில் எழுதும்படி நியமித்தது யார், பரஞானவின்பங் கொடுக்கும் நிட்டையைக் கூடாமல், சரீரத்தை நிலையுள்ளதாக

வெண்ணியும், காலந் தவறாதுண்டு நித்திரை செய்யும்படி நியமித்தவர்யார், (அன்றி) தகப்பன், தாய், முதலிய பிரபஞ்சத்தைக் கொடுத்தது என்னுடைய இச்சை யாற்றானோ (ஆயின்) என்னை நானே நொந்து கொள்வேனோ, அந்நியரை நொந்து கொள்வேனோ, (இவையெல்லாம் இப்பொழுது நிகழ்வதாகலின்) தற்காலத்தை நொந்து கொள்வேனோ, பிறவிகளைத் தந்த இருவினைகளை நொந்து கொள்வேனோ, முக்கியார்த்த மொன்று முணர்ந்திலேன். (எ-று)

அறிவு, அஞ்ஞானத்திலழுந்தியது தலைவிதி யென்பார், 'அவ்வறிவு தானுமே பற்றினது பற்றாயழுந்தவும் தலைமீதிலே சொந்தமாயெழுதப் படித்ததார்' எனவும், அவ்வஞ்ஞானத்தை நீக்கிக்கொள்ள நிட்டை கூடாமல், சரீரத்தைப் போஷித் துறங்கினே னென்பார். 'மெய்ஞ்ஞான சுக நிட்டை சேராமலே சோற்றுத் துருத்தியைச் சதமெனவு முண்டுண்டு தூங்க வைத்தவரார் கொலோ' எனவும், அவாவே பிறவிக்கிட மென்பார், தந்தைதாய் முதலான வகிலப்ரபஞ்சந்தனைத் தந்த தெனதாசையோ' எனவுங் கூறினார்.

இதனை,

> **"அவாவென்ப தெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந்**
> **தவாப் பிறப்பீனும் வித்து"**

என்பதனானறிக.

11. **வாரா தெலாமொழிய வருவன வெலாமெய்த**
மனதுசாட் சியதாகவே
மருவநிலை தந்ததும் வேதாந்த சித்தாந்த
மரபுசம ரசமாகவே
பூராய மாயுணர வூகமது கந்ததும்
பொய்யுடலை நிலையன்றெனப்
போதநெறி தந்ததுஞ் சாசுவத ஆனந்த
போகமே வீடென்னவே
நீராள மாயுருக வுள்ளன்பு தந்ததும்
நின்னதருள் இன்னும் இன்னும்
நின்னையே துணையென்ற என்னையே காக்கவொரு
நினைவுசற் றுண்டாகிலோ

பாராதி யறியாத மோனமே யிடைவிடாப்
பற்றாக நிற்க அருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

(பொ-ரை) பார்க்குமிடந்தோறுஞ் சற்றும் பிரிதலில்லாமல் நிறைந் திருக்கின்ற பரிபூரண வின்பமே! வாராத பொருள்களெல்லாம் வாராமலே யொழியக்கடவன, வரும் பொருள்களெல்லாம் வந்து சேரக்கடவன, என்று மனதைச் சாட்சியாய்க் கொண்டிருக்க, (உண்மை) நிலையைக் கொடுத்ததும், வேதாந்த சித்தாந்த மரபுகளிரண்டும், ஒத்திருக்கிறதாக ஆத்யந்தமாயறியும் படி, யுத்தியைக் கொடுத்ததும், பொய்யாகியவுடலை நிலையில்ல தென்று சொல்ல ஞான மார்க்கத்தைக் கொடுத்ததும், அழியாத இன்பா நுபவமே மோட்சமென்று நீரின் தன்மையாயுருகும்படி மனோவிச்சையைக் கொடுத்ததும், உன்னுடைய கருணை யேயாகும், (ஆதலான்) இனி, எக்காலத்தும் உன்னையே துணையென்று கொண்ட என்னையே காப்பாற்றுதற்கு, ஒப்பற்ற திருவுளக்கடையுண்டாகுமானால், பிருதிவி முதலிய தத்துவங்களா லறியப்படாத மௌனநிலையே நீங்காத பற்றுக் கோடாகக் கொண்டு, அதில் தவறாமல் நிலைத்திருக்கக் கிருபை செய்வாய். (எ-று)

" ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகு
மன்றி யதுவரினும் வந்தெய்து-மொன்றை
நினையாத முன்வந்து நிற்பனு நிற்கு
மெனையாளு மீசன் செயல்"

என்றாராகலின், 'வாராதெலாமொழிய வருவனவெலா மெய்த' வெனவும் இதனை, மனது சாட்சியாய்த் துணிய வேண்டியிருத்தலின், மனது சாட்சியதாகவே மருவ, எனவும் ஆன்மாக்களடைய வேண்டியது உண்மை நிலையாகலின், 'நிலைதந்ததும்' எனவும், அந்தநிலை, வேதாந்த சித்தாந்தங்களின் சம்மதமென, யுத்தியால் அறிய வேண்டுமாகலின், 'வேதாந்த சித்தாந்த மரபு சமரசமாகவே பூராயமாயுணரவூகமது தந்ததும்' எனவும், அங்ஙன மறியுங்கால், உடல் பொய்யெனத் தோன்றுதலின், 'பொய்யுடலை நிலையன்றெனப் போதநெறி தந்ததும்'

எனவும், "தேகம் நிலையன்றெனத் தோன்றியபோழ்து, மோட்ச சாதனங் கை கூடுமாகலின், "சாசுவத வாநந்த போகமே வீடென்ன" எனவும்,

"வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தா முறுபுனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னை யாண்டாய்க்
குள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே"

என்றாராகலின், 'நீராளமாயுருக வுள்ளன்பு தந்ததும்' எனவும் இவை யனைத்தும் இறைவன் திருவருளாகலின், 'நின்னதருள்' எனவுங் கூறினார்.

'பாராதியறியாத மோனம்' என்றது தத்துவாதீதமான மௌனநிலையை பாராதி-பிருதிவி தத்துவமுதல் சிவ தத்துவ மீறாகச் சொல்லப்பட்ட அகக்கருவிகள் முப்பத்தாறினை. அவையாவன, பூதம் - 5, ஞானேந்திரியம்-5, தன்மாத்திரை-5, கன்மேந்திரியம்-5, அந்தக்கரணம்-4, வித்தியாதத்துவம்-7, சிவதத்துவம்-5 ஆக 36

வேதாந்த சித்தாந்த முடிவுகளொன்றென்றதை.

"வேதமொ டாகம மெய்யா மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே"

என்பதனானறிக. *(8)*

12. ஆழாழி கரையின்றி நிற்கவிலை யோகொடிய
ஆலம் அமு தாகவிலையோ
அக்கடலின் மீதுவட அனல்நிற்க வில்லையோ
அந்தரத் தகிலகோடி
தாழாமல் நிலைநிற்க வில்லையோ மேருவுந்
தனுவாக வளையவிலையோ
சத்தமே கங்களும் வச்ரதர னாணையில்
சஞ்சரித் திடவில்லையோ

வாழாது வாழவே இராமனடி யாற்சிலையும்
மடமங்கை யாகவிலையோ
மணிமந்த்ர மாதியால் வேண்டுசித் திகள்உலக
மார்க்கத்தில் வைக்கவிலையோ
பாழான என்மனங் குவியஒரு தந்திரம்
பண்ணுவ துனக்கருமையோ
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

(பொ-ரை) பார்க்குமிடந்தோறுஞ் சற்றும் பிரிதலில்லாமல் நிறைந் திருக்கின்ற பரிபூரண வின்பமே! ஆழமாகிய கடலானது கரையில்லாமலே வெளிப்படாமல் நிற்கவில்லையோ, கொடிய ஆலகால விஷமானது (சிவபெருமானுக்கு) உணவாக வில்லையோ, அந்தக் கடலினடுவில் வடவாமுகாக்கினியானது, அவியாம லிருக்கவில்லையோ. அண்ட கோடிகளெல்லாங் கவிழாமல் ஆகாயத்தில் நிலைத்திருக்கவில்லையோ, மேரு மலையுஞ் சிவபெருமானால் வில்லாக வளைக்கப்பட வில்லையோ, வச்சிராயுதத்தையுடைய இந்திரன் கட்டளை யினால் ஏழு மேகங்களும் வசிக்கவில்லையோ, வாழாமல் வாழ்வதற்கு, இராமனுடைய பாதத் துளியினால், கல்லும் இளம்பெண்ணாக வாகவில்லையோ, மணிமந்தர முதலியவைகளால் வேண்டிய சித்திகளை, லௌகிக நெறியில், வைக்கவில்லையோ, (இவையெல்லாம் உனக்கெளிதாயிருக்க) தீமையையுண்டாக்கும் என்னுடைய மனமடங்க, ஓருபாயஞ் செய்வது உனக்குக் கஷ்டமோ? அன்று (எ-று)

ஆலம் அமுதாகவிலையோ என்றது திருப்பாற்கடல் கடையுங்கால் உண்டான விஷத்தைத் தேவர்களின் வேண்டுகோளால், சிவபெருமான் அமுது செய்தருளினார் என்பதை வடவனல் என்றது-அக்கடலினடுவில் பெட்டைக் குதிரை வடிவாயமைக்கப்பட்டிருக்குந்தீ-மேருவுந்தநுவாக வளைய விலையோ என்றது-திரிபுரசங்காரகாலத்தில் சிவபெருமானால் வளைக்கப் பட்டமையை.

***சப்தமேகங்கள்**-சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவர்ணம், என்பவை - இவை முறையே, மணி, நீர், பொன், பூ, மண், கல், நெருப்பு,*

இவைகளைப் பொழிபவை. இவற்றிற்குத் தலைவன் இந்திரனாகலான், 'சப்தமேகங்களும் வச்ரதரனாணையிற் சஞ்சரித்திடவில்லையோ,' என்றார். வச்ரதரன்: இது காரணப்பெயர் வச்சிராயுதத்தை யுடைமையான். மணி- இரசமணி.

இராமனடியாற்சிலை பெண்ணான வரலாறு :-

முன்னொரு காலத்தில் கௌதம முனிவருடைய பத்தினியாராகிய அகலிகையின், வனமுலை திளைக்க வண்ணங் கொண்டிருந்த இந்திரன், ஒருநாள் அர்த்த ராத்திரியில் வைகறை போற் சாமமறிவிக்க, அம்முனிவர் துயிலைநீத்து நித்தியகடன்களை முடித்துவரும் பொருட்டுச் சென்றனர். பிறகு, இந்திரன் அம்முனிவரது வேஷந்தாங்கி அவரது க்ருஹத்துட் பிரவேசித்து, ஆண்டிருந்த அகலிகையைக் கூடிச் சுகித்திருக்குங்கால், அவன் "இவன் நமது கணவனல்லன்" என்றறிந்தும், மாயாவிகாரத்தால், ஒன்றுஞ் சொல்லாமலிருந்தனள். இப்படியிருக்கத் தமது கடன்களை முடிக்கச் சென்ற முனிவர், இப்பொழுது வைகறையன்றென் றுணர்ந்து, தமது க்ருஹத்திற்குத் திரும்பிவந்தனர். அப்பொழுது அகலிகை பயந்து, நடுங்கி யொடுங்கி ஒரு புறத்திலொதுங்கி நின்றனள். இந்திரனோ, ஒரு பூனைவடியாய்ப் போகலுற்றான். இவைகளையறிந்த முனிவர், அதிகக் கோபத்துடன், இந்திரனைப் பார்த்து, "உன்னுடலில் ஆயிரம் பெண்குறியாகக் கடவது" எனச் சபிக்க, அச்சாபத்தை யேற்றுக் கொண்டு, தனது தேவலோகத்திற்குப் போய்விட்டனன். பின்னர், தமது மனைவியாரை நோக்கி, "நீயொரு கருங்கல்லாகக் கடவை" யெனச் சபித்தனர். அதற்கு மனைவியார், இச்சாபம் எப்பொழுது நிவர்த்தியாகுமெனக் கேட்க, தசரத மகாராசனுடைய குமாரனான இராமன் என்பவனுடைய கால் துகளினாற் சாபநீங்கிப் பழையவடிவம் பெறுவாயெனப் புகல, அவ்வாறே ஒரு கருங்கல்லாகி, அவ்வூரெல்லையிற் போய் விழுந்து கிடந்தனள். இது நிற்க, தேவலோகத்திற்குப் போன இந்திரனைத் தேவர்கள் பார்த்துச் சகியாதவர்களாய், அம்முனிவரிடம் வந்து வேண்டிக் கொள்ள, அம்முனிவர், அப்பெண் குறியாவும் கண்களாகக் கடவது" என்று, அச்சாபத்தை நிவர்த்தி செய்தனர். சிலகாலங்கழித்து, இராமர்

தாடகையைக் கொன்று விசுவாமித்திரருடன், மிதிலா நகரத்திற்குச் செல்லுங்கால், அவரது பாத்தூளி பட்டுப் பழையவடிவம் பெற்றனள். இதனை,

கம்பராமாயணம், அகலியைப் படலம்

" இனைய நாட்டினை யினிதுசென் றிஞ்சிசூழ் மிதிலை
புனையு நீள்கொடிப் புரிசையின் புறத்துவந் திறுத்தார்
மனையின் மாட்சியை யழித்திழி மாதவப் பன்னி
கனையு மேட்டுயர் கருங்கலோர் வெள்ளிடைக் கண்டார்.

கண்ட கன்மிசைக் காகுத்தன் கழற்றுகள் கதுவ
உண்ட பேதைமை மயக்கற் வேறுபட் டுருவங்
கொண்டு மெய்யுணர் பவன்கழல் கூடிய தொப்பப்
பண்டை வண்ணமாய் நின்றனண் மாமுனி பணிப்பான்"

என்பதனானறிக *(9)*

13. ஆசைக்கோ ரளவில்லை அகிலமெல் லாங்கட்டி
ஆளினுங் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர் அளகேசன் நிகராக
அம்பொன்மிக வைத்தபேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்தபேரும்
நிலையாக வேயினுங் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணாவர்எல்லாம்
யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதும் நான் நான்எனக் குளறியே
ஒன்றைவிட் டொன்றுபற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை அருள்வாய்
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

(பொ-ரை) பார்க்குமிடந் தோறுஞ் சற்றும் பிரிதவில்லாமல் நிறைந்திருக்கின்ற பரிபூரண வின்பமே! ஆசைக்கு ஓரளவில்லை யாகலான், ஒருவர் உலகங்களெல்லாவற்றையுங் கட்டி (ஒரு குடைக்கீழ்) ஆண்டாலும், சமுத்திரத்தின் மேலுந் தம்முடைய கட்டளை செல்ல வேண்டுமென்றே எண்ணுவார்கள். குபேரனுக்கொப்பாக மிகுந்த செல்வம் வைத்திருப்போரும், ரசவாத வித்தையை

யிச்சித்து, அதற்காக அலைவார்கள் அனேககால மிறவாம லிருந்தவர்களும், பின்னும் அவ்வாறே நிலைத்திருக்கக் காயசித்தி செய்யுங் கற்பமார்க்கந் தேடி மனம் வருந்துவார்கள், இவற்றையெல்லாம் யோசிக்குமிடத்துப் பசி அடங்க உண்பதும், நித்திரை செய்வதுமாகவே முடிகின்றன. (ஆதலால்) எனக்கு (இப்பொழுது) இருப்பதே போதுமானது. (ஆயினும்) நான் நான் என்று அகங்காரத்தினால் பிதற்றி, ஒரு பொருளைவிட்டு, ஒரு பொருளை நம்பிச் சென்மசாகரத்தில் வீழாதபாடி மனமிறந்த பரிசுத்தத்தையுடைய மௌன நிலையாகிய (தெப்பத்தை) மாத்திரம் எனக்குக் கிருபை செய்வாய். (எ-று)

கடல் மீது ஆணை செல்ல நினைத்தல் முதலிய யாவும், அவாவின் மேலீட்டாலென்பர். 'ஆசைக்கோரளவில்லை' எனவும், அவை யாவுங் கைகூடாமல், உண்பதும், உறங்குவதுமே கைகூடியதென்பார். யோசிக்கும் வேளையிற் பசி தீர வுண்பதும் உறங்குவதுமாக முடியும்' எனவும், எனக்கு அவ்வாறாய ஆசையின்றென்பார். 'உள்ளதே போதும்' எனவும், ஆயின், ஆணவத்தால் ஒன்றை விட்டொன்றைப் பிடித்துப் பாசத்திலாழாமல் பதிஞானந் தந்தருள வேண்டுமென்பார், 'ஒன்றைவிட்டொன்று பற்றிப் பாசக்கடற்குளே வீழாமன் மனதற்ற பரிசுத்த நிலையருள்வாய்' எனவுங் கூறினார். (10)

பொருள்வணக்கம்

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

14. **நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்**
நிறைவாய் நீங்காச்
சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறை
சுடராய் எல்லாம்
வைத்திருந்த தாரகமாய் ஆனந்த மயமாகி
மனவாக் கெட்டாச்
சித்துருவாய் நின்றவொன்றைச் சுகாரம்பப் பெரு
சிந்தை செய்வாம். (வெளியைச்

(பொ-ரை) அழியாததாகியும், மலமில்லாததாகியும், ரூபமில்லாத தாகியும், நோயில்லாததாகியும், எங்கு நிறைந்ததாகியும், குறையாத பரிசுத்தமுடையதாகியும், தூரமுமானதாகியும், சமீபமுமானதாகியும், துரியமென்னு

மிடத்தில் நிறைந்த ஒளியாகியும் (தனக்கோராதாரமும் வேண்டாமல்) எல்லாப் பொருள்களையுந் தன்னிடத்தில் வைத்திருந்த ஆதாரமாகியும் இன்பவடிவாகியும், மனத்துக்கும், வாக்குக்கும் எட்டாத ஞானவடிவாகியும், இருந்த ஒருபொருளை சுகோதயமாகும் பேராகாயத்தை, யாம், மனனம் பண்ணுவோம். (எ-று)

பிறப்பிறப்பற்றதாகலின் 'நித்தியமாய்' எனவும், அநாதியே மல நீக்கங்களோடு கூடியதாகலின் 'நிர்மலமாய்' எனவும், தனக்கோர் சரீரம் வேண்டாததாகலின் 'நிட்களமாய்' எனவும், ரூபமற்றதற்குப் பிணிவந்தணுக, இடமில்லையாகலின் 'நிராமயமாய்' எனவும், "பூரணாத்வாத்புருஷ:" என்றபடியே பரி பூரண்ணாகலின் 'நிறைவாய்' எனவும், அகத்தூய்மையுடை யார்க்கே அறியப்படுவதாகலின் 'நீங்காச்சுத்தமுமாய்' எனவும், அன்பில்லார்க்குக் கிட்டாததாகலின் 'தூரமாய்' எனவும், "பத்திவலையிற் படுவோன் காண்க" என்றாராகலின் 'சமீபமுமாய்' எனவும், வேதங்கள் நான்காவதென்று முறையிடுதலின் 'துரியநிறை சுடராய்' எனவும், தான் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருத்தலின் 'எல்லாம் வைத்திருந்த தாரகமாய்' எனவும், மெய்யன்பரநுபவிக்கு மானந்தமே தனக்கோர் வடிவாதலின் 'ஆனந்தமயமாகி' யெனவும் மனவாக்குகளாலறியப் படாததாகலின், மனவாக்கெட்டாச் சித்துருவாய்' எனவும், இங்ஙன நிற்கும் பொருள் ஒன்றேயாகலின் 'நின்றவொன்றை' எனவும், அதுவும் சுகவெளியாகலின், 'சுகாரம்பப்பெரு வெளியை' எனவும், இதனைச் சிந்தை செய்வதே எய்தற்கரிய பெரும்பேறாகலின் 'சிந்தையெல்லாம்' எனவுங் கூறினார். (1)

15. யாதுமன நினையுமந்த நினைவுக்கு நினைவாகி
யாதின் பாலும்
பேதமற நின்றுயிருக் குயிராகி அன்பருக்கே
பேரா னந்தக்
கோதிலமு தூற்றரும்பிக் குணங்குறியொன் றறத்
கொடுத்துக் காட்டுந் (தன்னைக்
தீதில்பரா பரமான சித்தாந்தப் பேரொளியைச்
சிந்தை செய்வாம்.

(பொ-ரை) மனம் எந்தப் பொருளை எண்ணுமோ, அந்த எண்ணத்துக் கெண்ணமாகி, எந்தப் பொருளின்

கண்ணும், அபேதமாயிருந்து, ஆன்மாக் கட்குப் பரமான்மா வாகி, அடியார்களுக்குக் குற்றமுற்ற பேரின்பாமிர்தமானது, ஊற்றாகச் சுரந்து (அவ்வடியார்களின்) குணமுங், குறியுஞ் சற்று மில்லாம லொழியத் தன்னைக் கொடுத்துக் (அவர்கள் காணுமாறு) காட்டுகின்ற கெடுதியில்லாத பராபரமாகிய சித்தாந்த மதத்தால் சொல்லப்பட்ட பெரிய வொளி வடிவான பொருளை, (யாம்) துதிசெய்வோம். (எ-று)

இறைவன் அறிவிக்குஞ் சித்தாகலின், அவன் நினைப்பித்தாலன்றி மன நினைப்பதின்றென்பார், 'யாதுமன நினையுமந்த நினைவுக்கு நினைவாகி' எனவும், சர்வ வியாபியென்பார் 'யாதின்பாலும் பேதமற நின்றுயிர்க்குயிராகி' எனவும், அடியவர்களுக்கே தன்னைத் தரிசிப்பித் தின்பங் கொடுப்பவன், என்பார், 'அன்பருக்கே பேரானந்தக்கோதி லமுதூற்றரும்பிக் குணங்குறியொன்றறத் தன்னைக் கொடுத்துக் காட்டும்' எனவும், ஆகமுடிவில் விளங்குந் தேஜோமயன் இவனே யென்பார், தீதில் பராபரமான சித்தாந்தப் பேரொளியை' எனவும், அவனைத் துதி செய்வதே முத்திக்கேது வென்பார், 'சிந்தைசெய்வாம்' எனவுங் கூறினார்.

அன்பருக்கே இதில் ஏகாரம் பிரிநிலை, மற்றோர்க்கவ் வின்ப மின்றென்பது பொருளாகலின். (2)

16. பெருவெளியாய் ஐம்பூதம் பிறப்பிடமாய்ப் பேசாத
பெரிய மோனம்
வருமிடமாய் மனமாதிக் கெட்டாத பேரின்ப
மயமாய் ஞானக்
குருவருளாற் காட்டிடவும் அன்பரைக்கோத் தற
கொண்டப் பாலுந் (விழுங்கிக்
தெரிவரிதாய்க் கலந்ததெந்தப் பொருள்அந்தப்
சிந்தை செய்வாம் (பொருளினையாஞ்

(பொ-ரை) பேராகாயமாகியும், ஐந்து பூதங்களும் பிறப்பதற் கிடமாகியும், பேசாததாகிய பெரிய மௌனநிலை வருவதற்கிடமாகியும், மனமுதலிய வற்றிற்குக் கிட்டாத பேரின்ப வடிவாகியும், ஞானாசிரியர், தமது காருண்யத்தினாற் காட்டவும், (அக்குரூப தேசம்பெற்ற) அடியவர்களை மறைத்து, அவர்களுடைய ஆணவ வலியடங்கச் கவர்ந்து கொண்டு, அதன்பிறகும், அவர்களால்

அறிவதற் கருமையுடையதாய்ப் (பிரிவறக்) கலந்து நின்றது. எந்தப் பொருளோ! அந்தப் பொருளையாம் துதிசெய்வோம். (எ-று)

'களங்கமிலுருவந்தானே ககனமாய்ப் பொலிய' என்றாராகலின் 'பெருவெளியாய்' எனவும், அவ்வெளி யிலேயே பூதங்கள் ஒடுங்குதலானும், எது யாண்டொ டுங்குமோ, ஆண்டிருந்தே அது தோன்ற வேண்டுதலானும், 'ஐம்பூதம் பிறப்பிடமாய்' எனவும் மௌனநிலை யுண்டாவதற்கிடமாகலின், 'பேசாத பெரியமோனம் வருமிடமாய்' எனவும், இதனை யறிய வேண்டியது குருமுகத்தானாகலின், 'ஞானக்குருவருளாற் காட்டிடவும்' எனவும், அங்ஙன மறிந்தாரது ஆணவவலியடக்கி அவர் களைத் தன்வயப்படுத்திக் கொள்ளுதலின், 'அன்பரைக் கோத்தற விழுங்கிக் கொண்டப்பாலுந் தெரிவரிதாய்க் கலந்த தெந்தப்பொருள் எனவும், அப்பொருளைச் சிந்திப்பதே பிறவிப்பயனாகலின் 'அந்தப் பொருளினை யாஞ்சிந்தை செய்வாம்' எனவுங் கூறினார். இதனை,

> **" உடம்பினா லாய பயனாவ தெல்லாந்**
> **திடம்பட வீசனைத் தேடு"**

என்பதனானறிக. (3)

17. இகபரமும் உயிர்க்குயிரை யானெனதற் றவர்உறவை
எந்த நாளுஞ்
சுகபரிபூ ரணமான நிராலம்ப கோசரத்தைத்
துரிய வாழ்வை
அகமகிழ வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை
அமிர்தை நாடி
மொகுமொகென இருவிழிநீர் முத்திறைப்பக் கரமலர்கள்
முகிழ்த்து நிற்பாம்.

(பொ-ரை) இப்பிறப்பிலும், மறுபிறப்பிலும் உயிர்க்கு யிராயிருப்பதும், யான்,எனது, என்னும் அகங்கார மமகாரங்களை விட்டவர்க்கு உறவாயிருப்பதும், எக்காலமும் ஆனந்தபூர்த்தி யானதாய்ப், பற்றுக்கோடில்லாததும், மனவாக்குக் காயங்களினறியப் படாததும், துரியபதத்தில் வசிப்பதும், (அநுபவிப்போர்க்கு) மனமானது சந்தோஷிக்கும்படி வருகின்றதேன் போன்றதும், மூன்று

கனிகள் போல ருசிப்பதும், கற்கண்டு போல இனிப்பு டையதும், அமிர்தம் போன்றதும், ஆகிய பொருளைச் சிந்தித்து, மொகுமொகென்று, இரண்டுகண்களும், முத்துகள் போல நீர்த்துளிகளைச் சிந்த, யாம் கைம்மலர்களைக் குவித்து நிற்போம்.(எ-று)

இம்மையாலன்றி, மறுமையினும் உயிர்க்குயிராய் நிற்பானென்பார், 'இகபரமுமுயிர்க்குயிரை' எனவும், தற்போத நீங்கினவர்க்கே நெருங் கினவனென்பார் 'யானெனதற்ற வருறவை' எனவும், இதுவே, துரியப் பொருளென்பார் 'துரிய வாழ்வை' எனவும், இதனை யநுபவிக்குங்கால் இனிப்பே மேலிடுவதென்பார், 'அகமகிழ் வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை' எனவும், அவர்கட்கு இறவாமையையளிப்ப தென்பார், 'அமிர்தை' எனவும் இதனை ஆநந்த பாஷ்பம் பொழியச் சிந்திக்க வேண்டு மென்பார், 'மொகுமொகென விருவிழிநீர் முத்திறைப்பக் மலர்கண் முகிழ்ந்து நிற்பாம்' எனவுங் கூறினார்.

தேன் முதலியவை போல் இனிக்குமென்பதை:-

"அண்ணிக் குங்கரும் பாகிய முதமாய்க்
கண்ணுக் குண்மணி யாய்க்கனித் தேறலாய்
வண்ணச் சீரிளங் காட்டுறை வான்பொருள்
உண்ணப் புக்கவென் னெஞ்சை யுருங்குமே"

என்னுந் திராவிட மகாபாஷியகாரரது திருவாக்கானு முணர்க. மொகு மொகு இரட்டைக்கிளவி, மொகுமொகென என்பது உடம்படுமெய் பெறாமல் "முற்றுமற்றொரோவழி" என்னும் விதியைப் பெற்றது. (4)

18. **சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுந்தி அருவுருவத்**
தன்மை நாமம்
ஏதுமின்றி எப்பொருட்கும் எவ்விடத்தும் பிரிவறநின்
றியக்கஞ் செய்யும்
சோதியைமாத் தூவெளியை மன தவிழ நிறைவான
துரிய வாழ்வைத்
தீதில்பரமாம்பொருளைத் திருவருளே நினைவாகச்
சிந்தை செய்வாம்.

(பொ-ரை) சாதியும், குலமும், பிறப்பும், சாவும், பந்தமும், மோட்சமும், அருவமும், உருவமுமாகிய தன்மைகளும்,

பேரும், (ஆகி) எதுவுமில்லாமல், எந்தப்பொருளிலும், எந்தவிடத்திலும், பிரிதலில்லாமல் நின்று (அவற்றை) இயங்கச் செய்கின்ற தேஜோமயத்தை, பரிசுத்தமான பெரிய ஆகாயத்தை, அடியார்களுடைய மனமாகிய தாமரை மலரும்படி (அம்மனத்தில்) நிறைந்திருக்கின்ற துரியபதத்திருப்பதை, குற்றமில்லாத மேலான பொருளை, (அப்பொருளின்) திருவருளையே (துணைக் காரணமாக) எண்ணிக் கொண்டு யாம் துதி செய்வோம். (எ-று)

சாதி முதலியவற்றை அடையாமல் எவ்விடத்திலும் நீங்காமனின்று, எவற்றையும் தொழிற்படுத்தலான், 'சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தியருவுருவத் தன்மை நாம மேதுமின்றி யெப்பொருட்கு வெவ்விடத்தும் பிரிவறநின் றியக்கஞ் செய்யுஞ் சோதியை, எனவும், அதுவே, ஆகாய சொரூபமாகலான், 'தூவெளியை' எனவும், களங்கரகிதமான தாகலான், 'தீதில் பரமாம் பொருளை' எனவும், "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்றபடியே, திருவருளையே துணையாகக் கொண்டு துதிக்க வேண்டிய தாகலான், 'திருவருளே நினைவாகச் சிந்தை செய்வாய்' எனவுங் கூறினார். (5)

19. இந்திரசா லங்கனவு கானலின்நீ ரெனவுலகம்
எமக்குத் தோன்றச்
சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச்
சார்ந்து வாழ்க
புந்திமகி ழுறநாளுந் தடையறவா னந்தவெள்ளம்
பொலிக என்றே
வந்தருளுங் குருமௌனி மலர்த்தாளை அநுதினமும்
வழுத்தல் செய்வாம்.

(பொ-ரை) இவ்வுலகமானது இந்திரசாலம் போலவும், கனவு போலவும் கானற்சலம் போலவும் எப்பொழுதும் அழியாது தனக்குத்தானே பரமாகிய பொருளை ஞானத்தால் சேர்ந்து வாழக்கடவை! என்றும், மனஞ் சந்தோஷிக்குமாறு தினந் தோறுந் தடையில்லாமல், இன்பவெள்ளமானது பெருகக்கடவது என்றும், எழுந்தருளி வந்து எமக்கு விளங்கும்படி உபதேசஞ் செய்த மௌன குருவின் மலர்போலுந் திருவடிகளை (நாம்) என்றும் வாழ்த்துவோம். (எ-று)

மாயாகாரியமாகிய உலகம், உள்ளதாகக் காணப் படினும், அழிவதைத் துணையாகவே கொண்டிருத்தலின், 'இந்திரசாலங் கனவு கானல் நீரெனவுலக மெமக்குத்தோன்ற' எனவும், இறைவனை அடைய வேண்டியது ஞானமார்க்கத்தாலாகலின் 'சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச் சார்ந்து 'வாழ்க' எனவும், அங்ஙனமடைந்தோர்க்கு ஆனந்தம் பெருகுவதாகலின், 'புந்தி மகிழுற நாளுந் தடையற வாநந்த வெள்ளம் பொலிக வென்றே' எனவும், அவ்விறைவனைக் குருவருளாலடைய வேண்டியதாகலின், 'வந்தருளுங் குருமௌனி மலர்த்தாளை யநுதினமும் வழுத்தல் செய்வாம்' எனவுங் கூறினார். இந்திரசாலம் ஆச்சரியமான வித்தை. (6)

20. பொருளாகக் கண்டபொரு ளெவைக்கும்முதற் பொருளாகிப்
போத மாகித்
தெருளாகிக் கருதும் அன்பர் மிடிதீரப் பருகவந்த
செழுந்தே னாகி
அருளானோர்க் ககம்புறமென் றுன்னாத பூரணஆ
னந்த மாகி
இருள் தீர விளங்குபொரு ளியாதந்தப் பொருளினையாம்
இறைஞ்சி நிற்பாம்.

(பொ-ரை) இதுவே பொருள்! இதுவே பொருள்! (இதற்குமேற் பொருளின்று) என்று அறியப்பட்ட எல்லாப் பொருள்களுக்கும் முதன்மையாகிய பொருளாகியும், (அப்பொருள்களை அறிவிக்கும்) அறிவாகியும், (அவ்வறிவினாலறியப்படுந்) தெளிவாகியும், நினைக்கின்ற அன்பர்களின் தரித்திரம் நீங்க! (அவர்கள்) அநுபவிக்கும் பொருட்டு வந்த நல்ல தேனாகியும், அருளையடைந் தோர்களால் உள்ளென்றும், வெளியென்றும், நினைக்கப் படாத பரிபூரணவின்பமாகியும் அஞ்ஞானவிருள் நீங்க ஞான வொளி வீசும் பொருளாகியுமிருப்பது எந்தப் பொருள்? அந்தப் பொருளை நாம் வணங்கி நிற்போம். (எ-று)

எல்லாப் பொருள்களுக்கும் முதல்வன் சிவனே யென்பார், 'பொருளாகக் கண்ட பொருளெவைக்கு முதற் பொருளாகி' எனவும், இவனே அறிவுக்கறிவாகி நிற்போன்

என்பார், 'போதமாகி' எனவும், அவ்வறிவினால் அறியப் படுவோனு மிவனே என்பார். 'தெருளாகி' எனவும் தன்னை நினைப்போர்க்கு அழியா இன்பங் கொடுப்பவனென்பார், 'கருதுமன்பர் மிடிதீரப் பருகவந்த செழுந்தேனாகி' எனவும், அவனருள் வயப்பட்டோர்க்கு எங்குந் தானாய் விளங்குவானென்பார். 'அருளானோர்க் ககம்புறமென் றுன்னாதபூரண வாநந்தமாகி' எனவும், அஞ்ஞான விருளைப் போக்கும் ஞானசூரியனென்பார், 'இருடீரவிளங்கு பொருளியாது' எனவும், அவனை வணங்குவதே பெரும் பேறென்பார் 'அந்தப் பொருளினையா மிறைஞ்சி நிற்பாம்' எனவுங் கூறினார். (7)

21. அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவர் மாமுனிவர்சித்த
ராதி யானோர்
தெரிவரிய பூரணமாய்க் காரணங்கற் பனைகடந்த
செல்வ மாகிக்
கருதரிய மலரின்மணம் எள்ளிலெண்ணெய் உடலு (யிர் போற்
'கலந்தெந் நாளும்
துரியநடு வூடிருந்த பெரியபொருள் யாததனைத்
தொழுதல் செய்வாம்.

(பொ-ரை) அருமையாகிய வேதத்தின் முடியில் விளங்கும் பொருளாகியும், தேவர்கள், பெருமைபொருந்திய முனிவர்கள், சித்தர்கள் முதலானவர்களாலுந் தெரிந்து கொள்ளுதற்குரிய எங்கும் நிறைந்த பொருளாகியும் தனக்கு முதற் பொருளையுங் கற்பனையையுங் கடந்து நின்ற செல்வமாகியும் நினைத்தற்கரிய பூவின் வாசனை போலவும், எள்ளிலெண்ணெய் போலவும், உடலில் உயிர் போலவும் கலந்து, எக்காலத்திலுந் துரியபதத்தின் மத்தியிலிருந்த பெரிய பொருளாகியுமிருப்பது எந்தப்பொருள்? அந்தப் பொருளை நாம் வணங்குவோம். (எ-று)

வேதத்தின் அந்தத்தில் சித்தாந்தப் படுத்தப் பட்டவனாகலின், 'அருமறையின் சிரப்பொருளாய்' எனவும், 'பத்திவலையிற்படுவோன் காண்க' என்றாராகலின், முறையே தாமுயரவும், மனத்தை யடக்கவும், சித்துகளைச் செய்யவும், விருப்பமுடையவர்களாகிய தேவர்களாலும், முனிவர் களாலும், சித்தர்களாலும், அறியப்படானென்பார்.

'விண்ணவர் மாமுனிவர்சித்த ராதியானோர் தெரிவரிய பூரணமாய்' எனவும், தானுண்டாவதற்கு வேறொரு கர்த்தாவை நாடாமல் அநாதி நித்தியனாகலான் 'காரணங் கற்பனை கடந்த செல்வமாகி' எனவும், சர்வ வியாபகனாகலான், 'கருதரியமலரின் மண மெள்ளி லெண்ணெயுடலுயிர் போறகலந்து' எனவும், அவனை வணங்குவதே மோட்ச சாதனமாகலான், 'அதனைத் தொழுதல் செய்வாம்' எனவுங் கூறினார். கற்பனை: விதிப்பு.
(8)

22. விண்ணாதி பூதமெல்லாந் தன்னகத்தி லடக்கிவெறு
வெளியாய் ஞானக்
கண்ணாரக் கண்ட அன்பர் கண்ணூடே ஆனந்தக்
கடலாய் வேறொன்
றெண்ணாத படிக்கிரங்கித் தானாகச் செய்தருளும்
இறையே உன்றன்
தண்ணாருஞ் சாந்தஅருள் தனைநினைந்து
கரமலர்கள்
தலைமேற் கொளவாம்.

(பொ-ரை) ஆகாய முதலாகிய பூதங்களையெல்லாம் தன்னிடத் திலடங்கச் செய்து, (தான் யாதினும் அடங்காத) வெறும் வெளியாகியும், ஞானக்கண்ணினாற் பொருந்தத் தரிசித்த அன்பர்களுடைய (அந்த) ஞானக் கண்ணினிடத்திலேயே (பெருகும்) இன்பசாகரமாகியும் (அவ்வன்பர்கள்) வேறெதையும் நினையாதபடி (அவர்களுக்கு) மனமிரங்கி, (அவர்களைத்) தன்னுடைய தன்மையை யடையச்செய்து, (பிறகு) கருணை செய்கின்ற வனுமான தலைவனே, (நீ இங்ஙனஞ் செய்கையால்) உன்னுடைய குளிர்ச்சி பொருந்திய பொறுமையைக் கொடுக்குங் கருணையைச் சிந்தித்து, (எமது) கைம்மலர்களைத் தலைமேல் வைத்து நமஸ்காரஞ் செய்வோம்.(எ-று)

இறைவன் பரமாகாயனாகலின், ஆகாய முதலிய பூதங்கள் அவனாணையிலடங்க வேண்டுமென்பார், 'விண்ணாதி பூதமெல்லாந் தன்னகத்திலடக்கிவெறு வெளியாய்' எனவும் 'சிவனை ஞானச்செய்தியாற் சிந்தையுள்ளே மருளெலா நீங்கக்கண்டு வாழலாம்" என்றபடியே ஞானத்தாலறியப் படுவோனாகலானும்,

அங்ஙனமறிந்தோர்க்கு இன்பமே மேலிடுவதாகலானும், ஞானக்கண்ணாரக் கண்டவன்பர் கண்ணூடே யாநந்தக் கடலாய்' எனவும், அவர்களது சகசமலவலி யடக்கித் தன் வயப்படுத்தலின், 'வேறொன்றெண்ணாதபடிச் கிரங்கித் தானாகச் செய் தருளுமிறையே' எனவுங் கூறினார். இறை என்றது - ஈண்டுச் சிவனை. *(9)*

23. விண்ணிறைந்த வெளியாய்என் மனவெளியிற்
வெளியி னூடுங் (கலந்தறிவாம்
தண்ணிறைந்த பேரமுதாய்ச் சதானந்த மானபெருந்
தகையே நின்பால்
உண்ணிறைந்த பேரன்பா லுள்ளுருகி மொழிகுழறி
உவகை யாகிக்
கண்ணிறைந்த புனலுகுப்பக் கரமுகிழ்ப்ப நின்
கருத்தில் வைப்பாம். (னருளைக்

(பொ-ரை) பூதாகாயமானது நிறைந்திருத்தற்குக் காரணமான பரமாகாயமாகி என்னுடைய மனமாகிய ஆகாயத்திலும், ஞானாகாயத்திலுஞ் சேர்ந்து, குளிர்ச்சி மிகுந்த பெரிய அமிர்தம் போல நீங்காத இன்பமயமான பெருந்தன்மையுடையோனே, உன்னிடத்தில் (வைத்த) உள்ளே நிறைந்த பெரிய அன்பினால் மனங்கரைந்து, சொல்தடுமாறிச் சந்தோஷமடைந்து கண்கள் மிகுந்த நீரைச் சிந்தவும், கைகள் குவியவும், உன்னுடைய திருவருளை (யாம்) மனத்தில் வைப்போம். (எ-று)

"பூதங்களல்ல" வென்றபடியே, அவைகட்கதீ தனாகலின், 'விண்ணிறைந்த வெளியாய்' எனவும், மனமுதலிய அந்தக் கரணங்கள் ஆன்மாக்களுக்குக் கருவிகளாயிருப்பினும், அவ்வான்மாக்காளற் றொழிற் படாது இறைவனாலேயே தொழிற்படுவன என்பார். 'மனவெளியிற் கலந்து' எனவும் அவ்விறைவனை மனமினகல் முதலிய தன்மைகளையடைந்து சிந்திக்க வேண்டுமென்பார். 'நின்பால் உண்ணிறைந்தபேரன் பாலுள்ளுருகி மொழிகுளறி யுவகையாகிக் கண்ணிறைந்தபுனலுகுப்பக் கரமுகிழ்ப்ப நின்னருளைக் கருத்தில் வைப்பாம்' எனவுங் கூறினார்.

ஈண்டு, அந்தக்கரணங்கள் நான்கில் மனத்தை மாத்திரஞ் சொன்னாரேனும், "ஒருமொழி யொழிதன்னினங் கொளற்குரித்தே" என்னுஞ் சூத்திரவிதிப்படி மற்றை மூன்றையுங் கொள்ளப்பட்டது. *10)*

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

24. ஆதியந்தங் காட்டாத முதலா யெம்மை
அடிமைக்கா வளர்த்தெடுத்த அன்னை போல
நீதிபெறுங் குருவாகி மனவாக் கெட்டா
நிச்சயமாய்ச் சொச்சமதாய் நிமல மாகி
வாதமிடுஞ் சமயநெறிக் கரிய தாகி
மௌனத்தோர் பால்வெளியாய் வயங்கா நின்ற
சோதியைஎன் னுயிர் த்துணையை நாடிக் கண்ணீர்
சொரிய இரு கரங்குவித்துத் தொழுதல்
செய்வாம்.

(பொ-ரை) பிறப்பிறப்புக்களில்லாத முதற்பொருளாகியும், எம்மைத் தனது திருத்தொண்டுக்காகக் காப்பாற்றியெடுத்த செவிலித்தாய் போல் நீதியையுடைய குருவாகியும் மனத்துக்கும் வாக்குக்கு மெட்டாத உண்மைப் பொருளாகியும், குற்றமற்றதாகியும், மலரகிதமானதாகியும், தர்க்கவாதஞ் செய்கிற சமயமார்க்கங்களால் அறியப்படாததாகியும், மௌன நிலையுடை யோர்க்கு, அறியப்படுவதாகியும் விளங்குகின்ற தேஜோமயமானதும் என்னுயிர்க்குத் துணையாயிருப்பதுமான பொருளைக் குறித்துக் கண்கள் நீரைச் சிந்த இரண்டு கைகளையுங் குவித்து (யாம்) வணங்குவோம். (எ-று)

தோற்ற நாசமில்லாததாகலின், 'ஆதியந்தங்காட்டாத முதலாய்' எனவும், உயிர்களை அடிமை கொள்ளவென்றே செவிலித்தாய் வளர்ப்பது போல்ஞான போனக மூட்டி வளர்க்க ஆசிரியனாய் வருதலின், 'எம்மை யடிமைக்காக வளர்த்தெடுத்தவன்னை போல நீதி பெறுங்குருவாகி' எனவும், மனவாக்குக் களாலறியப்படாத நிர்மலப் பொருளாகலான், 'மனவாக் கெட்டா நிச்சயமாய்ச் சொச்சமதாய் நிமலமாகி' எனவும், மௌனஞானமுடையார்க்கே சோதி சொரூபமாய்த் தோன்றுவதாகலான், 'மௌனத்தோர்பால் வெளியாய் வயங்கா நின்ற சோதியை, எனவும் உயிர்களுக்குத் தோன்றாத் துணையா யிருத்தலின், 'என்னுயிர்த் துணையை' எனவுங் கூறினார்.

பிறப்பிறப்பில்லானென்பதை:-

"எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ்
சொல்லாற் றெளிந்தேநஞ் சோணேச-னில்லிற்

பிறந்தகதை யுங்கேளேம் பேருலகில் வாழ்ந்துண்டு
இறந்தகதை யுங்கேட்டி லேம்"

என ஆன்றோர் திருவாக்கானுணர்க. *(11)*

25. **அகரவுயி ரெழுத்தனைத்த மாகி வேறாய்**
அமர்ந்ததென அகிலாண்டம் அனைத்து மாகிப்
பகர்வனஎல் லாமாகி அல்ல தாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித்
துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாந்
தோயாத அறிவாகிச் சுத்தமாகி
நிகரில்பசு பதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்தப் பேரன்பால் நினைதல்
செய்வாம்.

(பொ-ரை) அகரவுயிரெழுத்தானது எல்லா வெழுத்துக் களிலுஞ் சேர்ந்தும், வேறாகியுமமைந்திருப்பது போல, சர்வ அண்டசராசரங்களிலும் கலந்ததாகியும் சொல்லப் படுவனவாகிய எல்லாப் பொருள்களிலுங் கலந்ததாகியும், (அவைகளிற்) கலவாததாகியும், மேலான பொருளாகியும், சொல்லுதற்கரிய தன்மையதாகியும், குற்றமற்ற சங்கற்பமும், விகற்பமுமாகிய எல்லாவற்றிலும் கலவாத ஞானவடிவாகி யும், பரிசுத்தமுடையதாகியும் (இருக்கின்ற) ஒப்பற்ற (பாச சம்பந்தப்பட்ட) பசுக்களுக்குப் பதியாகிய பொருளை விரும்பிப் பெருமூச்செறிந்து மிகுந்த அன்புடன் (யாம்) தியானஞ் செய்வோம். (எ-று)

ஈண்டுப் பேர் என்றது = மிகுதி என்னும் பொருட்டு.

அகரமானது எழுத்துக்களெல்லாவற்றிலுங் கலந்தும், கலவா மற்றனித்து மிருப்பது போல, இறைவனும் சகல அண்டசராசரங்களிலுங் கலந்தும் வேறாகியும் நிற்பானென்பார். 'அகரவுயிரெழுத்தனைத்துமாகிவேறா யமர்ந்ததெனவகிலாண்டமனைத்துமாகிப் பகர்வனவெல்லா மாகியல்லவாகி' எனவும், அங்ஙனமாகலின் எவற்றிற்கு மேலோனென்பார் 'பரமாகி' எனவும், விருப்புவெறுப்பில்லா தோனென்பார். 'துகளறுசங்கற்ப விகற்பங்களெல்லாம் தோயாதவறிவாகி, எனவும், இவனே பசுக்களை இரட்சிக்குங் கருணையுள்ள வனாகலான் இவனையன்றி வேறெந்தத் தெய்வத்தையுஞ் சித்தியேன் என்பார். நிகரில் பசுபதியான பொருளை நாடி நெட்டுயிர்த்துப் பேரன் பானினைதல்

செய்வாம், எனவுங் கூறினார். அனைத்தும், எல்லாம், இவற்றில் ஏழுனாருபு தொக்கது.

விருப்பு வெறுப்புல்லாதோ னென்பதை:-

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில"

எனத் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாக்கானுணர்க. (12)

சின்மயானந்தகுரு

பன்னிரு சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

26. **அங்கைகொடு மலர்தூவி அங்கமது புளகிப்ப**
அன்பினா லுருகிவிழிநீர்
ஆறாக வாராத முத்தியின தாவேச
ஆசைக் கடற்குள்மூழ்கிச்
சங்கர சுயம்புவே சம்புவே எனவுமொழி
தழுதழுத் திடவணங்குஞ்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையுந்
தண்ணருள் கொடுத்தாள்வையோ
துங்கமிகு பக்குவச் சனகன்முதல் முனிவோர்கள்
தொழுதருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய நெறியைஒரு சொல்ல லுணர்த்தியே
சொரூபாநு பூதிகாட்டிச்
செங்கமல பீடமேற் கல்லா லடிக்குள்வளர்
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

(பொ-ரை) பரிசுத்தமிகுந்த பரிபக்குவத்தையடைந்த சனகன், முதலிய (நான்கு) முனிவர்களும் தொழுது சமீபத்தில் வீற்றிருக்க அவர்களுக்குச் சொல்லுதற் கருமையான மௌன வழியையொரு சொல்லாலறிவித்துச் சொரூபாநுபவத்தைக் காட்டிக் கல்லால மரத்தின் கீழ் நல்ல பத்மாசனத்தில் எழுந்தருளி இருக்கின்ற சித்தாந்தமதத்திற் (சொல்லப்படும்) மோட்சமளிக்குந் தலைவனே! சிராமலையானது விளங்கும் பொருட்டு எழுந்தருளி வந்த தட்சிணாமூர்த்தியே! ஞானமயமான ஆனந்தங்களைக் கொடுக்கின்ற ஆசிரியனே! அழகிய கைகளினால்

புஷ்பங்களைச் சொரிந்தும் அன்பினால் தேகமானது மயிர் சிலிர்க்கும்படி மனங்கரைந்தும் நீரானது கண்களி னின்றும் ஆறு போலப் பெருகத் தெவிட்டாத மோட்சத்தில் மனம் பற்றுதலாகிய ஆசைச்சமுத்திரத்தில் முழுகியும், "சங்கரனே! சுயம்புவா யிருப்பவனே! சம்புவாயிருப்பவனே!" என்று சொல்லானது குழறும்படி துதித்தும், வணங்குகின்ற நன்மார்க்கத்தினொழுக்கமில்லாத துன்மார்க்கனாகிய என்னையுங் குளிர்ச்சியாகிய கிருபைசெய்து அடிமை கொள்ளுவையோ. (எ-று)

மலர்தூவுதல் முதல் மொழி தழுதழுத்திட வணங்குதலீறாகச் சொல்லப்பட்டயாவும் நன்மார்க்கங் களே. ஆயினும் நான் அவைகளை விரும்பாமற் கெட்ட வழியையே யடைந்தேனென்பார். 'அங்கை கொடுமலர் தூவி யங்கமது புளகிப்பவன்பினா லுருகி விழிநீ-ராறாகவாராத முத்தியின தாவேச வாசைக்கடற் குண்மூழ்கிச் சங்கர சுயம்புவே சம்புவேயெனவு மொழி தழுதழுத்திட வணங்குஞ் சன்மார்க்கநெறியிலாத் துன்மார்க்கன், எனவும் என்னைக் கெட்டவனென்று இகழாமல் அடிமைகொள்ள வேண்டியவன் நீயே யென்பார். 'ஏனையுந் தண்ணருள் கொடுத்தாள்வையோ' எனவும், மந்தம், மந்ததரம் தீவிரம், தீவிரதரம் என்னும் சத்திநி பாதங்களில் இந்நால்வருந் தீவிரதரத்தையடைந்தவர்களென்பார். 'துங்கமிகபக்குவச் சனகன் முதன் முனிவோர்கள்' எனவும், அவர்கள் வந்தனை வழிபாடு செய்து அருகில் நிற்கச் சின்முத்திரையைக் கடாட்சித் தவனென்பார். 'தொழுதருகில் வீற்றிருப்பச் சொல்லரிய நெறியையொரு சொல்லாலுணர்த்தியே சொரூ பானுபூதிகாட்டி' எனவும், அதைக் கல்லால மரத்தின்கீழ் பதுமாசனமாயிருந்து கொண்டு அருள்செய்தானென்பார். செங்கமலபீடமேற் கல்லாலடிக்குள்வளர்' எனவும், இவனே சைவசித்தாந்தத்திற் சொல்லப்படும் முதல்வனென்பார், 'சித்தாந்தமுத்தி முதலே' எனவும் கூறினார்.

ஆவேசம்-முத்தியின் மனம்பற்றுதல் சங்கரன்-சுகத்தைக் கொடுப்போன். சுயம்பு-இயல்பாயுள்ளவன். சம்பு-சுகமுண்டாவதற் கிடமாயிருப்பவன். சன்மார்க்கம்-ஞானமார்க்கம். சனகன் முதல் முனிவோர் என்றது-சனகன் சனந்தனன், சனற்குமாரன், சனத்ஸுஜாதன் இவர்களை. ஒருசொல் என்றது-மௌனோபதேசத்தை, கமலாசனம்-

இரண்டு தொடைகளின் மேலும் இரண்டு உள்ளங் கால்களையும் ஏற்றிக் கொள்ளுதல் சிரகிரி-திரிசிராப்பள்ளி (1)

27. **ஆக்கையெனும் இடிகரையை மெய்யென்ற பாவிநான்**
அத்துவித வாஞ்சையாதல்
அரியகொம் பில்தேனை முடவன்இச் சித்தபடி
ஆகும் அறி வவிழஇன்பந்
தாக்கும்வகை யேதிநாட் சரியைகிரி யாயோக
சாதனம் விடுத்ததெல்லாஞ்
சன்மார்க்க மல்லஇவை நிற்கஎன் மார்க்கங்கள்
சாராத பேரறிவதாய்
வாக்குமனம் அணுகாத பூரணப் பொருள்வந்து
வாய்க்கும் படிக்குபாயம்
வருவித் துவட்டாத பேரின்பமானசுக
வாரியினை வாய்மடுத்துத்
தேக்கித் திளைக்கநீ முன்னிற்ப தென்றுகாண்
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

(பொ-ரை) சித்தாந்த மதத்திற் (சொல்லப்படும்) மோட்சமளிக்குந் தலைவனே! சிராமலையானது விளங்கும் பொருட்டு எழுந்தருளி வந்த தட்சிணாமூர்த்தியே! ஞானமயமான ஆனந்தங்களைக் கொடுக்கின்ற ஆசிரியனே! தேகமென்கிற இடிகின்ற கரையை உண்மையென்று நினைத்திருக்கின்ற பாவியாகிய நான், அத்துவிதப் பொருளின்மேல் விருப்பம் வைத்தல் ஒரு முடவன் அருமையாகிய கொம்பிற் கட்டிய தேனை (யண்ண) விரும்பியதுபோலாகும். (ஆகையால்) என்னுடைய அறிவானது மலரும்படி சுகமுண்டாகும் வகையாது. இதுகாறுஞ் (செய்து வந்த) சரியை, கிரியை, யோகம், என்பவற்றின் பழக்கத்தைச் (செய்யாமல்) விட்டுவிட்ட தெல்லாம் நல்லவழிகளல்ல ஆயினும், இவைநிற்க, நான் போகும் வழிகளிற் சேராத பெரிய அறிவுருவாகி, வாக்குக்கும் மனத்துக்கு மெட்டாத எங்கு நிறைந்த வஸ்துவானது வந்து கிடைக்கும் பொருட்டு ஒரு தந்திரத்தை யுண்டாக்கித் தெவிட்டாத பெரிய ஆனந்தமயமான இன்பசமுத்திரத்தை வாயாலுண்டு நிறைய அநுபவிக்க நீ

காரணமாக இருப்பது எந்தக்காலமோ (எ-று) அதை நான் அறியேன் என்பது குறிப்பு.

தேகம் உள்ளது போலவே காணப்பட்டு மறையுமென்பார், 'ஆக்கையெனுமிடிகரை' எனவும், அதனை அழியாததென்றே நம்பியிருந்தேனென்பார். 'மெய்யென்ற பாவிநான்' எனவும், இங்ஙனந்' தேகத்தில் பற்றுடைய எனக்கு அத்துவிதப்பொருள் சித்தியாகா தென்பார், 'அத்துவித வாஞ்சையாதலரிய கொம்பிற்றேனை முடவனிச்சத்தபடியாகும், எனவும், அங்ஙனஞ் சித்தியாகாத போழ்து இன்பம் வருவதின்றென்பார். 'அறிவுவிழ வின்பந்தாக்கும் வகையேது' எனவும், இதற்குக் காரணமாயுள்ள சரியை, கிரியை, யோகங்களை விட்டு விட்டேனென்பார், 'இநாட்சரியை கிரியாயோகசாதனம் விடுத்ததெல்லாஞ் சன்மார்க்கமல்ல' எனவும் இவற்றை யெல்லாம் விரித்துப் பேசுவதிற் பயனின் றென்பார். 'இவைநிற்க,' எனவும் இறைவன், நான் போகும் வழியில் வராதவனென்பார். 'என்மார்க்கங்கள் சாராத பேரறிவதாய்' எனவும் அவனை எனக்குக் கொடுத்து அதனால் நான் இன்பமடையும் வண்ணஞ் செய்ய வேண்டிய கர்த்தா நீயே என்பார். 'வாக்குமனமணுகாத பூரணப் பொருள் வந்து வாய்க்கும்படிக்குபாயம் வருவித்து வட்டாத பேரின்ப மானசுக வாரியினை வாய் மடுத்துத் தேக்கித் திளைக்க நீ முன்னிற்பதென்று காண்' எனவுங் கூறினார். (2)

28 ஔவிய மிருக்கநா னென்கின்ற ஆணவம்
அடைந்திட் டிருக்கலோபம்
அருளின்மை கூடக் கலத்துள் ளிருக்கமேல்
ஆசா பிசாசமுதலாம்
வெவ்விய குணம்பல இருக்கஎன் னறிவூடு
மெய்யன் நீ வீற்றிருக்க
விதியில்லை என்னிலோ பூரண னெனும்பெயர்
விரிக்கிலுரை வேறுமுளதோ
கவ்வுமல மாகின்ற நாகபா சத்தினால்
கட்டுண்ட வுயிர்கள் மூர்ச்சை
கடிதகல வலியவரு ஞானசஞ்சீவியே
கதியான பூமிநடுவுட்
செவ்விதின் வளர்ந்தோங்கு திவ்யகுண மேருவே
சித்தாந்த முத்திமுதலே

சிரிகிரி விளங்கவரு தட்சிணாமூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

(பொ-ரை) கௌவிப் பிடிக்கின்ற மலமாகிய நாகபாச மென்னும் (ஆயுதத்தால்) கட்டுப்பட்ட உயிர்களுடைய மயக்கமானது சீக்கிரத்தில் நீங்கும் பொருட்டு, (உயிர்களின் வேண்டுகோளாலன்றித்) தானே (குருமூர்த்தமாய்) எழுந்தருளி வந்த ஞான சஞ்சீவியே! மோட்சமென்கிற பூமியில் நன்றாக வளர்ந்துயர்ந்த இனிமையாகிய குணமலையே! சித்தாந்த மதத்திற் (சொல்லப்படும்) மோட்சமளிக்குந் தலைவனே! சிராமலையானது விளங்கும் பொருட்டு எழுந்தருளி வந்த தட்சிணாமூர்த்தியே! ஞானமயமான ஆனந்தங்களைக் கொடுக்கின்ற ஆசிரியனே! பொறாமையான திருக்கவும், நானென்று சொல்லுகின்ற ஆணவமானது சேர்ந்திருக்கவும் ஈயாமைக் குணமும், கிருபையில்லாமையுஞ் சேர்ந்து, உள்ளே குடி கொண்டிருக்கவும், மேலும், ஆசையென்கிற பிசாசு முதலாகிய அநேக தீய குணங்களுஞ் சேர்ந்திருக்கும் என்னறி வின்கண், கடவுளாகிய நீ எழுந்தருளியிருக்க முறையில்லை யென்று சொல்லுவாயானால் (உனக்கிருக்கும்) பூரணன் என்னுந் திருப்பெயரை விரித்துப் பார்த்தால் அதற்கு, (எங்கு நிறைந் தவனென்பதன்றி) வேறு பொருளும் உண்டோ? இல்லை. (எ-று) ஆகையால், நீ யென்னறிவிலும் வீற்றிருக்கிறாய், என்பது குறிப்பு.

பொறாமை முதலாகிய கொடிய குணங்கள் குடி கொண்டிருக்கும் என்னறிவில், அவைகளிற் சேராத மெய்யனாகிய நீ வீற்றிருக்க வேண்டியது பூரண னென்னும் பெயராலன்றி வேறில்லையென்பார், 'ஔவியமிருக்கானென்கின்ற வாணவ மடைந்திட்டிருக்க லோப-மருளின்மை கூடக் கலந்துள்ளிருக்க மேலாசாபிசாச முதலாம்-வெவ்விய குணம் பல விருக்கு மென்னறிவூடு மெய்யனீவீற்றிருக்க-விதியில்லை யென்னிலோ பூரணனெனும்பெயர் விரிக்கினுரை வேறு முளதோ' எனவும், ஆன்மாக்களின் மூலமலத்தை நீக்க வேண்டியது குரு வருளாலாகலின், 'கவ்வுமலமாகின்ற நாகபாசத்தினாற் கட்டுண்ட வுயிர்கண் மூர்ச்சை தகலவலிய வருஞான சஞ்சீவியே, எனவும் மோட்சமடைந்தோரால் அநுபவிக்கப்

படுவோனாயிருத்தலின், 'கதியான பூமி நடுவுட் செவ்விதின் வளர்ந்தோங்கு திவ்வியகுண மேருவே' எனவுங் கூறினார்.(3)

29. ஐவகை எனும்பூத மாதியை வகுத்ததனுள்
அசரசர பேதமான
யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்துமறை
யாதி நூ லையும்வகுத்துச்
சைவமுத லாம் அளவில் சமயமும் வகுத்துமேற்
சமயங் கடந்த மோன
சமரசம் வகுத்த நீ யுன்னையான் அணுகவுந்
தண்ணருள் வகுக்க இலையோ
பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே
பொய்யிலா மெய்யரறிவில்
போதபரி பூரண அகண்டிதா காரமாய்ப்
போக்குவர வற்றபொருளே
தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

(பொ-ரை) பொய்யானது வளர்கின்ற மனத்தையுடைய அஞ்ஞானிகளால் காணப்படாத காட்சியே! பொய்யில்லாத மெய்யையுடையோரது அறிவில் ஞானபரிபூரண அகண்டித ரூபமாகி, இறத்தல் பிறத்தலில்லாத வஸ்துவே! தெய்வத் தன்மையுடைய வேதத்தின் முடிவாகிய ஓங்கார வடிவ மானவனே! சித்தாந்த மதத்திற் (சொல்லப்படும்) மோட்ச மளிக்குந் தலைவனே! சிராமலையானது விளங்கும் பொருட்டு எழுந்தருளி வந்த தட்சிணாமூர்த்தியே! ஞான மயமான ஆனந்தங்களைக் கொடுக்கின்ற ஆசிரியனே! ஐந்து வகையாகிய பூதங்களைக் காரணமாகவுடைய பிரபஞ்சத்தைப் படைத்து, அப்பிரபஞ்சத்தில் அசரம், சரம் என்னும் இரண்டு பிரிவினையுடைய உயிர்களெல்லா வற்றையும் படைத்து, (அவ்வுயிர்களுக்கு) நல்ல உணர்ச்சி யையுங் கொடுத்து, வேத முதலாகச் சொல்லப்பட்ட நூல்களையும் படைத்து, சைவ சமய முதலாகிய அளவில்லாத சமயங்களையும் படைத்து (இவைகளன்றிச்) சமயங்கட் கதீதமான பேசாமையாகிய சமரச நிலையையும், படைத்த நீ, உன்னை நான் சேரும்படியாகவுங் குளிர்ந்த கருணை (ஒன்றையும்) படைக்கவில்லையோ.(எ-று)

உலகம் பஞ்சபூத காரியமாகலின், 'ஐவகையெனும்பூத மாதியை வகுத்து' எனவும், அவ்வுலகத்தில் தோன்றுவன நிலையியற் பொருள், இயங்கியற் பொருள் இரண்டுமே யாகலானும், அவையும், பூதகாரியமே யாகலானும், 'அதனுள சரசர பேதமான' யாவையும் வகுத்து, எனவும் அவ்வவற்றின் பிறவிக்குத்தக்க உணர்ச்சியை கொடுத்தலின் 'நல்லறிவையும் வகுத்து, எனவும் அவ்வறிவாற் பழக வேண்டியது வேத முதலியவாகலின், 'மறையாதி நூலையும் வகுத்து' எனவும், அவ்வேத முதலியவை களாற் சொல்லப்படுவன சைவமுதலிய சமயபேதங்களாகலின், 'சைவமுதலாமளவில் சமயமும் வகுத்து' எனவும், அச்சமயங் கட்டு மதீதமானது மௌனநிலை யென்பது தோன்றவும், அவற்றையெல்லாம் வகுத்தவன் இறைவனே என்பது தோன்றவும், அவ்விறைவனைச் சுட்டி, 'மேற்சயங்கடந்த மோனசமரசம் வகுத்த நீ, எனவும், அவனையடைய வேண்டியது திருவருளா லாகலானும்', அவ்வருளைத் தான் இரக்க வேண்டியிருத்த லினாலும், 'உன்னை நானணுகவுந் தண்ணருள் வகுக்க விலையோ, எனவும், அன்பில்லார்க்குத் தோன்றாத வனாகலான், பொய்வளரு நெஞ்சினர்கள் காணாத காட்சியே,' எனவும், அன்புடையார்க்குத் தோன்றுகின்ற வனாகலான், பொய்யிலா மெய்யறிவிற் போதபரிபூரணவ கண்டிதாகாரமாய்ப் போக்குவரவற்ற பொருளே' யெனவும், இதுவே வேதாந்தத்திற் சொல்லப்பட்ட சித்தாந்தப் பொரு ளென்பார். 'தெய்வமறை முடிவான பிரணவசொரூபியே' எனவுங் கூறினார்.

ஐவகையெனும் பூதமாதி என்றது-உலகத்தை.

இனி, இந்நூலாசிரியர், "அசரசரபேதம்' எனப் பொதுப்படக் கூறினா ரேனும் "நல்லறிவையும்" என்பது முதல் தண்ணருள் வகுக்கவிலையோ" என்ப தீறாக வுள்ளவைகளைச் சரத்திற் கென்றே கொள்க. வேதங்கள் ஆன்மாக்களின் பக்குவத்திற் கேற்க முறையிடுதலின், அவற்றினுண்மை தெளியவேண்டியது நல்லறிவாலென்பது தோன்ற, அறிவு "என்னுஞ் சொல்லுக்கு முன் "நல்" என்னும் அடைமொழி கொடுத்து "நல்லறிவு" எனப் புகன்றனர்.

சமரசம்-வித்தியாசமின்மை. அகண்டிதம்-கண்டிக்கப் படாதது. (4)

30. ஐந்துவகை யாகின்ற பூதபே தத்தினால்
ஆகின்ற ஆக்கைநீர் மேல்
அமர்கின்ற குமிழியென நிற்கின்ற தென்ன நான்
அறியாத காலமெல்லாம்
புந்திமகி ழுறவுண் டுடுத்தின்ப மாவதே
போந்தநெறி என்றிருந்தேன்
பூராய மாகநின தருள்வந் துணர்த்த இவை
போனவழி தெரியவில்லை
எந்தநிலை பேசினும் இணங்கவிலை யல்லால்
இறப்பொடு பிறப்பையுள்ளே
எண்ணினால் நெஞ்சது பகீரெனுந் துயிலுறா
திருவிழியும் இரவுபகலாய்ச்
செந்தழலின் மெழுகாண தங்கம் இவை என்கொலோ
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

(பொ-ரை) சித்தாந்த மதத்திற் (சொல்லப்படும்) மோட்ச மளிக்குந் தலைவனே! சிராமலையானது விளங்கும் பொருட்டு எழுந்தருளி வந்த தட்சிணாமூர்த்தியே! ஞான மயமான ஆனந்தங்களைக் கொடுக்கின்ற ஆசிரியனே! பஞ்சபூத பரிணா மத்தினால் உண்டாகின்ற தேகமானது நீரிற் பொருந்துகின்ற குமிழி போலிருக்கின்றதென்று நானறிந்து கொள்ளாத காலங்களெல்லாம், மனமகிழும்படி உண்டும், உடுத்தும் (இவைகளில்) இன்பமடைந்திருப்பதே வந்த நல்லவழியென்று நினைத்திருந்தேன். உன்னுடைய அருளானது வந்து பூர்வமாகத் தெரிவிக்க, இவைகள் போனவழி காணப்படவில்லை. (மனமானது) எவ்வகைப் பட்ட நிலைகளை எடுத்துச் சொன்னாலும், அவைகட்குச் சம்மதிக்கவில்லை. இவை யன்றியும், சாதலையும், பிறத்தலையும், உள்ளே நினைத்தால் மனமானது திடுக்கிடுகின்றது,இரண்டு கண்களும் நித்திரை செய்யா, தேகமானது, இரவும் பகலுமாய்ச் செவந்த நெருப்பிலிட்ட மெழுகைப்போலுருகா நின்றது, இவைகள் உண்டாவதற்குக் காரணம் யாதோ? அறியேன். (எ-று)

பஞ்சபூத பரிணாமமே தேகமாகலான், 'ஐந்து வகையாகின்ற பூதபேதத்தினாலாகின்றவாக்கை' எனவும், அது நிலையில்லாத தென்பதைப் பல நூல் வழியாலும் பல

பெரியோர்களாலும் அறிந்தும் அதை உண்மையாக நினையாமல் உண்டுடுத்திருப்பதையே உண்மையாக நினைத்திருந்தே னென்பார், 'நீர் மேலமர்கின்ற குமிழியென நிற்கின்றதென்ன நானறியாத காலமெல்லாம் புந்தி மகிழுறவுண்டுடுத்தின்பமாவதே போந்த நெறி யென்றிருந்தேன்' எனவும், இங்ஙனமிருக்கு மெனக்கு உன் திருவருட்சத்தி பதிதரலும் அவையாவும் சென்றன என்பார். 'பூராயமாக நினதருள் வந்துணர்த்தவிவை போன வழி தெரியவில்லை' எனவும், அதனால் பிறப்பிறப்புக்களால் வருந்துன்பம் வெளிப்படுதலின், 'இறப்பொடு பிறப்பை யுள்ளே யெண்ணினானெஞ்சது பகீரெனுந் துயிலுறா திருவிழியுமிரவு பகலாய்ச் செந்தழலின் மெழுகானதங்கம்' எனவும், இங்ஙனம் விளைந்தது எற்றுக்கோ அறியேன் என்பார், 'இவையென்கொலோ' எனவுங் கூறினார். (5)

31. காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற
கண்ணிலாக் குழவியைப்போற்
கட்டுண் டிருந்த எமை வெளியில்விட் டல்லலாங்
காப்பிட் டதற்கிசைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழும் பொய்யுடல்
பெலக்கவிளை யமுதமூட்டிப்
பெரியபுவ னத் தினிடை போக்குவர வுறுகின்ற
பெரியவிளை யாட்டமைத் திட்
டேரிட்ட தன்சுருதி மொழி தப்பில் நமனைவிட்
டிடருற உறுக்கி இடர்தீர்த்
திரவுபக லில்லாத பேரின்ப வீட்டினில்
இசைந் துதுயில் கொண் மின்என்று
சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

(பொ-ரை) சித்தாந்தமதத்திற் (சொல்லப்படும்) மோட்ச மளிக்குந் தலைவனே! சிராமலையானது விளங்கும் பொருட்டு எழுந்தருளிவந்த தட்சிணாமூர்த்தியே! ஞானமயமான ஆனந்தங்களைக் கொடுக்கின்ற ஆசிரியனே! கருமையாகிய ஆணவத்தால் உண்டாகின்ற கருப்பையாகிய சிறிய வீட்டில், உணர்வற்ற கண்களில்லாத குழந்தையைப்போல் கட்டுப்பட்டிருந்த எங்களைப்

பிரபஞ்சத்தில் விட்டுத் துன்பமாகிய காவலை வைத்து அதற்குப் பொருந்தின பெயர் வைத்து, உண்மையென்று சொல்லப்படுகின்ற பாழாகிய நிலையில்லாத தேகமானது பலமடையும் பொருட்டு உண்டாகின்ற உணவுகளை யுண்பித்துப் பெரிய உலகத்தில் இறத்தல் பிறத்தல்களாக வருகின்ற பெரிய விளையாட்டைப் பொருத்தி வைத்து, தன்னாற் சொல்லப்பட்ட அழகு பொருந்திய வேதவாக்கியங் களுக்குத் தவறி நடந்தால், யமனை அனுப்பித் துன்ப மடையும்படி தண்டனை செய்து (பின்பு) அத்துன்பத்தையும் நீக்கி, இராப்பகல்களற்ற பெரிய ஆனந்த மநு பவிப்பதற்கேதுவாகிய வீட்டிலிருந்து நித்திரை செய்யுங்களென்று சிறப்புச் செய்த உலகமாதாவின் ரூபமான எம்முடைய தந்தையே (எ-று) அங்ஙனம் நித்திரை செய்யுமளவும் காக்க வேண்டியவன் நீயே என்பது குறிப்பு.

அநாதியிலேயே சகசமலத்தாற் கட்டுப்பட்டிருந்த உயிர்கள் அம்மலத்தை நீக்கிக் கொள்ளுதற் பொருட்டு தநு, கரண, புவன, போகங்களைத் தந்தானென்பார், 'காரிட்ட வாணவக் கருவறையிலறிவற்ற கண்ணிலாக் குழவியைப் போற் கட்டுண்டிருந்த வெமை வெளியில் விட்டு,' எனவும், அத்துநுவைப் பெற்றிருக்குங்கால் வந்தணைவன வெல்லாந் துன்பங் களாகலான், 'அல்லலாங்காப்பிட்டு' எனவும், அத்தநுவிற்குத் தகுந்த பெயர் உண்டாதலின், 'அதற்கிசைந்த பேரிட்டு, எனவும், அது பலமடையும்படி பல உணவுகளை யதற்குக் கொடுத்தலின் 'மெய்யென்று பேசுபாழ்ம் பொய்யுடல் பெலக்கவிளைய முதமூட்டி' எனவும் உயிர்கள் தமது மலத்தீர்வின்மையால் பிறப்பிறப்புக்களை அடைதலின் 'பெரிய புவனத்தினிடை போக்குவரவுறுகின்ற பெரிய விளையாட்டமைத்திட்டு' எனவும், அங்ஙன மலத் தீர்வுக்குக் கருவியாயுள்ள வேத மார்க்கத்திற் சொல்லாத வர்களைப் பிறவியிற் புகுத்துவானென்பது தோன்ற, 'ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பின மனைவிட்டிடருற வுறுக்கி' எனவும், அவ்வுயிர் கட்குப்பரிபாகம் வந்த காலத்தில் பேரின்பவீட்டை யளிப்பவனாகலின்' 'இடர் தீர்த்திரவு பகலில்லாத பேரின்ப வீட்டினி லிசைந்து துயில் கொண்மினென்று சீரிட்ட' எனவும் இங்ஙனந் தாயினுங் கருணை கூர்ந்து அருள் செய்தானென்பார், 'உலகன்னை வடிவானவெந்தையே' எனவுங் கூறினார்.

உலகன்னை வடிவான வெந்தையே என்றதற்கு உலகத்தின் கண் தாயைப் போல ரூபங்கொண்ட எம்முடைய தந்தையே எனலுமாம். ஆயின், இது அத்தலத்தின் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிராநின்ற தாயுமானேச்சுரரைக் குறிக்கின்றது. *(6)*

32. கருமருவு குகையனைய காயத்தின் நடுவுள்
களிம்புதோய் செம்பனையயான்
காண்டக இருக்கநீ ஞான அனல்மூட்டியே
கனிவுபெற உள்ளுருக்கிப்
பருவம தறிந்துநின் னருளான குளிகைகொடு
பரிசித்து வேதிசெய்து
பத்துமாற் றுத்தங்க மாக்கியே பணிகொண்ட
பட்சத்தை என்சொல்லுகேன்
அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்தம்
ஆதியாம் அந்தமீதும்
அத்துவித நிலையராய் என்னையாண் டுன்னடிமை
யானவர்க ளறிவினூடுந்
திருமருவு கல்லா லடிக்கீழும் வளர்கின்ற
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

(பொ-ரை) அருமையைப் பெற்ற கீர்த்தியையடைந்த வேதாந்த சித்தாந்தங்களான ஆதியந்தங்களின் மேலும், அத்துவித நிலையை யுடையவராகி என்னை யடிமையாகக் கொண்டு, உனக்கு அடிமை யானவர்களுடைய அறிவினிடத்தும், அழகு பொருந்திய கல்லால மரத்தினடியிலும் உயர்ந்திருக்கின்ற சித்தாந்த மதத்திற் (சொல்லப்படும்) மோட்சமளிக்குந் தலைவனே! சிராமலையானது விளங்கும் பொருட்டு எழுந்தருளி வந்த தட்சிணாமூர்த்தியே! ஞானமயமான ஆனந்தங்களைக் கொடுக்கின்ற ஆசிரியனே! கருப்பையானது பொருந்திய குகை போன்ற தேகத்தினடுவிலிருக்கின்ற துருப்பிடித்த செம்பினையொத்த நான் காணும் படியிருக்க நீயே ஞான நெருப்பை மூட்டி மனத்தை இளகும்படி உருக்கிப் பரிபக்குவ கால முணர்ந்து உன்னுடைய திருவருளாகிய குளிகையினாற் றீண்டி வேதித்துப் பத்தமாற்றுக்களையுடைய பொன்னாகச் செய்து (என்னை) அடிமை கொண்ட கிருபையை என்ன வென்று சொல்லுவேன். (எ-று)

தான் சகசமலத்தாற் றடையுண்டிருந்தமையால் தன்னைக் களிம்போடு கூடிய செம்பாகவுவமித்துக் 'களிம்பு தோய் செம்பனையயான்' எனவும் அக்களிம்பைப் போக்கச் செம்பை நெருப்பிலிடுவது போலத் தன்னை ஞானநெருப்பி லிட்டானென்பார். 'காண்டகவிருக்க நீ ஞானவனன் மூட்டியே கனிவுபெற வுள்ளுருக்கி' எனவும் அச்செம்பின் களிம்பற்ற பக்குவமறிந்து அதனைக் குருக்குளிகையால் வேதித்து தங்கமாக்குவது போல், தன்னை அருட்குளிகை கொண்டு வேதித்துச் சுத்தனாக்கினானென்பார். 'பருவ மதறிந்து நின்னருளான குளிகை கொடு பரிசித்து வேதிசெய்து பத்துமாற்றுத் தங்கமாக்கி' எனவும், இவ்வாறு வலிய வந்து ஆட்கொண்டது எவ்வளவு கருணை யென்பார், 'பணி கொண்டபட்சத்தை யென்சொல்லுகேன்' எனவும், அவ்விறைவனத்திடம் வேதாந்த சித்தாந்தங்களே யாகலான் அருமைபெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்த மாதியாமந்த மீதும்' எனவும், அவன் அத்துவிதத்தி னுண்மையை யறிந்தவர்களறிவிலும், கல்லாலமரத்தி னடியிலு மிருந்தானென்பார், 'அத்துவித நிலையரா யென்னை யாண்டுன் னடிமை யானவர்க ளறிவினூடுந், திருமருவுகல்லா லடிக்கீழும் வளர்கின்ற' எனவுங் கூறினார். (7)

33. **கூடுதலுடன்பிரித லற்றுநிர்த் தொந்தமாய்க்**
குவிதலுடன் விரிதலற்றுக்
குணமற்று வரவினொடு போக்கற்று நிலையான
குறியற்று மலமுமற்று
நாடுதலு மற்றுமேல் கீழ்நடுப் பக்கமென
நண்ணுதலு மற்றுவிந்து
நாதமற றைவகைப் பூதபே தமுமற்று
ஞாதுருவின் ஞானமற்று
வாடுதலு மற்றுமேல் ஒன்றற் றிரண்டற்று
வாககற்று மனமுமற்று
மன்னுபரி பூரணச் சுகவாரி தன்னிலே
வாய்மடுத் துண்டவசமாய்த்
தேடுதலு மற்றவிட நிலையென்ற மௌனியே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

(பொ-ரை) சித்தாந்த மதத்திற் (சொல்லப்படும்) மோட்ச மளிக்குந் தலைவனே! சிராமலையானது விளங்கும்

பொருட்டு எழுந்தருளி வந்த தட்சிணாமூர்த்தியே! ஞான மயமான ஆனந்தங்களைக் கொடுக்கின்ற ஆசிரியனே! கூடுதலும், பிரிதலுமில்லாமல், தொந்தமில்லாமல், சுருங்கு தலும் விரிதலுமில்லாமல் குணமில்லாமல், பிறப் பிறப்பில்லாமல் நிலையான அடையாளமில்லாமல், மலமுமில்லாமல், நினைத்தலுமில்லாமல், மேலெனவும், கீழெனவும், நடுவெனவும், பக்கமெனவும், (நிச்சயித்துச் சொல்லப்) பொருந்துதலு மில்லாமல், விந்துவும், நாதமு மில்லாமல், ஐந்து பூதங்களின் வேறுபாடுகளு மில்லாமல், ஞாதுருவும், ஞானமுமில்லாமல், வாட்டமுறுதலு மில்லாமல், பின் ஒன்றென்ப தில்லாமல், இரண்டென்ப தில்லாமல், வசனமில்லாமல், மனனமில்லாமல் நிலைபெற்ற பரிபூரணமாகிய இன்பக்கடலில் வாய்வைத்து நிறைய அருந்திப் பரவசமாகித் தேடுதலுமில்லாத இடமே உண்மை நிலையாகுமென்று உபதேசித்தருளிய மௌனகுருவே இனி எக்காலத்திலும் என்னைக் கைவிடாமல் ஆட்கொள்ள வேண்டும். (எ-று)

இங்ஙனம் பலவாறு விதந்து கூறியவை, இறைவனது சொரூப லட்சணங்களை.

ஞாதுரு-காண்பவன். ஞானம்-காணுங் கருவி. *(8)*

34. **தாராத அருளெலாந் தந்தருள மௌனியாய்த்**
தாயனைய கருணைகாட்டித்
தாளிணையென் முடிசூட்டி அறிவிற் சமாதியே
சாசுவத சம்ப்ர தாயம்
ஓராமல் மந்திரமும் உன்னாமல் முத்திநிலை
ஒன்றோ டிரண்டெனாமல்
ஒளியெனவும் வெளியெனவும் உருவெனவும் நாதமாம்
ஒலியெனவும் உணர்வுறாமல்
பாராது பார்ப்பதே ஏதுசா தனமற்ற
பரமஅநு பூதிவாய்க்கும்
பண்பென் றுணர்த்தியது பாராம லந்நிலை
பதிந்தநின் பழவடியார்தஞ்
சீரா யிருக்கநின தருள்வேண்டும் ஐயனே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

(பொ-ரை) சித்தாந்த மத்திற் (சொல்லப்படும்) மோட்ச மளிக்குந் தலைவனே! சிராமலையானது விளங்கும் பொருட்டு எழுந்தருளி வந்த தட்சிணாமூர்த்தியே! ஞான மயமான ஆனந்தங்களைக் கொடுக்கின்ற ஆசிரியனே! கொடுக்கக்கூடாத திருவருள் முழுதுங் கொடுக்கும்படி மௌன குருவாகி எழுந்தருளி வந்து தாய் (செய்வதை) யொத்த கருணையைக் காட்டித் திருவடி தீட்சை செய்து, அறிவினிடத்திற் கூடும் நிட்டையே அழியாத சம்பிரதாய மென்றும், ஒன்றையும் எண்ணாமலும் மந்திரத்தை நினையா மலும், மோட்ச நிலையானது ஒன்றென்றும் இரண்டென் றும் சொல்லாமலும், ஒளியென்றும், வெளியென்றும், உருவென்றும், நாதமாகிய ஒலியென்றும் அறியாமல் பாராமற் பார்ப்பதே எவ்வகையான சாதனங்களுமற்ற மேலான அநுபூதியுண்டாகும் விதமென்றும் நீ உபதேசித்ததை அறியாமல் அந்த நிலையிலழுந்திய உன்னுடைய பழைய அடியார்களுடைய சிறப்பையடைந் திருக்க, கடவுளே உன்னுடைய திருவருளே வேண்டும் (எ-று) ஆகையால் அதைக் கருணை செய்யவேண்டும் என்பது குறிப்பு.

பாராது பார்ப்பது - அவனருளாற் பார்ப்பது. தூங்கா மற்றூங்கி என்பது போல நாதமாமொலி-இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. (9)

35. போதமாய் ஆதிநடு அந்தமும் இலாததாய்ப்
புனிதமாய் அவிகாரமாய்ப்
போக்குவர வில்லாத இன்பமாய் நின்றநின்
பூரணம் புகலிடமதா
ஆதரவு வையாமல் அறிவினை மறைப்பதுநின்
அருள்பின்னும் அறிவின்மைதீர்த்
தறிவித்து நிற்பதுநின் அருளாகில் எளியனேற்
கறிவாவ தேதறிவிலா
ஏதம்வரு வகையேது வினையேது வினைதனக்
கீடான காயமேதென்
இச்சா சுதந்தரஞ் சிறிதுமிலை இகபரம்
இரண்டினுள் மலைவுதீரத்
தீதிலருள் கொண்டினி யுணர்த்தியெனை யாள்வையே
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

(பொ-ரை) சித்தாந்த மதத்தில் (சொல்லப்படும்) மோட்சமளிக்குந் தலைவனே! சிராமலையானது விளங்கும் பொருட்டு எழுந்தருளி வந்த தட்சிணாமூர்த்தியே! ஞான மயமான ஆனந்தங்களைக் கொடுக்கின்ற ஆசிரியனே! ஞானமாகியும், ஆதிமமத்தியாந்தரகிதமாகியும், சுத்தமாகியும், விகாரமற்றதாகியும், போதல் வருதலற்ற சுகமாகியுமுள்ள உன்னுடைய பூரண நிலையையே அடைக்கல மடைதற்குரிய இடமாக அதன்மேல் இஷ்டம் வைக்காதபடி என்னுடைய அறிவை மறைப்பதும் உன் திருவருளே. பின்னரும் அறியாமையை விலக்கி அறிவித்திருப்பதும் உன் திருவருளே யானால், ஏழையாகிய எனக்கு அறிவாவது ஏது? அறிவில்லாத குற்றம் வரும்விதம் ஏது? இருவினை ஏது? வினைக்கீடான உடல் ஏது? (ஆகையால்) என்னுடைய சுதந்திர விருப்பம் கொஞ்சமுமில்லை. இகம்பரம் என்கிற இரண்டிடத்தும் (உண்டாகும்) எனது மயக்கம் நீங்கும்படி குற்றமில்லாத திருவருளைக் கொண்டுணர்வித்து இனியேனும் ஆட் கொள்வையோ (எ-று) (10)

36. பத்திநெறி நிலைநின்றும் நவகண்ட பூமிப்
பரப்பைவல மாகவந்தும்
பரவையிடை மூழ்கியும் நதிகளிடை மூழ்கியும்
பசிதாக மின்றியெழுநா
மத்தியிடை நின்றும்உதிர் சருகுபுனல் வாயுவினை
வன்பசி தனக்கடைத்து
மௌனத் திருந்தும்உயிர் மலைநுழைவு புக்கியும்
மன்னுதச நாடிமுற்றுஞ்
சுத்திசெய் தும்மூல ப்ராணனோ டங்கியைச்
சோமவட் டத்தடைத்துஞ்
சொல்லரிய அமுண்டும் அற்பவுடல் கற்பங்கள்
தோறும்நிலை நிற்கவீறு
சித்திசெய் துஞ்ஞான மலதுகதி கூடுமோ
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தட்சிணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

(பொ-ரை) சித்தாந்த மதத்திற் (சொல்லப்படும்) மோட்சமளிக்குந் தலைவனே! சிராமலையானது விளங்கும் பொருட்டு எழுந்தருளி வந்த தட்சிணாமூர்த்தியே! ஞான மயமான ஆனந்தங்களைக் கொடுக்கின்ற ஆசிரியனே! பத்தி

மார்க்கத்தி லுறுதியாய் நின்றும், விசாலமாகிய நவகண்ட பூமிகளைப் பிரதட்சணம் வந்தும் சமுத்திரத்தில் ஸ்நானஞ் செய்தும், நதிகளில் ஸ்நானஞ் செய்தும், பசியுந் தாகமு மில்லாமல், அக்கினியின் மத்தியி லிருந்தும், உதிர்கின்ற சருகுகளையும் சலத்தையும், காற்றையுங் (கொண்டு) வலிய பசிக்கடைத்து மௌனநிலையிலிருந்தும், உயர்ந்த மலைக் குகைகளிற் புகுந்தும், பொருந்திய பத்து நாடிகளையும் சுத்தி செய்தும், மூலாதாரத்தை இடமாகவுள்ள பிராண வாயுவுடனே அக்கினியைச் சந்திர மண்டலத்திற் சேர்த்தும், சொல்லுதற்கருமையான அமிர்தத்தை யுண்டும், நிலையில்லாத சரீரமானது ஊழிதோறும் நிலைத்திருக்க உயர்ந்த சித்தியைப் பெற்றும், ஞான முதிர்ந் தாலன்றி மோட்சமுண்டாகுமோ? உண்டாகாது. (எ-று)

மூலப்ராணனோடங்கியைச் சோம வட்டத்தடைத்தல் என்றது யோகமார்க்கத்தை. இதனை "மூலநிலத்தில தோமுகமாய் முகிழ்த்து விழியின் பொடுதுயிலு மூரிப் பாம்பைக்காலனலை மூட்டியெழுப்பி நிலமாறுஞ் - சீலமொடும் போய்த் தரிசித்துச் செழுமாமதியினமுதகட- றேக்கியகத்தங்க சைவருமோர் தெய்வத்தவத்தோருள் விழியிற்-காலுந்தீபமினல் பந்தங் கூடி கூர்விசிசு கதிர்மதிபோற் காட்டுமொளியாயிவையாவுங் கடந்தாங்கழி வில்பேரொளியாய்ச் சால விளங்கும் விந்துவெனுந் தடமா மயிலோய்" எனச் சிதம்பர சுவாமிகள் திருவாக்கானுணர்க.

(11)

மௌனகுரு வணக்கம்

**37. ஆசைநிக ளத்தினை நிர்த்தூளி படவுதறி
ஆங்கார முளையைஎற்றி
அத்துவித மதமாகி மதம் ஆறும் ஆறாக
அங்கையின் விலாழியாக்கிப்
பாசஇருள் தன்னிழ லெனச்சுளித் தார்த்துமேல்
பார்த்துப் பரந்தமனதைப்
பாரித்த கவளமாய்ப் பூரிக்க வுண்டுமுக
படாமன்ன மாயைநூறித்
தேசுபெற நீவைத்த சின்முத்தி ராங்குசச்
செங்கைக் குளேயடக்கிச்
சின்மயா னந்தசுக வெள்ளம் படிந்துநின்
திருவருட் பூர்த்தியான**

வாசமுறு சற்சார மீதென்னை யொருஞான
மத்தகச மெனவளர்த்தாய்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

(பொ-ரை) மந்திரோபதேசஞ் செய்ய வந்த ஆசிரியனே! யோக நூலைத் திருவாய் மலர்ந்தருள வந்த ஆசிரியனே! திருமூலர் மரபில் எழுந்தருளி வந்த மௌனாசிரியனே! ஆசையாகிய விலங்கைப் பொடியாம்படி உதறி, ஆங்காரமாகிய முளையைப் பிடுங்கி யெறிந்து, அத்துவிதம் என்கிற மதத்தை யடைந்து, ஆறு மதங்களையும் நதிகள் போல் துதிக்கையின் வழியா யொழுகும் மதநீராய்ச் செய்து பாசமாகிய இருளைத் தன்னுடைய நிழலென்று கோபித்து, ஆரவாரஞ் செய்து, பின்னும் பார்த்துப், பரந்த மனத்தைப் பெரிய கவளமாகக் கொண்டு நிறைய உண்டு, (முகத்தை மறைத்திருக்கும்) நெற்றிப்பட்டத்தை யொத்தமாயையை அழித்து, விளங்கும்படி நீ அமைத்த சின்முத்திரையாகிய அங்குசத்தையுடைய அழகிய கைக்குள் அடங்கி, ஞானமயமான ஆனந்தப் பிரவாகத்திற் படிந்து, உன்னுடைய நிறைந்த திருவருளாகிய கூடத்தில் என்னை, ஒரு ஞானமதம் பொழியும் யானையைப்போல் வளர்த்தாய் (எ-று) ஈதென்ன கருணையோ அறியேன் என்பது குறிப்பு.

தன்னை யானையாகக் கூறியதற்கேற்ப அதன் குணங்களையுந் தன்மேலேற்றிக் கூறினர். அறுமதம் என்றது- புறச்சமயங்களை. (1)

38. **ஐந்துவகை யாகின்ற பூதமுதல் நாதமும்**
அடங்கவெளி யாகவெளிசெய்
தறியாமை யறிவாதி பிரிவாக அறிவார்கள்
அறிவாக நின்றநிலையில்
சிந்தையற நில்லென்று சும்மா இருத்திமேல்
சின்மயா னந்தவெள்ளம்
தேக்கித் திளைத்துநான் அதுவா யிருக்கநீ
செய்சித்ர மிகநன்றுகாண்
எந்தைவட வாற்பரம் குருவாழ்க வாழ அரு
ளியநந்தி மரபுவாழ்க
என்றடியார் மனமகிழ வேதாக மத்துணி
பிரண்டில்லை யொன்றென்னாவே

வந்தகுரு வேவீறு சிவஞான சித்திநெறி
மௌனோப தேசகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

(பொ-ரை) எமது தந்தையாகிய வடவால விருட்சத்தின் கீழெழுந்தருளி வந்த பரமகுரு வாழ்க, அங்ஙனம் வாழும்படி அருள் செய்த நந்திமரபு வாழ்கவென்று, அடியார்கள் மனமகிழும்படி வேதாகமங்களின் துணிபு இரண்டல்ல, ஒன்றே, என்று உபதேசித்தற்காகவே எழுந்தருளி வந்தகுருவே! உயர்ந்த சிவஞானஞ்சித்தி யாதற்குரிய நெறியையுடைய மௌனோ பதேச குருவே! மந்திரோப தேசஞ் செய்யவந்த ஆசிரியனே யோக நூலைத் திருவாய் மலர்ந்தருள் வந்த ஆசிரியனே! திருமூலம் மரபில் எழுந்தருளி வந்த மௌனாசிரியனே! ஐந்து வகையாகிய பூதங்கள் முதல் நாத தத்துவமுமான வெல்லாவற்றையும் நன்றாய் வெளிப்படுத்தி, அஞ்ஞானம் ஞானம் முதலியவைகளைப் பிரித்தறிவோர்கள், அறிவே உருவாக நின்ற ஞான நிலையில் மனமற்றிருப்பையென்று சும்மா விருக்கப்பண்ணிப் பின்னர், ஞானமயமான இன்ப வெள்ளத்தில் தெவிட்டி அநுபவித்து நான் அந்தப் பொருளா லமர்ந்திருக்க நீ செய்கின்ற விசித்திரம் மிகவும் நன்று. (2)

39. ஆதிக்க நல்கினவ ராரிந்த மாயைக்கென்
அறிவன்றி யிடமில்லையோ
அந்தரப் புட்பமுங் கானலின் நீருமோர்
அவசரத் துபயோகமோ
போதித்த நிலையையும் மயக்குதே அபயம்நான்
புக்கஅருள் தோற்றிடாமல்
பொய்யான வுலகத்தை மெய்யா நிறுத்தியென்
புந்திக்குள் இந்தரசாலஞ்
சாதிக்கு தேயிதனை வெல்லவும் உபாயநீ
தந்தருள்வ தென்றுபுகல்வாய்
சண்மதத் தாபனமும் வேதாந்த சித்தாந்த
சமரசநிர் வாகநிலையும்
மாதிக்கொ டண்டப் பரப்பெலாம் அறியவே
வந்தருளு ஞானகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

(பொ-ரை) அறுமத ஸ்தாபனத்தையும், வேதாந்த சித்தாந்தங்களைச் சமரசமாகக் கொள்ளு நிலையையும், பெரிய திசைகளும் பரந்த உலக மெல்லாமும் அறியும்படி வந்தருள் செய்த ஞானாசிரியனே! மந்திரோபதேசஞ் செய்ய வந்த ஆசிரியனே! யோக நூலைத் திருவாய் மலர்ந்தருள வந்த ஆசிரியனே! திருமூலர் மரபில் எழுந்தருளி வந்த மௌனா சிரியனே! நீ போதித்த நிலையையும் நான் அபயமாக அடைந்த திருவருள் தோற்றாதபடி, மயக்குகின்றதே; ஆகாயத் தாமரையும் கானற்சலமும், ஒரு அவசரத்திற்கு உபயோக மாகுமோ? ஆகா. (அதுபோல) பொய்யாகிய உலகத்தை மெய்யாகத்தாபித்து என்னுடைய அறிவினிடத்தில் இந்திரஜா லத்தைச் சாதிக் கின்றதே, ஆகையால் இந்த மாயைக்கு அதிகாரங் கொடுத்தவர் யார்? (இதற்கு) என்ன றிவன்றி வேறிடமில்லையோ. இதை ஜெயிக்கவும் நீயோரு பாயத் தைக் கடாட்சித் தருள்வது எந்நாளிற் சொல்வாய் (எ-று) (3)

40. **மின்னனைய பொய்யுடலை நிலையென்றும் மையிலகு**
விழிகொண்டு மையல்பூட்டும்
மின்னார்க ளின்பமே மெய்யென்றும் வளர்மாட
மேலவீடு சொர்க்கமென்றும்
பொன்னையழி யாதுவளர் பொருளென்று போற்றி இப்
பொய்வேட மிகுதிகாட்டிப்
பொறையறிவு துறவீதல் ஆதிநற் குணமெலாம்
போக்கிலே போகவிட்டுத்
தன்னிகரி லோபாதி பாழ்ம்பேய் பிடித்திடத்
தரணிமிசை லோகாயதன்
சமயநடை சாராமல் வேதாந்த சித்தாந்த
சமரச சிவானுபூதி
மன்னவொரு சொற்கொண்டெனைத்தடுத்த தாண்டன்பின்
வாழ்வித்த ஞானகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

(பொ-ரை) மந்திரோபதேசஞ் செய்யவந்த ஆசிரியனே! யோக நூலைத் திருவாய் மலர்ந்தருள வந்த ஆசிரியனே! திருமூலர் மரபில் எழுந்தருளி வந்த மௌனாசிரியனே! மின்னலைப்போன்ற பொய்யாகிய உடம்பை நிலையா யுள்ள தென்றும் மை தீட்டுவதனால் விளங்குகின்ற கண்களால் காம மயக்கஞ் செய்கின்ற பெண்கள் சுகமே உண்மையான தென்றும், உயர்ந்த மாளிகைகளின்

மேல்வீடுகளே சொர்க்கலோக மென்றும், பொன்னை அழியாமல் வளர்கின்ற திரவியமென்றும் (அவற்றைப் பாதுகாத்து) இந்தப் பொய் வேஷங்களை மிகுதியும் வெளிப்படுத்தி, பொறுமை, ஞானம், துறவு, கொடை முதலாகிய நல்ல குணங்களை யெல்லாம் விட்டுவிட்டுத் தனக் கொப்பில்லாத உலோபத்துவ முதலாகிய பாழான பேய்கள் பிடித்துக் கொள்ளும் வகை உலகத்தின்கணுள்ள உலோகாயத மதவொழுக்கத்தைச் சேராமல், வேதாந்த சித்தாந்தங்களின் சமரசமான சிவாநுபூதியை யடையும் வண்ணம் ஒரு மொழியினால் அடியேனைத் தடுத்தாட் கொண்டு கிருபையினால் வாழச் செய்த ஞானகுருவே. (எ-று)

இங்ஙனம் பலவகையான துர்க்குணங்களையுடைய உலோகாயத மதத்திற் சேராமல், சிவாநுபூதியை யடையும் வண்ணம் என்னைத் தடுத்தாண்டு உபதேசித்த ஞானகுருவே! இன்னும் இவ்வாறே காத்தல் நினது கடமை என்பது கருத்து.

தேகம் மின்னலைப் போல் காணப்பட்டு அழிதலின், 'மின்னனைய பொய்யுடல்' என்றார். (4)

41. **போனகம் இருக்கின்ற சாலையிடை வேண்டும்**
புசித்தற் கிருக்குமதுபோல்
புருடர்பெறு தர்மாதி வேதமுடன் ஆகமம்
புகலுமதி னாலாம்பயன்
ஞானநெறி முக்யநெறி காட்சியனு மானமுதல்
நானாவி தங்கள் தேர்ந்து
நான்தான் எனக்குழறு படைபுடை பெயர்த்திடவும்
நான்குசா தனமும ஓர்ந்திட்
டானநெறி யாஞ்சரியை யாதிசோ பானமுற்
றணுபட்ச சம்புபட்சம்
ஆமிரு விகற்பமும் மாயாதி சேவையும்
அறிந்திரண் டொன்றென்னுமோர்
மானத விகற்பமற வென்றுநிற்பது நமது
மரபென்ற பரமகுருவே
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

(பொ-ரை) மந்திரோபதேசஞ் செய்ய வந்த ஆசிரியனே! யோகநூலைத் திருவாய் மலர்ந்தருள வந்த ஆசிரியனே! திருமூலர் மரபில் எழுந்தருளி வந்த மௌனாசிரியனே! அன்ன சத்திரத்தின்கண் உண்ணுவதற்கு வேண்டிய பொருள் களெல்லாம் அமைந்திருக்கும். அதுபோல, புருடர்களால்

அடையப்படுகின்ற புருடார்த்தங்களை வேதாகமங்கள் சொல்லா நிற்கும். (அங்ஙனஞ் சொல்லு) மதனாலாகும் பயனும், முக்கிய வழியான ஞானவழியும், காட்சிப் பிரமாணம், அநுமானப் பிரமாணம் முதலாகிய பலவகை களையு மாராய்ந்து, நான் நான் என்று சொல்லுங் குழறு படையை நீக்கவும், நான்கு சாதனங்களையு முணர்ந்து மேலான வழியாகிய சரியை முதலான சௌபானங்களை யடைந்து, அணுபட்சம் சம்புபட்சங்களின் வேறுபாடு களையும், மாயை முதலானவைகளுடைய தரிசனத்தையு முணர்ந்து இரண்டு, மூன்று, என்றெண்ணும் மனோவி கற்பமற்று, எக்காலத்திலும் ஒரே நிலையாய் நிற்பது நமது மரபாகும் என்று உபதேசித்த பரம குருவே (எ-று) என்னையும் அம்மரபில் சேர்த்துக் கொள்ளுவாய் என்பது குறிப்பு. (5)

42. **கல்லாத அறிவுமேற் கேளாத கேள்வியுங்**
கருணைசிறி தேதுமில்லாக்
காட்சியும் கொலைகளவு கட்காமம் மாட்சியாக்
காதலித் திடுநெஞ்சமும்
பொல்லாத பொய்ம்மொழியும் அல்லாது நன்மைகள்
பொருந்துகுணம் ஏதும் அறியேன்
புருடர்வடி வானதே யல்லாது கனவிலும்
புருடார்த்தம் ஏதுமில்லேன்
எல்லா மறிந்தநீ யறியாத தன்றெனக்
கெவ்வண்ணம் உய்வண்ணமோ
இருளையிரு ளென்றவர்க் கொளிதா ரகம்பெறும்
எனக்குநின் னருள் தாரகம்
வல்லா னெனும்பெய ருனக்குள்ள தேயிந்த
வஞ்சகனை யாளநினையாய்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுருவேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

(பொ-ரை) மந்திரோபதேசஞ் செய்ய வந்த ஆசிரியனே! யோக நூலைக் திருவாய் மலர்ந்தருள வந்த ஆசிரியனே! திருமூலர் மரபில் எழுந்தருளி வந்த மௌனாசிரியனே! கல்லாத ஞானமும், கேளாத கேள்வியும், சிறிதுந் தயையில்லாத பார்வையும், கொலை, களவு, கள், காமம், ஆகிய இவற்றை உயர்ந்ததாக விரும்பும் மனமும், கெட்ட பொய்ச் சொல்லுமல்லாமல் நன்மைகள் சேர்ந்த குணஞ் சிறிது மறியேன் புருடரூபம் பெற்றதே யல்லாமல் கனவின்

கண்ணும் புருடார்த்தங் கொஞ்சமும் உடையவனல்லேன். இது எல்லாவற்றையுமறியுஞ் சுபாவமுள்ள நீ அறியாததல்ல. எனக்கு எந்தவிதம் பிழைக்கும் விதமோ தெரியவில்லை. இருளை இது இருளே என்று கொண்டவர்களுக்குப் பிரகாசம் ஆதாரமாகும். உன்னை அடைக்கல மடைந்த எனக்கு உன்னருளே ஆதாரமாகும். சர்வ வல்லமை யுடையவன் என்கிற பெயர் உனக்குள்ளதே. ஆகையால் இந்தக் கபடனை ஆண்டருள் செய்ய நினைவாயாக.

புருடார்த்தம்= அறம், பொருள், இன்பம், வீடு என்பன. புருடனால் வேண்டப்படுவதாகலான் புருடார்த்தம் எனப்பட்டது. *(6)*

43. கானகம் இலங்குபுலி பசுவொடு குலாவும் நின்
கண்காண மதயானைநீ
கைகாட்ட வுங்கையால் நெகிடிக் கெனப்பெரிய
கட்டைமிக ஏந்திவருமே
போனகம் அமைந்ததென அக்காம தேனுநின்
பொன்னடியில் நின்றுசொலு மே
புவிராசர் கவிராசர் தவராச ரென்றுனைப்
போற்றிசய போற்றிஎன்பார்
ஞானகரு ணாகர முகங்கண்ட போதிலே
நவநாத சித்தர்களும் உன்
நட்பினை விரும்புவார் சுகர்வாம தேவர்முதல்
ஞானிகளும் உனைமெச்சுவார்
வானகமும் மண்ணகமும் வந்தெதிர் வணங்கிடும்உன்
மகிமையது சொல்லஎளிதோ
மந்த்ரகு ரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌனகுருவே.

(பொ-ரை) மந்திரோபதேசஞ் செய்ய வந்த ஆசிரியனே! யோக நூலைத் திருவாய் மலர்ந்தருளவந்த ஆசிரியனே! திருமூலர் மரபில் எழுந்தருளி வந்த மௌனாசிரியனே! உன்னுடைய கண்களைக் கண்டவளவில் காட்டில் சஞ்சரிக்கும் புலியும், பசுவுங் கூடி விளையாடும்; நீ கை காட்டவும் மதயானையானது நெகிடிக்காகப் பெரிய கட்டைகளைத் தன்னுடைய துதிக்கையால் மிகவுஞ் சுமந்து கொண்டுவரும்; அந்தக்காம தேனுவானது உன்னுடைய திருவடியினின்று உணவு ஆய்த்தமாயிருக்கிறதென்று சொல்லும்; அரசர்களும், புலவர்களும், உன்னைத்

தவத்தலைவன் என்று நமஸ்காரம் ஜய விஜயீபவ நமஸ்காரம் என்று புகழ்ந்துரைப்பார்; ஒன்பது சித்தர்களும் ஞானத்துக்கும் கருணைக்கு மிடமாகிய திருமுகத்தைக் கண்டவுடனே, உன்னுடைய சிநேகத்தை விரும்புவார்கள் சுகர் வாமதேவர் முதலாகிய ஞானிகளும் உன்னை மெச்சுவார்கள்; தேவலோகமும் பூலோகமும் வந்து எதிரே நின்று தொழா நிற்கும். (ஆகையால்) உன்னுடைய பெருமையானது சொல்ல எளிதாகுமோ? ஆகாது. (எ-று)

காமதேனு தேவலோகத்ததாகலான் அக்காமதேனுவெனச் சேய்மைச் சுட்டாற் கூறினர்.

வானகமும் மண்ணகமும் என்பவற்றிற்கு- தேவலோகத்தவரும், பூலோகத்தவரும், என ஆகு பெயராற் கொள்க. (7)

44. **சருகு சலபட்சணிக ளொருகோடி யல்லால்**
சகோரபட் சிகள்போலவே
தவளநில வொழுகமிர்த தாரையுண் டழியாத
தன்மைய ரனந்தகோடி
இருவினைக ளற்றிரவு பகலென்ப தறியாத
ஏகாந்த மோனஞான
இன்பநிட் டையர்கோடி மணிமந்த்ர சித்திநிலை
எய்தினர்கள் கோடிசூழக்
குருமணி யிழைத்திட்ட சிங்கா தனத்தின்மிசை
கொலுவீற் றிருக்கு நின்னைக்
கும்பிட் டனந்தமுறை தெண்டனிட் டென்மனக்
குறையெலாந் தீரு வண்ணம்
மருமல ரெடுத்துனிரு தாளையர்ச் சிக்கவெனை
வாவென் றழைப்பதெந்நாள்
மந்த்ரகுரு வேயோக தந்தரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

(பொ-ரை) மந்திரோபதேசஞ் செய்ய வந்த ஆசிரியனே! யோக நூலைத் திருவாய் மலர்ந்தருள வந்த ஆசிரியனே! திருமூலர் மரபில் எழுந்தருளி வந்த மௌனாசிரியனே! சருகுகளையுஞ் சலத்தையுமுண்டு உயிர் வாழ்வோர் ஒருகோடி பேர்களும், அல்லாமல் (சந்திரகிரணத்தையுண்டு ஆகாயத்திற் சஞ்சரிக்கும்) சகோதரபட்சிகளைப் போல, வெண்மையாகிய சந்திரகிரணத் தோடு ஒழுகாநின்ற

அமிர்ததாரையைப் புசித்து அழியாத நிலையை யுடையவர்கள் பலகோடிப் பேர்களும், நல்வினை தீவினைகள் நீங்கி, இராப்பகல்க ளென்பவற்றை யுணராத தனிமையான மௌனஞான சுகநிட்டையையுடையவர்கள் கோடிப் பேர்களும், மணிமந்திர வித்தையிற் சித்தி யடைபவர்கள் கோடிப்பேர்களும் சூழும்படி மாணிக்கத் தால் இழைக்கப்பட்ட சிங்காதனத்தின்மேல் திருவோலக்கங் கொண்டெழுந் தருளியிருக்கும் உன்னை அநேகமுறை கும்பிட்டு நமஸ்காரஞ் செய்து, என்னுடைய மனத்திலுள்ள துன்பமெல்லாம் நீங்கிப்போம்படி நல்ல புட்பங்களைக் கொண்டு உன்னுடைய இரண்டு திருவடிகளையும் அருச்சனை செய்ய வா, என்று அடியேனை அழைத்தருள்வது எந்தக்காலம்?.(எ-று)

இங்ஙனம் பல தன்மையுடையோர்களுஞ் சூழ்ந்திருக்கக் கொலு வீற்றிருக்கும் உனது திருவடிகளை அர்ச்சனை செய்யின் திருவருட்பே றெய்தலாமாகலான் அதனை விரும்பிய என்னை எக்காலத்தில் வாவென்ற ழைப்பாய் என்பது கருத்து. *(8)*

45. **ஆங்கார மானகுல வேடவெம் பேய்பாழ்த்த**
ஆணவத் தினும்வலி துகாண்
அறிவினை மயக்கிடும் நடுவறிய வொட்டாது
யாதொன்று தொடினும் அதுவாய்த்
தாங்காது மொழிபேசும் அரிகரப் பிரமாதி
தம்மொடு சமான மென்னுந்
தடையற்ற தேரிலஞ் சுருவாணி போலவே
தன்னிலசை யாது நிற்கும்
ஈங்கா ரெனக்கு நிகர் என்னப்ர தாபித்
திராவணா காரமாகி
இதயவெளி யெங்கணுந் தன்னரசு நாடுசெய்
திருக்கும்இத னொடெந்நேரமும்
வாங்காநி லா அடிமை போராட முடியுமோ
மௌனோப தேசகுருவே
மந்த்ர குரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மௌன குருவே.

(பொ-ரை) மௌனோப தேசகுருவே! மந்திரோ பதேசஞ் செய்யவந்த ஆசிரியனே! யோக நூலைத் திருவாய்

மலர்ந்தருள வந்த ஆசிரியனே! திருமூலர் மரபில் எழுந்தருளி வந்த மௌனாசிரியனே! ஆங்காரமாகிய பழைய வேடரை யொத்த கொடிய பேயானது பாழாகிய ஆணவத்தைப் பார்க்கிலும் வலிமையுடையது. (ஆகலான், அது) அறிவை மயக்கும், நடுவுநிலைமையை உணரவொட்டாது. யாதொரு பொருளைப் பற்றினாலும் அதுவாகவே நின்று வார்த்தை சொல்லும், விஷ்ணு, ருத்திரன், பிரமா முதலியவர்களோடு தான் சமான மென்று சொல்லும், தடையில்லாமற் செல்லு கின்ற தேரினிடத்தமைந்துள்ள அச்சாணியைப் போலத் தன்னிடத்தினின்றும் அசையாமலிருக்கும் இவ் வுலகத்தின்கண் எனக்கு நிகரானவர்கள் யாவரிருக்கின்றனர் என்று பிரஸ்தாபித்து, அந்தகார ரூபங்கொண்டு இதயாகாசமெல்லாந் தன்னுடைய அரசு செலுத்தத்தக்க நாடாகச் செய்திருக்கும். (ஆகையால்) அடிமையாகிய நான் நீங்கி நில்லாமல் இத்துடன் எந்நேரமும் போராட முடியுமோ? முடியாது. (எ-று)

ஆங்காரமானது ஆணவத்தின் காரியமாயினும், அதனினுங் கொடியதென்பார், 'ஆங்காரமான குலவேட வெம்பேய் பாழ்த்த வாணவத் தினும்வலிது' எனவும், அது எழும்புங்கால் உண்மையும் தனக்கு மேற் பொருள் களுண்டென்பனவுந் தோன்றாமையால் 'அறிவினை மயக்கிடு நடுவறிய வொட்டாது எனவும், 'அரிகரப்பிரமாதி தம்மொடு சமான மென்னும்' எனவும், தேரினச்சாணிபோல் இருந்த விடத்திருந்தே இங்ஙனஞ் செய்தலின், 'தடையற்ற தேரிலஞ் சுருவாணிபோலவே தன்னிலசையாது நிற்கும்' எனவும், இது அந்தகார ரூபத்ததாகலான், 'இராவணா காரமாகி' எனவும், உயிர்களின் இருதயத்தையே தனக்கிருப்பிடமாகக் கொண்டிருத்தலின், 'இதயவெளி யெங்கணுந் தன்னரசுநாடு செய்திருக்கும்' எனவும், இதனுடன் போராட என்னால் முடியாதென்பார், 'இதனோடே நேரமும் வாங்காவிலாதடிமை போராட முடியுமோ' எனவுங் கூறினார்.

ஆங்காரமானது உயிர்களுக்குத் தொன்று தொட்டுள்ள ஆணவத்தின் காரியமென்பது தோன்ற, 'ஆங்காரமான குலவேட வெம்பேய்' என உவமித்துக் கூறினார். காண்- அசை. (9)

46. பற்றுவெகு விதமாகி யொன்றைவிட் டொன்றனைப்
பற்றியுழல் கிருமிபோலப்
பாழ்ஞ்சிந்தை பெற்றநான் வெளியாக நின்னருள்
பகர்ந்துமறி யேன்துவிதமோ
சிற்றறிவ தன்றியும் எவரேனும் ஒருமொழி
திடுக்கென் றுரைத்தபோது
சிந்தைசெவி யாகவே பறையறைய வுதரவெந்
தீ நெஞ்சம் அளவளாவ
உற்றுணர உணர்வற்றுன் மத்தவெறி யினர்போல
உளறுவேன் முத்திமார்க்கம்
உணர்வதெப் படியின்ப துன்பஞ் சமானமாய்
உறுவதெப் படியாயினும்
மற்றெனக் கையநீ சொன்னவொரு வார்த்தையினை
மலையிலக் கென நம்பினேன்
மந்த்ரகுரு வேயோக தந்த்ரகுரு வேமூலன்
மரபில்வரு மெளனகுருவே.

(பொ-ரை) மந்திரோபதேசஞ் செய்ய வந்த ஆசிரியனே! யோக நூலைத் திருவாய் மலர்ந்தருள வந்த ஆசிரியனே! திருமூலர் மரபில் எழுந்தருளி வந்த மெளனாசிரியனே! பற்றுமிடம் அனேகவிதங்களாகக் கொண்டு ஒன்றை விட்டொன்றைப் பிடித்துழல்கின்ற புழுவைப் போலப் பாழாகிய மனத்தைப் பெற்ற நான் வெளிப்படையாகச் சொல்லியும் நின்னருளை அறியேன்; துவிதமென்றாலோ சிறிய அறிவினை யுடையதாம். அல்லாமலும் யாராயினும் ஒரு சொல்லைத் திடீரென்று சொன்னபோது காதே மனமாகப் பறையறையவும், உதராக்கினியானது மனத் தளவிற்குப் பொருந்துவதனால், உணர்தற்குரிய உணர்ச்சி யற்றுப் பயித்தியங்கொண்ட வெறியினர் போலக் குழறுவேன். (ஆகையால் நான்) முத்தி மார்க்கத்தை உணர்வது எவ்வாறு, இன்பமும் துன்பமுஞ் சமானமாய்ப் பொருந்துவது எவ்வாறு, ஆனாலும், ஐயனே நீ எனக்குச் சொன்ன ஒருமொழியை மலையைக் குறியாய்க் கொள்வது போல் நம்பியிருக்கிறேன். (எ-று)

ஓரிடத்தில் நில்லாது பலவிடங்களைப் பற்றுங் கிருமியைப் போல் மனமும் நிலையில்லாததலின் மனத்திற்கது உவமையாயிற்று. இன்பதுன்பஞ் சமான மாயுறுவது... இருவினை யொப்பு. அதாவது இன்பம் வந்தாலும், துன்பம் வந்தாலும் ஒன்றாகக் கொள்வது. (10)

கருணாகரக் கடவுள்

**47. நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப
நிர்விடய கைவல்யமா
நிட்கள அசங்கசஞ் சலரகித நிர்வசன
நிர்த்தொந்த நித்தமுக்த
தற்பரவிசு வாதீத வ்யோமபரி பூரண
சதானந்த ஞான பகவ
சம்புசிவ சங்கர சர்வேச என்றுநான்
சர்வகா லமும்நி னைவனோ
அற்புத அகோசர நிவிர்த்திபெறும் அன்பருக்
கானந்த பூர்த்தியான
அத்துவித நிச்சய சொரூபசாட் சாத்கார
அநுபூதி யநுகூதமுங்
கற்பனை யறக்காண முக்கணுடன் வடநிழற்
கண்ணுடிருந் தகுருவே
கரிதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.**

(பொ-ரை) ஆச்சரிய பூதனே! எவராலு மறியப்படாத வனே! எல்லா வற்றையும் நிவர்த்தி செய்த அடியார் களுக்கு நிறைந்த சுகத்தைக் கொடுப்பதான அத்துவித நிலையை யுடையவனே! சொரூபலட்சணத்தையும், அதன் பிரத்தியட்சத்தையும் அதன் அநுபவத்தையும் நிச்சயமாய்க் காணும் பொருட்டு, மூன்று கண்களுடன் வடவால விருட்சத்தின்கீழ் எழுந்தருளி யிருந்த குருவே! நினைத்தற்கரிய சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடுகின்ற கருணைக்குத் தாயகமாகிய கடவுளே! குணரகிதனே! நோயற்றவனே! குற்றமற்றவனே! பற்றுக்கோடில்லாதவனே! விஷயமற்றவனே! கைவல்யமான நிட்களனே! சங்க மற்றவனே! சஞ்சலமில்லாதவனே! வசனமில்லாத வனே! யாதொன்றினும் பற்றில்லாதவனே! என்றும் அழியாதவனே! பாசரசிதனே! தற்பரனே! லோகாதீதனே! ஆகாய சொரூபனே! எங்கும் நிறைந்தவனே! சதாநந்தத்தை யுடையவனே! ஞானசொரூபனே! மங்கள குணங்களை யுடையவனே! சம்புவே! சிவனே! சங்கரனே! சர்வேச்சுரனே! என்று சொல்லி நான் சதாகாலமும் துதி செய்வனோ (எ-று)

48. மண்ணாதி ஐந்தொடு புறத்திலுள கருவியும்
வாக்காதி சுரோத்ராதியும்
வளர்கின்ற சப்தாதி மனமாதி கலையாதி
மன்னுசுத் தாதியுடனே
தொண்ணூற்றொ டாறுமற் றுள்ளனவும் மௌனியாய்ச்
சொன்ன வொரு சொற்கொண்டதே
தூவெளிய தாயகண் டானந்த சுகவாரி
தோற்றுமதை என்சொல்லுவேன்
பண்ணாரும் இசையினொடு பாடிப் படித்தருட்
பான்மைநெறி நின்று தவறாப்
பக்குவ விசேடராய் நெக்கு நெக் குருகிப்
பணிந்தெழுந் திருகை கூப்பிக்
கண்ணாறு கரைபுரள நின்றஅன் பரையெலாங்
கைவிடாக் காட்சியுறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

(பொ-ரை) பண்ணிறைந்த இராகத்துடன் பாடிப் படித்து, திருவருட்டன்மை வழியினின்று தவறாத மிகுந்த பரிபக்குவ முடையவர்களாய் மிகவும் நெகிழ்ந்துருகிப் பணிந்தெழுந்து இரண்டு கைகளையுங் குவித்துக் கண்ணினின்றும் வரும் நீராகிய நதி கரைபுரண்டோட நின்ற அடியார் களையெல்லாம் விட்டு விடாத தரிசனமாத்திரமாய் நிற்கும் உறவினனே! நினைத்தற் கரிய சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடுகின்ற கருணைக்குத் தாயகமாகிய கடவுளே! பிருதிவி முதலிய ஐந்தும், புறக்கருவிகளும் வசனமுதலியவையும், சுரோத்திர முதலியவையும் விருத்தியடைகின்ற சத்த முதலியவையும் மனமுதலியவையும், கலை முதலியவையும், பொருந்திய சுத்தமுதலியவையும்(கூடின) தொண்ணூற்றாறு தத்துவத் தையும், இன்னுமுள்ளவற்றையும், நீ மௌன குருவாய் எழுந்தருளி வந்து உபதேசித்த ஒரு மொழியைக் கொண்டவளவிலே, பரிசுத்தமான வெளியாயும், மிகுந்த இன்பமாகியுமுள்ள சுகவாரி காணப்பட்டது. ஆகையால் அவ்வொரு மொழியை என்னவென்று சொல்லுவேன்? (அன்றி, அக்குருபதேசச் சிறப்பை யென்னவென்று சொல்லுவேன்?) (எ-று)

மண்ணாதியைந்து -ஐம்பூதங்களை பிருதிவி, அப்பு, தேய, வாயு, ஆகாயம், புறத்திலுள கருவி-புறக்கருவிகள்

அறுபதை. பிருதிவியின் கூறு (5) மயிர், எலும்பு, தோல், நரம்பு, தசை, அப்புவின் கூறு (5) நீர் உதிரம், சுக்கிலம், மூளை, மச்சை, தேயுவின்கூறு (5) ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம், சோம்பல், வாயுவின் கூறு (5) ஓடல், நடத்தல், நிற்றல், இருத்தல், கிடத்தல், ஆகாசத்தின்கூறு (5) காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், ஆகப்பூதகாரியம் (25) வாயுக்கள் (10) பிராணன், அபாணன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிசுரன், தேவதத்தன், தனஞ்சயன், நாடிகள் (10) இடை, பிங்கலை, சுழுமுனை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருஷன், குகு, சங்கினி, வசனாதிகள் (5) வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம், வாக்குகள் (4) சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி, குணங்கள் (3) சத்துவம், ரசசு, தமசு, ஈட்சணாத்திரயம் (3) புத்திரோட்சணை, அர்த்தோட்சனை, தாரேட்சணை வாக்காதியைந்து = கனமேந்திரியம் ஐந்தினை, வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம், சுரோத்திராதி= ஞானேந்திரியங்கள் ஐந்தினை. சுரோத்திரம், தொக்கு, சட்சை, சிங்குவை, ஆக்கிரணம் சத்தாதி- தன் மாத்திரைகள் ஐந்தினை. சத்தம், பரிசும், ரூபம், ரசம், கந்தம். மனமாதி=அந்தக்கரணங்கள் நான்கினை மனம், புத்தி, அகங்காரம், சித்தம் கலையாதி=வித்தியாதத்துவங்கள் ஏழினை, காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை, சுத்தாதி= சிவதத்துவங்கள் ஐந்திணை சுத்தவித்தை, ஈஸ்வரம், சாதாக்கியம், சத்தி, சிவம் இவையே தொண்ணூற்றாறு தத்துவங்களின் விரிவாம். இவற்றின் தோற்றங்களை இடம் வந்துழி விரிக்குதும். (2)

49. எல்லாமுன் அடிமையே எல்லாமுன் உடைமையே
எல்லாமுன் னுடையசெயலே
எங்கணும் வியாபிநீ என்றுசொலு மியல்பென்
றிருக்காதி வேதமெல்லாஞ்
சொல்லான் முழக்கியது மிக்கவுப காரமாச்
சொல்லிறந் தவரும் விண்டு
சொன்னவையு மிவைநல்ல குருவான பேருந்
தொகுத்த நெறி தானுமிவையே
அல்லாம லில்லையென நன்றா அறிந்தேன்
அறிந்தபடி நின்றுசுக நான்
ஆகாத வண்ணமே இவ்வண்ண மாயினேன்
அதுவுநின தருளென்னவே

கல்லாத அறிஞனுக் குள்ளே யுணர்த்தினை
கதிக்குவகை யேதுபுகலாய்
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

(பொ-ரை) நினைத்தற்கரிய சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடுகின்ற கருணைக்குத் தாயகமாகிய கடவுளே! யாவரும் உன்னுடைய அடியார்களே யாவர், எல்லாப் பொருள்களும் உன்னுடைய பொருள்களேயாகும். எவ் வகைப்பட்ட செய்கைகளும் உன்னுடைய செய்கைகளே யாகும். எவ்விடத்திலும் வியாபித்திருப்பவன் நீயேயாவை; என்றுகூறும் சுபாவத்தை யுடையதென்று, இருக்கு வேதமுதலாகிய நான்கு வேதங்களும் மிகுந்த உபகாரமாய்ச் சொல்லினாற் கோட்சித்தது, மௌனஞானிகள் வாய்விட்டுச் சொன்னவைகளும் இவையே; உயர்ந்த ஆசிரியர்கள் உபதேசித்தருளிய வழிகளும் இவையே; இவைகளல்லாமல் வேறு (உண்மைநிலை) இல்லையென்று தீர்க்கமாக உணர்ந்தேன், (அங்ஙனம்) உணர்ந்தவழியில் நின்று நான் இன்பமடையாதபடியினால், இப்படிப்பட்ட ஏழையானேன் (இங்ஙனமானமையும்) உன்னுடைய திருவருளென்றே அறிவில்லாத எனக்கு (என்னையறியாமல் எனக்குள் நின்றே) உணரச் செய்தாய். ஆகையால் இனி நான் கதியடை வதற்குரிய வழியாது சொல்லுவாய் (எ-று)

“அவனன்றி யோரணுவு மசையாது” என்றமையால், ‘எல்லா முனடிமையே யெல்லாமுனுடைமையே யெல்லா முனுடைய செயலே” எனவும், சர்வபரிபூரணனாகலின், ‘எங்கணும்வியாபிநீ’ எனவும், வேதங்கள் மௌனத்தோர்கள் முறையிடுவதும் இதுவேயாகலான், ‘இருக்காதிவேத மெல்லாஞ் சொல்லான் முழக்கியது மிக்கவுபகாரமாச் சொல்லிறந்தவரும் விண்டு சொன்னவையுமிவை’ எனவும் கூறினார். *(3)*

50. பட்டப் பகற்பொழுதை இருளென்ற மருளர்தம்
பட்சமோ எனதுபட்சம்
பார்த்தவிட மெங்கணுங் கோத்தநிலை குலையாது
பரமவெளி யாகவொருசொல்
திட்டமுடன் மௌனியா யருள்செய் திருக்கவுஞ்
சேராமல் ஆராகநான்
சிறுவீடு கட்டியதின் அடுசோற்றை யுண்டுண்டு
தேக்குசிறி யார்கள்போல

நட்டனைய தாக்கற்ற கல்வியும் விவேகமும்
நன்னிலய மாகவுன்னி
நானென்று நீயேன் றிரண்டில்லை யென்னவே
நடுவே முளைத்தமனதைக்
கட்டஅறியாமலே வாடினே னெப்போது
கருணைக் குரித்தாவனோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

(பொ-ரை) நினைத்தற்கரிய சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடுகின்ற கருணைக்குத் தாயகமாகிய கடவுளே! என்னுடைய பட்சமானது பகற் காலத்தை இருட்கால மென்று சொல்லுகிற மயக்கமுடையவர்களுடைய பட்சமோ? நான் கண்ட இடங்களெல்லாம் என்னை யுண்ட நிலை நீங்காமல் பரமாகாசமாக, மௌனியாயெழுந்தருளி வந்து ஒருமொழியை யுபதேதித்திருந்தும், அந்த நிலையிற் சேராமல் நான் யாராகவோ வெண்ணிச் சிறிய மணல் வீடு கட்டி அதிற் சமைத்த மணற் சோற்றைப் பல்காலுண்டு தெவிட்டுஞ் சிறுபிள்ளைகள் போல, நடுவு நிலைமையாக் கற்றுக் கொண்ட கல்வியையுங் கேள்வியையும், நல்ல நிலையாக நினைத்து, நான் நீ யென்று இரண்டில்லையென்று சொல்ல நிச்சயித்து நடுவேயுண்டான மனத்தை யடக் கவறியாமல் இளைத்தேன். (ஆகையால்) எப்பொழுது உன்னுடைய கருணையைப் பெறுதற்குத் தகுந்த குணமுடையவனாவனோ. (எ-று)

நான் மனத்தை யடக்க வறிந்தால் கருணைக் குரியவனாவேன், அதனையறியாமையால் எப்பொழுது கருணைக்குரித்தாவனோ வென வாடினேன் என்றார்.

மனத்தை அடக்கினால் மோட்ச மெய்தும் என்பதை:-

நின்னை யறப்பெறு கிற்கிலே னன்னெஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பே-னின்னை
யறப்பெறு கிற்பேனேல் பெற்றேன்மற் றீண்டு
துறக்கந் திறப்பதோர் தாள்.

என்பதனானறிக. *(4)*

51. **மெய்விடா நாவுள்ள மெய்யரு ளிருந்துநீ**
மெய்யான மெய்யை எல்லாம்
மெய்யென வுணர்த்தியது மெய்யிதற் கையமிலை
மெய்யேதும் அறியாவெறும்

பொய்விடாப் பொய்யினேன் உள்ளத் திருந்துதான்
பொய்யான பொய்யைஎல்லாம்
பொய்யெனா வண்ணமே புகலவைத் தாயெனில்
புன்மையேன் என்செய்குவேன்
மைவிடா தெழுநீல கண்டகுரு வேவிட்ணு
வடிவான ஞானகுருவே
மலர்மேவி மறையோது நான்முகக் குருவே
மதங்கள் தொறும் நின்றகுருவே
கைவிடா தேயென்ற அன்பருக் கன்பாய்க்
கருத்தூ டுணர்த்துகுருவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

(பொ-ரை) கருணை நீங்காத நீலகண்டத்தையுடைய ஆசிரியனே! விட்டுணுமூர்த்தியின் வடிவமான ஞானாசிரியனே! தாமரை மலரை இடமாகக் கொண்டிருந்து நான்கு மறைகளையுஞ் சொல்லுகின்ற பிரமனின் வடிவமான ஆசிரியனே! சர்வ சமயங்கட்குந் தலைவனாய் நின்ற ஆசிரியனே! எங்களை நீக்கிவிட வேண்டாம்! எங்களை நீக்கிவிட வேண்டாம்! என்று வேண்டிக் கொண்ட அடியார்களுக்கு (அவர்களது) அன்பே உருவாகி, (அவர்களது) கருத்தில் (எல்லாவற்றையும்) உணர்த்து வித்த ஆசிரியனே! நினைத்தற்கரிய சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடுகின்ற கருணைக்குத் தாயகமாகிய கடவுளே! உண்மையை நீங்காத நாவையுடைய உண்மையாளரிடத்தில் நீ எழுந்தருளியிருந்து உண்மையான உண்மைப் பொருள்களை எல்லாம் உண்மையாகுமென்று அறிவித்தது உண்மையே. இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. உண்மையென்பது சிறிது முணராத வெறும் பொய்யை நீங்காத பொய்யையுடைய வனாகிய என்னுடைய மனத்திலிருந்து, பொய்யாகிய பொய்ப்பொருள்களை யெல்லாம் பொய்யென்று சொல்லாதபடி (மெய்யென்று) சொல்ல என்னை வைத்தனையாயின் அறிவில்லாத நான் என்ன செய்வேன்?(எ-று)

யாதொரு சிவபெருமானே அவ்வவர் வேண்டுந் தெய்வங்களாகவும் அவ்வச் சமயங்கட் கேற்ற தெய்வங் களாகவும் வருதலின், 'விஷ்ணு வடிவான ஞானகுருவே, மலர்மேவி மறையோது நான்முகக் குருவே மதங்கடொறு நின்ற குருவே' என்றார். இதனை,

யாதொரு தெய்வங் கொண்ட ரத்தெய்வ மாகி யங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றத்தெய் வங்கள்
வேதனைப் படும்பி றக்கு மிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா லிவை யிலாதா னறிந்தருள் செய்வ னன்றே

என்பதனானறிக *(5)*

52. பண்ணேன் உனக்கான பூசையொரு வடிவிலே
பாவித் திறைஞ்ச ஆங்கே
பார்க்கின்ற மலரூடு நீ யே யிருத்தி அப்
பனிமல ரெடுக்கமனமும்
நண்ணேன் அலாமலிரு கைதான் குவிக்களனில்
நாணும்என் உளம் நிற்றி நீ
நாள்கும் பிடும்போ தரைக்கும் பிடாதலால்
நான்பூசை செய்யல் முறையோ
விண்ணேவி ணாதியாம் பூதமே நாதமே
வேதமே வேதா ந்தமே
மேதக்க கேள்வியே கேள்வியாம் பூமிக்குள்
வித்தேஅ வித்தின் முளையே
கண்ணே கருத்தேஎன் எண்ணே எழுத்தே
கதிக்கான மோனவடிவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

(பொ-ரை) ஆகாயமே! ஆகாய முதலாகிய ஐந்து பூதமே! நாதத்துவமே! வேதமே! வேதமுடிவே! மேன்மை பொருந்திய கேள்வியே! கேள்வியாகிய நிலத்தில் முளைக்கும் விதையே! அந்த விதையினின் றுண்டாகும் முளையே! இரு கண்களே! எண்ணமே! என்னுடைய தருக்கமே! இலக்கணமே! முத்திக்குக் காரணமாகிய மௌனரூபமே! நினைத்தற்கரிய சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடுகின்ற கருணைக்குத் தாயகமாகிய கடவுளே! உனக்கு முக்கியமான பூசையைச் செய்வேன், உன்னை ஒரு ரூபத்தில் இருப்பதாகப் பாவித்து வணங்க அவ்விடத்தில் பார்க்கின்ற புஷ்பங்களெல்லாவற்றுள்ளும் நீயே இருக்கின்றாய் (ஆகையால்) அந்தக் குளிர்ந்த புஷ்பங்களை எடுக்கவும் மனஞ்சம்மதியேன். அல்லாமலும் இரண்டு கைகளையுங் குவித்து நமஸ்காரஞ் செய்யவென்றால், நீ எப்பொழுதும் என்னுள்ளத்தில் வீற்றிருக்கின்றாய் (ஆகையால் என் மனம்) நாணாநின்றது; (அங்ஙனம் மனம் நாணும்படி) நான்

கும்பிடுபோது அரைக் கும்பிடாகையால் நான் பூசை செய்வது கிரமமாகுமோ? ஆகாது (எ-று)

இறைவன் அகத்திலும் புறத்திலும் நிறைந்தவனாகலான், அவனை ஓரிடத்தில் இருக்கிறானென்று பூசை செய்ய வொண்ணாதென்பார், 'பண்ணேனுனக்கான பூசையொரு வடிவிலே பாவித்திறைஞ்சவாங்கே-பார்க்கின்ற மலரூடு நீயேயிருத்தியப் பனிமலரெடுக்க முனமு நண்ணேன்' எனவும் அங்ஙனமாய சர்வ வியாபி என் மனத்திலுமிருப்பதால் அவனை நமஸ்கரித்தலும் கூடாதென்பார். 'அலாமலிருகைதான் குவிக்க வெனினாணு மென்னுள நிற்றிநீ-நான் கும்பிடும் போதரைக் கும்பிடாதலானான் பூசைசெய்யன் முறையோ' எனவும் பரமாகாய சொரூபனாகலான், 'விண்ணே' எனவும், ஐம்பூதங்களிலுங் கலந்தவனென்பார்' 'விண்ணாதியாம் பூதமே' எனவும், தத்துவங்களில் விரவி நிற்பவனாகலான், 'நாதமே' எனவும், வேதத்தினுட் பொருளாயிருத்தலின், 'வேதமே' எனவும், அவ்வேதத்தி னந்தத்தில் சித்தாந்தப் படுத்தப் பட்டவனாகலான், 'வேதாந்தமே' எனவும் கேள்வி ஞானத்தாலுணரப் படுபவனாகலான், 'மேதக்க கேள்வியே' எனவும், அந்தக் கேள்வியாகிய ஞானபூமியில் உதிக்கின்றவனாகலான், 'கேள்வியாம் பூமிக்குள் வித்தே யவ்வித்தின் முளையே' எனவும், மோட்சத்திற் கேதுவானது மௌனரூபமாதலின், 'கதிக்கான மோனவடிவே' எனவுங் கூறினார். *(6)*

53. சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்துமுற்றுமெனலால்
சகமீ திருந்தாலும் மரணமுண் டென்பது
சதாநிட்டர் நினைவதில்லை
சிந்தையறி யார்க்கீது போதிப்ப தல்லவே
செப்பினும் வெகுதர்க்கமாம்
திவ்யகுண மார்க்கண்டர் சுகராதி முனிவோர்கள்
சித்தாந்த நித்தியரலரோ
இந்த்ராதி தேவதைகள் பிரமாதி கடவுளர்
இருக்காதி வேதமுனிவர்
எண்ணரிய கணநாதர் நவநாத சித்தர்கள்
இரவிமதி யாதியோர்கள்

கந்தருவர் கின்னரர்கள் மற்றையவர்கள் யாவருங்
கைகுவித் திடுதெய்வமே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணகரக் கடவுளே.

(பொ-ரை) இந்திரன் முதலான தேவர்களும் பிரமன் முதலான கடவுளர்களும் இருக்கு வேத முதலிய நான்கு வேதங்களையும் நன்றாய்க் கற்றுணர்ந்த முனிவர்களும் அளவில்லாத கணநாதர்களும் உயர்ந்த ஒன்பது சித்தர்களும் சூரியன், சந்திரன் முதலானவர்களும், கந்தருவர்களும், கின்னரர்களும் மற்றுமுள்ளவர் யாவருங் கைகூப்பி வணங்குதற் குரிய கடவுளே! நினைத்தற்கரிய சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடுகின்ற கருணைக்குத் தாயகமாகிய கடவுளே! யாதொரு பொருளையாயினும் மனத்தினாற் பற்றினால் அப்பொருளே வந்து முடியுமென்று எக்காலமும் வேதவாக்கியமானது முறையிடுதலால், உலகத்தின்கண் இருந்தாலும் இறப்புண் டென்பதை எக்காலமு மழியாத நிட்டையிலுள்ளவர் நினைப்பதில்லை. இக்கருத்துணரா தவர் களுக்கு இது சொல்லத் தக்கதல்ல; சொன்னாலும் மிகுந்த தர்க்கமாகும். உயர்ந்த குணத்தையுடைய மார்க்கண்டர், சுகர், முதலிய முனிவரர்கள் சித்தாந்தப் படுத்தப்பட்ட நித்தியான் மாக்களல்லவோ? ஆம் (எ-று)

சதா நிட்டையுடையவர்கள் தேகத்தின் மேல் வைத் துள்ள பற்றை நீக்கினவர்களாதலானும், சூக்கும தேகத்தைப் பெற்றவர் களாதலானும், 'சகமீ திருந்தாலு மரணமுண் டென்பது சதாநிஷ்டர் நினைவதில்லை' எனக் கூறினார்.

(7)

54. **துள்ளுமறி யாமனது பலி கொடுத் தேன்கர்ம**
துட்டதே வதைகளில்லை
துரியநிறை சாந்ததே வதையாம் உனக்கே
தொழும்பன் அன் பபிடேகநீர்
உள்ளுறையி லென்னாவி நைவேத்தியம் ப்ராணன்
ஓங்குமதி தூபதீபம்
ஒருகால மன்றிது சதாகால பூசையா
வொப்புவித் தேன்கருணைகூர்
தெள்ளிமறை வடியிட்ட அமுதப் பிழம்பே
தெளிந்ததே னேசீனியே

திவ்யரச மியாவுந் திரண்டொழுகு பாகே
தெவிட்டாத ஆனந்தமே
கள்ளன் அறி வூடுமே மெள்ளமெள வெளியாய்க்
கலக்கவரு நல்லஉறவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

(பொ-ரை) வேதங்களால் தெளிவித்து வடிக்கப்பட்ட அமிர்தக் கூட்டமே! தெளிவாகிய தேனே! சீனிசர்க்கரையே! உயர்ந்த சுவைகளெல்லாங் கூடி யொழுகுகின்ற பாகே! நீங்காத இன்பமே! கள்ளனாகிய என்னுடைய அறிவில் மெல்ல மெல்ல வெளிப்படையாய்ச் சேர வருகின்ற நல்ல உறவே! நினைத்தற் கரிய சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடு கின்ற கருணைக்குத் தாயகமாகிய கடவுளே! துள்ளுகின்ற ஆட்டைப் போன்ற மனத்தைப் பலியிட்டேன் (ஆகையால்) பாபமாகிய துஷ்ட தேவதைகள் (இனி என்னை) வருத்துவ தில்லை. துரியமென்கிற (நான்காவது ஸ்தானத்தில்) நிறைந்த சார்ந்த தேவதையாகிய உனக்கே தொண்டனாவேன்; என்னுடைய அன்பே அபிஷேக நீராகும்; உள்ளிடத்தி லுள்ள என்னுடைய உயிரே நைவேத்தியமாகும்; பிராண வாயுவும், உயர்ந்த அறிவும், தூப தீபங்களாகும், இங்ஙனமாய இது ஒரு காலத்தில் மாத்திரமேயல்ல; சதாகால பூசையாக ஒப்புவித்தேன் (ஆகையால்) மிகுந்த கிருபை செய்வாய் (எ-று)

ஆட்டைக் கொன்றுந் துள்ளுகின்றமையால், மனமும் அது போறலின் மனத்திற்காடு உவமையாயிற்று. (8)

55. உடல்குழைய என்பெலாம் நெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பியூற்ற
ஊசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
ஒருறவும் உன்னியுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துள் நடுக்குறப்
பாடியா டிக்குதித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்த்தெழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி
வானேயவ் வானிலின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தியேத்துங்

கடல்மடை திறந்தனையஅன்பரன் புக்கெளியை
கன்னெஞ்ச னுக்கெளியையோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

(பொ-ரை) நினைத்தற்கரிய சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடுகின்ற கருணைக்குத் தாயகமாகிய கடவுளே! தேகங் குழையவும், எலும்புக ளெல்லாம் நெகிழ்ந்துருகவும், கண்களினின்றும் நீரானது ஊற்றைப் போல் வெதும்பிச் சிந்தவும், ஊசியானது காந்தத்தைப் பார்த்துச் சேர்தல்போல நினைக்கத்தக்க சுற்றமாகிய உன்னை நினைத்து நினைத்துப் படபடவென்று நெஞ்சம் பதைத்து உள்ளே நடுக்கம் உண்டாகப் பாடி ஆடிக் குதித்துக் குளிர்ச்சி பொருந்திய சந்திரனிடத்திலுண்டாகுஞ் சந்திரிகையைப் போலப் புன்சிரிப்பைப் பரப்பி யாரவாரஞ் செய்தெழுந்து, இதழ்கள் விரியுந் தாமரையையொத்த கைகளை விரித்துக் குவித்து, ஆகாயமே! அவ்வாகாயத்தினின்றும் பொழிகின்ற ஆனந்த மழையே! அந்த மழைத் தாரைகளால் உண்டாகும் பிரவாகமே! சர்வகாலமும் வாழக் கடவையென்று வாழ்த்தித் துதிக்கின்ற கடலானது மடைதிறந்தாற் போன்ற அடியார்கள் அன்புக்கு எளியையாய் இருக்கின்றாய்; கல்லைப் போலும் வலிய நெஞ்சையுடைய எனக்கு எளியையா இருப்பையோ. (எ-று)

"வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்த தம்மையெல்லாந் தொழவேண்டி
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானமுன்னைப் பரவுவனே"

என்பவாகலான், 'கடன்மடைதிறந்தனைய வன்புரன்புக் கெளியை கன்னெஞ்சுனுக்கெளியையோ' எனப் புகன்றனர்.

(9)

56. **இங்கற்ற படியங்கு மெனவறியு நல்லறிஞர்**
எக்காலமும் உதவுவார்
இன்சொல்தவ றார்பொய்மை யாமிழுக் குரையா
இரங்குவார் கொலைகள் பயிலார்
சங்கற்ப சித்தரவ ருள்ளக் கருத்திலுறை
சாட்சிநீ யிகபரத்துஞ்

சந்தான கற்பகத் தேவா யிருந்தே
சமத்தஇன் பமும் உதவுவாய்
சிங்கத்தை யொத்தெனைப் பாயவரு வினையினைச்
சேதிக்க வருசிம்புளே
சிந்தா குலத்திமிரம் அகலவரு பானுவே
தீனனேன் கரையேறவே
கங்கற்ற பேராசை வெள்ளத்தின் வளரருட்
ககனவட் டக்கப்பலே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே.

(பொ-ரை) சிங்கத்தைப் போன்று என்னைப் பாய வருகின்ற இரு வினைகளைக் கிழிக்க வருகின்ற சாபமே! மனக்கிலேசமான இருளானது நீங்க வருகின்ற சூரியனே! ஏழையாகிய நான் கரை கண்டேறும்படி, கரையற்ற பெரிய ஆசையாகிய பிரவாகத்தில் வசிக்கின்ற அருளையுடைய வட்டமான சிதாகாயக் கப்பலே! நினைத்தற்கரிய சிற்றம்பலத்தில் ஆனந்தக் கூத்தாடுகின்ற கருணைக்குத் தாயகமாகிய கடவுளே! இம்மையில் நீங்கிய விதமே, மறுமை யிலுமாகுமென்று உணரும் நல்லுணர்ச்சியை யுடையவர்கள் எக்காலத்திலும் பிறருக்குதவி செய்வார்கள். இனிய சொற்கள் வழுவார்கள், பொய்யாகிய குற்றத்தையுடைய சொற்களைச் சொல்லார், மனமிரங்குவார், கொலை செய்யார். (இங்ஙனமாய இவைகளைச்) சங்கற்பஞ் செய்யுஞ் சித்தத்தை யுடையவர்களாகிய அவர்களுடைய உள்ளக் கருத்தில் வீற்றிருக் கின்ற காட்சியாகிய நீ, இம்மையிலும், மறுமையிலும், சந்தான விருட்சம் போலவும், கற்பக விருட்சம்போலவுமுள்ள தெய்வமாகவிருந்து சகல சுகங்களையும் அருள் செய்வாய். (எ-று) (10)

சித்தர்கணம்

இந்நூலாசிரியரது ஆசிரியர் திருமூலர் மரபினராக லானும், அம்மூவர் சித்தரிலொருவராகலானும், அச்சித்தர் களது பெருமைகளைச் சித்தர்கண மெனப் பெயரிட்டு ஈண்டுக் கூறினர்.

57. திக்கொடு திகந்தமும் மனவேக மென்னவே
சென்றோடி யாடிவருவீர்
செம்பொன்மக மேருவொடு குணமேரு என்னவே
திகழ்துருவம் அளவளாவி

உக்ரமிகு சக்ரதா னென்னநிற் பீர்கையில்
உழுந்தமிழும் ஆசமனமா
வோரேழு கடலையும் பருகவல் லீரிந்த்ரன்
உலகும்அயி ராவதமுமே
கைக்கெளிய பந்தா எடுத்து விளையாடுவீர்
ககனவட் டத்தையெல்லாங்
கடுகிடை யிருத்தியே அட்டகுல வெற்பையுங்
காட்டுவீர் மேலும்மேலும்
மிக்கசித் திகளெலாம் வல்லநீ ரடிமைமுன்
விளங்கவரு சித்திஇலிரோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

(பொ-ரை) வேதாந்த சித்தாந்தங்களின் கருத்தை ஒன்றாகப் பாவிக்குஞ் சிறந்த நிலையைப் பெற்ற ஞானத்தை யுடைய சித்தர்கூட்டமே! திக்குகளிலும், திக்குகளினந் தங்களிலும் மனோவேகம் போலப் போய் ஓடியும் விளையாடியும் வருவீர்கள். செவந்த பொன்னாலாகிய மகமேரு மலையோடு நல்ல குணமாகிய மேருமலை போல, விளங்குகின்ற துருவ மண்டலத்தின் அளவும் போய், அதிக வேகத்தையுடைய சக்கராயுதத்தைத் தாங்கியவன்போல் நிற்பீர். ஆழமாகிய ஏழு சமுத்திரங்களையும் உழுந்தளவாக்கி ஆசமனஞ் செய்ய வல்லமையுடையீர், இந்திரலோகத்தையும் (அங்குள்ள) ஐராவத மென்னும் யானையையும், கைக்கு இலேசான பந்தாகக் கொண்டு விளையாடுவீர்; ஆகாய வட்டங்களையெல்லாம் ஒரு கடுகில் நிறுத்தி, பழைமை யாகிய எட்டு மலைகளையும் (அதன்கண்) காட்டுவீர், மேன்மேலும் மிகுந்த சித்திகளை யெல்லாம் செய்ய வல்லவர்களாகிய நீங்கள், அடிமையாகிய என்முன் நான் அறியும்படி எழுந்தருளி வருஞ் சித்தியுடையீர் அல்லீரோ. (எ-று)

துருவமண்டல வரலாறு:- உத்தானபாதனென்னும் ஒரு அரசன் சுநீதி என்பவளை விவாகஞ் செய்து பெற்ற மகனாகிய துருவனென்பவன் தன் தந்தை மடிமீதேறிப் பின்னர், தன்னுடைய சுருதி யென்னும் சிறியதாயின் மடிமீதேற, அவள் என் வயிற்றிற் பிறக்கும் பாக்கியத்தைப் பெறாமல் என்னுடைய மாற்றாளுக்கு மகனாயினை. ஆதலால், என் மகனாவதற்குத் தவஞ்செய்து என் வயிற்றிற்

பிறக்கவில்லையென்று சொல்லக் கேட்டு, மனம் பொறாமல் தன் தாய்க்கறிவித்துத் தவஞ் செய்வதற்குச் செல்கின்றே னென்று உத்தரவு பெற்றுக் கொண்டு போகையில், நாரத முனிவரைக் கண்டு அவரிடம் மந்திரோபதேசம் பெற்றுத் தவஞ் செய்து யாவராலும் பெறுதற்கரிய துருவபதம் பெற்றானென்பது.

எழுகடலாவன:- உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் என்பனவாம். ஐராவதம் - திருப்பாற் கடல் கடையும்போது பிறந்த வெள்ளையானை. அட்டகுலவெற்பு-கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி, கந்தமாதனம் என்பனவாம்.

ஆசமனம் என்றது= சந்தியாவந்தன காலத்தில் உபயோகிக்கும் முக்குடிநீர். மூன்று தரம் அள்ளிக் குடிப்பதால் முக்குடிநீர் எனப் பெயராயிற்று.

மிக்க சித்திகள் என்றது அட்டமாசித்திகளை, அவையாவன:- அணிமா மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன.

இவற்றின் விரி வருமாறு:-

“அறவுஞ் சிறிய வுயிர்தொறுந்தான் பரம காட்டை யணுவாய்ச் சென்று
உறையுஞ் சிறுமையணிமாவா முவரிஞால முதன்மேலென்
றறையுஞ் சிவாந்த மாறாது முள்ளும் புறனு மகலாதே
நிறையும் பெருமை தனையன்றோ மகிமா வென்னு நிரம்பிய நூல்”

என அணிமா, மகிமாவும்

“இலகு மேருப் பாரம்போ லிருக்கும் யோகி தனையெடுத்தா
விலகு வான தூலமென விருப்ப திலகி மாவாகு
மிலகு வான பரவணுப்போ லிருக்கும் யோகி தனையெடுத்தா
விலகு மேருப் பாரமென விருப்ப தன்றோ கரிமாவாம்”

என இலகிமா, கரிமாவும்

“பிலத்தி லிருந்தோ ணயனுலகிற் புகுதல் மீண்டும் பிலமடைதல்
பலத்தின் மிகுந்த பிராத் தியதாம் பரகாயத்தி னண்ணுதல்வான்
புலத்தி னியங்க லிச்சித்த போக மனைத்துந் தானிருக்குந்
தலத்தி னினைந்த படிவருதல் பிராகா மியமாந் தவக்கொடியீர்

விண்ணி விரவி தன்னுடம்பின் வெயிலா லனைத்தும் விளங்குதல்
போன்
மண்ணி லுளவாம் பொருள்பலவுங் கால மூன்றும் வானத்தின்
கண்ணி லுளவாம் பொருளுந்தன் காயத் தொளியா லிருந்தறிதல்
எண்ணிலிதுவு மறையொருசார் பிராகாமிய மென்றியம்புமால்"

எனப் பிராத்தி, பிராகாமியமும்

" ஈச னேமுத் தொழிலுந்தன் னிச்சை வழிசெய் தெழுபுரவித்
தேசன் முதற்கோள் பணிகேட்பத் திகழ்வ தீசத் துவமாகும்
பூச லவுணர் புள்விலங்கு பூத மனிதர் முதலுலகும்
வாச வாதி யெண்மருந்தன் வசமாக கொள்கை வசித்துவமாம்"

என ஈசத்துவம், வசித்துவமும் வந்தவாறு காண்க. *(1)*

58. **பாட்டளி துதைந்துவளர் கற்பகநல் நீழலைப்**
பாரினிடை வரவழைப்பீர்
பத்மநிதி சங்கநிதி இருபாரி சத்திலும்
பணிசெயுந் தொழிலாளர்போல்
கேட்டது கொடுத்துவர நிற்கவைப் பீர்பிச்சை
கேட்டுப் பிழைப்போரையுங்
கிரீடபதி யாக்குவீர் கற்பாந்த வெள்ளமொரு
கேணியிடை குறுகவைப்பீர்
ஓட்டினை எடுத்தா யிரத்தெட்டு மாற்றாக
ஒளிவிடும் பொன்னாக்குவீர்
உரகனும் இளைப்பாற யோகதண் டத்திலே
உலகுசுமை யாகவருளால
மீட்டிடவும் வல்லநீ ரென்மனக் கல்லையனல்
மெழுகாக்கி வைப்பதரிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

(பொ-ரை) வேதாந்த சித்தாந்தங்களின் கருத்தை ஒன்றாகப் பாவிக்குஞ் சிறந்த நிலையைப் பெற்ற ஞானத்தை யுடைய சித்தர் கூட்டமே! இராகப் பாட்டைப் பாடுகின்ற வண்டுகள் மொய்த்து வளர்கின்ற நல்ல கற்பக விருட்சத்தின் நிழலை உலகத்தின்கண் வரும்படி செய்வீர்; தாமரை மலர்போல் திரண்ட செல்வத்தையும், சங்குபோல் திரண்ட செல்வத்தையும், கேட்ட பொருள்களைக் கொடுத்து வரும்படி வேலை செய்யுமாட்கள் போல இரண்டு பக்கத்திலும் நிற்கும்படி செய்வீர். பிச்சைகேட்டு உண்டு

உயிர் வாழ்வோரையும் அரசர்களாகச் செய்வீர். கற்ப முடிவில் உண்டாகிற வெள்ளத்தை ஒருகிணற்றில் சுருங்கும் படி செய்வீர்; உடைந்த மட்பாத்திர ஓட்டை எடுத்து ஆயிரத்தெட்டு மாற்றாகப் பிரகாசிக்கின்ற பொன்னாகச் செய்வீர்; உலகத்தை ஆதிசேஷனும் இளைப்பாறும்படி யோகதண்டத்தில் சுமையாய் நிற்கக் கிருபையினால் மீட்கவும் வல்லமையுடைய யீராகிய நீங்கள், என்னுடைய மனமாகிய கல்லை நெருப்பிலிட்ட மெழுகைப் போலிளகும் படி செய்வது உங்களுக்கு அருமையானதோ? (எ-று)

இங்ஙனமாய அரிய செயல்களைச் செய்யும் உங்களுக்கு என் மனத்தை உருகும்படி செய்தற்குக் கருணை யில்லையோ? என்பது கருத்து. *(2)*

59. பாரொடுநன் னீராதி யொன்றொடொன் றாகவே
பற்றிலய மாகுபோழ்து
பரவெளியின் மருவுவீர் கற்பாந்த வெள்ளம்
பரந்திடி னதற்குமீதே
நீரிலுறை வண்டாய்த் துவண்டுசிவ யோகநிலை
நிற்பீர் விகற்பமாகி
நெடியமுகி லேழும் பரந்துவரு டிக்கிலோ
நிலவுமதி மண்டலமதே
ஊரென விளங்குவீர் பிரமாதி முடிவில்விடை
ஊர்தியரு ளாலுலவுவீர்
உலகங்கள் கீழ்மேல வாகப் பெருங்காற்
றுலாவின்நல் தாரணையினால்
மேருவென அசையாமல் நிற்கவல் லீருமது
மேதக்க சித்திளளிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

(பொ-ரை) வேதாந்த சித்தாந்தங்களின் கருத்தை ஒன்றாகப் பாவிக்குஞ் சிறந்த நிலையைப் பெற்ற ஞானத்தை யுடைய சித்தர் கூட்டமே! பூமியும் நீர் முதலியவையும், ஒன்றுடனொன்றாகத் தொடர்ந்து ஒடுங்குங் காலத்தில், பரமாகாயத்தில் தங்கியிருப்பீர்; கற்பமுடிவில் உண்டாகும் வெள்ளம் பெருகினால் அவ்வெள்ளத்தின்மேல் சலத்திற் சஞ்சரிக்கின்ற வண்டு போலத் திரிந்து சிவயோக சமாதியிலிருப்பீர்; பெரியமேகங்கள் ஏழும் தம்முள் மாறுபட்டுப் பரவி மழை பொழிந்தால் வெண்மையை

வீசுகின்ற சந்திர மண்டலத்தையே ஊராகக் கொண்டு (அதனிடத்தில்) விளங்குவீர்; பிரமன் முதலியோருடைய முடிவுகாலத்தில் ரிஷப வாகனத்தைக் கொண்டவனாகிய பரமசிவனது கிருபையினால் வசிப்பீர்; உலகங்களெல்லாங் கீழ் மேலாக மாறும்படி சண்டமாருதம் வீசினால் நல்ல தாரணை யோகத்தினால் மேருமலையைப்போல் அசையாமல் நிற்க வல்லமையுடையீர்; உங்களுடைய பெருமை மிகுந்த சித்திகள் சொல்லுதற்கு இலேசான வையோ? (எ-று)

“பாரோடு நன்னீராதி யொன்றொடொன்றாகவே பற்றிலயமாம் போதினில் பரவெளியின் மருவுவீர்” என்றதற்கு பூதங்கள் லயமாகும்போது அப்பூதாகாயத்தில் வசியாமல் பரமாகாயத்தில் வசிப்பீர், என உட்கிடைப் பொருள் கொள்ளலுமொன்று. (3)

60. எண்ணரிய பிறவிதனில் மானுடப் பிறவிதான்
யாதினும் அரிதரிதுகாண்
இப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ
ஏதுவருமோ அறிகிலேன்
கண்ணகல் நிலத்துநான் உள்ளபொழு தேஅருட்
ககனவட்டத்தில் நின்று
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்துமதி யவசமுறவே
பண்ணுவது நன்மைஇந் நிலைபதியு மட்டுமே
பதியா யிருந்ததேகப்
பவுரிகுலை யாமலே கௌரிகுண் டலியாயி
பண்ணவிதன் அருளினாலே
விண்ணிலவு மதியமுதம் ஒழியாது பொழியவே
வேண்டுவே னுமதடிமைநான்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே

(பொ-ரை) வேதாந்த சித்தாந்தங்களின் கருத்தை ஒன்றாகப் பாவிக்குஞ் சிறந்த நிலையைப் பெற்ற ஞானத்தை யுடைய சித்தர் கூட்டமே! நினைத்தற் கரிய பிறவிகளுள் மனிதப் பிறப்பே எல்லாப் பிறப்புகளிலும் மிகவும் அருமையானது. இந்தப் பிறப்பு தவறினால் எந்தப் பிறப்பு உண்டாகுமோ? (அதனால்) என்ன வருத்தங் களுண்டாகுமோ? உணர்கிலேன். (ஆகையால்) இடமகன்ற

உலகத்தின்கண் நானிருக்கும்பொழுதே அருளாகிய ஆகாய வட்டத்தினின்றும் காலானிலைத்து ஆனந்தமழையைப் பொழியும் மேகத்தோடு சேர்ந்து என்னுடைய அறிவானது வசமற்றிருக்கும்படி செய்வது நன்மையாம். இந்த உண்மை நிலையானது நன்றாய்ப் பதியும் வரைக்கும் நான் இருக்குமிடமாக விருந்த தேகமாகிய பவுரிக்கூத்தானது அழியாமலிருக்கவும், கௌரி யென்று சொல்லும் குண்டலிசத்தியினது கருணையினாற் சிதாகாசத்தில் விளங்குகின்ற சந்திராமிந்தமானது நீங்காமற் பெய்யவும் (கருணை செய்வீரென்று) உமதடிமையாகிய நான் வேண்டிக் கொள்ளுகின்றேன்.

பிறப்புகள் பலவாகலின், 'எண்ணரியபிறவி' எனவும், அவற்றில் மனிதப் பிறப்பு புண்ணியமிகுதியால் கிடைத்த லான், 'மானிடப்பிறவிதான் யாதினு மரிதரிதுகாண்' எனவும், இப்பிறப்பு நீங்கினால் இன்ன பிறப்பு வருமென்று நிச்சயிக்கக் கூடாமையின், 'இப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ வேதுவருமோ வறிகிலேன்' எனவும், ஆதலான் நான் இத்தேகத்தோடு இருக்கும் போழ்தே சிவயோக சமாதியையடைய வேண்டுமென்பார், 'கண்ணகனிலத்து நானுள்ள பொழுதே யருட்ககன வட்டத்தினின்று-காலூன்றி நின்று பொழியானந்த முகிலொடு கலந்து மதியவசமுறவே-பண்ணுவது நன்மை' எனவும், அச்சமாதி சித்தியாதற்குள் தேகம் நீங்கிவிடின் அது பெறுதற்காகா தென்பார், இந்நிலை பதியுமட்டுமே பதியர்யிருந்ததேகப் பவுரி குலையாமல்' எனவும், இதனைக் குண்டலி சத்தியருளாற் பெற வேண்டுதலின், 'கவுரிகுண்டலியாயி பண்ணவிதனருளினாலே விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே வேண்டுவே னுமதடிமை நான்' எனவுங் கூறினார்.

பவுரி= கை சேர்த்துச் சுழன்றாடும் ஓர் வகைக் கூத்து: தேகமும் அதுபோல மாறி மாறிச் சுழன்று வருதலின் அதனை உவமித்தனர். (4)

61. பொய்திகழும் உலகநடை என்சொல்கேன் என்சொல்கேன்
பொழுதுபோக் கேதென்னிலோ
பொய்யுடல் நிமித்தம்புசிப்புக் கலைந்திடல்
புசித்தபின் கண்ணுறங்கல்

கைதவ மலாமலிது செய்தவம தல்லவே
கண்கெட்ட பேர்க்கும் வெளியாய்க்
கண்டதிது விண்டிதைக் கண்டித்து நிற்றலெக்
காலமோ அதையறிகிலேன்
மைதிகழு முகிலினங் குடைநிழற் றிடவட்ட
வரையினொடு செம்பொன்மேரு
மால்வரையின் முதுகூடும் யோகதண் டக்கோல்
வரைந்துசய விருதுகாட்டி
மெய்திகழும் அட்டாங்க யோகபூ மிக்குள்வளர்
வேந்தரே குணசாந்தரே
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

(பொ-ரை) கருமைவிளங்கும் மேகக்கூட்டங்கள் குடையைப் போல் நிழல் செய்ய எட்டு மலைகளுடன் செம்பொன் மயமாகிய மேருமலையின் புறத்திலும் யோக தண்டக்கோலை யெழுதி, வெற்றியாகிய விருதைக் காட்டி, உண்மை விளங்கும் அஷ்டாங்க யோகமாகிய பூமியில் வளர்கின்ற அரசரே! சாந்த குணத்தையுடையவரே! வேதாந்த சித்தாந்தங்களின் கருத்தை ஒன்றாகப் பாவிக்குஞ் சிறந்த நிலையைப் பெற்ற ஞானத்தையுடைய சித்தர் கூட்டமே! பொய்மிகுந்த உலக வொழுக்கத்தைப் பற்றி என்ன சொல்வேன், பொழுதைப் போக்குதல் எப்படி யென்றால், நிலையில்லாத தேகத்தை வளர்க்கும் பொருட்டு ஆகாரத்திற்குத் திரிதலும், அவ்வாகாரத்தைப் புசித்தபின் தூங்குதலுமாம். ஆகையால் இது பொய்ம் மார்க்கமே யல்லாமல் செய்தற் குரிய தவமல்ல. இது குருடர்களுக்கும் வெளிப்படையாகத தோன்றியதே. இதைக் கண்டித்து விட்டிருத்தல் எந்தக்காலமோ? அதையுணரேன். (எ-று) (5)

62. **கெசதுரக முதலான சதுரங்க மனமாதி**
கேள்வியி னிசைந்துநிற்பக்
கெடிகொண்ட தலமாறு மும்மண்ட லத்திலுங்
கிள்ளாக்குச் செல்லமிக்க
தெசவிதம தாய்நின்ற நாதங்க ளோலிடச்
சிங்காச னாதிபர்களாய்த்
திக்குத் திகந்தமும் பூரண மதிக்குடை
திகழ்ந்திட வசந்தகாலம்
இசையமலர் மீதுறை மணம்போல ஆனந்தம்
இதயமேற் கொள்ளும்வண்ணம்

என்றைக்கு மழியாத சிவராச யோகமாய்
இந்த்ராதி தேவர்களெலாம்
விசயசய சயவென்ன ஆசிசொல வேகொலு
இருக்குநும் பெருமைஎளிதோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

(பொ-ரை) வேதாந்த சித்தாந்தங்களின் கருத்தை ஒன்றாகப் பாவிக்குஞ் சிறந்த நிலையைப் பெற்ற ஞானத்தை யுடைய சித்தர் கூட்டமே! மனமுதலிய அந்தக்கரணங்கள் நான்கும் யானை குதிரை முதலான சதுரங்க சேனைகள் போலப் பணிவிடைக் கிசைந்திருக்கவும், நகர்த்தன்மை வாய்ந்த ஆறு ஆதாரங்களிலும், மூன்று மண்டலங்களிலும், கிள்ளார்க்குச் செல்லவும், பத்து வகையாய் நின்ற மேலாகிய நாதங்கள் சத்திக்கவும், சிங்காசநாதிபர்களாய் திக்குளிலும் திக்குகளின் அந்தங்களிலும், நிறைந்த சந்திரனாகிய குடை பிரகாசிக்கவும், வசந்தகாலம் வர மலரில் பொருந்திய வாசனைபோல இதயத்தில் ஆதங்கொள்ளும் விதம், எக்காலத்திலும் அழியாத சிவராஜ யோகராக இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் விஜய, ஜய, ஜயவென்று ஆசீர்வதிக்கும்படி திருவோலக் கங்கொண்டெழுந்தருளியிருக் கின்ற உம்முடைய பெருமை சொல்லுதற்கிலேசானதோ? அன்று.

கெஜதுரக முதலிய சதுரங்கச் சேனைகள் சேனாதிபதி முதலி யோருடைய கேள்வியி னிற்பதுபோல, மனமுதலிய அந்தக் காரணங்களும் உங்கள் கேள்வியி னிற்கின்றன என்பார், 'கெஜதுரக முதலான சதுரங்க மனமாதி கேள்வி யினிசைந்து நிற்ப' எனக் கூறினார்.

தலமாறு என்றது ஆறாதாரங்களை அவை யாவன:- மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பன. இவற்றின் விரிவை.

"மூலாதாரங் குதஸ்தாநம் சுவாதிஷ்டநந்து மேஹநம்
நாபிஸ்து மணிபூராக்கயம் ஹ்ருதயாப்ஜ மநாகதம்
தாலுமூலம் மிசுத்தாக்யம் ஆஜ்ஞாக்யம் நிடலாம்புஜம்
சஹஸ்ராரம் ப்ரஹ்மரந்திர மித்தியாகம விதோவிதுஹ"

ஆதாரஸ்து சதுர்த்தளோருணருசிர் வாஸாந்த வர்ணாஸ்ரயஹ
சுவாதிஷ்டாந மநேகவைத்யுதநிபம் பாலாந்த ஷட்பத்ரகம்

ரத்நாப மணிபூரகம் தசதளம் டாத்யம் பகாராந்தகம்
பத்ரைர்த்வாதச பிஸ்த்வநாகதபுரீ ஹைமீ கடாந்தான்விதா
திருஷ்ட்வாரம் ஸ்வர ஷோடஸைஸ் சஸகிதம் ஜோதிர் விசுத்தாம் புஜம்
ஹம்க்ஷேத்த்யக்ஷர பத்மபத்ரயுகளீ ரத்நாப மாஜ் ஞாபுரீ
தஸமாதுர்த்த்வ மதோமுகம் விகசிதம் பத்மம் ஸகஸ்ரச்சதம்
நித்தியாநந்தமை சதாசிவபுரீ சக்தே நமஸ்ஸாஸ்வதம்"

என்பவற்றானறிக.

மும்மண்டலம் என்றது -சோமசூரியாக்கினி மண்டலங்களை (6)

63. **ஆணிலே பெண்ணிலே என்போல வொருபேதை**
அகிலத்தின் மிசையுள்ளதோ
ஆடிய கறங்குபோ லோடியுழல் சிந்தையை
அடக்கியொரு கணமேனும்யான்
காணிலேன் திருவருளை யல்லாது மௌனியாய்க்
கண்மூடி யோடுமூச்சைக்
கட்டிக் கலாமதியை முட்டவே மூலவெங்
கனலினை எழுப்பநினைவும்
பூணிலேன் இற்றைநாட் கற்றுதுங் கேட்டதும்
போக்கிலே போகவிட்டுப்
பொய்யுலக னாயினேன் நாயினுங் கடையான
புன்மையேன் இன்னம் இன்னம்
வீணிலே யாலையாமல் மலையிலக் காகநீர்
வெளிப்படத் தோற்றல்வேண்டும்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

(பொ-ரை) வேதாந்த சித்தாந்தங்களின் கருத்தை ஒன்றாகப் பாவிக்குஞ் சிறந்த நிலையைப் பெற்ற ஞானத்தையுடைய சித்தர் கூட்டமே! ஆணிலாயினும், பெண்ணிலாயினும், என்னைப் போல ஒருபேதை உலகத்திலுண்டோ? ஆடுகின்ற காற்றாடியைப்போல் ஓடித்திரிகின்ற மனத்தையடக்கி ஒருக்ஷண நேரமாயினும் திருவருளைப் பார்த்திலேன். அல்லாமல் கண்களை மூடி மௌனநிலை யுடையவனாகவிருந்து வெளிப் பட்டோடா நின்ற பிராண வாயுவைத் தடுத்துக் கலைகளோடு கூடிய சந்திர மண்டலத்தை முட்டும்படி மூலத்திலுள்ள கொடிய நெருப்பை யெழுப்ப (மூலாக்கினியை எழுப்ப) எண்ணமுங்

கொண்டிலேன். ஆகையால் இத்தனைநாள் வரைக்குங் கற்ற நூற்பொருள்களையுங் கேட்ட கேள்வி களையும் போகும் வழியிற் போகவிட்டுப் பொய்யாகிய உலகத்தை (மெய்யாக நினைப்பவனாக) ஆயினேன். நாயினுங் கீழ்ப்பட்ட அறிவில்லாத நான் இன்னும் வீண்காரியங்களி னுழைந்து திரியாமல் மலைக்குறியாக நீங்கள் வெளிப் படையாகத் தரிசனந் தந்தருள வேண்டும். (எ-று)

மூச்சை அடக்குவதற்குக் கண்களை மூடியிருத்தல் ஒருவகைச் சாதனமாதலின், 'கண்' மூடியோடு மூச்சைக் கட்டி எனவும், அங்ஙனம் மூச்சையடக்கின் மூலத்தினின்றும் அக்கினி கிளம்பிச் சிரசளவுந் தாக்குதலின், 'கலாமதியை முட்டவே மூலவெங்கனலினை யெழுப்ப நினைவும் பூணிலேன்' எனவும், இவற்றிலெல்லாம் பழகாமல் இவ்வுலக நடையையே விரும்பியிருந்தே னென்பார். 'இற்றை நாட் கற்றதுங் கேட்டதும் போக்கிலே போக விட்டுப் பொய்யுலகனாயினேன் எனவும், நீங்கள் எனக்கு வெளி வந்தால் நான் நன்மார்க்க மடைவேனென்பார், 'நாயினுங் கடையான புன்மை யேனின்ன மின்னம் வீணிலே யலையாமன் மலையிலக்காக நீர் வெளிப்படத் தோற்றல் வேண்டும்' எனவுங் கூறினார். (7)

64. கன்னலமு தெனவுமுக் கனியெனவும் வாயூறு
கண்டெனவும் அடியெடுத்துக்
கடவுளர்கள் தந்ததல அமுதமுது பேய்போல்
கருத்திலெழு கின்றவெல்லாம்
என்னதறி யாமையறி வென்னுமிரு பகுதியால்
ஈட்டுதமி ழெந்தமிழினுக்
கின்னல்பக ராதுலகம் ஆராமை மேலிட்
டிருத்தலால் இத்தமிழையே
சொன்னவனி யாவனவன் முத்திசித் திகளெலாந்
தோய்ந்த நெறியேபடித்தீர்
சொல்லுமென அவர்நீங்கள் சொன்ன அவை யிற்சிறிது
தோய்ந்தகுண சாந்தனெனவே
மின்னல்பெற வேசொல்ல அச்சொல்கேட் டடிமைமனம்
விகசிப்ப தெந்தநாளோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

(பொ-ரை) வேதாந்த சித்தாந்தங்களின் கருத்தை ஒன்றாகப் பாவிக்குஞ் சிறந்த நிலையைப் பெற்ற ஞானத்தை யுடைய சித்தர் கூட்டமே! கரும்பின் சுவை போலவும், மூன்று கனிகளின் சுவை போலவும், நாவில் ருசிக்கும் படியான கற்கண்டு போலவும் (சுவையுள்ள) கடவுளர்களால் எடுத்துக் கொடுக்கப்பட்ட அடியுடையதல்ல, பிசாசைப் போற் பலகால் அழுது, மனத்திலுண்டாகின்ற எல்லாவற்றையும், என்னுடைய அறியாமை, அறிவு, என்னும் இரண்டு பகுப்பினால் சொல்லப் பட்ட தமிழாகும் அன்பு மேலிட் டிருத்தலால் உலகத்திலுள்ளார் என்னுடைய தமிழுக்குக் குற்றஞ் சொல்லார். முத்திசித்திக ளெல்லாமமைந்த மார்க்கத்தைப் படித்தவர்களே! இத்தமிழைச் சொன்னவன் யாவன், அவனைச் சொல்லுங்கள் என்று உலகத்தார் கேட்க, நீங்கள் பதிலுத்தரஞ் சொன்ன அந்த வார்த்தைகளில் சிறிது சாந்தகுணம் படிந்தவன் என விளங்கும் படி சொல்ல, அச்சொல்லைக் கேட்டு அடியேனுடைய மனமாகிய தாமரை மலர்வது (மனமானது மகிழ்ச்சியடைவது) எந்தக்காலமோ? (எ-று)

கடவுள் அடியெடுத்துக் கொடுக்க முடித்த நூல் பெரியபுரணம். (8)

65. பொற்பினொடு கைகாலில் வள்ளுகிர் படைத்தலால்
போந்திடை யொடுக்கமுறலால்
பொலிவான வெண்ணீறு பூசியே அருள்கொண்டு
பூரித்த வெண்ணீர்மையால்
எற்பட விளங்குகக னத்திலிமை யாவிழி
இசைந்து மேல் நோக்கம்உறலால்
இரவுபக லிருளான கனதந்தி படநூறி
இதயங் களித்திடுதலால்
பற்பல விதங்கொண்ட புலிகலையி னுரியது
படைத்துப்ர தாபமுறலால்
பனிவெயில்கள் புகுதாமல் நெடியவான் தொடர்
பருமர வனங்களாரும் (நெடிய
வெற்பினிடை யுறைதலால் தவராச சிங்கமென
மிக்கோ ருமைப்புகழ்வர்காண்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே

(பொ-ரை) வேதாந்த சித்தாந்தங்களின் கருத்தை ஒன்றாகப் பாவிக்குஞ் சிறந்த நிலையைப் பெற்ற ஞானத்தையுடைய சித்தர் கூட்டமே! கைகளிலுங் கால்களிலும் அழகோடு கூடிய கூர்மையாகிய நகத்தைப் பெற்றிருத்தலாலும், இடுப்பானது சுருங்கியிருத்தலாலும், அருளினால் விளங்குகின்ற திருநீற்றைத் தரித்து நிறைந்த வெள்ளிய நிறத்தையுடைய தன்மையாலும், பிரகாசமுண்டாக விளங்குகின்ற ஆகாயத்தில் இமையாத கண்களைப் பொருந்தி மேற்பார்வையை யடைந்திருத்தலாலும், இராப்பகலும் பாசவிருளாகிய பெரிய யானையானது இறக்கும் படி யழித்து மனமகிழ்ச்சியடைதலாலும், பலவகையான தன்மையைப் பெற்ற புலித்தோலையும், மான்தோலையும், ஆசனங்களாகப் பெற்றுப் பிரதாப மடைந்திருத்தலாலும், பனியும், வெயிலும் நுழையாதபடி ஆகாயமளாவிய நீண்ட பருத்த மரங்களடர்ந்த நிறைந்த காட்டையுடைய மலைகளிற் சஞ்சரித்தலாலும், உம்மைத் தவராஜசிங்கம் என்று பெரியோர்கள் புகழ்ந்து கூறுவார்கள்.(எ-று)

இச்செய்யுள் சித்தார்களுக்குஞ் சிங்கத்திற்கும் உவமையாகக் கூறப் பட்டதாகலான், சிங்கத்தின் குணங்களுக்கேற்பக் கூறிக் கொள்க.

போந்திடையொடுக்க முறலால் என்றதற்கு= ஓரிடத்திற்போ யொடுங்குதலாலும் எனப்பொருள் கொள்ளலுமொன்று. *(9)*

66. கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
கற்றும் அறி வில்லாதஎன்
கர்மத்தை யென்சொல்கேன் மதியையென் சொல்லு
கைவல்ய ஞானநீதி (கேன்
நல்லோ ருரைக்கீலோ கர்மமுக் கியமென்று
நாட்டுவேன் கர்மமொருவன்
நாட்டினா லோபழைய ஞானமுக் கியமென்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லா னொருத்தன்வர வுந்த்ரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்
வல்லதமி ழறிஞர்வரின் அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிதுபுகல்வேன்

வெல்லாம லெவரையும் மருட்டிவிட வகைவந்த
வித்தையென் முத்திதருமோ
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே.

(பொ-ரை) வேதாந்த சித்தாந்தங்களின் கருத்தை ஒன்றாகப் பாவிக்குஞ் சிறந்த நிலையைப் பெற்ற ஞானத்தை யுடைய சித்தர் கூட்டமே! கல்வியைக் கல்லாதவர்களே மிகவும் நல்லவர்களாவார்கள் (ஏனெனில்) கல்வியைக் கற்றும் அறிவில்லாத என் கருமத்தை என்ன சொல்லுவேன், புத்தியை என்ன சொல்லுவேன்? நல்லோர்கள் கைவல்யமாகும் ஞான நீதியைச் சொன்னால், கர்மமே முக்கியமானதென்று நிலை நிறுத்துவேன்; ஒருவன் கருமத்தை நிலைநிறுத்தினால் ஞானமே முக்கியமென்று சொல்லுவேன்; வடமொழியில் வல்லவனான ஒருவன் வார்த்தை சொல்ல வந்தால் அவனிடத்தில் தமிழ்ப் பாஷையில் கைதேர்ந்தவன் போல் விவகாரஞ் செய்வேன்; தமிழ்ப் பாஷையில் வல்லமையுடைய அறிவாளர் வந்தால் அப்பொழுது சில வடமொழி வாக்கியங்களைச் சொல்லுவேன்; எவரையுங் கிரமமாய் ஜெயிக்காமல் அக்கிரமமாய் மயக்கிவிடுவம்படியான விதத்தைக் கொடுத்த வித்தையானது என்ன பிரயோசனத்தைக் கொடுக்கும்? மோட்சத்தைக் கொடுக்குமோ? கொடாது (எ-று)

முதற்செய்யுளின் தலையில் இந்நூலாசிரியரது ஆசிரியர் திருமூலர் என்றுள்ளதைத் திருமூலர்மரபினர் என்றும், அவர் என்பதை அம்மூலர் எனவும் கொள்க. (10)

ஆனந்தமானபரம்

67. **கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்குமக்**
குணமொன்றும் ஒன்றிலேன்பால்
கோரமெத் தனைபட்ச பாதமெத் தனைவன்
குணங்களெத் தனைகொடியபாழ்ங்
கல்லாமை யெத்தனை யகந்தையெத் தனைமனக்
கள்ளமெத் தனையுள்ளசற்
காரியஞ் சொல்லிடினும் அறியாமை யெத்தனை
கதிக்கென் றமைத்தஅருளில்
செல்லாமை யெத்தனை விர்தாகோட்டி யென்னிலோ
செல்வதெத் தனைமுயற்சி

சிந்தையெத் தனைசலனம் இந்த்ரசா லம்போன்ற
தேகத்தில் வாஞ்சைமுதலாய்
அல்லாமை யெத்தனை யமைத்தனை யுனக்கடிமை
யானேன் இவைக்கும்ஆளோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

(பொ-ரை) உள்ளண்டங்களும், வெளியண்டங்களும் அடங்கும்படி ஒப்பற்ற பரிபூரணமாகி இன்பரூபமான பரம்பொருளே! ஒருயிரையுங் கொல்லாமைக் குணமானது எத்தனைத் துர்க்குணங்களை நீக்கும். அக்கொல்லாமைக் குணமானது சிறிதும் பொருந்ாதவனாகிய என்னிடத்தில், எத்தனை கோரமான செய்கைகள், எத்தனை பட்சபாதங்கள், எத்தனை வலியகுணங்கள், எத்தனை 'கொடிய பாழாகிய கல்லாமைக் குணங்கள், எத்தனை அகங்காரகுணங்கள், எத்தனை மனக்குற்றங்கள் உள்ளதாகிய சற்காரியத்தைச் சொன்னாலும் அறியாத குணங்கள் எத்தனை, மோட்சத்திற் கென்றமைக்கப்பட்ட கருணையிற் செல்லாத குணங்கள் எத்தனை, பிரயோசனமில்லாத கூட்டமென்றால் அதிற்போகுங் குணங்கள் எத்தனை, பிரயோசனமில்லாத பிரயத்தனத்திற் செல்லும் எண்ணங்கள் எத்தனை, இந்திரசாலத்திற் கொப்பாகிய உடம்பில் விருப்பம் முதலானவைகளாகத் தகாத குணங்கள் எத்தனை ஆகிய இவைகளையெல்லாம் அமர்த்தி வைத்தாய்; (ஆகையால்) உனக்கடிமையாகிய நான் இவைகளுக்கும் அடிமையோ, (எ - று) *(1)*

68. தெருளாகி மருளாகி யுழலுமன மாய்மனஞ்
சேர்ந்துவளர் சித்தாகிஅச்
சித்தெலாஞ் சூழ்ந்தசிவ சித்தாய் விசித்ரமாய்த்
திரமாகி நானாவிதப்
பொருளாகி மப்பொருளை யறிபொறியு மாகிஐம்
புலனுமாய் ஐம்பூதமாய்ப்
புறமுமாய் அகமுமாய்த் தூரஞ் சமீபமாய்ப்
போக்கொடு வரத்துமாகி
இருளாகி யொளியாகி நன்மைதீமையுமாகி
இன்றாகி நாளையாகி
என்றுமாய் ஒன்றுமாய்ப் பலவுமாய் யாவுமாய்
இவையல்ல வாயநின்னை

அருளாகி நின்றவர்க ளறிவதல் லாலொருவர்
அறிவதற் கெளிதாகுமோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

(பொ-ரை) உள்ளண்டங்களும் வெளியண்டங்களும் அடங்கும்படி ஒப்பற்ற பரிபூரணமாகி இன்பரூபமான பரம் பொருளே! தெளிவாகியும், மயக்கமாகியும், அலைகின்ற மனமாகியும், மனமானது கூடி விர்த்தி யடைதற்குரிய அறிவாகியும், அவ்வறிவுகளெல்லாஞ் சூழப்பெற்ற சிவஞானமாகியும், வினோதமாகியும், உறுதியாகியும், அநேக விதமான பொருள்களாகியும், அப்பொருள்களையெல்லாம் அறிகின்ற ஐம்பொறி களாகியும் ஐம்புலன்களாகியும், பஞ்சபூதங்களாகியும். வெளியாகியும், உள்ளாகியும், தூரமாகியும் சமீபமாகியும், செலவாகியும், வரவாகியும், இருளாகியும், ஒளியாகியும் நன்மையாகியும் தீமையாகியும், இன்றாகியும், நாளையாகியும் என்றுமாகியும் ஒன்றாகியும், பலவாகியும் எல்லாமாகியும், இவைகளல்லாத தாகியும் இருக்கின்ற உன்னை. உன் திருவருளோடு கூடிநின்ற பெரியோர் அறிவதேயல்லாமல், வேறொருவர் அறிந்து கொள்ள இலேசாகமோ. (எ-று) *(2)*

69\. மாறுபடு தர்க்கந் தொடுக்கஅறி வார்சாண்
வயிற்றின் பொருட்டதாக
மண்டலமும் விண்டலமும் ஒன்றாகி மனதுழல
மாலாகி நிற்கஅறிவார்
வேறுபடு வேடங்கள் கொள்ள அறி வாரொன்றை
மெணமெணென் றகம்வேறதாம்
வித்தையறி வார்எமைப் போலவே சத்தைபோல்
மெய்ந்நூல் விரிக்க அறிவார்
சீறுபுலி போற்சீறி மூச்சைப் பிடித்துவிழி
செக்கச் சிவக்கஅறிவார்
திரமென்று தந்தம் மதத்தையே தாமதச்
செய்கைகொடும் உளறஅறிவார்
ஆறுசம யங்கடொறும் வேறுவே றாகிவிளை
யாடுமுனை யாவரறிவார்
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே

(பொ-ரை) உள்ளண்டங்களும் வெளியண்டங்களும், அடங்கும்படி ஒப்பற்ற பரிபூரணமாகி இன்பரூபமான பரம் பொருளே! சாண் வயிற்றின் பொருட்டாக மாறுபடும்படியான தர்க்கவாதஞ் செய்ய அறிவார்கள், பூலோகமும், தேவலோகமும் ஒன்றாக நினைத்து மனமலையும்படி மயக்கமடைந்திருக்க வறிவார்கள். வேறாகிய வேஷங்களைத் தாங்க அறிவார்கள். ஒன்றை மெணமெணென்று (மந்திரோச்சாடனஞ் செய்வது போல்) உச்சரித்து மனத்தை வேறொன்றின் மேல் வைக்கும் வித்தையை அறிவார்கள், எம்மைப்போல சந்தைகூடிப் பொருள்களைப் பரப்புவது போல் உண்மை நூற் பொருள் களைப்பரப்ப அறிவார்கள், சீறுகின்ற புலியைப்போல் இறுமாந்து மூச்சையடக்கிக் கண்கள் சிவக்கும் (வித்தையை) அறிவார்கள். தங்கள் தங்கள் மதங்களையே உறுதியானவை களென்று அவைகளை எடுத்துப்பேசி தாமசத் தொழிலி னால் உளறவறிவார்கள். ஆறு சமயங்களிலும் வேறு வேறாகத் திருமேனி தாங்கித் திருவிளையாடல் செய்கின்ற உன்னை யார்தாம் அறிவார்கள். (எ-று)

ஆறுசமயங்கள் என்றது புறச் சமயமன்று, அகச் சமயங்களே அவையாவன:- சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் இவற்றில் வேறுவேறாக விளையாடுதல்:- சைவர்க்குத் தாண்டவ பூஷணனென்னும் மூர்த்தியாயும், பாசுபதர்க்குத் திருநீறுஞ் சடையுந் தரித்த மூர்த்தியாயும், மாவிரதர்க்கு என்புமாலை தரித்த மூர்த்தியாயும், காளா முகர்க்குப் படிகம் புத்திர தீபமணிகள் தரித்த மூத்தியாயும், வாமருக்கு அக்கினியும் உபவீதமுந் தரித்த மூர்த்தியாயும், வைரவருக்குத் தமருகமுஞ் சிலம்புந் தரித்த மூர்த்தியாயும், விளையாடுதல் எனக் கொள்க. (3)

70. காயிலை யுதிர்ந்தகனி சருகுபுனல் மண்டிய
கடும்பசி தனக்கடைத்துங்
கார்வரையின் முழையிற் கருங்கல்போ லசையாது
கண்மூடி நெடிதிருந்தும்.
தீயினிடை வைகியுந் தோயமதில் மூழ்கியுந்
தேகங்கள் என்பெலும்பாய்த்
தெரியநின் றுஞ்சென்னி மயிர்கள்கூ டாக்குருவி
தெற்றவெயி லூடிருந்தும்
வாயுவை யடக்கியு மனதினை யடக்கியு

மௌனத்தி லேயிருந்தும்
மதிமண்ட லத்திலே கனல்செல்ல அமுதுண்டு
வனமூ டிருந்தும் அறிஞர்
ஆயுமறை முடிவான அருள்நாடி னாரடிமை
அகிலத்தை நாடல்முறையோ
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

(பொ-ரை) உள்ளண்டங்களும் வெளியண்டங்களும், அடங்கும்படி ஒப்பற்ற பரிபூரணமாகி இன்பரூபமான பரம் பொருளே! உதிர்த்த காய்கள் இலைகள், பழங்கள், உலர்ந்த இலைகள், நீர், ஆகிய இவைகளை மிகுந்த வலிய பசிக்கடைத்தும், கறுத்த மலைகளின் குகையில் கருங்கல்லைப்போல் அசையாமல் பலநாள் கண்களை மூடியிருந்தும், அக்கினியின் மத்தியி லிருந்தும், தீர்த்த ஸ்நானஞ் செய்தும், உடம்பு எலும்பெலும்பாய்த் தெரியும்படி இளைத்திருந்தும் தலையிலுள்ள மயிர்களைக் குருவிகள் கூடாக நினைத்துக் கொண்டலைக்கும்படி வெயிலிலிருந்தும், மூச்சையடக்கியும், மௌனத்தி லிருந்தும் மூலாக்கினியானது சந்திரமண்டலத்திற் செல்லுதலா லுண்டாகும் அமிர்தத்தையுண்டு காட்டிலிருந்தும், அறிவுடையோர் ஆராய்கின்ற வேதாந்தத்திற் சித்தாந்தப்படுத்தப் பட்ட அருளை விரும்பினார்கள், அடிமையாகிய நான் உலகவழியை விரும்புவது தகுதியாகுமோ? (எ-று) *(4)*

71. **சுத்தமும் அசுத்தமுந் துக்கசுக பேதமுந்**
தொந்தமுடன் நிர்த்தொந்தமும்
தூலமொடு சூக்குமமும் ஆசையும் நிராசையுஞ்
சொல்லுமொரு சொல்லின் முடிவும்
பெத்தமொடு முத்தியும் பாவமொ டபாவமும்
பேதமோ டபேதநிலையும்
பெருமையொடு சிறுமையும் அருமையுடன் எளிமையும்
பெண்ணினுடன் ஆணும்மற்றும்
நித்தமும் அநித்தமும் அஞ்சனநி ரஞ்சனமும்
நிட்களமும் நிகழ்சகளமும்
நீதியும் அநீதியும் ஆதியொட நாதியும்
நிர்விடய விடயவடிவும்

அத்தனையும் நீயலதென் அத்தனையும் இல்லையெனில்
யாங்களுனை யன்றியுண்டோ
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

(பொ-ரை) உள்ளண்டங்களும், வெளியண்டங்களும், அடங்கும்படி ஒப்பற்ற பரிபூரணமாகி இன்பரூபமான பரம்பொருளே! சுத்தா சுத்தங்களும், துக்கசுக விகற்பங்களும், சம்பந்தா சம்பந்தங்களும், ஸ்தூலமும், சூட்சமமும், ஆசையும், ஆசையில்லாமையும், உபதேசிக்கின்ற ஒருமொழியின் முடிவும், பந்தமும், மோட்சமும், பாவமும், பாவமில்லாமையும் பேதநிலையும், அபேதநிலையும், பெருமையும், சிறுமையும், கஷ்டமும், இலேசும், பெண்ணும், ஆணும், இன்னும் அழியாமையும், அழிவும், தோஷமும், தோஷமில்லாமையும், நிஷ்களமும், நடக்கின்ற சகலமும், நியாயமும், அநியாயமும் ஆதியும் அநாதியும், விஷயமில்லாமையாகிய ரூபமும், விஷயமாகிய ரூபமும், ஆகிய எல்லாம் நீயல்லாமல் சிறிது மில்லையானால் நாங்களும் உன்னையல்லாமல் (வேறாக) உளோமோ? இல்லை. (எ-று)

நிஷ்களம்=கலைக்கு அதீதப்பட்டது. சகளம் = கலையோடு கூடினது. *(5)*

72. **காராரும் ஆணவக் காட்டைக் களைந்தறக்**
கண்டகங் காரமென்னுங்
கல்லைப் பிளந்துநெஞ் சகமான பூமிவெளி
காணத் திருத்திமேன்மேல்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சியது பயிராகு மட்டுமா மாயைவன்
பறவையணு காதவண்ணம்
நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்டமெய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே
நின்னருட் பாரமென்றும்
ஆராரும் அறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

(பொ-ரை) எப்பொழுதும் எப்படிப்பட்ட பெரியோர்களாலும் அறியப்படாத அந்தரங்கமான சிதாகாயத்தில்

வெளிப்படையாய்த் தோன்றுகின்ற துரிய ரூபமே! உள்ளண்டங்களும், வெளியண்டங்களும் அடங்கும்படி ஒப்பற்ற பரிபூரணமாகி இன்பரூபமான பரம் பொருளே! நிறைந்த இருளாகிய ஆணவக் காட்டைப் பறித்து வெளியாக்கி, அகங்கார மென்கிற கல்லைப் பிளந்து மனமாகிய நிலமானது வெளியாகும்படி திருத்தி, மேலும் மேலும் உலகத்திலுள்ளோர் முதலியோர்களால் அறியப் படாத மௌனமாகிய விதையை விதைத்து அன்பாகிய நீரை இரைத்து, அது பயிராகுமளவும் பெரியமாயையாகிய வலிய பறவை வந்து சேர்ந்து அழிக்காதவகை செவ்வையாய் நின்று காத்து, அந்நிலத்தில் விளைந்த சிவபோகத்தைப் புசித்து உயிர்வாழ்ந்த உன்னுடைய அன்பர் கூட்டத்திற் சேரும்படியாக என்னுடைய எண்ணத்தின்படி நீ எனக்கு எதிர்நின்று. காப்பாற்றுவதே உன்னுடைய அருட் கடமையாம். (எ-று) *(6)*

73. வானாதி பூதமாய் அகிலாண்ட கோடியாய்
மலையாகி வளைகடலுமாய்
மதியாகி இரவியாய் மற்றுள எலாமாகி
வான்கருணை வெள்ளமாகி
நானாகி நின்றவனு நீயாகி நின்றிடவு
நானென்ப தற்றிடாதே
நான்நான் எனக்குளறி நானா விகாரியாய்
நானறிந் தறியாமையாய்ப்
போனால் அதிட்ட வலி வெல்லஎளி தோபகல்
பொழுதுபுகு முன்கண் மூடிப்
பொய்த்துயில்கொள் வான்தனை எழுப்பவசமோ
போதிப்ப தெந்தநெறியை (இனிப்
ஆனாலும் என் கொடுமை அநியாயம் அநியாயம்
ஆர்பால் எடுத்துமொழிவேன்
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

(பொ-ரை) உள்ளண்டங்களும், வெளியண்டங்களும் அடங்கும்படி ஒப்பற்ற பரிபூரணமாகி இன்பரூபமான பரம் பொருளே! ஆகாயமுதலிய ஐம்பூதங்களாகியும், எல்லா அண்டகோடிகளாகியும், மலைகளாகியும், சூழ்ந்த கடல் களாகியும், சந்திரனாகியும், சூரியனாகியும், இன்னுமள்ள எல்லாப் பொருள்களாகியும், உயர்ந்த கருணை

வெள்ளமாகியும், நானாகி நின்றவனும் நீயாகி நிற்கவும் நானென்னும் அகங்காரம் நீங்காமல் 'நான் நான்' என்று குளறிப் பலவகைப்பட்ட விகார குணமுள்ளவனாகியும் நானறிந்தும் அறியாமையுள்ள வனாகியும் (மனஞ்செல்லும் வழியிற்) சென்றால், என்னுடைய அதிர்ஷ்ட பலத்தை வெல்லுதற்கிலேசாகுமோ அஸ்தமிக்கு முன்னமே கண்களை மூடிக்கொண்டு பொய்ந் நித்திரை செய்பவனைத் துயிலினின்றும் நீக்கமுடியுமோ; இனி எந்த வழியைப் போதிப்பது? ஆனாலும் என்னுடைய கொடுமை மிகவும் அநியாயமே. ஆகையால் அதை நான் (உன்னையன்றி வேறு) யாரிடத்தில் எடுத்துச் சொல்லுவேன். (எ-று) (7)

74. **பொய்யினேன் புலையினேன் கொலையினேன் நின்னருள்**
புலப்பட அறிந்துநிலையாப்
புன்மையேன் கல்லாத தன்மையேன் நன்மைபோல்
பொருளலாப் பொருளை நாடும்
வெய்யனேன் வெகுளியேன் வெறியனேன் சிறியனேன்
வினையினேன் என்றென்னை நீ
விட்டுவிட நினைவையேல் தட்டழிவ தல்லாது
வேறுகதி யேதுபுகலாய்
துய்யனே மெய்யனே உயிரினுக் குயிரான
துணைவனே யிணையொன்றிலாத்
துரியனே துரியமுங் காணா அதீதனே
சுருதிமுடி மீதிருந்த
ஐயனே அப்பனே எனும்அறிஞர் அறிவைவிட்
டகலாத கருணைவடிவே
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

(பொ-ரை) பரிசுத்தமானவனே! உண்மையானவனே! உயிர்க்குயிரான துணைவனே! ஒப்பில்லாத துரியரூபனே! துரியாதீதனே! வேதாந்தத்தி லிருக்குந் தலைவனே! அப்பனே! என்று துதிக்கும் அறிவுடையோரது அறிவைவிட்டு நீங்காத கருணையே வடிவமானவனே! உள்ளண்டங்களும், வெளியண்டங்களும் அடங்கும்படி ஒப்பற்ற பரிபூரணமாகி இன்ப ரூபமான பரம்பொருளே! பொய்யையுடையேன், புலாலுண்டலை யுடையேன், கொல்லுந் தொழிலை யுடையேன், உன்னுடைய திருவருளை வெளிப்படை யாக அறிந்தும், அவ்வருளில் நிலைபெற்றிராத

அற்பகுணத்தை யுடையேன், கல்விகளைக் கல்லாத குணத்தை யுடையேன், நற்பொருள் களல்லாத பொருள் களை விரும்பும் கொடியனேன். கோபத்தையுடையேன், பயித்தியத்தை யுடையேன், சிறியனேன், தீவினைகளை யுடையேன், என்று நீ என்னைக் கைவிட்டுவிட எண்ணுவையாயின் தடுமாறி யழிவதே யல்லாமல் எனக்கு வேறுகதி யாது சொல்லாய். (எ-று) (8)

75. **எத்தனை விதங்கள்தான் கற்கினுங் கேட்கினும்என்**
இதயமும் ஒடுங்கவில்லை
யானெனும் அகந்தைதான் எள்ளளவு மாறவிலை
யாதினும் அபிமானம்என்
சித்தமிசை குடிகொண்ட தீகையொ டிரக்கமென்
சென்மத்து நானறிகிலேன்
சீலமொடு தவவிரதம் ஒருகனவி லாயினுந்
தெரிசனங் கண்டும் அறியேன்
பொய்த்தமொழி யல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர்கேட்கவே
போதிப்ப தல்லாது சும்மா இருந்தருள்
பொருந்திடாப் பேதைநானே
அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
அவனிமிசை யுண்டோசொலாய்
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

(பொ-ரை) உள்ளண்டங்களும், வெளியண்டங்களும், அடங்கும்படி ஒப்பற்ற பரிபூரணமாகி இன்பரூபமான பரம் பொருளே! எவ்வளவு வகையாகக் கற்றாலுங் கேட்டாலும் என்னுடைய மனமும் ஒடுங்கவில்லை. நான் என்கிற அகங்காரமானது எள்ளளவானாலும் நீங்கவில்லை. எந்தப் பொருள்களின் மேலும் அபிமானமானது என் மனத்திற் குடிகொண்டிருக்கிறது. கொடையையும், இரக்கத்தையும், நான் என்னுடைய சென்மத்தினின்று இதுகாறும் உணர்ந்திலேன். ஆசாரத்தையும், தவ விரதங்களையும், ஒரு கனவிலும் தெரிசனஞ் செய்து மறியேன். பொய் வார்த்தைகள் பேசுவதே யல்லாமல் மருந்துக் காயினும் ஒரு மெய்வார்த்தையைப் பேசேன். பிறர் கேட்கும் படி உபதேசிப்பதே யல்லாமல் சும்மா இருந்து திருவருளை யடையாத அறிவில்லாதவன் நானே. (ஆகையால் என்னைப்

போல்) அவ்வளவு குணங் கெட்டவர் களை, இவ்வுலகத்தின் கண் கண்டதாகவானாலும், கேட்ட தாக வானாலும், ஒரு பிரஸ்தாபம் உண்டோ? சொல்வாய்(எ-று) *(9)*

76. எக்கால முந்தனக் கென்னவொரு செயலிலா
ஏழைநீ என்றிருந்திட்
டெனதாவி யுடல்பொருளும் மௌனியாய் வந்துகை
ஏற்றுநம தென்ற அன்றே
பொய்க்கால தேசமும் பொய்ப்பொருளில் வாஞ்சையும்
பொய்யுடலை மெய்யென்னலும்
பொய்யுறவு பற்றலும் பொய்யாகு நானென்னல்
பொய்யினும் பொய்யாகையால்
மைகக லிருட்டனைய இருளில்லை இருவினைகள்
வந்தேற வழியுமில்லை
மனமில்லை யம்மனத் தினமில்லை வேறுமொரு
வரவில்லை போக்குமில்லை
அக்காலம் இக்கால மென்பதிலே எல்லாம்
அதீதமய மானதன்றோ
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

(பொ-ரை) உள்ளண்டங்களும் வெளியண்டங்களும், அடங்கும்படி ஒப்பற்ற பரிபூரணமாகி இன்பரூபமான பரம் பொருளே! மௌனகுருவாகி எழுந்தருளி வந்து நீ எக்காலத்திலும் ஒரு செய்கை செய்யத் தனக்கென்று சுதந்தர அறிவில்லாதவன் என்று உபதேசித்து என்னுடைய உடல், பொருள், ஆவி மூன்றையும் ஏற்றுக் கொண்டு (இவை) நம்முடையவை என்று உபதேசித்த அப்பொழுதே பொய் யாகிய காலமும், பொய்யாகிய தேசமும், பொய்ப்பொருளில் விருப்பமும், பொய்யாகிய உடம்பை மெய்யென்று நினைத்த லும், பொய்யுறவினரை மெய்யென்று கொள்ளலும், பொய் யாகவே முடியும். நான் என்று சொல்லுதல் பொய்யினும் பொய்யாகையால் (மிகவும் பொய்யாகையால்) மையைக் கக்குகின்ற இருளையொத்த இருளில்லை, நல்வினை தீவினைகள் வந்து சேர ஒரு மார்க்கமுமில்லை, மனமில்லை, அம்மனத்தில் இனமாகிய புத்தி, அகங்காரம், சித்தம் என்பனவுமில்லை. மற்றுமோர் வரவில்லை, செலவுமில்லை, அக்கால மென்பதும், இக்கால மென்பதும் இல்லை, யாவும் அதீதமயமானதல்லவோ. (எ-று) *(10)*

சுகவாரி

77. இன்னமுது கனிபாகு கற்கண்டு சீனிதேன்
எனருசித் திடவலியவந்
தின்பங்கொ டுத்தநினை எந்நோ நின்னன்பர்
இடையறா துருகிநாடி
உன்னிய கருத்தவிழ உரைகுளறி உடலெங்கும்
ஓய்ந்தயர்ந் தவசமாகி
உணர்வரிய பேரின்ப அநுபூதி உணர்விலே
உணர்வார்கள் உள்ளபடிகாண்
கன்னிகை யொருத்திசிற் றின்பம்வேம் பென்னினுங்
கைக்கொள்வள் பக்குவத்தில்
கணவனருள் பெறின்முனே சொன்னவா றென்
கருதிநகை யாவளதுபோல் (னெனக்
சொன்னபடி கேட்குமிப் பேதைக்கு நின் கருணை
தோற்றிற் சுகாரம்பமாஞ்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

(பொ-ரை) பரிசுத்தத்தையும் குணரகிதத்தையுமுடைய மேலான தெய்வமே! மேலான ஒளியே! ஆனந்தக் கடலே! இனிமையாகிய அமிர்தம் போலவும், மூன்றுகனிகள் போலவும் சர்க்கரைப் பாகுபோலவும், கற்கண்டு போலவும், சீனிசர்க்கரை போலவும், தேன்போலவும், இனிக்கும்படி தானே வலிய வந்து இன்பங் கொடுத்த உன்னை, உன்னுடைய அடியவர்கள் எக்காலத்திலும் இடையறாமல் விரும்பிக் கரைந்து, நினைத்தனமும் நெக்குவிடலால் வசனந் தடுமாறி, உடம்பெல்லாம் இளைத்துச் சோர்வடைந்து பரவசப்பட்டு நினைத்தற்கு அருமையான சிவாநுபூதியுணர்ச்சியால் யதார்த்தமாகவே அறிவார்கள். ஓர் இளம்பெண்ணானவள் தனக்குச் சிற்றின்பமானது வேம்பென்று சொல்வளாயினும் அவளது பருவத்தில் அச்சிற்றின்பத்தை அநுபவிப்பவள். இவள் கணவனருளைப் பெற்று வாழுநாட்களில் நீ இக்கணவனோடு கூடி வாழாத இளமையில் சொன்ன விதம் எப்படி யாயிற்றென்று வினாவ, அதை நினைத்து நகைப்பாள், அதுபோலவே சொன்னபடி கேட்கின்ற இந்த அறிவில்லாதவனுக்கும் உன்னுடைய திருவருளுதயமாயின் ஆனந்தமும் உதயமாகும். (எ-று)

பருவம் வராத கன்னிகைக்குச் சிற்றின்பம் வேம்பு போற்கைப் பாயிருத்தும் பருவம் வந்த காலத்தில் இனிப்பா யிருப்பது போல உன் திருவருளைப் பெறாத எனக்குப் பேரின்பம் கைப்பாகவும் அதைப் பெற்ற அன்பர்களுக்கு இனிப்பாகவுமிருக்கும் எனக் கொள்க. (1)

78. அன்பின்வழி யறியாத என்னைத் தொடர்ந்தென்னை
அறியாத பக்குவத்தே
ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்துதான்
அற்றேன் அலந்தேன்என
என்புலன் மயங்கவே பித்தேற்றி விட்டாய்
இரங்கியொரு வழியாயினும்
இன்பவெள மாகவந் துள்ளங் களிக்கவே
எனை நீ கலந்ததுண்டோ
தன் பருவ மலருக்கு மணமுண்டு வண்டுண்டு
தண்முகை தனக்குமுண்டோ
தமியனேற் கிவ்வணந் திருவுள மிரங்காத
தன்மையால் தனியிருந்து
துன்பமுறி னெங்ஙனே யழியாத நின்னன்பர்
சுகம்வந்து வாய்க்கும் உரையாய்
சுத்த நிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

(பொ-ரை) பரிசுத்தத்தையுங் குணரகிதத்தையுமுடைய மேலான தெய்வமே! மேலான ஒளியே! ஆனந்தக் கடலே! அன்பினது வழியையறியாத என்னைப்பற்றி என்னை யறியாத பருவத்திற்றானே;ஆசையாகிய வெள்ளத்தைப் பெருகச் செய்து நான் கெட்டேன். இளைத்தேன் என்று சொல்லும்விதம் என்னறிவு மயக்கத்தை யடையும்படி பயித்தியமேற்றி விட்டாய், என்மீது ஒருதரமாயினும் இரங்கி, ஆனந்தப் பெருக்காக எழுந்தருளிவந்து, நான் மனமகிழ்ச்சி அடையும்படி என்னை நீ கூடினதுண்டோ? இல்லை. (ஏனெனில்) தன்னுடைய பருவகாலத்தை அடைந்த புஷ்பங்களுக்கு வாசனையுண்டு, வண்டு சூழ்தலுண்டு, குளிர்ந்த அரும்புகளுக்கு (அவ்விரண்டும்) உண்டாமோ? இல்லை, அதுபோன்ற அடியேனுக்கு இங்ஙனந் திருவுளமிரங்காத தன்மையால் நான் தனியாயிருந்து துன்பப்பட்டால், நித்தியமான உன்னுடைய அடியார்களால்

அநுபவிக்கப்படுஞ் சுகம் எப்படி வந்து கிடைக்குஞ் சொல்வாய், (எ-று). *(2)*

79. கல்லேனும் ஐயவொரு காலத்தில் உருகுமென்
கல்நெஞ்சம் உருகவிலையே
கருணைக் கிணங்காத வன்மையையும் நான்முகன்
கற்பிக்க வொருகடவுளோ
வல்லான் வகுத்ததே வாய்க்கா லெனும்பெரு
வழக்குக் கிழுக்குமுண்டோ
வானமாய் நின்றின்ப மழையா யிறங்கிஎனை
வாழ்விப்ப துன்பரங்காண்
பொல்லாத சேயெனில் தாய் நள்ளல் நீதமோ
புகலிடம் பிறிதுமுண்டோ
பொய்வார்த்தை சொல்லிலோ திருவருட் கயலுமாய்ப்
புன்மையே னாவனந்தோ
சொல்லால் முழக்கிலோ சுகமில்லை மௌனியாய்ச்
சும்மா இருக்க அருளாய்
சுத்தநிர்த் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

(பொ-ரை) பரிசுத்தத்தையுங் குணரகிதத்தையுமுடைய மேலான தெய்வமே! மேலான ஒளியே! ஆனந்தக் கடலே! கல்லானாலும் ஒருகாலத்தில் உருகா நிற்கும், என்னுடைய கன்னெஞ்சமானது (அங்ஙனங்கூட) உருகவில்லையே, பிரமன் திருவருள் கிடைத்தற்குக் காரணமாக இணங்கி யுருகாத மன வன்மையையும் படைக்க ஒரு தெய்வமோ? வல்லவன் வகுத்ததேவாய்க்காலாகும் என்கிற பெரிய வழக்கத்துக்குக் குற்றமுண்டோ? பரமாகாயமாயிருந்து ஆனந்த மழையாக இறங்கிவந்து என்னைத் (திருவருட் கிலக்காய்) வாழச் செய்வது உன்னுடைய பாரமாகும். (ஏனெனில்) பொல்லாத பிள்ளையானால் தாய் நீக்கி விடுதல் நீதியாகுமோ, அடைக்கலமாக அடைதற்குரிய இடம் வேறுண்டோ? சிறியேனாகிய நான் பொய் பேசினால் திருவருளுக்குப் பாத்திரனாகாமற் போவேன் ஐயோ! சொல்லால் கோஷித்தால் இன்பமில்லை. மௌநியாகிச் சும்மா இருக்கும்படி திருவருள் செய்வாய்.(எ-று)

பிள்ளைபெற்ற வருத்தத்தைத் தாயொருத்தியே அறிவளாகலான், 'பொல்லாத சேயெனிற் றாய் தள்ளனீதமோ' என்றனர். *(3)*

80. என்பெலாம் நெக்குடைய ரோமஞ் சிலிர்ப்ப உடல்
இளகமன தழலின்மெழுகாய்
இடையறா துருகவரு மழைபோ லிரங்கியே
இருவிழிகள் நீரி றைப்ப
அன்பினால் மூர்ச்சித்த அன்பருக் கங்ஙனே
அமிர்தசஞ் சீவிபோல்வந்
தான ந்த மழைபொழிவை உள்ளன்பி லாதஎனை
யார்க்காக அடிமைகொண்டாய்
புன்புலால் மயிர்தோல் நரம்பென்பு மொய்த்திடு
புலைக்குடிலில் அருவருப்புப்
பொய்யல்ல வேஇதனை மெய்யென்று நம்பிஎன்
புந்திசெலு மோபாழிலே
துன்பமா யலையவோ உலகநடை ஐயவொரு
சொப்பனத் திலும்வேண்டிலேன்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

(பொ-ரை) பரிசுத்தத்தயுங் குணரகிதத்தையுமுடைய மேலான தெய்வமே! மேலான ஒளியே! ஆனந்தக் கடலே! எலும்புகளெல்லாம் நெக்குவிட் டுடையவும், உரோமஞ் சிலிர்க்கவும், உடம்பு இளகவும், மனமானது நெருப்பிலிட்ட மெழுகைப் போல் இடையறா துருகவும், இரண்டு கண்களும் வருகின்ற மழையைப் போல் இரங்கி நீர் சிந்தவும், அன்பின் மேலீட்டால் மூர்ச்சையான அடியார்களுக்கு அப்பொழுதே அமிர்தசஞ்சீவி போல் வந்து இன்பமழையைப் பொழிவாய், (அங்ஙனமாய்) மனத்தின்கண் அன்பில்லாத என்னை யார்க்காக அடிமை கொண்டாய். இழிந்த மாமிசம் மயிர், தோல், நரம்பு, எலும்பு, ஆகிய இலைகள் நெருங்கியிருக்கின்ற புலால் நாற்றம் பொருந்திய குடிசையாகிய தேகத்தில் அருவருப்பானது பொய்யல்ல. என் அறிவானது இதனை மெய்யென்று நம்பிகெட்ட வழியிற் செல்லுமோ? (அப்படி செல்வது) துன்பப்பட்டு அலையவோ? (ஆகையால்) ஐயனே! உலகநடைஎயை ஒரு கனவிலும் வேண்டேன்.(எ-று) (4)

81. வெந்நீர் பொறாதென்உடல் காலில்முள் தைக்கவும்
வெடுக்கென் றசைத்தெடுத்தால்
விழிஇமைத் தங்ஙனே தண்ணருளை நாடுவேன்
வேறொன்றை யொருவர்கொல்லின்

அந்நேரம் ஐயோஎன் முகம்வாடி நிற்பதுவும்
ஐய நின் னருள் அறியுமே.
ஆனாலும் மெத்தப் பயந்தவன் யான்என்னை
ஆண்டநீ கைவிடாதே
இந்நேர மென்றிலை உடற்சுமைய தாகவும்
எடுத்தா லிறக்க என்றே
எங்கெங்கு மொருதீர்வை யாயமுண் டாயினும்
இறைஞ்சு சுக ராதியான
தொன்னீமை யாளர்க்கு மானுடம் வகுத்த அருள்
துணையென்று நம்புகின்றேன்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

(பொ-ரை) பரிசுத்தத்தையுங் குணரகிதத்தைமுடைய மேலான தெய்வமே! மேலான ஒளியே! ஆனந்தக் கடலே! என்னுடைய உடம்பானது வெந்நீரைப் பொறுக்கமாட்டாது. காலில் முள்ளானது தைத்தால் அதை வெடுக்கென் றசைத்துப் பிடுங்கினால் (அதன் நோயைப் பொறாமல்) அப்பொழுதே கண்ணிமைத்து உன்னுடைய தண்ணியை திருவருளை விரும்புவேன். வேறோருயிரை ஒருவர் கொன்றால் அந்தச் சமயத்தில், அந்தோ! என் முகமானது வாடி நிற்குந் தன்மையையும், ஐயனே! உன்னுடைய திருவருள் உணருமோ, ஆனாலும் நான் மிகவும் பயந்தவன் (ஆகையால்) அடிமை கொண்ட நீ என்னைக் கை விட்டுவிடாதே, உடம்பினது பாரமானது (விழுந்துவிட) இந்தக் காலமென்கிற ஒரு நியதியில்லை. ஆனால் உடம்பெடுத்தால் இறக்கவென்றே எவ்விடத்திலும் ஒரு தீர்ப்பாகிய நியாய முண்டு. (அங்ஙன)மானாலும் உன்னைத் தொழுகின்ற சுகமுனிவர் முதலான பழைய குணமுள்ளவர்க்கு மானிட சரீரத்தைக் கொடுத்த திருவருளே, துணையென்று நம்புகின்றேன். (எ-று)

"கருவினி லழிவ தாயுங் கழிந்திடா தழிவ தாயும்
பரிணமித் தழிவ தாயும் பாலனா யழிவ தாயுந்
தருணனா யழிவ தாயுந் தானரைத் தழிவ தாயும்
உருவமே யழிவே யானாலுள்ளபோ தேபா ருய்ய"

என்றாராகலின் 'இந்நேரமென்றிலை யுடற்சுமை' எனக் கூறினார். *(5)*

82. பற்றுவன அற்றிடு நிராசையென் றொருபூமி
பற்றிப் பிடிக்கும்யோகப்
பாங்கிற் பிராணலயம் என்னுமொரு பூமி இவை
பற்றின்மன மறும்என்னவே
கற்றை பஞ் சடைமௌனி தானே கனிந்தகனி
கனிவிக்க வந்தகனிபோல்
கண்டதிந் நெறியெனத் திருவுளக் கனிவினொடு
கனிவாய் திறந்தும் ஒன்றைப்
பெற்றவனு மல்லேன் பெறா தவனு மல்லேன்
பெருக்கத் தவித்துளறியே
பெண்ணீர்மை என்னஇரு கண்ணீ ரிறைத்துநான்
பேய்போ லிருக்கஉலகஞ்
சுற்றிநகை செய்யவே யுலையவிட் டாயெனில்
சொல்ல இனி வாயு முண்டோ
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

(பொ-ரை) பரிசுத்தத்தையுங் குணரகிதத்தையுமுடைய மேலான தெய்வமே! மேலான ஒளியே! ஆனந்தக் கடலே! பொறிகளாற் பிடிக்கப்படுகின்ற விஷயங்களெல்லாம் நீங்குவதற் கேதுவாகிய ஆசையில்லாமையென்று சொல்லப் பட்ட ஒரு பூமியுண்டு; பொறிகளை விஷயங்களிற் செல்லா தபடி பற்றிப் பிடிக்கும் யோகப் பகுப்பினால் நிறுத்து கின்ற பிராணவாயுவின் ஒடுக்கம் என்கிற ஒரு பூமியுண்டு; இவ்விரண்டையும் ஆதாரமாகப் பிடித்துக் கொண்டால் மனமிறங்குமென்று, அழகிய சடைக் கற்றையையுடைய மௌன குருவானவர் தானாகவே முதிர்ந்த காயைப் பழுப்பிக்க உண்டான பழம் போல் கண்களுக்கு நேராகக் கண்டது இம்மார்க்கமாம் என்று மன மிரக்கத்துடன் கனிவாய்த் திறந்தாயினும் ஒரு சொல்லைச் சொல்ல அதை அடைந்தவனு மல்லேன்; அடையாதவனு மல்லேன்; மிகவுந் தவித்துக் குளறிப் பெண்களின் குணம்போல இரண்டு கண் களினின்றும் நீரைச் சிந்தி நான் பிசாசைப் போலிருக்க, உலகத்தார் சூழ்ந்து சிரிக்கும்படி அலையவிட்டா யானால் இனிச் சொல்வதற்கு (அடியேனாகிய எனக்கு) வாயுமுண்டோ? (எ-று) (6)

83. அரும்பொனே மணியேஎன் அன்பேஎன் அன்பான
அறிவேஎன் அறிவிலூறும்

ஆனந்த வெள்ளமே என்றென்று பாடினேன்
ஆடினேன் நாடிநாடி
விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி எனஎனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தேனியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வ னானாலும் உனை
இடைவிட்டு நின்றதுண்டோ
என்றுநீ யன்றுநான் உன்னடிமை யல்லவோ
யாதேனும் அறியாவெறுந்
துரும்பனேன் என்னினுங் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

(பொ-ரை) பரிசுத்தத்தையுங் குணரகித்தையுமுடைய மேலான தெய்வமே! மேலான ஒளியே! ஆனந்தக் கடலே! அருமையாகிய பொன்னே! மாணிக்கமே! என்னுடைய அன்பே! என்னுடைய அன்பினாலுண்டான அறிவே! என்னுடைய அறிவில் சுரக்கின்ற இன்பப் பெருக்கே! என்று எக்காலமுந் துதித்துப் பாடினேன்; கூத்தாடினேன்; மிகவுந் தேடி விரும்பிக் கூவினேன்; கோபித்துக் கொண்டேன்; அழுதேன்; உடல் சிலிர்த்து இரண்டு கைகளையுங் குவித்து மேகத்தினின்று பொழியும் மழைபோல என்னுடைய இரண்டு கண்களும் நீரைச்சிந்த நான் மனமிளகி அயர்ந்தேன்; இரும்புக்கொப்பான மனத்தினையுடைய திருடனானாலும், கொஞ்சமாயினும் உன்னை நினையாமலிருந்த துண்டோ? நீ எப்பொழுது இருந்தாயோ; அப்பொழுதே நானுமிருந்தேன். ஆகையால் நான் உன்னுடைய அடியவன் அல்லவோ? யாதொரு காரியத்தையும் உணராத வெறுந் துரும்புக்கு நிகரானவனாயினுங் கைவிட்டு விடுதல் நியாயமோ, உன்னுடைய அடியார்களோடு என்னையுஞ் சேர்த்து விடுவாய். (7)

84. பாராதி அண்டங்கள் அத்தனையும் வைக்கின்ற
பரவெளியி னுண்மைகாட்டிப்
பற்றுமன வெளிகாட்டி மனவெளியி னில்தோய்ந்த
பாவியேன் பரிசுகாட்டித்

தாராள மாய்நிற்க நிர்ச்சிந்தை காட்டிச்
சதாகால நிட்டை எனவே
சகசநிலை காட்டினை சுகாதீத நிலையந்
தனைக்காட்ட நாள்செல்லுமோ
காரார எண்ணரும் அனந்தகோ டிகள்நின்று
காலூன்றி மழைபொழி தல்போல்
கால்வீசி மின்னிப் படர்ந்துபர வெளியெலாங்
கம்மியா னந்தவெள்ளஞ்
சோராது பொழியவே கருணையின் முழங்கியே
தொண்டரைக் கூவுமுகிலே
சுத்தநீர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

(பொ-ரை) எண்ணுதற்கு அருமையான அநேக மேகங்கள் நிறைந்து நின்று மழை பொழிவதுபோல், காற்றைவீசி மின்னி, எங்கும் பரந்து, பரமாகாயமெல்லாங் கவிந்து இடைவிடாமல் ஆனந்த வெள்ளைத்தைப் பொழியும் பொருட்டு அருளுடன் சோஷித்து அடியார்களை அழைக்கின்ற மேகமே! பரிசுத்தத்தையுங் குணரகித்தை யுமுடையமேலான தெய்வமே! மேலான ஒளியே! ஆனந்தக் கடலே! பூமி முதலிய எல்லா அண்டங்களையும் அடக்கி வைக்கின்ற பரமாகாயத்தின் உண்மையைக் காட்டி, தொடர்கின்ற மனமாகிய ஆகாயத்தைக் காட்டி, அந்த மனமாகிய ஆகாயத்திற் படிந்த பாவியாகிய என்னுடைய குணத்தைக் காட்டி, தாராளமாயிருந்த மனமறுதலைக் காட்டி, இதுவே சதாகால நிட்டையாகுமென்று சகச நிலையைக் காட்டி அருளினாய்,(இன்னும்) இன்பாதீதமாகிய நிலையைக் காட்ட நாள் செல்லுமோ? (எ-று) (8)

85. **பேதித்த சமயமோ ஒன்றுசொன படியொன்று**
பேசாது துறவாகியே
பேசாத பெரியோர்கள் நிருவிகற் பத்தினால்
பேசார்கள் பரமகுருவாய்ப்
போதிக்கும் முக்கண்இறை நேர்மையாய்க் கைக்கொண்டு
போதிப்ப தாச்சறிவிலே
போக்குவர வறஇன்ப நீக்கமற வசனமாப்
போதிப்ப தெவரையனே
சாதித்த சாதனமும் யோகியர்கள் நமதென்று
சங்கிப்ப ராதலாலே

தன்னிலே தானா யயர்ந்துவிடு வோமெனத்
தனியிருந் திடினங்ஙனே
சாதிக்க மனமாயை தனை ஏவி னாலடிமை
சுகமாவ தெப்படிசொலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

(பொ-ரை) பரிசுத்தத்தையுங் குணரகிதத்தையுமுடைய மேலான தெய்வமே! மேலான ஒளியே! ஆனந்தக் கடலே! ஒன்றற்கொன்று வித்தியாசப்பட்ட சமயங்களைச் சொல்லும் நூற்களோ, ஒன்று சொன்னபடி ஒன்று சொல்லாது. (ஆகையால்) துறவறம் பூண்டு பேசா நெறியில் நின்ற பெரியோர்கள், நிருவிகற்ப ஞானாநுபவத்தாற் பேசாத மௌனிகளாவார்கள். போதிக்கிற மூன்று கண்களையுடைய இறைவன் பரமாசிரியனாய் எழுந் தருளிவந்து நன்றாக என்னை அடிமைப்படுத்திக் கொண்டு உபதேசிப்ப தாயிற்று. என்றும் நீங்காமலும் இடையறாமல் ஆனந்தமுண்டாகவும், இதை வசனமாகப் போதிப்பதற்கு யாரால் ஆகும். ஐயனே! யோகிகளாயுள்ளவர்கள் நான் அப்பியசித்த வழக்கங் களையும் எங்களுடையனவென்று சங்கை செய்வார்கள். ஆதலால், தன்னிடத்தில் தானாகவே யடங்கி விடுவோ மென்று தனியாயிருந்தால், அவ்விடத்தில் என்னைச் சோதிக்கும் பொருட்டு மனமாகிய மாயையை அனுப்பி விட்டால் உன்னுடைய அடிமையாகிய நான் எவ்வாறு ஆனந்தாநு பவத்தைப் பெறுவது? சொல்வாயாக, (9)

86. **அண்டமுடி தன்னிலோ பகிரண்ட மதனிலோ**
அலரிமண் டலநடுவிலோ
அனல்நடுவி லோ அமிர்த மதிநடுவி லோ அன்பர்
அகமுருகி மலர்கள் தூவித்
தெண்டமிட வருமூர்த்தி நிலையிலோ திக்குத்
திகந்தத்தி லோவெளியிலோ
திகழ்விந்து நாதநிலை தன்னிலோ வேதாந்த
சித்தாந்த நிலை தன்னிலோ
கண்டபல பொருளிலோ காணாத நிலையெனக்
கண்டசூ னியமதனிலோ
காலமொரு மூன்றிலோ பிறவிநிலை தன்னிலோ
கருவிகர ணங்களோய்ந்த

தொண்டர் களிடத்திலோ நீவீற் றிருப்பது
தொழும்பனேற் குளவுபுகலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

(பொ-ரை) பரிசுத்தத்தையுங் குணரகிகத்தையுமுடைய மேலான தெய்வமே! மேலான ஒளியே! ஆனந்தக்கடலே! நீ வீற்றிருப்பது அண்டத்தினந்தத்திலோ வெளியண்டத்திலோ, சூரிய மண்டலத்தின் மத்தியிலோ, அக்கினி மண்டலத்தின மத்தியிலோ, அமிர்தத்தைச் சிந்துகின்ற சந்திரமண்டலத்தின் மத்தியிலோ, அடியவர்களெல்லாம் மனமிளகிப் புஷ்பங்களைச் சொரிந்து நமஸ்காரஞ் செய்யும் படி எழுந்தருளியிருந்த மூர்த்தி நிலையிலோ, திக்குகளிலோ, திக்குகளின் அந்தங்களிலோ, வேதாந்த நிலையிலோ, சித்தாந்த நிலையிலோ, காணப்பட்ட பல பொருள்களிலோ, பார்க்காத இடமென்று பார்த்த சூனியமென்னும் இடத்திலோ, (பாழிலோ) திரிகாலங்களிலோ, பிறத்தலாகிய நிலையிலோ கருவிகளும், கரணங்களும் ஒடுங்கப் பெற்ற உன்னுடைய அடியார்களிடத்திலோ தொண்டனாகிய எனக்கு உண்மையைச் சொல்வாய். (எ-று) (10)

87. எந்தநாள் கருணைக் குரித்தாகு நாளெனவும்
என்னிதயம் எனைவாட்டுதே
ஏதென்று சொல்லுவேன் முன்னொடுபின் மலைவறவும்
இற்றைவரை யாதுபெற்றேன்
பந்தமா னதிலிட்ட மெழுகாகி உள்ளம்
பதைத்துப் பதைத்துருகவோ
பரமசுக மாவது பொறுப்பரிய துயரமாய்ப்
பலகாலு மூர்ச்சிப்பதோ
சிந்தையா னதுமறிவை என்னறிவி லறிவான
தெய்வம் நீ யன்றியுளதோ
தேகநிலை யல்லவே உடைகப்பல் கப்பலாய்த்
திரையாழி யூடுசெலுமோ
சொந்தமா யாண்டநீ அறியார்கள் போலவே
துன்பத்தி லாழ்த்தல் முறையோ
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

(பொ-ரை) பரிசுத்தத்தையுஞ் குணரகிதத்தையுமுடைய மேலான தெய்வமே! மேலான ஒளியே! ஆனந்தக் கடலே!

நான் உன்னுடைய கருணைக்கு உரித்தாவதற்குத் தகுந்த நாள் எந்த நாளோவென்று என் இருதயமானது என்னை வாட்டுகின்றதே. அதை என்னவென்று சொல்லுவேன், முன்னுக்கும் பின்னுக்கும் விரோதம் வராமலிருக்கும்படியாக இதுவரையும் எந்த நிலையைப் பெற்றேன்? மேலான இன்பமாவது, மனமானது பந்தத்தில் வைத்த மெழுகைப் போலுருகிப் பதைத்துப் பதைத்திளகுவமதோ? (அல்லாமல்) தாங்குதற்கரிய துன்பமாய் எந்நாளும் மூர்ச்சையடைவதோ? என்னுடைய அறிவில் அறிவாயிருக்கின்ற தெய்வம் நீயல்லாமல் வேறொன்றுண்டோ? இல்லை. (ஆகையால்) நீ என்னுடைய கருத்தையுமறிவாய். உடைந்த கப்பலானது (உடையாக்) கப்பலாக ஆகிச் சமுத்திரத்திற் செல்லுமோ? (அதுபோல) தேகம் நிலையுள்ள தல்லவே. (ஆகையால்) சொந்தமாய் வந்து அடிமை கொண்டிரட்சித்த நீ, தெரியாதவர் களைப் போல், என்னைத் துன்பத்தில் அமிழ்த்தி விடுதல் உனக்கு முறைமையாகுமோ? (எ-று) (11)

88. எந்நாளும் உடலிலே உயிராம் உனைப்போல்
இருக்கவிலை யோமனதெனும்
யானுமென் நட்பாம் பிராணனும் எமைச்சடம
தென்றுனைச் சித்தென்றுமே
அந்நாளி லெவனோ பிரித்தான் அதைக்கேட்ட
அன்றுமுதல் இன்றுவரையும்
அநியாய மாயெமை யடக்கிக் குறுக்கே
அடர்ந்தரசு பண்ணி எங்கள்
முன்னாக நீஎன்ன கோட்டைகொண் டாயென்று
மூடமான மிகவும்ஏச
மூண்டெரியும் அனலிட்ட மெழுகா யுளங்கருகல்
முறைமையோ பதினாயிரஞ்
சொன்னாலும் நின்னரு ளிரங்கவிலை யேஇனிச்
சுகம்வருவ தெப்படிசொலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே.

(பொ-ரை) பரிசுத்தத்தையுங் குணரகிதத்தையுமுடைய மேலான தெய்வமே! மேலான ஒளியே! ஆனந்தக்கடலே! உடம்பினுள் உயிராயிருக் கின்ற உன்னைப்போல, மனமென்கிற நானும், என் நண்பனாகிய பிராணனும், எக்காலத்திலும் உடம்பினுள் இருக்கவில்லையோ?

(அங்ஙனமிருக்க) எங்களைச் சடமென்றும், உன்னைச் சித்தென்றும், அந்தக்காலத்தில் எவனோ பிரித்து வைத்தான்; அதைக் கேட்ட அன்று முதல் இன்றுவரையும் எங்களை அநியாயமாக அடக்கிக் குறுக்கே நெருங்கி வந்து அரசாட்சி செய்து, எங்களுடைய கண்களுக் கெதிரே, நீ எந்தக் கோட்டையைப் பிடித்துக் கொண்டா யென்று, மூடத் தன்மையையுடைய மனமானது மிகவும் ஏசுதலால், நெருங்கி எரிகின்ற நெருப்பில் வைத்த மெழுகு போலுருகி, மனம் வருந்துதல் உனக்கு முறைமை யாகுமோ, பதினாயிரமுறை விண்ணப்பஞ் செய்தாலும் உன்னுடைய திருவருளானது இரங்கவில்லையே? இனி எனக்குச் சுகோதய மாவது எப்படி சொல்வாய்? (எ-று)

மனம், உயிரை வைவதாகவும், அதனால் உயிர் இறைவனை நோக்கி வருந்துவதாகவும், இச்செய்யுள் கூறப்பட்டது.

உயிர் எத்தனைக் காலம் உடலிலிருக்குமோ அத்தனைக் காலமும், மனமும், பிராணவாயுவும், உடலிலிருக்கு மென்பார், 'எந்நாளுமுடலிலே யுயிராமுனைப் போல் இருக்கவில்லையோ மனமெனும் - யானுமென் னட்பாம் பிராணனும்" எனவும், அம்மனமும், பிராணவாயுவும் தாமே ஒருதொழில் செய்யக்கூடாமையால், 'எமைச் சடமதென்று' எனவும், உயிர் பாச சம்பந்தப்பட்ட சித்தாகலின், 'உனைச் சித்தென்று' எனவும், அங்ஙனம் மனத்தாலுண்டாகுந் துன்பத்தை நோக்கி யதனையடக்க முயலுந்தோறும் அது அடங்காதெழுதலை, 'அன்றுமுத லின்று வரையும்- அநியாயமாயெமை யடக்கிக் குறுக்கே யடாந்தரசு பண்ணியெங்கண் -முன்னாக நீ யென்ன கோட்டை கொண்டாயென்று மூடமானமிகவுமேச' எனவும், தான் படுந் துன்பங்களால் இறைவனை வேண்டுதலை, 'மூண்டெரியு மனலிட்ட மெழுகா யுளங்கருகன் முறைமையோ பதினா யிரஞ்- சொன்னாலும் நின்னருளிரங்க விலையேயினிச் சுகம் வருவதெப்படி சொலாய்?' எனவுங் கூறினார். (12)

எங்கும் நிறைகின்ற பொருள்

89. அவனன்றி யோரணுவும் அசையாதெ னும்பெரிய
ஆப்தர்மொழி யொன்றுகண்டால்
அறிவாவ தேதுசில அறியாமை ஏதிவை
அறிந்தார்கள் அறியார்களார்

மௌனமொ டிருந்ததார் என்போ லுடம்பெலாம்
வாயாய்ப் பிதற்றுமவரார்
மனதெனவும் ஒருமாயை எங்கே இருந்துவரும்
வன்மையொ டிரக்கமெங்கே
புவனம் படைப்பதென் கர்த்தவிய மெவ்விடம்
பூதபே தங்களெவிடம்
பொய்மெயிதம் அகிதமேல் வருநன்மை தீமையொடு
பொறைபொறா மையுமெவ்விடம்
எவர்சிறிய ரெவர்பெரிய ரெவருறவ ரெவர்பகைஞர்
யாதுமுனை யன்றியுண்டோ
இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்ற பொருளே.

(பொ-ரை) இம்மை மறுமை என்கிற இரண்டிடத்தும் உயிர்க்குயிராகி எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற பொருளே! அந்தக் கடவுள் அசைப் பித்தாலல்லாமல் ஒரு அணுவும் அசையாது, என்கிற பெரியோர்களாகிய ஆப்தர்கள் வசன மொன்றை ஆராய்ந்து பார்த்தால், அறிவாவது ஏது, சில அறியாமையாவது ஏது , இவைகளை யறிந்தவர்கள் யார், அறியாதவர்கள் யார், மௌனத் தோடிருந்தவர்யார், என்னைப் போல் உடம்பெல்லாம் வாயாகப் பிதற்றுவோர் யார், மனமெனவும் ஒரு மாயையானது எங்கிருந்துவரும்,வலிவும் மிருதுவும் எங்கே, புவனங்களைச் சிருஷ்டிப்பது யாது, கர்த்தவியமானது எவ்விடத்தினின்றுண்டாவது, பூதங்களின் வித்தியாசங் கள் எவ்விடத்தினின்றுண்டாவது, பொய்யும் மெய்யும், அநுகூலமும், பிரதிகூலமும் மேலும் உண்டாகின்ற நன்மையும், தீமையும், பொறுமையும், பொறாமையும், எவ்விடத்தினின்றுண்டாவது, எவர் சிறியவர், எவர் பெரியவர், எவர் உறவினர், எவர் பகைவர், எல்லாம் உன்னை யல்லாமல் உண்டாகுமோ? (எ-று.)

" ஆர்பெரிய ரார்சிறிய ராருறவ ரார்பகைவர்
சீர்பெரிய ராநந்த சிற்சொருபர்-பேர்பெரியர்
எங்கெங்குந் தாமா யிருந்துசட சித்தனைத்து
மங்கங் கியற்றுவதா னால்"

என்றாராகலின், 'எவர் சிறியரெவர் பெரிய ரெவருறவ ரெவர் பகைஞர் யாது முனையன்றியுண்டோ' எனக் கூறினர். 1)

90. அன்னே யனேயெனுஞ் சிலசமயம் நின்னையே
ஐயாஜயா என்னவே
அலறிடுஞ் சிலசமயம் அல்லாது பேய்போல
அலறியே யொன்றும் இலவாய்ப்
பின்னேதும் அறியாம லொன்றைவிட் டொன்றைப்
பிதற்றிடுஞ் சிலசமயமேல்
பேசரிய ஒளியென்றும் வெளியென்றும் நாதாதி
பிறவுமே நிலயமென்றுந்
தன்னே ரிலாததோ ரணுவென்றும் மூவிதத்
தன்மையாங் காலமென்றுஞ்
சாற்றிடுஞ் சிலசமயம் இவையாகி வேறதாய்ச்
சதாஞான ஆனந்தமாய்
என்னே யெனேகருணை விளையாட் டிருந்தவா
றெம்மனோர் புகலவெளிதோ
இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

(பொ-ரை) இம்மை மறுமை என்கிற இரண்டிடத்தும் உயிர்க்குயிராகி எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற பொருளே! சில சமயங்கள் தாயே தாயே! என்று சொல்லும்; உன்னையே சில சமயங்கள் தந்தையே! தந்தையே! என்று அலறும், அங்ஙனமன்றிச் சிலசமயங்கள் பிசாசு போலக் கதறிச் சிறிதும் பிரயோசனமில்லாதனவாய்ப் பின்னொன் றையு முணராமல் ஒன்றை விட்டொன்றைப் பிதற்றும்; சில சமயங்கள் பேசுதற் கருமையான ஒளியென்றும், ஆகாய மென்றும், நாத முதலிய மற்றவைகளையே நிலைகளென்றும் தனக்குச் சமான மில்லாததாகிய அணுவென்றும், திரிகாலங் களென்றும் சொல்லும். (ஆகையால்) இவைகளாகியும், இவற்றின் வேறாகியும் சதாஞானானந்தமாகியும், உன்னுடைய திருவருள் விளையாட் டிருந்தவாறு, என்ன ஆச்சரியம், என்ன ஆச்சரியம். (அவ்வாச்சரியம்) எம்மை யொத்தவர்கள் சொல்லுதற் கெளிதாகுமோ? (எ-று) (2)

91. வேதமுடன் ஆகம புராணம்இதி காசமுதல்
வேறுமுள கலைகளெல்லாம்
மிக்காக அத்துவித துவிதமார்க் கத்தையே
விரிவா எடுத்துரைக்கும்
ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
உண்டுபண ஞானமாகும்

ஊகமஅனு பவவசன மூன்றுக்கும் ஒவ்வுமீ
துபயவா திகள் சம்மதம்
ஆதலி னெனக்கினிச் சரியையா திகள்போதும்
யாதொன்று பாவிக்கநான்
அதுவாத லாலுன்னை நானென்று பாவிக்கின்
அத்துவித மார்க்கமுறலாம்
ஏதுபா வித்திடினம் அதுவாகி வந்தருள்செய்
எந்தைநீ குறையுமுண்டோ
இகபர மிரண்டினிலும் உயிரனுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

(பொ-ரை) இம்மை மறுமை என்கிற இரண்டிடத்தும் உயிர்க்குயிராகி எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற பொருளே! வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், ஆகிய இவை முதலாகச் சொல்லப்பட்ட மற்றுமுள்ள சாத்திரங் களெல்லர்ம். அத்துவித மார்க்கத்தையும், துவிதமார்க்கத்தை யுமே அதிகமாக விரித்தெடுத்துச் சொல்லும். (ஆயினும்) சொல்லுதற் கருமையான துவிதஞானமே அத்துவித ஞானத்தை உண்டாக்குகின்ற ஞானமாகும். இதுவே கருதி, குரு, சுவா நுபவங்களுக்கு ஒத்திருக்கும் இதுவே இவ்விரு மார்க்கவாதிகளுக்குஞ் சம்மதம். ஆகையால் அடியேனுக்குச் சரியை முதலானவைகளே போதுமானவையாம். நான் எந்தப் பொருளைப் பாவிக்கின்றேனோ அந்தப் பொருளாகவே ஆய்விடுதலால், உன்னையும் நானென்று பாவனை செய்தால் அத்துவித மார்க்கத்தையடையலாம் (ஏனெனில்) நான் எந்தப் பொருளைப் பாவித்தாலும் அந்தப் பொருளாகி வந்து அருள் செய்கின்ற எம்முடைய தந்தையாகிய நீ நித்தியனா யிருத்தலால் எனக்கு வேறோர் குறையுமுண்டோ? (எ-று)

உலகத்தின்கண் உயிர்களுக்கென்றே ஏற்படுத்தப்பட்ட நூல்கள் இருக்கு முதல் நான்கு வேதங்களும், காமிகமுதல் இருபத்தெட்டாகமங்களும், மச்சிய முதல் பதினெண் புராணங்களும், பாரத இராமாயணங்களாகிய இதிகாசங்களும் ஸ்மிருதி முதலிய கலைகளுமாதலால், 'வேதமுடனாகம புராணமதிகாச முதல் வேறுமுள கலைகளெல்லாம்' எனவும், இவைகளிற் சொல்லப்படுவன துவித மார்க்கமும், அத்துவித மார்க்கமு மாகலான், 'மிக்காக அத்துவித துவிதமார்க்கத்தையே விரிவாவெடுத்துரைக்கும்' எனவும், இவ்விரண்டினுள் துவிதமே அத்துவிதத்திற்கு

எதுவாகலான், 'ஓதரியதுவிதமே அத்துவித ஞானத்தை யுண்டுபணு ஞானமாகும்' எனவும், இதுவே சுருதியுக்தி சுவாநுபவங்களுக்குப் பொருத்தமுடைய தாகலான், 'ஊகமநுபவ வசன மூன்றுக்கு மொவ்வும்' எனவும், அவ்விரு மதத்தார்களுக்குஞ் சம்மதமாகலான், 'ஈது பயவாதிகள் சம்மதம், எனவும், அத்துவித ஞானமே அத்துவித ஞானத்தை யுண்டு பண்ணுகின்றமையால், 'ஆதலினெனக் கினிச்சரியை யாதிகள் போதும்' எனவும், உயிர்கள் சடப்பொருளிற் சேருங்கால் சடமாகவும், சித்துப் பொருளிற் சேருங்கால் சித்தாகவும், ஆகுமிலக்கணம் உடையவை என்பார், 'யாதொன்று பாவிக்க நானதுவாதலாலுன்னை நானென்று பாவிக்கி னத்துவித மார்க்க முறலாம் ஏது பாவித்திடினு மதுவாகி வந்தருள் சேயெந்தைநீ குறையுமுண்டோ' எனவுங் கூறினார்.

உயிர்கள் சடத்தொடு சேருங்காற் கடமாகவும், சித்தொடு சேருங்காற் சித்தாகவும் ஆவன என்பதை:

"அறியாமை சாரி னதுவா யறிவா
நெறியான போததுவாய் நிற்குங்-குறியால்
சதசத் தருளுணர்த்தத் தானுணரா நின்ற
விதமுற் றறிவெனும்பேர் மெய்"

என்பதனானறிக. ஈண்டு, அறியாமை என்றது சடம், அறிவு என்றது சித்து. *(3)*

92. **சொல்லான திற்சற்றும் வாராத பிள்ளையைத்**
தொட்டில்வைத் தாட்டிஆட்டித்
தொடையினைக் கிள்ளல்போற் சங்கற்ப மொன்றில்
தொடுக்குந் தொடுத்தழிக்கும்
பொல்லாத வாதனை எனும்சப்த பூமியிடை
போந்துதலை சுற்றியாடும்
புருடனி லடங்காத பூவைபோல் தானே
புறம்போந்து சஞ்சரிக்குங்
கல்லோ டிரும்புக்கு மிகவன்மை காட்டிடுங்
காணாது கேட்டஎல்லாங்
கண்டதாக் காட்டியே அணுவாச் சுருக்கிடுங்
கபடநா டகசாலமோ
எல்லாமும் வலதிந்த மனமாயை ஏழையாம்
என்னா லடக்கவசமோ
இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

(பொ-ரை) இம்மை மறுமை என்கிற இரண்டிடத்தும் உயிர்க்குயிராகி எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற பொருளே! தாய்ச் சொல்லின்படி சிறிதும் சம்மதித்து வாராத குழந்தையை (அத்தாயானவள்) தொட்டிலிவிட்டு ஆட்டிக் கண் வளர்த்தித் தொடையைக் கிள்ளுவது போல, ஒரு பொருளின் எண்ணம் உண்டாக்கும். அதை மீட்டும் அழிக்கும்; கொடிய வேதனையைத் தரத்தக்கவையென்று சொல்லும் அஞ்ஞான பூமிகள் ஏழில்வந்து தலை சுற்றியாடும்; தன் புருஷனுக் கடங்காத (நினைத்த விடங்களிற் றிரியும்) மனைவியைப்போல் தானே வெளியில் வந்து சஞ்சரிக்கும், கல்லுக்கும் இரும்புக்கும் (வலிமை இப்படிப்பட்டதென்று) மிகுந்த வலிமையை அறிவிக்கும்; தான் கண்களாற் காணாமல் காதினாற் கேட்டவைகளை யெல்லாம் கண்டதாகவே காட்டி அணுத்தன்மை உடையனவாகச் சுருங்கிவிடும், (ஆகையால்) கபடநாடக சாலங்களெல்லா வற்றிலும் வல்லமையுடையதாகிய இந்த மல சம்பந்தத்தாலுண்டாகின்ற மாயையானது ஏழையாகிய என்னால் அடக்க வசமாகுமோ? (எ-று)

அஞ்ஞான பூமிகள் ஏழாவன:- விந்துசாக்கிரம், மேற்சாக்கிரம், மகாசாக்கிரம், சாக்கிர சொப்பநம், சொப்பநம், சொப்பந சாக்கிரம், சுழுத்தி, இவைகள் விரிக்கிற் பெருகும் என்று விடப்பட்டன. (4)

93. கண்ணார நீர்மல்கி யுள்ளநெக் குருகாத
கள்ளனே னானாலுமோ
கைகுவித் தாடியும் பாடியும் விடாமலே
கண்பனித் தாரைகாட்டி
அண்ணா பரஞ்சோதி யப்பா உனக்கடிமை
யானெனவு மேலெழுந்த
அன்பாகி நாடக நடித்ததோ குறைவில்லை
அகிலமுஞ் சிறிதறியுமேல்
தண்ணாரு நின்னதரு ளறியாத தல்லவே
சற்றேனும் இனிதிரங்கிச்
சாசுவத முத்திநிலை ஈதென் றுணர்த்தியே
சகசநிலை தந்துவேறொன்
றெண்ணாம லுள்ளபடி சுகமா யிருக்கவே
ஏழையேற் கருள் செய்கண்டாய்
இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

(பொ-ரை) இம்மை, மறுமை என்கிற இரண்டிடத்தும் உயிர்க்குயிராகி எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற பொருளே! கண்களில் மிகுதியாக நீர்த்தும்பி, மனம் நெகிழ்ந் துருகாத கள்ளனானாலும், கைகூப்பி ஆடியும், பாடியும், கண்களில் நீங்காமல் குளிர்ச்சியாகிய நிரைச் சிந்தி, அண்ணா! பரஞ்சோதி! அப்பா! உனக்கு அடிமைப்பட்டவன் நான் என்றும், அதிகப்பட்ட அன்பை யுடையவனாகி நாடகமாகிய கூத்தாடி னதோ குறைவில்லை (அங்ஙனம் நான் செய்த அவற்றை) உலகத்தாருஞ் சிறிது அறிவார்களாயின், குளிர்ச்சி மிகுந்த உன்னுடைய திருவருளானது அறியாத தல்லவே. (ஆகையால்) கொஞ்ச மாயினும் இனிமை யாயிரங்கி அழியாத மோட்ச நிலை இதுவென்றறிவித்துச் சதா நிட்டையையுங் கொடுத்து, வேறொரு பொருளையுஞ் சிந்தியாமல் உண்மையுடன் இன்பமயமாயமர்ந்திருக்க எளியேனாகிய எனக்குத் திருவருள் செய்குவாய். (எ-று) கண்டாய்-அசை. *(5)*

94. காகமா னவைகோடி கூடிநின் றாலுமொரு
கல்லின்முன் னெதிர் நிற்குமோ
கர்மமா னதுகோடி முன்னேசெய் தாலுநின்
கருணைப்ர வாக அருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ
தமியனேற் கருள் தாகமோ
சற்றுமிலை என்பதுவும் வெளியாச்சு வினையெலாஞ்
சங்கேத மாய்க்கூடியே
தேகமா னதைமிகவும் வாட்டுதே துன்பங்கள்
சேராமல் யோகமார்க்க
சித்தியோ வரவில்லை சகசநிட் டைக்கும்என்
சிந்தைக்கும் வெகுதூரம் நான்
ஏகமாய் நின்னோ டிருக்குநா ளெந்தநாள்
இந்நாளில் முற்றுறாதோ
இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

(பொ-ரை) இம்மை, மறுமை என்கிற இரண்டிடத்தும் உயிர்க்குயிராகி எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற பொருளே! அநேக காகங்கள் ஒன்றாய்க் கூடி ஓரிடத்தி லிருந்தாலும், (ஒருவன் எறியும்) ஒரு கல்லுக்கு முன்னர் நிற்கும் வல்லமை யுடையனவாமோ? ஆகா, (அதுபோல) பூர்வத்தில் மிகுதியான தீவினைகளைச் செய்திருந்தாலும்,

உன்னுடைய கிருபைப் பெருக்கான திருவருளைத்தாகம் (விரும்புவதுபோல்) விரும்பினவர்களை (அத்தீ வினைகள்) வருத்தப்படுத்த வலியுள்ளவைகளோ? அல்ல. தீவினை களெல்லாங் கூட்டமாய்க் கூடி என்னுடைய சரீரத்தை மிகவும் வாட்டுகின்றன. ஆகையால் தனியேனாகிய எனக்குத் திருவருள்மேல் விருப்பம் கொஞ்சமுமில்லையென்பது வெளிப்பட்டது. (இனியேனும்) அத்தீவினைத் துன்பங்கள் சேராத வண்ணம் யோகவழியின் சித்தியோ வரவில்லை. (ஆகையால்) சகச நிஷ்டைக்கும் என்னுடைய மனதுக்கும் மிகுந்த தூரமாகும். இனி, நான் இரண்டென்னும் பகுப்பற உன்னுடன் ஒன்றாய்க் கூடியிருக்கும் காலம் எந்தக் காலமோ? இந்தக் காலத்தில் முடிவு பெறாதோ? (எ-று) (6)

95. **ஒருமைமன தாகியே அல்லலற நின்னருளில்**
ஒருவன்நான் வந்திருக்கின்
உலகம் பொறாததோ மாயா விசித்ரமென
ஓயுமோ இடமில்லையோ
அருளுடைய நின்னன்பர் சங்கைசெய் திடுவரோ
அலதுகிர்த் தியகர்த்தராய்
அகிலம் படைத்தெம்மை யாள்கின்ற பேர்சிலர்
அடாதென்பரோ அகன்ற
பெருமைபெறு பூரணங் குறையுமோ பூதங்கள்
பேய்க்கோல மாய்விதண்டை
பேசுமோ அலதுதான் பரிபாக காலம்
பிறக்கவிலை யோதொல்லையாம்
இருமைசெறி சடவினை எதிர்த்துவாய் பேசுமோ
ஏதுளவு சிறிதுபுகலாய்
இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

(பொ-ரை) இம்மை, மறுமை என்கிற இரண்டிடத்தும் உயிர்க்குயிராகி எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற பொருளே! தனியேனாகிய நான் துன்பம் நீங்கும்பொருட்டு ஒருமைப்பட்ட மனமுடையவனாகி உன்னுடைய திருவருளில் வந்திருந்தால், பெரியோர்கள் பொறுக்க மாட்டார்களோ, மாயாவி சித்திரமானது என்ன ஓய்ந்துவிடுமோ. அவ்விடத்தில் இடமில்லையோ, திருவருளைப் பெற்ற உன்னுடைய அடியார்கள் ஆட்சேபிப்பாரோ. அல்லாமல், மூன்று தொழில்களுக்குந் தலைவராகி உலகத்தைப் படைத்து எம்மைக் காப்பாற்று

கின்றவராகிய சிலபேர் தகாதென்பார்களோ, விசாலமான கீர்த்தியைப்பெற்ற பரிபூரண நிலை குறைந்துவிடுமோ, பூதங்களெல்லாம் பேய்ரூபந்தாங்கி வாதமிடுமோ, அல்லாமல் பரிபக்குவகால முதிக்க வில்லையோ, பழைமையதாகிய பாசமான இருவினைகள் எதிர் வழக்கிட்டுப் பேசுமோ, உண்மை என்ன, கொஞ்சஞ் சொல்வாய். (எ-று) (7)

96. நில்லாது தேகமெனும் நினைவுண்டு தேகநிலை
நின்றிடவும் மௌனியாகி
நேரே யுபாயமொன் றருளினை ஐயோஇதனை
நின்றனுட் டிக்கஎன்றால்
கல்லாத மனமோ வொடுங்கியுப ரதிபெறக்
காணவிலை யாகையாலே
கையேற் றுணும்புசிப் பொவ்வாதெந் நாளும்உண்
காட்சியி லிருந்துகொண்டு
வல்லாள ராய்இயம நியமாதி மேற்கொண்ட
மாதவர்க் கேவல்செய்து
மனதின் படிக்கெலாஞ் சித்திபெற லாஞானம்
வாய்க்குமொரு மனுவெனக்கிங்
கில்லாமை யொன்றினையும் இல்லாமை யாக்கவே
இப்போ திரங்குகண்டாய்
இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

(பொ-ரை) இம்மை, மறுமை என்கிற இரண்டிடத்தும் உயிர்க்குயிராகி எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற பொருளே! தேகம் நில்லாது என்கிற எண்ணமுண்டு, (ஆனாலும் அந்தத் தேகம்) நிலைத்திருக்கவும் மௌன குருவாக எழுந்தருளி வந்து ஒரு உபாயத்தை உபதேசஞ் செய்தருளினாய், அந்தோ! இவ்வுபாயத்தை இடையறா மலிந்து அநுட்டிக்கலாமென்று நினைத்தால், கல்வியறி வில்லாத என்னுடைய மனமோ என் வசப்பட்டு உலகத்தின்கண் வைத்த விருப்பத்தினின்றும் நீங்கப் பார்க்கவில்லை. ஆகையால், கையாற் பெற்று உண்ணுகின்ற உணவு சரியானதன்று. எக்காலத்திலும் உன்னுடைய திருவருட் காட்சியிலிருந்து கொண்டு, மனவலிமை யுடையவர்களாய், இயமம், நியமம், முதலிய யோகசாதனங் களை மேற்கொண்டொழுகா நின்ற பெருமை மிகுந்த

தவச்செல்வர்களுக்குப் பணிசெய்து மனம் விரும்பும் வண்ணம் எல்லாச் சித்திகளையும் பெறலாம். (அன்றி) ஞானமும் உண்டாகும் (ஆனாலும்) ஒரு விண்ணப்பம், அடியேனுக்கு இவ்விடத்தில் உன் திருவருளைப் பெறாமையாகிய தரித்திரம் ஒன்றை மாத்திரம் இல்லாமலே செய்ய இப்பொழுது கிருபை செய்ய வேண்டும். (எ-று) (8)

97. **மரவுரி யுடுத்துமலை வனநெற் கொறித்துமுதிர்**
வனசருகு வாயில்வந்தால்
வன்பசி தவிர்த்தும் அனல் வெயிலாதி மழையால்
வருந்தியு மூல அனலைச்
சிரமள வெழுப்பியும் நீரினிடை மூழ்கியுந்
தேகநம தல்லவென்று
சிற்சுக அபேட்சையாய் நின்னன்பர் யோகஞ்
செலுத்தினார் யாம்பாவியேம்
விரவும் அறு சுவையினொடு வேண்டுவ புசித்தரையில்
வேண்டுவ எலாமுடுத்து
மேடைமா ளிகையாதி வீட்டினிடை வைகியே
வேறொரு வருத்தமின்றி
இரவுபக லேழையர்கள் சையோக மாயினோம்
எப்படி பிழைப்பதுரையாய்
இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

(பொ-ரை) இம்மை, மறுமை என்கிற இரண்டிடத்தும் உயிர்க்குயிராகி எவ்விடத்திலும நிறைந்திருக்கின்ற பொருளே! உன்னுடைய அடியார்கள் நார்ச்சீலையைத் தரித்தும் மலைநெல், காட்டுநெல், இவைகளைக் கொறித்தும், உதிர்வனவாகிய சருகுகள் தாமிருக்குமிடத்தில் வந்தால் (அவற்றைக் கொண்டு) வலிய பசியை நீக்கியும், அக்கினி, வெயில் மழை, முதலியவைகளால் வருத்தப்பட்டும், மூலாக்கினியை சிரம்வரைக்கும் எழுப்பியும், தீர்த்த ஸ்நானஞ் செய்தும், சரீரமானது நம்முடைய தன்றென்று உறுதிப் படுத்திக் கொண்டு ஞானானந்தத்தில் விருப்பமுடையவர் களாய் யோகத்தைச் செய்து வந்தார்கள். பாவிகளாகிய நாங்கள் வேண்டும் உணவுகளைக் கலந்த ஆறு சுவைகளுடன் உண்டு, விரும்பும் ஆடைகளை யெல்லாம் இடுப்பில் தரித்து, மேடை மாளிகை, முதலாகச் சொல்லப்பட்ட வீடுகளிலிருந்து வேறொரு துன்பமு

மில்லாமல், இரவும், பகலும், பெண்களுடைய கலவியிற் சகித்திருந்தோம். (ஆகையால் நாங்கள்) எப்படி உஜ்ஜீவிப்பது சொல்வாய். (எ-று)

அறுசுவையென்றது:- கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பன. *(9)*

98. முத்தனைய மூரலும் பவளவா யின்சொலும்
முகத்திலகு பசுமஞ்சளும்
மூர்ச்சிக்க விரகசன் னதமேற்ற இருகும்ப
முலையின்மணி மாலைநால
வைத்தெமை மயக்கிஇரு கண்வலையை வீசியே
மாயா விலாசமோக
வாரிதியி லாழ்த்திடும் பாழான சிற்றிடை
மடந்தையர்கள் சிற்றின்பமோ
புத்தமிர்த போகம் புசித்துவிழி யிமையாத
பொன்னாட்டும் வந்ததென்றால்
போராட்ட மல்லவோ பேரின்ப முத்திஇப்
பூமியி லிருந்துகாண
எத்தனை விகாதம்வரும் என்றுசுகர் சென்றநெறி
இவ்வுலகம் அறியாததோ
இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

(பொ-ரை) இம்மை, மறுமை என்கிற இரண்டிடத்தும் உயிர்க்குயிராகி எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற பொருளே! முத்துக்களைப் போன்ற பற்களும், பவளத்தைப் போன்ற வாயினின்றுண்டாகும் இனிய சொற்களும், முகத்தின்கண் விளங்குகின்ற பசுமையாகிய மஞ்சளும், மூர்ச்சிக்கும்படி விரதத்தை எழுப்ப, இரண்டு குடங்களைப்போன்ற ஸ்தனங்களின் மேல் இரத்தினத்தாற் செய்த மாலைகளைத் தொங்கவைத்து, எங்களை மயங்கச் செய்து, இரண்டு கண்களாகிய வலையைவீசி, மாயையின் விளையாட்டாகிய மோகக்கடலில் அமிழ்த்திவிடுந் தன்மையையுடைய கொடிய சிற்றிடையை யுடைய பெண்களது சிற்றின்பமோ, புதிய அமிர்தத்தையுண்டு கண்ணிமைக்காத பொன்னாட்டிலும் வந்ததென்று சொன்னால் (இது) போராட்டமாய் முடிவதல்லவோ, (ஆகையால்) பேரின்பத்தை அடைதற்குரிய மோட்சத்தை இவ்வுலகத்திலிருந்து பெறுதற்கு எத்தனை இடையூறு

களுண்டாகுமென்று சுகமுனிவர் போனவழியை இவ்வுலககத்திலுள்ளார் அறியார்களோ (எ-று)

சுகமுனிவர் தன்னை மாயை வந்தணுகாமல் இருக்க் வேண்டு மென்று பிறந்தவுடன் துறந்து சென்று நிடதமலை யிலேறினராகையால், பேரின்பமுத்தியிப் பூமியிலிருந்து காண எத்தனை விகாதம் வருமென்று சுகர் சென்ற நெறியிவ் வுலகமறியாததோ' எனப் புகன்றனர். (10)

99. உன்னிலையும் என்னிலையும் ஒருநிலை யெனக்கிடந்
துளறிடும் அவத்தையாகி
உருவுதான் காட்டாத ஆணவமும் ஒளிகண்
டொளிக்கின்ற இருளென்னவே
தன்னிலைமை காட்டா தொருங்கஇரு வினையினால்
தாவுசுக துக்கவேலை
தட்டழிய முற்றுமில் லாமாயை யதனால்
தடித்தகில பேதமான
முன்னிலை யொழிந்திட அகண்டிதா காரமாய்
மூதறிவு மேலுதிப்ப
முன்பினொடு கீழ்மேல் நடுப்பக்கம் என்னாமல்
முற்றுமா னந்தநிறைவே
என்னிலைமை யாய்நிற்க இயல்புகூ ரருள்வடிவம்
எந்நாளும் வாழிவாழி
இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே.

(பொ-ரை) இம்மை, மறுமை என்கிற இரண்டிடத்தும் உயிர்க்குயிராகி எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற பொருளே! உனது தன்மையும், எனது தன்மையும், ஒரே தன்மையென்று உளறுகின்ற அவஸ்தையையடைந்து தன் ரூபத்தைக் காட்டாத ஆணவமும், ஒளியைக் கண்டு மறைகின்ற இருளைப் போல, தன்னுடைய தன்மையைக் காட்டாமல் அடங்கவும், இருவினைகளாகிய (அலை களினால்) மோதுகின்ற சுகம், துக்கம், என்கிற சமுத்திரங்கள் தட்டழியவும், முழுதுமில்லாமையாகிய மாயையாலுருக் கொண்டு அநேக பேதமான முன்னிலைச் சுட்டொழிந் திடவும், கண்டிக்கப் படாத ரூபமுடையதாய்ப் பேரறிவானது மேலுமேலு முண்டாகவும், 'முன், பின், கீழ், மேல், நடு, பக்கம், என்று சொல்லாதபடி முடிகின்ற இன்ப நிறைவையே என்னுடைய தன்மையாகக் கொண்டு அமர்ந்திருக்கவும்

மிகுந்த சுபாவகுணத்தை அருள்செய்த திருவருள் வடிவமானது எக் காலத்திலும் வாழக் கடவது! வாழக் கடவது! (எ-று) *(11)*

சச்சிதானந்த சிவம்

100. பாராதி ககனப் பரப்புமுண் டோவென்று
படர்வெளிய தாகிஎழுநாப்
பரிதிமதி காணாச் சுயஞ்சோதி யாய்அண்ட
பகிரண்ட உயிரெவைக்கும்
நேராக அறிவாய் அகண்டமாய் ஏகமாய்
நித்தமாய் நிர்த்தொந்தமாய்
நிர்க்குண விலாசமாய் வாக்குமனம் அணுகாத
நிர்மலா னந்தமயமாய்ப்
பேராது நிற்றிநீ சும்மா இருந்துதான்
பேரின்ப மெய்திடாமல்
பேய்மனதை யண்டியே தாயிலாப் பிள்ளைபோல்
பித்தாக வோமனதைநான்
சாராத படியறிவின் நிருவிகற் பாங்கமாஞ்
சாசுவத நிட்டைஅருளாய்
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

(பொ-ரை) சர்வ பொருள்களிலும் நிறைந்திருக்கின்ற அகண்ட வஸ்துவான சச்சிதானந்த ரூபமாகிய மங்களவஸ்துவே! பிருதிவி முதலாகச் சொல்லப்பட்ட பூதாகாயப் பரப்பும் உண்டோவென்று சொல்லும்படி நிறைந்த பரமாகாயமாகியும், அக்கினி, சூரியன், சந்திரன் முதலானவர்களால் காணப்படாத சுயம்பிரகாசமாகியும், உள்ளண்டங்களிலும், வெளியண்டங் களிலுமுள்ள எல்லா உயிர்களுக்கும் நன்மையாக அறிவுரு வாகியும் ஒருவரால் கண்டிக்கப்படாததாகியும், தனிமையான தாகியும், அழியாத தாகியும், பற்றில்லாததாகியும் குணங்கடந்த விளையாட்டாகியும், வாக்குக்கும், மனத்துக்குமெட்டாத மலரசிதமான இன்ப வடிவாகியும், நீ என்றும் அசையாமல் நிற்கிறாய். நான் சும்மாவிருந்து பேரின்பநுபவத்தை யடையாமல் பிசாசைப் போன்ற மனத்தைச் சேர்ந்து, தாயில்லாத குழந்தையைப் போலப் பித்தாகவோ (ஆகையால்) நான் அந்த மனத்தைச் சேராத வண்ணம்

ஞானத்தோடு கூடிய நிருவிகற்ப மென்னும் அங்கத்தை யுடைய சதாநிட்டையை அருள் செய்வாய். (எ-று) *(1)*

101. குடக்கொடு குணக்காதி திக்கினை யுழக்கூடு
கொள்ளல்போல் ஐந்துபூதங்
கூடுஞ் சுருங்கிலைச் சாலேகம் ஒன்பது
குலாவுநடை மனையைநாறும்
வடக்கயிறு வெள்நரம் பாளன்பு தசையினால்
மதவேள் விழாநடத்தி
வைக்கின்ற கைத்தேரை வெண்ணீர் செந்நீர்கணீர்
மலநீர்புண் நீரிறைக்கும்
விடக்குத் துருத்தியைக் கருமருந்துக் கூட்டை
வெட்டவெட் டத்தளிர்க்கும்
வேட்கைமரம் உறுகின்ற சுடுகாட்டை முடிவிலே
மெய்போ லிருந்துபொய்யாஞ்
சடக்கைச் சடக்கெனச் சதமென்று சின்மயந்
தானாகி நிற்பதென்றோ
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

(பொ-ரை) சர்வபொருள்களிலும் நிறைந்திருக்கின்ற அகண்ட வஸ்துவான சச்சிதானந்த ரூபமாகிய மங்கள வஸ்துவே! மேற்கு, கிழக்கு முதலிய திக்குகளை உழக்கினிடத்தில் அடக்கிக் கொள்ளுதல் போல், பஞ்சபூதங்கள் சேர்வதாலுண்டாகும் சிறிய வீட்டை, ஒன்பது சன்னல்கள் பொருந்திய நடைவீட்டை, காணப்பட்ட வடக்கயிறு வெள்ளிய நரம்பாகக் கொண்டு, மன்மதனானவன் எலும்பு மாமிசங்களால் திருவிழாச் செய்து வைக்கின்ற சிறுதேரை, வெண்ணீரையும், செந்நிரையும், கண்ணீரையும், மலநீரையும், புண்ணீரையும் இறைக்கின்ற மாமி சத்தாலாகிய துருத்தியைப் பிறவியாகிய மருந்து விளையப்பெற்ற கூட்டினை, வெட்டுந்தோறுந் தளிர்க்கின்ற ஆசையாகிய மரங்கள் பொருந்திய சுடுகாட்டை, மெய் போலிருந்து கடையில் பொய்யாய் விடுகின்ற சரீரத்தைப் பொய்யென்றும், ஞானமயமே மெய்யென்றுங் கொண்டு தனியாய் நிற்பது எந்தக் காலமோ? (எ-று) *(2)*

102. பாகத்தி னாற்கவிதை பாடிப் படிக்கவோ
பத்திநெறி யில்லைவேத
பாராய ணப்பனுவல் மூவர்செய் பனுவலது
பகரவோ இசையுமில்லை

யோகத்தி லேசிறிது முயலவென் றால்தேகம்
ஒவ்வாதி வூண்வெறுத்தால்
உயிர்வெறுத் திடலொக்கும் அல்லாது கிரியைகள்
உபாயத்தி னாற்செய்யவோ
மோகத்தி லேசிறிதும் ஒழியவிலை மெய்ஞ்ஞான
மோனத்தில் நிற்களன்றால்
முற்றாது பரிபாக சத்திக ளனேகநின்
மூதறிவி லேஎழுந்த
தாகத்தி லேவாய்க்கும் அமிர்தப் பிரவாகமே
தன்னந் தனிப்பெருமையே
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

(பொ-ரை) மோட்ச தாகத்தாற் கிடைக்கப் பெறுகின்ற அமிர்தப் பெருக்கே! ஏகமாகிய பெருமையே! சர்வபொருள் களிலும் நிறைந்திருக்கின்ற அகண்ட வஸ்துவான சச்சி தானந்த ரூபமாகிய மங்களவஸ்துவே! கவிகளைப் பக்குவமாகப் பாடிப் படிப்போமென்றாலோ பத்திநெறி யில்லை. பாராயணஞ் செய்தற்குரிய தமிழ்வேதமாகிய (திருவாசக மென்னும்) நூலையும், மூவரருளிச் செய்த (தேவாரமென்னும்) நூலையும், பாடுவோ மென்றாலோ இசைத் தமிழினுணர்ச்சியுமில்லை. யோகநெறியிற் சிறிது முயல்வோ மென்றால் தேகமிணங்காது. இங்ஙனம் உண்ணுகின்ற இந்த உணவுகளை வெறுத்தால் (விரதநோற்றால்) உயிரை வெறுத்து விடுதல் போன்றிருக்கும். இவைகளல்லாமல், கிரியைகளைத் தந்திரமாகச் செய்வோமென்றாலோ மோகத்திற் கொஞ்ச மாயினும் நீங்கவில்லை. உண்மை ஞானமாகிய மௌன நிலையில் நிற்போமென்றால் என்னைத் தடுக்கப் பக்குவ மடைந்துள்ள அநேக சத்திகள் உன்னுடைய பேரறிவினின்றும் உண்ட ாயின. ஆகலான் அதுவும் முடிவுபெறாது. (எ-று)

திருவாசகத்திற்குத் தமிழ்வேதமென்கிற பேர் வழங்கி வருதலின், 'வேதபாராயணப்பனுவல்' என்றது திருவாசகம் என்று எழுதப்பட்டது. மூவர்=திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், இவர்களாற் செய்யப்பட்டது தேவாரமென்றும், அடங்கன்முறை என்றும் வழங்கும் நூல். (3)

103. இமையளவு போதையொரு கற்பகா லம்பண்ணும்
இவ்வுலகம் எவ்வுலகமோ
என்றெண்ணம் வருவிக்கும் மாதர்சிற் றின்பமோ
என்னில்மக மேருவாக்கிச்
சுமையெடுமி னென்றுதான் சும்மாடு மாயெமைச்
சுமையாளு மாக்கிநாளுந்
துர்ப்புத்தி பண்ணியுள நற்புத்தி யாவையுஞ்
சூறையிட் டிந்த்ரசாலம்
அமையவொரு கூத்துஞ் சமைந்தாடு மனமாயை
அம்மம்ம வெல்லலெளிதோ
அருள்பெற்ற பேர்க்கெலாம் ஒளிபெற்று நிற்குமீ
தருளோ அலாதுமருளோ
சமயநெறி காணாத சாட்சிநீ சூட்சுமமாத்
தமியனேற் குளவு புகலாய்
சர்வபரி பூரண அகண்ட தத்துவமான
சச்சிதா னந்தசிவமே.

(பொ-ரை) சர்வ பொருள்களிலும் நிறைந்திருக்கின்ற அகண்ட வஸ்துவான சச்சிதானந்த ரூபமாகிய மங்களவஸ்துவே! மனமாயையானது இமைக்கு மளவுள்ள காலத்தை ஒரு கற்பகாலமாக்கும். இந்த உலகமானது எந்த உலகமோ என்ற எண்ணத்தை யுண்டுபண்ணும், பெண்கள் சிற்றின்பமோ வென்றால், மகமேருவாகப் பண்ணிச் சுமையெடுங்களென்று, தான் சும்மாடுமாய், எங்களைச் சுமையாளுமாக்கி எந்நாளும் எங்களுக்குள்ள நற்புத்திகளெல்லாவற்றையுஞ் சூறையாடித் துர்ப்புத்தியுண்டு பண்ணி, இந்திரஜாலம் பொருந்த அமைந்து ஒரு நாடகமும் நடிக்கும் இது மிகவும் ஆச்சரியம் (ஆகையால் அம்மாயையை) வெல்லுதற் கெளிதாகுமோ? இது உன்னுடைய திருவருளைப்பெற்ற அன்பர்க்கெல்லாம் ஒளிவிளங்கும்படி நிற்குமாகலான் அருட்டன்மை யுடையதோ? மருட்டன்மை யுடையதோ? சமயமார்க்கங்களா லறியப்படாத காட்சி பூதனாகிய அடியேனுக்குத் தந்திரமாக (இதன்) உண்மையைச் சொல்வாய். (எ-று) *(4)*

104. இனியே தெமக்குனருள் வருமோ எனக்கருதி
ஏங்குதே நெஞ்சம்ஐயோ
இன்றைக் கிருந்தாரை நாளைக் கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே

அனியாய மாயிந்த வுடலைநான் என்றுவரும்
அந்தகற் காளாகவோ
ஆடித் திரிந்துநான் கற்றதும் கேட்டதும்
அவலமாய்ப் போதல்நன்றோ
கனியேனும் வறியசெங் காயேனும் உதிர்சருகு
கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியே இருப்பதற் கெண்ணினேன் எண்ணமிது
சாமிநீ அறியாததோ
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

(பொ-ரை) சர்வபொருள்களிலும் நிறைந்திருக்கின்ற அகண்ட வஸ்துவான சச்சிதானந்த ரூபமாகிய மங்கள வஸ்துவே! இன்றைக்கு உயிரோடிருந்த வரை நாளைக்கும் உயிரோடிருப்பாரென் றெண்ணவோ நிச்சயமில்லை. (ஆகையால்) அநியாயமாய் இந்தத் தேகத்தையே நானென்று எண்ணுவதால், (காலநோக்கி) வருகின்ற இயமனுக்கு ஆளாகவோ அன்றி நான் ஆடித் திரிந்து கற்ற கல்வியுங் கேட்ட கேள்வியும் வீணாய்ப் போவது நன்றோ (அல்ல-ஆகையால்) பசிவந்தடைந்தால் கனிகளையாயினும் வெறுமையையுடைய செங்காய்களையாயினும், உதிர்கின்ற சருகுகளை யாயினும், கந்த மூலங்களையாயினும், அள்ளி யுண்டு கண்களை மூடி மௌனசாதன முடையவனாகித் தனியாயிருப்பதற் கெண்ணினேன். இந்த எண்ணமானது கடவுளாகிய நீயறியாததோ? (அறிந்ததே, அங்ஙனமறிந்தும் கிருபை செய்யாமலிருப்பதால்) அந்தோ! இனி எங்களுக்கு உன்னுடைய கிருபை உண்டாவதேது எனவும், ஒருக்கால் உண்டாகுமோ எனவும் மனமானது ஏக்கங் கொள்ளா நின்றது. (எ-று) *(5)*

105. மத்தமத கரிமுகிற் குலமென்ன நின்றிலகு
வாயிலுடன் மதிஅகடுதோய்
மாடகூ டச்சிகர மொய்த்தசத் திரகாந்த
மணிமேடை யுச்சிமீது
முத்தமிழ் முழக்கமுடன் முத்தநகை யார்களொடு
முத்துமுத் தாய்க்குலாவி
மோகத் திருந்துமென் யோகத்தின் நிலைநின்று
மூச்சைப் பிடித்தடைத்துக்

கைத்தல நகப்படை விரித்தபுலி சிங்கமொடு
கரடிநுழை நூழைகொண்ட
கானமலை யுச்சியிற் குகையூ டிருந்துமென்
கரதலா மலகமென்னச்
சத்தமற மோனநிலை பெற்றவர்க ளுய்வர்காண்
சனகாதி துணிவிதன்றோ
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

(பொ-ரை) சர்வ பொருள்களிலும் நிறைந்திருக்கின்ற அகண்ட வஸ்துவான சச்சிதானந்த ரூபமாகிய மங்கள வஸ்துவோ! சநகாதிகளுடைய நிச்சயம் உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல் (நன்றாய்ச்) சத்தங்களடங்க மௌன நிலையைப் பெற்றவர்கள் பிழைப்பார்கள் (என்பதாகலான்) உன்மத்தத்தை யடைந்த மும்மதத்தைப் பொழிகின்ற யானைகள் மேகக் கூட்டம் போல் நின்று விளங்குகின்ற வாசலுடன் கூடிய சந்திரமண்டலத்தை யளாவுகின்ற மாளிகைகளும், வீடுகளின் சிகரங்களும் நெருங்கிய சந்திரகாந்தக்கல்லினாற் செய்யப்பட்ட ரத்னகஜித மாகிய மேடையின் உச்சியில் முத்தமிழ்க் கோஷித்தலுடன், முத்துக்கள் போன்ற தந்த பந்தியையுடைய பெண்களோடு விருப்பமாய் விளையாடி மோகத்தை அடைந்திருந்தா லென்ன தீமை, யோக நிலையிலிருந்து வாயுவையடக்கிக் கைகளில் நகமாகிய ஆயுதங்களை விரித்த புலிகளும், சிங்கங்களும், கரடிகளும் நுழையப் பெற்ற நெருங்கிய காட்டிலும், மலைகளின் உச்சியிலும், குகைகளிலும் இருந்தாலும் என்ன நன்மை (எ-று)

மனமொடுங்கப் பெறார் இல்லறத்திலிருப்பினும், துறவறத்தி லிருப்பினும் என்ன பிரயோசனம் என்பதாம்.(6)

106. **கைத்தலம் விளங்குமொரு நெல்லியங் கனியெனக்**
கண்டவே தாகமத்தின்
காட்சிபுரு டார்த்தமதில் மாட்சிபெறு முத்தியது
கருதின் அனுமானமாதி
உத்திபல வாநிரு விகற்பமே வில்லையால்
ஒன்றோ டிரண்டென்னவோ
உரையுமிலை நீயுமிலை நானுமிலை என்பதும்
உபாயம்நீ யுண்டுநானுஞ்

சித்தம்உளன் நான்இல்லை எனும்வசனம் நீயறிவை
தெரியார்கள் தெரியவசமோ
செப்புகே வலநீதி யொப்புவமை யல்லவே
சின்முத்தி ராங்கமரபில்
சத்தமற எனையாண்ட குருமௌனி கையினால்
தமியனேற் குதவுபொருளே
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

(பொ-ரை) ஞானமுத்திரையை அங்கமாகவுடைய மௌனமரபினால் அடியேனைச் சத்தமடங்க ஆண்டருளின மௌனகுருவானவர், தன் திருக்கரத்தினாற் றனியனான எனக்குக் கடாட்சிக்கப்பட்ட பொருளே சர்வபொருள் களிலும் நிறைந்திருக்கின்ற அகண்டவஸ்துவான சச்சிதானந்த ரூபமாகிய மங்கள் வஸ்துவே! உள்ளங்கையில் நெல்லிக்கனிபோற் காணப்பட்ட வேதாகமங்களிற் கண்ட பொருள் சதுர்வித புருஷார்த்தமாம், அந்தப் புருஷார்த்தம் நான்கனுள் வீடு என்று சொல்லப்படுவதே மேன்மை யுடையதாம், அந்த வீட்டை (யடையும் வகையை) எண்ணிப் பார்த்தால் அநுமானமுதலான பிரமாணங்களைப் பெறுகின்ற யுத்திகள் அநேகமாகும். அவ்யுக்திகளும் நிருவிகற்பஞானத்திற் பயன்படாதொழியும், ஆதலால், ஒன்றுடன் இரண்டென்று சொல்வோமென்றாற் சொல்லுமில்லை, நீயுமில்லை, நானுமில்லை, என்று சொல்வதும் உபாயமேயாகும். (ஏனெனில் ஆங்கு) நீயென்பதுண்டு நானோ உன்னுடைய திருவருளாணை யினால் இருக்கின்றேன். (என்னுடைய சபாவத்தால்) நானென்பதொரு பொருளாக வில்லை, என்று சொல்லுஞ் சொல்லை நீ யறிவாய். (ஆயினும்) இது வேதாகமங்களாற் சொல்லப்பட்ட மோட்சவழியினொழுங்காகலானும் (இதற்கு வேறுபொருள்) ஒப்பத்தக்க உவமையாகாமை யானும், இதனை அறியும் வலிமை யில்லாதவர்கள் அறியக்கூடுமோ? (எ-று)

புருஷார்த்தம்-அறம், பொருள், இன்பம், வீடு என்பன நிருவிகற்ப ஞானம்-வஸ்துவின் உண்மையையறிதல்.

அநுமானமாதியுத்தி:- *காட்சி, அநுமானம், ஆகமம், அபாவம், அருத்தாபுத்தி, உவமானம் என ஆறாம். அன்றி,*

பாரிசேஷியம், சம்பவம், ஐதீகம், சுபாவம் என்னும் நான்கையுங் கூட்டிப் பத்தென்னலுமாம் இதனை,

" அளவை காண்டல் கருதலுரை யபாவம் பொருளொப் பாறென்பர்
அளவை மேலு மொழிபுண்மை யைதிகத்தோ டியல்பென நான்கு
அளவை காண்ப ரவையிற்றின் மேலு மறைவு ரவையெல்லாம்
அளவை காண்டல் கருதலுரை யென்றிம் மூன்றி னடங்கிடுமே"

என்பதனானறிக. (7)

107. காயாத மரமீது கல்லேறு செல்லுமோ
கடவுள்நீ யாங்களடியேங்
கர்மபந் தத்தினாற் சன்மபந் தம்பெறக்
கற்பித்த துன்னதருளே
வாயார வுண்டபேர் வாழ்த்துவதும் நொந்தபேர்
வைவதுவும் எங்களுலக
வாய்பாடு நிற்கநின் வைதிக ஒழுங்குநினை
வாழ்த்தினாற் பெறுபேறுதான்
ஓயாது பெறுவரென முறையிட்ட தாற்பின்னர்
உளறுவது கருமமன்றாம்
உபயநெறி யீதென்னின் உசிதநெறி எந்தநெறி
உலகிலே பிழைபொறுக்குந்
தாயான கருணையும் உனக்குண் டெனக்கினிச்
சஞ்சலங் கெடஅருள்செய்வாய்
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

(பொ-ரை) சர்வபொருள்களிலும் நிறைந்திருக்கின்ற அகண்ட வஸ்துவான சச்சிதானந்த ரூபமாகிய மங்கள வஸ்துவே! காயாதமரத்தின் மேல் கல்லெறிதல் போகாவாறு போல் நீ கடவுள், நாங்கள் அடிமைகள். (ஆகையால்) கர்மத்தின் தொடக்கால் பிறவித் தொடக்கையடையும்படி எங்களுக்குக் கற்பித்தது உன்னுடைய திருவருளே, வாய் நிறைய உண்டவர்கள் வாழ்த்துவதும், நொந்தவர்கள் நிந்திப்பதும் எங்களுடைய உலகவழக்கம். இதுநிற்க, உன்னை வாழ்த்தினால் பெறுதற்குரிய திருவருட் பேற்றை இடைவிடாமற் பெறுவரென உன்னுடைய வைதீகவொழுக்க நூல்கள் முறையிட்டதால், (இதையறிந்த) பின்னரும், உன்னை நிந்தித்தல் நற்செய்கை யன்றாம். (உலகத்திலுள்ள இரண்டு வழிகள்) வாழ்த்துவதும் வைவதுமாயின், உயர்ந்தவழி எந்தவழி, உலகத்தில் தன்மக்கள் செய்யுங்

குற்றத்தைப் பொறுத்தருள்கின்ற தாயின் கருணை போன்ற கருணையும் உனக்குள்ளது. ஆகையால் அடியேனாகிய எனக்குத் துன்பங்கெடும்படி அருள் செய்குவாய். (எ-று)

இறைவன் பிறவித்துன்பத்தை யடையாதவனென்பார், 'காயாத மரமீது கல்லேறு செல்லுமோ கடவுணீ' எனவும், அப்பிறவித்துன்பம் உயிர்களுக்கு உண்டென்பார், 'கர்மபந்தத்தினாற் சன்மபந்தம் பெறக் கற்பித்தது' எனவும், அதுவும் அவனுடைய திருவருளினா லுண்டாவதென்பார், 'உன்னதருளே' எனவுங் கூறினார். (8)

108. இன்னம் பிறப்பதற் கிடமென்னில் இவ்வுடலம்
இறவா திருப்பமூலத்
தெழும்ங்கி யமிர்தொழுகு மதிமண் டலத்திலுற
என்னம்மை குண்டலினிபால்
பின்னம் பிறக்காது சேயென வளர்த்திடப்
பேயேனை நல்கவேண்டும்
பிறவாத நெறியெனக் குண்டென்னின் இம்மையே
பேசுகர்ப் பூரதீபம்
மின்னும் படிக்ககண்ட டாகார அன்னைபால்
வினையேனை யொப்புவித்து
வீட்டுநெறி கூட்டிடுதல் மிகவுநன் றிவையன்றி
விவகார முண்டென்னிலோ
தன்னந் தனிச் சிறியன் ஆற்றிலேன் போற்றிவளர்
சன்மார்க்க முத்திமுதலே
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

(பொ-ரை) நமஸ்காரம் மிகுகின்ற ஞானமார்க்கத்தை யுடைய மோட்சத்திற்குத் தலைவனே! சர்வ பொருள்களிலும் நிறைந்திருக்கின்ற அகண்ட வஸ்துவான சச்சிதானந்த ரூபமாகிய மங்களவஸ்துவே! இன்னமும் பிறவிக்கிட முண்டென்று சொன்னால், இந்தத்தேகம் இறவாதிருக்கும் வண்ணம், மூலாதாரத்தில் இருந்து கிளம்பி யெழாநின்ற அக்கினியானது அமிர்தத்தைச் சிந்துகின்ற சந்திர மண்டலத்திற் பொருந்தும்படி என் தாயாகிய குண்டலி சத்தியினிடத்தில் குற்றமுண்டாகாமல் குழந்தைபோல் வளர்ந்தருளப் பேயையொத்தவனாகிய என்னைக் கொடுக்க வேண்டும், (அன்றி) எனக்குப் பிறவாத வழியுண்டாயின் இம்மையிற்றானே, சொல்லப்பட்ட கர்ப்பூரதீபம் போல

ஒளிவிடும்படி அகண்ட வடிவென்று சொல்லுகின்ற தாயி னிடத்தில் இருவினையின் காரணத்தால் வந்த என்னை ஒப்புவித்து மோட்ச வழியிற் சேர்ப்பது மிகவும் நன்மை. இவ்விரண்டு மல்லாமல் வேறே விவகாரங் களுண்டென்றால் தன்னந்தனியனாகிய அறிவில்லாத நான் பொறுத்திலேன். (எ-று) (9)

109. வேதாவை இவ்வணம் விதித்ததே தென்னின்உன்
வினைப்பகுதி என்பன் அந்த
வினைபேச அறியாது நிற்கஇவை மனதால்
விளைந்ததால் மனதைநாடில்
போதமே நிற்கும்அப் போதத்தை நாடிலோ
போதமும் நினால்விளக்கம்
பொய்யன்றும் தெய்வமறை யாவுமே நீயென்று
போக்குவர வறநிகழ்த்தும்
ஆதார ஆதேயம் முழுதுநீ யாதலால்
அகிலமீ தென்னை ஆட்டி
ஆடலகண் டவனும்நீ ஆடுகின் றவனும்நீ
அருளும்நீ மௌனஞான
தாதாவும் நீபெற்ற தாய்தந்தை தாமும்நீ
தருமம்நீ யாவும்நீகாண்
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

(பொ-ரை) சர்வ பொருள்களிலும் நிறைந்திருக்கின்ற அகண்டவஸ்து வான சச்சிதானந்த ரூபமாகிய மங்கள வஸ்துவே! பிரமனை நோக்கி இந்த விதமாகச் சிருஷ்டித்தது ஏனென்று கேட்டால், உன்னுடைய இருவினைப் பாகுபாடு என்று சொல்வான், அந்த வினையோ பேசவறியாது, (இதுநிற்க) இவை மனத்தினால் உண்டானவை யாகலான் அம்மனத்தை நாடிப் பார்க்குமிடத்தில் அறிவே முன்னிற் கின்றது. அந்த அறிவை நாடிப்பார்த்தாலோ, அவ்வறிவும் உன்னால் விளக்கப்படுந்தன்மை யுடையது. (இவை யாவும்) பொய்யல்ல தெய்வீகமான வேதங்கள் எல்லாம் நீயேயென்று இடைவிடாமல் சொல்லா நிற்கும், இடமும், இடத்துநிகழ் பொருள்களெல்லாமும் நீயேயாதலால், உலகத்தில் என்னை யாட்டுவித்து, அவ்வாடலைப் பார்த்தவனும் நீ, ஆடுகின்றவனும் நீ, திருவருளும் நீ மௌனஞானத்தை வழங்கும் வள்ளலும் நீ, பெற்ற தாய் தந்தைகளும் நீ, சுற்றத்தாரும் நீ, மற்றுமெல்லாப் பொருள்களும் நீயே. (எ-று)

தான் வசித்தற்கு நிலைக்களமாயுள்ள தேகத்தாற் படுந்துன்பத்தை நோக்கி, அத்தேகத்தைச் சிருஷ்டித்தவனாகிய பிரமனைப் பார்த்து இவ்வாறாய தேகத்தை ஏன் சிருஷ்டித்தாய் என்பார். 'வேதாவையிவ்வணம் வகுத்ததேது' எனவும், அத்தேகங் கிடைத்தல் வினைவயத்தாலாகலின், 'உன் வினைப் பகுதியென்பன்' எனவும், அவ்வினை சடமாகலின், 'அந்த வினைபேச வறியாது' எனவும், சடத்தினை விசாரித்தலின் பயனின்றென்பார், 'நிற்க' எனவும், அவ்வினையுண்டானமைக்கு மனங் காரணமாகலான், 'மனதால் விளைந்ததால்' எனவும், அம்மனத்தினை நாடிப் பார்க்குங்கால் அறிவு முன்னிற்றலின், 'மனதை நாடிற் போதமே நிற்கும்' எனவும், அவ்வறிவும் பாசசம்பந்தப் பட்டதாகலின் உன்னால் விளக்கப்பட வேண்டும் என்பார். 'போதத்தை நாடிலோ போதமு நினால்விளக்கம்' எனவும், இவையனைத்தும் உண்மையேயாகலான், 'பொய்யன்று' எனவும், உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களும் நீயே என்று வேதங்கள் கோஷித்தலின், 'தெய்வமறையாவுமே நீயென்று போக்குவரவற நிகழ்த்தும்' எனவும், இங்ஙன மாகையால் என்னை ஆட்டுவிப்பவன் முதல் யாவும் நீயேயென்பார். 'அகிலமீதென்னையாட்டி-ஆடல் கண்டவனுநீ யாடுகின்றவனுநீ யருளுநீ மௌன ஞானதாதாவு நீ பெற்ற தாய் தந்தை தாமுநீ தமரு நீ யாவுநீ காண்' எனவுங் கூறினார்.

ஆட்டுவிப்பவன் முதல் யாவும் நீ என்றதை:

"ஆட்டு வித்தா லாரொருவ ராடா தாரே
யடக்குவித்தா லாரொருவ ரடங்கா தாரே
யோட்டுவித்தா லாரொருவ ரோடா தாரே
யுருகுவித்தா லாரொருவ ருருகா தாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடா தாரே
பணிவித்தா லாரொருவர் பணியா தாரே
காட்டுவித்தா லாரொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக் காலே"

என்பதனானறிக *(10)*

110. கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினுங்
குளிர்தீம் புனற்கை அள்ளிக்
கொள்ளுகினும் அந்நீ ரிடைத்திளைத் தாடினுங்
குளிர்சந்த வாடைமடவார்

வந்துலவு கின்றதென முன்றிலிடை யுலவவே
வசதிபெறு போதும்வெள்ளை
வட்டமதி பட்டப் பகற்போல நிலவுதர
மகிழ்போதும் வேலையமுதம்
விந்தைபெற அறுசுவையில் வந்ததென அமுதுண்ணும்
வேளையிலும் மாலைகந்தம்
வெள்ளிலை அடைக்காய் விரும்பிவேண் டியவண்ணம்
விளையாடி விழிதுயிலினுஞ்
சந்ததமும் நின்னருளை மறவா வரந்தந்து
தமியேனை ரட்சைபுரிவாய்
சர்வபரி பூரண அகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

(பொ-ரை) சர்வபொருள்களிலும் நிறைந்திருக்கின்ற அகண்ட வஸ்துவான சச்சிதானந்த ரூபமாகிய மங்கள வஸ்துவே! பூங்கொத்துகள் மலர்கின்ற பூஞ்சோலைகளின் நல்ல நிழலிலிருந்தாலும் குளிர்ந்த இனிப்பையுடைய சலத்தைக் கையினால் அள்ளிக் குடித்தாலும், அந்தச் சலத்தில் ஸ்நானஞ் செய்தாலும் குளிர்ந்த சந்தனமணமுள்ள காற்றானது பெண்கள் வந்து உலாவுவதைப்போல் முற்றத்தி லுலாவும்படியான வீடுகளைப் பெறுங்காலத்திலும், வெண்மை நிறத்தையும் வட்டவடிவையுமுடைய சந்திரனா னவன் பட்டப்பகல்போல நிலவைப் பரப்புதலால் மகிழ்ச்சி கொள்ளுங் காலத்திலும் கடலிலிருந்தும் அமிர்தமானது அறுசுவைப் பதார்த்தங்களில் வந்து சேர்ந்ததென்று கண்டோர் அதிசயித்துச் சொல்லும்படி உணவை உண்ணுங் காலத்திலும், பூமாலையையும், சந்தனத்தையும், வெற்றிலைப் பாக்கையுந் தரித்து வேண்டியபடி விளையாடி நித்திரை செய்தாலும், எக்காலத்திலும், உன்னுடைய திருவருளை மறவாத வரத்தை அருள்செய்து தனியனாகிய என்னைக் காப்பாற்றுவாய். (எ-று)

இச்செய்யுளின் கருத்து நான் எப்படிப்பட்ட சுகத்தை அனுபவிக்குங் காலத்திலும் உன் திருவருளை மறவாதிருக்க வரந்தந்தருள வேண்டும் என்பதாம். இதனை,

"இருக்கினு நிற்கும் போது மிரவுகண்டு டுயிலும் போதும்
பொருக்கென நடக்கும் போதும் பொருந்தியூண் டுய்க்கும்
போதும்

முருக்கிதழ்க் கனிவாயாரை முயங்கிநெஞ் சழியும் போதுந்
திருக்களா வுடைய நம்பா சிந்தையுன் பால தாமே"

என்பதனானறிக. *(11)*

தேசோமயானந்தம்

111. மருமலர்ச் சோலைசெறி நன்னீழல் மலையாதி
மன்னுமுனி வர்க்கேவலாய்
மந்த்ரமா லிகைசொல்லும் இயமநிய மாதியாம்
மார்க்கத்தில் நின்றுகொண்டு
கருமருவு காயத்தை நிர்மலம தாகவே
கமலா சனாதிசேர்த்துக்
காலைப் பிடித்தனலை அம்மைகுண் டலியடிக்
கலைமதியி னூடுதாக்கி
உருகிவரும் அமிர்தத்தை யுண்டுண் டுறங்காமல்
உணர்வான விழியை நாடி
ஒன்றோ டிரண்டெனாச் சமரச சொரூபசுகம்
உற்றிடஎன் மன தின்வண்ணந்
திருவருள் முடிக்கஇத் தேகமொடு காண்பனோ
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

(பொ-ரை) தேடுதற் கருமையான உண்மையாகி என்னுடைய மனத்திற் குடிகொண்டிருக்கின்ற ஞான வடிவமான கடவுளே! தேஜோமயமான ஆனந்தமே! மணம்பொருந்திய பூஞ்சோலைகள் அடர்ந்த நல்ல நிழலை யுடைய மலை முதலிய இடங்களில் நிலைத்திருக்கின்ற முனிவர்களுக்கு அடிமையாய், மந்திரமாலிகையென்று சொல்லும் (யோகநூலிற்) சொல்லப் படுகின்ற இயமநியமங்களை முதன்மையாகக் கொண்டிருக்கும் யோக மார்க்கத்திலிருந்து கொண்டு, பிறவித் துன்பம் பொருந்திய சரீரத்தைப் பரிசுத்தமாகும்படி பதுமாசனம் முதலிய ஆசனங்களை அமைத்துப் பிராணவாயுவை அடக்கி, (அதனால் உண்டாம்) மூலாக்கினியை என்னுடைய தாயாகிய குண்டலி சத்தியின் திருவடிகளான கலைகளையுடைய சந்திரனிடத்தில் மோதவிட்டு (அதனால் அதினின்றும்) உருகிவரா நின்ற அமிர்தத்தை இடைவிடாமலுண்டு, உலக நித்திரை செய்யாமலிருக்கும்

வண்ணம் ஞானக் கண்ணை விரும்பி, ஒன்றென்றும், இரண்டென்றுஞ் சொல்லப்படாத சமரசவஸ்துவின் பேரின்பத்தை அடையும்படி என்னுடைய மனோவிச்சையின் வண்ணம் உன்னுடைய திருவருளானது முடித்துக் கைகூட்ட நான் இந்தத் தேகத்தோடிருக்கும் போதே (அவ்வின்பத்தைக்) காண்பனோ. (எ-று)

ஈண்டு, தேஜோமயம்=ஒளிவடிவு (1)

112. **இப்பிறவி என்னுமோர் இருட்கடலில் மூழ்கிநான்**
என்னுமொரு மகரவாய்ப்பட்
டிருவினை எனுந்திரையின் எற்றுண்டு புற்புதம்
எனக்கொங்கை வரிசைகாட்டுந்
துப்பிதழ் மடந்தையர் மயற்சண்ட மாருதச்
சுழல்வந்து வந்தடிப்பச்
சோராத ஆசையாங் கானாறு வான்நதி
சுரந்ததென மேலும்ஆர்ப்பக்
கைப்பரிசு காரர்போல் அறிவான வங்கமுங்
கைவீட்டு மதிமயங்கிக்
கள்ளவங் கக்காலர் வருவரென் றஞ்சியே
கண்ணருவி காட்டும்எளியேன்
செப்பரிய முத்தியாங் கரைசேர வுங்கருணை
செய்வையோ சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

(பொ-ரை) உண்மையாகி என்னுடைய மனத்திற் குடிகொண்டிருக் கின்ற ஞான வடிவமான கடவுளே! தேஜோமயமான ஆனந்தமே! இந்தப் பிறப்பென்று சொல்லுகின்ற ஒப்பற்ற இருட்சமுத்திரத்தில் முழுகி (அக்கடலினிடத்தில்) நான், நான் என்ற சொல்லப்படுகின்ற ஒரு முதலையின் வாயிலகப்பட்டு, நல்வினை தீவினைகளாகிய அலைகளால் அடிக்கப்பட்டு, நீர்க் குமிழிகளைப்போல முலைகளின் வரிசையைக் காட்டுகின்ற பவளம் போன்ற அதரத்தையுடைய பெண்களது மயக்கமாகிய சண்டமாருதக் காற்றானது பலமுறை வந்துமோத, நீங்காத ஆசையாகிய காட்டாறானது ஆகாயகங்கை பெருகினாற் போல அடிக்கடிவந்து வீசக், கையில் புணைப் பொருளுள்ளவர்கள் போல, ஞானமான கப்பலையுங் கைவிட்டுப் புத்தி கலங்கிக் கரிய உடலையுடைய யமபடர்கள் வருவார்களென்று பயந்து

கண்களில் அருவியைப்போலும் நீரைச் சிந்துகின்ற ஏழையாகிய நான் சொல்லுதற்கருமையான மோட்ச மாகியகரையை யடையவும் கிருபை செய்வையோ. (எ-று)

பிறவியானது சமுத்திரம் போறலின், 'இப்பிறவி யென்னுமோ ரிருட்கடலின்' எனவும், நான் அப்பிறவியை யடைந்தே னென்பார்' 'மூழ்கி' எனவும், அங்ஙனம் பிறந்த நான் அகங்காரத்தின் வயத்தனா யிருக்கிறேனென்பார், 'நானென்னு மொருமகர வாய்ப்பட்டு' எனவும், அவ்வகங்காரத்தால் இருவினைகளுண்டாகி வருத்துகின்றன வென்பார், 'இருவினை யெனுந்திரையி னெற்றுண்டு' எனவும், அவ்வினைக் காரணமாகக் காம மயக்க முண்டாகின்ற தென்பார், 'புற்புதமெனக் கொங்கை வரிசைகாட்டுந்துப்பிதழ் மடந்தையர் மயற்கண்ட மாருதச் சுழல்வந்து வந்தடிப்ப' எனவும், இங்ஙனமாய எனக்கு அவாவு மேலிடுகின்ற தென்பார், 'சோராதவாசையாங் கானாறு வானதி சுரந்ததென மேலுமார்ப்ப' எனவும், இவற்றை யெல்லாம் உண்மையாக நம்பி ஞானமார்க்கத்தை இழந்தேனென்பார், 'கைப்பரிசுகாரர் போலறிவானவங்கமும் ங்கைவிட்டு மதிமயங்கி' எனவும் ஞானத்தை இழந்தமையால் யமதூதர் வருதற்குத் தடையின்றென்பார், 'கள்ள வங்கக்காலர் வருவரென்றஞ்சியே கண்ணருவி காட்டு மெளியேன்' எனவும், இப்படிப்பட்ட நான் முத்தியை அடையும்படி அருள் செய்ய வேண்டும் என்பார், 'செப்பரிய முத்தியாங்கரை சேரவுங் கருணை செய்வையோ' எனவுங் கூறினார்.

பிறவி முதலியவைகள், கடல் முதலியவைகளாகச் சொல்லப் பட்டமையை,

> **"தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்**
> **தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்**
> **கனியைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற்**
> **கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு**
> **இனியென்னே யுய்யுமா றென்றென் றெண்ணி**
> **யஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை**
> **முனைவனே முதலந்த மில்லா மல்லற்**
> **கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே"**

என்பதனானறிக.

இந்நூலாசிரியர், நானென்னு மகங்காரத்தை முதலை யாகவும், இம்மேற்கோட் செய்யுளுக்காசிரியர் காம மயக்கத்தை முதலையாகவும் கூறினர், பூதங்களை முதலைகளாகக் கூறுவதுமுண்டு, இதனை.

**"ஒருமுழ முள்ள குட்ட மொன்பது தொளையுடைத்தா
யரைமுழ மதன கல மதனில்வாழ் முதலை யைந்து
பெருமுறை வாய்தல் பற்றிக் கிடந்து நான் பிதற்று கின்றேன்
கருமுகி றவழு மாடக் கச்சியே கம்ப னீரே"**

என்பதனானறிக. *(2)*

113. **தந்தைதாய் தமர்தாரம் மகவென்னும் இவையெலாஞ்
சந்தையிற் கூட்டம்இதிலோ
சந்தேக மில்லைமணி மாடமா ளிகைமேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோர் இந்த்ரசா லக்கோலம்
வஞ்சனை பொறாமைலோபம்
வைத்தமன மாங்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனையி லாதகனவே
எந்தநா ளுஞ்சரி யெனத்தேர்ந்து தேர்ந்துமே
இரவுபக லில்லாவிடத்
தேகமாய் நின்றநின் அருள்வெள்ள மீ திலே
யானென்ப தறவுமூழ்கிச்
சிந்தைதான் தெளியாது சுழலும்வகை என்கொலோ
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.**

(பொ-ரை) தேடுதற்கு அருமையான உண்மையாகி என்னுடைய மனத்திற் குடிகொண்டிருக்கின்ற ஞான வடிவமான கடவுளே! தேஜோமயமான ஆனந்தமே! தகப்பன், தாய், சுற்றத்தார், மனைவி, குழந்தை என்று சொல்லப்படும் இந்தப் பொருள்களெல்லாம், சந்தையிற் கூடுங் கூட்டத்தை யொப்பாகும். இதில் யாதொரு சந்தேகமுமில்லை. இரத்தின கசிதமான வீடுகள், மாளிகைகள், இரத, கஜ, துரக, பதாதிகள் என்னும் சதுரங்க சேனைகள் ஆகிய இவைகளுடன் கூடிவந்ததாகிய ஒப்பற்றவாழ்வும் ஒப்பற்ற இந்திரசாலவடிவை யொப்பாகும். கபடம், பொறாமை, உலோபம், (ஆகிய இவைகள்) வைக்கப்பெற்ற மனமாகிய கிருமி சேர்ந்திருக்கும்

மலபாத்திரமாகிய சரீரமோ, விரும்பப்படாத கனவினை யொப்பாகும், என்று இவைகளை எக்காலத்திலுஞ் சமரசமாக மிகுதியுந் தெளிந்து இராப்பகலற்றவிடத்தில் ஒன்றாகி நின்ற உன்னுடைய திருவருட் பெருக்கில், நான் என்னும் அகங் காரமொழிய மூழ்கி மனந் தெளிவு பெறாமல் உழலும் வகையாது? (எ-று)

தான் தேகத்தோடு கூடியிருக்கும் வரைக்குமே தந்தைதாய் முதலியோராகலான், 'தந்தைதாய் தமர் தாரமகவென்னு மிவையெலாஞ் சந்தையிற் கூட்டமிதிலோ சந்தேகமில்லை' எனவும், சதுரங்க முதலிய சேனைகளோடு கூடி வாழ்தலும் நிலையற்றதாகலான், 'மணிமாடமாளிகை மேடை-சதுரங்க சேனையுடனே வந்ததோர் வாழ்வுமோ ரிந்திரசாலக் கோலம்,' எனவும் தேகம் நிலையில்லாத தாகலின், 'வஞ்சனை பொறாமை லோபம்-வைத்த மனமாங்கிருமி சேர்ந்த மலபாண்டமோ வாஞ்சனை யிலாதகனவே' எனவுங் கூறினார்.

சதுரங்க சேனைகளோடு கூடி வாழ்தலும் நிலையற்ற தென்பதை:

> " மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
> தலைமிசைக் கொண்ட குடையர்-நிலமிசைத்
> துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்
> எஞ்சினா ரிவ்வுலகி லில்"

எனவும்,

> " மத்த யானை யேறி மன்னர் சூழ வருவீர்காள்
> செத்த போதி லாருமில்லை சிந்தையுள் வைம்மின்கள்
> வைத்தவுள்ள மாற்றவேண்டா வம்மின் மனத்தீரே
> அத்தர்கோயி லெதிர்கொள்பாடி யென்பதடைவோமே"

எனவும் வருவனவற்றா னறிக. *(3)*

114. **ஆடாமல் ஓய்ந்திட்ட பம்பரம் போல்விசை**
அடங்கி மனம்வீழநேரே
அறியாமை யாகின்ற இருளகல இருளொளியும்
அல்லா திருந்தவெளிபோல்
கோடா தெனைக்கண் டெனக்குள்நிறை சாந்தவெளி
கூடிஇன் பாதீ தமுங்
கூடினே னோசரியை கிரியையின் முயன்றுநெறி
கூடினே னோ அல்லன்யான்

ஈடாக வேயாறு வீட்டினில் நிரம்பியே
இலகிவளர் பிராணனென்னும்
இருநிதி யினைக்கட்டி யோகபர னாகாமல்
ஏழைக் குடும்பனாகித்
தேடா தழிக்கவொரு மதிவந்த தென்கொலோ
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

(பொ-ரை) தேடுதற்கு அருமையான உண்மையாகி என்னுடைய மனத்திற் குடிகொண்டிருக்கின்ற ஞான வடிவ மான கடவுளே! தேஜோமயமான ஆனந்தமே! ஆடாமல் நின்று விட்ட பம்பரம்போல மனமானது வேகமடங்கி விழவும் அறியாமையான இருள் நீங்கவும் இருளும், ஒளியு மல்லாமலிருந்த பரமாகாசம் போலத், தவறாமல் என்னை யறிந்து, எனக்குள் நிறைந்த சாந்தமென்னும் ஆகாயத்திற் கேர்ந்து சுகாதீத நிலையையும் அடைந்தேனோ? சரியை, கிரியைகளாகிய மார்க்கங்களில் முயன்று அதனால் நன்மார்க்கத்தை அடைந்தேனோ, இல்லை (அங்ஙனம் இவைகளை) யடையாதவனாகிய நான் ஆறாதாரங்களிலும் சமமாய் நிறைந்து விளங்கி வளர்கின்ற பிராணவாயு வென்னும் பெரிய செல்வத்தைச் செலவிடாமற் கட்டி அதிர்ஷ்டவானாகாமல் ஏழைக் குடியானவனாகி (மேலு மேலும் அப்பிராண வாயுவாகிய செல்வத்தைத்) தேடாமற் செலவு செய்யும்படியான ஒரு புத்தியுண்டானது (இதற்குக் காரணம்) யாதோ? அறியேன். (எ-று)

மனத்தின் ஒடுக்கத்தை 'ஆடாம லோய்ந்திட்ட பம்பரம் போல்' என உவமித்தமையின், ஆடும் பம்பரம் போன்றது அதன் செய்கை என்ற தாயிற்று.

ஒருவன் தரித்திரம் உண்டாகாதபடி செல்வ மீட்டுதல் போல், யோகசித்தியின் பொருட்டு ஆயுள் விர்த்தியாகப் பிராண வாயுவைச் செலவிடாமற் சேர்க்க வேண்டுமென்பார், 'ஈடாகவேயாறு விட்டினிரம்பியே யிலகிவிளர்பிராணனென்னு மிருநிதியினைக் கட்டி யோகபரனா காமலேழைக் குடும்பனாகித் தேடாதழிக்க வொருமதி வந்ததென்கொலோ' எனக் கூறினார். (4)

115. பாடாது பாடிப் படித்தளவில் சமயமும்
பஞ்சுபடு சொல்லன் இவனைப்
பார்மினோ பார்மினோ என்றுசபை கூடவும்
பரமார்த்தம் இதுஎன்னவே
ஆடாதும் ஆடிநெஞ் சுருகிநெக் காடவே
அமலமே ஏகமேஎம்
ஆதியே சோதியே எங்குநிறை கடவுளே
அரசே எனக்கூவிநான்
வாடாது வாடுமென் முகவாட்ட முங்கண்டு
வாடா எனக்கருணைநீ
வைத்திடா வண்ணமே சங்கேத மாவிந்த
வன்மையை வளர்ப்பித்ததார்
தேடாது தேடுவோர் தேட்டற்ற தேட்டமே
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

(பொ-ரை) தேடாமல் தேடுவோர்க்குந் தேடுதலற்ற செல்வமே! தேடுதற் கருமையான உண்மையாகி என்னுடைய மனத்திற் குடிகொண்டிருக்கின்ற ஞானவடிவமான கடவுளே! தேஜோமயமான ஆனந்தமே! பாடாதவை களையெல்லாம் பாடிப் படித்த அளவில், சமயங்களெல்லாம் பஞ்சுபோலப் பறக்கும் படியான சொற்களையுடைய இவனைப் பாருங்கள், பாருங்களென்று சொல்லிக் கொண்டு சபைகூடவும், இதுவே மேலான பொருளென்று ஆடாமலுமாடி, மனமிளகி நெக்குவிட்டாடப் பரிசுத்தமே! ஒன்றே! எம்முடைய முதல்வனே! ஒளியே! எவ்விடத்திலும் நிறைந்த தெய்வமே! தலைவனே! என்று கூவி, நான் வாடாதும் வாடுகின்ற என் முகத்தின் வாட்டத்தையும் பார்த்து வாடா என்று நீ கிருபை செய்யாத வகை உனக்கிந்த மனவலிமையை ஓரளவாக விருத்தி செய்வித்தது யார்? (எ-று)

நீயே முற்றுமுணரும் இறைவனாயிருக்க, உனக்கு மனவன்மையைக் கொடுப்பவர் ஒருவருமில்லையென்பார். 'வாடாவெனக்கருணை நீ வைத்திடா வண்ணமே சங்கேத மாவிந்த வன்மையை வளர்ப்பித்ததார்' எனக் கூறினார். (5)

116. பிறியாத தண்ணருட் சிவஞானி யாய்வந்து
பேசரிய வாசியாலே

பேரின்ப உண்மையை அளித்தனைஎன் மனதறப்
பேரம்ப லக்கடவுளாய்
அறிவா யிருந்திடும் நாதவொலி காட்டியே
அமிர்தப்ர வாகசித்தி
அருளினைய லாதுதிரு அம்பலமு மாகிஎனை
ஆண்டனைபின் எய்திநெறியாய்க்
குறிதா னளித்தனைநன் மரவுரிகொ ளந்தணக்
கோலமாய் அசபாநலங்
கூறினபின் மௌனியாய்ச் சும்மா இருக்கநெறி
கூட்டினை எலாமிருக்கச்
சிறியேன் மயங்கிமிக அறிவின்மை யாவனோ
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

(பொ-ரை) தேடுதற்கு அருமையான உண்மையாகி என்னுடைய மனத்திற் குடிகொண்டிருக்கின்ற ஞான வடிவமான கடவுளே! தேஜோமயமான ஆனந்தமே! எக்காலத்திலும் நீங்காத குளிர்ந்த அருளையுடைய சிவ ஞானியின் திருமேனியாய் வந்து, சொல்லுதற்கு அருமை யான வாயுவினால் என்னுடைய மனமிறக்கப் பேரின்ப உண்மையைத் திருவருள் செய்தாய்; பேரம்பலக்கடவுளாய் வந்து அறிவு மயமாயிருக் கின்ற நாதவோசையைக் காட்டி அமிர்தவெள்ளங் கைகூடும்படி யருள் செய்தாய்; அல்லாமல், திருவம்பலக் கடவுளாய் வந்து என்னை அடிமை கொண்டாய்; பின்னர் வந்து வரிசைக் கிரமப்படி சின்முத்திரையை அருள் செய்தாய்; நல்ல மரவுரி பூண்ட அந்தண ரூபமாய் வந்து செபியாமற் செபிக்கு மார்க்கத்தை உபதேசித்தபின், மௌனியாகி வந்து சும்மாவிருக்கும் வழியிற் சேர்ந்தாய், இவைகளெல்லா மிருக்கச். சிறியவனாகிய நான் மயங்கி மிகவும் அறிவில்லாதவனாய் விடுவனோ. (எ-று)

இங்ஙனம் பல சமயங்களிலும் பல ரூபங் கொண்டெழுந்தருளி வந்து பலவாறு உபதேசித்திருந்தும், அஞ்ஞானஞ் சிறிது வந்து மயக்கு கின்ற தென்பார், 'எலாமிருக்கச்-சிறியேன் மயங்கி மிக வறிவின்மையாவனோ' எனக் கூறினார்.

ஈண்டுப் பிரியாத எனற்பாலது எதுகை நோக்கிப் பிறியாத என வந்தது. *(6)*

117. ஆரா ரெனக்கென்ன போதித்தும் என்னஎன்
அறிவினை மயக்கவசமோ
அண்டகோ டிகளெலாங் கருப்ப அறை போலவும்
அடுக்கடுக் காஅமைத்துப்
பேராமல் நின்றபர வெளியிலே மனவெளி
பிறங்குவத லாதொன்றினும்
பின்னமுற மருவாது நன்னயத் தாலினிப்
பேரின்ப முத்திநிலையுந்
தாராது தள்ளவும் போகாது னாலது
தள்ளினும் போகேனியான்
தடையேது மில்லையாண் டவனடிமை யென்னுமிரு
தன்மையிலும் என்வழக்குத்
தீராது விடுவதிலை நடுவான கடவுளே
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

(பொ-ரை) நடுவுநிலைமையான தெய்வமே! தேடுதற்கு அருமையான உண்மையாகி என்னுடைய மனத்திற் குடி கொண்டிருக்கின்ற ஞான வடிவமான கடவுளே! தேஜோ மயமான ஆனந்தமே! அண்டகோடிகளை யெல்லாம் கர்ப்பவீடுகள் போலவும் வரிசை வரிசையாக நிறுத்தித் தான் மாறாமல் நின்ற பரமாகாயத்தில் மனமாகிய ஆகாயம் விளங்குவதல்லாமல் அழியும் விதமாய் வேறெதினும் சேராது (அங்ஙனம் அதிற் சேராதபடி) எனக்கு யார், யார், எதைப் போதித்தாலும் என்ன பிரயோசனம் என்னுடைய அறிவை மயக்கிவிட வசமாகுமோ? இனி நல்ல விருப்பத்தால் பேரானந்தத்தைத் தரும் மோட்ச நிலையையும் கொடாமல் நீக்கவும் படாது; உன்னுடைய உத்திரவினால் (அதுவே என்னை) நீக்கினாலும் நான் போகமாட்டேன். இதற்கு யாதொரு தடையுமில்லை. நீ என்னை ஆண்டவன், நான் உனக்கடிமை என்னும் இருதன்மையினாலும் என்னுடைய வழக்குத் தீராமல் உன்னை விடுவதில்லை. (எ-று)

உலகத்தில் லௌகீக நெறியினின்றும் நீங்கி மோட்ச வழியிற் செல்வோர்க்கு அந்நெறியிற் செல்லாத வண்ணம் பலர் பலவாறு போதிக்குஞ் சுபாவமுண்மையின், அப் போதனையின் வழியில் என்னுடைய மனஞ் செல்லா தென்பார். 'ஆராரெனக்கென்ன போதித்துமென்னவென்

னறிவினை மயக்கவசமோ-அண்ட கோடிகளெலாங் கருப்பவறை போலவும் அடுக்கடுக்காவ மைத்துப் பேராமனின்ற பரவெளியிலே மனவெளி பிறங்குதலா தொன்றினும் - பின்ன முறமருவாது' எனவும், உனக்கும், எனக்கும், ஆண்டவன், அடிமை, என்கிற பேரினால் ஒரு பெரிய வழக் குண்மையின் எனக்கு, முத்திநிலையைக் கொடாமல் நீக்கினாலும் நான் போகேன் என்பார். 'நன்னயத்தாலினிப் பேரின்பமுத்தினிலையுந் தாராது தள்ளவும் போகாதுனாலது தள்ளினும் போகேனியான் - தடையேதுமில்லை. யாண்டவனடிமையென்னுமிரு தன்னையிலு மென்வழக்குத் தீராது விடுவதில்லை' எனவும் பஞ்சகீர்த்தியங்களையும் நடுவு நிலைமையாய் நின்று நடந்து வோனாகலின் 'நடுவான கடவுளே' எனவுங் கூறினார். (7)

118. கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
கரடிவெம் புலிவாயையுங்
கட்டலாம் ஒருசிங்கம் முதுகின்மேற் கொள்ளலாங்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலின் இரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத்து லாவலாம்
விண்ணவரை ஏவல்கொளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தி னும்புகுதலாஞ்
சலமேல் நடக்கலாங் கனல்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறமரிது சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

(பொ-ரை) உண்மையாகி என்னுடைய மனத்திற் குடிகொண்டிருக்கின்ற ஞானவடிவமான கடவுளே! தேஜோமயமான ஆனந்தமே! குதிரைகளையும் மும்மதம் பொழிகின்ற யானைகளையும் அடக்கி வசப்படுத்தி நடத்துதற்காகும், கரடியின் வாயையுங் கொடிய புலியின் வாயையுங் கட்டிவிடுதற்காகும், ஒப்பற்ற சிங்கத்தின் முதுகின்மேலேறி உட்கார்ந் திருத்தலாகும், பாம்புகளைப் புற்றினின்றும் வெளியிலெடுத்து ஆட்டுதலாகும், கொடிய

நெருப்பில் பாதரசத்தை விட்டுப் பஞ்சலோகங்களையும் பரிசவேதி செய்து விற்று (அதனால்) ஊனுண்டு வாழலாம். வேறொருவர் காணாமலிருக்கும்படி உலகத்திற் சஞ்சரிக்கலாம், தேவர்களை ஏவலாளர் களாக்கிக் கொள்ளலாம். எப்பொழுதும் இளமைப் பருவத்தோடு இருக்கலாம். வேறோருடலிலும் பிரவேசிக்கலாம். நீர்மேல் நடக்கலாம், அக்கினியின் மேல் இருக்கலாம். தனக் கொப்பில்லாத மற்றுமுள்ள சித்தி களையும் பெறலாம், (ஆயின்) மனத்தை அடக்கிச் சும்மாயிருக்கும் விதம் அருமை யாகும். (எ-று)

மும்மதம் என்றது-கன்னமதம், கபோலமதம், பீஜமதம், பஞ்சலோகங்கள்-பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என்பன.

கந்துகமதக்கரியை வசமா நடத்தல் முதல் கட்செவி யெடுத்தாட்டுதல் ஈறாகவுள்ள எளிய காரியங்களையும் வெந்தழலினி ரதம் வைத்து வேதித்தல் முதல் தன்னிகரில் சித்தி பெறுதலீறாகவுள்ள அரிய காரியங் களையும் செய்து முடிக்கினும், மனத்தை மாத்திரம் வசப்படுத்த முடியா தென்பது கருத்து. (8)

119. எல்லாம் அறிந்தவரும் ஏதுமறி யாதவரும்
இல்லையெனு மிவ்வுலகமீ
தேதுமறி யாதவ னெனப்பெயர் தரித்துமிக
ஏழைக்குள் ஏழையாகிக்
கல்லாத அறிவிற் கடைப்பட்ட நான்அன்று
கையினால் உண்மைஞானங்
கற்பித்த நின்னருளி னுக்கென்ன கைம்மாறு
காட்டுவேன் குற்றேவல்நான்
அல்லார்ந்த மேனியொடு குண்டுகட் பிறைஎயிற்
றாபாச வடிவமான
அந்தகா நீயொரு பகட்டாற் பகட்டுவ
தடாதடா காசுநம்பால்
செல்லா தடாஎன்று பேசவா யதுதந்த
செல்வமே சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

(பொ-ரை) மிகவும் கறுத்த சரீரத்தையும், ஆழமான கண்களையும் மூன்றாம் பிறை போன்ற கோரதந்தங்களையும்,

கண்டோர் பயப்படும் படியான ஆபாச வடிவத்தையுமுடைய இயமனே! நீயொரு எருமைக் கடாவை வாகனமாகக் கொண்டு வந்து மயங்குதல் தகாதடா, உன்னுடைய (மயக்குதலாகிய) கர்சு நம்மிடத்திற் செல்லாதடா, என்று அஞ்சாமற் பேசுதற்கு வாக்கையருள் செய்த என்னுடைய செல்வமே! உண்மையாகி என்னுடைய மனத்திற் குடிகொண்டிருக்கின்ற ஞானவடிவமான கடவுளே! தேஜோமயமான ஆனந்தமே! எல்லாந் தெரிந்தவர்களும், ஒன்றுந் தெரியாதவர்களும் இல்லை என்று சொல்லுகின்ற இவ்வுலகத்தில், ஒன்றுந் தெரியாதவன் என்கிற பெயரைப் பூண்டு மிகவும் எளியவர்களுக்குள் எளியவனாய், கல்லாத அறிவினாற் கடைப்பட்டவனாகிய நான் அக்காலத்தில் திருக்கரங் கொண்டு மெய்ஞ்ஞானத்தை அருள் செய்த உன்னுடைய திருவருளுக்கும் குற்றேவல் செய்தற்குரிய அடியவனாகையால் என்ன பதிலுபகாரஞ் செய்வேன்.(எ-று)

இறைவன் உபதேசித்த ஞானத்தால் எமனுக்கு அஞ்சாத தீர முண்டென்பார். 'அல்லார்ந்த மேனியொடு குண்டு கட்பிறையெயிற் றாபாச வடிவமான அந்நகா நீயொரு பகட்டாற் பகட்டுவ தடாதடாகாசுநம்பாற் செல்லாதடாவென்று பேச வாயதுதந்த செல்வமே' எனக் கூறினார். (9)

120. மின்போலும் இடையொடியும் ஒடியுமென மொழிதல் போல்
மென்சிலம் பொலிகளார்ப்ப
வீங்கிப் புடைத்துவிமு சுமையன்ன கொங்கைமட
மின்னார்கள் பின்ஆவலால்
என்போல் அலைந்தவர்கள் கற்றார்கள் கல்லார்கள்
இருவர்களில் ஒருவருண்டோ
என்செய்கேன் அம்மம்ம என்பாவம் என்கொடுமை
ஏதென் றெடுத்துமொழிவேன்
அன்பால் வியந்துருகி அடியற்ற மரமென்ன
அடியிலே வீழ்ந்துவீழ்ந்தெம்
அடிகளே யுமதடிமை யாங்களெனு நால்வருக்
கறமாதி பொருளுரைப்பத்
தென்பாலின் முகமாகி வடவா லிருக்கின்ற
செல்வமே சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

(பொ-ரை) அன்பினாற் புகழ்ந்து மனங் கரைந்து வேரற்ற மரம்போல உமது திருவடியில் விழுந்து விழுந்து எம்முடைய தலைவனே, நாங்கள் உம்முடைய அடிமைகளென்று சொல்லித் துதிக்கும் சனகாதிகள் நால்வருக்குத் தருமார்த்த நாம மோட்சங்களைத் திருவாய் மலர்ந்தருளுதற் பொருட்டு வடவாலவிருட்சத்தின் கீழ்த் தெற்குத் திசையை நோக்கிய முகமாகி எழுந்தருளியிருக்கின்ற செல்வமே! உண்மையாகி என்னுடைய மனத்திற் குடிகொண்டிருக்கின்ற ஞானவடிவமான கடவுளே! தேஜோமயமான ஆனந்தமே! மின்னலைப் போன்ற இடையானது ஒடியும், ஒடியுமென்று சொல்லுதல் போல், காலிற்றரித்திருக்கும் மெல்லிய சிலம்புகள் ஆரவாரிக்கப் பருத்து விம்மிச் சில நாட்களில் தளர்கின்ற பாரத்தை யொத்த தனங் களையுடைய இளமை வாய்ந்த பெண்களின் பின் விருப்பத்தால் என்னைப் போற் றிரிந்தவர்கள், கற்றவர்கள், கல்லாதவர்கள் என்கிற இருவிதத்தாருள் ஒருவராயினு முளரோ, என்ன செய்வேன், என்னுடைய பாவத்தையும், என்னுடைய கொடுமைகளையும் என்னவென்றெடுத்துச் சொல்வேன் (எ-று)

இங்ஙனம் பெண்கள் மார் கையிலிருந்த எனக்கு உன்னுடைய திருவருள் வாய்க்கும் காலம் எந்தக்காலமோ என்பது குறிப்பு. (10)

121. புத்தமிர்த போகமுங் கற்பகநன் னீழலில்
பொலிவுற இருக்குமியல்பும்
பொன்னுலகி லயிரா வதத்தேறு வரிசையும்
பூமண்ட லாதிக்கமும்
மத்தவெறி யினர்வேண்டும் மாலென்று தள்ளவும்எம்
மாலுமொரு சுட்டும்அறவே
வைக்கின்ற வைப்பாளன் மௌனதே சிகனென்ன
வந்தநின் னருள்வாழிகாண்
சுத்தபரி பூரண அகண்டமே ஏகமே
சுருதிமுடி வானபொருளே
சொல்லரிய வுயிரினிடை யங்கங்கு நின்றருள்
சுரந்துபொழி கருணைமுகிலே
சித்திநிலை முத்திநிலை விளைகின்ற பூமியே
தேடரிய சத்தாகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோ மயானந்தமே.

(பொ-ரை) நிர்மலமான எங்கு நிறைந்த அகண்டரூபமே! ஒன்றே! வேதாந்தத்தில் விளங்குகின்ற பொருளே! சொல்லுதற்கு அருமையான (மூவகை) உயிர்களில் (அவ்வவ்வுயிர்களுக்குத் தக்கவாறு) அவ்வவ் விடங்களினின்று அருளாகிய மழையைச் சுரந்து பொழிகின்ற கருணையையுடைய மேகமே! சித்திநிலை முத்திநிலைகளாகிய பயிர்கள் விளைகின்ற ஞானபூமியே! தேடுதற்கருமையான உண்மையாகி என்னுடைய மனத்திற் குடி கொண்டிருக்கின்ற ஞானவடிவமான கடவுளே! தேஜோ மயமான ஆனந்தமே! புதிய அமிர்தத்தை உண்டு அனுபவிக்கும் போகமும், கற்பக விருட்சத்தின் நல்ல நிழலில் விளங்கும்படி வீற்றிருக்குந் தன்மையும், சுவர்க்கலோகத்தில் ஐராவதமென்னும் வெள்ளை யானையின் மேல் ஏறுகின்ற கீர்த்தியும், பூமியில் உயர்வும், உன்மத்தங் கொண்ட வெறியாளர்களால் விரும்பப்படுகின்ற ஆசையாகுமென்று (அவைகளை) நீக்கவும், எங்களாலும் ஒரு சுட்டுதலொழியவும் (உண்மை நிலையில்) வைக்கின்ற வைப்பாளனான மௌனகுருவென்று (பலருஞ்) சொல்லும்படி எழுந்தருளி வந்த உன்னுடைய திருவருளானது வாழக் கடவது. (எ-று)

மூவகையுயிர்கள் = விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர். (11)

சிற்சுகோதய விலாசம்

பதினான்கு சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

122. காசு மோடுகமு கலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தியைக்
காலி ரண்டுநவ வாசல் பெற்றுவளர்
காம வேள்நடன சாலையை
மோக ஆசைமுறி யிட்ட பெட்டியையும்
மலமி குந்தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை
முடங்க லார்கிடை சரக்கினை
மாக இந்த்ரதனு மின்னை யொத்திலக
வேதம் ஓதியகு லாலனார்
வனைய வெய்யதடி கார னானயமன்
வந்த டிக்குமொரு மட்கலத்

தேக மானபொயை மெய்யெ னக்கருதி
ஐய வையமிசை வாடவோ
தெரிவ தற்கரிய பிரமமே அமல
சிற்சு கோதய விலாசமே.

(பொ-ரை) அறிதற்கருமையாகிய பிரமமே! பரிசுத்தமாகிய ஞானானந்தம் உதயமாகின்ற விலாசமே! காகங்களும், கழுகுகளும், பேய்களும், நாய்களும், நரிகளும், சூழ்தற்குக் காரணமாகச் சோறிட்டு வைக்கின்ற தோற்பையை, இரண்டு கால்களையும், ஒன்பது வாசல்களையும் பெற்று விருத்தியடையா நின்ற மன்மதனது நாட்டிய சாலையை, மோகவாசை யென்கிற முறிச்சீட்டை அடைத்து வைத்துள்ள பெட்டியை, ஆணவம், காமியம், மாயை, என்னும் மூன்று மலங்களும் மிகுந்தொழுகா நின்ற கிணற்றை, கொடியபுழுக்கள் கூட்டமாய்க் கூடித் ததும்புகின்ற நரகத்தை, குற்றம் பொருந்திய கிடைச் சரக்கை, ஆகாயத்திலுண்டாகும் இந்திர வில்லையும், மின்னலையுமொத்து விளங்கும்படி, நான்கு வேதங்களையுங் கற்றுணர்ந்த குயவர் உண்டு பண்ண, கொடுமையையுடைய தண்டதரனான யமனானவன் வந்து அடித்துடைத்து விடுகின்ற ஒரு மட்கலம் போன்ற சரீரமாகிய பொய்ப் பொருளை உண்மைப் பொருளென்று நினைத்து ஐயனே! இவ்வுலகத்தில் வாடி நிற்கவோ. (எ-று)

"நாய்நம தெனநரி நமதெனப் பிதா
தாய்நம தெனநமன் றனதெனப் பிணி
பேய்நம தெனமன மதிக்கும் பெற்றிபோ
லாய்நம தெனப்படும் யாக்கை யாரதே"

என்றாகலின், 'காகமோடு கழுகலகை நாய்நரிகள் சுற்றுசோறிடு துருத்தியை' எனவும், மன்மதனுடைய காரியங்களுக்கு ஒரு சாலை போன்றிருத்தலின், 'காலிரண்டு நவவாசல் பெற்றுவளர் காம வேண்டன சாலையை' எனவும், கடைச்சரக்கு, கிடைச்சரக்கு என்பவற்றுள் இது விலைபடாததென்பார், 'முடங்கலார் கிடைசரக்கினை' எனவும், இது தோன்றி பழியுந்திலக' எனவும், இதனை யுண்டு பண்ணினவன் சிருஷ்டி கர்த்தாவென்பார், 'வேதமோதிய குலாலனார்வனைய' எனவும், ஆனால் இது யமனுக்கொரு மட்கலம் போன்றதென்பார், 'வெய்யதடி காரனானயமன் வந்தடிக்குமொரு மட்கலத்தேகமான பொயை' எனவுங் கூறினார். (1)

123. **குறிக ளோடுகுண மேது மின்றியனல்**
ஒழுக நின்றிடும் இரும்பனல்
கூட லின்றியது வாயி ருந்தபடி
கொடிய ஆணவ அறைக்குளே
அறிவ தேதும்அற அறிவி லாமைமய
மாயி ருக்குமெனை அருளினால்
அளவி லாததனு கரண மாதியை
அளித்த போதுனை அறிந்துநான்
பிறிவி லாதவண நின்றி டாதபடி
பலநி றங்கவரும் உபலமாய்ப்
பெரிய மாயையி லழுந்தி நின்னது
ப்ரசாத நல்லருள் மறந்திடுஞ்
சிறிய னேனுமுனை வந்த ணைந்துசுக
மாயி ருப்பதினி என்றுகாண்
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

(பொ-ரை) அறிதற்கருமையாகிய பிரமமே! பரிசுத்த மாகிய ஞானானந்தம் உதயமாகின்ற விலாசமே! குறிகளுங் குணமுங் கொஞ்சமுமில்லாமல் நெருப்புதிர இருந்த இரும்பானது அந்நெருப்போடு கூடாமல் அவ்விரும் பாகவே யிருந்தது போலக், கொடிதாகிய ஆணவமாகிய வீட்டுக்குள்ளே அறியுந்தொழில் சுற்றுமில்லாமல் அறிவில்லாமையையே ஒரு ரூபமாய்க் கொண்டிருக்கின்ற அடியேனுக்குக் கருணையினால் அளவில்லாத தநு, கரண, புவன, போகங்களைக் கொடுத்த போது நான் உன்னையுணர்ந்து கொண்டு பிரியாத வகையாய் நின்றி டாமல், பல நிறங்களையுந் தன் வசமாக்கிக் கொள்ளும் பளிங்குக் கல்லையொத்துப் பெரிய மாயையாகிய கடலில் அழுந்தி உன்னுடைய அநுக்கிரகமாகிய உயர்ந்த திருவருளை மறந்த அறிவில்லாதவனாகிய நானும் உன்னை வந்து சேர்ந்து இன்பமய மாயிருப்பது இனி எந்தக்காலம்? (எ-று)

இரும்பை நெருப்பிற் காய்ச்சி யடித்த போது, செம்மையாயிருந்ததே யொழிய அந்நெருப்பாகவே ஆகவில்லை. அதுபோல உயிர் ஆணவத்தோடு கூடியிருந்த தேயன்றி அவ்வாணவமாகவே ஆகவில்லையென்பார். 'அனலொழுகநின்றிடுமிரும்பறை-கூடலின்றியது கொடியவாணவ வறைக்குளே-அறிவதேதுமற வறிவிலா மைமய மாயிருக்கு மெனை' எனவும், இங்ஙனம் ஆணவத்தி

லழுந்திய எனக்குத் தநு, கரண, புவன, போகங்களைக் கொடுத்தது உன்னுடைய அருளேயென்பார், 'அருளினா-லளவிலாத தநு கரண மாதியையளித்தபோது' எனவும், தநுகரணபுவன போகங்களால் அடைய வேண்டிய பயனை அடையாமல் மாயையிலழுந்தி உன்னுடைய திருவருளை மறந்தேன் என்பார், 'உனையறிந்து நான்- பிறவிலாதவண நின்றிடாதபடி பல நிறங்கவரு முபலமாய்ப்-பெரிய மாயையி லழுந்தி நின்னது ப்ரசாத நல்லருண் மறந்திடுஞ் சிறியனேன்' எனவும் அருளை மறந்தமையால் உன்னுடன் சேருநாளெந் தாள் என்பார். 'உனைவந்தணைந்து சுகமாயிருப் பதினி யென்று காண்' எனவுங் கூறினார்.

என்னை என்றது உருபுமயக்கம். பிரிவிலாத எனற்பாலது எதுகை நோக்கிப் பிறிவிலாத என வந்தது (2)

124. ஐந்து பூதமொரு கானல் நீரென
அடங்க வந்தபெரு வானமே
ஆதியந்தநடு வேது மின்றியரு
ளாய்நிறைந் திலகு சோதியே
தொந்த ரூபமுடன் அரூப மாதிகுறி
குணமி றந்துவளர் வத்துவே
துரிய மேதுரிய உயிரி னுக்குணர்வு
தோன்ற நின்றருள் சுபாவமே
எந்த நாளுநடு வாகி நின்றொளிரும்
ஆதியே கருணை நீதியே
எந்தை யேஎன இடைந்திடைந் துருகும்
எளிய னேன்கவலை தீரவுஞ்
சிந்தை யானதை யறிந்து நீயுனருள்
செய்ய நானுமினி யுய்வனோ
தெரிவ தற்கரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே.

(பொ-ரை) அறிதற் கருமையாகிய பிரமமே! பிரிசுத்தமாகிய ஞானானந்தம் உதயமாகின்ற விலாசமே! பஞ்சபூதங்களும் ஒரு கானற்சலம் போல வடங்க எழுந்தருளி வந்த பெரிய ஆகாயமே! முதலிடை கடை களென்பன ஒன்றுமில்லாமல் அருளால் நிறைந்து விளங்குகின்ற தேஜோமயமே! பற்றினையுடைய ரூபமுடன், அரூபமுதலாகிய குறியும், குணமுமற்று வளர்கின்ற பொருளே! துரியரூபமே! துரியமாகிய உயிர்களுக்கு

அறிவுதிக்கும்படி இருந்தருள் செய்கின்ற என்றுமுள்ள வஸ்துவே! எக் காலத்திலும் நடுவு நிலைமையாயிருந்து விளங்குகின்ற முதல்வனே! கிருபாநியாமே! எமது தந்தையே! என்று பல கால் கரைந்துருகும் அறிவில்லாதவனான எனது துன்பம் நீங்கவும் நீ என்னுடைய எண்ணத்தை அறிந்து உனது திருவருளைக் கொடுக்கவும், (அவ்வருளைப் பெற்று) நானும் இனிப்பிழைப்பனோ. (எ-று)

125. ஐவ ரென்றபுல வேடர் கொட்டம
தடங்க மர்க்கடவன் முட்டியாய்
அடவி நின்றுமலை யருகில் நின்றுசரு
காதி தின்றுபனி வெயிலினால்
மெய்வ ருந்துதவ மில்லைநற் சரியை
கிரியை யோகமெனும் மூன்றதாய்
மேவு கின்றசவு பான நன்னெறி
விரும்ப வில்லையுல கத்திலே
பொய்மு டங்குதொழில் யாத தற்குநல
சார தித்தொழில் நடத்திடும்
புத்தி யூகமறி வற்ற மூகமிவை
பொருளே னக்கருதும் மருளன்யான்
தெய்வ நல்லருள் படைத்த அன்பரொடு
சேர வுங்கருணை கூர்வையோ
தெரிவ தற்கரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே.

(பொ-ரை) அறிதற்கருமையாகிய பிரமமே! பரிசுத்தமாகிய ஞானாந்தம் உதயமாகின்ற விலாசமே! ஐந்து பேர்களென்று சொல்லப்படுகின்ற புலன்களாகிய வேடர்களது கொடுமை அடங்க, குரங்குப்பிடியைப் போன்ற பிடிப்பை யுடையவனாய்க் காட்டிலிருந்தும் மலைகளுக்குச் சமீபத்திலிருந்தும், சருகுமுதலிய வைகளையுண்டு பனியினாலும், வெயிலினாலும், உடல் வருந்துந் தவஞ் செய்யவில்லை. நல்ல சரியை, கிரியை, யோகம் என்கிற மூன்றாகப் பொருந்தி இருக்கின்ற படிகளாகிய நன்மார்க்கத்தை விரும்ப வில்லை, உலகத்தின்கண் பொய்யாகிய தொழிலுக்கு நல்ல சாரதித் தொழில் நடத்துகின்ற புத்தியும், யுத்தியும் அறிவில்லாத மூகமுமாகிய இவைகளையே, மெய்ப்பொருள்களென்று எண்ணுகின்ற மருளனாகிய நான் தெய்வீகமான நல்ல அருளைப் பெற்ற

அடியார்களுடன் கூடியிருக்கவும் மிகுந்த கிருபையைச் செய்வையோ? (எ-று)

ஐம்புலனடங்கும் பொருட்டுத் தவமுஞ் செய்ததில்லை, சரியையாதி நன்மார்க்கங்களையும் விரும்பவில்லை, உலகத்தில் பொய்த்தொழிலையே விரும்பியிருந்தேன். ஆகையால் என்னை உன் திருவருள் பெற்ற அன்பரோடு சேர்ப்பையோ என்பது கருத்து. (4)

126. ஏக மானவுரு வான நீயருளி
னால னேகவுரு வாகியே
எந்த நாளகில கோடி சிருட்டிசெய
இசையு நாள்வரை யநாள் முதல்
ஆக நாளது வரைக்கு முன்னடிமை
கூடவே சனன மானதோ
அநந்த முண்டுநல சனன மீதிதனுள்
அறிய வேண்டுவன அறியலாம்
மோக மாதிதரு பாச மானதை
அறிந்து விட்டுனையும் எனையுமே
முழுது ணர்ந்துபர மான இன்பவெள
மூழ்க வேண்டும் இது இன்றியே
தேக மோநழுவி நானுமோ நழுவின்
பின்னை உய்யும்வகை உள்ளதோ
தெரிவ தற்கரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே.

(பொ-ரை) அறிதற்கருமையாகிய பிரமமே! பரிசுத்தமாகிய ஞானானந்தம் உதயமாகின்ற விலாசமே! ஒரே வடிவாயிருந்த நீ, உன்னுடைய திருவருட்சத்தியினால் அநேக ரூபங்களாகி எல்லா அண்ட கோடிகளையும் சிருஷ்டி பண்ண இசைந்த நாளெல்லை எந்த நாளோ, அந்த நாள் முதலாக நாளது வரையிலும், உன்னுடைய அடியவனாகிய நான் கூடவே பிறந்த சன்மமோ அநேகமுண்டு, (அச்சனனங்களில்) இது நல்ல சனனமாகும், (ஆகையால்) இச்சனனகத்தில் அறிய வேண்டு வனவற்றை யெல்லாம் அறியலாம். (அன்றி) மோகமுதலியவற்றைக் கொடுக்கின்ற பாசத்தை உணர்ந்து அதை அறவே விட்டுத் தலைவனாகிய உன்னையும், அடியவனாகிய என்னையும் ஒருங்கே அறிந்து, மேலான ஆனந்தப் பெருக்கில் முழுக வேண்டும், (அப்படி) இதைச் செய்யாமல், தேகமும் விழுந்து

நானும் போய்விட்டால் பிறகு எனக்குப் பிழைக்கும் வகையுண்டோ. (எ-று)

முன்னர் ஒன்றாயிருந்து பின்னர் பஞ்சகிர்த்தியஞ் செய்யத் தனது சத்தியால் பலரூபந் தாங்கலின், 'ஏகமானவுரு வானநீயரளி னாலனேகவுரவாகி' எனவும், உன்னுடைய சிருஷ்டி காலந் தொடங்கி இதுகாறும் நான் எடுத்த பிறவிக்களவில்லை யென்பார், 'எந்த நாளகில கோடிசிருஷ்டி செய விசையுநாள் வரைய நாண்முதலாகநாளது வரைக்கு முன்னடிமை கூடவேசனன மானதோ-அனந்த முண்டு' எனவும், அவைகளில் இம்மனிதப் பிறப்பே உயர்ந்ததென்பார், 'நல்ல சனனமீது' எனவும், இதுவே தான் அடையவேண்டியவற்றை யெல்லாம் அறிய வேண்டிய சன்மமென்பார். 'இதனுளறிய வேண்டுவன வறியலாம்' எனவும் தேகம் உளபோழ்தே பாசத்தை நீக்கித் தன்னையுந் தலைவனையு முணர வேண்டுமென்பார், 'மோகமாதிதரு பாசமானதை யறிந்து விட்டுனையு மெனையுமே-முழுதுணர்ந்துபர மானவின்பவெள மூழ்கவேண்டுமிது வின்றியே-தேகமே நழுவி நானுமோ நழுவின் பின்னையுய்யும் வகை யுள்ளதோ' எனவுங் கூறினார்.

இறைவன் ரூபமெல்லாஞ் சத்தியின் ரூபமென்றதை;

" உருவருள் குணங்களோடு முணர்வரு ளுருவிற் றோன்றுங்
கருமமு மருள்ப ரன்றன் கரசர ணாதி சாங்கந்
தருமரு ளுபாங்க மெல்லாந் தானரு டனக்கொன் றின்றி
யருளுரு வுயிருக் கென்றே யாக்குவ னசிந்த னன்றே"

என்பதனானறிக (5)

127. நியம லட்சணமும் இயம லட்சணமும்
ஆச னாதிவித பேதமும்
நெடிது ணர்ந்திதய பத்ம பீடமிசை
நன்றி லங்குமச பாநலத்
தியல றிந்துவளர் மூலகுண் டலியை
இனிதி றைஞ்சியவ ளருளினால்
எல்லை யற்றுவளர் சோதி மூலஅனல்
எங்கள் மோனமனு முறையிலே
வயமி குந்துவரும் அமிர்த மண்டல
மதிக்கு ளேமதியை வைத்துநான்
வாய்ம டுத்தமிர்த வாரி யைப்பருகி
மன்னு மாரமிர்த வடிவமாய்ச்

செயமி குந்துவரு சித்த யோகநிலை
பெற்று ஞானநெறி அடைவனோ
தெரிவ தற்கரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே.

(பொ-ரை) அறிதற்கருமையாகிய பிரமமே! பரிசுத்தமாகிய ஞானானந்தம் உதயமாகின்ற விலாசமே! நியமலட்சணத்தையும், இயமலட்சணத்தையும், ஆசன முதலியவற்றின் பேதங்களையும் மிகுதியுமுணர்ந்து, இருதயமாகிய தாமரைப் பீடத்திலிருந்து விளங்குகின்ற அசபாக்கினியின் தன்மையையறிந்து, மூலா தாரத்தில் வளர்கின்ற குண்டலி சத்தியை நன்றாய்ப்பணிந்து அவளுடைய கிருபையினால் வரம்பிகந்து வளர்கின்ற ஒளியையுடைய மூலாக்கினியோடு எங்களுடைய மௌனமந்திர முறைமையால் வெற்றி மிகுந்து வருகின்ற அமிர்தத்தைச் சிந்துகின்ற சந்திரமண்டலத்திற்குள் புத்தியை வைத்து நான் (அதினின்னும் வரும்) அமிர்தப் பெருக்கை வாய் நிறைய உண்டு அழியாத மிக்க அமிர்தரூபமாகிச் செயமிகுந்து வருகின்ற சித்தர்களுடைய யோக நிலையை யடைந்து (அதனால்) ஞானமார்க்கத்தை அடைவனோ. (எ-று)

சித்தர்கள் அனுபவித்திருக்கும் யோகம் போன்ற யோகமே நான் வேண்டிய தென்பார், 'சித்தயோக நிலை பெற்று' எனவும், அவ்யோகத்தால் ஞானமார்க்கத்தை யடையலாமென்பார், 'ஞானநெறியடைவனோ' எனவுங் கூறினார். (6)

128. எறிதி ரைக்கடல் நிகர்த்த செல்வமிக
அல்ல லென்றொருவர் பின்செலா
தில்லை யென்னுமுறை பேசி டாதுலகில்
எவரு மாமௌனம திக்கவே
நெறியின் வைகிவளர் செல்வ மும்உதவி
நோய்க ளற்றசுக வாழ்க்கையாய்
நியம மாதிநிலை நின்று ஞானநெறி
நிட்டை கூடவுமெந் நாளுமே
அறிவில் நின்றுருகு வாயு ணர்த்தியதும்
அன்றி மோனகுரு வாகியே
அகில மீதுவர வந்த சீரருளை
ஐய ஐயஇனி என்சொல்கேன்

சிறிய னேழைநம தடிமை யென்றுனது
திருவு ளத்தினிலி ருந்ததோ
தெரிவ தற்கரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே.

(பொ-ரை) அறிதற்கருமையாகிய பிரமமே! பரிசுத்தமாகிய ஞானானந்தம் உதயமாகின்ற விலாசமே! வீசுகின்ற சமுத்திரத்தின் அலைகளை யொத்த செல்வ மானது மிகவுந் துன்பந் தருவதென்று ஒருவர் பிறகு செல்லாமலும், யாசிப்ப வர்களுக்கு இல்லையென்கிற சொல்லைச் சொல்லாமலும், உலகத்திலுள்ளயாவரும் இது ஆகுமென்று மதிக்கும்படி நன்மார்க்கத்திலிருந்து வளர்கின்ற செல்வத்தையுங் கொடுத்து நோய் களில்லாத இன்பவாழ்க்கை யுடையவர்களாகி, நியம முதலாகச் சொல்லப்பட்ட நிலைகளிலிருந்து ஞானமார்க்கத்தை யடைதற் கேதுவாகிய நிட்டையைக்கூடவும், எக்காலத்தி லும் என்னுடைய அறிவிலிருந்து குருமூர்த்தமாய் உபதேசித்தது மல்லாமல், உலகத்தின் மேல் மௌனகுருவாகி வரும்படி வந்த உனது சிறந்த திருவருளை ஐயனே! ஐயனே! இனி என்னவென்று சொல்லுவேன், சிறியவனாகிய இந்த ஏழை நம்முடைய அடியவனென்று உன் திருவுளத் திருந்ததோ அறியேன். (எ-று)

"நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைக-ணீரி
லெழுத்தாகும் யாக்கை நமரங்கா னென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று"

என்றாராகலின், 'எறிதிரைக்கட னிகர்த்தசெல்வம்' எனக் கூறினார். (7)

129. **எவ்வு யிர்த்திரளும் உலகி லென்னுயிர்**
எனக்கு ழைந்துருகி நன்மையாம்
இதமு ரைப்பஎன தென்ற யாவையும்
எடுத்தெ றிந்துமத யானைபோல்
கவ்வை யற்றநடை பயில அன்பரடி
கண்டதே அருளின் வடிவமாக்
கண்டயாவையும் அகண்ட மென்னஇரு
கைகுவித்து மலர்தூவியே
பவ்வ வெண்திரை கொழித்த தண்தரளம்
விழியு திர்ப்பமொழி குளறியே

பாடி யாடியு ளுடைந்து டைந்தெழுது
பாவையொத் தசைத லின்றியே
திவ்ய அன்புருவ மாகி அன்பரொடும்
இன்ப வீட்டினி லிருப்பனோ
தெரிய தற்கரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே.

(பொ-ரை) அறிதற்கருமையாகிய பிரமமே! பரிசுத்தமாகிய ஞானானந்தம் உதயமாகின்ற விலாசமே! உலகத்திலுள்ள ஏவ்வகைப்பட்ட உயிர்களும் என்னுடைய உயிரென்று பாவித்து மனம் நெகிழ்ந்துருகி, நன்மையாகிய இதவார்த்தைகளைச் சொல்லவும், என்னுடையதென்று சொல்லப்பட்ட எல்லாப் பொருள்களையும் மதங் கொண்ட யானை எடுத்து எறிந்து விடுவதுபோல் எடுத்தெறிந்து துன்ப நீங்குதற் கேதுவாகிய நல்வழியிற் பழகவும், உன் தொண்டர் களது திருவடிகளைக் கண்டதையே திருவருளைக் கண்டதாக நினைத்துப், பார்த்த எப்பொருள்களையும் அகண்டரூபமென்று துணிந்து, இரண்டு கைகளையுங் குவித்துப் புஷ்பங்களைச் சிந்தி, சமுத்திரத்தினது வெள்ளிய அலைகளால் கொழிக்கப்பட்ட தண்ணிய முத்துக்களைப்போன்ற நீர்த்துளிகளைக் கண்கள் சிந்தவும் சொல்தடுமாறிப் பாடிக் கூத்தாடி மனம் பலமுறை நெகிழ்ந்து, எழுதிய சித்திரப்பதிமையைப் போன்று அசைதலில்லாமல் உயர்ந்த அன்புருவமாகி, உன்னுடைய அன்பர்களுடன் சுகத்தைத் தரத்தக்க மோட்சத்தில் இருப்பனோ. (எ-று)

“ அன்பு சிவ மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்திலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருப் பாரே”

என்றாராகலின், அன்பு ரூபமாகிய சிவத்தை எக்காலத்தில் பெறுவேன் என்பார், ‘திவ்யவன்புருவமாகி யன்பரொடு மின்ப வீட்டினி லிருப்பனோ’ எனக் கூறினார். (8)

130. மத்தர் பேயரோடு பாலர் தன்மையது
மருவி யேதுரிய வடிவமாய்
மன்னு தேசமொடு கால மாதியை
மறந்து நின்னடிய ரடியிலே
பத்தி யாய்நெடிது நம்பும் என்னையொரு
மையல் தந்தகில மாயையைப்

பாரு பாரென நடத்த வந்ததென்
பாரதத் தினுமி துள்ளதோ
சுத்த நித்தவியல் பாகு மோவுனது
விசுவ மாயை நடுவாகவே
சொல்ல வேண்டும்வகை நல்ல காதிகதை
சொல்லு மாயையினு மில்லைஎன்
சித்த மிப்படி மயங்கு மோஅருளை
நம்பி னோர்கள்பெறு பேறிதோ
தெரிவ தற்கரிய பிரம மேஅமல
சிற்சு கோதய விலாசமே.

(பொ-ரை) அறிதற்கருமையாகிய பிரமமே! பரிசுத்தமாகிய ஞானானந்தம் உதயமாகின்ற விலாசமே! உன்மத்தர், பேயர், பாலர் இவர்களுடைய குணத்தைப் பெற்றுத் துரியரூபமாகி, நிலைபெற்ற தேசகால முதலிய வற்றை மறந்து உன்னுடைய அடியார்களது திருவடியிற் பத்தி யுள்ளவனாய் மிகுதியும் நம்புகின்ற என்னை, ஒப்பற்ற மயக்கத்தைக் கொடுத்து உலக மாயையைப்பார், பார் என்று செலுத்த வந்ததற்குக் காரணம் யாது, இது பாரதத்திலும் இல்லையே, இது உனது பரிசுத்தமாகிய நித்திய இயற்கையோ (தெரியவில்லை) (ஆகையால்) உனது உலக மாயையின் இடையில் வழி சொல்ல வேண்டும், நல்லகாதி கதையில் சொல்லப்படும் மாயையின் விபவத்திலும் இவ்வாறில்லையே, என்னுடைய மனமானது இவ்வாறாக மயங்குமோ? உன்னுடைய திருவருளை நம்பினோர்கள் அடைவதாகிய லாபம் இதுதானோ? (எ-று)

மாயா விலாசத்தைப் பேசின் பாரத கதையினு மதிகமாகுமென்பார், 'பாரதத்தினுமிதுள்ளதோ' எனவும், காதிகதையிற் சொல்லப்படு மாயாவி பவத்திலும் இப்படி யில்லை யென்பார், 'நல்லகாதிகதை சொல்லு மாயையினு மில்லை' எனவுங் கூறினார்.

காதிகதையின் வரலாறு:-

பூர்வம் கோசலதேசத்திலிருந்து காதி என்னும் பெயருள்ள ஒரு பிராமணன் ஒரு காரியத்தை நினைத்துச் சுற்ற முதலியோரை விட்டுக் காட்டிற்குப் போய் ஒரு தடாக நீர்நடுவில் கழுத்தளவு முழுக நின்று உயர்ந்த தவத்தைச் செய்து எட்டு மாதங்கள் ஆனபோது, அவனுக்கு

விஷ்ணுமூர்த்தி தரிசனந் தந்தருளி உனக்கென்ன வேண்டும்? தெரிவித்தாற் கொடுப்போ மென்று சொல்ல, அந்தப் பிராமணன் கரையேறி வந்து அவ்விஷ்ணு மூர்த்தியைக் கைகுவித்து வணங்கி, சுவாமீ! உமது மாயா சொரூபத்தைத் தரிசிக்க விரும்புகின்றேன் என்றான். அதைக் கேட்ட விஷ்ணுமூர்த்தி யானவர், அப்படியே என் மாயா சொரூபத்தைக் காணக்கடவை. கண்ட பிறகு அதனை நீக்கக் கடவை, என்று அநுக்கிரகித்து மறைந்தவுடன் ,அவ்வேதியன் ஒருநாள் முன்னே விஷ்ணுமூர்த்தி அருளிச்செய்த வாக்கியத்தை நினைத்துக் கொண்டு ஒரு தடாகத்தில் முழுகினவுடன், பிராமணர் செய்ய வேண்டிய வற்றை மறந்துவிட்டு, உறவினரிருக்கிற தன்வீட்டில் தான் வியாதியினால் இறந்தவனாகத் தனனைக் கண்டான். மேலும், மனைவி முதலியோர் தன் மேல் விழுந்தழவும் பார்த்தான். பின்னர், தன்னை மயானத்திற் கொண்டு போய்ச் சுட்டுச் சாம்பலாக்கவும் பார்த்தான். அந்தத் தடாகத்தின் நீரிலிருக்கின்ற அந்தணன், பின்னும், ஊண தேசத்தில் ஒரு நகர முடிவிலிருக்கிற நீசர் குலத்தில் ஒரு பெண்ணின் வயிற்றில் வெந்த கரிக்கட்டை போல் ஆண்மகனாய்ப் பிறந்து, அக்குலத்துப் பெண்ணொருத்தியை மணம் புரிந்து அவளோடு மலைகளிலும், காடுகளிலும் ஒற்றுமையாய்க் கலந்து வாழும் நாளில் அக்குலம் விளங்கச் சில புத்திரர்களைப் பெற்றான். சிலநாளில் மூப்பு வந்தடையவே தன் சேரிக்குச் சமீபத்தில் ஒரு சிறிய தழைக் குடிசையொன்று போட்டு அதில் வசித்துக் கொண்டிருக்கும் போது, தன் மக்களுக்கும் மூப்பு வந்தடைந்தது. தன் மனைவி மக்களுக்கும் தனக்கும் வார்த்தீகம் வந்ததைப் பார்த்து வருந்துங்காலத்தில், தான் நீங்க மற்றவர்களையெல்லாம் காலன் கொண்டுபோய் விடத் தான் தனியே இருப்பதற்குக் கூடாமல் மனங்கலங்கி, ஆசையற்றவனாய் வெகுகாலம் அநேக காடுகளில் திரிந்தனன். பின்னர் ஒருநாள் கீரநாட்டின் ராஜ தானியிற் புகுந்து பொன்மயமாயிருக்கிற ஒரு வீதியிற் போகும்போது அந்நகரத்தரசன் இறந்தனன். பூமியைக் காக்க வேறொரு அரசனைத் தெரிந்தெடுத்துக் கொண்டு வாவென்று சொல்லி அனுப்பப்பட்ட பட்டத்து யானையானது, எதிரில் வந்திருந்த இவனைத் தூக்கிக்கொண்டு போயிற்று. இவனை அலங்காரஞ் செய்து மந்திரிமார்கள் முதலியோர் அரசனாக

முடிசூட்டி இவனது ஆக்கினையின்படி நடத்திவந்தார்கள். இவனும் கவலன் என்கிற பெயரைப் பெற்றுக் கீரதேசத்தில் நீதியாகச் செங்கோல் செலுத்திவந்தான். இப்படி எட்டு வருஷஞ் சென்றபின் ஒரு நாள் தனியனாய், காலால் நடந்து தன் அரண்மனையின் தெருப்புறத்தில் நீச வேடத்தோடு உலாவுஞ் சமயத்து, அவ்விடத்தில் முன் சொன்ன சண்டாளர் சிலர் வந்தார்கள். அவர்களுள் ஒரு முதியோன் வந்து இவனைப் பார்த்தவுடன் ஆசையோடு தழுவி, முன் பெயரைச் சொல்லி, எங்களுக்குப் பழைய சுற்றத்தானாகிய நீ, எங்களை விட்டு எங்கே போனாய்? இப்போது எவ்விடத்தில் இருக்கின்றாய்? என்று இவனது பழைய வரலாற்றை உள்ளபடி சொல்லி விசாரித்தான். அதைக் கேட்ட இவன், இங்குள்ள யாராயினும் இதனைக் கேட்பாராயின் நமக்குப் பழியாய் முடியுமென்று, அச்சண்டாள முதியோனை, உரத்த சத்தத்தோடு அதட்டித் துரத்திவிட்டு, விரைவாகத் தனது அந்தப்புரத்திற் பிரவேசித்தலும், இவற்றையெல்லாம் சாளரவாயிலில் நின்று கண்டுங் கேட்டுமிருந்த ராஜஸ்திரீகள், மந்திரிமார்கள் முதலான பேர்களுக்கு அறிவிக்க, அவர்களும் இவன் பூர்வத்தில் சண்டாளன் போலுமென்று ஊகித்தறிந்து கொண்டு, மிகவும் மனவருத்த மடைந்தார்கள். இவன் மாத்திரம் மனங் கலங்காமல் அவைகளை அறியாதவன் போலப் பழையபடியே சிங்காதனத்தில் இருந்தான். இவனை மாதர்கள் மந்திரியர் முதலானோர்கள் தீண்டுதற்கு அஞ்சினவராய்ப் பிரேதத்தை அருவருத்தல் போல அருவருத்திருந்தார்கள். இவன், அங்குக் கல்வி செல்வங்கள் இரண்டுமில்லாத பிரயாணிகள் போன்றிருந்தான். அந்த நகரமாந்தரெல்லாரும், இவனுடைய சம்பந்தத்தால் நாமெல்லாரும் பதிதரானோம் இனி ஒரு பிராயச்சித்தத்தாலும் பரிசுத்தராக மாட்டோம். நாம் பரிசுத்தர் ஆதற்பொருட்டுத் தீப்பாய்வோமென்று நிச்சயித்து, நெருப்பை வளர்த்தி அதில் எல்லாரும் விழுந்து மடிந்தார்கள். இவன், அவர்கள் மடிந்ததைக் கண்டு, நமது தொடர்பாலல்லவோ இத்தனை பேரும் நாசமடைந்தார்கள். இனி நாமும் மாண்டுபோவதே தக்க காரியமென்று நெருப்புமூட்டி, அதில் விழுந்தபோது, அந்தத் தீயானது இளந்தளிரை எரிப்பதுபோல் இவன் சரீரத்தை எரிக்க, நீரில் மூழ்கியிருந்த காதியென்னும் வேதியன் சரீரம்

பதைத்தது. உடனே நீரைவிட்டு மேலெழுந்த காதியானவன் மஹாமாயையினின்று நீங்கி விஷ்ணுமூர்த்தியின் மாயா சொரூபத்தைக் குறித்துப் புகழ்ந்து சந்தோஷித்திருந்தனன். (9)

131. **பன்மு கச்சமய நெறிப டைத்தவரும்**
யாங்க ளேகடவு ளென்றிடும்
பாத கத்தவரும் வாத தர்க்கமிடு
படிற ருந்தலை வணங்கிடத்
தன்மு கத்திலுயிர் வரவ ழைக்கும்எம
தரும னும்பகடு மேய்க்கியாய்த்
தனியி ருப்பவட நீழ லூடுவளர்
சனக னாதிமுனி வோர்கள்தஞ்
சொன்ம யக்கமது தீர அங்கைகொடு
மோன ஞானம துணர்த்தியே
சுத்த நித்தஅரு ளியல்ப தாகவுள
சோம சேகரகிர் பாளுவாய்த்
தென்மு கத்தின்முக மாயி ருந்தகொலு
எம்மு கத்தினும் வணங்குவேன்
தெரிவ தற்கரிய பிரம மே அமல
சிற்சு கோதய விலாசமே.

(பொ-ரை) அறிதற்கருமையாகிய பிரமமே! பரிசுத்தமாகிய ஞானானந்தம் உதயமாகின்ற விலாசமே! பலவழிகளைப் பெற்ற சமயமார்க்கங் களையுடையவர் களும், நாங்களே கடவுள் என்கிற பாவிகளும், தர்க்கவாதஞ் செய்கிற பொய்யர்களுந் தொழவும், உயிர்களைத் தன்னிடத்தில் வரவழைக்கும் இயமனும் எருமை மெய்க்கிறவனாய்த் தனியேயிருக்கவும், கல்லால மரத்தின் நிழலின் (என்றும் கெடாமல்) வளர்கின்ற சநகன் முதலிய முனிவர்களுடைய வார்த்தைகளாலுண்டன மயக்கமானது நீங்கும்படி அழகிய கைகளால் மௌன நிலையாகிய ஞானத்தைத் தெரிவித்து நிர்மலமான அழியாத திருவருளை இயல்பாகவே கொண்டுள்ள சந்திரசேகர னென்னும் கிருபாநிதியாகித், தட்சிணாமூர்த்த மாயிருந்த கொலுவினை, எந்தத் திசையிலும் வணங்குவேன். (எ-று)

சோமசேகரன்= சந்திரனைத் தரித்தவன்

சிவன் சந்திரனைத் தரித்த வரலாறு:-

சந்திரன் தக்கன் சாபத்தால் சோடசகலைகளுள் பதினைந்து கலைகளிழந்து ஒரு கலையையும் இழப்பதன்

முன்னமே சரணடையச் சிவபெருமான் கருணை கூர்ந்து அத்தக்கன் சாபந்தொடராமல் அவ்வொரு கலையைத் தமது திருமுடியிலணிந்து கலை வளரும்படி அநுக்கிரகஞ் செய்தார் என்பது. இதனை,

" தீர்ந்தன வன்றியே திங்கடன் னிடை
ஆர்ந்திடு கலையினை யங்கை யிற்கொளா
வார்ந்திடு சடைமிசை வயங்கச் சேர்த்தினான்
சார்ந்தில திவ்வழித் தக்கன் சாபமே"

எனக் கந்தபுரணம், சந்திரசாபப் படலதத்தா னறிக. *(10)*

ஆகாரபுவனம்

சிதம்பர ரகசியம்

இது முதற் குறிப்பினாற் பெயரிடப்பட்டது, அந்தாதித் தொடக்கமாகச் செய்யப்பட்டதுமாம்.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

132. **ஆகார புவனமின்பா கார மாக**
அங்ஙனே யொருமொழியால் அகண்டா கார
யோகாநு பூதிபெற்ற அன்ப ராவிக்
குறுதுணையே என்னளவும் உகந்த நட்பே
வாகாரும் படிக்கிசைகிண் கிணிவா யென்ன
மலர்ந்தமல ரிடைவாசம் வயங்கு மாபோல
தேகாதி யுலகமெங்குங் கலந்து தானே
திகழனந்தா னந்தமயத் தெய்வக் குன்றே.

(பொ-ரை) (குரூபதேசமாகிய) ஒரு சொல்லால் உருவமாத்திரமாய்க் காணப்படுகின்ற பிரபஞ்சங்கள் இன்ப ரூபமாகும்படி அகண்ட ரூபமான யோகாநுபவத்தைப் பெற்ற அடியார்களின் உயிருக்கு நல்ல துணையே! என்னளவிலும் விருப்பம் வைத்துக் கொண்ட சிநேகமே! அழகு பொருந்தும்படி சத்திக்கின்ற கிண்கிணியின் வாய்போல் மலர்ந்த மலரின் வாசனை வீசுவது போலத் தேக முதலாகிய உலகங்களி லெல்லாங் கலந்து தானே விளங்கு கின்ற முடிதலில்லாத ஆனந்தரூபமான தெய்வமலையே. (எ.று)

இருகூற்றுப் பிரபஞ்சங்களும் உள்ளவை போலக் காணப்படினும் நாசத்தையும் உற்பத்தியையும் துணையா

கவே கொண்டிருத்தலின், உருவமாத்திரமாய்க் காணப் படுகின்ற என்னும் பொருள்பட, 'ஆகாரபுவனம்' எனவும், அவை சகவடிவமாய்த் தோன்ற வேண்டுமென்பார், 'இன்பா காரமாக' எனவும், அங்ஙனத் தோன்றுவதற்கும், யோகசித்தி பெறுவதற்கும் காரணமாயுள்ளது. ஒரு மொழியாகலானும், அதைப் பெற்றவர்கள் அன்பர்களாகலானும், 'ஒரு மொழியா லகண்டாகார யோகாநுபூதி பெற்றவன்பர்' எனவும், அவர்களுக்கு எந்த விடத்துந் துணை யாயிருப்பவனாகலான், 'உறுதுணையே' எனவும், அப்படிப் பட்டவனாகிய நீ என்னையும் விரும்பி ஆட்கொண்டாய் என்பார். 'என்னளவு முகந்த நட்பே' எனவும், பூவின் மணம் போல் தநு, கரண, புவன, போகங்களிற் கலந்திருப்ப வனாகலின், 'மலர்ந்த மலரிடை வாசம்வயங்குமா போல் தேகாதி யுலகமெங்கும் கலந்துதானே திகழனந்தானந்தமயத் தெய்வக்குன்றே' எனவுங் கூறினார்.

கிண்கிணியின் இடைவெளி போல் மலர்தலின் அது மலருக்கு வமையாயிற்று. (1)

133. **அனந்தபத உயிர்கள்தொறும் உயிரா யென்றும்**
ஆனந்த நிலையாகிஅளவைக் கெட்டாத்
தனந்தனிச்சின் மாத்திரமாய்க் கீழ்மேல் காட்டாச்
சதசத்தாய் அருட்கோயில் தழைத்த தேவே
இனம்பிரிந்த மான்போல்நான் இடையா வண்ணம்
இன்பமுற அன்பர்பக்க விருத்தி வைத்துக்
கனந்தருமா கனமேதண் அருளில் தானே
கனிபலித்த ஆனந்தக் கட்டிப் பேறே.

(பொ-ரை) நித்திய பதத்தினையுடைய உயிர்கள் தோறும் உயிராகி, எக்காலத்திலும் இன்ப நிலையாகி, பிரத்தியட் சானுமான முதலாகிய பிரமாணங்கட்கு மெட்டாத தன்னந் தனிமையான ஞானவடிவமாகி, கீழும் மேலும் காட்டாத சதசத்தாகித் திருவருட் கோயிலில் விளங்குந் தெய்வமே! என்னைத் தன் கூட்டத்தைவிட்டு நீங்கின மான் வருந்துவது போல் வருந்தாத வகை இன்பமடைந்திருக்கும்படி உன்னுடைய அன்பர்களிடத்து இருக்கச் செய்து பெருமையைத் தருகின்ற மிக்க பெருமையையுடைய கடவுளே! தண்ணிய திருவருளாகிய மரத்திற் கனியாகப் பழுத்த இன்பமயமாகிய சர்க்கரைக் கட்டியென்று சொல்லப்படுகின்ற பெரியலாபமே! (எ-று)

விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் உயிர் வகைகள் நித்தியமாயுள்ளனவென்பார், 'அனந்த பதவுயிர்கள்' எனவும், அவ்வுயிர் கட்குயிராயிருந்து ஆனந்தத்தைத் தருவோனென்பார், 'உயிராயென்று மானந்த நிலையாகி' எனவும், பிரமாணரூபமா யறியப்படாதவனென்பார்' 'அளவைக் கெட்டாத் தனந்தனிச் சின்மாத்திரமாய்' எனவும், சத்துப் பொருள்களும், அசத்துப் பொருள்களும் தன்னுடைய வியாபக மில்லாமலில்லை யென்பார்' 'சதசத்தாய்' எனவும் கூறினார். (2)

134. பேறனைத்தும் அணுவெனவே உதறித் தள்ளப்
பேரின்ப மாகவந்த பெருக்கே பேசா
வீறனைத்தும் இந்நெறிக்கே என்ன என்னை
மேவென்ற வரத்தேபாழ் வெய்ய மாயைக்
கூறனைத்துங் கடந்தஎல்லைச் சேட மாகிக்
குறைவறநின் றிடுநிறைவே குலவா நின்ற
ஆறனைத்தும் புகுங்கடல்போல் சமய கோடி
அத்தனையுந் தொடர்ந்துபுகும் ஆதி நட்பே.

(பொ-ரை) எல்லா லாபங்களையும் அணுவென்று உதறித் தள்ளும்படி பேரின்ப மயமாக எழுந்தருளி வந்த பிரவாகமே! பேசாத பெருமையெல்லாம் இந்த வழிக்காகவேயென்று என்னை இவ்வழியிற் செல்லுவா யென்று கட்டளையிட்ட அழியாலாபமே! இல்லாமையாகிய கொடியமாயையின் கூறுகள் எல்லாவற்றையுந் தாண்டிய அளவாகிய சேஷமாகிக் குறை தலில்லாமல் இருக்கின்ற பூரணமே! விளங்குகின்ற நதிகளெல்லாஞ் சங்கமமாதலை யடைந்த கடல் போல் அளவற்ற சமயங்களெல்லாந் தொடர்ந்து சேர்தற் கிடமாகிய தலைமையுறவே!

பேரின்பம் உதயமாகுங்கால் மற்றப் பேறெல்லாம் அணுவாய்த் தோன்றுமென்பார். 'பேறனைத்து மணுவெனவே யுதறித்தள்ளப் பேரின்பமாக வந்த பெருக்கே' எனவும், மௌனநெறியிற் பழகுவதெல்லாம் பேரின்பத் திற்கே என்பார், 'பேசாவீறனைத்துமிந் நெறிக்கேயென்ன வென்னைமே வென்றவரற்கே' எனவும், தான் மாயாரகிதனாகிலின், 'பாழ் வெய்யமாயைக் கூறனைத்துங் கடந்த வெல்லைச் சேடமாகி' எனவும், பூரண வியாபகமுடைய வனாகலின், குறைவற நின்றிடு நிறைவே' எனவும், எல்லாச் சமயத்தார் களாலும் வணங்கப்படுவோன்

என்பார். 'குலவாநின்ற ஆறனைத் தும்புகுங் கடல் போற் சமயகோடி யத்தனையுந் தொடர்ந்து புகுமாதிநட்பே' எனவுங் கூறினார். (3)

135. ஆதியந்தம் எனும்எழு வாயீறற் றோங்கி
அருமறைஇன் னமுங்காணா தரற்ற தானா
பேதமதங் களுமலைய மலைபோல் வாதப்
பெற்றியரும் வாய்வாதப் பேய ராகச்
சாதகமோ னத்திலென்ன வடவால் நீழல்
தண்ணருட்சந் திரமௌலி தடக்கைக் கேற்க
வேதகசின் மாத்திரமா யெம்ம னோர்க்கும்
வெளியாக வந்தவொன்றே விமல வாழ்வே.

(பொ-ரை) அடிமுடிகளென்று சொல்லப்படும் உற்பத்தி நாசங் களில்லாமல் உயர்ந்து, அரிய வேதங்கள் இன்னமுங் காணக் கூடாமையால் அலற பலவகையான வித்தியாசமுள்ள மதங்களும் (ஒன்றோடொன்று) போர் செய்ய மலையை யொத்த தர்க்கவாதஞ் செய்கின்றவர்களும் வாக்கு வாதத்தை யுடைய பேயராக, மோட்சமடைதற்கான பழக்கம் மௌன நிலையிலுண்டென்று அறிவுறுத்தற் பொருட்டுக் கல்லால மரத்தின் நிழலில் எழுந்தருளியிருந்த தண்ணிய திருவருளையுடைய சந்திரசேகரனே! விசாலமான சின்முத்திரைக் கிணங்கச் சித்ரூப மாத்திரமாகி எம்மைப் போன்றவர்களுக்கும் வெளிப்பட்டு வந்த தனிமைப் பொருளே! மலரகித வாழ்வே! (எ-று)

தோற்ற நாசங்களில்லாததாகலின், 'ஆதியந்தமெனு மெழுவாயீறற்று' எனவும், தன்னையடைந்தவர்க்கு உயர்ந்த பதவியை யளிப்பவனாகலான் தானுமுயர்ந்தவனே என்பார், 'ஓங்கி' எனவும், "அல்லையீதல்லையீதென மறைகளுமன்மைச் சொல்லினாற் றுதித்திளைக்கும்" என்றபடியே வேதங்களாலு மறியப் படாதோனென்பார். 'அருமறை யின்ன முங் காணாதரற்ற' எனவும், பல சமயத்தார்களும் எங்கள் சமயத் தெய்வமே உண்மையானது, எங்கள் சமயத்தெய்வமே உண்மையானது என்று ஒருவர்க்கொருவர் போர்செய்தலின், 'நானாபேத மதங்களும் மலைய' எனவும், தர்க்கவாதிகளும் அங்ஙனமே செய்தலின், 'மலை போல் வாதப் பெற்றியரம் வாய்வாதப்பேயராக' எனவும், மௌனநிலையை யுணர்த்துதற்கே வடவால

மரத்தின்கீழ் எழுந்தருளியிருந்தது என்பார். 'சாதக மோனத்திலென்ன வடவானீழல்-தண்ணருட்சந்திரமௌலி' எனவுங் கூறினார்.

சந்திரனுக் கருள் செய்ததுபோல் தனக்கும் அருள்செய்வார் என்பது தோன்ற இறைவனைப் பல்வேறு நாமங்களால் அழையாமல், "சந்திர மௌலி" என்று அழைத்தார். (4)

136. விமலமுதற் குணமாகி நூற்றெட் டாதி
வேதமெடுத் தெடுத்துரைத்த விருத்திக் கேற்க
அமையுமிலக் கணவடிவா யதுவும் போதா
தப்பாலுக் கப்பாலாய் அருட்கண் ணாகிச்
சமமுமுடன் கலப்புமவிழ் தலும்யாங் காணத்
தண்ணருள்தந் தெமைக்காக்குஞ் சாட்சிப் பேறே
இமையளவும் உபகார மல்லால் வேறொன்
றியக்காநிர்க் குணக்கடலா யிருந்த ஒன்றே.

(பொ-ரை) வேதங்களால் நூற்றெட்டு முதலாக எடுத்துச் சொல்லப்பட்ட மலரகிதமுதலிய குணங்களை யுடையதாகியும் அக்குணங்களின் விருத்திக்குத் தக்கபடி பொருந்தும் இலட்சணத்தையுடைய வடிவாகியும் அதுவும் போதாமல் அப்புறத்துக்கும் அப்புறமாகியும் திருவருட் கண்ணை யுடையதாகியும், சமானத்தையும்கூடச் சேர்தலை யும், பிரிதலையும் நாங்கள் காணும்படி தண்ணிய அருள் செய்து எங்களைக் காப்பாற்றுகின்ற காட்சிமாத்திர மாயிருக்கின்ற லாபமே! இமைக்கு நேரமாயினும் அந்நியர்க்குபகாரஞ் செய்வதேயல்லாமல் வேறொன்றினை யுஞ் செய்யாத குணரஹிதமான சமுத்திரமாயிருந்த ஏகவஸ்துவே! (எ-று)

வேதங்களால் எடுத்துரைக்கப்படுவனவாகிய திருநாமங்களுக்கேற்ற திருவேடங்களையுங் கொள்வோன் என்பார். 'விமலமுதற்குணமாகி நூற்றெட்டாதி வேதமெடுத்தெடுத் துரைத்த விருத்திக்கேற்க- அமையு மிலக்கணவடிவாய்' எனவும், அடியவர் வேண்டுங்கால், அத்திருவேடங் களையுங் கடப்போனென்பார், 'அதுவும் போதா தப்பாலுக்கப்பாலாய்' எனவும், ஜீவர்களுக்கு நன்மை செய்தலையே ஒரு திருவிளயாடலாகக்

கொண்டவனென்பார். 'இமையளவு முபகாரமல்லால் வேறொன்றியக்கா நிர்க்குணக் கடலாயிருந்த தொன்றே' எனவுங் கூறினார். (5)

137. ஒன்றாகிப் பலவாகிப் பலவாக் கண்ட
ஒளியாகி வெளியாகி உருவு மாகி
நன்றாகித் தீதாகி மற்ற மாகி
நாசமுட னுற்பத்தி நண்ணா தாகி
இன்றாகி நாளையுமாய் மேலு மான
எந்தையே எம்மானே என்றென் றேங்கிக்
கன்றாகிக் கதறினர்க்குச் சேதா வாகிக்
கடிதினில்வந் தருள்கூருங் கருணை விண்ணே.

(பொ-ரை) ஒரு பொருளாகியும், பலபொருளாகியும், பலவகையாகக் காணப்பட்ட ஒளியுள்ள பொருள்களாகியும், ஆகாயமாகியும், உருவமாகியும், நன்மையாகியும், தீமையாகியும், இன்றாகியும், நாளையாகியும், அதன் மேலுமான எம்முடைய தந்தையே! எம்முடைய பெருமானே! என்று சொல்லித் திகைத்து இளங்கன்றைப்போற் கதறி அழுதோர்க்கு நல்லதாய்ப் பசுவைப் போல் சீக்கிரத்தில் வந்து திருவருள் புரியும் கிருபாரூபமான ஆகாயமே! (எ-று)

முன்னர் ஒன்றாயிருந்து பின்னர் பஞ்சகிர்த்திய வேறுபாட்டாற் பலவாதலின், 'ஒன்றாகிப் பலவாகி' எனவும், அப்பலவடிவங்களும் ஒளிவடிவின வென்பார், 'பலவாக்கண்ட வொளியாகி' எனவும் அவ்வொளியை நோக்குங்கால் வெளியாதலின், 'வெளியாகி' எனவும், உலகர் நிமித்தம் உருவமாயிருத்தலின், 'உருவுமாகி, எனவும், உயிர்களுக்கு இருவினை யொப்பினை வருவிப்பவன் என்பார். 'நன்றாகித் தீதாகி' எனவும், பிறப்பிறப்பற்றவனாகலின், 'நாசமுடனுற்பத்தி நண்ணாதாகி' எனவும், காலாதீதமானவ வென்பார், 'இன்றாகி நாளையுமாய் மேலுமான' எனவும், இவனே எமக்குத் தந்தை முதலாகச் சொல்லப்பட்ட வனென்பார். 'எந்தையே யெம்மானே' எனவும், தாய்ப்பசுவை நீங்கிய கன்றின்மன மிளகல் போல் இளகுவோர்க்கு அருள் செய்வோன் என்பார். 'கன்றாகிக் கதறினர்க்குச் சேதாவாகிக் கடிதினல்வந் தருள்கூருங் கருணையிண்ணே' எனவுங் கூறினார். (6)

138. அருள்பழுத்த பழச்சுவையே கரும்பே தேனே
ஆரமிர்தே என்கண்ணே அரிய வான
பொருளனைத்துந் தரும்பொருளே கருணை நீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனித வாழ்வே
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவி யாதி
விரிவினையுங் கூட்டிஉயிர்த் திரளை யாட்டும்
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பங்
கேளே.

(பொ-ரை) அருளே (கனியாகப்) பழுத்த பழத்தின் இனிப்பே! கரும்பின் இரசமே! தேனே! அருமையான அமிர்தமே! என்னுடைய கண்ணே! கிடைத்தற்கருமையான பொருள்களெல்லாவற்றையும் கொடுக்கும் பொருளே! நீங்காத கருணையையுடைய எங்கும் நிறைந்த ஒரு பொருளே! பரிசுத்தமான வாழ்வே! எண்ணுதற் கருமையான எண்ணத்துள் எண்ணமாய்க் கூடிக் காலதேசங்களை யுண்டுபண்ணி, கருவிகள் முதலிய விரிவையுங்கூட்டி உயிர்க்கூட்டங்களை யாட்டுகின்ற உயர்ந்த பொருளே! நான் சொல்லுகின்ற விண்ணப்பத்தைக் கேட்டருள்வாய். (எ-று)

உயிர்களை உலகத்தின்கண் இயக்குங் கர்த்தா நீயே யென்பார், 'உயிர்த்திரனை யாட்டும் விழுப்பொருளே' எனக் கூறினார். மற்றவை வெளிப்படை. (7)

இஃது விண்ணப்பம்

139. விண்ணவரிந் திரன்முதலோர் நார தாதி
விளங்குசப்த ரிசிகள்கன வீணை வல்லோர்
எண்ணரிய சித்தர்மனு வாதி வேந்தர்
இருக்காதி மறைமுனிவர் எல்லா மிந்தக்
கண்ணகல்ஞா லம்மதிக்கத் தானே உள்ளங்
கையில்நெல்லிக் கனிபோலக் காட்சி யாகத்
திண்ணியநல் லறிவாலிச் சமயத் தன்றோ
செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தா ரென்றும்.

(பொ-ரை) தேவர்களும், (தேவர்களுக்குத் தலைவனான) இந்திரன் முதலானவர்களும், நாரதர் முதலானவர்களும், சப்தரிஷிகளும், பெரிய வீணையில் வல்லவராகிய தும்புருவும், எண்ணுதற்கருமையான சித்தர்களும், மநு முதலிய அரசர்களும், இருக்கு முதலிய

வேதங்களை யோதியுணர்ந்த முனிவர்களும் ஆகிய எல்லாரும், இந்த உலகத்தார் மதிக்கும்படி உள்ளங்கை நெல்லிப்பழம் போலப் பிரத்தியட்சமாக உயர்ந்த நல்ல ஞானத்தை ஏதுவாகக் கொண்டு இந்தச் சைவசமயத்தி லிருந்தல்லவோ சொல்லுதற்கரிய சித்திமுத்திகளை யடைந்தார்கள். (எ-று)

இச் சைவசமயத்தில் தான தேவர்கண் முதலானோர் கள் முத்தி யடைந்தார்கள் என்பது கருத்து. (8)

140. செப்பரிய சமயநெறி யெல்லாந் தந்தம்
தெய்வமே தெய்வமெனுஞ் செயற்கை யான
அப்பரிசா ளருமஃதே பிடித்தா லிப்பால்
அடுத்த அந்நூல் களும்விரித்தே அநுமா னாதி
ஒப்பவிரித் துரைப்பரிங்ஙன் பொய்மெய் என்ன
ஒன்றிலைஒன் றெனப்பார்ப்ப தொவ்வா தார்க்கும்
இப் பரிசாஞ் சமயமுமாய் அல்ல வாகி
யாதுசம யமும்வணங்கும் இயல்ப தாகி.

(பொ-ரை) சொல்லுதற்கு அருமையான சமயமார்க்கங் களெல்லாம் தங்கள் தங்கள் தெய்வங்களையே (உண்மைத்) தெய்வங்களென்று சாதிக்கும், அந்தச் செய்கையையேயுடைய அச்சமயத்தார்களும் அதையே பிடித்துத் தமக்கடுத்தவை யாகிய அச்சமய நூல்களையும் விரித்தும், அநுமான முதலியவைகளையும் (அவைகளுக்குப் பொருத்தமு டையனவாக) விரித்துச் சொல்லுவார்கள். இப்படி ஒன்றும் பொய், ஒன்று மெய் என்றும், ஒன்று இல்லை ஒன்று உண்டென்றும் பார்ப்பது யார்க்கும் ஒவ்வாது; ஆகையால், இத்தன்மையான சமயங்களாகியும், அவை யல்லாதவை யாகியும், எந்தச் சமயமும் வணங்கும் படியான சுபாவ குணமுமுடையதாகியும். (எ-று)

அளவிடக்கூடாத சமயங்களுண்மையின், 'செப்பரிய சமய நெறி' எனவும், அவ்வச்சமயத் தார்களுந்தாந்தாங் கொண்ட தெய்வங்களையே சாதித்து அதற்குத்தக்க பிரமாண முதலியவற்றை எடுத்துச் சொல்லுதலின், 'தந்தந்தெய்வமே தெய்வமெனுஞ் செயற்கையான- அப்பரிசாளருமஃதே பிடித்தாலிப்பாலடுத்த வந்நூல்களும் விரித்தே யனுமானாதி-ஒப்பவிரித் துரைப்பர்' எனவுங் கூறினார். (9)

141. இயல்பென்றுந் திரியாமல் இயம மாதி
எண்குணமுங் காட்டியன்பால் இன்ப மாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்
பண்புறவுஞ் சௌபான பட்சங் காட்டி
மயலறுமந் திரஞ்சிட்சை சோதி டாதி
மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
அயர்வறச்சென் னியில்வைத்து ராசாங் கத்தில்
அமர்ந்ததுவை திகசைவம் அழகி தந்தோ.

(பொ-ரை) எக்காலத்திலும் தன்னுடைய சுபாவ குணமாறாமல் இயமம் முதலிய எட்டுக் குணங்களையுங் காட்டி அன்பினால் ஆனந்தமாகிப் பயனைக் கொடுக்கப் பொருள்களும் பரிவாரங்களுமாகி, குணத்தை யடையவும், படியாகிய பட்சத்தைக்காட்டி மயக்கமற்ற மந்திரமும் சிட்சையும், சோதிடமும் முதலாகிய வேறு அங்க நூல்களும் வணங்க மௌன நிலையாகிய மகுடத்தைச் சிரசில் தரித்து ராஜாங்கத்தில் வீற்றிருந்தது வேத சம்பந்தமாகிய சைவ சமய மாகும். (ஆகையால்) அந்தோ! இது அழகியது. (எ-று)

யாது சமயமும் வணங்கும் இயல்புடையதாகலான் இச்சமயத்தை ஓரரசனாகவும் மௌனநிலையையே அவ்வரசனுக்கு மகுடமாகவும், 'வேதாங்கங்களே அவனை வணங்குவோராகவும் உவமித்து, 'மயலறு மந்திரஞ் சிட்சை சோதிடாதி மற்றங்க நூல் வணங்க மௌகமோலி-அயர்வறச் சென்னியில் வைத்து ராஜாங்கத்தி லமர்ந்ததுவை திகசைவ மழகிதந்தோ' எனக் கூறினார்.

மந்திரமுதலிய அங்கங்கள்-மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்பன. (10)

142. அந்தோஈ ததிசயமிச் சமயம் போலின்
றறிஞரெல்லாம் நடு அறிய அணிமா ஆதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கும் மற்றும் மற்றும்
இந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கும்
இதுவன்றித் தாயகம்வே றில்லை இல்லை
சந்தான கற்பகம்போல் அருளைக் காட்டத்
தக்கநெறி இந்நெறியே தான்சன் மார்க்கம்.

(பொ-ரை) அந்தோ! இது ஆச்சரியம்! இந்தச் சைவ சமயம் போல் வேறெந்தச் சமயமுமில்லை. (ஏனெனில்)

ஞானிகளெல்லாம் நடுவு நிலைமையை அறியுங்கால் அணிமா முதலிய சித்திகளைப் பெற்று விளையாடித் திரிபவர்க்கும் பேசாத மௌனநிலையைச் சாதகமாய்க் கொண்டிருந்த தவச் சிரேஷ்டர்க்கும் மேலுமேலும் இந்திராதி போகங்களைப் பெற்றவர்களுக்கும் தாய் வீடாக வுள்ளது. இச்சமயமேயல்லாமல் வேறெதுவுமில்லை. இதுவே, சந்தான கற்பக விருட்சங்களைப் போல் திருவருளைக் காட்டுதற்குத் தகுந்த மார்க்கமாகும். (ஆகையால்) இந்த மார்க்கமே ஞானமார்க்கமென்று சொல்லப்படும். (எ-று)

சைவசமயமானது எல்லாச் சமயங்கட்குத் தலைமையாயிருந்த லானும் எச்சித்திபெற இச்சித்தோரும் இச்சமயத்திலேயே பெறவேண்டி யிருத்தலானும், 'அணிமாவாதி வந்தாடித் திரிபவர்க்கும் பேசாமோனம் வைத்திருந்த மாதவர்க்கு மற்றுமற்று-மிந்த்ராதி போகநலப் பெற்ற பேர்க்கு மிதுவன்றித் தாயகம் வேறில்லையில்லை' எனவும் அறிஞர்களால் நடுவுநிலைமையாய்ப் பார்த்து ஸ்தாபிக்கப்பட்டதென்பார், 'அறிஞரெல்லா நடுவறிய' எனவும் இதனினும் ஞானமார்க்கம் வேறில்லையென்பார். 'இந்நெறியே தான் சன்மார்க்கம்' எனவும் கூறினார். (11)

143. சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறு
சமயசங்கே தப்பொருளுந் தானோன் றாகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை
பகர்வரிய தில்லைமன்றுள் பார்த்த போதங்
கென்மார்க்கம் இருக்குதெல்லாம் வெளியே என்ன
எச்சமயத் தவர்களும்வந் திறைஞ்சா நிற்பர்
கன்மார்க்க நெஞ்சமுள எனக்குந் தானே
கண்டவுடன் ஆனந்தங் காண்ட லாகும்.

(பொ-ரை) சன்மார்க்கமென்று சொல்லப்படுகின்ற ஞானப் பொருளும் மிகுந்த சமயங்களால் ஸ்தாபிக்கப்பட்ட (அதின்) அர்த்தமும், ஒன்றாக இருக்கப் பல சமயமார்க்கங் களிலும் பார்த்ததில்லை (ஆயினும்) சொல்லுதற்கரிய தில்லையம்பலத்தில் பார்த்தபோது, அவ்விடத்தில் என்ன மார்க்கமிருக்கிறது, எல்லாம் வெளியேயென்று எந்தச் சமயத்தாரும் வந்து வணங்கா - நிற்பர் கல்லைப் போன்ற மனத்தையுடைய அடியேனுக்கும் பார்த்தவுடன் ஆனந்த முண்டாகும். (எ-று)

தில்லையில் வெளியே இரகசிய தெரிசன மாயிருத்தலின், 'பகர்வரிய தில்லை மன்றுட் பார்த்தபோதங் கென்மார்க்கமிருக்கு தெல்லாம் வெளியே' எனவும், அவ்வெளியினிமித்தம் பல சமயத்தாரும் வந்து வணங்கு தலின், 'எச்சமயத்தவர்களும் வந்திறைஞ்சா நிற்பர்' எனவும், இவ்விடத்தில் சன்னெஞ்சர்க்கும் ஆனந்தமுண்டாமென்பார். 'சன்மார்க்க நெஞ்சமுள வெனக்குந் தானே கண்டவுட னானந்தங் காண்டலாகும்' எனவுங் கூறினார். (12)

144. **காண்டல்பெறப் புறத்தினுள்ள படியே உள்ளுங்**
சாட்சிமெய்ந்நூல் சொலும்பதியாங் கடவுளேநீ
நீண்டநெடு மையுமகலக் குறுக்குங் காட்டா
நிறைபரிபூ ரண அறிவாய் நித்த மாகி
வேண்டுவிருப் பொடுவெறுப்புச் சமீபந் தூரம்
விலகலணு குதல்முதலாம் விவகா ரங்கள்
பூண்டஅள வைகள்மனவாக் காதியெல்லாம்
பொருந்தாம லகம்புறமும் புணர்க்கை யாகி.

(பொ-ரை) பிரத்தியட்சமாக வெளியிலுள்ளது போலவே உள்ளிடத்திலு மாகுமென்று உண்மையாகிய ஞான நூல்கள் சொல்லா நிற்கும். (அது போலவே) தலைமைப் பொருளாகிய தெய்வமே நீ, நீண்ட நீட்சியும், அகலமும், குறுக்கும் காட்டாமல் பரிபூரண ஞானமாகி அழியாததாகி, விரும்புகின்ற விருப்பத்துடன் வெறுப்பும், சமீபமும், தூரமும், நீங்குதலும், சேர்தலும் முதலாகிய விவகாரங்களையும் பொருந்திய பிரமாணங்களையும், மனோவாக்குகள் முதலிய எல்லாவற்றையுஞ் சேராமல் உள்ளும், வெளியுஞ் சேர்வதாகி.

அண்டத்திலுள்ளது போலவே பிண்டத்திலு முண்டென்று பெரியோர் கூறுதலின், 'காண்டல் பெறப் புறத்திலுள்ள படியேயுள்ளுங் காட்சிமெய்ந்நூல் சொல்லும்' எனவும் எங்கு நிறைந்தவ னென்பது தோன்ற, 'பதியாங் கடவுளே நீ நீண்ட நெடுமையு மகலக் குறுக்குங் காட்டா நிறைபரிபூரணவறிவான்' எனவும், நித்தியனாகலின், 'நித்தமாகி' எனவும், விருப்பு முதலியவற்றைக் கூடாமற் கூடினோன் என்பார். வேண்டு விருப்பொடு வெறுப்புச் சமீபந்தூரம் விலகணுகுதன் முதலாம் விவகாரங்கள்-பூண்ட வளவைகண் மன வாக்காதியெல்லாம் பொருந்தமால் அகம்புறமும் புணர்க்கையாகி' எனவுங் கூறினார். (13)

145. ஆகியசற் காரியவூ கத்துக் கேற்ற
அமலமாய் நடுவாகி அனந்த சத்தி
யோகமுறும் ஆனந்த மயம தாகி
உயிர்க்குயிரா யெந்நாளும் ஓங்கா நிற்ப
மோகஇருள் மாயைவினை உயிர்கட் கெல்லாம்
மொய்த்ததென்கொல் உபகார முயற்சி யாகப்
பாகமிக அருளஒரு சத்தி வந்து
பதிந்ததென்கொல் நானெனுமப் பான்மை என்
கொல்.

(பொ-ரை) உண்டாயுள்ள சற்காரிய யுத்திக்குத் தக்க மலரகி தமானதாய், நடுவுநிலைமையுள்ளதாகி, சத்திகளின் சேர்க்கையைப் பொருந்தின இன்பரூபமாகி, உயிர்க்குயிராகி, எக்காலத்திலும் உயரா நிற்க; அஞ்ஞான இருளும், அதற்கா தாரமான மாயையும் (அம்மாயையால் உண்டாக்கப் படுகின்ற) வினைகளும் உயிர்களுக்கெல்லாம் வந்து சேர்ந்ததற்குக் காரணம் என்ன? தனது உபகாரத்தையே உயிர்களின் பிரயத்தனமாகக் கொண்டு பரிபக்குவத்தைக் கொடுப்பதற்கு ஒரு சத்தி வந்து சேர்ந்ததற்குக் காரணம் என்ன? நான் நான் என்று சொல்லுகின்ற தன்மை யுண்டானதற்குக் காரணம் என்ன? (எ-று)

நீ எல்லாச் சத்திகளோடுங் கூடினவனாய் எந்நாளும் உயிர்க்கு யிராயிருக்க அஞ்ஞான முதலியவை வந்து உயிர்களைச் சேர்வதற்குக் காரணம் யாதோ? என்பது கருத்து.

ஒரு சத்தி வந்து பதிந்தது என்றது சத்திநிபாதத்தை. சத்தி+ நிபாதம்= சத்திபாதம். சத்தி=திருவருட்சத்தி, நிபாதம்= பதிதல் இச்சத்தி. பாதத்தின் விரிவை இடம் வந்துழி விரிக்குதும். (14)

146. நானென்னும் ஓரகந்தை எவர்க்கும் வந்து
நலிந்தவுடன் சகமாயை நானா வாகித்
தான்வந்து தொடருமித்தால் வளருந் துன்பச்
சாகரத்தின் பெருமைஎவர் சாற்ற வல்லார்
ஊனென்றும் உடலென்றுங் கரணமென்றும்
உள்ளேன்றும் புறமென்று மொழியா நின்ற
வானென்றுங் காலென்றுந் தீநீ ரென்றும்
மண்ணென்றும் மலையென்றும் வனம தென்றும்.

(பொ-ரை) நான் என்கிற ஒரு அகங்காரமானது எவரிடத்தும் உண்டாகி (அதனால் அவர்கள்) வருந்தி னவுடன் பிரபஞ்ச மாயையானது பலபலவாகி வந்து தொடரும். இந்த மாயையால் விர்த்தியாகின்ற துக்கத்தின் மிகுதியைச் சொல்லவல்லவர் யார்? மாமிசமென்றும், அம்மாமிசத்தாற் செய்யப்பட்ட உடம்பென்றும் அவ்வுடம்பிற் சம்பந்தமாயுள்ள அந்தக் கரணங்களென்றும், அகமென்றும், புறமென்றும், (எக்காலத்திலும்) நீங்காது நின்ற ஆகாய மென்றும், காற்றென்றும், அக்கினியென்றும், ஜலமென்றும், மண்ணென்றும், மலையென்றும், காடென்றும். (எ-று) (15)

147. **மலைமலையாங் காட்சிகண்கா ணாமை யாதி**
மறப்பென்றும் நினைப்பென்றும் மாயா வாரி
அலையலையா யடிக்குமின்ப துன்ப மென்றும் (கத்
அதைவிளைக்கும் வினைகளென்றும் அதனைத் தீர்க்கத்
தலைபலவாஞ் சமயமென்றுந் தெய்வ மென்றுஞ்
சாதகரென் றும்மதற்குச் சாட்சி யாகக்
கலைபலவா நெறியென்றுந் தர்க்க மென்றுங்
கடலுறுநுண் மணலெண்ணிக் காணும் போதும்.

(பொ-ரை) மலைமலையாகக் காணப்படுங் காட்சியும், கண் காணாமை முதலான மறதியென்றும், நினைவென்றும், மாயையாகிய சமுத்திரத்தில் அலையலையாயடிக்கின்ற இன்பதுன்பங்களென்றும், அவற்றையுண்டாக்குகின்ற இரு வினைகளென்றும், அவ்வினைகளைத் தீர்க்கப் பல துறை களையுடைய சமயங்களென்றும், தெய்வங்களென்றும், அப்பியாசிகளென்றும் அந்த அப்பியாசத்திற்குச் சாட்சியாகப் பல நூல்களால் உரைக்கப்பட்ட மார்க்கங்க ளென்றும், நியாயங்களென்றும், கடலில் சேர்ந்த சிறியமணல்களை எண்ணி அளவிடும்போதும். (எ-று) (16)

148. **காணரிய அல்லலெல்லாத் தானே கட்டுக்**
கட்டாக விளையுமதைக் கட்டோ டேதான்
வீணினிற்கர்ப் பூரமலை படுதீப் பட்ட
விந்தையெனக் காணவொரு விவேகங் காட்ட
ஊணுறக்கம் இன்பதுன்பம் பேரூ ராதி
ஒவ்விடவும் எனைப்போல உருவங் காட்டிக்
கோணறவோர் மான்காட்டி மானை ஈர்க்குங்
கொள்கையென அருள்மௌன குருவாய் வந்து.

(பொ-ரை) அளவிட்டுப் பார்ப்பதற்கு அருமையான துன்பங்களெல்லாம் கூட்டங் கூட்டமாக உள்ளனவாகும். அங்ஙனம் உண்டானவற்றைக் கூட்டத்துடனே கர்ப்பூர மலையானது மிக்க தீப்பட்டழிந்த ஆச்சரியம் போலச் செய்ய, எனக்கு ஒரு ஞானத்தை உபதேசித்தற் பொருட்டு ஆகார நித்திரைகளும், இன்ப துன்பங்களும், பேர், ஊர், முதலியவைகளும் ஒப்பவும் ஒரு மானைக்காட்டி மற்றொரு மானைப் பிடிப்பது போல என்னைப் போல் மானிட சரீரந்தாங்கி கிருபையையுடைய மௌனகுருவாகி எழுந்தருளி வந்து,

கர்ப்பூரமலையானது, தீப்பட்டொழியுமாறு துன்பங் களும் ஒழிய உபதேசிக்க வந்தாய் என்பார், 'காணரியவல்ல லெல்லாம்... அருண் மௌன குருவாய் வந்து" எனக்கூறினார். (17)

குருபதேசம், உயிரின் இலக்கணம்

149. வந்தெனுடல் பொருளாவி மூன்றுந் தன்கை
வசமெனவே அத்தவா மார்க்க நோக்கி
ஐந்துபுலன் ஐம்பூதங் கரண மாதி
அடுத்தகுணம் அத்தனையும் அல்லை அல்லை
இந்தவுடல் அறிவறியா மையுநீ யல்லை
யாதென்று பற்றின் அதன் இயல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீ உன்
பக்குவங்கண் டறிவிக்கும் பான்மை யேம்யாம்.

(பொ-ரை) (அங்ஙனங் குருவாக) எழுந்தருளி வந்து, என்னுடைய உடல், பொருள், ஆவி, ஆகிய மூன்றினையும் தன்னுடையவையென்று அங்கீகாரஞ் செய்துகொண்டு, அத்துவா மார்க்கத்தைப் பார்த்து ஐம்புலன் களும், ஐம்பூதங் களும், நான்கு அந்தக் கரணங்களும் முக்குணங்களும், நீயல்லை. இந்த உடம்பின் அறிவும், அறியாமையும் நீயல்லை, யாதொரு பொருளைத் தொடர்ந்தாலும் அதின் மயமாய் நின்று அத்தொடர்பிற் சேராத படிகக் கல்லையொத்த அறிவு நீயா இருக்கின்றனை. உன்னுடைய பரிபக்குவத்தை நோக்கி அறிவிக்குந் தன்மையையுடையோம் நாமாக இருக்கின்றோம். (எ-று)

குருவின் சந்நிதியில் உடல் பொருளாவிகளைத் தத்தஞ் செய்ய வேண்டியது மரபாகலின், 'வந்தெ னுடல்

பொருளாவி மூன்றுந்தன் கைவசமெனவே" எனவும், புலன்கள் முதலியவை உயிராகாமையின், 'ஐந்துபுலன்... பான்மையேம் யாம்" எனவுங் கூறினார். இதற்கு மேற்கோள், சிவஞானசித்தியார் சுபஷத்தின் பசு இலக்கணமும் சிவஞானயோகியர் உரையும் வருமாறு:-

1. உயிரெனப் படுவதிந்த வுடலின்வே றுளதாயுற்றுச்
செயிருறு மிச்சாஞானச் செய்திக ளுடையதாகிப்
பயில்வுறு மின்பதுன்பப் பலன்களு நுகரும்பார்க்கிற்
றுயிலொடு மைந்தவத்தைப்படு முண்மை துரியாதீதம்"

(பொழிப்புரை) முதற் சூத்திரத்தும், இரண்டாஞ் சூத்திரத்தும் முறையே பதியுண்மைக்கும் பாசவுண்மைக்கும் பிரமாணங் கூறிய ஆசிரியர், இரண்டாஞ் சூத்திரத்தின் "அலகிலாவுயிர்" என்றெடுத்துக் கொள்ளப்பட்டெஞ்சி நின்ற பசுவுண்மைக்குப் பிரமாணம் இவ்விலக்கணத்திற் கூறுகின்றார்.

உயிர் சூனிய மெனின்! அவ்வாறு சொல்வ தொன்றுளதாய் நிற்றலானும், உடம்பே யுயிரெனின்? உடம்பகத்தே பொருந்தி நின்று யானெனதென்னுஞ் செருக்குறுதலானும், ஐம்பொறியே யுயிரெனின்? ஞானமாத்திரை யேயன்றி, ஞானங்கிரியை யிச்சையென்னு மூன்று முடைத்தாகலானும், சூச்சுமவுடம்பே உயிரெனின்? கனவொடு பயின்றதனை நனவின் கணுற்றறிந்து நிற்றலானும், பிராணவாயுவே உயிரெனின்? இன்பதுன்பப் பயன் ஒடுங்கிய விடத்தன்றி யொடுங்காத விடத்தும் நுகர்ந்து நிற்றலானும், பிரமமே உயிரெனின்? அறிந்தாங் கறிதலின்றி ஐந்தவத்தைப் பட்டறிதலானும், அனைத்துங் கூடிய சமுதாயம் உயிரெனின்? அனைத்து நீங்கிய துரியாதீதத்து முண்மையானும், இந்த உடலின்கண் உயிரெனப்படுவது இவையனைத்திற்கும் வேறென்பதாம்.

துரியாதீதத்தில் உயிருண்டென்பது, விழித்த பின்னர்ச் சுகமாகத் துயின்றேனென்று, உணர்வு நிகழ்தல் பற்றித் தெளியப்படும்.

அற்றேல், சூனிய முதலியவற்றுள் ஏனயைவெலா மறியுமென்பது காட்சியளவைக்கு எய்தாமையின், உயிர் அவற்றின் வேறெனக் கொள்ளினும், உடம்பாதல், உடம்பின் கணுளவாகிய ஐம்பொறிகளாதல், அவ்வவைம்

பொறிகளை யூக்கி இயங்குவதாய பிராணவாயுவாதல் அறியு மென்பது காட்சி யளவையான் அறியக் கிடத்தலின், உயிர் அம்மூன்றனுள் ஒன்றாகற் பாற்றென்றலே பொருத்த முடைத்துப் போலு மென்பாரை நோக்கி, அம்மூன்றையுஞ் சிறந்தெடுத்தோதி மறுத்தற் கெழுந்தன வருஞ் செய்யுட் களென்பது.

2. **உடலின்வே றுயிரேனிந்த வுடலன்றோ வுணர்வதென்னி**
னுடல்சவ மானபோது முடலினுக் குணர்வுண்டோதா
னுடலினில் வாயுப்போனா லுணர்ச்சியின் றுடலுக்கென்னி
னுடலினில் வாயுப்போதா வுறக்கத்து முணர்வதின்றே.

(பொழிப்புரை) அவயவங்களி னொன்றானுங் குறைபாடின்றிக் கிடக்கும் பிணக் கிடையினும், நீ கூறும் பூதக் கூட்டத்தினொன்றானுங் குறைவின்றிக் கிடக்கும் முறக்கத்தினம், அறிவு நிகழக் காணாமையான், உடம்பறியுமாறு யாண்டைய தென்பதாம்.

3. **அறிவதைம் பொறியேயென்னி னுறக்கத்தி னறியாவாகு**
அறிவது மொன்றொன்றாக வொன்றொன்றா வறியுமென்னி
னறிவுக ளொன்றை யொன்றங் கறிந்திடா வைந்தையுங்
கொண்
டறிவதொன் றுண்டதான்மா வைம்பொறி யறிந்திடாவே.

(பொழிப்புரை) பிணமாம் போது கெட்டொழிவதாகிய ஐம்பொறிகளே அவ்வுடம்பினின்று நனவின்கணறியும். உறக்கத்தின்கண் அறிதலின்றி ஒடுங்கி நிற்குமெனின்? அது பொருந்தாது. நனவின்கணறிவை யறிவதும் ஒவ்வொரு பொறியாயறிவதன்றி ஒருங்கே யறிவனவல்ல வாதலானும், ஒன்றொன்றாயறியுமதுவே யவற்றியல்பெனின்? அங்ஙன மாயினும் இந்திரியங்கள் ஒன்றறிந்த தொன்றறி யாமையானும், இவ்வைந்தினானு மைம்புலன்களையும் அறிவதொன்று உளதாகலானு மென்பதாம்.

இவ்வாறன்றி, அறிவதைம் பொறியே யென்னி னுறங்கத்தி னிறயாவாகுமறிவது மொன்றொன்றாக வொன் றொன்றா யறியுமென்னின் என்பதற்கு என்னுடம்பகத்து நின்றறிவது ஐம்பொறிகளேயாம். அவை யுறக்கத்தி னறியாதவாகும். நனவின் கண் ஒவ்வொரு விடயமாக அறிவதும் இருவர் மதத்தினு மொக்கும். அதுபற்றி என்னையாசங்கித்தல் கூடாமையான் அவ்வைம் பொறிகளே

யொருதலையாக வறியும், வேறு மோருயிர் கோடன்மிகையா மென்மையாயின் என்றுரைத்தலு மொன்று.

4. **அறிந்திடும் பிராணவாயு வடங்குதல் விடுதல்செய்தா**
லறிந்திடா துடலுறக்கத் தறிவின்மை கரணமின்மை
யறிந்திடு முதலியாகி னதுநிற்கக் கரணம்போகா
வறிந்திடும் பிராணன் றன்னை யடக்கியும் விட்டுமான்மா.

(பொழிப்புரை) பிராணவாயு அடங்குதல் விடுதல் செய்தாலே அறிவு நிகழக் காண்டலின், அதுவே அவ்வைந் தையுங் கொண்டறிவதாகிய உயிரென வமையும். உறக்கத்தில் அஃதியங்கினும் ஆண்டுக் கருவி யின்மையால் அறியாதாயிற்றெனின்? அது பொருந்தாது கரணமுதலி நிற்புழிக் கரணம் போதல் கூடாமையிற் கரணங்களையும் தன்னையுங் கொண்டறிவதாகிய உயிர் வேறுண்டென்பது பெறப்படுதலானென்பதாம்.

இவை மூன்று செய்யுளானும், முறையே உடல், பொறி, பிராணவாயு வென்னும் மூன்றினையும் காட்சியளவையான் அறியக்கிடந்த விசேடம்பற்றி வேறெடுத்தாசங்கித்துப் பரிகரித்து, ‘இந்த வுடலினுயிரெனப்படுவது வேறு’ என்பது சாதிக்கப்பட்டது.

4-வது அவத்தை இலக்கணம்

1. **உணர்வன கரணமென்னி னொன்றையொன் றுணரா வெவ்வே**
றணைதருஞ் செயல்கணான்கு மறிந்தவை யடக்கியாக்கிப்
புணருமுட் கரணமாக்கிப் புறக்கரு வியினும்போக்கி
யிணைதரு மிவற்றின்வேறா யானென தென்பதான்மா.

(பொழிப்புரை) மேன்மூன்று சூத்திரத்தானும் பொருள் உண்மைக்கு அளவு கூறிய ஆசிரியர். நிறுத்த முறையானே பொருளியல்பு கூறுவான் தொடங்கி, மேற்கூறிப் போந்த பதிபாச பசுக்களை எதிர் நிரனிறையாக வைத்து முதற்கட் பசுவிலக்கணம் கூறுகின்றனார்.

இனி அந்தக் கரணமே யுணருமென்பார்க்கு, இவையும் ஐம்பொறி போலொன்றினையொன் றுணராவாகலான், உயிர் இவற்றின் வேறாகியும், யானெனதென்னுஞ் செருக்குக் கேதுவாகிய ஆணவமலம் உடனாயிணைந்து நிற்குமாதலான் தனக்கென அறிவின்றி இவ்வந்தக் கரணங்களானாய நான்கு

தொழிலையும் இவற்றோடு கூடியறிந்து இவற்றை யடக்க வேண்டுழி யடக்கி உட்கருவிகளாக்கியும், ஆக்க வேண்டுழீ யாக்கிப் புறக்கருவிகளிற் போக்கியும், வெவ்வே றவத்தை களை யணையுமென்பதாம்.

எனவே, ஆணவமலத்திற் பிணிப்புண்டு அவத்தை யுறுதல் ஆன்மாவுக் கிலக்கணமென்றவாறாயிற்று. இது தடத்த விலக்கண மெனப்படும் பொது வியல்பு.

உணராவாகலான், இவற்றின் வேறாகியும், யானென தென்ப திணை தருமாகலான் அறிந்தடங்கி யாக்கியாக்கிப் போக்கி வெவ்வேறணை தருமென, வினை முடிபு செய்க.

அடக்குதல் சொப்பனாவத்தையிற் செலுத்துதல், ஆக்குதல் சாக்கிராவத்தையிற் செலுத்துதல், இனம்பற்றி ஏனைய வத்தைகளுங் கொள்ளப்படும்.

அவையடக்கி யாக்கிப் புணருமுட் கருவியாக்கிப் புறக்கருவியினும் போக்கியென்பது நிரனிறைப் பொருள் கோள். வேறாயுமெனச் சிறப்பும்மை விரித்துரைக்க.

என்பதெனக் காரணத்தைக் காரியமாக உபசரித்தார்.

யானென தென்பதென்னும் பெயரடை அதனுண்மை சாதித்தற்குக் குறிப்பேதுவாய் நின்றது.

இச்செய்யுள் முதனூல் நாலாஞ் சூத்திரம்போல முக்கூற்றதாமாறு கண்டு கொள்க.

2. **கருவியா மனமும்புத்தி யாங்காரஞ் சித்தநான்கு**
மருவியான் மாவேயென்ன வருந்தீப் மெனமதித்தாங்
கொருவியான்மாவினுண்மையுணர்ந்தவர் தமையுணர்ந் தோர்
தருமிது பசுஞானம்பின் சிவஞானந் தனக்குமேலாம்

(பொழிப்புரை) இனியம் முக்கூற்றுள், "உணர்வன கரணமென்னி னொன்றை யொன்றுணரா" ஆகலான் ஆன்மா இவற்றின் வேறாமென்னும் முதற்கூற்றை வலியுறுத்துகின்றார்.

மனமுதலிய நான்கும் ஒரு விடயத்தை யறிதற்குக் கருவியாக மருவி இவையே கருத்தாவென்னும்படி உயிரோடு ஒற்றித்து நின்று நிகழ்வனவாம். கண்ணுக்கு விளக்குப் போல இவை உயிர்க்குக் கருவியாய் வேறு நிற்பன வென்றறிந்து நீங்கிநின்று இவற்றைக் கொண்டறியுங் கருத்தாவினுண்மை

யாதென்றா ராய்ந்தார்க்கு ஆன்மசொரூபம் இனிது விளங்கும். அதன்பின்பு அங்ஙனமாராயுமறிவு பசுஞான மாகலான் அதனைத் தரும் பொருள் யாதெனத் தேர்வார்க்குச் சிவஞானம் அதற்குமேலாய் விளங்கு மென்பதாம்.

ஈண்டு ஆன்மாவென்றது கருத்தாவென்னுந் துணையாய் நின்றது, தமையுணர்ந்தோரென முன்வருதலின்.

இதனானே அந்தக்கரணங்கள் கருத்தாவல்ல வென்பது, தம்மையுந் தலைவனையு மறியுமாற்றின் வைத்துக் காட்டப்பட்டது.

இதுகாறுங் கூறியவாற்றான் புலன்கள் முதலாகச் சொல்லப்பட்டவை ஆன்மா வல்லவென்பது திருஷ்டாந்த ரூபமாகக் காட்டப்பட்டது. இவ்வான்ம விலக்கணம் விரிவஞ்சி வேண்டும் வரையும் எழுதப்பட்டது. (18)

(இதுவுமது)

150. அறிவாகி ஆனந்த மயமா யென்றும்
அழியாத நிலையாகி யாதின் பாலும்
பிறியாமல் தண்ணருளே கோயி லான
பெரியபரம் பதியதனைப் பெறவே வேண்டில்
நெறியாகக் கூறுவன்கேள் எந்த நாளும்
நிர்க்குணநிற் குளம்வாய்த்து நீடு வாழ்க
செறிவான அறியாமை எல்லாம் நீங்க
சிற்சுகம்பெற் றிடுகபந்தந் தீர்க வென்றே.

(பொ-ரை) ஞானமாகி, இன்பவடிவாகி, எக்காலத்துங் கெடாத நித்திய வஸ்துவாகி, எதனிடத்தும் நீக்கமில்லாமல் தண்ணிய திருவருளையே கோயிலாகவுடைய மேலான பரம்பொருளையடைய விரும்புவையாயின், முறையாகச் சொல்லுகிறேன் நீ கேட்பாயாக. நிர்க்குணப் பொருளை உன்னுடை மனத்திற் பெற்று நீடூழி வாழக் கடவை! நெருங்கிய அஞ்ஞான மெல்லாம் நீங்கும் பொருட்டு ஞானசுகத்தை அடையக்கடவை! ஜென்மக்கட்டை நீங்கக் கடவை! என்று திருவாய் மலர்ந்து (எ-று) (19)

(இதுவுமது)

151. பந்தமறும் மெய்ஞ்ஞான மான மோனப்
பண்பொன்றை அருளியந்தப் பண்புக் கேதான்

சிந்தையில்லை நானென்னும் பான்மை யில்லை
தேசமில்லை காலமில்லை திக்கு மில்லை
தொந்தமில்லை நீக்கமில்லை பிறிது மில்லை
சொல்லுமில்லை இராப்பகலாந் தோற்ற மில்லை
அந்தமில்லை ஆதியில்லை நடுவு மில்லை
அகமுமில்லை புறமுமில்லை அனைத்து மில்லை.

(பொ-ரை) (மேலும் மேற்சொன்ன அப்) பந்தமென்பது சிறிதுமில்லாத உண்மையறிவாகிய மௌனநிலையாகிய ஒரு பொருளை அருளிச் செய்து, அந்த நிலைக்கு மனமில்லை, நான் என்னுங் குணமில்லை, தேசமில்லை, காலமில்லை, திசையுமல்லை, தொடர்தலில்லை, பிரிதலில்லை, இவைகட்கெல்லாம் வேறாங் குணமுமில்லை வாக்குமில்லை, இராப்பகல்களென்கிற தோற்றமில்லை. முடிவில்லை, முதலில்லை, மத்தியுமில்லை, உள்ளு மில்லை, வெளியுமில்லை, எல்லாமில்லை. (எ-று)

மௌனகுரு உபதேசித்த நிலை மன முதலியவை இறந்தவர்க்கே வெளிப்படுமென்பார். 'அந்தப்பண்புக்கே தான் சிந்தையில்லை... யனைத்து மில்லை' எனப் பலபட விதந்து கூறினார். (20)

(இதுவுமது)

152. **இல்லையில்லை யென்னினொன்று மில்லா தல்ல**
இயல்பாகி என்றுமுள்ள இயற்கை யாகிச்
சொல்லரிய தன்மையதா யான்றா னென்னத்
தோன்றாதெல் லாம்விழுங்குஞ் சொரூப மாகி
அல்லையுண்ட பகல்போல அவித்தை யெல்லாம்
அடையவுண்டு தடையறவுன் அறிவைத் தானே
வெல்லவுண்டிங் குன்னையுந்தா னாகக் கொண்டு
வேதகமாய்ப் பேசாமை விளக்குந் தானே.

(பொ-ரை) (அந்த நிலைக்கு) எல்லாமில்லையென்று சொன்னதினால் ஒன்றுமில்லாததல்ல, சுபாவத்திலேயே எக்காலத்தும் அழியாத இயற்கைப் பொருளாகி, சொல்லுதற்கரிய குணத்தையுடையதாய், நான்தானென்று வெளிப்படாமல் எல்லாவற்றையும் அடக்கிக் கொள்ளுகின்ற வடிவமாகி, இருளை நீக்குஞ் சூரியன் போல் அஞ்ஞானமெல்லாவற்றையும் நீக்கி, தடைகளெல்லா மற்றுப் போக உன்னுடைய அறிவையும் வென்று விழுங்கி

இவ்வுலகத்திலுள்ள உன்னையுந் தானாகக் கொண்டு உனது நிலையை மாற்றுவதாய் மௌன நிலையை விளக்கிக் காட்டும், (எ-று)

"அனாதி சிவரூப மாகிய வான்மா
தனாதி மலத்தாற் றடைப்பட்டு நின்றது
தனாதி மலமுந் தடையற்ற போதே
அனாதி சிவரூபமாகிய வாறே"

என்றபடியே குருபதேசத்தால் தடையற்ற சீவனைச் சிவரூபமாக்கி மௌனத்தை வெளிப்படுத்தலான், 'அல்லை யுண்ட பகல்போல வித்தையெல்லா மடையவுண்டு. தடையறவுன்னறிவைத் தானே-வெல்லவுண்டிங் குன்னையுந் தானாகக் கொண்டு வேதகமாய்ப் பேசாமை விளக்குந்தானே' எனக் கூறினர். (21)

(இதுவுமது)

153. தானான தன்மயமே யல்லால் ஒன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட் டாங்கே
போனாலுங் கர்ப்பூர தீபம் போலப்
போரயொளிப்ப தல்லாது புலம் வேறின்றாம்
ஞானாகா ரத்தினொடு ஞேய மற்ற
ஞாதுருவும் நழுவாமல் நழுவி நிற்கும்
ஆனாலும் இதன்பெருமை எவர்க்கார் சொல்வார்
அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும்

(பொ-ரை) எல்லாப் பொருள்களுந் தன்னுடைய மயமேயன்றி வெறோரு பொருளையுந் தலையெடுக்க விடாது; தலையெடுத்து அவ்விடம் போனாலும் கர்ப்பூர தீபத்தைப் போலப் போய் மறைவதேயல்லாமல் நீ என்கிற அறிவுவேறாக இல்லையாகும்; ஞானரூபத்தோடு, ஞேயமும், ஞாதருவும் பிரியாமல் பிரிந்து நிற்கும்; ஆயினும் இதன் பெருமையை எவர்க்கெவர் சொல்லவல்லார் அந்தப் பொருளின்றன்மையை யடைந்துவிட்டால் (தனக்கு முன்னிருந்ததற் போதந்தோன்றாமல்) சிவபோத மடைந்து விடுவார். (அப்பொழுது அதினுடைய பெருமையை அதுவே அறிவிக்கும்) (எ-று)

சிவன் வியாபகனாகலின் அவனிடத்தில் எல்லாப் பொருள்களும் ஒடுங்கு மென்பார், "தானானதன் மயமே யல்லா லொன்றைத் தலையெடுக்க வொட்டாது' எனவும்,

வியாத்தியாகிய உயிர் இறைவனை யுடையுங்கால் பசுகரணங்கெட்டுச் சிவகரணத்தை யடைதலானும் அங்ஙனம் சிவகரணத்தை யடையும்போது சிவத்தோடு ஐக்கியபதத்தைப் பெறுதலானும் 'தலைப்பட்டாங்கே போனாலுங் கர்ப்பூரதீபம் போலப் போயொளிப்பதல்லாது புலம் வேறின்றாம்' எனவும், அங்ஙனம் அநுபவிக்கும் சிவாநுபவமே இறைவன் பெருமையை விளக்குதலின், 'ஆனாலுமிதன் பெருமை யெவர்க்கார் சொல்வா ரதுவானா லதுவாவ ரதுவே சொல்லும்' எனவுங் கூறினார்.

புலம் வேறின்றாம் என்றதற்கு நீ என்கிற அறிவுவேறாக இல்லையாகும் என்றது சத்தார்த்தம். ஆயினும், சீவன் மலத்தோடு சம்பந்தப்பட்ட சித்து, சிவன் அம்மலமில்லாத சித்து. மலமில்லாத சித்துடன் மலமுள்ள சித்து ஒன்றுபடுவது எங்ஙனம்? ஆகையால், ஆணவ அறிவு வேறாக வெளிப் படுதலில்லையாம் என்பது பொருள். அன்றி, வேறுவழியில்லை எனலு மொன்று.

கர்ப்பூரதீபம் போலப் போயொளிப்பது என்ற திருஷ்டாந்த முகத்தான் வரிசையாய்ப் பல கர்ப்பூரக் கட்டிகளை வைத்துத் தீக்கொளுவின் கட்டிகள் வேறாகித் தீயொன்றாய வாறு போன்றது சிவசீவ ஐக்கியமெனத் தோன்றலின் புலன் வேறின்றாம் என்றதற்கு மேற்சொன்ன பொருளே சரியான தென்பது எம்முடைய மத சம்மதம்.

சிவன் வியாபகன் சீவன் வியாத்தி என்றதை:

" வியாபக மாதி விரிக்குங் காலை
வியாபக மேலிடு நிறைவா மென்ப
வியாத்தி சமநிறை வாகும் விளம்பின்
வியாப்பிய மொன்றின் மிடைந்த நிறைவே
வியாபகங் கடலே வியாத்தி யந்நீரே
வியாப்பிய முவரென விளக்கிய நூலே
வியாபக மீசன் வியாத்தி யாருயிர்
வியாப்பிய மலமென வீக்கிய நூலே"

என்பதனானும், சிவசீவர்கள் ஒன்றாகர் என்பதை:

"சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்றா மென்னிற்
சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித் தவன்றான்
பவங்கெடுபுத் திமுத்தி பண்ணுஞ்சித் தவற்றிற்
படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்றா

வைன்றானே யறியுஞ்சித் தாதலினா லிரண்டு
மணைந்தாலு மொன்றாகா தநனியமா யிருக்கு
மிவன்றானும் புத்தியுஞ்சித் திவனமோ புத்தி
யிதுவசித்தென றிடிலவனுக் கீவனுமசித் தாமே”

என்பதனானும் அறிக. *(22)*

(இதுவுமது)

154. அதுவென்றால் எதுவெனவொன் றடுக்குஞ் சங்கை
ஆதலினால் அதுவெனலும் அறவே விட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ் சனக னாதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா ரென்றும்
பதியிந்த நிலையெனவும் என்னை யாண்ட
படிக்குநிரு விகற்பத்தாற் பரமனா னந்த
கதிகண்டு கொள்ளவும்நின் னருள்கூ ரிந்தக்
கதியன்றி யுறங்கேன்மேற் கருமம் பாரேன்.

(பொ-ரை) அதுவென்று சொன்னால் எதுவென்று ஓராசங்கை யுண்டாகும். ஆகையால் அதுவென்று சொல்வதை முழுதுமே விட்டு, (பூக்களிலுள்ள) மதுவைப் பானஞ்செய்த வண்டுபோலவும், ஜனகன் முதலிய அரசர்களும் சுகர் முதலிய ரிஷிகளும் வாழ்ந்தனர் என்றும், (அப்படிப்பட்ட) இந்த நிலையில் நீபதிந்து நிற்கக்கடவை என்று உபதேசித்தும் என்னை ஆண்டருளியபடி நிருவிகற்ப சமாதியால் மேலான இன்பந்தரும் கதியைக் கண்டு (எந்நாளும்) அதை அநுபவிக்கவும், நீ கருணை கூர்ந்தருள வேண்டும். இந்தக் கதியை யடைந்தாலன்றித் தூங்கேன், மேல் நடக்க வேண்டிய காரியங்களையும் பாரேன். (எ-று)

நிர்விகற்ப ஞானம்:- “விண்டலில்லா வறிவாகும் விகற்பமில்லாக் காட்சியே” எனச் சிவஞான சித்தியாரானறிக. *(23)*

155. பாராதி விண்ணனைத்தும் நீயாச் சிந்தை
பரியமட லாவெழுதிப் பார்த்துப் பார்த்து
வாராயே என்ப்ராண நாதா என்பேன்
வளைத்துவளைத் தென நீயா வைத்துக் கொண்டு
பூராய மாய்மேலொன் றறியா வண்ணம்
புண்ணாளர் போல்நெஞ்சம் புலம்பி யுள்ளே
நீராள மாயுருகிக் கண்ணீர் சோர
நெட்டுயிர்த்து மெய்ம்மறந்தோர் நிலையாய் நிற்பேன்.

(பொ-ரை) பிருதிவி முதல் ஆகாயம் வரைக்குமுள்ள பூதங்களையும், அவற்றினுள்ள மற்றப் பொருள்களையும் நீயாகவே எண்ணி, என்னுடைய மனத்தைப் பெரிய ஏடாகக் கொண்டு அதில் இவைகளை எழுதிப் பலகாலும் பார்த்து, என்னுடைய பிராணநாயகனே நீ எழுந்தருளி வாராயோ? என்று சொல்வேன், என்னைப் பலகாலுந்தடுத்து நீயாகவே வைத்துக் கொள்கின்றமையால் பின்னொரு காரியத்தையும் செவ்வையாய் அறியாதபடி புண்ணாளிகள் மனம் வருந்துவதுபோல் வருந்தி உள்ளிடத்திற்றானே நீராக உருகிக் கண்களினின்றும் நீர்சோர, பெருமூச்சுவிட்டுச் சரீரத்தை மறந்து ஒரு நிலையாய் நிற்பேன். (எ-று)

இங்ஙனம் பலவாறு செய்தல் மோட்சதாகத்தாலென்க.

"உயிர்க்குயிராந் தோன்றாத் துணைக்கோர் துணையாகி" என்றாராகலின், "வாராயோ வென் ப்ராணநாதா வென்பேன்" என்றார். (24)

156. ஆயுமறி வாகியுன்னைப் பிரியா வண்ணம்
அணைந்துசுகம் பெற்ற அன்பர் ஐயோ வென்னத்
தீயகொலைச் சமயத்துஞ் செல்லச் சிந்தை
தெளிந்திடவுஞ் சமாதானஞ் செய்வேன் வாழ்வான்
காயிலைபுன் சருகாதி யருந்தக் கானங்
கடல்மலைஎங் கேஎனவுங் கவலை யாவேன்
வாயில்கும்பம் போற்கிடந்து புரள்வேன் வானின்
மதிகதிரை முன்னிலையா வைத்து நேரே.

(பொ-ரை) உன்னை ஆராயும் அறிவினை யுடையவர்களாகி நீங்காமற் சேர்ந்து சுகம்பெற்ற அன்பர்கள் அந்தோ! என்று மனமிரங்கும்படி கொலை புரியுங் கொடிய சமய மார்க்கங்களிலும் என்னுடைய மனமானது பிரவேசிக்க, (அம்மார்க்கங்களிற் செல்லாமல்) தெளிவடையும்படி சமாதானஞ் செய்வேன்; உயிர் வாழ்தற் பொருட்டுக் காய், இலை அற்பமாகிய சருகு, முதலியவற்றை யுண்ணக் காடெங்கே? கடலெங்கே? மலையெங்கே? என்றுங் கவலைப்படுவேன். குடம் புரள்வது போல் வாசலிலிருந்து புரள்வேன். (எ-று)

கொல்லா விரதங் கொண்டோர் பெரியோராகலின் அவர்கள் கொலைக் கஞ்சுவார் என்பார். "ஆயுமறி வாகி யுன்னைப் பிரியாவண்ண மணைந்து சுகம் பெற்றவன் பரையோவென்ன" என்றார். இதனை?

"அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
யிம்மா னுடரெல்லா மின்புற் றிருக்கின்றார்
அம்மா வென்றசத்தங் கேட்டகன்ற மாதவற்கும்
வெம்மா நிரயமென்றாற் புசித்தவர்க்கென் விளம்புவதே"

எனவும்,

"கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
வெல்லார்க்குஞ் சொல்லுவ தென்னிச்சை பராபரமே"

"கொல்லா விரதங் கொண்டோரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே"

எனவும்,

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்"

எனவும் வருவனவற்றானுணர்க. *(25)*

157. **நேரேதான் இரவுபகல் கோடா வண்ணம்**
நித்தம்வர வுங்களைஇந் நிலைக்கே வைத்தார்
ஆரேயங் கவர்பெருமை என்னே என்பேன்
அடிக்கின்ற காற்றேநீ யாரா லேதான்
பேராதே சுழல்கின்றாய் என்பேன் வந்து
பெய்கின்ற முகில்காள்எம் பெருமான் நும்போல்
தாராள மாக்கருணை பொழியச் செய்யுஞ்
சாதகமென் னேகருதிச் சாற்று மென்பேன்.

(பொ-ரை) (ஆகாயத்திற்றோன்றும் சந்திர சூரியர்களை முன்னிலையாக வைத்து) நேராக இரவும் பகலும் நாள்தோறும் தவறாவகை வரும்படி உங்களை இந்த நிலையிற்றானே நியமித்து வைத்தவர் யாவர்? அவ்விடத்து அவருடைய பெருமையை என்னவென்று சொல்வேன்; வீசுகின்ற காற்றே! நீ யாருடைய கட்டளையினால் நீங்காமற் சுழல்கின்றாயென்று சொல்வேன்; வந்து மழையைப் பொழிகின்ற மேகங்களே! எம்முடைய இறைவன் உங்களைப்போல் மிகுதியாக அருள் மழையைப் பொழியச் செய்கின்ற அப்பியாசம் என்ன? நீங்கள் யோசித்துப் பார்த்துச் சொல்லுங் களென்று கேட்பேன். (எ-று)

இச்செய்யுள் சந்திர சூரியர்களையும், காற்றையும், மேகங்களையும் முன்னிலையாக வைத்துக் கூறப்பட்டது.

“வானின்மதி கதிரை முன்னிலை யாவைத்து நேரே” என்னும் மேற்செய்யுளின் ஈற்றடிக்குப் பொருள் இச்செய்யுளில் எடுத்துக் கொள்ளப்பட்டது. (26)

158. கருதரிய விண்ணேநீ எங்கு மாகிக்
கலந்தனையே யுன்முடிவின் காட்சி யாக
வருபொருளெப் படியிருக்குஞ் சொல்லா யென்பேன்
மண்ணேயுன் முடிவிலெது வயங்கு மாங்கே
துரியஅறி வுடைச்சேடன் ஈற்றின் உண்மை
சொல்லானோ சொல்லேன்பேன் சுருதி யேநீ
ஒருவரைப்போல் அனைவருக்கும் உண்மை யாமுன்
உரையன்றோ உன்முடிவை உரைநீ
என்பேன்.

(பொ-ரை) நினைத்தற்கரிய ஆகாயமே! நீ எவ்விடத்தும் பரவிக் கலந்திருக்கின்றனையே. உன்னுடைய முடிவில் காணப்பட்டு வரும் பொருள் எப்படிப்பட்ட இயல்புள்ள தாகவிருக்கும் சொல்லுவாயென்று கேட்பேன்; பூமியே! உன்னுடைய முடிவில் எந்தப் பொருளிருக்கும், அவ்விடத்தி லிருக்கும் உயர்ந்த அறிவினையுடைய ஆதிசேடன் முடிவின் உண்மையைச் சொல்லமாட்டானோ? நீ சொல்லுவாயென்று கேட்பேன்; வேதமே! நீ ஒருவருக்கு விளங்குவது போல் எல்லாருக்கும் உண்மையாய் விளங்குகின்ற முதனூலா யிருக்கின்றனை யல்லவோ? (ஆகையால்) நீ உன்னுடைய முடிவான பொருளைச் சொல்லென்று கேட்பேன். (எ-று)

இச்செய்யுள் ஆகாயம், பூமி, வேதம் இவைகளை முன்னிலையாக வைத்துக் கூறப்பட்டது. (27)

159. உரையிறந்து பெருமைபெற்றுத் திரைக்கை நீட்டி
ஒலிக்கின்ற கடலேஇவ் வுலகஞ் சூழக்
கரையுமின்றி யுன்னைவைத்தார் யாரே என்பேன்
கானகத்திற் பைங்கிளிகாள் கமல மேவும்
வரிசிறைவண் டினங்காள்ஓ திமங்காள் தூது
மார்க்கமன்றோ நீங்களிது வரையி லேயும்
பெரியபரி பூரணமாம் பொருளைக் கண்டு
பேசியதுண் டோவோருகாற் பேசு மென்பேன்.

(பொ-ரை) (இவ்வளவினதென்று சொல்லுஞ்) சொல்லற்றுப், பெருமையைப் பெற்று, அலைகளாகிய

கைகளை நீட்டிக் கோஷிக்கின்ற சமுத்திரமே! இவ்வுலகத்தைச் சூழும்படி கரையுமில்லாமல் உன்னையமைத்து வைத்தவர் யாரென்று கேட்பேன்; காட்டில் வாசிக்கின்ற பசிய கிள்ளைகளே! தாமரை மலரிலிருக்கும் வண்டுக் கூட்டங்களே! அன்னங்களே! (உங்களுக்கு இயற்கையாக உள்ளது) தூதுமார்க்கமல்லவா? ஆகையால் நீங்கள் இதுவரைக்கும் (அத் தூதுமார்க்கத்தில்) பெரிய பரிபூரணம் என்கிற பொருளைக் கண்டு வார்த்தை சொல்லி இருக்கிறீரோ? (அங்ஙனமிருந்தால் நீங்கள் சொன்ன அவ்வார்த்தையை) என்னிடத்தில் ஒருதரஞ் சொல்லுங் களென்று கேட்பேன். (எ-று)

இச்செய்யுள் சமுத்திரம், கிளி, வண்டு, அன்னம் இவற்றை முன்னிலையாக வைத்துச் சொல்லப்பட்டது.(28)

160. ஒருவனவன் யானைகெடக் குடத்துட் செங்கை
ஓட்டுதல்போல் நான்பேதை உப்போ டப்பை
மருவவிட்டுங் கர்ப்பூர மதனில் தீபம்
வயங்கவிட்டும் ஐக்கியம் உன்னி வருந்தி நிற்பேன்
அருளுடைய பரமென்றோ அன்று தானே
யானுளனென் றும்மெனக்கே ஆண வாதி
பெருகுவினைக் கட்டென்றும் என்னாற் கட்டிப்
பேசியதன் றேஅருள்நூல் பேசிற் றன்றே.

(பொ-ரை) ஒரு வேடனானவன், தனக்கெதிரே நின்ற யானையானது மறைய (அதைத் தேடுதற்காக) ஒரு குடத்திற்குள்ளே கையை யிட்டுத் துழாவுதல் போல் அறிவில்லாத வனாகிய நானும் உப்புடன் நீரைச் சேர்த்தும், கர்ப்பூரத்தில் விளக்கைச் சேர்த்தும், (இரண்டுமொன்றாம்) ஐக்கியபதத்தை நினைத்து வருத்தப்பட்டு நிற்பேன் (ஏனெனில்) திருவருளை யுடைய பரம்பொருள் என்னுள்ளதோ? அன்றே நானும் உளேன் என்றும் (ஆனால்) எனக்கே ஆணவ முதலியவைகள் பெருகுதற்குக் காரணமாயுள்ள வினைக் கட்டுள்ளதென்றும், என்னால் கற்பித்துச் சொல்லப்பட்டதன்று; வீட்டு நூல்களாற் சொல்லப்பட்டதாகலான் (எ-று)

வேடனானவன் யானை கெட்ட பிரமையினால் பெரிய யானையானது சிறிது குடத்தில் மறையுமோ என்னும் அறிவு உதியாமல் கையிட்டுத் துழாவியது போல் நானும்

ஐக்கியபதத்தை அடையவேண்டிய பிரமையினால் உப்புடன் நீரையும் கர்ப்பூரத்தில் தீயையும் சேர்த்துப் பார்த்து வருந்துகின்றேன் என்பார், 'ஒருவனவன் யானை கெடக் குடத்துட் செங்கை யோட்டுதல் போனான். பேதையுப் போடப்பை மருவவிட்டுங் கர்ப்பூரமதனிற் றீபம் வயங்கவிட்டு மைக்கிய முன்னி வருந்தி நிற்பேன்' எனவும், முதனூற் களெல்லாம் சிவனும் நித்தியன் சீவனும் நித்தியன் என்றும் ஆனால் சீவனுக்கு மாத்திரம் வினைக்கட்டு உண்டென்றும் அநாதி காலந்தொட்டு முறையிடுதலின் அக்கட்டுள்ளவரையும் இருவருமொன்றாம் ஐக்கியம் இல்லையென்பார். 'அருளுடைய பரமென்றோவன்று தானே யானுளனென்றும் மெனக்கே யாணவாதி பெருவினைக் கட்டென்று மென்னாற் கட்டிப் பேசியதன்றே யருணூல் பேசிற்றல் எனவுங் கூறினார்.

ஒருவனவன் என்றதற்கு ஒரு+ வனவன் என்று பிரிக்காமல் ஒருவன் +அவன் எனப் பிரித்து ஒருவன் (அவன் யானை மறைய) தன்னுடைய யானை மறைய எனப்பொருள் கோடலுமொன்று. *(29)*

161. அன்றுமுதல் இன்றைவரைச் சனன கோடி
அடைந்தடைந்திங் கியாதனையால் அழிந்த தல்
இன்றைவரை முத்தியின்றே எடுத்த தேகம் (லால்
எப்போதோ தெரியாதே இப்போ தேதான்
துன்றுமனக் கவலைகெடப் புலைநா யேனைத்
தொழும்புகொளச் சீகாழித் துரையே தூது
சென்றிடவே பொருளைவைத்த நாவ லோய்நஞ்
சிவனப்பா என்ற அருட் செல்வத் தேவே.

(பொ-ரை) படைப்புக் காலந்தொடங்கி இன்றளவும், அநேக ஜன்மங்களையுடைந்து இவ்வுலகத்தில் துன்பத் தினால் அழிந்ததேயல்லாமல், இன்றளவும் முத்தியடைய வில்லை. (வினையினால்) எடுக்கப்பட்ட தேகமானது (நீங்கிப் போவது) எப்பொழுதோ? தெரியாதே, (ஆதலான் தேகமுள்ள) இப்பொழுதே என்னுடைய மனக்கவலைகள் ஒழியும் பொருட்டு நீசனாகிய என்னை அடிமை கொள்ளச், சீகாழியிலவதரித்த பிரபுவே! பரமசிவன் தூது செல்லும்படி பொற்குவியலைத் திருநாவலூரனே! நம்முடைய சிவபெருமானால் 'அப்பா!' என்று அழைக்கப்பட்ட திருவருட் செல்வத்தை யுடைய தெய்வமே. (எ-று)

சீகாழித்துரையே என்றது- திருஞானசம்பந்த நாயனாரை. திரு நாவலூரன் என்றது - சுந்தரமூர்த்தி நாயனாரை. சிவபெருமானால் அப்பாவென்றழைக்கப்பட்டவர் - வாகீசர் (அப்பர் சுவாமிகள்) (30)

162. **தேவர்தொழும் வாதவூர்த் தேவே என்பேன்**
திருமூலத் தேவேஇச் சகத்தோர் முத்திக்
காவலுறச் சிவவென்வாக் குடனே வந்த
அரசேசும் மாவிருந்துன் அருளைச் சாரப்
பூவுலகில் வளரருண கிரியே மற்றைப்
புண்ணியர்கா ளோவென்பேன் புரையொன் றில்லா
ஓவியம்போல் அசைவறவுந் தானே நிற்பேன்
ஓதரிய துயரகெடவே யுரைக்கு முன்னே.

(பொ-ரை) தேவர்களால் தொழப்படுகின்ற திருவாதவூரில் அவதரித்த தெய்வமே! என்று சொல்வேன்; திருமூலர் என்னும் பெயரையுடைய தெய்வமே! இவ்வுலகத்திலுள்ளோர் மோட்சவிருப்பத்தைப் பெறுதற்பொருட்டு சிவன் என்கிற வசனத்துடனே பிறந்த தலைவனே! உயிர்கள் மௌன மாயிருந்து கொண்டு உன்னுடைய திருவருளைச் சேர்தற்காக எழுந்தருளி இருக்கும் அருணகிரி சுவாமீ! மற்றுமுள்ள புண்ணியர்களே! என்று சொல்வேன்; சொல்லுதற்கருமையான துன்பங்கள் கெடும்படி சொல்லு முன்னரே குற்றமில்லாச் சித்திரப் பதுமை போல் அசைவற்றிருப்பேன். (எ-று)

வாதவூர்த் தேவே என்றது - மாணிக்கவாசக சுவாமிகளை திருமூலர்-திருமந்திரஞ் செய்தவர். சிவ என் வாக்குடனே வந்த அரசு - சிவவாக்கியர். இவர் அவதார காலத்தில் சிவ என்னும் வாக்குடன் அவதரித்தாரென்றும், அதினாற்றான், அப்பெயரே வழங்குகின்றதென்றும் கர்ண பரம்பரையாக வழங்கி வருகின்றது. அருணகிரிநாதர் - கந்தர் அநுபூதி முதலிய நூல்களைச் செய்தவர். (31)

163. **ஓதரிய சுகர்போல ஏன்ஏன் என்ன**
ஒருவரிலை யோஎனவும் உரைப்பேன் தானே
பேதம்அபே தங்கெடவும் ஒருபே சாமை
பிறவாதோ ஆலடியிற் பெரிய மோன

நாதனொரு தரமுலகம் பார்க்க இச்சை
நண்ணானோ என்றென்றே நானா வாகிக்
காதல்மிகு மணியிழையா ரெனவா டுற்றேன்
கருத்தறிந்து புரப்பதுன்மேற் கடன்முக் காலும்.

(பொ-ரை) (இத்தன்மைத்தான தபோமகிமை யுடையா ரென்றெடுத்துச்) சொல்லுதற்கரியவரான சுகமுனிவர் போல, 'ஏன்! ஏன்!' என்று எதிரொலி கொடுக்க வேறொருவர் "இல்லையோ வென்றுஞ் சொல்வேன்; தன்னிடத் திற்றானே பேதாபேதங்கள் நீங்கவும் ஒப்பற்ற மௌனநிலை யுண்டாகாதோ? கல்லால மரத்தினடியில் எழுந்தருளிய பெரிய மௌன நிலையையுடைய கடவுள் ஒருதரம் உலகத்தைப் பார்க்க இச்சை கொள்ளானோ". என்று பலமுறையுஞ் சொல்லிப் பலவகையாய்க் கலங்கி (நீங்கிய கணவர் வராமையால் அவர்கள் மேல்) ஆசை மிகுந்த பெண்களைப் போல் வாடினேன்; (ஆகையால்) என்னுடைய எண்ணத்தை யறிந்து காப்பாற்றுவது முக்காலும் உனக்குக் கடமையாகும். (எ-று)

சுகமுனிவர் பிறந்தவுடன் பிரபஞ்ச மாயைக்கு அஞ்சி ஓடினார். அவர் தந்தையாகிய வேத வியாசபகவானானவர் அவரைப் பின் தொடர்ந்து 'ஓ கோமகனே!' என்று அழைத்துக் கொண்டு பின் சென்றனர். அப்பொழுது சுகர் பூதமயரும் இறைவனைப் போலச் சர்வ வியாபகத்துவ முள்ளவருமாதலால் அங்கிருந்த விருட்சங்களெல்லாம் எதிரொலி செய்தன வென்பது நூற்றுணிபாதலால் 'ஓதரியசுகர் போல ஏன் ஏன் என்ன ஒருவரிலையோ?'' என்றார் இதனை

"பிறந்தபொழு தேதுறந்து பிறைக்குழவி போனடிப்பப்
பின்போய்த் தொன்னூல்
அறைந்தபுகழ் வியாதமுனி யாதரத்தான் மதலாயென்
றழைப்பச் செவ்வாய்
திறந்துநறை பொழியுமலர்ச் செழுந்தருவு மேனென்ன
வுயிர்கள் யாவும்
நிறைந்துறையுஞ் சுகமுனிவனிரையிதழ்த்தாமரைத்தாள்க
ணினைதல் செய்வாம்"

என்பதனானறிக. (32)

164. காலமொடு தேசவாத்த மான மாதி
கலந்துநின்ற நிலைவாழி கருணை வாழி
மாலறவஞ் சைவமுதல் மதங்க ளாகி
மதாதீத மானஅருள் மரபு வாழி
சாலமிகும் எளியேனிவ் வழக்குப் பேசத்
தயவுவைத்து வளர்த்தஅருள் தன்மை வாழி
ஆலடியிற் பரமகுரு வாழி வாழி
அகண்டிதா காரஅரு ளடியார் வாழி.

(பொ-ரை) காலத்தோடும், தேசவர்த்தமா நாதிகளோடும் (கலவாமற்) கலந்து நின்ற பொருள் வாழ்க! (அப்பொருளின்) திருவருள் வாழ்க! மயக்கம் ஒழியவும், சைவமுதலிய மதங்களாகியும், மதாதீதமுமான திருவருண் மரபானது வாழ்க! மாயையின் விகாரம் மிகுந்த ஏழையாகிய நான் இந்த விவகாரத்தைப் பேசும்படி கிருபை வைத்து (என்னை) வளர்த்த திருவருட் குணம் வாழ்க! கல்லால மரத்தின் கீழெழுந்தருளிய பரமகுரு வாழ்க! வாழ்க! கண்டிக்கப்படாத ரூபத்தையுடைய உனது திருவருளைப் பெற்ற அடியவர் வாழ்க! (எ-று)

ஆலடியிற் பரமகுரு=தட்சிணாமூர்த்தி (33)

தேன்முகம்

இது, ஆகாபுவனம் போற் செய்யப்பட்டதும், பிரமனை நோக்கிச் சொல்லியதாகச் சொல்லப்பட்டதுமாம்.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

165. தேன்முகம் பிலிற்றும் பைந்தாட் செய்யபங் கயத்தின் மேவும்
நான்முகத் தேவே நின்னால் நாட்டிய அகில மாயை
கான்முயற் கொம்பே என்கோ கானலம் புனலே என்கோ
வான்முக முளரி என்கோ மற்றென்கோ விளம்பல் வேண்டும்.

(பொ-ரை) தன்னிடத்தினின்றுந் தேனைச் சிந்து கின்ற பசிய நாளத்தையுடைய செவந்த தாமரைமலரில் வீற்றிருக்கின்ற நான்கு திருமுகங்களையுடைய பிரமதேவனே! உன்னாற் சிருஷ்டித்து நிறுத்தப்பட்ட பிரபஞ்ச மாயையைக் காட்டில் வாழ்கின்ற முயலினது கொம்புதானென்று சொல்லுவேனோ? கானற் சலந்தானென்று சொல்லுவேனோ? ஆகாயத் தாமரையென்று சொல்லுவேனோ? இவற்றின்

வேறாகிய பொருளென்று சொல்லுவேனோ? அதை நீயே சொல்லல் வேண்டும். (எ-று)

கான்முயற் கொம்பு முதலிய மூன்றும் இல்பொருளுவமை. இவை போன்றதே உலகமாயையுமென்பார். இங்ஙனங் கூறினார். முயற்கொம்பும், கானற்சலமும், ஆகாயத்தாமரையும் பார்வைக்கு மாத்திரம் உள்ளவை போலக் காணப்படினும் அவையில்லாமையே யாயவாறு போன்றது உலக மாயையு மென்பார். அவைகளை உவமைப்படுத்திக் கூறினர். இதனை,

" அண்டபகி ரண்டமும் மாயா விகாரமே
யம்மாயை யில்லாமை யேயாம்"

என இந்நூலானறிக. ஒரு பொருளின் உண்மையைக் கலைகளில் வல்லவனொருவன் கூறின் நம்பற்பாற் றாகலின் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமனை நோக்கிக் கூறினார். (1)

166. வேண்டுவ படைத்தாய் நுந்தை விதிப்படி புரந்தா னத்தைக்
காண்தக அழித்தான் முக்கட் கடவுள்தான் இனைய வாற்றால்
ஆண்டவ னெவனோ என்ன அறிகிலா தகில நீயே
ஈண்டிய அல்லல் தீர எம்மனோர்க் கியம்பு கண்டாய்.

(பொ-ரை) (ஓ! பிரமதேவனே! நீ) உலகத்தார்க்கு வேண்டிய பொருள்களைச் சிருஷ்டி செய்தனை; உன் தந்தையாகிய விஷ்ணு காக்க வேண்டிய முறைப்படி காத்தான்; அவைகளை மூன்று கண்களையுடைய உருத்திரமூர்த்தி யாவருங் காணும்படி அழித்தான்; இங்ஙனமிருக்கும் வகையால் இறைவன் யாவனென்று உலகத்தார் உணரார்கள் (ஆகையால்) மிகுந்த சந்தேகம் நீங்க எம்மைப் போன்றவர்களுக்கு நீயே சொல்லுவாய் (எ-று)

பிரமனாகிய நீ படைத்தற்றொழிலையும் உன் தந்தையாகிய விஷ்ணு காத்தற்றொழிலையும், உருத்திர மூர்த்தி அழித்தற்றொழிலையுஞ் செய்கின்றமையால், நீங்கள் மூவருஞ் சமமாகவே காணப்படுகின்றீர். ஆகையால் உங்களுள் கடவுள் இன்னா ரென்று தெரியவில்லை. அச்சந்தேகம் நீங்கும்படி எம்போல்வார்க்கு அவ்வுண்மையைச் சொல்ல வேண்டியவன் நீயே என்பதாம். (2)

167.கண்டன அல்ல என்றே கழித்திடும் இறுதிக் கண்ணே
கொண்டது பரமா னந்தக் கோதிலா முத்தியத்தால்
பண்டையிற் படைப்புங் காப்பும் பறந்தன மாயை யோடே
வெண்டலை விழிகை காலில் விளங்கிட நின்றான் யாவன்.

(பொ-ரை) திருஷ்டி மாத்திரமாயிருக்கின்ற பொருள் களெல்லாம் பரம்பொருளல்லவென்று கழித்துவிடும் முடிவிடத்தில் கொள்ளப்பட்ட பொருளெதுவோ? அதுவே மேலான இன்பம் விளைக்கின்ற குற்றமற்ற மோட்சமாகும். அதனால் முன்னதாகிய சிருஷ்டியும், திதியும் மாயையுட னொழிந்தன; (ஆயின் அக்காலத்தில்) வெள்ளியதலை கையிலும், கண், காலிலும் விளங்கும்படி (எல்லாவற்றையுங் கடந்து) நின்றவன் எவன்?

சர்வசங்கார காலத்தில் மாயா சம்பந்தமாகிய சிருஷ்டி, திதிகள் ஒழிந்துவிடுதலின், 'அத்தால் பண்டையிற் படைப்புங் காப்பும் பறந்தன மாயையோடே' எனவும், அத்தொழில்கள் ஒடுங்குங்கால் அவற்றிற்குத் தலைவர்களும் ஒடுங்கிச் சங்கார கர்த்தா ஒருவனே ஆண்டிருந்தானென்பார். 'வெண்டலை வழிகைகாலில் விளங்கிட நின்றான் யாவன்' எனவுங் கூறினார். (3)

சங்கார கர்த்தாவின் இலக்கணம்

168. விளங்கவெண் ணீறு பூசி விரிசடைக் கங்கை தாங்கித்
துளங்குநன் னுதற்கண் தோன்றச் சுழல்வளி நெடுமூச் சாகக்
களங்கமி லுருவந் தானே ககனமாய்ப் பொலியப் பூமி
வளர்ந்ததா ளென்ன உள்ள மன்றென மறையொன் றின்றி.

(பொ-ரை) விளங்கும்படி திருநீற்றை யணிந்து, விரிந்த சடையில் கங்கையைச் சுமந்து அழகிய நெற்றிக்கண் தோன்றவும், சுழல்கின்ற காற்றானது பெருமூச்சாகவும் ஆகாயமே குற்றமற்ற ரூபமாகப் பிரகாசிக்கவும், 'பூமியே நீண்ட திருவடியாகவும், சிற்சபையானது இதயமாகவுங் கொண்டு, கொஞ்சமும் மறைவில்லாமல்.

கங்கை நம்மை வகிக்க வல்லவன் யாரென்று வேகத்தோடு இறங்க, அதனைச் சிவபெருமான் தமது சடையிலோர் மயிர் நுனியிற் சுவறச் செய்தனர் என்பது தோன்ற. 'விரிசடை' எனவும், இறைவனுக்குத் தில்லையை

இருதயமாகச் சொல்லுவ ராதலின், 'உள்ளம் மன்றென' எனவுங் கூறினார். (4)

169. மறைமுழக் கொலிப்பத் தானே வரதமோ டபயக் கைகள்
முறைமையின் ஓங்க நாதம் முரசெனக் கறங்க எங்கும்
குறைவிலா வணநி றைந்து கோதிலா நடனஞ் செய்வான்
இறையவன் எனலாம் யார்க்கும் இதயசம் மதமீ தல்லால்

(பொ-ரை) வேதங்கள் கோட்சிக்கவும், வரதா பயக்கைகள் முறைமையாய் விளங்கவும், நாததத்துவமானது பேரிகைபோல ஒலிக்கவும், எவ்விடத்தும் நீங்காமல் நிறைந்து குற்றமற்ற நடனஞ் செய்வோன் (யாவன்? அவன்தான்) இறையவனென்று சொல்லலாம், எல்லார்க்கும் மனசம்மதம் இதுவேயாகும், அன்றி. (எ-று)

இச்செய்யுள் மேற் கூறியப்போந்த சங்கார கர்த்தாவே உலகிற்கு முதற்கடவுளென்பதை விளக்குகின்றது. அஃதெப்படி; பிரம விஷ்ணுக்கள் ஒவ்வொரு தொழில் செய்வதுபோலவே யாதொரு சங்கார கர்த்தாவும் அத்தொழில் செய்கின்றான். அங்ஙனமிருக்க, அவர்களைக் கடவுளர் களென்று சொல்லாமல் சங்கார கர்த்தாவையே கடவுளென்று சொல்வானேன்? எனக் கடாவுவோர் அடியில் வருபவற்றால் உய்த்துணர்ந்து கொள்க.

சிவஞானபோதம் முதற் சூத்திரம்

அவனவ ளதுவெனு மவை மூவினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதா
மந்த மாதியென் மனார் புலவர்

எனின்-சங்கரா-உணர்த்திற்று

இது சூத்திரக் கருத்துரைக்கின்றது.

(இ-ள்) நிவிர்த்திகலை முதலிய பஞ்ச கலைகளுட்பட்ட வைவகைச் சங்காரத்துள் இறுதிக்கண்ணதாகிய மாசங் காரத்தைச் செய்யும் விலை முதலாயுள்ள முதல்வனையே தனக்கு முதற் கடவுளாகவுடைய தவனவளது வென்றிவ்வாறு சுட்டியுணரப் படுவதாய வுலகமென வேதாகமங்களுட் கூறப்படவதனை யனுமான வளவையா னுணர்த்துதலைக் கருதிற் றிச்சூத்திர மென்றவாறு. ஏகாரம் - இயைபின்மை நீக்குதற்கும் பிறிதினியையு நீக்குதற்கும் பொதுவாய் நின்ற பிரிநிலை. இதன் பொழிப்புரைத்துக் கொள்க.

முதலதிகரணம்

இஃதிவ்வுரை முகத்துக்கேட்போரா லுரைவகைபற்றிச் செய்து கோடற் பாலதொன்றனை யறிவுறுத்துகின்றது.

(இ-ள்) இச்சூத்திரத்தின் பிண்டப் பொழிப்பு முன்னர்க் கண்ணழித் துரைக்கும் பொழிப்புரைபற்றி யுரைத்துக் கொள்க வென்றவாறு. எனவே இங்ஙனம் இரு வகைப்படும். பொழிப்புரையுட் கண்ணழித்துக் கடா விடை களானுரைக்கும் வார்த்தீகமாய பொழிப்புரை மாத்திரையே யாமீண்டுரைக்கின்றாம். பிண்டமாகக் கொண்டுரைப்பதாய பொழிப்புரை இது பற்றி யுணர்ந்துகோட லெளிதாகலின் அஃதியாமுரைக் கின்றிலமென வுரைமுகத்து மாணாக்கர்க் கறிவுறுத்தவா றாயிற்று. இஃதேனைச் சூத்திரங்களினு முய்த்துக்கொண் டுணர்த்தற் பொருட்டு முதற்கண் வைக்கப்பட்டது. இவ்வாசிரியராணை தந்தமையிற் கண்ணழித் துரைபற்றிச் சூத்திரத்திற்குப் பதப்பொருள் கூறுவதும்.

அவனவளது வெனுமவை - புலவர் - எ-து - அவனென்றும் அவளென்றும் அதுவென்றும் இவ்வாறு பகுத்துப் பலவாய்ச் சுட்டி யுணரப்படுஞ் சொல்லும் பொருளுமாய விருகூற்றுப் பிரபஞ்சத் தொகுதி தோற்றநிலை யிறுதியென்னும் முத்தொழிலுடைமையால் ஒருவனாற் றோற்றப்பட்டதாயவுள் பொருளேயாம், அது தோன்றுங்கால் தானொடுங்குதற் கேதுவாய் நின்ற கடவுளின்றுஞ் சகசமல நீங்காமையாலது நீங்குதற் பொருட்டு மீளத் தோன்றுவதாம், இவ்வாறாகலிற் சங்காரத் தொழிலைச் செய்யுங் கடவுளே யுலகிற்கு முதற் கடவுளேனையோரல்ல ரெனக் கூறு வரளவை நூலுணர்ந்தோர் (எ-று)

அவை-தொகுதி. சுட்டுப் பெயரெனக் கொள்ளின், உளவெனப் பிரித்துப் பயனிலையாக்கித் தாமென்பதனை யசைநிலையாக வைத்துரைத்தாக்கக் கொல் வருவித்துக் கொள்க. வினைமை - வினையுடையமை-தோன்றிய வென்னாது தோற்றியவெனப் பிறவினை வாய்பாட்டானோ துதலி னதற்குரிய வினை முதலவாய் நிலையான் வந்தது. தோற்றியவென்னும் பெயரெச்சந் திதியென்னுஞ் செயப்படு பொருட் பெயர் கொண்டது. திதியாயொருவனாற் றோற்றப்

பட்டதென்பார் தோற்றிய திதியென்றார். திதியென்ற தீண்டுள் பொருளென்னுந் துணையாய் நின்றது. மூவினையுடைமையா லுள் பொருளாதலு மவ்விரண்டு முடைமையா னிமித்த காரணனை யுடைத்தாதலுந் துணியப்படுமென்பார். மூவினை யுடைமையிற் றோற்றிய திதியே யென்றார். ஏகாரந் தேற்றம். ஒடுங்கியென்பது பெயர். உருபுகடொக்கு நின்றன. அந்தத்தைச் செய்யுங் கடவுளை யந்தமென்ற துபசாரம். காணப்பட்ட வுலகாற் காணப்படாத கடவுட் குண்மை கூற வேண்டுதலிற் றோற்றிய திதியேயெனவு மொடுங்கி யுளதாமெனவு முலகின்மேல் வைத்துக் கூறினார். கருத்துரையுட் கூறிய தூஉ மதுநோக்கி.

இச்சூத்திரத்துள், "அவனவளது வெனுமவை மூவினை மையின்" என்பதோ ரதிகரணம், தோற்றியதிதியே யொடுங்கியுளதாமென்பது மூன்றதி கரணத்தை யுள்ளடக்கி நிற்பதோரதிகரணம். அந்த மாதியென்மனார் புலவ ரென்பதோரதிகரணம். ஆக முக்கூற்ற திச்சூத்திர மென்றுணர்க. இம்மூன்று முறையே யொன்றற்கொன் றேதுவும் பயனுமாயொரு பொருண் மேல் வருதலி னொருசூத்திரத்தாற் கூறினார். தன்னாற் கூறப்படும்பொருளு மதன்கணையப்பாடு மதற்கப் பிறர் கூறும் பக்கமு மதனை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிவு மியைபுமென்னு மிவற்றது நிலைக்களமீண்டதிகரண மெனப்படும்.

ஈண்டுளதாயொருவ னொருத்தியொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்ச முற்பத்தி திதிநாச முடைத்தென்றது- எ-து - மேற்கோள்-எனின் மூவினை யுடைத் தோவின்றோ வென்னு மையப்பாட்டின் கணித்தமாய்க் காணப்படும் பிரபஞ்சத்தை மூவினை யுடைத்தென்றல் பொருந்தாதென மீமாஞ்சகரு முலோகாயதருங் கூறுங் கடாவையாசங்கித்துச் சூத்திரத்தின் முதற் கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ-ள்) வெளிப்படை

ஒருவனென்று மொருத்தியென்று மொன்றென்று மிவ்வாறவயவப் பகுப்புடைத்தாயும் பல்வேறு வகைத்தாய சடமாயுஞ் சுட்டியறியப்படுவதாயு மிருத்தலி னிம்மூன்றேது வானும் பிரபஞ்சந்தோன்றி நின்றழியு மென்பது துணியப்படு மென்பாருளதாயொருவ னொருத்தி யொன்றென்று

சுட்டப்பட்ட பிரபஞ்சமென வுடம்பொடு புணர்த் தோதினார். உளதாய்ச் சுட்டப்பட்டதென வியையும். உளதாய்ச் சுட்டப்படுதல் முயற்கோடு முதலியன போலத்திரி வையங்களானன்றி மெய்யாகச் சுட்டப்படுதல்.

தோற்றமு மீறுமுள்ளதன் பாலே கிடத்தலின்-எ-து- ஹேது- எ-னின்-காட்சியளவைக் கெய்தா துரைப்பன வெல்லாம் பிரமாணமாகாவென வுலோகாயதர் கூறுங் கடாவையாசங் கித்துக் காட்சியளவை பற்றிய மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

(இ-ள்) உற்பத்தியு நாசமுங் காணப்பட்ட திதியின் பக்கத்தே காணக் கிடத்தினி னுளதா யொருவ னொருத்தி யொன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சமுற்பத்தி திதி நீக்க முடைத்தென மேற்கொண்டது. எ-று

உதாரணம்

வெண்பா

பூதாதி யீறு முதலுந் துணையாகப்
பேதாய் திதியாகும் பெற்றிமையி-னோதாரோ
வொன்றொன்றிற் றோன்றி யுளதா யிறக்கண்டு
மன்றென்று முண்டென்ன வாய்ந்து

பூதாதி யீறும்-ஆய்ந்து- எ-து உ-ம்-எனின், உள்ளதன்பா லவ் விரண்டுங் கிடத்தல் யாங்ஙனமென்னுங் கடாவை யாசங்கித்தேதுவை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்) பேதாய்-எ-து- காட்சியளவைகளானு மறியப் படாத மடவோனே! பூதாதி-எ-து- பூதமுதற் காரணமாக வுடைய பிரபஞ்சத்திற்கு ஈறு முதலுந் துணையாகத் திதியாகும்-எ-து திதி நிகழ்வுழி நாசமு முற்பத்தியும் தனக்குத் துணைக் காரணமாகக் கொண்டே நிகழாநிற்கும்; அற்றாயினு மொன்று தோன்ற வொன்று நிற்ப வொன்றழிவதன்றி யொருங்கே தோன்றி யொருங்கே நின்றொருங்கே பழியக் கண்டிலமாலெனின்-ஒன்றொன்றிற் பெற்றிமையிற் றோன்றியுளதாயிறக் கண்டும் எ-து- ஒவ்வொருகால விசேடத்திற் சாதிப்பற்றி யொருங்கே தோன்றி யொருங்கே நின்றொருங்கே யழிவதனைக் கண்டு வைத்தும்- என்று மன்றுண்டென்ன வாய்ந்தோதாரோ-எ-து- என்றாயினு மதற்குரிய காலம் வருமென்று உலகத்திற்கு

மங்ஙனமாத லுண்டென் றக்காட்சிபற்றி யாராய்ந்து சொல்லார்களோ வுன்னைப்போலு மடமை யில்லாதோர்.(எ-று)

பூதாதி-அன்மொழித்தொகை. பூதத்துக்கு மேலுளவாய தத்துவங்களுள் லோகாயதருக் குடம்பாடன்மையிற் பூதமுதலாய தத்துவங்களென வுரைத்தலீண்டைக் கேலாமையறிக.பூதாதிக்கென நான்கனுருபு விரித்துரைக்க, அது பின்னருஞ் சென்றியையும். ஆகுமென்பது முற்றுவினை ஈண்டுப் பெற்றிமையென்றது சாதியை. ஏகாரம்-எதிர்மறை. 'ஒன்றொன்றி னென்பது ஒன்றொன்றாய்ப் பார்த்துணர்வ துள்ளமே யென்றாற்போல வடுக்குமொழி. காலவிசேடமாத லென்று மன்றெனப்பின் வருதல் பெற்றாம். ஒருங்கே யென்பது சொல்லெச்சம். ஒன்றொன்றிற்றோன்றி யளதாயி றுதலாவது "பயில்வித்தெல்லாங் காரிட மதனிற் காட்டு மங்குரங் கழியும் வேனில்" என்பதனானறிக. கண்டுமென்பத னும்மை சிறப்பு.

இரண்டாவது அதிகரணம்

இனியில்லதற்குத் தோற்றமின்மையி னுள்ளதற்குச் செய்வோனின்றிச் செய்வினையின்மையி னொடுங்கின சங்காரத்தினல்ல துற்பத்தி யில்லை யென்றதென விங்ஙனஞ்சொற் பல்காமைப் பொருட்டுப் துணிந்ததாகி வைத்துரைத்தாராயினும் பொருளியைபிற்கேற்ப விதனை மூன்றதி கரணமாக வைத்துரைப்ப தாசிரியர் கருத்தெனக் கொள்க. அஃதாமாறு காட்டுதும்.

இனியுலகமுள்ளதென்றது- எ-து மே-ள் எ-னின். உலகமில் பொருளாய்த் தத்தஞ் சார்பிலே தோன்றியழித லியைபென்ற லேயமைவுடைமையினது மூவினையுடைத்தாயினுந் தோற்று வானொருவனை யுடைத்தாதல் செல்லாதெனப் புத்த நூலார் சொல்லுங் கடாவை யாசங்கித்துத் திதியென்னுஞ் சூத்திரக் கூற்றைக் கண்ணழித்துரைத்து மேற்கோட னுதலிற்று.

(இ-ள்) வெ-டை

இல்லதற்குத் தோற்றமின்மையின்- எ-து-எ-து எ-னின்- உள்ளதாதல் யாங்ஙனமென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

(இ-ள்) இல்பொருளாகிய முயற்கோட்டிற்கு முக்காலத்து முற்பத்தி யின்மையி னீண்டுற்பத்தி காணப்படுதலானுலகமுள்ள தென மேற் கொண்டது.

இனி யுலகஞ் சேய்வோனை யுடைத்தென்றது- எ-து-மே-ள்- எ-னின் உள் பொருளெனப்பட்ட பிரபஞ்சந் தத்த முதற்காரணத்தினின்று தானே தோன்றி யழியுமிதற் கொரு நிமித்தகாரணமா யொருகருத்தா வேண்டா மெனச் சாங்கியர் கூறுங் கடாவை யாசங்கித்துத் தோற்றியவென்னுஞ் சூத்திரத்தைக் கண்ணழித்துரைத்து மேற்கோடனுதலிற்று.

(இ-ள்) வெ-டை

உள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையின் மையின்- எ-து-எது-எனின்-அதற்குப் பிரமாண மென்னை யென்னுங் கடாவையாசங்கித்து மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

(இ-ள்) மண் முதலியவற்றி னுள்ளதாகிய குடமுதலிய பொருட்குக் குயவன் முதலிய செய்வோரையின்றி, வனைதன் முதலிய செய்தொழி னிகழாமையி னுலகமில் வியல்பிற் றாகலான். இனி யில்வுலகஞ் செய் வோனை யுடைத்தென மேற்கொண்ட தென்றவாறு.

இனி யொடுங்கின சங்காரத்தினல்ல துற்பத்தி யில்லை யென்றது-எ-து-மே-ன்-எனின்- இத்துணையுங் கூறியவாற்றாலுலகத்தைத் தோற்று விப்பானுண்டெனப் பட்ட கருத்தா திதிகருத்தா சிருட்டிகருத்தா முதலியோரிலொருவனே யாதலையு மெனப் பாஞ்சராத்திரர் முதலியோர் கூறுங்கடாவையா சங்கித் தொடுங்கியுளதா மென்னுஞ் சூத்திரக் கூற்றைக் கண்ணழித் துரைத்து மேற்கோட னுதலிற்று.

(இ-ள்) உலகந்தா னொடுங்குதற்கு நிலைக்களமான சங்கார கருத்தாவினின்றன்றி யுளதாகாதென்பதாம். ஒடுங்கின வென்னும் பெயரெச்சஞ் சங்காரமென்னு மிடப்பெயரோடு முடிந்தது. சங்காரமாகுபெயர். அல்லதில்லை யென்றெதிர் மறை முகத்தாற் கூறியதேனைக் கடவுளரினுள தாகாமை யாப்புறுத்தற் பொருட்டு.

இதனுளொடுங்கின வென்பதனாற் போந்த குறிப்பேதுவைப் புலப்படக் காணுமாறு, ஆண்டொடுங்கு

தலின் - எ-து-எ-து-எ-னின். அதற்குப் பிரமாணமென்னை யென்னுங்கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்தனுதலிற்று.

(இ-ள்) யாது யாண்டொடுங்கும் அஃததிலுற்பத்தியா மண்ணிற்குடம் போலு மென்னு மவினாபாவத்தாற் பிரபஞ்சஞ் சங்காரகாரணன் மாட்டொடுங்குதலின் மீளத் தோன்றுங்கா லாண்டுநின்றுந் தோன்றுதலே பொருத்த முடைமையி னவ்வாறு மேற்கொண்ட தென்றவாறு.

இவ்வாறு மூன்றதிகரணப்பொருளு மிதன்கட் போந்தவாறு மிவ் வாறுரையாக்காற் பொருளியைபு படாமையு நுண்ணுணர்வாற் கண்டு கொள்க.

உதாரணம்

வெண்பா

இலயித்த தன்னி னிலயித்த தாமலத்தா
லிலயித்த வாறுளதா வேண்டு-மிலயித்த
தத்திதியி லென்னி னழியா தலையழிவ
தத்திதியு மாதியுமா மாங்கு.

இலயித்ததன்னி னிலயித்த் தாமலத்தா லிலயித்த வாறுளதா வேண்டும்-எ-து-உ-ம்-எ-னின் உலகமுள்ளதா யினுள்ளதற் குண்டாக வேண்டுவதில்லையாகலாற் சற்காரியவாத மடா தெனப் புத்தர் கூறுங்கடாவை யாசங்கித் தில்லதற்கத் தோற்ற மின்மையினென்ற வேதுவை வலியுறுத் தனுதலிற்று.

(இ-ள்) இலயித்ததன்னி னிலயதித்ததாம்-எ-து- உள்ள தாயினுஞ் சங்கார காலத்தி னொடுங்கியதாகலா னவ்வொடுங்கிய வுலகந்தானொடுங் குதற்கு நிலைக்களமான சங்கார கருத்தாவினின்றும் படைப்புக் காலத்தின் மீளவுள்ளதாம், அற்றேலொடுங்கிய தொடுங்கியவாறே யொழியாது மீளவுண்டாக வேண்டாம். வேண்டுமாயின் முன்னொடுங்காது நிலைபெறவே யமையும். அவ்வாறன்றி யொடுங்கி மீளவுளதாவ தெற்றுக்கெனின்-மலத்தால்-எ-து-உள்ளதாகிய வுலகங்களுமல பரிபாகமாதற் பொருட்டொடுங்கி யாணவமலபரிபாக மாதற் பொருட்டு மீளவுமுண்டாம், அற்றேல், முன்னின்ற பிரபஞ்ச நாசமாக, வேறுதோன்று

மென்னாமலதுவே யொடுங்கி நின்று மீளவுளதா மென்றற்குப் பிரமாணமென்னையெனின்-இலயித்த வாறுளதா வேண்டும்- எ-து- எஃதெவ்வாறு நின்றொடுங்கிற் றஃதவ்வொடுங்கியவாறே யுளதாதலெல்லாரானும் விரும்பப்படும் எ-று. எனவே யந்நியம மில்லையாயின், நெற்கமுகாய் நீளாது நெல்லாய் நீளுதற்கேதுவென்னை யென்னுந் தருக்கமே யதனை யறிவுறுத்து மென்ற வாறாயிற்று. சற்காரிய வாதத் தினியல்பு தந்து முதல் காரகமென்னும் ஞானாமிர்தத்தினுங் காண்க. இதனானே இல்லது முள்ளது மல்லாத பொருடோன்று மென்னுஞ் சூனியவாதிகளும், இல்லது முள்ளதுமான பொருடோன்று மென்னு மனேகாந்த வாதிகளு மறுக்கப்பட்ட வாறறிக. இலயித்தத் திதியிலென்னி னழியாதவை யழிவதத்திதியு மாதியுமாமாங்கு-எ-து- உ-ம் எ-னின் இனிச்சற்காரிய வாதத்தி னவ்வக்காரியங் கடத்த முதற்காரணத் தொடுங்கு மெனவே கோடலின், உலகிற்கு முதற்காரணமாகிய மூலப்பகுதி வாசுதேவ னுருவாகலா னுலகமவன் மாட்டொடுங்கு மென்றலமை அடைத்தன்றி முதற்காரணத்தின் வேறாய் நின்ற நிமித்தகாரண மெனக் கொண்ட சங்காரகருத்தாவின் மாட்டொடுங்கு மென்றல் பொருந்தாதெனப் பாஞ்சராத்திரிகள் கூறுங்கடாவை யாசங்கித்து ஒடுங்கின சங்காரத்தின் எ-ம் இலயித்த தனில் எ-ம்- கூறிப்போந்த குறிப்பேதுவை வலியுறுத்தனுதலிற்று.

(இ-ள்) இலயித்த த்திதியிலென்னில்- எ-து உலகமொடுங்கியது அந்த மூலப்பகுதி வடிவாய திதிகருத்தாவின்கண் ணென்பையாயின். அழியாதவை - நீயங்ஙனங் கொள்ளினு மூலப்பகுதிக்கு மேலுள்ள புவனங் களதனால் வியாபிக்கப்படாமையிற் கீழுள்ள வேகதேச மாத்திரையே யாண்டொடுங்கு வதன்றி மாயாகாரியத் தொகுதி முழுவது மாண்டொடுங்காது. அற்றேல், மாயாகாரியத் தொகுதி முழுவதும் யாண்டொடுங்கு வதென்னில் அழிவதத்தி தியுமாதியு மாமாங்கு எ-து அந்தத் திதிக்கடவுளும் படைப்புக் கடவுளுந் தோன்றுதற்குக் காரண மாகிய வச் சங்காரக் கடவுளிடத்தே யவ்விருவரோடுங் கூட வழிவதாமத் தொகுதி யென்றவாறு.

இவ்வெண்பாவினை, “செய்யுட்க ளோசை சிதையுங் காலீரிடத்து மையப்பா டின்றியமையுமா, மைதீரொற்,

றின்றியுஞ் செய்யுட் கெடினொற்றே யுண்டாக்குக, குன்றுமே லொற்றவுங் கொள்" என்பது போல விரண்டதிகரணப் பொருள்படுமாறு இருதொடராகவைத் துரையாக் காற் பொருளியைபுபடாமையறிக. இலயித்தவென் னும் பெயரெச்சந் தன்னென்னுமிடப் பெயரோடு முடிந்தது. இலயித்ததென்ற தேதுப் பொருண்மை யுணர நின்ற பெயர். இலயித்தெனச் சற்காரியவாதங் கூறவேயில யித்தவவத்தையி னவ்வக் காரியசத்தி சமுகமாய்ச் சூக்குமமாய் நிற்பதொன்று ண்டதுவே முதற் காரணமெனப் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாகிய மாயையுண்மையும் பெறப்பட்டது. ஆவென்பது முதனிலைத் தொழிற் பெயர். வேண்டுமெனச் செயப்படு பொருளைச் செய்தது போலக் கூறினார். அவை-தொகுதி. அஃறிணைப் பன்மைப் பெயரென் பார். அழியா தழிவதென்னு மொருமை களோடியையாமையு முத்தரமா காமையுமுணர்க. திதியுமாதியு மாகுபெயர். ஆமாங்கு பெயரெச்சமுடிபு. இரணிய கருப்ப மகத்தையு மறுத்தற் பொருட்டுப் படைப்புக்கடவுளையு முடன் கூறினார். நிமித்தகாரணனாகிய முதல்வனுலகிற்கு முதற் காரணனல் லனாயினு முதற் காரணமாகிய மாயைக் காதாரமாய் நிற்றலினுலக மாண்டொடுங்கி யாண்டுநின்றுந் தோன்று தலமையுமென்பது வருகின்ற வெண்பாவிற் பெறப்படும்.

வெண்பா

வித்துண் டாமூல முளைத்தவா தாரகமா
மத்தன்றா ணிற்ற லவாவினையால்–வித்தகமாம்
வேட்டுவனா மப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து. (3)

வித்துண்-குளிர்ந்து- எ-து உ-ம் எ-னின் உலகந்தனக்கு முதற் காரணமாகிய மாயையி னொடுங்குவதன்றி நிமித்தகாரணனொருவ னுண்டெனக் கொள்ளினு மவன் மாட்டொடுங்கு மென்றல் பொருந்தாமையின் யாதுயாண்டொடுங்கு மஃததனி லுற்பத்தி யாமென்னு மவினாபாவத்தான் மாயையினொடுங்கிய வுலகத்தை மாயையே தோற்றுவிக்கு மிதற்கோ ரிறைவன் வேண்டா மெனச், சாங்கிய நூலார் மதம்பற்றி நிகழுங்கடாவை யாசங்கித் துள்ளதற்குச் செய்வோரின்றிச் செய்வினையி ன்மையினென்னு மேதுவை வலியுறுத்துத னுதலிற்று.

(இ-ள்) மண்போற் குளிர்ந்து வித்துண்டாமூல முளைத்தவா தாரகமா மத்தன்றாணிற்றல வாவினையால் வித்தகமாம்-எ-து-மாயையு முலகமும் வித்துமங்குரமும் போலு மாகலின் வித்துக்காதாரமாகிய நிலங்குளிர்ந்த வழியதன் கண்வித்துள்ளதாக வதனினின்று மங்குரந் தோன்றிய வாறுபோல மேலைவெண்பா வினிலயித்த தென்றதனாற் பெறப்பட்ட மாயைதனக் காதாரமாய் நின்று தோற்றுவிக்கு மிறைவனது சத்தியின் கண்ணுளதாய் நிற்றலிற் சத்திசங்கற்பித்தவழி யவரவர் வினைக்கீடாக வவ்வக் காரியங்களை யவ்வவ்வியல்பிற் பிறழாமற் பயக்குஞ் சதுரப்பாடுடைத்தாமல்லுழியுடைத் தன்று. நிலங்குளிர்ந்த வழியன்றி யதன்கட் கிடந்தன்றி வித்துமுளையத் தோன்றாதவாறு போலுமாகலான் மாயையினொடுங்கித் தோன்றிய வுலகமதற் காதாரமாய் நின்றவிறைவன் சத்தியினொடுங்கித் தோன்றியதேயா மென்றவாறு, ஆகலானென்பது முதனிலைக் குறிப்பெச்சம். இது கிழங்கினின்று தோன்றிய தாமரையைப் பங்கயமென்பத னானுமறிக. வழி நூலாசிரியர் "உயிரவை யொடுங்கிப்பின்னு முதிப்பதென்ற வன்பால்" எ-ம் "உலகவனுருவிற்றோன்றி யொடுங்கிடும்" எ-ம், ஓதியதூஉம் உலகவ னுருவிற்றோன்றி யொடுங்குமாறு வாதுளாக மத்தில் வகுத்தோதியதூஉ மிவ்வியல்பு நோக்கியென்க. இஃதறியா தாரின்னோரன்ன வற்றைத் தத்தமக்கு வேண்டியவாறே யுரைப்ப. உவமவினை பொருளினும் பொருளடை யுவமை யினுஞ் சென்றியையும். உண்டாகவெனச் சற்காரிய வாதத்தை வலியுறுத்துதல் வித்தில்வழி நிலத்தினின்று மங்குரந் தோன்றாத வாறுபோல மாயையில் வழிப்பிரமத்தினின்று முலகந்தோன்றா தெனப் பரிணாம வாதிகளையும், மாயைய நிர்வசனமென்னு மாயாவாதிகளையும், வித்து நிலனும்போ லென்றதனால் மாயைமுதல்வனின் வேறுபொரு ளன்றென்னுஞ் சிவாத்து விதசைவர் பாஞ்சராத்திரிகளையு மறுத்தவாறாயிற்று. முதல்வன் பல்வேறு வகைப்படச் சங்கற்பித்த வாறென்னை யென்னுங் கடாவை யாசங்கித்தவாவினையா லென்றார். வித்தகம்- விசித்திர மென்னுரைப்பினுமமையும் அற்றேல், தன் வயத்தானன்றி வினைவயத்தாற் றோற்றுவிப்பா னிறைவனாகா னென்னில்- வேட்டுவனாமப் புழுப்போல் வேண்டுருவைத்தான் கொடுத்துக் கூட்டானே-எ-து வேட்டுவ-னாதலை விரும்பும்

புழுவிற்கு வேட்டுவன் விரும்பிய வடிவினைக் கொடுக்குமாறு போல விறைவனுமவரவர் வேண்டும் உருவினைக்கொடுத் தவ்வினைக்குத்தக்க பயன்களையுங் கூட்டுவானாக லானது கொண்டு சுதந்திரத்துக் கிழுக் கென்னை யென்றவாறு.

ஆகலானது கொண்டு சுதந்திரத்துக் கிழுக்கென்னை யென்பது குறிப்பெச்சம். போல-அசை. குளிர்ந்த வழியென் பது குளிர்ந்தெனத் திரிந்து நின்றது. நிற்றலினென்னு மைந் தாவது விகாரத்தாற்றொக்கது. ஏகாரம்-எதிர்மறை.

வெண்பா

நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவ-னாக்காதே
கண்டநன வுணர்விற் கண்டகன வுணரக்
கண்டவனி லிற்றின்றாங் கட்டு. (4)

நோக்காது- கட்டு- எ-து- உ-ம் எ-னின் மேலுதார ணத்திற் கூறிய வற்றானுலகிற்கு முதற்கடவு ளுண்டெனக் கொள்ளினு மவன்படைப்பு முதலிய தொழில் செய்வா னாயின் விகார மெய்திய தனிற்பந்த மறுவானென்று வாத மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்தேதுவை வலியுறுத்த னுதலிற்று.

(இ-ள்) இறைவன்-எ-து- முதல்வன் காலத்திற்றாக்காது நின்று-எ-து இறப்பு நிகழ்வெதிர்வு முதலியனவாய் வேறுபட்டெல்லாத்தொழிலுஞ் செய்துந் தனக்கு விகாரமின்றி நிற்குங் காலம் போல விகாரப் படாமனின்று- ஆக்காதேகண்டு- எ-து- பிரபஞ்சத்தைக் காரணத்தாற் படையாது சங்கற்ப மாத்திரத்தானே படைத்து நோக்காது நோக்கி நொடித்து எ-து அவ்வாறே காவாமற் காத்தழியாம லழித்தலால்-இன்றாங்கட்டு எ-து இவ்வாற்றா லவனுக்குப் பந்தமின்றாதல்-உளத்திற்கண்ட நனவுணர்விற்கண்ட கனவுணரக் கண்ட வனிலிற்று-எ-து கற்றநூற் பொருளுஞ் சொல்லுமுளத்திற் றோன்றுங் காலுள்ள மவற்றிற் றொடக்குண்ணாதவாறுங் கனவின்கட்கண்ட வற்றைப் புறத்துவிடயங்களை யறிந்துவந்த நனவுணர்வின் கண்ணே விளங்கவறிந்தவ னப்பொழு தவற்றிற் றொடக்குண்ணாத வாறும் போலு மித்தன்மைத் தென்றவாறு.

எனவே யிஃதிவ்வாறாக வென்றெண்ணுதலாகிய சங்கற்ப மாத்திரையாற் செய்வதூஉங் காரணத்தாற் செய்வதூஉ மெனவினை முதலிருவகைப்படுமென்பதூஉம், காரணத்தானன்றிச் செய்யமாட்டாத குயவன் முதலியோர் சங்கற்பமாத்திரையாற் செய்யு முதல்வனுக்கு வினைமுதலாற் பொதுமைபற்றி யொருபுடை யுவமையாதலன்றி முற்றுவமையாதல் செல்லாமை யானுஞ் சங்கற்ப மாத்திரை யாற் செய்யுஞ் செய்திக்குக் கட்டுண்டன் முதலிய குற்றங்கள் பகைப்பொருளாகலானு மவை யாண்டுளவாதற் கோரியை பின்றென்பதூஉங்கூறி யேதுவை வலியுறுத்த வாறு கா்ண்க.

ஆக்குதல்-படைத்தல்-காண்டலுமது. நோக்குதல்-காத்தல்- நொடித்தல்-அழித்தல் அது நொடித்தான் மலையென்பதனானு மறிக. ஆக்காது நோக்கா தென்றமையால் நொடியாதென்பது வருவித்துரைக்கப் பட்டது. நொடித்தலா லென்பது நொடித் தெனத் திரிந்தது. அன்றேயென்பது; அசை. அநாதி யெனினுமமையும். இன்மூன்று முவமவுருபுகள். உளத்தி னென்பதற்குச் சங்கற்பத்தா லென்றுரைப்பினு மமையும் இன்றாங் கட்டெடன்ப தருங் கேடனென்பது போல நின்றது.

மூன்றாமதிகரணம்

இனிச்சங்காரமே முதலென்றது எ-து- மே-ள் எனின், ஒடுங்கின சங்காரத்தினல்ல துற்பத்தியில்லையெனவே சங்கார கருத்தாவுலகிற்கு முதற்கடவுளென்பது போந்த தாயினுந்தேர் முதலாயின பலர் கூடிச் செய்யக் காண்டலி னவற்றினு மதிக விசித்திரமான வுலகத்திற்கு மற்று மத்தன்மையராய முதற் கடவுளருண்டெனக்கோடு மென்னுமனேகேசர வாதிகள் முதலியோர் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்து, "அந்தமாதி" என்னுஞ் சூத்தி ரத்தைக் கண்ணழித்துரைத்து மேற்கோளைச் சாதித் தனுதலிற்று.

(இ-ள்) சங்காரகருத்தா வொருவனே யுலகிற்கு முதற்கடவு ளென்றது. சங்காரம்: ஆகுபெயர். ஏனையோரை முதல்வரா காரெனப் பிரித்தமையி னேகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

சுட்டுணர்வாகிய பிரபஞ்சஞ் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்திரமின்றி நிற்றலான் எ-து-

எது எனின் அதற்குப் பிரமாணமென்னையென்னுங் கடாவை யாசங்கித்து மேற்கோளைச் சாதித்த னுதலிற்று.

(இ-ள்). ஒன்றொன்றாய்ச் சுட்டி யறிவதாகிய வுருவு மருவுமென்றிரு வேறுவகைப்பட்ட பிரபஞ்ச மவ்வாறு சுட்டி யறிதலின்றி யெவ்வுலகு மொன்றாயறிந்து நின்ற சங்கார கருத்தாவின் வழிப்பரதந்திரமாய் நிற்பதல்லது தனக்கெனச் சுதந்திரமுடைத்தாய் நிற்பதன் றாகலாற் சங்காரகாரண னொருவனே யுலகிற்கு முதற்கடவுளன்றி ஏனையோர் முதற்கடவுள் ரல்லரென மேற்கொண்ட தென்றவாறு.

பிரபஞ்சத்திற்குச் சுதந்திரமின்னமையுஞ் சங்கார காரணனுக்குச் சுதந்திரமுண்மையுமேது முகத்தாற் காட்டுவார். சுட்டுணவர்வாகிய பிரபஞ்சமெனவுஞ் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரமெனவு மீரிடத்து முடம்பொடு புணர்த்தோதினார். சுட்டுணர்வுடைய தனைச் சுட்டுணர்வென்ற துபசாரம். ஈண்டுப் பிரபஞ்சமென்றது சேதனப்பிரபஞ்சத்தை, பிரிநிலை யேகாரத்தான் விலக்குதற்குரியததுவே யாகலின், தேர் முதலாயின பலராற் செய்யப்படினு மப்பலரு மொருவ னேவல்வழி நின்றேசெய் பவ ராகலானும் வேதத்துட்காரண வாக்கியங்களிற் சுட்டுணர்வினராகிய நாராயணனிரணிய கருப்ப னிந்திர னங்கிசூரியன் முதலியோரைக் காரணமென்றது. குயவன் போலவாந்தர காரணமாதல் பற்றியேயாகலி னவையெல்லா மாகுபெயராற் சங்கார காரணனாகிய முதற்கடவுளையே யுணர்த்திநிற்கு மாகலானுஞ் செய்துஞ் செய்வித்து மெல்லாத் தொழிற்கும் வினை முதலாய் நிற்கு முதற்கடவுள் சங்கார கருத்தா வொருவனே என்பது கருத்து.

வெண்பா

ஒன்றலா வொன்றா லுளதாகி நின்றவா
றொன்றலா வொன்றிலவை யீறாத-லொன்றலா
வீறே முதலதனி னீறலா வொன்றுபல
வாறே தொழும்பாகு மங்கு. (5)

ஒன்றலா-அங்கு- எ-து. உ-ம் எனின், அங்ஙன மாயினுஞ் சுட்டுணர்வாகிய பிரபஞ்சம் பலவாயினாற் போலச் சுட்டுணர்வின்றி நின்ற சங்காரமும் பல வுளவெனக் கோடும், ஒன்றே யென்றற்குப் பிராமண மென்னை யென்னுங் கடாவை யாசங்கித்தேதுவை வலியுறுத்து தனுதலிற்று.

(இ-ள்) அவை-எ-து- சேதனப் பிரபஞ்சத் தொகுதி ஒன்றலாவொன்றால் எ-து உருபு மருபு மென்னு மவ்விரு கூற்றுப் பிரபஞ்சத்து ளொன்றல்லாத வொப்பற்ற பரம் பொருளாலே-உளதாகி நின்றவாறு எ-து சிருட்டிப்பட்டுத் திதிப்பட்டவாறே ஒன்றலாவொன்றிலீறாதல் எ-து அந்தப் பரம்பொருளின் கண்ணே சங்காரப்படுதலால்-ஒன்றலா வீறேமுதல் எ-து அச்சங்காரக் கடவுளொருவனே யுலகிற்கு முதற்கடவுள்-அற்றே விவ்வாறு முத்தொழிற் செப்பஞ் சேதனப் பிரபஞ்சம் வீடுபெற்ற வழிச் சுட்டுணர்வின்றிச் சிறு சமமாமென வேதத்து மாகமத்து மோதுதலி னவ்வழி யவ்வைப்பு முதற் கடவுளாமென்றற் கிழுக்கென்னையெனின், அதனினீறலா வொன்று எ-து அப்பரம் பொருள் போலழிவின்றி நித்தமாய சேதனப்பிரபஞ்சம்- அங்கு எ-து- வீடுபேற்றின் கண்ணும் பலவாறே தொழும்பாகும் எ-து பலவாற்றானும் பரம் பொருளுக்கடிமையாமென்றவாறு.

இது சொற்பொருட்பின் வருநிலை. காரியப்பிரபஞ்சஞ் சடமாகலானும், சேதனப்பிரபஞ்ச மவிச்சையாற் கட்டுற்றுச் சுட்டுணர்விற்றாய் நிற்றலானும், இவற்றைத் தொழிற்படுத்துதற் கிவற்றின் வேறாயொரு முதற் கடவுளுண்டென்பது பெற்றாம். பெறவே, பிரபஞ்சம் விசித்திர காரியமாய்க் காணப்படுதலி னிவ்வாறு சிந்தித்து முதற் கடவுண் முற்றுணர்வு மனவிலாற்றலும் பொருளுஞ் சுதந்திரமுதலியீநிரதிசய குணங்களுமுடைய னென்பதூஉம் பெறப்பட்டது. படவே இத்தன்மையனாய் முதற்கடவுளொருவனே யமையு மாகலான் வேறு மத்தன்மை யருண்டெனக் கொள்ளின் மிகையென்னுங் குற்றமாம். அல்லதூஉம், இலக்கணத்து ளொருவாற்றானும் வேற்றுமையில் வழியிலக்கியம் பலவாதல் செல்லாதென்னுங் கருத்தா லொன்றலாவொன்றெனவரை யறுத்தோதினார். ஈறேமுதலென்றது முடிந்தது முடித்தல். ஈறு ஆகுபெயர். இறந்தது தழீஇய வெச்சவும்மை விகாரத்தாற் றொக்கது. பலவாறாவன; இருணீங்கியவழியுங் கண்ணுக்குக்காட்சி ஞாயிற்றை இன்றி யமையாதவாறு போல மலநீங்கிய முத்தி நிலையினுமான் மாவுக்கறிவு வியஞ்சக மாயுடனின் றறிவிக்கு முதல்வனையின்றி யமையாதவாறும், கண் படிகமாகாயம் போலச்சார்ந்த தன் வண்ணமாயன்றி முதல்வன் போலத் தனித்து நிற்குமியல்

பில்லாதவாறும், முதல்வன் போலைந்தொழிற்கும் வினை முதலா முரிமையின்றிச் சிவானுபவமொன்றற்கே யுரித்தாய வாறும், சமவியாபகமாயினு முதல்வனை நோக்கத்தூல வறிவாகலான் விளக்கொளி யுட்கண்ணொளி போல முதல்வனின் வியாப்பியமாயன்றி நில்லாதவாறு முதலாயின. அற்றேல், முத்தி நிலையினான்மாச் சிவசமமென்னுஞ் சுருதிக்குப் பொருளென்னை யெனின், அஃதுண்மை, யதிகாரத்திற் பெறப்படும். இதனானே சிவசமவாதி, சங்கிராந்தவாதி, உற்பத்திவாதி, ஆவேசவாதி மதங்களும் மறுக்கப்பட்டன. பதியுண்மைக்குப் பிரமாணங் கூறுவார் மலத்துளதாமெனப் புனருற்பத்திக்கேதுக் கூறுமுகத்தான் மலத்துண்மைக்குப் பிரமாணமுமுடன் கூறினார். அதனையீண்டு வேறோ ரதிகரண மாக வைத்துரையா ராயினர். அதிகர்ணத்துக் குரியவயப்பாடு முதலியன வெல்லாஞ் சகசமலத் துணராதென வதனிலக்கணங் கூறும் வழிப்பெறப்படுதலா லீண்டு மிகைபடவேறோதல் வேண்டாமையின். இச்சூத்திரத் தினதி கரணங்களாற் போந்த தொகைப் பொருளாவது தோற்றக் கேடுகளதுண்மை காட்சி முதலிய வளவைகளானறிய வாராமையிற் பிரபஞ்ச நித்தப் பொருளேயாம் அன்றித்தோன்றி யழியுமெனக் கொள்ளினு மிப்பொருடத்தஞ் சார்பிற்றோன்றி நின்றழிதலியற்கையென வமையுஞ் செயற்கை யென்றற் கோரேது வின்மையின், மற்றுள பொருளாயினது வேய'மையு மிறைவன் வேண்டா. இரண்டுள் பொருள் கோடன் மிகையாகலின், வேண்டுமாயினு மாயோன் முதலிய கடவுளரி லொருவனே யமையும்வரை யொழித்துச் சங்காரகருத்தா முதற் கடவுளென்றற்குப் பிரமாணமென்னை, பிரமாண முண்டாயினு மதி விச்சிரமாய் பிரபஞ்ச மொருவனாற் செய்தல் கூடாமையின் மற்று மவ்வியல்பினராய முதற் கடவுளருள ராதல் வேண்டுமென, உலகாயதர் மீமாஞ்சர், புத்தர், சமணர், சாங்கியர், பாஞ்சராத்திரிகள், அனேகே சுரவாதிகள் மதம் பற்றிப் பூருவபக்கம் நிகழ்ந்தவழியவரை மறுத்துச் சித்தாந்தஞ் செய்து முதற்கடவுள துண்மை பொதுவகையானுஞ் சிறப்பு வகையானுங் கருதலளவை யின் வைத்துணர்த்திய வாறெனவுணர்க. இவ்வாறு சூத்திரந்தோறு முணர்ந் துரைத்துக் கொள்க. முதற்சூத்திரம் முடிந்தது.

(5)

**170. அல்லலாந் தொழில் படைத்தே அடிக்கடி உருவெ டுத்தே
மல்லல்மா ஞாலங் காக்க வருபவர் கடவு ளென்னில்
தொல்லையாம் பிறவி வேலை தொலைந்திடா திருள்நீங் காது
நல்லது மாயை தானும் நானென வந்து நிற்கும்.**

(பொ-ரை) துன்பரூபமாகிய தொழிலைப் பெற்று அடிக்கடி பிறந்து பெரியவுலகத்தை இரட்சிக்க வருபவர் கடவுள் என்றால், பழமையாகிய ஜன்மசாகரமானது வற்றாது; அஞ்ஞானம் நீங்காது; உயிர்களுக்கு நன்மை யுடையதாய்த் தோன்றுகின்ற மாயையும் நானென்று வந்து நிற்கும் (எ-று)

"அல்லலாந் தொழில் படைத்தே யடிக்கடியுரு வெடுத்தே-மல்லன்மா ஞாலங் காக்க வருபவர் விஷ்ணு. இவர்க்கு மாயன் என்கிற பேர் உண்மையின் இவரைக் கடவுள் என்றால் உலகத்திற் சீவர்களைத் தொடருமாயையு நீங்காதென்பார். "தொல்லையாம் பிறவிவேலை தொலைந் திடா திருணீங்காது-நல்லது மாயை தானு நானெனவந்து நிற்கும்" எனக் கூறினார். *(6)*

**171. நானென நிற்கு ஞானம் ஞானமன் றந்த ஞானம்
மோனமா யிருக்க வொட்டா மோனமின் றாக வேதான்
தேனென ருசிக்கும் அன்பாற் சிந்தைநைந் துருகும் வண்ணம்
வானென நிறைந்தா னந்த மாகடல் வளைவ தின்றே.**

(பொ-ரை) (எல்லாம்) நானென்று பிதற்றும் ஞானமானது ஞானமல்ல; (ஏனெனில்) அந்த ஞானமானது மௌனமா இருக்க வொட்டாது; (ஆகையால்) மௌனமில்லையாயினபோதே தேன் போல் ருசிக்கின்ற அன்பினால் மனமானது நெகிழ்ந்து கரையும்படி பேரின்பக் கடலானது மேகக்கூட்டம் வானம் நிறைந்து வளைதலில்லை. (எ-று)

ஒருவர்க்கு நான் என்கிற அகங்காரம் உதிக்குமாயின் மௌன நிலையும், அதனாலுண்டாகும் பேரின்பமுமில்லை யென்பதாம். *(7)*

**172. இன்றென இருப்போ மென்னின் என்றுஞ்சூ னியமா முத்தி
நன்றொடு தீது மன்றி நாமுன்னே பெறும்அ வித்தை
நின்றது பெத்தந் தானே நிரத்தர முத்தி யென்னின்
ஒன்றொரு வரைநான் கேட்க உணர்வில்லை குருவு மில்லை.**

(பொ-ரை) (மேற்கூறியவைகள்) இல்லையென் றிருப்போ மென்றால் எக்காலத்திலும் முத்தியென்பது சூனியமாய் முடியும்; (அப்போது) நன்மையுந் தீமையு மல்லாமல் நாம் முன்னே யடைந்திருந்த அஞ்ஞானம் நிலை பெற்றது; அந்த அஞ்ஞானத்தையுடைய பெத்ததிசையே சதாமுத்தியென்று சொன்னால், ஒருவரை நான் ஒன்று கேட்க அறிவில்லை, குருவுமில்லை. (எ-று)

அஞ்ஞானமுள்ள போழ்து குருவாக்கியத்தைக் கொள்ள உணர் வில்லையென்பார், 'பெத்தந் தானே நிரந்தரமுத்தியென்னி-னொன்றொருவரை நான் கேட்க உணர்வில்லை குருவுமில்லை' என்றார். (8)

173. இல்லையென் றிடினிப் பூமி இருந்தவா றிருப்போ மென்னில்
நல்லவன் சாரு வாகன் நான் சொலும் நெறிக்கு வீணில்
தொல்லையேன் ஆகமாதி தொடுப் பதேன் மயக்க மேதிங்
கொல்லைவந் திருமி னென்ன வுறவுசெய் திடுவ னந்தோ.

(பொ-ரை) அங்ஙனம் இல்லையென்று சொன்னால் இந்த உலகம் இருந்த வண்ணம் இருப்போமென்றால், நல்லவனாகிய சாருவாகன், நான் சொல்லுகின்ற மார்க்கத்தில் வருவதற்கு, வீணாகத் தொந்தரவு ஏன்? ஆகம முதலிய பிரமாணங்களை எடுத்துக் காட்டுவது ஏன்? மயக்கம் எற்றுக்கு? இவ்விடத்தில் சீக்கிரம்வந்து என்னோடு கூடியிருங்களென்று சிநேகஞ் செய்து கொள்வன்.(எ-று)

நல்லவன் என்றது பிற குறிப்பால் தீயோன் என்பதை உணர்த்து கின்றது. சாருவாகன்= நிரீச்சுரவாதி. (9)

174. அந்தணர் நால்வர் காண அருட்குரு வாகி வந்த
எந்தையே எல்லாந் தானென் றியம்பினன் எமைப் படைத்த
தந்தைநீ எம்மைக் காக்குந் தலைவனே நுந்தை யன்றோ
பந்தமில் சித்தி முத்தி படைக்கநின் அருள்பா லிப்பாய்.

(பொ-ரை) பிராமணர் நால்வர் காணும்படி அருளே திருமேனியாகக் கொண்டு குருமூர்த்தமா யெழுந்தருளின எமது தந்தையே எல்லாப் பொருள்களுந் தானேயென்று திருவாய் மலர்ந்தனன். (ஆயினும்) எங்களைச் சிருஷ்டித்த தந்தை நீ, எங்களைக் காக்கின்ற தலைவன் உன் தந்தையாகிய விஷ்ணுவல்லவா? (ஆகையால்) பாசப் பிணிப்பற்ற சித்தி முத்திகளைப் பெற்று வாழ்வதற்கு உன்னுடைய கிருபையைக் கொடுத்தருள வேண்டும். (எ-று) (10)

பன்மாலை

(இதுவுமது)
எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

175. **பன்மாலைத் திரளிருக்கத் தமையு ணர்ந்தோர்**
பாமாலைக் கேநீதான் பட்ச மென்று
நன்மாலை யாவெடுத்துச் சொன்னார் நல்லோர்
நலமறிந்து கல்லாத நானுஞ் சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனேன் எந்நாளும் துதித்து நிற்பேன்
என்மாலை யறிந்திங்கே வாவா என்றே
எனைக்கலப்பாய் திருக்கருணை எம்பி ரானே.

(பொ-ரை) பலவகை மலர்களாலாகிய பூமாலை களிருக்க (அவைகளை விரும்பாமல்) தம்மை யுணர்ந்தவர் களாகிய ஞானிகளுடைய சொன் மாலை களையே நீ விரும்புகிறவனென்று பெரியோர்களெல்லாம் பாமாலை யையே உயர்ந்த மாலையாக எடுத்துச் சூட்டினார்கள். (அந்தப் பாமாலையின்) நன்மையையறிந்து கல்வியறி வில்லாதவனாகிய நானும் (அம்மாலையைச்) சூட்டினேன். (அன்றியும்) சொல்லப்பட்ட கண்ணீரானது மாலைமாலை யாகச் சிந்தும்படி உன்னுடைய தொழும்பனாகிய நான் எக்காலத்திலும் துதி செய்யா நிற்பேன். (ஆகையால்) என்னுடைய விருப்பத்தையறிந்து இங்கே வருவாய்! இங்கே வருவாய்! என்று அழைத்துக் கொண்டே என்னைச் சேர்வாயாக. (எ-று)

பலமலர்மாலை-கோட்டுப்பூ. கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்னும் மலர்களாலான மாலை. இம்மாலைக்கு வாடல் முதலிய குற்றங்களுண் மையின் உயர்ந்த தன்று. இதுபோலவே, பெயர், வினை, இடை, வரி என்னுஞ் சொற்களால் தொடுக்கப் படும் பாமாலைக்கு அவ்வாடல் முதலிய குற்றங்களின்மையின் அதுவே உயர்ந்தது, இதனை,

"பழுதகன்ற நால்வகைச்சொல் மலரெடுத்துப் பத்திபடப்
பரப்பித் திக்கு
முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி பெறமுக்கண்
மூர்த்தி தாளிற்
றொழுதகன்ற வன்பெனுநார் தொடுத்தலங்கல் சூட்ட"

என்பதனானறிக.

தம்மையுணர்ந்தோர்-தாம் இறைவனுக்கடிமையென்றும், தம்மை உடையான் இறைவனென்றும் உணர்ந்த சித்தாந்த சைவர். இதனைத் "தம்மையுணர்ந்து தமையுடையான் றன்னுணர்வார் எம்மை யுடைமையெமையிகழார்" என்பதற்குச் சிவஞான முனிவர் அருளிச் செய்த உரையானுணர்க.

தம்மையுணர்ந்தவர்கள் சூட்டும் பாமாலையில் விருப்பங் கொள்கின்றவனென்றுணர்ந்து நானும் அப் பாமாலையைச் சூட்டினேன். ஆகையால் என்னையுங் கலந்து அருள் செய்யவேண்டும் என்பது கருத்து. (1)

176. கருணைமொழி சிறிதில்லேன் ஈத லில்லேன்
கண்ணீர்கம் பலையென்றன் கருத்துக் கேற்க
ஒருபொழுதும் பெற்றறியேன் என்னை யாளும்
ஒருவாவுன் அடிமைநான் ஒருத்த னுக்கோ
இருவினையும் முக்குணமுங் கரணம் நான்கும்
இடர்செயுமைம் புலனுங்கா மாதியாறும்
வரவரவும் ஏழைக்கோ ரெட்ட தான
மதத்தொடும்வந் தெதிர்த்தநவ வடிவ மன்றே.

(பொ-ரை) இனிய வசன மில்லாதவன், ஈகையில்லாதவன், என்னுடைய எண்ணத்திற்குத் தக்கவாறு ஒருநாளும் கண்ணீர் கம்பலை களை அடைந்தறியேன். என்னை யடிமை கொள்ளும் ஒப்பற்றவனே! நவந்தரு பேதமாயுள்ள சிதாகாயமே! உன்னுடைய அடிமையாகிய எனக்குத் தானோ? இருவினைகளும் முக்குணங்களும் நான்கந்தக்கரணங்களும், ஐம்புலன்களும், காமாதியாறும், எட்டு மதங்களும் வந்து சம்பவித்தன. (எ-று)

இருவினை-நல்வினை, தீவினைகள், முக்குணம்-சாத்வீகம் ராஜசம், தாமசம். கரணநான்கு - மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஐம்புலன்-சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம். காமாதியாறு-காமம், குரோதம், லோபம், மோகம் மதம், மாற்சரியம். மதமெட்டு-குலம், ரூபம், யவ்வனம், வித்தை, தனம், பிரபுத்துவம், சகாயம், சகஜம், நவவடிவமென்றது-நிஷ்களம், சகள நிஷ்களம், சகளம் இதனை.

" சிவஞ்சத்தி நாதம்விந்து சதாசிவன் றிகழுமீகன்
உவம்தரு ளுருத்திரன்றான் மாலய னொன்றினொன்றாய்ப்

பவந்தரு மருவநாலிங் குருவநா லுபயமொன்றா
நவந்தரு பேதமே நாதனே நடிப்பனென்பர்"

என்பதனானறிக. *(2)*

177. **வடிவனைத்துந் தந்தவடி வில்லாச் சுத்த**
வான்பொருளே எளியனேன் மனமா மாயைக்
குடிகெடுக்கத் துசங்கட்டிக் கொண்ட மோன
குருவேஎன் தெய்வமே கோதி லாத
படியெனக்கா னந்தவெள்ளம் வந்து தேக்கும்
படியெனக்குன் திருக்கருணை பற்றுமாறே
அடியெடுத்தென் முடியிலின்னம் வைக்க வேண்டும்
அடிமுடியொன் றில்லாத அகண்ட வாழ்வே.

(பொ-ரை) எல்லா ரூபங்களையும் படைத்த ரூபமில்லாத பரிசுத்தமான உயர்ந்த பொருளே! ஏழையாகிய என்னுடைய மனமாயையைக் கெடுக்க எழுந்தருளி வந்த மௌனகுருவே! என்னுடைய தெய்வமே! அந்தாதி இல்லாத அழியாத பெரியவாழ்வே! குற்றமில்லாமல் எனக்கு இன்பவெள்ளமானது வந்து தேக்கும்படி உன்னுடைய திருவருள்பதிய (முன்போல) இன்னமும் உன்னுடைய திருவடியைத் தூக்கி என்னுடைய சிரசின் மீது வைக்க வேண்டும்.

கட்புலனுக்கு விடயமா யுள்ளவற்றை யெல்லாம் படைத்தும் ரூபமில்லாதவனா யிருக்கின்றானென்பார். 'வடிவனைத்துந் தந்த வடிவில்லாச் சுத்தவான் பொருளே' எனவும், மௌநோப தேசத்தால் மாயை நீங்குதலின், 'எளியனேன் மனமா மாயைக் குடி கெடுக்கத் துசங்கட்டிக் கொண்ட மோனகுருவே' எனவும் திருவடி தீட்சை செய்ய வேண்டுமென்பார், 'அடியெடுத்தென் முடிவிலின்னம் வைக்க வேண்டும்' எனவுங் கூறினார். *(3)*

178. **வாழ்வனைத்தும் மயக்கமெனத் தேர்ந்தேன் தேர்ந்த**
வாறேநான் அப்பாலோர் வழிபா ராமல்
தாழ்வுபெற்றிங் கிருந்தேன்ஈ தென்ன மாயந்
தடையுற்றால் மேற்கதியுந் தடைய தாமே
ஊழ்விலியோ அல்லதுன்றன் திருக்கூத் தோஇங்
கொருதமியேன் மேற்குறையோ வுணர்த்தா யின்னம்
பாழவதிப் படஎனக்கு முடியா தெல்லாம்
படைத்தளித்துத் துடைக்கவல்ல பரிசி னானே.

(பொ-ரை) சர்வ பொருள்களையும் படைத்துக் காப்பாற்றி சங்கரிக்க வல்ல குணத்தையுடையவனே! உலக வாழ்க்கைகளெல்லாம் மயக்கத் தக்கவையேயென்று தெளிந் தேன்; அடியேன் தெளிந்தவண்ணமே அப்பால் ஒரு நல்ல வழியைப் பாராமல் தாழ்வடைந்திருந்தேன்; இதுவென்ன மாயை (இங்ஙனந்) தடைப்பட்டால் (பின்னர் அடைய வேண்டிய) மோட்சமுந் தடையாமே? (இதற்குக் காரணமா யுள்ளது) ஊழினது வலிமையோ? அல்லது உனது திருவிளை யாட்டோ? இவ்விடத்தில் தமியேன் மேற்குறையோ? தெரிவிப்பாய் (ஏனெனில்) இன்னும் பாழான துன்பத் தையுடைய என்னால் முடியாது. (ஆகலான்) (எ-று) (4)

179. நானானிங் கெனுமகந்தை எனக்கேன் வைத்தாய்
நல்வினை தீ வினைஎனவே நடுவே நாட்டி
ஊனாரும் உடற்சுமைஎன் மீதேன் வைத்தாய்
உயிரெனவு மென்னையொன்றா வுள்ளேன் வைத்தாய்
ஆனாமை யாயகில நிகில பேதம்
அனைத்தினுள்ளுந் தானாகி அறிவா னந்தத்
தேனாகிப் பாலாகிக் கனியாய்க் கன்னல்
செழும்பாகாய்க் கற்கண்டாய்த் திகழ்ந்தவொன்றே.

(பொ-ரை) நீங்காமையாகி, உலகத்திலுள்ள பேதவடி வங்கள் எல்லாவற்றுள்ளும், தானேயாகி சத்துச் சித்தாநந்தத் தேனாகி, பாலாகி, பழமாகி, சர்ககரைப்பாகாகி, கற்கண்டாகி விளங்கிய ஒப்பற்ற பொருளே! இவ்விடத்தில் நான், நான் என்கிற அகங்காரத்தை எனக்கு ஏன் வைத்தாய்? (அதினால்) நல்வினை தீவினைகளென்று நடுவே நிறுத்தி தசைப் பெருக்கம் வாய்ந்த தேகபாரத்தை என்மேல் ஏன் வைத்தாய்? அடியேனை உயிரென்று சொல்லவும் (அத்தேகத்திற்குள்) ஒரு பொருளாக ஏன் வைத்தாய்? (எ-று)

அறிவு-ஞானம். ஆனந்தம்-சுகம். இவ்விரண்டை மாத்திரம் கூறினாரேனும், "ஒருமொழி யொழிதன் னினங் கொளற் குரித்தே" என்னுஞ்-சூத்திரப்படி, சத்தையும் உடன் கொள்ளப்பட்டது. (5)

180. ஒன்றியொன்றி நின்றுநின்றும் என்னை என்னை
உன்னியுன்னும் பொருளலைநீ உன்பால அன்பால்
நின்றதன்மைக் கிரங்கும்வயி ராக்கிய னல்லேன்
நிவர்த்தியவை வேண்டுமிந்த நீல னுக்கே

என்றுமென்றும் இந்நெறியோர் குணமு மில்லை
இடுக்குவார் கைப்பிள்ளை ஏதோ ஏதோ
கன்றுமனத் துடன்ஆடு தழைதின் றாற்போல்
கவ்வியுங்கேள் வியுமாகிக் கலக்குற் றேனே.

(பொ-ரை) ஒவ்வொரு விடயத்திலழுந்தி (அவ்வவைகளில்) கொஞ்ச நேரம் நின்றும், நீ என்னை நினைக்கும் பொருளல்லை. (ஆதலால்) உன்னிடத்தன்போடு நின்ற அடியவர் குணத்தைப் பெறும்பொருட்டு மனமிரங்கும் படியான உலக வெறுப்பில் வைராக்கிய னல்லேன். (ஆயினும்) இந்த நீலனுக்கு அவ்வுலக மார்க்கங்கள் ஒழிதல் வேண்டும். எக்காலத்தும் இந்த நன்னெறியை யடைவதற்குக் கொஞ்சம் நற்குணமுமில்லை. (அங்ஙனமிருக்கையில்) சேர்ப்பவர் கைப்பிள்ளையாவதற்குக் காரணம் யாதோ? வருந்தும் மனத்துடன் ஆடு தழை மேய்ந்தாற் போல் பலவகைப்பட்ட கல்வி கேள்விகளையுடையேனாகிக் கலங்கலுற்றேன். இஃதென்ன துன்பம்? (எ-று) (6)

181. **உற்றதுணை நீயல்லாற் பற்று வேறொன்**
றுன்னேன்பன் னாள்உலகத் தோடி யாடிக்
கற்றதுங்கேட் டதுமிதனுக் கேது வாகுங்
கற்பதுங்கேட் பதுமமையுங் காணாநீத
நற்றுணையே அருள்தாயே இன்ப மான
நாதாந்த பரம்பொருளே நார ணாதி
சுற்றமுமாய் நல்லன்பர் தமைச்சே யாகத்
தொழும்புகொளுங் கனாகனமே சோதிக் குன்றே.

(பொ-ரை) எவராலுங் காணப்படாத நியதமுடைய நல்லதுணையே! கிருபையையுடைய தாயே! சுகவடிவமான நாதத்தின் அந்தத்திலுள்ள மேலானப் பொருளே! திருமால் முதலானோரைச் சுற்றத்தாராகவும், நல்ல அன்பர்களைப் புதல்வராகவும் அடிமை கொள்ளுகின்ற மிகப்பெரிய பொருளே! ஒளிமலையே! நெருங்கிய துணை நீயேயல்லாமல் வேறொரு பொருளையும் பற்றாக நினையேன்; (ஏனெனில்) பலகாலமும் உலகத்தில் ஓடியும் ஆடியும் கற்றகல்வியும், கேட்ட கேள்வியும் இதற்கு (உன்னையன்றி வேறொருவரை நினையேன் என்பதற்குக்) காரணமாகும். (அன்றி, இனி) கற்பதுங் கேட்பதும் இதற்கே ஆகும். (ஆகலான்) (எ-று)

அடியார்க்கெளியன் அண்டர்க்கரியனாகலான், "நார ணாதி சுற்ற மும் நல்லன்பர்தமைச் சேயாகத் தொழும்பு கொள்ளுங் கனாகனமே சோதிக்குன்றே" எனக் கூறினார். *(7)*

182. குன்றாத மூவுருவாய் அருவாய் ஞானக்
கொழுந்தாகி அறுசமயக் கூத்து மாடி
நின்றாயே மாயைஎனுந் திரையை நீக்கி
நின்னையா ரறிவல்லார் நினைப்போர் நெஞ்சம்
மன்றாக இன்பக்கூத் தாட வல்ல
மணியேஎன் கண்ணேமா மருந்தே நால்வர்க்
கன்றாலின் கீழிருந்து மோன ஞானம்
அமைத்தசின்முத் திரைக்கடலே அமர ரேறே.

(பொ-ரை) சிந்திப்பவர்களுடைய நெஞ்சத்தையே சிதாகாயமாகக் கொண்டு ஆனந்தத் தாண்டவஞ் செய்ய வல்ல மாணிக்கமே! என் கண்ணே! பெரிய அமிர்தமே! அக்காலத்தில் கல்லாலமரத்தின் கீழிருந்து சநகாதி நால்வர்க்கு மௌன ஞானத்தை யுணர்த்தின சின்முத்திரா சாகரமே! தேவர்களுக்குள் உத்தமனே! கெடாத மூன்றுருவங்களாகி அருவமாகி ஞானாந்தமாகி, அறுசமயக் கூத்துமாடி இருக்கின்றனையே, உன்னை மாயை என்கிற தடையை நீக்கி அறியல்லவர் யார்? (எ-று)

அறுசமயம் என்றது-அகச்சமயம், புறச்சமயங்களை, அன்றி, அறுசமயக் கூத்து என்றமையால் அகச் சமயமே, என்று கொள்ளலுமொன்று.

பாசத்தை நீக்கிப் பார்ப்பவர்க்குப் பரமன் வெளிப் படுவானென்பார், 'மாயையெனுந் திரையை நீக்கி நின்னை யாரறிய வல்லார்" எனவும், சிந்திப்பவர் நெஞ்சமே கோயிலாகச் சதா இருப்போ னென்பார், 'நினைப்போர் நெஞ்சமன்றாக வின்பக் கூத்தாட வல்லமணியே' எனவும், தன்னுறுப்பிற் கண்ணரியதாய வாறுபோல அவனும் அரியவனென்பார், 'என் கண்ணே' எனவும், பிறப்பிறப்புகளுக்கு ஓர் மருந்தாயிருத்தலின், 'மாமருந்தே' எனவும் தேவர்களுக்குத் தேவன் என்பது தோன்ற 'அமரரேறே' எனவுங் கூறினார். (8)

183. திரையில்லாக் கடல்போலச் சலனந் தீர்ந்து
தெளிந்துருகும் பொன்போலச் செகத்தை
எல்லாங்

கரையவே கனிந்துருக்கும் முகத்தி லேநீ
கனிந்தபர மானந்தக் கட்டி இந்நாள்
வரையிலே வரக்காணேன் என்னாற் கட்டி
வார்த்தைசொன்னாற் சுகம்வருமோ
வஞ்ச னேனை
இரையிலே யிருத்திநிரு விகற்ப மான
இன்பநிட்டை கொடுப்பதையா எந்த நாளோ.

(பொ-ரை) அலையற்ற சமுத்திரம் போல அசைவற்று, தெளிந்துருகும் பொன்னைப் போல உலகத்தையெல்லாம் இளகிக் கரையும்படி உருக்குமிடத்தில் உருகியிரக்கின்ற பரமானந்தக் கட்டி நீயாயிருக்கின்றாய்; ஆகையால் நீ இதுகாறும் வரப் பார்த்தேனில்லை. நான் கஷ்டப்படுத்தி வார்த்தை சொன்னால் சுகோதயமாகுமோ? ஆகாது. (ஆகையால்) ஐயா! என்னை நிருவிகற்ப ஞானத்தில் சிறிது பொழுதாயினும் நிறுத்தி ஆனந்தங் கொடுப்பது எக்காலமோ? (9)

184. எந்தநா ளுனக்கடிமை யாகு நாளோ
எந்நாளோ கதிவருநாள் எளிய னேன்றன்
சிந்தைநா ளதுவரைக்கும் மயங்கிற் றல்லால்
தெளிந்ததுண்டோ மௌனியாய்த் தெளிய ஓர்
தந்தநாள் முதலின்பக் கால்சற் றல்லால் (சொல்
தடையறஆ னந்தவெள்ளந் தானே பொங்கி
வந்தநா ளில்லைமெத்த அலைந்தே னுன்னை
மறவாவின் பத்தாலே வாழ்கின் றேனே.

(பொ-ரை) எந்தக்காலம் உனக்கடிமை படுங் காலமோ? பரகதியுண்டாகுங் காலம் எந்தக் காலமோ? எளியேனது மனமானது நாளதுவரைக்கும் மயங்கினதே யல்லாமல் தெளிவடைந்ததுண்டோ? (இல்லை) ஆயினும், நீ மௌன குருவாக எழுந்தருளி வந்து ஒரு மொழியை உபதேசித்த நாள் முதலாக இன்பக் கால்வாயானது கொஞ்சம் பெருகுவதேயல்லாமல், தடை நீங்க இன்பவெள்ளமானது தானே பொங்கி வந்த நாளில்லை, (ஆகையால்) மிகவும் வருந்தினேன். (ஆனால்) உன்னை மறவா (திருக்கும்) ஓர் இன்பத்தினால் இதுகாறும் உயிர் வாழ்ந்திருக்கின்றேன். (எ-று) (10)

நினைவொன்று

ஞானிகளிடம் பொருளேவல்

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

(இதுவுமது)

185. நினைவொன்று நினையாமல் நிற்கின் அகம் என்பார்
நிற்குமிட மேயருளாம் நிட்டையரு ளொட்டுந்
தனையென்று மறந்திருப்ப அருள்வடிவா னதுமேல்
தட்டியெழுந் திருக்குமின்பத் தன்மயமே யதுவாம்
பினையொன்று மலையந்த இன்பமெனும் நிலயம்
பெற்றாரே பிறவாமை பெற்றார்மற் றுந்தான்
மனையென்றும் மகவென்றுஞ் சுற்றமென்றும் அசுத்த
வாதனையாம் ஆசையொழி மன்னொருசொற்
கொண்டே.

(பொ-ரை) சற்றும் எண்ணமில்லாமல் நின்றால் அங்ஙனம் நிற்கின்ற இடமே அருள் நிலையாகிய இடமென்று பெரியோர் சொல்லுவார்கள். (அன்றி) நிட்டையால் உண்டாகும் அருளுஞ் சித்திக்கும். எக்காலத்தும் தன்னைத்தான் மறந்திருந்தால் அருளுருவமானது தட்டி மேலெழா நிற்கும், (அப்பொழுது) தன்னுடைய மயமாயிருப்பதே இன்பமாகும்; வேறொன்று மில்லை (ஆகையால்) அந்த இன்பமென்னும் நிலையை யடைந்த வர்களே பிறவாமையாகிய (செல்வத்தை) யடைந்தோர்கள்; (இங்ஙனமின்றி) மனைவியென்றும் புதல்வர்களென்றும், சுற்றத்தாரென்றும் (நாடும்) அசுத்த வாசனையாகிய ஆசையை குருவினுடைய ஒரு சொல்லைக் கொண்டு நீக்கிவிடு. (எ-று)

"தாளையே தரமறி கிலாதெமக் கெளிதரு
சிவப்பிர காசற்
காளியா மெனத் திரிந்தவன் பணிபுரிந்
தரியவீ டடைகில்லாய்
கேளை யோமனை யாதிய வளற்றினிற்
கிடந்துழைக் கின்றனைநெஞ்சே
நாளை யோலையுந் தூதரும் வரினிவர்
துணைகொலோ நவில்வாயே"

என்றபடியே பற்றை நீக்க வேண்டுவது அவசியமாகலானும், அதுவும் குருவருளா லாக வேண்டியதாகலானும், 'மனை

யென்றும் மகவென்றுஞ் சுற்றமென்று மசுத்தவாதனையா மாசைமொழி மன்னொரு சொற்கொண்டே' எனக் கூறினார்.

(1)

186. ஒருமொழியே பலமொழிக்கும் இடங்கொடுக்கும் அந்த
ஒருமொழியே மலம்ஒழிக்கும் ஒழிக்குமென மொழிந்த
குருமொழியே மலையிலக்கு மற்றைமொழி யெல்லாங்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்
கருமொழியிங் குனக்கில்லை மொழிக்குமொழி ருசிக்கக்
கரும்பனைய சொற்கொடுனைக் காட்டவுங்கண்
டனைமேல்
தருமொழியிங் குனக்கில்லை யுன்னைவிட்டு நீங்காத்
தற்பரமா யானந்தப் பொற்பொதுவாய் நில்லே.

(பொ-ரை) (குரூபதேசமாகிய) ஒரு சொல்லே பல சொற்களுக்கும் இடங்கொடா நிற்கும். அந்த ஒரு சொல்லே மலங்களை நீக்கும், என்று சொன்ன குருமொழியே மலைக்குறி

(பொ-ரை) (குரூபதேசமாகிய) ஒரு சொல்லே பல சொற்களுக்கும் இடங்கொடா நிற்கும். அந்த ஒரு சொல்லே மலங்களை நீக்கும், என்று சொன்ன குருமொழியே மலைக்குறி போல்வது, வேறு சொற்களெல்லாம் (ஒரு அளவாகிய கோடில்லாமல்) ஆடுஞ் சொக்கட்டானை யொக்கும். ஜனன முண்டென்கிற சொல்லேயுனக்கில்லை; சொல்லுக்குச் சொல் மதுரிக்கக் கரும்பையொத்த சொற்களைக் கொண்டு உன்னைக் காண்பிக்கவும் பார்த்தனை; இன்னும் உனக்கு உபதேசிக்க வேண்டிய சொற்களில்லை. (ஆகையால்) நீ உன்னைவிட்டு நீங்காத தற்பரமாகவும், இன்பப் பொற்சபை யாகவும் நிற்கக் கடவை. (எ-று)

ஈண்டு, மலமென்றது - மும்மலங்களை ஆணவம், காமியம், மாயை.

(2)

187. நில்லாத ஆக்கைநிலை யன்றெனவே கண்டாய்
நேயஅருள் மெய்யன்றோ நிலயமதா நிற்கக்
கல்லாதே ஏன்படித்தாய் கற்றதெல்லாம் மூடங்
கற்றதெல்லாம் மூடமென்றே கண்டனையும் அன்று
சொல்லாலே பயனில்லை சொல்முடிவைத் தானே
தொடர்ந்துபிடி மர்க்கடம்போல் தொட்டதுபற் றாநில்

எல்லாரும் அறிந்திடவே வாய்ப்பறைகொண் டடிநீ
இராப்பகலில் லாவிடமே எமக்கிடமென் றறிந்தே.

(பொ-ரை) நிலையாத சரீரம் நிலையல்லவென்றே அறிந்தாய், கிருபையுள்ள திருவருளானது மெய்யல்லவா? (அந்தத் திருவருளே) ஒரு இடமாகக் கொண்டு அதில் கலந்து நிற்கும்படியான கல்விகளைக் கல்லாமல் வேறு கல்விகளை ஏன் கற்றாய்? (ஆகையால்) நீ கற்றதெல்லாம் மூடத் தனத்துக் கேதுவேயாகும். ஆயினும் அவைகள் கண்டிக்கப்படுவது மன்று. (வேறென்னெனில்) சொற்களால் ஒரு பிரயோசனமு மில்லை. சொற்களின் முடிவான பொருளைத் தொடர்ந்து பிடி; (அங்ஙனம் பிடித்ததையே) குரங்கு பிடிபோற்கொண்டு அதில் நிலைத்திரு; (அன்றியும்) இராப் பகல்களில்லாத இடமே எமக்கிடமாவதென் றுணர்ந்து (அதனை உலகத்தார்) எல்லாரும் அறியுமாறு வாயாகிய பறையைக் கொண்டு சாற்றித் தெரிவி.

தேகம் அநித்தியமாதலான், 'நில்லாதவாக்கை' என்றார். *(3)*

188. **இடம்பொருளே வலைக்குறித்து மடம்புகுநா யெனவே**
எங்கேநீ யகப்பட்டா யிங்கேநீ வாடா
மடம்பெறுபாழ் நெஞ்சாலே அஞ்சாதே நிராசை
மன்னிடமே இடம் அந்த மாநிலத்தே பொருளுந்
திடம்பெறவே நிற்கினெல்லா உலகமும்வந் தேவல்
செய்யுமிந்த நிலை நின்றோர் சனகன் முதல் முனிவர்
கடம்பெறுமா மதயானை என்னவுநீ பாசக்
கட்டான நிகளபந்தக் கட்டவிழப் பாரே.

(பொ-ரை) இடம், பொருள், ஏவல்களை விரும்பி மடத்திற் பிரவேசிக்கும் நாய்போல் நீ எங்கே அகப்பட்டுக் கொண்டாய்? நீ இவ்விடத்திற்குவாடா, அஞ்ஞானத்தை யுடைய பாழும் நெஞ்சினால் பயப்படாதை; ஆசையற்ற இடமே இடமாவது; அந்தப் பெரிய இடத்தின்கண்ணே (நமக்கு) முதற் பொருளாயுள்ளது நிலைத்திருக்கும்; (ஆகையால்) நீ (அவ்விடத்தில்) உறுதியாய் நின்றால் சர்வலோகத்தார்களும் வந்து பணிவிடை செய்வார்கள். இந்த இடத்தில் நின்றவர்கள் சனகன் முதலிய முனிவர்களாவார். (இதை யறிந்து) மதம் பொருந்திய யானையைப்போல்

பாசக்கட்டான விலங்கை யொத்த தளையை நீக்கும் உபாயத்தைத் தேடு. (எ-று) *(4)*

189. பாராதி யண்டமெலாம் படர்கானற் சலம்போல்
பார்த்தனையே முடிவில் நின்று பாரெதுதான் நின்ற
தாராலும் அறியாத சத்தன்றோ அதுவாய்
அங்கிருநீ யெங்கிருந்தும் அதுவாவை கண்டாய்
பூராய மாகவுநீ மற்றொன்றை விரித்துப்
புலம்பாதே சஞ்சலமாப் புத்தியைநாட் டாதே
ஓராதே ஒன்றையுநீ முன்னிலைவை யாதே
உள்ளபடி முடியுமெலாம் உள்ளபடி காணே

(பொ-ரை) பிருதிவி முதலிய பூதங்களாலுண்டாம் பிரபஞ்ச மெல்லாம் பரவிய கானற்சலம் போலில்லாமையா யொழிவதைப் பார்த்தனையே; முடிவினின்று பார்; அவ்விடத்தில் நின்றது யாது? (அவ்விடத்தில் நின்றது) எவராலுமறியப்படாத சத்தல்லவா? நீ அப்பொருளே யாவாய், நீ ஆத்யந்தமாகவும் வேறொன்றை விரித்துப் புலம்பாதை; புத்தியைச் சஞ்சலத்தில் அழுத்தாதை; நீ ஒன்றையும் எண்ணாதை; ஒன்றையுஞ் சாட்சி வையாதை; யாவும் உள்ளபடி முடியும், இது உண்மை.(எ-று)

எல்லாம் அவரவர் வினைக்குத் தக்கவாறு இறைவன் திருவருளா லாதலின், 'ஓராதே யொன்றையுநீ முன்னிலை வையாதே- யுள்ளபடி முடியுமெலா முள்ள, படிகாணே' என்றார். இதனை,

" ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகு
மன்றி யதுவரினும் வந்தெய்து-மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல்"

என்பதினா னறிக. *(5)*

190. உள்ளபடி யென்னவுநீ மற்றொன்றைத் தொடர்ந்திட்
டுளங்கருத வேண்டாநிட் களங்கமதி யாகிக்
கள்ளமனத் துறவை விட்டெல் லாந்துறந்த துறவோர்
கற்பித்த மொழிப்படியே கங்குல்பக லற்ற
வெள்ளவெளிக் கடல்மூழ்கி யின்பமயப் பொருளாய்
விரவியெடுத் தெடுத்தெடுத்து விள்ளவும்வா யின்றிக்
கொள்ளைகொண்ட கண்ணீருங் கம்பலையு மாகிக்
கும்பிட்டுச் சகம்பொயெனத் தம்பட்ட மடியே.

(பொ-ரை) (எல்லாம்) உள்ளபடி முடியுமென்று நான் சொல்லவும், (அதைவிட்டு) நீ வேறொன்றைத் தொடர்ந்து பற்றிக்கொண்டு மனத்தில் எண்ணவேண்டாம்; களங்கமில்லாத அறிவை யுடையையாய்க் கபட சந்நியாசத்தை விட்டு, யாவற்றையும் விட்ட மெய்ச்சந்நியாசிகள் உபதேசித்த சொற்படியே இராப்பகல்களில்லாத வெளியாகிய கடலில் முழுகி இன்பரூமான பொருளாகிக் கலந்து எடுத்தெடுத்துச் சொல்லுதற்கும் வாயில்லாமல், மிகுதியான கண்ணீருஞ் சரீர நடுக்கமுங் கொண்டு நமஸ்கரித்து உலகம் பொய்யென்று பறையறையாய். (எ-று)

குரு உபதேசப்படி நில் என்பது கருத்து. (6)

191. அடிமுடியும் நடுவுமற்ற பரவெளிமேற் கொண்டால்
அத்துவித ஆனந்த சித்துமுண்டாம் நமது
குடிமுழுதும் பிழைக்குமொரு குறையுமில்லை யெடுத்த
கோலமெல்லாம் நன்றாகுங் குறைவுநிலை வறவே
விடியுமுத யம்போல அருளுதயம் பெற்ற
வித்தகரோ டுங்கூடி விளையாட லாகும்
படிமுழுதும் விண்முழுதுந் தந்தாலுங் களியாப்
பாலருடன் உன்மத்தர் பிசாசர்குணம் வருமே.

(பொ-ரை) அடி, முடி, நடுவாகிய இவைகளில்லாத பரமாகாயத்தை மேற்கொண்டால், கலந்த இன்பத்தை யுடைய மனமுண்டாகும்; நம்முடைய குடும்பமெல்லாம் பிழைக்கும்; ஒரு குறையுமில்லை; கொண்ட கோலங்களெல்லாம் செவ்வையாகவே முடியும்; தாழ்வு நிறைவுகளற விடிகின்ற உதயகாலம் போல அருளுதயத்தைப் பெற்ற ஞானிகளோடுங் கூடி விளையாடலாகும்; மண்ணுலகம் முழுவதும், விண்ணுலகம் முழுவதுங் கொடுத்தாலுஞ் சந்தோஷியாத பாலர், பித்தங் கொண்டோர், பைசாசங் கொள்ளப் பெற்றோர் (ஆகிய இவர்களுடைய) குணமுண்டாகும். (எ-று) (7)

192. வரும்போமென் பனவுமின்றி யென்றுமொரு படித்தாய்
வானாதி தத்துவத்தை வளைந்தருந்தி வெளியாம்
இரும்போகல் லோமரமோ என்னும் நெஞ்சைக் கனல்மேல்
இட்டமெழு காவுருக்கும் இன்பவெள்ள மாகிக்
கரும்போகண் டோசீனிச் சருக்கரையோ தேனோ
கனியமிர்தோஎன ருசிக்குங் கருத்தவிழ்ந்தோ
ருணர்வார்

அரும்போநன் மணங்காட்டுங் காமரசங் கன்னி
அறிவாளோ அபக்குவர்க்கோ அந்நலந்தான் விளங்கும்

(பொ-ரை) வரும், போம், என்று சொல்லுகின்றமை இல்லாமல் எக்காலத்திலும் ஒரு தன்மையதாகி, ஆகாய முதலிய தத்துவங்களை வளைந்து விழுங்கி வெளியாகும். இரும்போ! கல்லோ! மரமோ! என்று சொல்லப்படும் மனத்தை அக்கினியிலிட்ட மெழுகைப்போல் உருக்கும். சுகப்பிரவாகமாகிக், கரும்போ! கற்கண்டோ! சீனிச் சருக்கரையோ! தேனோ! கனியோ! அமிர்தமோ! என்று சொல்லும்படி இனிக்கும். (அதனை) மலர்ந்தமலர் மணம் வீசுவதுபோல் மனமலரப் பெற்றோர் உணர்வார்கள். கன்னிகையானவள் காமரசத்தை உணராவாறு போல் (மனமலரப்பெறார்) அபக்குவர்கள் உணரார்கள். (எ-று)

மலர்ந்த மலருக்கே மணமுண்டென்பார், 'அரும்போநன் மணங் காட்டும்' எனவும், அபக்குவர்க்கறிய வொண்ணா தென்பார், 'அபக்குவர்க்கோ வந்நலந்தான் விளங்கும்' எனவும் எதிர்மறை முகத்தாற் கூறினர். (8)

193. **தானேயும் இவ்வுலகம் ஒருமுதலு மாகாத்**
தன்மையினாற் படைத்தளிக்குந் தலைமையது வான
கோனாக வொருமுதலிங் குண்டெனவும் யூகங்
கூட்டியதுஞ் சகமுடிவிற் குலவுறுமெய்ஞ் ஞான
வானாக அம்முதலே நிற்குநிலை நம்மால்
மதிப்பரிதாம் எனமோனம் வைத்ததுஉன் மனமே
ஆனாலும் மனஞ்சடமென் றழுங்காதே யுண்மை
அறிவித்த இடங்குருவாம் அருளிலதொன் றிலையே.

(பொ-ரை) தானாகவும், இவ்வுலகமானது ஒருமுதற் பொருளுமாகாத தன்மையினால், இவ்வுலகத்தைச் சிருட்டித்துக் காப்பாற்றுந் தலைமையை யுடைத்தான இறைவனாக ஒரு முதற் பொருள் இவ்விடத்திலுள்ள தென்றும் யுக்தியைக் கூட்டியதும், உலகமுடிவில் விளங்குகின்ற மெய்யாகிய ஞானாகாயமாக அந்த முதற்பொருளே நிற்கின்ற நிலையானது நம்மால் மதிக்கப்படுவது அரிதாகும் என்றும், மௌனநிலையை வைத்ததும் உன்னுடைய மனதேயானாலும், மனமானது சடமென்று வருந்தாதை; உண்மைப் பொருளை உணர்த்துவித்த இடமே குருவாகும் (ஆகையால்) அருளில்லாமல் வேறொரு பொருளுமில்லை. (எ-று)

பொன்னைமாதரை

(இதுவுமது)

கலிவிருத்தம் (அந்தாதி)

194. பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்
என்னை நாடிய என்னுயிர் நாதனே
உன்னை நாடுவன் உன்னருள் தூவெளி
தன்னை நாடுவன் தன்னந் தனியனே.

(பொ-ரை) என்னை விரும்பி (எனக்குள் எழுந்தருளி யிருக்கும்) என்னுடைய உயிர்த்தலைவனே! தனியேனாகிய நான், உன்னை விரும்புவேன்; (அன்றியும்) உன்னுடைய அருளாகிய பரிசுத்தமான ஒளியை விரும்புவேன்; (இவையேயல்லாமல்) பொன்னையும், பெண்ணையும், மண்ணையும் விரும்பேன். (எ-று)

நீ என்னை விரும்பி எனக்குள்ளிருக்கின்றமையால் நானும் உன்னையே விரும்புவதை யொழிந்து வேறொன்றையும் விரும்பேன் என்பார். 'உன்னைநாடு வனுன்னருட்டூ வெளி தன்னை நாடுவன் பொன்னை மாதரைப் பூமியை நாடிடேன்' எனக் கூறினார், இதனை,

" கோலநீடிய நிதிபதி வாழ்க்கையும் குறியேன்
மேலை யிந்திரனரசினைக் கனவிலும் வெஃகேன்
மாலயன் பெறுபதத்தையும் பொருளென மதியேன்
சாலநின் பதத்தன்பையே வேண்டுவன் றமியேன்"

என ஸ்கந்த புராணத்தானறிக. *(1)*

195. தன்ன தென்றுரை சாற்று வனவெலாம்
நின்ன தென்றனை நின்னிடத் தேதந்தேன்
இன்னம் நின்னை யிடருறக் கூட்டினால்
பின்னை யுய்கிலன் பேதையன் ஆவியே

(பொ-ரை) தன்னுடையதென்று சொல்லப்படுவன வெல்லாம் உன்னுடையதென்று சொல்லினை; (ஆகையால்) அவைகளை உன்னிடத் திற்றானே ஒப்புவித்தேன்; (அங்ஙனஞ் செய்தும்) இன்னும் என்னைத் துக்கம் அநுபவிப்பதால் பிறகு அறிவில்லாதவனாகிய நான் உயிர் பிழையேன். (எ-று)

ஆசாரியர் சந்நிதியில் உடல், பொருள், ஆவிகளைத் தத்தஞ் செய்ய வேண்டிய துண்மையின், 'தன்னதென்றுரை

சாற்று வனவெலாம் நின்ன தென்றனை நின்னிடத்தே தந்தேன்' எனக் கூறினர். இதனை

" அருள்விளங்கலு முடல்பொரு ளாதியபந்தந்
தருமவன் புடையெய்துறக் கொடுத்திடுந்தகை"

என்பதனானறிக. *(2)*

196. ஆவி யேயுனை யானறி வாய்நின்று
சேவி யேன்களச் சிந்தை திறைகொடேன்
பாவி யேனுளப் பான்மையைக் கண்டுநீ
கூவி யாளெனை யாட்கொண்ட கோலமே.

(பொ-ரை) என்னுயிரே! என்னை அடிமை கொண்ட அருளிறையே! உன்னை, நான் அறிவுருவாய் நின்று வணங்கேன். வஞ்ச மனத்தைக் கப்பமாகக் கொடேன், பாவியாகிய நான் (இங்ஙனமுள்ள) தன்மையைக் கண்டும் நீயே என்னையழைத்து ஆள்வாய். (எ-று)

வஞ்சமனத்தார்க் கரியவனாகலான், 'கள்ளச்சிந்தை திறைகொடேன்' எனக் கூறினார். இதனை,

" கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ வங்கையினி லனலேந்தி
யிரவாடும் பெருமானை யென்மனத்தே
வைத்தேனே"

என்பதனா னறிக. *(3)*

197. கோல மின்றிக் குணமின்றி நின்னருள்
சீல மின்றிச் சிறியன் பிழைப்பனோ
ஆல முண்டும் அமிர்துரு வாய்வந்த
கால மெந்தை கதிநிலை காண்பதே.

(பொ-ரை) எம்முடைய தந்தையே! உன்னுடைய சின்னங் களில்லாமலும், நற்குணமில்லாமலும், உன்னுடைய திருவருளைப் பெறுதற்கான நல்லொழுக்க மில்லாமலும், சிறியனாகிய நான் பிழைப்பனோ? பிழையேன் (அங்ஙனம் பிழைக்கவேண்டின்) விஷத்தையுண்டாலும் (அது) அமிர்தரூபமாய்த் தோன்றுங் காலத்திற்றான் சிவகதியின் (உண்மை) நிலையைக் காணப் பெறுவது. (எ-று)
(4)

198. காணுங் கண்ணிற் கலந்தகண் ணேயுனைச்
சேணும் பாருந் திரிபவர் காண்பரோ
ஆணும் பெண்ணும் அதுவெனும் பான்மையும்
பூணுங் கோலம் பொருந்தியுள் நிற்கவே.

(பொ-ரை) (உன்னைக்) காணுதற்குரிய (ஞானக்) கண்ணிற் கலந்துள்ள கண்ணே! ஆண்பாலும், பெண்பாலும், ஒன்றன் பாலும் (ஆகிய இவைகளைக்) கொண்ட உன்னுடைய திருக் கோலமானது அவ்வவர் களுடைய மனத்தின்கண் நிலைத்திருக்க (அதையுணராது) ஆகாயத்தி லும், பூமியிலும் திரிபவர் உன்னைக் காண்பார்களோ? காணார். (எ-று)

இறைவனை ஊனக்கண் காணாவாறுபோல் அவன் கலந்தவழி அவன் வாயமாய் விடுதலான் ஞானக்கண்ணும் காணாதென்பார், 'காணுங் கண்ணிற் கலந்த கண்ணே' எனவும், அவ்வப்பால்களில் அவ்வப்பால் களாகவே கலந்து உள்ளத்தின் கணிருக்க (அதையுணராமல்) வெளியே திரிகின்றவர்களால் அறியப்படானென்பார். 'உன்னைச் சேணும் பாருந்திரிபவர் காண்பரோ? ஆணும் பெண்ணுமது வெனும்பான்மையும் பூணுங்கோலம் பொருந்தியுணிற்கவே' எனவுங் கூறினார்.

இக்கருத்தை நோக்கியே நமது திருவாதவூரடிகளும்.

"கண்களி ரண்டும் வன்கழல் கண்டுக ளிப்பன வாகாதே
காரிகை யார்கடம் வாழ்விலென் வாழ்வு கடைப்படு மாகாதே
மண்களில் வந்துபிறந்திடு மாறும றந்திடு மாகாதே
மலாறியாமலர்ப் பாதமிரண்டும்வணங்குதுமாகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல்ப யின்றிடு மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள் பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்துவெ ளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்துவெ ளிப்படு மாயிடிலே"

என்றார்.

(பொழிப்புரை) இச்செய்யுள் என்னுதலிற்றோவெனின் படையாட்சி யோடு பாசறைக்கட் சென்ற தலைவன் சத்தனாதலால் அவன் வருவலெனவுரைத்த பருவமும்

வந்தது. அவனும் வருவம் என்றாற்றுவித்த பாங்கிக்குத் தலைவி அவன் வெளிப்படின் தனக்குளதாம் போகானந்தப் பேற்றைக் கூறுதலை யுணர்த்துதனுதலிற்று.

கலவனுருக்கொடு வலைவீசி மீனினைப்படுத்த சிவனெனுந் தலைவன் வந்து வெளிப்படின் ஆண்டு என்னிரண்டு கண்களும் அவன் திருக்கழல்கண்டு களிப்பனவாகிய நிகழ்ச்சியு முளதாகாது. பிரிவறியாது தன்றலைவருடன் புணர்ந்து நிற்கும் மாதர் வாழ்வினின்று மென்வாழ்வு கடைப்படுமாறு முளதாகாது. திருமாலறியாத் திருமலர்ப்பாத மிரண்டனையும் வணங்குது மென்று சொல்லுஞ் சொன்னிகழ்ச்சியு முளதாகாது. களிப்பினை மிகுத் தரும் பண்ணினைப் பொருந்திய பாடலோடாடல் பயின்றிடுமாறு முளதாகாது. நல்வளநிறைந்த திருப்பாண்டிய நாடதனையே திருப்படைவீடாக உடையான் படையாட்சிகள் பாடுதுமென்று சொல்லுஞ் சொன்னிகழ்ச்சியு முளதாகாது. இருமலமுடைய பிரளயாகலர் களிகூரத்தக்கதாக மான்மழு சதுர்ப்புயத்தோடு வந்து வெளிப்படுமாறு வெளிப்படுதலு முளதாகாது. ஆண்டு யான் சிவபோகமென்னுஞ் சிவாநுபூதி சொரூபியாவே னென்பதாம்.

ஈண்டு தலைவி சீவன் முத்தன், தலைவன் சத்தனாகிய பரமசிவன் பாங்கி திருவருளென வறிக. சைவாகமத்து முத்தியினு மும்முதலு முண்டென்பதனான் முத்தியினு மாண்டானடிமையிருக்க விவ்வாறு கூறலாகாதெனின், அறியாது கூறினாய். மலமாயா கன்மங்களோடு கூடித் திரோதப்பட்டுச் சனனமரணமுற்று வருமான்மாவிரு வினையு மொரு காலத்தே வந்து புசிக்கைக்குச் சமமுற்ற வெல்லையிற் போன பலகோடி பவங்களிலே செய்துவந்த சரியாகிரியா யோகத் தவப்பயனான் மலபரிபாகப் பட்டுச் சிவஞானத்தைப் பெற்றுத் திருவருடாரகமாய நின்று சீவகரணங்களெல்லாஞ் சிவகரணங்களாய்ச் சிவனோ டொன்றாய்ச் சாயுச்சியமாயன்; சாயுச்சிய மாமிடத்து வேறாய் நின்று கலப்பின் கலத்தல் கூடாமையானும் ஒன்றாய் நின்று கலப்பின் கலத்தலின்மை யானும் அப்பொடு கலந்த உப்புப்போல வேறறநின்று சாயுச்சியமாவன்; ஆனவிடத்து மூன்று முதலுமிருக்கி னுமவை முன்புபோலச் சீவித்து

நிற்பனுவுஞ் செய்யா மனிற்கும். நிற்கவே ஆன்மா சீவனோடு அத்துவிதமாய் நிற்பனாதலாலண்டு சிவனையுஞ் சுட்டி யறியான் இதுவிதுவென்று சுட்டியறியப் பட்டனவெல்லாம் விடையமாய்ப் பொய்ப்பொருளா மாதலினவ்வாறு அவை பொய்ப்பொருளென வறிந்தவிடத்தே சுட்டற்ற வுண்மையாகிய சிவரூபமாவன்; அங்ஙனஞ் சிவரூபனான முத்தாத்மாவினாலே யிவ்வாறு சுட்டியறிதலின்றா மாதலினிவ்வாறு கூறுதலாமெனக் கொள்க. இதனைச் சிவஞான போதம் 8-9-10-11- ஆஞ் சூத்திரங்களாலு மிந்நான்கு சூத்திரங்களின் பொருள்களை விரித்துச் சித்தியார் சிவப்பிரகாசங்களிற் கூறிய திருவிருத்தங்களாலுமறிக.

ஏகாரங்களீற்றசை தேற்றமெனினு மமையும். அன்றி வினாவாகக் கொண்டாமெனப் பொருள் கொள்ளின், காரிகையார்கடம் வாழ்விலென் வாழ்வு கடைப்படுமாகாதே யென்பதைத் திலதருப்பணஞ் செயல் வேண்டும். இது முதலிய பல குற்றங்களுண்டாம் அவற்றை விரிப்பிற் பெருகுமென் றொழிந்தாம். இச்செய்யுளிற் கூறப்படு மாகாதென்னு மொழி கட்கு ஆமெனப் பொருள் கூறினாகாதோ வெனினாகாது. என்னெனின் யாண்டும் எதிர் மறையை யுடன்பாடாகக் கூறுதற்கிலக்கன மின்மையின், செய்யாயென்று முன்னிலையொருமை யேவலெதிர்மறை வினைமுற்றையுடன் பாட்டுவினை முற்றாகப் பொருள் கொள்ளுதல் போலிதனையும் பொருள்கொள்ளுதல் ஆகாதோவெனின் ஆகாது; என்னெனின் அதனை எதிர்மறை வினை முற்றாகப் பொருள் கொள்ளுமிடத்து எதிர்மறை யாகாரமிடையிற் புணர்ந்துகெட்டு நின்றதாகவு முடன்பாட்டு வினைமுற்றாகப் பொருள் கொள்ளுமிடத்து அவ்வெதிர்மறை யாகாரம் வேண்டாது நிற்பதாகவும், கொள்ளுதலானு மிதனிடத்தில் எதிர்மறையாகாரம் புணர்ந்து நிற்றலினு டன்பாடாகக் கொள்ளுதற் கேலாமை யானு மென்க. கண்களிரண்டாவன ஞானக்கண்ணு மூனக்கண்ணுமாம். ஏனையவற்றை விரித்துக் கடா விடைகளாகக் கூறுதற் கிஃதமைய மன்றென விடுத்தனம்.(5)

199. **நிற்கும் நன்னிலை நிற்கப்பெற் றார்அருள்**
வர்க்க மன்றி மனிதரன்றே ஐயா
துர்க்கு ணக்கடற் சோங்கன்ன பாவியேற்
கெற்கு ணங்கண் டென்பெயர் சொல்வதே.

(பொ-ரை) நிற்பதற்குரிய உன் திருவருள் நிலையில் நிற்கப் பெற்றவர் அருள்வர்க்கத்தாரென்று சொல்லப் படுவாரன்றி மனிதர்களென்று சொல்லப் படார்கள். ஐயனே! துர்க்குணமாகிய கடலிலகப்பட்ட கப்பலையொத்த பாவியாகிய எனக்கு என்னுடைய குணத்தைக் கண்டு என்ன பெயரிட்டழைப்பது. (எ-று) *(6)*

200. **சொல்லை யுன்னித் துடித்ததலால் அருள்**
எல்லை யுன்னி எனையங்கு வைத்திலேன்
வல்லை நீஎன்னை வாவென் றிடாவிடின்
கல்லை யாமிக் கருமி நடக்கையே.

(பொ-ரை) நீ உபதேசித்த மொழியை நினைத்து மனம் பதைத்ததே யல்லாமல், உன்னுடைய அருளின் எல்லையை நினைத்து அவ்விடத்தில் என்னை யமைத்திலேன், (ஆகையால்) சீக்கிரத்தில் நீ என்னை வாவென் றழையாவிட்டால் இத்தீயோனது ஒழுக்கமானது பொய்யாகும். (எ-று) *(7)*

201. **கையும் மெய்யுங் கருத்துக் கிசையவே**
ஐய தந்ததற் கையம இனியுண்டோ
பொய்ய னேன்சிந்தைப் பொய்கெடப் பூரண
மெய்ய தாம்இன்பம் என்று விளைவதே

(பொ-ரை) ஐயனே! கைகளையும் சரீரத்தையும், மனத்திற் கிணங்க நான் கொடுத்ததற்கு இனிச் சந்தேக முண்டோ? இல்லை (ஆனால்) பொய்யனாகிய எனது மனத்திலுள்ள பொய்யொழிய நிறைந்த உண்மைச் சுகம் உண்டாவது எக்காலமோ? (எ-று)

கை, மெய்களைக் கருத்துக்கிசையக் கொடுத்தலாவது கைகளால் அஞ்சலி செய்தலும், மெய்யால் வலம் வருதலுமாம். *(8)*

202. **என்றும் உன்னை இதய வெளிக்குளே**
துன்ற வைத்தன னேஅருட் சோதிநீ
நின்ற தன்மை நிலைக்கென்னை நேர்மையாம்
நன்று தீதற வைத்த நடுவதே.

(பொ-ரை) நன்மை தீமைகளொழிய என்னைத் திருவருளிலக்கில் சேர்த்து வைத்த நடுவு நிலைமையுடைய பொருளே! எக்காலத்தும் உன்னை ஹ்ருத யாகாயத்திற்குள்

நிறைந்திருக்கும்படி வைத்தேனே. (அங்ஙனமே) திருவருட் சோதியாகிய நீ நிலைத்திருந்த நிலைமைக்கு என்ன ஒப்பாகும். (எ-று) *(9)*

203. **வைத்த தேகம் வருந்த வருந்திடும்**
பித்த னானருள் பெற்றுத் திடமிலேன்
சித்த மோன சிவசின்ம யானந்தம்
வைத்தஐய அருட்செம்பொற் சோதியே.

(பொ-ரை) சித்தமான மௌன நிலையையுணர்த்து வோனே! மங்களகரனே! எனக்கு ஞானாநந்தத்தை அருள்செய்த ஐயனே! திருவருட் சத்தியோடு கூறும் செம்பொற் சோதியே! நியமித்த தேகம் வருந்துவதால் வருந்துகின்றது. பித்தனாகிய நான் உன் திருவருளைப் பெற்றும் (நிட்டை கூடத்) திடமில்லாதவனா யிருக்கின்றேன். (எ-று) *(10)*

204. **செம்பொன் மேனிச் செழுஞ்சுட ரேமுழு**
வம்ப னேனுனை வாழ்த்து மதியின்றி
இம்பர் வாழ்வினுக் கிச்சைவைத் தேன்மனம்
நம்பி வாவெனின் நானென்கொல் செய்வதே.

(பொ-ரை) செம்பொன் வண்ணச்செழுமையாகிய ஒளியே! முழு மூடனாகிய நான் உன்னைத் துதிசெய்யும் புத்தியில்லாமல் இவ்வுலக வாழ்க்கையில் மனவிருப்பங் கொண்டுளேன். இறைவனே! (என்னை நீயே) வாவென்று வலிய அழைத்தால் நான் செய்வது யாதுளது? (எ-று) *(11)*

205. **செய்யுஞ் செய்கையுஞ் சிந்திக்குஞ் சிந்தையும்**
ஐய நின்னதென் றெண்ணும் அறிவின்றி
வெய்ய காம வெகுளி மயக்கமாம்
பொய்யி லேசுழன் றேனென்ன புன்மையே.

(பொ-ரை) ஐயனே! நான் செய்கின்ற தொழிலும், நினைக்கின்ற நினைப்பும், உன்னுடையதென்றெண்ணும் அறிவில்லாமல் கொடிய காம, வெகுளி, மயக்கங்களாகிய பொய்யொழுக்கத்தில் அலைந்தேன். இது வென்ன அறிவீனம்! *(12)*

206. **புன்பு லால்நரம் பென்புடைப் பொய்யுடல்**
அன்பர் யார்க்கும் அருவருப் பல்லவோ
என்பொ லாமணி யேஇறை யேஇத்தால்
துன்ப மன்றிச் சுகமொன்றும் இல்லையே.

(பொ-ரை) என்னுடைய தொளைக்காத முழுமணியே! இறைவனே! இழிவான மாமிசத்தையும், நரம்பையும் எலும்பையுமுடைய நிலையற்ற சரீரமானது, அன்பர் யாவர்க்கும் அருவருக்கத் தக்கதல்லவோ? இவ்வுடம்பால் துன்பமே யல்லாமல் இன்பமொன்றுமில்லை. (எ-று) (13)

207. **இல்லை உண்டென் றெவர்பக்க மாயினுஞ்**
சொல்ல வோஅறி யாத தொழும்பன்யான்
செல்ல வேறொரு திக்கறி யேன்எலாம்
வல்ல நீஎனை வாழ்விக்க வேண்டுமே.

(பொ-ரை) இல்லையென்றும், உண்டென்றும், எவரிடத்திலாயினும் போய்ச் சொல்லத் தெரியாத தொண்டனாகிய நான் அடைக்கலமடைய வேறொரு திசையறியேன். எல்லாஞ் செய்ய வல்லவனான நீ அடியேனை வாழ்வித்தருள வேண்டும். (எ-று)

எல்லாம் வல்லவனான உன்னிடத்திலன்றி வேறொரு தெய்வத் தினிடத்தில் அடைக்கலமடையேன் என்பார். 'செல்ல வேறொரு திக்கறியே னெலாம், வல்லநீ யெனை வாழ்விக்க வேண்டுமே' எனக் கூறினார். இதனை,

"எழுபவப் புணரியஞ்சே னிதமட மாதரஞ்சேன்
முழுதுமாய் நின்றசோதி முதல்வனஞ் சங்கரார்யன்
கழன்மலர் முடிகொளாது கதியுள தயலென்றேங்கி
யழிகுவா ரவரைக்கண்டா லம்மநா மஞ்சுமாறே"

என்பதனா னறிக. (14)

208. **வேண்டுஞ் சீரருள் மெய்யன்பர்க் கேயன்பு**
பூண்ட நானென் புலம் அறி யாததோ
ஆண்ட நீஉன் அடியவன் நானென்று
தூண்டுவே னன்றித் தொண்டனென் சொல்வதே.

(பொ-ரை) (உனது) சிறந்த திருவருளை விரும்புகின்ற மெய்யடியாரிடத்தில் அன்பு பூண்டவன்

நானென்றும், (என்னை) அடிமை கொண்டவன் நீயென்றும், என்னறிவு அறியும். (ஆகையாற்றான்) நான் உன்னுடைய அடியவனென்று சொல்லுவதேயல்லாமல் தொண்டனாகிய நான் வேறெதைச் சொல்லுவேன். (எ-று) *(15)*

209. எனக்கு ளேஉயி ரென்ன இருந்தநீ
மனக்கி லேசத்தை மாற்றல் வழக்கன்றோ
கனத்த சீரருட் காட்சிய லாலொன்றை
நினைக்க வோஅறி யாதென்றன் நெஞ்சமே.

(பொ-ரை) என்னுடைய மனமானது மிகுந்த சிறப்பை யுடைய திருவருள் தரிசனத்தை யல்லாமல் வேறொன்றையும் நினைக்க அறியாது (அகையால்) எனக்குள்ளே உயிர்க்கு உயிராயிருந்த நீ என்னுடைய மனத்துன்பத்தை நீக்கிவிடுதல் கடமையெல்லவா? (எ-று) *(16)*

210. நெஞ்சு கந்துனை நேசித்த மார்க்கண்டர்க்
கஞ்ச லென்ற அருளறிந் தேஐயா
தஞ்ச மென்றுன் சரணடைத் தேன் எங்குஞ்
செஞ்செ வேநின்ற சிற்சுக வாரியே.

(பொ-ரை) ஐயனே! எவ்விடத்திலும் பரிபூரணமாய் நிறைந்திருக்கின்ற ஞானானந்தக் கடலே! உன்னை மனமுவந்து துதி செய்த மார்க்கண்ட முனிவற்குப் பயப்படாதை என்று திருவாய் மலர்ந்த திருவருளை யறிந்து, உன் திருவடியில் அடைக்கலமடைந்தேன். (எ-று) என்னையும் அவ்வாறு காப்பாற்ற வேண்டும் என்பது குறிப்பு.

இறைவன் மறலியைக் கொன்று மார்க்கண்டர்க்கருள் தந்தமையால் இவ்வாறு கூறினார். இதனை,

"மார்க்கண் டமர்க் காக மறலிபட்ட பாட்டையுன்னிப்
பார்க்கிலன்பர்க் கென்ன பயங்காண் பராபரமே"

என இவ்வாசிரியரே பின்னர் கூறுமாற்றானு முய்த்துணர்ந்து கொள்க. *(17)*

211. வாரி ஏழும் மலையும் பிறவுந்தான்
சீரி தானநின் சின்மயத் தேஎன்றால்
ஆரி லேயுள தாவித் திரளதை
ஓரி லேன்எனை ஆண்ட ஒருவனே.

(பொ-ரை) என்னை அடிமை கொண்ட ஒப்பற்ற தெய்வமே! சப்த சமுத்திரங்களும், மலைகளும் மற்று முள்ளவையும் உன்னுடைய சிறந்த சிற்சொரூபத்திலென்று சொன்னால், உயிர்த்தொகுதிகள் யாவும் யாரிடத்தி லுள்ளதோ அதை அறிந்திலேன். (எ-று) (18)

212. **ஒருவ ரென்னுளத் துள்குங் குறிப்பறிந்**
தருள்வ ரோஎனை ஆளுடை அண்ணலே
மருள னேன்பட்ட வாதை விரிக்கினோ
பெருகு நானினிப் பேச விதியின்றே.

(பொ-ரை) என்னை அடிமைகொண்ட பெரியோனே! (நீயன்றி) வேறொருவர் எம்மனத்தில் எண்ணுகின்ற எண்ணத்தை யறிந்து அருள் செய்குவரோ? இல்லை. (ஆகையால்) மாயையிற் கட்டுப்பட்ட நான் பட்ட துன்பத்தை விரித்துச் சொன்னால் நான் அதிகரிக்கும். (அன்றி) இனிப் பேசுதற்கும் வழியில்லை. (எ-று) (19)

213. **இன்று னக்கன் பிழைத்திலன் நானென்றே**
அன்று தொட்டெனை ஆளர சேஎன்று
நின்ற ரற்றிய நீலனைக் கைவிட்டால்
மன்ற மெப்படி நின்னருள் வாழ்த்துமே.

(பொ-ரை) இறைவனே! இப்பொழுது நான் உனக்கன்பு செய்திலேன். (ஆயினும்) என்னை யடிமை கொள்வை யென்று, அக்கால முதலாகக் கதறின வஞ்சகனாகிய என்னைக் கைவிடுவையாயின், உலகமானது உன்னுடைய திருவருளை எங்ஙனந் துதிக்கும். (எ-று) (20)

214. **வாழ்த்து நின்னருள் வாரம்வைத் தாலன்றிப்**
பாழ்த்த சிந்தைப் பதகனும் உய்வனோ
சூழ்த்து நின்ற தொழும்பரை யானந்தத்
தாழ்த்து முக்கண் அருட்செம்பொற் சோதியே

(பொ-ரை) (உன்னை) வளைந்து நின்ற தொண்டரை, இன்ப சாகரத்தில் அமிழ்த்துகின்ற மூன்று கண்களையும், கிருபையையு முடைய செம்பொன் வண்ணனே! யாவராலும் வாழ்த்தப்படுகின்ற உன்னுடைய திருவருளானது என்மீது அன்பு வைத்தாலல்லாமல் பாழ் மனத்தையுடைய பாவியும் பிழைப்பேனோ? பிழையேன். (எ-று) (21)

215. சோதி யேசுட ரேசுக மேதுணை
நீதி யேநிச மேநிறை வேநிலை
ஆதி யேஉனை யானடைந் தேன்அகம்
வாதி யாதருள் வாய அருள் வானையே.

(பொ-ரை) ஒளியே! ஒளியைத் தரும் விளக்கே! இன்பமே! சகாயமாகிய நீதியே! உண்மையே! பூரணமே! நிலைத்துள்ள முதற்பொருளே! நான் உன்னைச் சரணமடைந்தேன். (ஆகையால்) மனமானது என்னை வருத்தாதிருக்கும்படி அருள் வெளியை அருள் செய்வாய். (எ-று) *(22)*

216. வானைப் போல வளைந்துகொண் டானந்தத்
தேனைத் தந்தெனைச் சேர்ந்து கலந்தமெய்ஞ்
ஞானத் தெய்வத்தை நாடுவன் நானெனும்
ஈனப் பாழ்கெட என்றும் இருப்பனே.

(பொ-ரை) மேகங்களைப் போற் சூழ்ந்து கொண்டு இன்பமாகிய தேனைச் சொரிந்து என்னைக் கூடிப் பிரிவறக்கலந்த மெய்ஞ்ஞானத்தைக் கொடுக்குந் தெய்வத்தை நாடுவேன் (அதனால்) நான் என்று சொல்லும் இழிவாகிய பாழ் வழியானது கெடும்படி எக்காலத்தும் ஒரு தன்மை யாயிருப்பேன். (எ-று) *(23)*

217. இரும்பைக் காந்த மிழுக்கின்ற வாறெனைத்
திரும்பிப் பார்க்கவொட் டாமல் திருவடிக்
கரும்பைத் தந்துகண் ணீர்கம் பலையெலாம்
அரும்பைச் செய்யென தன்னையொப் பாமனே.

(பொ-ரை) என்னுடைய தாய்க்குச் சமானமாகிய இறைவனே! இரும்பினைக் காந்தக் கல்லானது இழுத்துக் கொள்ளும் விதம்போல, அடியேனை மீண்டும் (இவ்வுலகில்) சென்மிக்கா வண்ணம் உன் திருவடிகளாகிய கரும்பைக் கொடுத்து கண்ணீர் கம்பலைகளை என்னிடத் துண்டாகச் செய்வாய். (எ-று)

கம்பலை=உடல் நடுக்கம் *(24)*

218. அன்னை யப்பனென் ஆவித் துணையெனுந்
தன்னை யொப்பற்ற சற்குரு என்பதென்
என்னைப் பூரண இன்ப வெளிக்குளே
துன்ன வைத்த சுடரெனத் தக்கதே.

(பொ-ரை) தாய், தந்தை, என்னுடைய உயிர்த்துணை, என்று சொல்லப்படுகிறதன்னை, ஒப்பில்லாத குருவென்று சொல்லுவதேன்! அடியேனைப் பூரண சுகமான சிதாகாயத்தில் சேரவைத்த சோதியென்று சொல்லத் தக்கது. (எ-று)

குருவை இறைவனாகவே கருத வேண்டும் என்பது கருத்து. இதனை,

"ஞானயோ கக்கிரியை சரியை நாலு
நாதன்றன் பணிஞானி நாலினுக்கு முரிய
னூனமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன்
யோகிகிரி யாவான்றா னொண்கிரியை யாதி
யானவிரண் டிற்குரியன் சரியையினி னின்றோ
னச்சரியைக் கேயுரிய னாதலினா லியார்க்கு
மீனமிலா ஞானகுரு வேகுருவு மிவனே
யீசனிவன் றானென்று மிறைஞ்சி யேத்தே"

என்னுஞ் சித்தியாரானறிக (25)

219. **தக்க கேள்வியிற் சார்ந்தநற் பூமியின்**
மிக்க தாக விளங்கும் முதலொன்றே
எக்க ணுந்தொழ யாவையும் பூத்துக்காய்த்
தொக்க நின்றுமொன் றாய்நிறை வானதே.

(பொ-ரை) தகுந்த கேள்வியாகிய நல்ல பூமியில் உயர்ந்த தாக விளங்குகின்ற வித்தொன்றே எத்திசையும் வணங்க எல்லாவற்றையும் பூத்துக் காய்த்துத் தனித்தனி நின்றும், ஒன்றாய் நின்றும் நிறைந்திருக்கின்றது. (எ-று) (26)

220. **ஆன மான சமயங்கள் ஆறுக்குந்**
தான மாய்நின்று தன்மயங் காட்டிய
ஞான பூரண நாதனை நாடியே
தீன னேன்இன்பந் தேக்கித் திளைப்பனே.

(பொ-ரை) உண்டாகிய பெருமை வாய்ந்த ஆறு சமயங்களுக்கும் இடமாய் நின்று தன் வடிவத்தைக் காட்டிய நிறைந்த ஞான சொரூபனை விரும்பி, எளியேனாகிய நான் சுகானந்தத்தை நிறைய அநுபவிப்பேன். (எ-று) (27)

221. **தேக்கி இன்பந் திளைக்கத் திளைக்கவே**
ஆக்க மாயெனக் கானந்த மாகியே

போக்கி னோடு வரவற்ற பூரணந்
தாக்கி நின்றவா தன்மய மாமதே.

(பொ-ரை) சுகானந்தத்தை முழுதுமடைந்து அநுபவிக்குந்தோறும் விருத்தியடைந்து எனக்கு இன்பமாகி இறத்தல், பிறத்தல்களில்லாத பூரணப் பொருளானது மேலிட்டிருந்தவாறு என்னை? அதுவே தன்னுடைய மயமாகும். (எ-று) *(28)*

222. **அதுவென் றுன்னும் அதுவும் அறநின்ற**
முதிய ஞானிகள் மோனப் பொருளது
எதுவென் றெண்ணி இறைஞ்சுவன் ஏழையேன்
மதியுள் நின்றின்ப வாரி வழங்குமே.

(பொ-ரை) எளியேன், அதுவென் றெண்ணும் எண்ணமு மறநின்ற முதிர்ந்த ஞானிகளனுபவிக்கும் மௌன நிலைப் பொருள் எது? என்றெண்ணித் தொழுவேன். (அங்ஙனந் தொழுகின்ற) என்னுடைய உள்ளத்திலிருந்து நீ சுகானந்தக் கடலைத் தருவாய் (எ-று) *(29)*

223. **வாரிக் கொண்டெனை வாய்மடுத் தின்பமாய்ப்**
பாரிற் கண்டவை யாவும் பருகினை
ஓரிற் கண்டிடும் ஊமன் கனவென
யாருக் குஞ்சொல வாயிலை ஐயனே.

(பொ-ரை) ஐயனே! என்னைக் கவர்ந்துகொண்டு உண்டு சுகரூபியாகி, உலகத்தில் காணப்பட்ட பொருள் களெல்லாவற்றையும் விழுங்கினை, ஆராயுமிடத்தில் (இது) ஊமன் காணுங் கனவுபோல யாருடனுஞ் சொல்ல வசனமில்லாமையாயிருக்கிறது (எ-று) *(30)*

224. **ஐய மற்ற அதிவகு ணர்க்கெலாங்**
கையி லாமல கக்கனி யாகிய
மெய்ய னேஇந்த மேதினி மீதுழல்
பொய்ய னேற்குப் புகலிடம் எங்ஙனே.

(பொ-ரை) சந்தேக விபரீதங்கள் நீங்கிய ஞானிகளுக் கெல்லாம் உள்ளங்கையில் நெல்லிக் கனிபோன்ற உண்மை யானவனே! இந்த உலகத்தில் சுழல்கின்ற பொய்யனாகிய எனக்குச் சரணடையும் இடம் எங்குள்ளது? (எ-று) *(31)*

225. **எங்ங னேஉய்ய யானென தென்பதற்**
றங்ங ளேயுன் அருள்மய மாகிலேன்
திங்கள் பாதி திகழப் பணியணி
கங்கை வார்சடைக் கண்ணுத லெந்தையே.

(பொ-ரை) விளங்கும்படி அர்த்த சந்திரனையும், பாம்பையுந் தரித்த கங்கை தங்கிய சடாபாரத்தையும், நெற்றிக் கண்ணையுமுடைய எமது தந்தையே! நான் என்னும் அகங்காரமும், எனது என்னும் மமகாரமும் நீங்கி (அங்ஙனம் நீங்கிய) அவ்விடத்திற்றானே உன்னுடைய திருவருள் மயமானே னில்லை. (ஆகையால்) நான் எப்படிப் பிழைப்பேன். (எ-று) (22)

226. **கண்ணிற் காண்பதுன் காட்சிகை யாற்றொழில்**
பண்ணல் பூசை பகர்வது மந்திரம்
மண்ணொ டைந்தும் வழங்குயிர் யாவுமே
அண்ண லேநின் அருள்வடி வாகுமே.

(பொ-ரை) பிருதிவி முதலிய ஐம்பூதங்களும், வழங்கும் உயிர்களும் உன்னுடைய அருளருவமேயாகும். (ஆகையால்) பெருமை மிக்கோனே! கண்களால் பார்க்கப்படுவது உன்னுடைய சேவையே, கைகளாற் றொழில் செயல் உன்னுடைய பூசையே, (வாயாற்) சொல்வது உன்னுடைய மந்திரமே. (எ-று) (23)

227. **வடிவெ லாநின் வடிவென வாழ்த்திடாக்**
கடிய னேனுமுன் காரணங் காண்பனோ
நெடிய வானென எங்கும் நிறைந்தொளிர்
அடிக ளேஅர சேஅருள் அத்தனே.

(பொ-ரை) பெரிய ஆகாயம்போல் எங்கும் நிறைந்து விளங்குகின்ற சுவாமீ! தலைவனே! திருவருட்டந்தையே! (உலகத்தில் காணும்) உருவங்களெல்லாம் உன்னுருவ மென்று துதி செய்யாதவன் மனத்தை யுடையேனும் உன்னுடைய ஆதியைக் காண வல்லமை யுடையேனோ? (எ-று) (34)

228. **அத்த னேயகண் டானந்த னேஅருட்**
சுத்த னேயென உன்னைத் தொடர்ந்திலேன்

மத்த னேன்பெறு மாமலம் மாயவான்
கத்த னேகல்வி யாதது கற்கவே.

(பொ-ரை) எமது தந்தையே! கண்டிக்கப்படாத சுகத்தையுடையவனே! கிருபையுள்ள நிர்மலனே! மேலான சர்வசக்தி யுடையோனே! உன்மத்தனான நான் அடைந்திருக்கிற பெரிய மலங்களழிதற் பொருட்டுக் கற்கவேண்டிய கல்விகளைக் கற்க உன்னைப் பிடித்திலேன். (எ-று) *(35)*

229. **கற்றும் என்பலன் கற்றிடு நூன்முறை**
சொற்ற சொற்கள் சுகாரம்ப மோநெறி
நிற்றல் வேண்டும் நிருவிகற் பச்சுகம்
பெற்ற பேர்பெற்ற பேசாப் பெருமையே.

(பொ-ரை) நிருவிகற்பச் சமாதியாலுண்டாம் இன்பத்தை அடைந்தவர்கள் பெற்ற மௌன வஸ்துவே! பல கல்விகளைக் கற்றும் என்ன பிரயோசனம்? கற்கப்படுகிற சாத்திரமுறைகள் சொன்ன சொற்கள் இன்பமுதயமாதற்குக் காரணமோ? (அன்று இன்பத்திற்குக் காரண மென்னெனில்) அவை சொன்ன நெறியில் நிற்றலே (ஆகையால்) அவ் வழியில் நிற்றல் வேண்டும். (எ-று)

இதனை,

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்பதனா னறிக. *(36)*

230. **பெருமைக் கேயிறு மாந்து பிதற்றிய**
கருமிக் கைய கதியுமுண் டாங்கொலோ
அருமைச் சீரன்பர்க் கன்னையொப் பாகவே
வருமப் பேரொளி யேயுன்ம னாந்தமே.

(பொ-ரை) அருமையான சிறப்பினையுடைய அன்பர்களுக்குத் தாய்க்குச் சமானமாய் வருகின்ற அந்தப் பெரிய சோதியே! உன் மனாசத்தியின் முடிவே! ஐயனே! பெருமையடைதற் பொருட்டே கர்வித்துப் பிதற்றிய இத்தீயோனுக்கு நற்கதியும் உண்டாகுமோ! (எ-று) *(37)*

231. **உன்ம னிக்குள் ஒளிர்பரஞ் சோதியாஞ்**
சின்ம யப்பொரு ளேபழஞ் செல்வமே
புன்ம லத்துப் புழுவன்ன பாவியேன்
கன்ம னத்தைக் கரைக்கக் கடவதே.

(பொ-ரை) உன் மனாசத்திக்குள் விளங்குகின்ற பெரிய ஒளிமயமாகிய சின்மயப் பொருளே! பழைய பாக்கியமே! அற்பமாகிய மலத்திலுள்ள புழுவைப் போன்ற பாவியான் என்னுடைய கல்லைப்போன்ற மனத்தை உருக்கக் கடவாய். (எ-று) *(38)*

232. **கரையி லின்பக் கடலமு தேஇது**
வரையில் நானுனை வந்து கலந்திலேன்
உரையி லாஇன்பம் உள்ளவர் போலஇத்
தரையி லேநடித் தேனென்ன தன்மையே.

(பொ-ரை) கரையில்லாத சுகக்கடலில் உதயமாகும் அமிர்தமே! இதுகாறும் நான் உன்னை வந்து சேர்ந்திலேன். மௌனிகள் போல் இவ்வுலகத்தில் நடித்திருந்தேன். இது என்ன குணம்? (எ-று)

சிவாநுபவத்தில் உண்டாகுஞ் சுகத்திற் களவில்லையென்பார் 'கரையி லின்பக் கடலமுதே' யென்றார். *(39)*

233. **மையு லாம்விழி மாதர்கள் தோதகப்**
பொய்யி லாழும் புலையினிப் பூரைகாண்
கையி லாமல கக்கனி போன்றஎன்
ஐய னேஎனை ஆளுடை அண்ணலே.

(பொ-ரை) உள்ளங்கையில் நெல்லிக் கனிபோன்ற என் ஐயனே! என்னை அடிமையாக ஆட்கொண்ட தலைவனே! மை தீட்டிய கண்களை யுடைய பெண்களுடைய வஞ்சப்பொய் இன்பத்தில் அழுந்துகின்ற நீசத்தன்மை இனிப் போதும். (எ-று)

காண்= அசையிடைச் சொல். *(40)*

234. **அண்ண லேஉன் னடியவர் போலருட்**
கண்ணி னாலுனைக் காணவும் வாவெனப்
பண்ணி னாலென் பசுத்துவம் போய்உயும்
வண்ண மாக மானோலயம் வாய்க்குமே.

(பொ-ரை) தலைவனே! உன்னுடைய அடியவர்களை அழைத்தது போல், திருவருட் கண்ணினால் உன்னுடைய திருவோலக்கத்தைச் சேவிக்கவும் என்னை வா என்று அழைப்பையாயின் என்னுடைய சீவகரணம் போய் (சிவகரணம் பெற்றுப்) பிழைக்கும்படி மனவொடுக்கஞ் சித்திக்கும். (எ-று) *(41)*

235. வாய்க்குங் கைக்கும் மௌனம் மௌனமென்
றேய்க்குஞ் சொற்கொண் டிராப்பக லற்றிடா
நாய்க்கும் இன்பமுண் டோநல் லடியரைத்
தோய்க்கும் ஆனந்தத் தூவெளி வெள்ளமே.

(பொ-ரை) நல்ல அன்பர்களை மூழ்குவிக்கின்ற இன்பமாகிய நிர்மலமான ஆகாயத்தினின் றொழுகும் பிரவாகமே, வாய்க்குங் கைக்கும் மௌனம், மௌனம், என்று ஏமாற்றுஞ் சொல்லைக் கொண்டுண்மையின் இரவு பகல்களொழியாத நாயினேனுக்கும் சுகமுண்டோ? இல்லை (எ-று) *(42)*

236. தூய தான துரிய அறிவெனுந்
தாயும்நீ இன்பத் தந்தையும் நீஎன்றால்
சேயதாம் இந்தச் சீவத் திரளன்றோ
ஆயும் பேரொளி யான அகண்டமே.

(பொ-ரை) ஆராயப்படுகின்ற பரஞ்சோதியாகிய அகண்டவஸ்துவே! பரிசுத்தமான துரியஞானமென்கிற தாயும் நீ, சுகங் கொடுக்குந் தகப்பனும் நீ, என்று சொன்னால், இந்த உயிர்க் கூட்டங்கள் மக்களல்லவா? (எ-று) *(43)*

237. அகண்ட மென்ன அருமறை யாகமம்
புகன்ற நின்தன்மை போதத் தடங்குமோ
செகங்க ளெங்குந் திரிந்து நன் மோனத்தை
உகந்த பேருனை ஒன்றுவர் ஐயனே.

(பொ-ரை) அருமையாகிய வேதங்களும், ஆகமங்களும் அகண்டப் பொருளென்று சொல்லிய உன்னுடைய தன்மையானது தற்போதத்திற் குள்ளடங்குமோ? அடங்காது, (ஆகையால்) ஐயனே! உலகங்களிலெல்லாம் சஞ்சரித்து நல்ல மௌன ஞானத்தைப் பெற்றவர்கள் உன்னை யடைவார்கள். (எ-று) *(44)*

238. **ஐய னேஉனை யன்றி யொருதெய்வங்**
கையினால் தொழ வுங்கரு தேன்கண்டாய்
பொய்ய னாகிலும் பொய்யுரை யேன்சுத்த
மெய்ய னாம்உனக் கேவெளி யாகுமே.

(பொ-ரை) ஐயனே! உன்னைத் (தொழுவதே) யல்லாமல் வேறொரு தெய்வத்தைக் கைகளினாற் றொழுதற்கும் எண்ண மாட்டேன். அன்றி நான் பொய்யினேனானாலும் பொய் சொல்லேன். (இவையெல்லாம்) சுத்த மெய்யனாகிற உனக்கே தெரியும். (எ-று) (45)

239. **வெளியில் நின்ற வெளியாய் விளங்கிய**
ஒளியில் நின்ற ஒளியாம்உன் தன்னை நான்
தெளிவ தந்தகல் லாலடித் தேஎன்று
களிபொ ருந்தவன் றோகற்ற கல்வியே.

(பொ-ரை) அடியேன் கற்ற கல்விகள், ஆகாயத்திலிருந்த பரமாகாயமாய் விளங்கிய ஒளிக்குள் நிலைத்திருக்கின்ற தேஜோமயனாகிய உன்னை, எனக்கு நல்லறிவைக் கொடுத்த கல்லாலமரத்தின் கீழெழுந்தருளியிருந்த தெய்வமே! என்று சொல்லித் துதித்து நான் மகிழ்ச்சி யடைய வல்லவோ? (எ-று) (46)

240. **கல்லை யுற்ற கருத்தினர் கார்நிறத்**
தல்லை யொத்த குழலினர் ஆசையால்
எல்லை யற்ற மயல்கொள வோஎழில்
தில்லை யில்திக ழுந்திருப் பாதனே.

(பொ-ரை) அழகையுடைய தில்லையென்னும் நகரத்தில் விளங்கு கின்ற திருவடிகளை யுடையவனே! (நான் இவ்வுடல் எடுத்தது) கல்லைப் போன்ற மனத்தை யுடையவர்களும், கரிய கூந்தலை யுடையவர்களுமாகிய பெண்களது ஆசையினால் அளவில்லாத மயக்கங் கொண்டு சாதற்காகவோ? (எ-று) (47)

241. **திருவ ருள்தெய்வச் செல்வி மலைமகள்**
உருவி ருக்கின்ற மேனி யொருபரங்
குருவை முக்கணெங் கோவைப் பணிநெஞ்சே
கருவி ருக்கின்ற கன்மம்இங் கில்லையே.

(பொ-ரை) மனமே! திருவருட் செல்வத்தையுடையவளும், மலையரசன் மகளுமாகிய பார்வதி தேவியை இடதுபாகத்தில் வைத்திருக்கின்ற ஒப்பற்ற பரமகுருவை, மூன்று கண்களை யுடைய எமது தலைவனை, வணங்கு வாய், (அங்ஙனம் வணங்குவையாயின்) ஜனனத்திற்கேதுவாகிய வினைகள் இவ்வுலகத்தில் நமக்கு உண்டாவதில்லை.(எ-று) (48)

242. **கன்ம மேது கடுநர கேதுமேல்**
சென்ம மேதெனைத் தீண்டக் கடவதோ
என்ம னோரதம் எய்தும் படிக்கருள்
நன்மை கூர்முக்கண் நாதன் இருக்கவே.

(பொ-ரை) என்னுடைய மனவெண்ணங்களை யெல்லாம் நான் அடையும்படி கிருபை செய்கின்ற நன்மை மிகுந்த மூன்று கண்களையுடைய தலைவன் எனக்குள் ளிருக்க, தீவினையேது? கொடிய நரகம் ஏது? பின்வரும் பிறவி ஏது? (இவைகளிலொன் றாயினும்) என்னைத் தொடரக் கடவதோ? (எ-று) (49)

243. **நாத கீதன்என் நாதன்முக் கட்பிரான்**
வேத வேதியன் வெள்விடை யூர்திமெய்ப்
போத மாய்நின்ற புண்ணியன் பூந்திருப்
பாத மேகதி மற்றிலை பாழ்நெஞ்சே.

(பொ-ரை) பாழ் மனமே! நாத கீதங்களை உடைய வனும் என்னுடைய தலைவனும் மூன்று கண்களையுடைய பெருமானும் வேதத்தை யோதினமையால் வேதியன் என்னுந் திருநாமமுள்ளவனும் வெள்ளிய இடபவாகனத்தை யுடைய வனும் உண்மை யறிவாநந்தமாய் நின்ற புண்ணியனுமான (சிவபெருமானது) தாமரை மலர்போன்ற திருவடிகளே நமக்கு அடைக்கல ஸ்தானமாகும். வேறு ஸ்தானமில்லை. (எ-று) (50)

244. **மற்று னக்கு மயக்கமென் வன்னெஞ்சே**
கற்றை வார்சடைக் கண்ணுத லோன்அருள்
பெற்ற பேரவ ரேபெரி யோர்எலாம்
முற்று மோர்ந்தவர் மூதுரை யர்த்தமே.

(பொ-ரை) வலிய மனமே! உனக்கின்னமும் மயக்கமேன்? கற்றை யாகிய நீண்ட சடாமுடியையுடைய நெற்றிக் கண்ணனது திருவருளைப் பெற்ற பேர்களே

பெரியோர்கள். (அன்றி) அவர்களே வேதப் பொருள்களை யெல்லாமும் உணர்ந்தவர். (எ-று)

ஆகையால் அவர்களை உறுதியாய்ப்பிடி என்பது குறிப்பு. (51)

245. **உரையி றந்துளத் துள்ள விகாரமாந்**
திரைக டந்தவர் தேடுமுக் கட்பிரான்
பரைநி றைந்த பரப்பெங்ஙன் அங்ஙனே
கரைக டந்தின்ப மாகக் கலப்பனே.

(பொ-ரை) சொல்லற்று மனத்திலுள்ள மாறுபாடான மறைப்பைக் கடந்தவர்களால் ஆராயப்படுகின்ற முக்கட்பிரானது திருவருட்சத்தி நிறைந்துள்ள இடம் எங்கு? அவ்விடத்து அளவற்ற இன்பவடிவாகக் கலப்பேன். (எ-று) (52)

246. **கலந்த முத்தி கருதினுங் கேட்பினும்**
நிலங்க ளாதியும் நின்றெமைப் போலவே
அலந்து போயினம் என்னும் அருமறை
மலர்ந்த வாய்முக்கண் மாணிக்கச் சோதியே.

(பொ-ரை) அருமையான வேதங்களைத் திருவாய் மலர்ந்தருளிய மூன்று கண்களையுடைய மாணிக்கச் சுடரே! உன்னோடறக் கலந்த முத்தி நிலையை நினைத்தாலும், கேட்டாலும், பிருதிவி முதலிய தத்துவங்கள் யாவும் எம்மைப் போலவே மயங்கி நின்று வருத்தப்பட்டுப் போனோம் என்று சொல்லும். (எ-று) (53)

247. **சோதி யாதெனைத் தொண்டருட் கூட்டியே**
போதி யாதெல் லாமெளப் போதிக்க
ஆதி காலத்தி லுன்னடிக் காந்தவம்
ஏது நான்முயன் றேன்முக்கண் எந்தையே.

(பொ-ரை) மூன்று கண்களையுடைய எமது தந்தையே! என்னைச் சோதனை செய்யாமல் உன்னடியார்களோடு சேர்த்து உபதேசிக்கக்கூடாத எல்லாப் பொருள்களையும் மெல்ல உபதேசித்தற் பொருட்டு, பூர்வகாலத்தில் உன் திருவடிக்குரித்தான தவம் யாது செய்தேன். (எ-று) (54)

248. **எந்த நாளைக்கும் ஈன்றருள் தாயென**
வந்த சீரருள் வாழ்கஎன் றுன்னுவேன்

சிந்தை நோக்கந் தெரிந்து குறிப்பெலாம்
தந்து காக்குந் தயாமுக்கண் ஆதியே.

(பொ-ரை) அன்பர்களது மனோவெண்ணங்களை உணர்ந்து அவர்களால் எண்ணப்பட்டவைகளை யெல்லாம் கொடுத்துக் காப்பாற்றுகின்ற கிருபையையுடைய மூன்று கண்களையுடைய முதல்வனே! எக்காலத்திலும் பெற்ற தாயைப்போல் வந்து என்னைக் காப்பாற்றியருளிய சிறந்த திருவருளானது வாழக்கடவது! என்று பிரார்த்திப்பேன். (எ-று) (55)

249. **கண்ண கன்றஇக் காசினி யூடெங்கும்**
பெண்ணொ டாண்முத லாமென் பிறவியை
எண்ண வோவரி தேழை கதிபெறும்
வண்ண முக்கண் மணிவந்து காக்குமே

(பொ-ரை) பெரிய இவ்வுலகமெங்கும் பெண்பால் ஆண்பால் முதலாகப் பிறந்த என்னுடைய பிறவிகளை அளவிட்டுச் சொல்ல அருமையாகும். ஆனாலும், எளியேனாகிய நான் மோட்சமடையுமாறு மூன்று கண்களை யுடைய மாணிக்கம் வந்து காத்தருளும். (எ-று)

இறைவன் கருணையுடையோனாதலால் 'முக்கண்மணி வந்து காக்கும்' என்றார். (56)

250. **காக்கு நின்னருட் காட்சியல் லாலொரு**
போக்கு மில்லையென் புந்திக் கிலேசத்தை
நீக்கி யாளுகை நின்பரம் அன்பினர்
ஆக்க மேமுக்கண் ஆனந்த மூர்த்தியே.

(பொ-ரை) அன்பர்களது செல்வமே! திரிநேத்திரங் களையுடைய சுகரூபனே! (யாவரையும்) காப்பதற்கேயுள்ள உனது திருவருள் தரி சனத்தையே யல்லாமல் வேறொரு அடைக்கலத்தான மில்லை. (ஆகையால்) என்னுடைய மனக்கிலேசத்தை நீக்கி ஆண்டருள்வது உன்னுடைய பாரமாகும். (எ-று)

எனக்குப் பற்றுக்கோடாயுள்ளவன் நீயேயாகையால் என்னை ஆட்கொள்ளுவதும் உனது உடைமையேயென்பார், 'காக்கும் நின்னருட் காட்சியல்லாலொரு போக்குமில்லை

யென் புந்திக்கிலேசத்தை, நீக்கியாளுகை நின்பரம்' எனக் கூறினார். (57)

251. **ஆனந் தங்கதி என்னவென் னானந்த**
மோனஞ் சொன்ன முறைபெற முக்கணெங்
கோனிங் கீந்த குறிப்பதனால்வெறுத்
தீனன் செய்கை திருவருட் செய்கையே.

(பொ-ரை) சுகமே அடைக்கலத்தான மென்றறியவும், எனக்கு சுகரூபமான மௌன நிலையை உபதேசித்த முறையைப் பெறவும், திரிநேத்திரதாரியாகிய எம்மிறைவன் இவ்விடத்தில் அருளிச் செய்த குறிப்பினால், மிக எளியேனாகிய என்னுடைய செய்கை (யாவும்) திருவருட் செய்கையேயாம். (எ-று)

எனக்கென ஒரு செய்கையில்லை, யாவும் திருவருட் செய்கையே என்பது கருத்து. (58)

252. **கையி னால்தொழு தேத்திக் கசிந்துளம்**
மெய்யி னாலுனைக் காண விரும்பினேன்
ஐய னேஅர சேஅரு ளேயருள்
தைய லோர்புறம் வாழ்சக நாதனே.

(பொ-ரை) ஐயனே! அரசனே! தயவுடையோனே! திருவருட்சத்தியாகிய உமாதேவியானவள் வாழ்கின்ற வாமபாகத்தினையுடைய உலகநாதனே! கைகளால் அஞ்சலி செய்து வாயால் துதித்து, மனங்கரைந்து, உண்மையன் போடு உன்னைத் தரிசிக்க விரும்பினேன். (எ-று)

(அங்ஙனம் விரும்பிய எனக்குத் தரிசனந் தந்தருள்வாய்) என்பது குறிப்பு. (59)

253. **சகத்தின் வாழ்வைச் சதமென எண்ணியே**
மிகுத்த தீமை விளைய விளைக்கின்றேன்
அகத்து ளாரமு தாமைய நின்முத்திச்
சுகத்தில் நான்வந்து தோய்வதெக் காலமோ.

(பொ-ரை) அன்பர் மனத்தில் அரிய அமிர்தம் போலினிக்கின்ற ஐயனே! நான் உலகவாழ்க்கையை மெய்யாக நினைந்து மிகுந்த தீமை களுண்டாகும்படி (அவைகளைச்) செய்கின்றேன் (ஆகையால்) உன்னுடைய

மோட்ச இன்ப சாகரத்தில் வந்து படிவது எந்தக்காலமோ அறியேன். (எ-று)

கொடுமைகளையே செய்து திரியும் எனக்கு மோட்சம் வருவ தெங்ஙனம் என்பது கருத்து. *(60)*

254. கால மூன்றுங் கடந்தொளி ராநின்ற
சீல மேநின் திருவரு ளாலிந்த்ர
சால மாமிச் சகமென எண்ணிநின்
கோல நாடுத லென்று கொடியனே.

(பொ-ரை) முக்காலங்களையுங் கடந்து விளங்குகின்ற குணமே! கொடியனாகிய நான் உன்னுடைய திருவருளினால், இவ்வுலகமானது இந்திரஜாலம் போல்வதென்று நினைத்து, (இவ்வாக்கையை நீக்கி) உன் திருக்கோலத்தை விரும்புவது எக்காலம்? (எ-று) *(61)*

255. கொடிய வெவ்வினைக் கூற்றைத் துரந்திடும்
அடிக ளாம்பொரு ளேநினக் கன்பின்றிப்
படியி லேழைமை பற்றுகின் றேன்வெறும்
மிடியி னேன்கதி மேவும் விதியின்றே.

(பொ-ரை) மிகவுங் கொடிய வினைப் பகுப்பை ஓட்டுகின்ற கடவுளே! உலகத்தில் மிகவும் வறியவனாகிய நான், உன்னிடத் தன்பில்லாமல் புல்லறிவையே பற்றி நிற்கின்றேன். (ஆகையால்) எனக்கு நற்கதியடையும் வழியில்லை. *(62)*

256. விதியை யும்விதித் தென்னை விதித்திட்ட
மதியை யும்விதித் தம்மதி மாயையில்
பதிய வைத்த பசுபதி நின்னருட்
கதியை எப்படிக் கண்டு களிப்பதே.

(பொ-ரை) பசுபதியென்னுந் திருநாமமுடையானே! விதியை வகுத்தாய் (அவ்விதியைப் பெறுதற்காக) என்னையும் படைத்தாய் (எனக்குக் கண்ட பொருள்களில்) ஆசை வைக்கின்ற புத்தியையும் கொடுத்தாய், அப்புத்தியை மாயையில் அழுந்தவும் வைத்தாய். (ஆகையால்) உன்னுடைய திருவருட்கதியைத் தரிசித்து மகிழ்வது எப்படி? (எ-று)

நீயே யாவுஞ் செய்திருக்க நான் கண்டு மகிழ்வது எங்ஙனம் என்பதாம். *(63)*

**257. கண்ட கண்ணுக்குக் காட்டுங் கதிரெனப்
பண்டும் இன்றுமென் பால்நின் றுணர்த்திடும்
அண்ட னேயுனக் கோர்பதி னாயிரம்
தெண்டன் என்பொய்ம்மை தீர்த்திடல் வேண்டுமே.**

(பொ-ரை) பார்த்தற்குக் கருவியாயமைந்துள்ள கண்களுக்கு (ஒளி கொடுத்துப்) பதார்த்தங்களை விளக்குகின்ற சூரியன் போல் பூர்வத்திலும், இப்பொழுதும், என்னிடத்திலிருந்து நன்மை தீமைகளை அறிவிக்கின்ற கடவுளே! உனக்குப் பதினாயிரம் நமஸ்காரஞ் செய்கிறேன். என்னுடைய பொய்யொழுக்கத்தை மாத்திரம் நீக்கியருளல் வேண்டும். (எ-று)

சூரியனொளி கண்களிற் கலந்துள்ளவாறு போல் இறைவனும் என்னிற் கலந்துள்ளானென்பார், 'கண்ட கண்ணுக்குக் காட்டுங்கதிரெனப் பண்டுமின்றுமென்பானின் றுணர்த்திடும் அண்டனே' என்றார். இதனை,

**" மலர்தலை யுலகின் மாயிரு டுமியப்
பலர்புகழ் ஞாயிறு படரி னல்லதைக்
காண்டல் செல்லாக் கண்போ லீண்டிய
பெரும்பெயர்க் கடவுளிற் கண்டுகண் ணிருடீர்ந்
தருந்துயர்க் குரம்பையி னான்மா நாடி
மயர்வற நந்தி முனிகணத் தளித்த
வுயர்சிவ ஞான போத முரைத்தோன்
பெண்ணைப் புனல்சூழ் வெண்ணெய்ச் சுவேதவனன்
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவன்
பவநனி வன்பகை கடந்த
தவரடி புனைந்த தலைமை யோனே"**

என்பதினானறிக. *(64)*

**258. வேண்டும் யாவும் இறந்து வெளியிடைத்
தூண்டு வாரற்ற சோதிப் பிரான் நின்பால்
பூண்ட அன்பர்தம் பொற்பணி வாய்க்குமேல்
ஈண்டு சன்மம் எடுப்பன் அனந்தமே.**

(பொ-ரை) விரும்பப்படுகின்ற எல்லாப் பொருள்களையுங் கடந்து, பரமாகாயத்தில் தூண்டுவாரை யொழிந்த தேஜோ மயமான பெருமானே! உன்னிடத்தில்

அன்புவைத்துள்ள அடியார்கள் திருப்பணி எனக்குக் கிடைப்ப தானால், நெருங்கிய அநேக சன்மங்களெடுப்பேன். (எ-று)

உலகத்தில் பிறப்பதற்கஞ்சுவேனாயினும் உன்னடியார் பணிகிடைக்கு மானால் அஞ்சேன் என்பதாம். (65)

259. எடுத்த தேகம் இறக்குமு னேஎனைக்
கொடுத்து நின்னையுங் கூடவுங் காண்பனோ
அடுத்த பேரறி வாயறி யாமையைக்
கெடுத்த இன்பக் கிளர்மணிக் குன்றமே.

(பொ-ரை) உன்னை யடுத்தவர்களுடைய அறிவுருவா யிருந்து அவர்களது அஞ்ஞானத்தை யழித்த சுகத்தையுடைய விளங்குகின்ற மாணிக்கமலையே! எடுத்த உடம்பு அழிவதன் முன்னே என்னை உனக்காட்படுத்தி உன்னைக் கூடவும் பெறுவனோ. (எ-று) (66)

260. குன்றி டாத கொழுஞ்சுட ரேமணி
மன்று ளாடிய மாணிக்க மேயுனை
அன்றி யார்துணை யாருற வார்கதி
என்று நீயெனக் கின்னருள் செய்வதே.

(பொ-ரை) அழியாத, செழுஞ்சுடரே! ரத்னசபையில் நடனஞ் செய்கின்ற மாணிக்கமே! உன்னையல்லாமல் எனக்குத் துணையாவார் யாவர்! உறவாவார் யாவர்? அடைக்கலத்தானமாவார் யாவர்? (ஒருவருமில்லை) ஆகையால், நீ எனக்கு அருள் செய்வது எக்காலம்? (எ-று)

நீயே துணையல்லாமல் வேறு துணையில்லை யென்பது கருத்து. (67)

261. அருளெ லாந்திரண் டோர்வடி வாகிய
பொருளே லாம்வல்ல பொற்பொது நாதஎன்
மருளெ லாங்கெடுத் தேயுளம் மன்னலால்
இருளெ லாம்இரிந் தெங்கொளித் திட்டதே.

(பொ-ரை) அருளே திருமேனியாகக் கொண்டிருக்கிற எப்பொருள் களையும் படைத்தளித் தழிக்கவல்ல பொற்சபைக்குத் தலைவனே! என்னுடைய மயக்கம் யாவுங் கெடும் படிசெய்து என்னுள்ளத்தின் கண்ணே நீ தங்கியிருத்தலால், அஞ்ஞான இருள் முழுதும் எவ்விடத்தில் ஓடி மறைந்து விட்டது. (எ-று)

ஒளிக்கு முன் இருள் நில்லாவாறு போல உனக்கு முன் அஞ்ஞானம் நிற்கவில்லை யென்பார், 'மருளெலாங் கெடுத்தே யுளமன்னலால், இரு ளெலாமிரிந்தெங் கொளித் திட்டதே' என்றார். (68)

262. எங்கு மென்னை இகலுற வாட்டியே
பங்கஞ் செய்த பழவினை பற்றற்றால்
அங்க ணாவுன் னடியிணை யன்றியே
தங்க வேறிட முண்டோ சகத்திலே.

(பொ-ரை) அழகிய நெற்றிக் கண்ணை யுடையவனே! என்னை எவ்விடத்தும் பகையால் வாடச் செய்து பங்கப் படுத்தின பழவினையானது பற்றற்றுப் போமாயின், உன்னு டைய திருவடிகளேயன்றி இவ்வுலகத்தில் நான் சென்று தங்கியிருக்க வேறு இடமுண்டோ? இல்லை. (எ-று) (69)

263. உண்ட வர்க்கன்றி உட்பசி ஓயுமோ
கண்ட வர்க்கன்றிக் காத லடங்குமோ
தொண்ட ருக்கெளி யானென்று தோன்றுவான்
வண்ட மிழ்க்கிசை வாக மதிக்கவே.

(பொ-ரை) உண்டவர்களுக் கல்லாமல் (மற்றவர் களுக்கு) வயிற்றிற் பசி யடங்குமோ? தரிசித்தார்க் கெல்லாமல் (மற்றவர்களுக்கு) ஆசை யடங்குமோ? அடங்காது. (ஆகையால்) வண்மையாகிய என்னுடைய தமிழ்ப் பாடலைப் பொருந்திய தாய் மதிக்கும் பொருட்டு அடியார்க்கெளியனாகிய சிவபிரான் எப்பொழுது வெளிப்படுவான்? (எ-று) (70)

264. மதியுங் கங்கையுங் கொன்றையும் மத்தமும்
பொதியுஞ் சென்னிப் புனிதநின் பொன்னடிக்
கதியை விட்டிந்தக் காமத்தி லாழ்ந்தஎன்
விதியை எண்ணி விழிதுயி லாதன்றே.

(பொ-ரை) சந்திரனையும், கங்கா நதியையும், கொன்றை மலர் மாலையையும், ஊமத்தை மலர் மாலையையும், தரித்த சடாபாரத்தை யுடைய நிர்மலனே! உன்னுடைய திருவடிகளாகிய அடைக்கலத்தானத்தை விட்டு, இந்தக் காமக்கடலிலமுந்திய என்னுடைய விதியை நினைத்துக் கண்கள் நித்திரை செய்யா. ஆகையால் என்னுடைய கண்கள் உறங்கும் படி அருள்செய்ய வேண்டும் என்பது குறிப்பு. (எ-று) (71)

265. **அன்றெ னச்சொல ஆமென அற்புதம்**
நன்றெ னச்சொல நண்ணிய நன்மையை
ஒன்றெ னச்சொன ஒண்பொரு ளேயொளி
இன்றெ னக்கருள் வாய்இரு ளேகவே.

(பொ-ரை) அல்லவென்று சொல்லவும், ஆமென்று சொல்லவும், ஆச்சரியம்! நன்றென்று சொல்லவும், பொருந்தியிருந்த நன்மையான பொருளை, ஒரு பொருளேயென்று உபதேசித்தருளிய உயர்ந்த பொருளே! அஞ்ஞானவிருள் ஒழியும்படி இப்பொழுது எனக்கு ஞானதேஜஸை அருள் செய்வாய். (எ-று) *(72)*

266. **இருவ ரேபுகழ்ந் தேத்தற் கினியராம்**
ஒருவ ரேதுணை என்றுண ராய்நெஞ்சே
வருவ ரேகொடுங் காலர்கள் வந்தெதிர்
பொருவ ரேயவர்க் கென்கொல் புகல்வதே.

(பொ-ரை) மனமே! பிரமவிஷ்ணுக்களிருவரே புகழ்ந்து துதி செய்தற் கினியவராயிருந்த ஒப்பற்ற கடவுளே நமக்குத் துணையாவாரென்று நீ அறிந்திலாய். (ஆகையால்) கொடிய யமதூதர்கள் வந்து எதிரினின்று போர் செய்வரே, அவர்கட்குச் சொல்வது யாது? (எ-று)

மனமே நீ சிவபெருமானே! நமக்குத் துணையென்ற றிந்திலயாகை யால் யமதூதர்களுக்கென்ன சொல்வாய்? என்பது கருத்து.

இஃது நெஞ்சோடு கிளத்தல் *(73)*

267. **புகழுங் கல்வியும் போதமும் பொய்யிலா**
அகமும் வாய்மையும் அன்பும் அளித்தவே
சுகவி லாசத் துணைப்பொருள் தோற்றமாங்
ககன மேனியைக் கண்டன கண்களே.

(பொ-ரை) சுகத்தைத் தருகின்ற திருவிளையாட்டை யுடைய உயிர்க்குத் துணைப்பொருளாகிய இறைவனது காட்சிக்குரிய செவ்வானம் போன்ற திருமேனியைக் கண்டனவாகிய கண்கள், கீர்த்தியையும், கல்வியையும், அறிவையும், உண்மையான மனத்தையும் சத்தியத்தையும், அன்பையுங் கொடுத்தன. (எ-று) *(74)*

268. **கண்ணுள் நின்ற ஒளியைக் கருத்தினை**
விண்ணுள் நின்று விளங்கிய மெய்யினை

எண்ணி எண்ணி இரவும் பகலுமே
நண்ணு கின்றவர் நான்றொழுந் தெய்வமே.

(பொ-ரை) கண்ணில் நின்ற ஒளியை, என் எண்ண மாயிருப்பதை, பரமாகாயத்தில் நின்று விளங்கிய உண்மைப் பொருளை, பலகாலும் நினைத்து, அகோராத்திரம் இடையறாமல் அடைந்திருப்பவர், நான் வணங்கும்படியான தெய்வமாவார். (எ-று)

நான் அடியார்க்கடியேன் என்பது கருத்து. (75)

269. **தெய்வம் வேறுள வென்பவர் சிந்தனை**
நைவ ரென்பதும் நற்பர தற்பர
சைவ சிற்சிவ னேயுனைச் சார்ந்தவர்
உய்வ ரென்பதும் யானுணர்ந் தேனுற்றே.

(பொ-ரை) சிறந்த பரமனே! தற்பரனே! ஞானத்தைக் கொடுக்கும் மங்களகரனே! (உன்னையன்றி) வேறு தெய்வம் உண்டென்று சொல்பவர் மனம் வருந்துவர் என்பதையும், உன்னை யடைந்தவர் உஜ்ஜீவிப்பர் என்பதையும் நான் ஆராய்ந்து உணர்ந்தேன். (எ-று) (76)

270. **உற்ற வேளைக் குறுதுணை யாயிந்தச்**
சுற்ற மோநமைக் காக்குஞ்சொ லாய்நெஞ்சே
கற்றை வார்சடைக் கண்ணுதல் பாதமே
பற்ற தாயிற் பரசுகம் பற்றுமே.

(பொ-ரை) மனமே! ஒரு துன்பம் வந்த காலத்தில் இந்த உறவினரோ துணையாகி நம்மைக் காப்பாற்றுவர் (அன்று, ஆகையால்) கற்றையாகி நீண்ட சடாபாரத்தையும் மூன்று கண்களையுமுடைய சிவபெருமானது திருவடிகளையே பற்றுக் கோடாகக் கொண்டால் மேலான சுகமானது நம்மைப் பற்றும். (எ-று) சுற்றத்தாரை நம்பி இறைவனை மறவாதை என்பதாம். (77)

271. **பற்ற லாம்பொரு ளேபரம் பற்றினால்**
உற்ற மாதவர்க் குண்மையை நல்குமே
மற்றும் வேறுள மார்க்கமே லாமெடுத்
தெற்று வாய்மன மேகதி எய்தவே

(பொ-ரை) ஓ மனமே! மோட்சம் அடைதற் பொருட்டுத் தொடரக்கூடிய பொருள் பரம்பொருளேயாம். அப்

பொருளைப் பற்றினால் அது மிகுதியும் தபோமகிமையைப் பெற்ற பெரியோர்களுக்கும் உண்மையாகிய மோட்சத்தைக் கொடுக்கும். (நீயும் அதை அடைய வேண்டுவையாயின்) மற்றுமுள்ள பொய்ம் மார்க்கங்களையெல்லாம் எடுத்தெறியக் கடவை. (எ-று)

சிவனைப் பற்றுதலே மோட்சத்திற்குக் காரணமா யிருக்க மற்றவழியிற் செல்வதிற் பயனின்றென்பதாம். (78)

ஆரணம்

(இதுவுமது)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

272. ஆரண மார்க்கத் தாகம வாசி
அற்புத மாய்நடந் தருளுங்
காரண முணர்த்துங் கையும்நின் மெய்யுங்
கண்கள் மூன்றுடையஎன் கண்ணே
பூரண அறிவிற் கண்டிலம் அதனாற்
போற்றிஇப் புந்தியோ டிருந்து
தாரணி யுள்ள மட்டுமே வணங்கத்
தமியனேன் வேண்டிடத் தகுமே.

(பொ-ரை) திரிநேத்திரங்களையுடைய எனது கண்மணியே! வேத மென்கிற வீதியில் ஆகமமென்கிற குதிரையானது விநோதமாய் நடக்கின்ற காரணத்தை உணர்த்துகின்ற உன்னுடைய கையையும், மெய்யையும், முற்றுணர்விற் கண்டோமல்லோம். ஆதலால் உலகமுள் ளளவும் இந்த சிந்தையோடிருந்து உன்னை வாயினாற் றுதித்து, மெய்யினால் வணங்கும் படி அடியேன் வேண்டத் தகும். (எ-று)

காரணமுணர்த்துங்கை=சின்முத்திரோபதேசஞ் செய்யுங் கை மெய்=திருவருட்டேகம்.

இவற்றைத் தற்போதமொழிந்து சிவபோதமேலிட்டுச் சிவத்தோடொன்றாம் முற்றுணர்விற் காணக்கூடாமையால், 'காரணமுணர்த்துங் கையு நின்மெய்யும் பூரணவறிவிற் கண்டிலம்' எனவும் இறைவனைச் சகளரூபமாகவே கண்டு தரிசிக்க விருப்பமுடையராகலான், 'போற்றியிப் புந்தியோ டிருந்து தாரணியுள்ளமட்டுமே வணங்கத் தமியனேன் வேண்டிடத் தகுமே' எனவுங் கூறினார்.

ஆரணமார்க்கத் தாகமவாசி என்பது வேதநெறியின் கண்ணே ஆகமம் உண்டென்பதை, ஆயினும் வேதம் பொதுநூலாகவும் ஆகமம் சிறப்பு நூலாகவும் உண்மையால், தமக்கு ஆகமமே சிறந்த பிரமாணமாகும் என்பதை விளக்க, 'ஆரணமார்க்கத்தாகமவாசி' எனவும், இவ்வேதாகம மாறுபாட்டை விளக்கற் பொருட்டே இறைவன் சின்முத்திரைக் கையையும் திருவருட்டேகத்தையும் கொண்டானென்பார், 'காரணமுணர்த்துங் கையுநின் மெய்யும்' எனவுங் கூறினார்.

ஆரணம்-வேதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், ஆகமம், 28 அவை:- காமிகம், யோகசம், சித்தியம், காரணம், அசிதம், தீபதம், சூக்குமம், சகத்திரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிசுவாசம், சுவாயம்புயம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தாநசர்வோத்தம், பாரமேச்சுரம், கிரணம், பேதம், வாதுளம் என்பன. (1)

273. இடமொரு மடவாள் உலகன்னைக் கீந்திட்
டெவ்வுல கத்தையு மீன்றுந்
தடமுறும் அகில மடங்குநா ளம்மை
தன்னையு மொழித்துவிண் ணெனவே
படருறு சோதிக் கருணையங் கடலே
பாயிருட் படுகரிற் கிடக்கக்
கடவனோ நினைப்பும் மறப்பெனுந் திரையை
கவர்ந்தெனை வளர்ப்பதுன் கடனே.

(பொ-ரை) வாமபாகத்தை உமாதேவிக்குக் கொடுத்து எவ்வுலகத்தையும் படைத்தும், அவ்வுலகமானது அழியுநாளில், உமாதேவியையும் ஒடுக்கிக் கொண்டு ஆகாயம்போல நின்ற படர்ந்த தேஜோமயமான கருணைக் கடலே! படர்ந்த அஞ்ஞானமாகிய இருட்டுக்குழியில் விழுந்து வருந்தக்கடனோ? நினைப்பு மறப்பு என்னும் அலைகளை அடக்கிக் கொண்டு என்னைக் காப்பாற்றுதல் உனது கடன்மையாம். (எ-று)

சர்வசங்கார காலத்தில் தன் சத்தியையுந் தன்னிடத்தில் அடக்கிக் கொண்டு மீட்டும் தன் சத்தியால் படைக்க வல்லவனாதலால், 'அகிலமடங்கு நாளம்மை தன்னையுமொழித்து விண்ணெனவே படருறு சோதிக்

கருணையங் கடலே' என்றார். இக்கருத்தை நோக்கியே நமது குமரகுருபர சுவாமிகளும்,

"சுற்றுநெடு நேமிச் சுவர்க்கிசைய வெட்டுச்
சுவர்க்கா னிறுத்தி மேருத்
தூணொன்று நடுநட்டு வெளிமுகடு மூடியிரு
சுடர்விளக் கிட்டு முற்ற
எற்றுபுன லிற்கழுவு புவனப் பழங்கல
மெடுத்தடுக் கிப்புதுக்கூ
ழின்னமுத முஞ்சமைத் தன்னைநீ பன்முறை
யிழைத்திட வழித்தழித் தோர்
முற்றவெளி யிற்றிரியு மத்தப் பெரும்பித்தன்
முன்னின்று தொந்த மிடவு
முனியாது வைகலு மெடுத்தடுக் கிப்பெரிய
மூதண்ட கூட மூடுஞ்
சிற்றில்விளை யாடுமொரு பச்சிளம் பெண்பிள்ளை
செங்கீரை யாடி யருளே
தென்னற்கு மம்பொன்மலை மன்னற்கு மொருசெல்வி
செங்கீரை யாடி யருளே"

என்றார். (2)

274. வளம்பெறு ஞான வாரிவாய் மடுத்து
மண்ணையும் விண்ணையுந் தெரியா
தளம்பெறுந் துரும்பொத் தாவியோ டாக்கை
ஆனந்த மாகவே யலந்தேன்
களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணாக்
காட்சியே சாட்சியே அறிஞர்
உளம்பெறுந் துணையே பொதுவினில் நடிக்கும்
உண்மையே உள்ளவா றிதுவே.

(பொ-ரை) கள்ளத் தன்மையைப் பெற்ற வஞ்சமனத்தினரால் அறியப்படாக்காட்சியே! சாட்சியே! ஞானிகள் தமது உள்ளத்தில் கிடைக்கப்பெற்ற என்னுயிர்த்துணையே! அம்பலத்தில் நடனஞ் செய்கின்ற மெய்ப்பொருளே! வளப்பம் பொருந்திய ஞானவெள்ளத்தை வாய்நிறைய உண்டு, உயிரும், உடம்பும் சுகரூபமாதற் பொருட்டு பூமியையும், ஆகாயத்தையும் அறியாமல் கடலிற் பட்ட துரும்பையொத்து வருந்தினேன். (நான் வருந்தினமைக்குக் காரணம்) உள்ளபடி இதுவேயாகும். (எ-று)

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க ளஞ்சு மகத்தே நகும்" எனத் தெய்வப்புலவர் கூறியவாறே வஞ்சமனத்தரா லறியப்படாமையாற் களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணாக் காட்சியே' எனவும், யாவர்க்குஞ், சாட்சி பூதனாயிருந்து அறிவித்தலான், 'சாட்சியே' எனவும், ஞானிகள் உள்ளத்தையே தான் வாழிடமாகக் கொண்டிருத்தலான், 'அறிஞர் - உளம்பெறுந் துணையே' எனவும், சிதாகாயத்தில் நடிப்போனென்பார், 'பொது வினினடிக்கு முண்மையே' எனவுங் கூறினார். (3)

275. உள்ளமே நீங்கா என்னைவா வாவென்
றுலப்பிலா ஆனந்த மான
வெள்ளமே பொழியுங் கருணைவான் முகிலே
வெப்பிலாத் தண்ணருள் விளக்கே
கள்ளமே துரக்குந் தூவெளிப் பரப்பே
கருவெனக் கிடந்தபாழ் மாயப்
பள்ளமே வீழா தெனைக்கரை யேற்றிப்
பாவிப்ப துன்னருட் பரமே.

(பொ-ரை) என்னுடைய மனமே! உன்னை விட்டுப் பிரியாத என்னை வருவாய், வருவாயென்றழைத்த கெடுத லில்லாத இன்ப வெள்ளமே! கருணை மழையைப் பொழிகின்ற உயர்ந்த மேகமே! சூடில்லாத தண்ணிய அருள் விளக்கே! வஞ்சனையைத் துரத்துகின்ற பரிசுத்தமாகிய பரந்த வெளியே! ஜன்மத்திற் கேதுவாகிய பாழ்த்த மாயைக் கடலில் விழுந்து அழியாமல் என்னை மோட்சமென்கிற கரையில் ஏறவிடுத்துக் காப்பாற்றுவது உனது திருவருட் பாரமாகும். (எ-று)

இறைவன் மனத்தின் கணிருந்து காரியஞ் செய்யுங்கால் மனமாகவே காண்டலின், 'உள்ளமே' எனவும், சிவா நுபவச் செல்வர்க்குக் கருணையைத் தருவானென்பார். 'ஆனந்தமான வெள்ளமே, பொழியுங் கருணை வான்முகிலே' எனவும், அங்ஙனம் அவர்களுக்குச் சோதியாய் வெளிப்படுவோ னென்பார். 'வெப்பிலாத் தண்ணருள் விளக்கே கள்ளமே துரக்குந் தூவெளிப்பரப்பே' எனவுங் கூறினார். (4)

276. பரம்பர மாகிப் பக்குவம் பழுத்த
பழவடி யார்க்கருள் பழுத்துச்
சுரந்தினி திரங்குந் தானகற் பகமே
சோதியே தொண்டனேன் நின்னை

இரந்துநெஞ் சுடைந்து கண்துயில் பெறாம
விருந்ததும் என்கணில் இருட்டைக்
கரந்துநின் கண்ணால் துயில்பெறல் வேண்டிக்
கருதினேன் கருத்திது தானே.

(பொ-ரை) மேன்மையாகிப் பரிபக்குவத்தை அடைந்த பழைய அடியார்களுக்கு அருளே (கனியாகப்) பழுத்து ஆனந்தமே (தேனாகச்) சுரந்து இனிமையா யிறங்குனிற் கற்பகத் தருவே! ஒளியே! அடியேனாகிய நான், உன்னைப் பிரார்த்தித்து மனமிளகி நித்திரை செய்யாமலிருந்தும், என் கண்ணிலிருக்கும் இருட்டை மறைத்து உன்னுடைய (திருவருட்) கண்ணால் நித்திரை செய்தலை விரும்பியேயாம். (இங்ஙனம்) எண்ணிய என் கருத்திதுவேயாகும். (எ-று) (5)

277. கருத்தினுட் கருத்தாய் இருந்துநீ உணர்த்துங்
காரணங் கண்டுசும் மாதான்
வருத்தமற் றிருந்து சுகம்பெறா வண்ணம்
வருந்தினேன் மதியின்மை தீர்ப்பார்
ஒருத்தரார் உளப்பா டுணர்பவர் யாவர்
உலகவர் பன்னெறி எனக்குப்
பொருத்தமோ சொல்வாய் மௌனசற் குருவே
போற்றிநின் பொன்னடிப் போதே.

(பொ-ரை) மௌனகுருவே! அறிவுக் கறிவாயிருந்து நீ அறிவிக்கின்ற காரணத்தைக் கண்டு வருத்தமில்லாமலிருந்து சுகத்தைப் பெறாத விதமாக வருத்தினேன். (ஆகையால்) என்னுடைய அறிவின்மையைத் தீர்த்து (அறிவைக் கொடுப்பாய்) (ஏனெனில்) ஒப்பற்றவர் யார்? உன் சித்தத்தை அறிபவர் யார்? உலகத்தாருடைய பலவழிகளும் எனக்குப் பொருத்த முடையனவோ? இல்லை ஆகலான் உன்னுடைய திருவடித்தாமரை களுக்கே நமஸ்காரம். (எ-று) (6)

278. அடியெனும் அதுவும் அருளெனும் அதுவும்
அறிந்திடின் நிர்க்குண நிறைவும்
முடியெனும் அதுவும் பொருளெனும் அதுவும்
மொழிந்திடிற் சுகமன மாயைக்
குடிகெட வேண்டிற் பணியற நிற்றல்
குணமெனப் புன்னகை காட்டிப்
படிமிசை மௌனி யாகிநீ யாளப்
பாக்கியம் என் செய்தேன் பரனே.

(பொ-ரை) இறைவனே! ஆதியென்று சொல்லப்படுகிற அந்தப் பொருளும், அருளென்று சொல்லப்படுகிற அந்தப் பொருளும், அறியுமிடத்து நிர்க்குணப் பொருளின் நிறைவும், அந்தமென்று சொல்லப்படுகிற அந்தப் பொருளும், பரம்பொருள் என்று சொல்லப்படுகிற அந்தப்பொருளும், சொல்லுமிடத்துச் சுகமுண்டாதற் கேதுவாகும். மனமாயை யானது நீங்கிப் போக விரும்பினால் தொழிலற்று நிற்பதே குணமாகுமென்று உபதேசித்துப் புன்சிரிப்புச் செய்து உலகத்தின்மேல் மௌன குருவாகி எழுந்தருளி வந்து நீ ஆண்டடிமை கொள்ளப் பூர்வத்தில் என்ன பாக்கியஞ் செய்தேனோ? (எ-று) (7)

279. **என்செய லின்றி யாவுநின் செயலென்**
றெண்ணுவேன் ஒவ்வொரு காலம்
புன்செயல் மாயை மயக்கின்என் செயலாப்
பொருந்துவே னஃதொரு காலம்
பின் செயல் யாது நினைவின்றிக் கிடப்பேன்
பித்தனேன் நன்னிலை பெறநின்
தன்செயலாக முடித்திடல் வேண்டுஞ்
சச்சிதா னந்தசற் குருவே.

(பொ-ரை) சச்சிதானந்த ரூபியாகிய குருவே! என்னுடைய செயல் ஒன்றுமில்லாமல் யாவும் உன்னுடைய செயலாகு மென்று (மாயாமயக்கம் நீங்கி நின்ற) ஒவ்வொரு காலத்தில் நினைப்பேன். அதனையே மற்றொரு காலத்தில் மாயா மயக்கத்தால் என்னுடைய செயலாகக் கொண்டிருப்பேன். அதன்மேல் என் செயல், உன் செயல் என்பவை களைச் சிறிது நினைப்பதின்றி இருப்பேன், (இங்ஙனம் எண்ணுவதால்) பித்தனென்று சொல்லப்படுவேனாகிய நான் உயர்ந்த கதியை அடைய எல்லாம் உன் செயலாக ஆட்கொள்ள வேண்டும். (எ-று) (8)

280. **குருவுரு வாகி மௌனியாய் மௌனக்**
கொள்கையை உணர்த்தினை அதனால்
கருவுரு வாவ தெனக்கிலை இந்தக்
காயமோ பொய்யெனக் கண்ட
திருவுரு வாளர் அநுபவ நிலையுஞ்
சேருமோ ஆவலோ மெத்த
அருவுரு வாகி அல்லவாய்ச் சமயம்
அளவிடா ஆனந்த வடிவே.

(பொ-ரை) அருவாகி, உருவாகி, இவைகளல்லாததாகி, சமயநூல்களா லளந்து சொல்லக்கூடாத சுகவடிவே! குருவடி வாயெழுந்தருளி வந்து மௌனியாகியிருந்து மௌனநிலையை அறிவுறுத்தினாய். அவ்வபதேசத்தால் அடியேனுக்குச் சனனமில்லை (ஆயினும்) இந்த உடலோ நிலையல்ல வென்றறிந்த ஞானிகளது சிவாநுபவ நிலையும் எனக்குக் கிடைக்குமோ என்ற ஆசை மிகுதியாயிருக்கின்றது (எ-று) ஆகையால் அதையும் கைகூட்ட வேண்டும் என்பது குறிப்பு.

சமயநூல்கள் தர்க்கரூபமாயுள்ளவை யாகலான் அவைகளால் அளவிடப் படானென்பார். 'சமயமளவிடா வானந்த வடிவே' என்றார் இதனை,

"வாதமிடுஞ் சமயநெறிக் கரியதாகி
மௌனத்தோர் பால்வெளியாய் வயங்காநின்ற சோதியை"

என்று இவ்வாசிரியரே முன்னர் கூறியவாற்றா னறிக. (9)

281. வடிவிலா வடிவாய் மனநினை வணுகா
மார்க்கமாய் நீக்கருஞ் சுகமாய்
முடிவிலா வீட்டின் வாழ்க்கைவேண் டினர்க்குன்
மோனமல் லால்வழி யுண்டோ
படியிரு ளகலச் சின்மயம் பூத்த
பசுங்கொம்பை யடக்கியோர் கல்லால்
அடியிலே யிருந்த ஆனந்த அரசே
அன்பரைப் பருகும்ஆ ரமுதே.

(பொ-ரை) உலகத்தில் (உயிர்க்களுக்குள்ள) அஞ்ஞான விருளானது நீங்கும்படி ஞானத்தைப் பூத்த உமாதேவியைத் தன்னிடத் தடக்கிக் கொண்டு ஒப்பற்ற கல்லாலமரத்தின் கீழ் எழுந்தருளியிருந்த சுகத்தைத் தருகின்ற தலைவனே! அன்பர் களைப் பருகும் அரிய அமிர்தமே! உருவிலாவுருவாகி, மனமும், எண்ணமும் அணுகப் பெறாத மார்க்கமாகி, நீக்குதற்கரிய சுகமாய், நாசமில்லாத மோட்ச வாழ்க்கையை விரும்பினோர்க்கு, (அம்மோட்சத்தைச் சேரும்வழி) உன்னுடைய மௌன நிலையாகிய வழியன்றி வேறு வழியுண்டோ; இல்லை. (எ-று)

மோட்சத்தை அடைய மௌனஞானமன்றி வேறுவழியில்லை என்பதாம். (10)

சொல்லற்கரிய

(இதுவுமது)

282.சொல்லற் கரிய பரம்பொருளே சுகவா ரிதியே சுடர்க்கொழுந்தே
வெல்லற் கரிய மயலிலெனை விட்டெங் கொளித்தாய் ஆகெட்டேன்
கல்லிற் பசிய நாருரித்துக் கடுகிற் பெரிய கடலடைக்கும்
அல்லிற் கரிய அந்தகனார்க் காளாக் கினையோ அறியேனே.

(பொ-ரை)(இப்படிப்பட்டவனென்று) சொல்லுதற் கரிய பரம்பொருளே! இன்பசாகரமே! சோதிக் கொழுந்தே! வெல்லுதற்கரிதாகிய மயக்கத்தில் என்னைவிடுத்து எவ்விடத்தில் ஒளித்தனை. ஐயோ! கெட்டேன். கல்லினிடத்துப் பசுமையாகிய நாரையுரித்து, 'சிறிய' கடுகினிடத்தில் பெரியகடலையடைக்கும் வல்லவனான இரவினுங் கரிய நிறத்தையுடைய யமனுக்கு அடிமை யாக்கினையோ? அறிந்திலேன். (எ-று)

கல்லில் நாருரித்தலும், கடுகிற் கடலடைத்தலும் முடியா வேனும் சமர்த்தனென்பதை விளக்கக் கூறியவையாம். (1)

283.அறிவிற் கறிவு தாரகமென் றறிந்தே அறிவோ டறியாமை
நெறியிற் புகுதா தோர்படித்தாய் நின்ற நிலையுந் தெரியாது
குறியற் றகண்டா தீதமயக் கோதி லமுதே நினைக்குறுகிப்
பிறிவற் றிருக்க வேண்டாவோ பேயேற் கினிநீ பேசாயே.

(பொ-ரை) ஆன்மாவிற்குப் பரமான்மா ஆதார மென்றறிந்து அறிவறி யாமைகளாகிய மார்க்கத்திற் புகுதாமல் (எக்காலமும்) ஒரு தன்மைத்தாகி நின்ற நிலையையும் உணராமல் அடையாளமற்று அகண்டா தீதமயமான குற்றமற்ற அமிர்தமே! உன்னையடைந்து நீக்கமற்றிருக்க வேண்டாவோ? பேயையொப்பான், எனக்கும் இனியேனும் நீ சொல்லாய். (எ-று)

உன்னைப் பிரிவறக் கலந்து தற்போத நீங்குதற் பொருட்டே உலகத்தில் விடப்பட்ட, நான் அங்ஙனம் கலக்க வேண்டாவோ? என்பதாம். (2)

284.பேசா அநுபூ தியைஅடியேன் பெற்றுப் பிழைக்கப் பேரருளால்
தேசோ மயந்தந் தினியொருகாற் சித்தத் திருளுந் தீர்ப்பாயோ
பாசா டவியைக் கடந்த அன்பர் பற்றும் அகண்டப் பரப்பான
ஈசா பொதுவில் நடமாடும் இறைவா குறையா இன்னமுதே.

(பொ-ரை) பாசமாகிய காட்டைக் கடந்த அன்பர்களால் பற்றப்படுகின்ற கண்டிக்கப்படாத பரப்பாகிய ஈசனே! அம்பலத்தில் நடனஞ் செய்கின்ற தலைவனே! குறையாத இனிய அமிர்தமே! பேசாத அநுபவமாகிய (மௌன நிலையை) அடியேன் அடைந்து பிழைக்கும்படி மிகுந்த உனது திருவருளினால் தேஜோமயத்தைக் கொடுத்து இனி யொருதரம் என்னுடைய மனவிருளையும் (அஞ்ஞானத்தை யும்) நீக்குவையோ! (3)

285. இன்பக் கடலில் புகுந்திடுவான் இரவும் பகலுந் தோற்றாமல்
அன்பிற் கரைந்து கரைந்துருகி அண்ணா அரசே எனக் கூவிப்
பின்புற் றழுஞ்சே யென விழிநீர் பெருக்கிப் பெருக்கிப் பித்தாகித்
துன்பக் கடல்விட் டகல்வேனோ சொரூபா னந்தச் சுடர்க்
கொழுந்தே.

(பொ-ரை) சொரூப சுகமாகிய ஒளிக் கொழுந்தே! சுகவாரிதியில் மூழ்கும்படி அல்லும் பகலும் காணாமல் அன்பினால் மனமானது கரைந்து கரைந்திளகி 'அப்பா! அரசே!' என்று கூவிப் பின்தொடர்ந்தழுகின்ற குழந்தை யைப் போல் கண்களினின்றும் நீரைச் சிந்திப் பித்தனாகித் துன்பசாகரத்தை விட்டு நீங்குவனோ? (எ-று) (4)

286. கொழுந்து திகழ்வெண் பிறைச்சடிலக் கோவே மன்றிற் கூத்தாடற்
கெழுந்த சுடரே இமயவரை என்தாய் கண்ணுக் கினியானே
தொழுந்தெய் வமும்நீ குருவும்நீ துணைநீ தந்தை தாயும்நீ
அழுந்தும் பவம்நீ நன்மையும்நீ ஆவி யாக்கை நீதானே.

(பொ-ரை) கொழுந்துவிட்டு விளங்கும் வெள்ளிய பிறைச்சந்திரனை அணிந்த சடாபாரத்தையுடைய இறைவனே! அம்பலத்தில் நடனஞ் செய்தற் பொருட்டு எழுந்தருளிய சோதியே! இமாசலபுத்திரியும் என் தாயொப் பனையுமாகிய உமாதேவியின் கண்களுக் கினிமையா யிருப்பவனே! அடியேனால் வணங்கப்படுகின்ற கடவுளும் நீயே! குருவும் நீயே; துணையும் நீயே; தந்தையும் நீயே; தாயும் நீயே; நான் அழுந்திக் கிடக்கின்ற பவரூபமானவனும் நீயே; நன்மையும் நீயே; உயிரும் நீயே; உடம்பும் நீயே. (எ-று) (5)

287. தானே யகண்டா காரமயந் தன்னி லெழுந்து
பொதுநடஞ்செய்
வானே மாயப் பிறப்பறுப்பான் வந்துன் அடிக்கே
கரங்கூப்பித்

தேனே என்னைப் பருகவல்ல தெள்ளா ரமுதே சிவலோகக்
கோனே எனுஞ்சொல் நினதுசெவி கொள்ளா தென்னோ கூறாயே.

(பொ-ரை) தானாகவே அகண்டாகாரவடிவா யெழுந் தருளி, பஞ்ச கீர்த்தியங்களுக்கும் பொதுவாகிய நடனஞ் செய்பவனே! நான் மாயப்பிறப்பை யொழித்துக் கொள்ளுதற் பொருட்டுவந்து உனது திருவடிகளுக்குக் கைகுவித்துத் தேனே! என்னைப் பருக வல்லமை யுடையதான தெள்ளிய ஆரமிர்தமே! சிவலோகத்திற்குத் தலைவனே! என்று சொல்லித் துதி செய்கின்ற சொற்களை உன்னுடைய திருச்செவிகளில் நீ ஏற்றுக் கொள்ளா திருப்பது என்ன காரணத்தினாலோ? சொல்லாய். (எ-று)

நான் பலபேரால் துதிசெய்தும் நீ கேளாதிருப்பது என்னோ என்பதாம். (6)

288.கூறா நின்ற இடர்க்கவலைக் குடும்பக் கூத்துள் துளைந்துதடு
மாறா நின்ற பாவியைநீ வாவென் றழைத்தால் ஆகாதோ
நீறார் மேனி முக்கணுடை நிமலா அடியார் நினைவினிடை
ஆறாய்ப் பெருகும் பெருங்கருணை அரசே என்னை ஆள்வானே.

(பொ-ரை) திருவெண்ணீறு நிறைந்த திருமேனியையும் மூன்று கண்களையுமுடைய நிர்மலனே! அடியவர் மனத்தின் கண் ஆற்றுவெள்ளம் போற் பெருகுகின்ற மிக்க கருணையை யுடைய தலைவனே! என்னை அடிமை கொள்வோனே! சொல்லப்படுகின்ற ஜனன துன்பத்திற்குக் காரணமாகும் கவலையைத்தரும் குடும்பமென்கிற கூத்தாட்டில் படிந்து மனந்தடுமாறுகின்ற பாவியாகிய என்னை, நீயே வாவென்று (உன்னிடத்தில்) அழைத்துக்கொண்டால் உனக்குத் தகாதோ? (எ-று)

குடும்பக் கடலிலாழும் என்னை மோட்சக்கரை ஏற்ற வேண்டும் என்பது கருத்து. (7)

289.வானே முதலாம் பெரும்பூதம் வகுத்துப் புரந்து மாற்றவல்ல
கோனே என்னைப் புரக்குநெறி குறித்தா யிலையே கொடியேனைத்

தானே படைத்திங் கென்னபலன் தன்னைப் படைத்தா யுன்
கருத்தை
நானே தென்றிங் கறியேனே நம்பி னேன்கண் டருள்வாயே.

(பொ-ரை) ஆகாய முதலிய பெரிய பூதங்களைப் படைத்துக் காத்து அழிக்கவல்ல தலைவனே! அடியேனைக் காப்பாற்றும் வழியைத் திருவுளம்பற்றினாயில்லையே. இந்தக் கொடியேனைப் படைத்ததினால் என்ன பலனை யடைந்தாய்? (ஒன்றுமில்லை ஆயினும்) உனது திருவுளத்தை நான் என்ன வென்று இங்கு உணர்ந்திலேன். (உன் கருத்து எப்படி யிருப்பினும்) நான் உன்னை நம்பினேன் நீ, அதையுணர்ந்து அருள் செய்ய வேண்டும். (எ-று) (8)

290. கண்டார் கண்டகாட்சியுநீ காணார் காணாக் கள்வனுநீ
பண்டா ருயிர்நீ யாக்கையுநீ பலவாஞ் சமயப் பகுதியுநீ
எண்தோள் முக்கட் செம்மேனி எந்தாய் நினக்கே எவ்வாறு
தொண்டாய்ப் பணிவ ரவர்பணிநீ குட்டிக் கொள்வ தெவ்வாறே.

(பொ-ரை) அட்ட புயங்களையும், மூன்று கண்களையும், செவந்த மேனியையுமுடைய எம்முடைய தந்தையே! கண்ட ஞானிகளால் காணப்பட்ட காட்சியும் நீயே; காணாப் பொய்யர்களால் காணப்பட்ட கள்வனும் நீயே; அநாதியாயுள்ள உயிரும் நீயே; உடம்பும் நீயே; பலவகைப்பட்ட சமயப் பகுதியும் நீயே; (ஆகையால்) உனக்கு எப்படித் தொண்டராய்ப் பணிவார்கள். அவர்களுடைய பணிவிடைகளை நீ ஏற்றுக் கொள்வது எப்படி? (எ-று)

எல்லாம் நீயேயாயிருக்க உன்னை வணங்குதல் முதலிய பணிகள் எங்ஙனஞ் செய்வதென்பதாம். (9)

291. சூட்டி எனதென் றிடுஞ்சுமையைச் சுமத்தி எனையுஞ்
சுமையாளாக்
கூட்டிப் பிடித்து வினைவழியே கூத்தாட் டினையே நின
தருளால்
வீட்டைக் கருதும் அப்போது வெளியாம் உலக வியப்பனைத்தும்
ஏட்டுக் கடங்காச் சொப்பனம்போல் எந்தாய் இருந்த தென்
சொல்வேன்.

(பொ-ரை) என்னுடையதென்று சொல்லும் உடற் சுமையைச் சுமத்தி, என்னையுஞ் சுமையாளாகச் சேர்த்துப் பிடித்து இருவினையின் வழியே கூத்தாடுவித்தனையே, உன்னுடைய திருவருளால் மோட்சத்தை விரும்பும்

அக்காலத்தில் வெளியாய்த் தோற்றுகின்ற உலகவிவகார ஆச்சரியங் களெல்லாம் ஏட்டுக்கடங்காத சொப்பனம் போலிருந்தது. நான் அதை என்னவென்று சொல்லுவேன்?

மாயா சகிதனாயிருந்தபோது காணப்பட்ட உலகவி யவகாரம் மாயாரகிதனான காலத்தில் காணப்படவில்லை யென்பதாம். *(10)*

வம்பனேன்

(இதுவுமது)

292.வம்பனேன் கள்ளங் கண்டு மன்னருள் வெள்ள ராய
உம்பர்பால் ஏவல் செய்யென் றுணர்த்தினை ஓகோ வானோர்
தம்பிரா னேநீ செய்த தயவுக்குங் கைம்மா றுண்டோ
எம்பிரான் உய்ந்தேன் உய்ந்தேன் இனியொன்றுங் குறைவி லேனே.

(பொ-ரை) தேவர்கட்குத் தேவனே! வம்பனாகிய எனது கபடத்தைக் கண்டு நிலைபெற்ற அருட்கடலினர்களாகிய தேவர்களிடத்தில் ஏவல் செய்வாயென்று உணர்த்தினாய். இது ஆச்சரியம்! நீ எனக்குச் செய்த உபகாரத்திற்கு (அடியேன் செய்யத்தக்க) பிரதியுபகாரமுண்டோ? இல்லை (ஆகையால்) எமது தலைவனே! நான் பிழைத்தேன், இனி ஒன்றுங் குறையற்றவனாயினேன்.

நீ செய்த உபகாரத்திற்குப் பதிலுபகாரஞ் செய்யத்தக்க பாத்திரனல்லேன், என்பார். 'வானோர் தம்பிரானே நீ செய்த தயவுக்குங் கைம்மாறுண்டோ'' எனக் கூறினார். *(1)*

293.குறைவிலா நிறைவாய் ஞானக் கோதிலா னந்த வெள்ளத்
துறையிலே படிந்து மூழ்கித் துளைந்துநான் தோன்றா வாறுள்
ளுறையிலே யுணர்த்தி மோன வொண்சுடர் வைவாள் தந்த
இறைவனே யுனைப்பி ரிந்திங் கிருக்கிலேன் இருக்கி லேனே.

(பொ-ரை) குறைவில்லாத நிறைவாகி, குற்றமற்ற ஞானசுக வெள்ளத்தின் துறையில் படிந்து மூழ்கி அழுந்தி, நான் என்கிற ஒரு பொருளாக நான் காணப்படாதபடி உள்ளுறையி லுணர்த்தி மௌன நிலையாகிய ஒள்ளிய சுடர் பொருந்திய கூரிய வாளைத்தந்த தலைவனே! உன்னை விட்டுப் பிரிந்து இவ்வுலகத்தில் இரேன். (எ-று) *(2)*

**294.இருநில மாதி நாதம் ஈறதாம் இவைக டந்த
பெருநில மாய தூய பேரொளிப் பிழம்பாய் நின்றுங்
கருதரும் அகண்டா னந்தக் கடவுள்நின் காட்சி காண
வருகவென் றழைத்தா லன்றி வாழ்வுண்டோ வஞ்ச னேற்கே.**

(பொ-ரை) பிருதிவி தத்துவ முதல் நாத தத்துவ மீறாகக் கிடந்த இவற்றைக்கடந்து நின்ற பெருநிலமாகிய பரிசுத்த மான பெரிய ஒளிப்பிழம் பாயிருந்தும், நினைத்தற்கரிதாகிய அகண்ட இன்பத்தைத் தருகின்ற கடவுளே! உன்னுடைய திருவருட் காட்சியைக் காணுதற் பொருட்டு என்னை வாவென் றழைத்தாலல்லது கபடனாகிய எனக்கு சுக வாழ்வுண்டோ? இல்லை. (எ-று)

என்னை நீயே அழைத்தாலன்றிச் சுகமுதயமாதலில்லை என்பதாம். (3)

**295.வஞ்சனை அழுக்கா றாதி வைத்திடும் பாண்ட மான
நெஞ்சனை வலிதின் மேண்மேல் நெக்குநெக் குருகப் பண்ணி
அஞ்சலி செய்யுங் கையும் அருவிநீர் விழியு மாகத்
தஞ்சமென் றிரங்கிக் காக்கத் தற்பரா பரமு னக்கே.**

(பொ-ரை) தற்பரனே! வஞ்சனை, பொறாமை முதலிய குணங்களை வைக்கப்பட்டிருக்கின்ற பாத்திரமாகிய மனத்தை யுடையவனான என்னை, எளிய மேலுமேலும் நெகிழ்ந்துருகும் படி செய்து குவிக்குங் கையும், அருவியாறு போல் நீர்பாயும் கண்களுமாகப் பண்ணி நாமே தஞ்சமாவோ மென்று மனமிரங்கிக் காப்பாற்ற உனக்கே பாரமாகும். (எ-று)

என்னைக் காக்க வேண்டியவன் நீயே என்பது கருத்து. (4)

**296.உனக்குநா னடித்தொண்டாகி உன்னடிக் கன்பு செய்ய
எனக்குநீ தோற்றி அஞ்சேல் என்னுநா ளெந்த நாளோ
மனக்கிலே சங்கள் தீர்ந்த மாதவர்க் கிரண்டற் றோங்குத்
தனக்குநே ரில்லா ஒன்றே சச்சிதா னந்த வாழ்வே**

(பொ-ரை) மனத்துன்பங்கள் நீங்கப்பெற்ற மகத்தாகிய தவத்தை யுடையவர்களுக்கு இரண்டென்பது நீங்கி ஓங்கிய தனக்கொப்பாம்! பொருள் (வேறொன்று) மில்லாத ஒப்பற்ற பொருளே! சச்சிதானந்த வாழ்வே! தேவரீருக்கு அடியேன் அடித்தொண்டனாகி உனது திருவடிகளுக்கு அன்புசெய்யும் படி அடியேனுக்கு நீ வெளிப்பட்டுப் பயப்படாதை என்று சொல்லுகின்ற காலம் எந்தக் காலமோ? (எ-று) (5)

297.வாழ்வென வயங்கி என்னை வசஞ்செய்து மருட்டும் பாழ்த்த
ஊழ்வினைப் பகுதி கெட்டிங் குன்னையுங் கிட்டு வேனோ
தாழ்வெனுஞ் சமய நீங்கித் தமையுணர்ந் தோர்கட் கெல்லாஞ்
சூழ்வெளிப் பொருளே முக்கட் சோதியே அமர ரேறே.

(பொ-ரை) தாழ்வென்று சொல்லுஞ் சமயப்பற்றை விட்டு நீங்கித் தம்மை யறிந்தவர்கட்கு எவ்விதத்திலும் சூழப்படும் பொருளாயுள்ளவனே! மூன்று கண்களையுடைய சோதியே! தேவர்கட்குத் தேவனே! வாழ்வென்று விளங்கி என்னைத் தன் வசப்படுத்திக் கொண்டு மயக்குகின்ற பாழாகிய ஊழ்வினைப் பாகுபாடு கெட்டு இவ்விடத்தில் உன்னையும் அடைவேனோ? (எ-று) (6)

298.ஏறுவாம் பரியா ஆடை இருங்கலை உரியா என்றும்
நாறுநற் சாந்த நீறா நஞ்சமே அமுதாக் கொண்ட
கூறருங் குணத்தோய் உன்றன் குரைகழல் குறுகி னல்லால்
ஆறுமோ தாப சோபம் அகலுமோ அல்லல் தானே.

(பொ-ரை) இடபத்தைத் தாவுகின்ற குதிரையாகவும், பெரிய மான் தோலை உடையாகவும், திருவெண்ணீற்றை எக்காலமும் வாசனை வீசுகின்ற நல்ல சந்தனமாகவும், விடத்தையே, அமிர்தமாகவும் விரும்பிக் கொண்ட சொல்லுதற் கருமையாகிய குணத்தையுடையவனே! உன்னுடைய திருவடிகளை யடைந்தால் ஆறுவதன்றி (வேறுவழியால்) எனது தாபத்தாலுண்டாஞ் கோபம் தணியுமோ? தணியாது. துன்பமானது நீங்குமோ? நீங்காது. (எ-று)

உனது திருவடியை யடைந்தாலல்லாமல் எனது தாபசோபமும், துன்பமும் நீங்காதென்பதாம். (7)

299.தானமுந் தவமும் யோகத் தன்மையும் உணரா என்பால்
ஞானமுந் தெவிட்டா இன்ப நன்மையும் நல்கு வாயே
பானலங் கவர்ந்த தீஞ்சொற் பச்சிளங் கிள்ளை காண
வானவர் இறைஞ்ச மன்றுள் வயங்கிய நடத்தி னானே.

(பொ-ரை) மதுரமிக்க சொல்லையுடைய உமாதேவியார் காணவும், தேவர்கள் வணங்கவும், சிற்றம்பலத்தில் நடனஞ் செய்கின்றவனே! ஈகையையும், தவத்தையும், யோகசாதனை செய்யும் மார்க்கத்தையும் உணராத என்னிடத்தில் ஞானத்தையும், தெவிட்டாத ஆனந்தமாகிய நன்மையையும் கடாட்சிப்பையோ.

சரியா, கிரியா, யோகமார்க்கங்களைச் சிறிது மறியாத வெனக்கு ஞானத்தையும், ஆதினாலுண்டாம் ஆனந்தத் தையும் கொடுப்பாயோ என்பதாம். (8)

300. நடத்திஇவ் வுலகை யெல்லாம் நாதநீ நிறைந்த தன்மை
திடத்துட னறிந்தா னந்தத் தெள்ளமு தருந்தி டாதே
விடத்திர ளனைய காம வேட்கையி லழுந்தி மாயைச்
சடத்தினை மெய்யென் றெண்ணித் தளரவோ தனிய னேனே.

(பொ-ரை) தலைவனே! இந்த உலகங்களையெல்லாம் இயக்கி, அவைகளில் நீ நிறைந்திருக்கிற தன்மையைச் செவ்வையாயுணர்ந்து இன்பமாகிய தெள்ளிய அமிர்தத்தைப் புசியாமல் விஷக்கூட்டங்களையொத்த காமவிருப்பத்தி லமிழ்ந்து, (மாயாசம்பந்தமாகிய) பொய்யுடலை மெய்யென்று நினைத்துத் தனியேனாகிய நான் தளர்ச்சியை யடையவோ? (எ-று) (9)

301. தனிவளர் பொருளே மாறாத் தண்ணருங் கருணை பூத்த
இனியகற் பகமே முக்கண் எந்தையே நினக்கன் பின்றி
நனிபெருங் குடிலங் காட்டு நயனவேற் கரிய கூந்தல்
வனிதையர் மயக்கி லாழ்ந்து வருந்தவோ வம்ப னேனே.

(பொ-ரை) தனியாய் வளர்கின்ற வஸ்துவே! நீங்காத குளிர்ச்சி பொருந்திய கிடைத்தற்கரிய கிருபையாகிய மலர்களைப் பூத்த இனிமையாகிய கற்பகத் தருவே! மூன்று கண்களையுடைய எமது தந்தையே! வீணனாகிய நான் உன்னிடத்தில் அன்பில்லாமல் மிகுதியுங் கொடுமையைச் செய்கின்ற வேல் போன்ற கூரிய கண்களையும், கரிய கூந்தலையுமுடைய மாதர் மயக்கத்திலழுந்தி வருத்தப்படவோ? (எ-று)

இறைவன் தாய் தந்தையரையும் தன்னைப் போன்ற வேறொரு பொருளையும் பெறாதவனென்பார். 'தனிவளர் பொருளே' எனவும், தன்னை யடைந்தவர்க்கு எல்லாப் பொருள்களையும் கொடுப்போனென்பார். 'மாறாத்தண் ணருங் கருணை பூத்த இனியகற்பகமே' எனவும், "வரிவிழி கொண்டு சுழியவெறிந்து-மாமயில் போலவர் போவது கண்டு - மனது பொறாம லவர்பிறகோடி" என்றபடியே கண்கள் பலதீமையை யிழைத்தலின், வேலாயுதத்தை உவமித்து, 'நனிபெருங்குடிலங் காட்டு நயன வேற்கரிய கூந்தல்-வனிதையர் மயக்கிலாழ்ந்து வருந்தவோ' எனவுங் கூறினார்.

இறைவன் தாய் தந்தைய ரில்லானென்பதை;

" கோயில் சுடுகாடு கொல்புலித்தோ னல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்றனிய னாயிடினுங்
காயினுல கனைத்துங் கற்பொடிகாண் சாழலோ"

என்னும் மணிவாசகப் பிரபுவின் திருவாக்கானறிக. (10)

சிவன்செயல்

(இதுவுமது)

302. சிவன்செய லாலே யாதும் வருமெனத் தேறேன் நாளும்
அவந்தரு நினைவை யெல்லாம் அகற்றிலேன் ஆசை வெள்ளங்
கவர்ந்துகொண் டிழுப்ப அந்தக் கட்டிலே அகப்பட் டையோ
பவந்தனை ஈட்டி ஈட்டிப் பதைக்கின்றேன் பாவி யேனே

(பொ-ரை) யாதுஞ்சிவன்செயலால் வருமென்று தெளியேன், நாள் தோறும் வீண் எண்ணங்களையெல்லாம் நீக்கிலேன் ஆசையாகிய வெள்ளமானது என்னை அடக்கிக் கொண்டு இழுக்க, அந்தக்கட்டில் அகப்பட்டு அந்தோ! பாவத்தைமிகவுஞ் சம்பாதித்துப் பாவியாகிய நான் மனம்பதைக் கின்றேன். (எ-று)

அநாதியே பாசப் பிணிப்புண்டிருந்த என்னை அப்பாசத்தினின்றும் நீக்கியாளுதற் பொருட்டுத் தநுகரண புவனபோக முதலியவற்றைக் கொடுத்திருத்தல் சிவன் செயலாகவே யிருக்க அதை மறந்தேன் என்பார், 'சிவன் செயலாலே யாதும் வருமெனத் தேறேன்' எனவும், அங்ஙனந் தேறாமையால் வீணெண்ணங்களுண்டாகிப் பாசக் கட்டிலகபட்டுப் பாவத்தைத் தேடிக் கொள்கின்றேனென்பார் 'அவந்தரு நினைவையெல்லா மகற்றிலேனாசைவெள்ளங்கவர்ந்து கொண்டிழுப்ப வந்தக் கட்டிலேயகப்பட்டையோ-பவந்தனையீட்டியீட்டிப் பதைக்கின்றேன் பாவியேனே' எனவுங் கூறினார். (1)

303. பாவியேன் இனியென் செய்கேன் பரமனே பணிந்துன் பாதஞ்
சேவியேன் விழிநீர் மல்கச் சிவசிவ என்று தேம்பி
ஆவியே நிறைய வந்த அமுதமே என்னேன் அந்தோ
சாவிபோஞ் சமயத் தாழ்ந்து சகத்திடைத் தவிக்கின் றேனே.

(பொ-ரை) பரமனே! பாவியாகிய நான் இனி என்ன செய்யக் கடவேன், உனது திருவடிகளை வணங்கித்

தெரிசனஞ் செய்யேன், கண்களில் நீர் அதிகரிக்கச் 'சிவ! சிவ!' என்று உச்சரித்துவாடி, உயிர்க்குயிரே! பூரணமாய் வந்த அமிர்தமே! என்று சொல்லித் துதியேன் அந்தோ! பாழாய்ப் போகுஞ் சமயவாதத்தி லழுந்தி இவ்வுலகின்கண் இளைத்திருக்கின்றேன். (எ-று) (இங்ஙனமுள்ள நான் எப்படிப்பிழைப்பேன் என்பது குறிப்பு) *(2)*

304.இடைந்திடைந் தேங்கி மெய்புள கிப்ப எழுந்தெழுந் தையநின் சரணம்
அடைந்தனன் இனிநீ கைவிடேல் உனக்கே அபயமென் றஞ்சலி செய்துள்
உடைந்துடைந் தெழுது சித்திரப் பாவை யொத்துநான் அசைவற நிற்பத்
தொடர்ந்துநீ எனை ஆட் கொள்ளுநா ளென்றோ சோதியே ஆதிநா யகனே.

(பொ-ரை) தேஜோமயனே! ஆதியான முதல்வனே! ஐயனே! மனமிளகி அழுது, சரீரம் புளகிக்கும்படி பலமுறையெழுந்து உனது திருவடிகளை யடைந்தனன். இனி நீ என்னைக் கைவிடாதை; உனக்கே அபயமென்று சொல்லிக் கும்பிட்டு மனமிகவும் நெகிழ்ந்து எழுதின சித்திரப்பதிமையைப் போல் அசைவற்றிருக்கும்படி நீ என்னைத் தொடர்ந்து அடிமை கொள்ளுங்காலம் எக்காலமோ? (எ-று)

உன்னுடைய திருவடிகளையடைந்த என்னை அடிமை கொள்ளுவையோ? கொள்ளாயோ? என்பது கருத்து. *(3)*

305. ஆதியாய் நடுவாய் அந்தமாய்ப் பந்தம்
யாவுமற் றகம்புறம் நிறைந்த
சோதியாய்ச் சுகமா யிருந்தஎம் பெருமான்
தொண்டனேன் சுகத்திலே இருக்கப்
போதியா வண்ணங் கைவிடல் முறையோ
புன்மையேன் என்செய்கேன் மனமோ
வாதியா நின்ற தன்றியும் புலன்சேர்
வாயிலோ தீயினுங் கொடிதே.

(பொ-ரை) முதலாகியும், இடையாகியும், கடையாகியும், பந்தங் களெல்லாவற்றையும் நீங்கி அகத்தும் புறத்தும் பூரணமாய் நிறைந்த் சோதியாகியும், இன்பமாகியும்,

எழுந்தருளியிருந்த எமது பெருமானே! அடிமையாகிய நான் சுக நிலையிலிருக்கும் படி போதியாமல் கைவிடுதல் முறைமையோ? அன்று. (ஏனெனில்) என்னுடைய மனதோ, வருத்தா நின்றது. அல்லாமலும் ஐம்புலன்கள் சேர்தற்குரிய பொறியோ, நெருப்பினுங் கொடிதாயிருக்கின்றது. (இங்ஙன மிருத்தலால்) அறிவிலியாகிய நான் என்ன செய்யக் கடவேன்? (எ-று) (4)

306. வாயிலோ ரைந்திற் புலனெனும் வேடர்
வந்தெனை யீர்த்துவெங் காமத்
தீயிலே வெதுப்பி உயிரொடுந் தின்னச்
சிந்தைநைந் துருகிமெய்ம் மறந்து
தாயிலாச் சேய்போல் அலைந்தலைப் பட்டேன்
தாயினுங் கருணையா மன்றுள்
நாயகமாகி யொளிவிடு மணியே
நாதனே ஞானவா ரிதியே.

(பொ-ரை) தாயினும் மிகுந்த கருணை செய்கின்ற சிற்றம்பலத்தின் இறைவனாகி ஒளி விடுகின்ற மாணிக்கமே! தலைவனே! ஞான வாரிதியே! ஐம்பொறிகளாகிய ஐந்து வழிகளில் ஐம்புலன்கள் என்னும் வேடர்கள் வந்து என்னை இழுத்துக் கொண்டு போய்க் கொடிய காமத்தீயினாற் சுட்டுப் பிராணனோடு தின்ன என்னுடைய மனமானது இளகியுருகிச் சரீரத்தை மறந்து தாயற்ற குழந்தையைப் போல் திரிந்து வருந்தினேன். (எ-று) (5)

307. ஞானமே வடிவாய்த் தேடுவார் தேடும்
நாட்டமே நாட்டத்துள் நிறைந்த
வானமே எனக்கு வந்துவந் தோங்கும்
மார்க்கமே மருளர்தாம் அறியா
மோனமே முதலே முத்திநல் வித்தே
முடிவிலா இன்பமே செய்யுந்
தானமே தவமே நின்னை நான் நினைந்தேன்
தமியனேன் தனைமறப் பதற்கே.

(பொ-ரை) அறிவே ரூபமாய்த் தேடுவோர்களால் தேடப்படும் கண்ணே! என் கண்ணில் நிறைந்த பரமா காயமே! அடியேனுக்கு வந்து வந்து உயர்ந்து (வெளியா கின்ற) வழியே! மயக்கம் உடையவர்களால் அறியப்படாத மௌன நிலையே! தலைவனே! மோட்சத்திற்குக் காரணமே!

கெடுதலில்லாத ஆனந்தமே! செய்யப்படுகின்ற தர்மமே! தவமே! என்னை நான் மறந்து விடுதற்பொருட்டு நான் உன்னைச் சிந்தனை செய்தேன். (எ-று)

என்னை மறந்து நிற்க உன்னைச் சிந்தித்தேன் என்பது கருத்து. (6)

308. மறமலி யுலக வாழ்க்கையே வேண்டும்
வந்துநின் அன்பர்தம் பணியாம்
அறமது கிடைக்கின் அன்றியா னந்த
அற்புத நிட்டையின் நிமித்தந்
துறவது வேண்டும் மௌனியாய் எனக்குத்
தூயநல் லருள்தரின் இன்னம்
பிறவியும் வேண்டும் யானென திறக்கப்
பெற்றவர் பெற்றிடும் பேறே.

(பொ-ரை) நான் என்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் நீங்கப் பெற்றவர்களால் அடையப் படுகின்ற இலாபமே! உன்னடியாரது பணி விடையாகிய தர்மம் வந்து கிடைக்கப் பெற்றேனானால், கொடுமை மிகுந்த உலக வாழ்க்கையே எனக்கு வேண்டும். அல்லாமல் இன்பத்தைத் தருகின்ற ஆச்சரியம் விளைக்கும் நிட்டையின் பொருட்டுத் துறவு வேண்டும். மௌன குருவாகி வந்து அடியேனுக்குச் சிறந்த திருவருளைத் தருவையானால் இன்னும் ஜன்மங்களும் வேண்டும். (எ-று) (7)

309. பெற்றவர் பெற்ற பெருந்தவக் குன்றே
பெருகிய கருணைவா ரிதியே
நற்றவத் துணையே ஆனந்தக் கடலே
ஞாதுரு ஞான ஞேயங்கள்
அற்றவர்க் கறாத நட்புடைக் கலப்பே
அநேகமாய் நின்னடிக் கன்பு
கற்றதுங் கேள்வி கேட்டதும் நின்னைக்
கண்டிடும் பொருட்டன்றோ காணே.

(பொ-ரை) ஞானத்தைப் பெற்றவர்களால் பெறப்பட்ட பெரிய தவமலையே! ஊற்றெடுத்துப் பெருகும் கருணைக் கடலே! நல்ல தவத்திற்குச் சகாயமாயிருப்பவனே! இன்பசாகரமே! ஞாதுரு, ஞான, ஞேயங்களற்றவர்க்கு நீங்காச் சிநேகத்தையுடைய கூட்டுறவே! நான் அதிகமாகக் கல்விகற்றதுங் கேள்வி கேட்டதும் உன்னுடைய திருவடி

களுக்கு அன்பு செய்து உன்னைக் காணும் பொருட்டல்லவோ? (எ-று)

நான் கற்ற கல்விகளும், கேட்ட கேள்விகளும் உன்னைப் பெறும் பொருட்டே என்பது கருத்து. ஞாதுரு=காண்பவன். ஞானம்=சாட்சி ஞேயம்=காட்சிப் பொருள். (8)

310. **அன்றுநால் வருக்கும் ஒளிநெறி காட்டும்**
அன்புடைச் சோதியே செம்பொன்
மன்றுள்முக் கண்ணுங் காளகண் டமுமாய்
வயங்கிய வானமே என்னுள்
துன்றுகூ ரிருளைத் துரத்திடும் மதியே
துன்பமு இன்பமு மாகி
நின்றவா தனையைக் கடந்தவர் நினைவே
நேசமே நின்பரம் யானே.

(பொ-ரை) அக்காலத்தில் ஸநகாதி நால்வருக்கும் தேஜோமய மார்க்கத்தை அறிவுறுத்தின அன்பையுடைய ஒளியே! பொற்சபையின்கண் மூன்று கண்களுங் காளகண்டமுமாகி விளங்கிய பரமாகாயமே! என்னுள்ளத்தில் நிறைந்த அஞ்ஞானவிருளை ஓட்டுகின்ற முழுமதியே! துக்க சுகங்களாகி யிருந்த வாதனைகளைக் கடந்திருந்தோரது மனவெண்ணமே! நல்ல சிநேகமே! நான் உன் அடைக்கலம். (எ-று)

நீ ஆண்டான் அடிமையென்று வேதங்கள் முறையிடுதலின் நான் உனக்கடைக்கலமாவேன் என்பது கருத்து. (9)

311. **யானெனல் காணேன் பூரண நிறைவில்**
யாதினும் இருந்தபே ரொளிநீ
தானென நிற்குஞ் சமத்துற என்னைத்
தன்னவ னாக்கவுந் தகுங்காண்
வானென வயங்கி யொன்றிரண் டென்னா
மார்க்கமா நெறிதந்து மாறாத்
தேனென ருசித்துள் அன்பரைக் கலந்த
செல்வமே சிற்பர சிவமே.

(பொ-ரை) பரமாகாயமாய் விளங்கி ஒன்றென்றும் இரண்டென்றுஞ் சொல்லப்படாத வழியாகிய மௌனநெறியை அருளிச் செய்து நீங்காத தேனைப் போல் இனித்து அன்பர்கட்குள்ளே கலந்து நின்ற செல்வமே!

ஞானமயமான உயர்ந்த சிவமே! உன்னுடைய பூரண வியாபகத்தில் (நானிருக்குங்கால்) நான் என்னும் அகங்காரத்தை அறிந்திலேன். (ஆகையால்) எல்லாப் பொருளிலுங் கலந்திருந்த பெருஞ் சோதியானோன் நீயே என்று நிற்கிற சமநிலையிற் பொருந்தும் படி அடியேனை உன்னவனாகச் செய்துகொள்ளவுந்தகும். (எ-று)

என்னை உனக்கு அடியவனாக்கிக் கொள்ள வேண்டும் என்பது கருத்து. *(10)*

தன்னையொருவர்

(இதுவுமது)

312. தன்னை யொருவர்க் கறிவரி தாய்த்
தானே தானாய் எங்குநிறைந்
துன்னற் கரிய பரவெளியாய்
உலவா அமுதாய் ஒளிவிளக்காய்
என்னுட் கலந்தாய் யானறியா
திருந்தாய் இறைவா இனியேனும்
நின்னைப் பெறுமா றெனக்கருளாம்
நிலையைக் கொடுக்க நினையாயோ.

(பொ-ரை) தன்னை ஒருவர்க்கும் அறிதற்கருமையாய் தானே தானாகி சர்வவிடத்தும் நிறைந்திருக்கின்ற நினைத் தற்கரிய பரமாகாயமாகி, கெடாத அமிர்தரூபமாய், ஒளி கொடுக்கும் விளக்காகி, என் மனத்திற் கலந்திருந்தாய். (அங்ஙன மிருந்தாலும்) நான் அறியாமலிருந்தாய். (ஆகையால்) தலைவனே! இனியாயினும் உன்னையடையும்படி உனக்கு உன் திருவருளாகிய நிலையை அருள் செய்ய நினைக்கமாட்டாயோ? (எ-று)

எனக்கு உனது திருவருணிலையைக் கடாட்சியாயோ என்பது கருத்து. *(1)*

313. நினையு நினைவுக் கெட்டாத
நெறிபெற் றுணர்ந்த நெறியாளர்
வினையைக் கரைக்கும் பரமஇன்ப
வெள்ளப் பெருக்கே நின தருளால்
மனைவி புதல்வர் அன்னைபிதா
மாடு வீடென் றிடுமயக்கந்
தனையும் மறந்திங் குனைமறவாத்
தன்மை வருமோ தமியேற்கே.

(பொ-ரை) எண்ணுமெண்ணத்திற் கெட்டாத மார்க்கத்தைப் பெற்று உன்னையுணர்ந்த சன்மார்க்கர் களுடைய வினைகளைக் கரைக்கின்ற உயர்ந்த இன்ப மயமான வெள்ளமே! உன்னுடைய திருவருளினால் அடியே னாகிய எனக்கு மனைவி, பிள்ளைகள், தாய், தந்தை, மாடு, வீடு என்று சொல்லி மயங்கும் மயக்கத்தையும் மறந்து இவ்வுலகத் தில் உன்னை மறவாத குணம் வருமோ? (எ-று) (2)

314. வரும்போம் என்னும் இருநிலைமை
மன்னா தொருதன் மைத்தாகிக்
கரும்போ தேனோ முக்கனியோ
என்ன என்னுள் கலந்துநலந்
தரும்பே ரின்பப் பொருளேநின்
தன்னை நினைந்து நெக்குருகேன்
இரும்போ கல்லோ மரமோஎன்
இதயம் யாதென் றறியேனே.

(பொ-ரை) ஜனன மரணங்களையடையாமல் (என்றும்) ஒரு தன்மையை யுடையதாகிக் கரும்போ, தேனோ, முக்கனியோ என்று சொல்லும்படி என் மனத்திற் கலந்து நன்மையைத் தருகின்ற பேரின்பப் பொருளே! உன்னைச் சிந்தித்து மன நெகிழ்ந்துருகேன். (ஆகையால்) என்னுடைய மனமானது இரும்போ? கல்லோ? மரமோ? இவற்றுள் எது வென்றறிந்திலேன். (எ-று) (3)

315. அறியுந் தரமோ நானுன்னை
அறிவுக் கறிவாய் நிற்கையினால்
பிறியுந் தாமோ நீஎன்னைப்
பெம்மா னேபே ரின்பமதாய்ச்
செறியும் பொருள்நீ நின்னையன்றிச்
செறியாப் பொருள்நான் பெரும்பேற்றை
நெறிநின் றொழுக விசாரித்தால்
நினக்கோ இல்லை எனக்காமே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! நீ அறிவுக்கறிவா யிருப்பதனால் நானுன்னை அறியுந்தரமாமோ? அன்று பேரின்பமாய்க் கலக்கும் பொருள் நீ யாகையால் நீ என்னைப் பிரியுந்தரமாமோ? உன்னையன்றி வேறிடத்திற் சேர்ந்து நில்லாத பொருள் நான். (ஆகையால்) நான் அடைய வேண்டிய லாபத்தை நன்னெறியினின்று அநுபவிக்கும்

பொருட்டு விசாரித்தால் (அவ்விலாபம்) உன்கோ இல்லை. எனக்கோ உண்டு. (எ-று) *(4)*

316. எனதென் பதும்பொய் யானெனல்பொய்
எல்லா மிறந்த இடங்காட்டும்
நினதென் பதும்பொய் நீ யெனல்பொய்
நிற்கும் நிலைக்கே நேசித்தேன்
மனதென் பதுமோ என்வசமாய்
வாரா தைய நின்னருளோ
தனதென் பதுக்கும் இடங்காணேன்
தமியேன் எவ்வா றுய்வேனே.

(பொ-ரை) (ஒரு பொருளை) எனதென்று சொல்வதும் பொய். நானென்று சொல்வதும் பொய். எல்லாவற்றையும் கடந்த இடத்தைக் காட்டுகின்ற நினதென்பதும் பொய். நீயென்று சொல்வதும் பொய். (ஆகையால் இவற்றையெல்லாங் கடந்து நின்ற) உண்மை நிலையின் கண்ணே மனம் வைத்தேன். (ஆனாலும்) என்னுடைய மனமோ என் வசமாய் வசப்பட்டு வராது. ஐயனே! உன்னுடைய திருவருளோ தன்னுடைய தென்று சொல்வதற்கும் வழிகாணேன், (ஆகையால்) துணையில்லாதவனாகிய நான் எப்படிப் பிழைப்பேன்? *(5)*

317. உய்யும் படிக்குன் திருக்கருணை
ஒன்றைக் கொடுத்தால் உடையாய்பாழ்ம்
பொய்யும் அவாவும் அழுக்காறும்
புடைபட் டோடும் நன்னெறியாம்
மெய்யும் அறிவு பெறும்பேறும்
விளங்கு மெனக்குன் னடியார்பால்
செய்யும் பணியுங் கைகூடுஞ்
சிந்தைத் துயருந் தீர்ந்திடும்.

(பொ-ரை) என்னை அடிமையாக உடையவனே! நான் பிழைக்கும் பொருட்டு உனது திருவருளொன்றினை மாத்திரம் கொடுத்தாயானால், பாழாகிய பொய்ந்நெறிகளும், ஆசையும் பொறாமையும் நீங்கிவிடும். நன்மார்க்கமாகிய உண்மையும், நல்லறிவினால் அடையும் லாபமும் உண்டாகும். (அன்றியும்) அடியேனுக்கு உன்னுடைய அடியார்களிடத்தில் செய்ய வேண்டிய பணிவிடையும் கைகூடும். மனோதுக்கமும் நீங்கிவிடும். (எ-று) *(6)*

318. சிந்தைத் துயரென் றொருபாவி
சினந்து சினந்து போர்முயங்க
நிந்தைக் கிடமாய்ச் சகவாழ்வை
நிலையென் றுணர்ந்தே நிற்கின்றேன்
எந்தப் படியுன் னருள்வாய்க்கும்
எனக்கப் படிநீ அருள்செய்வாய்
பந்தத் துயரற் றவர்க்கெளிய
பரமா னந்தப் பழம்பொருளே.

(பொ-ரை) ஜனனக்கட்டை யொழித்தவர்க் கறிதற்கெளிய மேலா மின்பங் கொடுக்கும் நித்திய வஸ்துவே! மனோதுக்க மென்கிற ஒரு பாவியானவன் பலகால் கோபித்துச் சண்டை செய்யும்படி நிந்தித்தற் கிடமாயுள்ள இவ்வுலக வாழ்க்கையை நிலையுள்ளதென் றறிந்திருக்கின்றேன். (அங்ஙனமிருக்கும் எனக்கு) உனது திருவருளானது எப்படிக் கிடைக்கும்? நீதான் எப்படி அருள் செய்வாய்? (எ-று) *(7)*

319. பொருளைப் பூவைப் பூவையரைப்
பொருளென் றெண்ணும் ஒருபாவி
இருளைத் துரந்திட் டொளிநெறியை
என்னுட் பதிப்ப தென்றுகொலோ
தெருளத் தெருள அன்பர்நெஞ்சந்
தித்தித் துருகத் தெவிட்டாத
அருளைப் பொழியுங் குணமுகிலே
அறிவா னந்தத் தாரமுதே.

(பொ-ரை) அன்பர்கள் மனமானது தெளியுந்தோறும் (அவர்கள் மனத்தில்) தித்தித்துக் கரையும்படி தெவிட்டாத திருவருண்மாரியைப் பொழியுங் குணமேகமே! ஞானானந்தமாகிய அரிய அமிர்தமே! செல்வத்தையும், பூமியையும் மாதரையும், நிலையுள்ள பொருள்களென்று எண்ணுகின்ற பாவியாகிய எனது அஞ்ஞானவிருட்டைத் துரத்தி ஞான தேஜஸைத்தருஞ் சன்மார்க்கத்தை அடியேனுடைய மனத்திற் பதியச் செய்வது எந்நாளோ? உணர்ந்திலேன். (எ-று)

எனது அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தைத் தரல் வேண்டும் என்பதாம். *(8)*

320. **ஆரா அமிர்தம் விரும்பினர்கள்**
அறிய விடத்தை அமிர்தாக்கும்
பேரா னந்தச் சித்தனெனும்
பெரியோய் ஆவிக் குரியோய்கேள்
காரார் கிரக விலையினிடைக்
கட்டுண் டிருந்த களைகளெலாம்
ஊரா லொருநாட் கையுணவேற்
றுண்டால் எனக்கிங் கொழிந்திடுமே.

(பொ-ரை) தேவர்களறியும்படி நஞ்சை அமிர்தமாகக் கொண்ட பேரானந்தச் சித்தன் என்கிற பெயரையுடைய தலைவனே! என்னுயிர்க் குரியவனே! (நான் சொல்வதை) நீ கேட்பாயாக! நான் சமுசாரவலையிற் கட்டுப்பட்டிருந் தமையாலுண்டான விடாய்களெல்லாம் இவ்விடத்தில் ஊர்தோறும் ஒவ்வொரு நாளாகக் கைப்பிச்சை வாங்கி உண்பேனானால் நீங்கிப்போம். (எ-று) *(9)*

321. **எனக்கென் றிருந்த உடல்பொருளும்**
யானும் நினவென் றீந்தவண்ணம்
அனைத்தும் இருந்தும் இலவாகா
அருளாய் நில்லா தழிவழக்காய்
மனத்துள் புகுந்து மயங்கவுமென்
மதிக்குட் களங்கம் வந்ததென்னோ
தனக்கொன் றுவமை அறநிறைந்த
தனியே தன்னந் தனிமுதலே.

(பொ-ரை) தனக்கோர் பொருள் ஒப்பில்லா வண்ணம் நிறைந்த தன்மைப்பொருளே! எனதென்று நம்பியிருந்த உடல், பொருள், ஆவிகளை உன்னுடையனவென்று கொடுத்த விதமாக, எல்லாப் பொருள்களும் இருந்தும் இல்லாதனவாக அருளுருவாய் நில்லாமல் கெடுவழக்காய் மனத்திற் புகுந்து கலங்கவும் என்னுடைய அறிவுக்குள் களங்கம் வந்தமைக்குக் காரணம் யாதோ? அறியேன். (எ-று)

உடல், பொருள், ஆவிகளை உனக்குக் கொடுத்தும் இன்னும் திருவருள்நிலை பதியாமைக்குக் காரணம் யாதோ? என்பதாம் *(10)*

ஆசையெனும்

322. ஆசையெனும் பெருங்காற்றூ டிலவம்பஞ்
செனவும்மன தலையுங் காலம்
மோசம்வரும் இதனாலே கற்றதுங்கேட்
டதுந்தூர்ந்து முத்திக் கான
நேசமும்நல் வாசமும்போய்ப் புலனாயிற்
கொடுமைபற்றி நிற்பர் அந்தோ
தேசுபழுத் தருள்பழுத்த பராபரமே
நிராசையின்றேல் தெய்வ முண்டோ.

(பொ-ரை) ஒளியும், அருளுமிகுந்த பராபரமே! மனமானது ஆசை யாகிய பெரிய காற்றிலகப்பட்டு இலவம் பஞ்சைப்போல் அலைகின்ற காலத்தில் மோசமுண்டாம். இதனால் கற்ற கல்விகளுங் கேட்ட கேள்விகளும் அழிந்து மோட்சவிருப்பமும் நல்ல வாசங்களும் நீங்கி, ஐம்புலம யமாய்ச் சமுசாரக் கொடுமையால் தொடரப்பட்டு (அதனி டத்தில்) தங்கியிருப்பார்கள். அந்தோ! (ஒருவனுக்கு) ஆசை நீங்காமற் போனால் (அவனுக்குத்) தெய்வமுமில்லை. (எ-று)

ஆசையென்றது=பந்தப் பொருள்களில் விருப்பம் (1)

323. இரப்பானங் கொருவனவன் வேண்டுவகேட்
டருளசெயென ஏசற் றேதான்
புரப்பான்றன் அருள்நாடி இருப்பதுபோல்
எங்குநிறை பொருளே கேளாய்
மரப்பான்மை நெஞ்சினன்யான் வேண்டுவகேட்
டிரங்கெனவே மௌனத் தோடந்
தரப்பான்மை அருள் நிறைவில் இருப்பதுவோ
பராபரமே சகச நிட்டை.

(பொ-ரை) எவ்விடத்தும் நீங்காது நிறைந்திருக்கும் வஸ்துவே! பராபரமே! நீ கேட்பாயாக. அவ்விடத்தில் இரப்பவன் ஒருவன், தான் வேண்டியவற்றைக் கேட்டுக் கிருபை செய்வாயென்று பழிப்பற்று இரட்சிப்பவனுடைய கிருபையை நாடியிருப்பது போல், மரத்தின் தன்மை வாய்ந்த மனத்தினை யுடைய நான் வேண்டியவற்றையுந் திருச்செவியிற் கேட்டு மனமிரங்கி அருள் செய்வாயென்று மௌனநிலையுடன் ஆகாயத் தன்மையும் பெற்ற உன் திருவருணிறைவில் இருப்பது தானோ சகச நிட்டையென்று சொல்லப்படுவது. (எ-று)

"சகசநிட்டைக்குமென் சிந்தைக்கும் வெகுதூரமே"

என்றாராகலின் அந்நிட்டை கூறற்பாற்றனது. (2)

324. சாட்டையிற் பம்பர சாலம் போல்எலாம்
ஆட்டுவான் இறையென அறிந்து நெஞ்சமே
தேட்டமொன் றறஅருட் செயலில் நிற்றியேல்
வீட்டறந் துறவறம் இரண்டும் மேன்மையே.

(பொ-ரை) மனமே! சாட்டையினாலாடப்பட்ட பம்பரங்கள் போல் இறைவன் எல்லா உயிர்களையும் ஆட்டுவானென்று பிரமாண ரூபங்களாலறிந்து (யாதொன்றினையும் முன்னிலையாக வைத்துத்) தேடுதலில்லாமல் திருவருட் செய்கையிலிருப்பையானால், இல்லறம், துறவறம் இரண்டும் சிறந்தவையேயாம். (எ-று)

சாட்டையினாற் பம்பரம் ஆடுதல்போல், இறைவனால் உயிர்கள் இயங்குகின்றனவென்பார். 'சாட்டையிற் பம்பரசாலம் போலெலா-மாட்டுவானிறை யெனவறிந்து' எனவும், முன்னிலைச் சுட்டொழிந்து எல்லாம் அவனருளென்று எண்ணியிருத்தல் வேண்டுமென்பார். 'தேட்ட மொன்றறவருட் செயலினிற்றியேல்' எனவும் அங்ஙனங் கருதினால் இல்லறத் திருப்பினும், துறவறத்திருப்பினும் சிறப்பே என்பார், 'வீட்டறந் துறவற மிரண்டு மேன்மையே' எனவும் கூறினார்.

இச்செய்யுள் நெஞ்சொடு கிளத்தல், மனத்திற் கறிவித்தலின். (3)

325. தன்னெஞ்ச நினைப்பொழியா தறிவிலிநான்
ஞானமெனுந் தன்மை பேச
உன்னெஞ்ச மகிழ்ந்தொருசொல் உரைத்தனையே
அதனைஉன்னி உருகேன் ஐயா
வன்னெஞ்சோ இரங்காத மரநெஞ்சோ
இருப்பு நெஞ்சோ வைரமான
கன்னெஞ்சோ அலதுமண்ணாங் கட்டிநெஞ்சோ
எனதுநெஞ்சங் கருதிற் றானே.

(பொ-ரை) ஐயனே! மனோவியாபாரத்தினின்றும் நீங்காத அஞ்ஞானியாகிய நான் ஞானத்தின் தன்மையை

(எடுத்துச்) சொல்ல, உனது மனமகிழ்ந்து ஒரு மொழியாகிய உபதேசத்தைத் தந்தனை. அவ்வுபதேசத்தை நினைந்து மனங் கரையேன். (ஆகையால்) ஆராய்ந்து பார்க்குமிடத்தில் என்னுடைய மனமானது வலியதோ? மரம் போன்றதோ? இரும்பு போன்றதோ? கல் போன்றதோ? மண்ணாங்கட்டி போன்றதோ? அறியேன். (எ-று)

நீ உபதேசித்த ஒருமொழியை உணர்ந்த கேள்வி ஞானத்தை மாத்திரம் பெற்றேனே யொழியத் தெளிந்து நிட்டை கூடுதற்குரிய சிந்தித்தல் ஞானத்தைப் பெற்றேனில்லை யென்பார். 'ஒருசொல் லுரைத்தனையே யதனையுன்னி யுருகேனையா-வன்னெஞ்சோ விரங்காத மரநெஞ்சோ விருப்பு நெஞ்சோ வைரமான-கன்னெஞ்சோ வலது மண்ணாங் கட்டி நெஞ்சோவெனது நெஞ்சங் கருதிற் றானே' எனக் கூறினார்.

நான் கேட்டல் ஞானத்தை மாத்திர மடைந்தே னேயொழியச் சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்னும் ஞானங்களை யடைந்தேனில்லை என்பது கருத்து. (4)

326. வாழி சோபனம் வாழிநல் லன்பர்கள்
சூழ வந்தருள் தோற்றமுஞ் சோபனம்
ஆழி போல் அருள் ஐயன் மவுனத்தால்
ஏழை யேன்பெற்ற இன்பமுஞ் சோபனம்.

(பொ-ரை) சௌபான நெறியானது வாழக்கடவது. நல்ல அன்பர்கள் குழும்படி எழுந்தருளி வந்த திருவருட் டரிசனம் வாழக் கிடவது. கடல்போலுங் கருணை மழை யைப் பொழிகின்ற இறைவனது மௌனோபதேசத் தால் எளியேன் பெற்ற ஆனந்தமும் வாழக் கடவது. (எ-று)

இச்செய்யுள் இறைவன் தமக்கறிவுறுத்தின உபதேசத் தால் உண்டாம் ஆனந்தத்தை நோக்கிச் சோபன ரூபமாகக் கூறப்பட்டது.

சோபானம் என்பது சோபனம் எனக் குறுகி நின்றது. (5)

327. கொடுக்கின் றோர்கள்பால குறைவையா
தியானெனுங் குதர்க்கம்
விடுக்கின் றோர்கள்பால் பிரிகிலா
துள்ளன்பு விடாதே

அடுக்கின் றோர்களுக் கிரங்கிடுந்
தண்டமிழ் அலங்கல்
தொடுக்கின் றோர்களைச் சோதியா
ததுபரஞ் சோதி.

(பொ-ரை) (ஒன்றை விரும்பி வருவோரது குறிப்பினை யறிந்து) தருமஞ் செய்கின்றவர்களுக்குத் தரித்திர முண்டாக்காது. நான் என்கிற அகங்காரத்தை விட்டவர் களினின்றும் பிரியாது. இடைவிடாமல் உள்ளன்பைப் பெற்றவர் களுக்கு மனமிரங்கி அருள் செய்யும். தண்ணிய தமிழ்ப் (பாடல்களாகிய) மாலையைத் தொடுக்கின்றவர் களைச் சோதியாது. (அது யாதெனில்) பரஞ்சோதி என்னும் பெயருள்ள ஒரு பொருள். (எ-று)

குறிப்பறிந்து கொடுப்பதே தருமமாகலான் கொடுக்கின் றோர்கள் என்பதற்கு ஒன்றை விரும்பி வருவோரது குறிப்பி னையறிந்து தருமஞ் செய்கின்றவர்கள் என்று பொருள் எழுதப்பட்டது. இதனை,

" குறிப்பறிந் தீதலே கொடைமற் றிலையென
மறுத்தலே கேட்டபின் வழங்க லாகையின்
பெறற்கரு மாவியும் பெட்பி னீகுவன்
றிறப்பட விவருளந் தெரிந்த தில்லையால்."

என்பதனா னறிக. *(6)*

328. **உலக மாயையி லேஎளி யேன்றனை**
உழல விட்டனை யேஉடை யாய்அருள்
இலகு பேரின்ப வீட்டினில் என்னையும்
இருத்தி வைப்பதெக் காலஞ்சொ லாய்எழில்
திலக வாள்நுதற் பைந்தொடி கண்ணிணை
தேக்க நாடகஞ் செய்தடி யார்க்கெலாம்
அலகி லாவினை தீர்க்கத் துசங்கட்டும்
அப்பனே அருள் ஆனந்த சோதியே.

(பொ-ரை) அழகு பொருந்திய திலத்தை அணிந்த நெற்றியையும் பசிய வளையலையுமுடைய உமாதேவியாரது இரண்டு கண்களும் நிறையும் வண்ணம் நடித்து அடியவர் கட்கெல்லாம் அளவற்ற வினைகளை யொழித் தற்பொருட்டுக் கொடி கட்டுகின்ற தந்தையே! திருவருளானந் தத்தையுடைய சுடரே! என்னை உடையானே! ஏழையாகிய

என்னைப் பிரபஞ்சமாயையில் அலையவிட்டாயே. திருவருளானது விளங்குகின்ற மிக்க இன்பம் விளைக்கும் மோட்ச வீட்டில் என்னையும் இருக்கச் செய்வது எக்காலத்திலோ? அதைத் திருவாய் மலர்ந்தருள்வாய். (எ-று)

உமாதேவியார் காணும்படி நடித்து அடியார் வினைகளை யொழித்து அவர்களை மோட்சத்திற் சேர்க்கும் நீ என்னையும் அவ்விடத்தில் சேர்க்காயோ என்பது கருத்து.

உமாதேவியார் காண நடித்தலை.

" பரையிடமாய் நின்றுமுதிர் பஞ்சாக் கரத்தால்
உரையுணர்வுக் கெட்டா வொருவன்-வரைகடான்
காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு"

என்பதனாலும்,

" வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாகநோக்கி மன்னுசிற் றம்பலத்தே
யாதியு முடிவுமில்லா வற்புதத் தனிக்கூத்தாடு
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடுநலத்தின் மிக்கார்"

என்பதனானு மறிக. (7)

329. **முன்னிலைச்சுட் டொழிதியெனப் பல்காலும் நெஞ்சே**
நான் மொழிந்தே னேநின்
தன்னிலையைக் காட்டாதே என்னை யொன்றாச்
சூட்டாதே சரண்நான் போந்த
அந்நிலையே நிலையந்த நிலையிலே
சித்திமுத்தி யனைத்துந் தோன்றும்
நன்னிலையீ தன்றியிலை சுகமென்றே
சுகர் முதலோர் நாடினாரே.

(பொ-ரை) மனமே! முன்னிலைச் சுட்டொழிவாயென்று நான் பலமறையுஞ் சொன்னேனே. (ஆகையால்) உன்னுடைய நிலைமையை நீ காட்டாதை. என்னை ஒரு பொருளாகவும் வையாதை. (ஏனெனில்) நான் சரணமென்றடைந்த அந்த நிலையே நன்னிலையாகும். அந்த நிலையின் கண்ணே சித்தி முத்திகள் எல்லாம் உள்ளன வாகும். (இங்ஙனமிருத்தலால்) இதுவேயல்லாமல் வேறு நல்ல நிலையில்லை (ஆகையால்) இந்த நிலையே இன்பநிலை என்று சுகமுனிவர் முதலானோர் இந்த நிலையை விரும்பி அடைந்தார்கள். (எ-று)

நான் அடைந்ததும் சுகமுனிவர் முதலானோர் விரும்பி யடைந்த நிலையேயாகையால் மனமே! நீ உன்னுடைய சேட்டைகளைச் செய்யேல் என்பது கருத்து. *(8)*

330. அத்துவிதம் பெறும்பேறென் றறியாமல்
யானெனும்பே யகந்தை யோடு
மத்தமதி யினர்போல மனங்கிடப்ப
இன்னம் இன்னம் வருந்துவேனோ
சுத்தபரி பூரணமாய் நின்மலமாய்
அகண்டிதமாய்ச் சொரூபா னந்தச்
சத்திகள்நீங் காதவணந் தன்மயமாய்
அருள்பழுத்துத் தழைத்த வொன்றே.

(பொ-ரை) சுத்தமாகிய பரிபூரண நிலையாகி, நிர்மலமாகி, கண்டிக்கப் படாததாகி, சொரூபானந்தச் சத்திகள் நீங்காதபடி தன்மயமாகி, திருவருட் கனியானது பழுத்துத் தழைத்த ஏகவஸ்துவே! அடையத்தக்க பிரயோசனம் அத்துவிதமாக்கமாகுமென்றுணராமல் நான் என்கிற பேய்த்தன்மையை வாய்ந்த அகங்காரத்தோடு கூடி மனமானது பயித்தியம் பிடித்தவர் போல் கிடப்பதால் மேலும்மேலும் வருந்துவேனோ? (எ-று)

அத்துவிதம் என்றது சிவத்தோடு இரண்டறக் கலத்தல். இது பாரமார்த்திகத்து நிலைமை, இதனை யுணராத சிலர் வியவகாரத்தின் கண்ணே நான் பிரமம் என்று கூறுகின்றனர். அங்ஙனம் கூறின் எல்லாம் பிரமமாயிருக்கப் பேறடைவோன் யாவன் எனக் கடாவும் வினாவுக்கு விடையின்றாம். *(9)*

331. தந்தை தாயுநீ என்னுயிர்த் துணையுநீ சஞ்சல மதுதீர்க்க
வந்த தேசிக வடிவுநீ உனையலால் மற்றொரு துணைகாணேன்
அந்தம் ஆதியும் அளப்பருஞ்சோதியே ஆதியே அடியார்தஞ்
சிந்தை மேவிய தாயுமானவனெனுஞ் சிரகிரிப் பெருமானே.

(பொ-ரை) அந்தாதிகளை யளத்தற்கருமையான சோதியே! முதல் வஸ்துவே! அடியவர் மனத்திலமர்ந்த தாயுமானவன் என்று சொல்லப்படும் திருச்சிரா மலையில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! தந்தையும் நீயே, தாயும் நீயே, எனது உயிர்க்குத் துணைவனும் நீயே, எனது மனோதுக்கத்தைத் தீர்க்க எழுந்தருளி வந்த குருமூர்த்தமும்

நீயே, (ஆகையால்) உன்னை யல்லாமல் வேறொரு துணையைக் காணேன். (எ-று) *(10)*

332. காதில் ஓலையை வரைந்துமேற்
குமிழையுங் கறுவி வேள்கருநீலப்
போது போன்றிடுங் கண்ணியர்
மயக்கிலெப் போதுமே தளராமல்
மாது காதலி பங்கனை
யபங்கனை மாடமா ளிகைசூழுஞ்
சேது மேவிய ராமநா
யகன்தனைச் சிந்தைசெய் மடநெஞ்சே.

(பொ-ரை) அறியாமையையே குணமாகக் கொண்டுள்ள மனமே! காதிலணிந்த பொன்னோலையைத் தொளைத்து மேற்புறத்துள்ள குமிழம் பூவினையுங் கோபித்து மன்மதனது கருநீலப்பூவை யொத்திருக்குங் கண் களையுடைய மாதரது மயக்கத்தில் அகப்பட்டு எப்பொழுதுந் தளராமல் உமாதேவியை இடது பாகத்திலு டையவனும் கெடுதியில்லாதவனும் மாட மாளிகைகள் சூழும் சேதுநகரத்தில் எழுந்தருளியுள்ள ராம நாயகனுமாகிய சிவபெருமானைச் சிந்தனை செய்வாய். (எ-று)

நீலம் மன்மதனது பஞ்சபாணங்களி லொன்றாகலானம் அது மிகவுங் கொடுமையை விளைப்பதாகலானும் பெண்களது கண்களை வேள்' 'கருநீலப் போது' என்றார். இதனை,

" நினைக்கு மரவிந்த நீள்பசலை மாம்பூ
வனைத்துணவு நீக்கு மசோகு-வனத்திலுறு
முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலங்
கொல்லுமத னம்பின் குணம்"

என்பதனா னறிக.

சேதுமேவிய ராம நாயகன் என்றது சேதுவின்கண் இராமனாற் பூசிக்கப்பட்ட சிவலிங்க மூர்த்தியை, சீதையின் பொருட்டு இலங்கைக்குச் சென்று இராட்சதர்களைக் கொன்ற பாவம் நீங்கும் பொருட்டுச் சேதுவின்கண் இலிங்கப் பிரதிட்டை செய்து இராமனாற் பூசிக்கப்பட்டவனாகையால் இராமநாயகன் என்றார். இதனை,

" அத்தவ முனிவர் தம்மை யஞ்சலி புரிந்திராமன்
பத்தியி னாடியிங்கென் பங்கய விழியிற் பட்டோர்
முத்தரே யெனினுமென்னை முதல்வனே யென்றியாரும்
வைத்தி டற்குரிய னேனும் வரந்தர வல்லனேனும்.

உற்றிடு முயிரிலாபத் துவகை கூர்ந்தொறுப்பில் சாந்தி
பெற்றுயி ரெவைக்கு மன்பு பெருகியா னெனதின்றாகி
வெற்ற வைம்புல னடக்கி மேம்படு மறையோர் தம்பாற்
பற்றுள னாதலாலே பகர்வதொன் றுண்டுகேண்மின்.

பொருணிலை தெரிந்துநன்றாகப் புகலுமினி லங்கைபோற்று
நிருதனைக் கொன்ற பாவநீங்கிட வெனக்குநீங்க
ளொருபரி காரமென் றானுரை செய்வா ருறுவரானோர்
வருதியா லிராம வாய்மை விரதனேய கிலமன்னா.

ஓதியவாறு நன்றே யுமையொரு பாகன் றன்னைப்
பூதல முய்யப்பூசை புரிதிநீ யிந்தக்கந்த
மாதன முத்திநல்கு மற்றிதினி லிங்கமூர்த்தி
நாதனை நாட்டிற்றீரு நண்ணிய நவைக ளெல்லாம்

இங்கிதி லிலிங்கந் தாபித்திடும் பலமியம்ப லாற்றான்
பங்கயன் றானுமாக்கள் பாலதோப கருந்தன்மை
கங்கைசேர் காசிலிங்கங் கண்டதிற் கோடிபேறு
துங்கநீ நிறுவிலிங்கச் சோதியைத் தொழுவாக் குண்டாம்

நயங்கெழு மிந்தலிங்க ஞாலமே லுன்றன் பேராற்
றயங்கொளி விளங்கிரா மேச்சர மெனத்தழைக்கநாளு
முயங்கிரு வினையாங் காட்டக் குதவக னாகுமற்றிவ்
வயங்கரு ளிலிங் கமையா வல்லையிற் புரிதியென்றார்

ஒண்ணுதல் சீதைகேள்வ னுளமகிழ்ந் துறுவரோடும்
புண்ணியப் பொழுதிரண்டு புந்தியிற் றெரிந்து போரேற்
றண்ணல்வாள் கயிலைமேவி யருட்குறி கொணருமாற் றாற்
கண்ணிய தமைக்கும் வென்றி [1]கான்மகற் குறித்துச்
சொல்வான்

அஞ்சனை யஞ்சனக் கணருமணி யனையசெல்வ
மஞ்சனே மாதுபாகன் வடகுல கயிலைக் கேகித்
தஞ்சமா ரிலிங்கமூர்த்தி தருதியாற் கடிதினென் றான்
கஞ்சமார் கண்ணன் காலிற் கான்முளை கரங்கள் கூப்பி.

கடவுளர் முனிவர் காணக் கந்தமா தனமெனும் பேர்த்
தடவரை பிலத்திற் றாழ்ந்து தான்சிறி தெழுந்து விண்ணிற்
படிமிசை நிலைப்பவுந் திப்படர் ந்துவான் பனிவெண்
டிங்கண்
முடியவன் கயிலைமேவி முக்கணாற் றொழுது வெற்பின்.

குணதிசை நுனியா வேய்ந்த குசையிருந் தங்கைகூப்பி
பணவர வணையவை வாயுளம் பதைப்பதை யடக்கி
யுணவினை யின்றியாற்றி யுயர்தவ முமையாணங்கை
கணவன தருளாற் பெற்றான் காண்டகு மிலிங்கமூர்த்தி.

ஈதிவன் செய்கையாக விவன் வருவதற்குச் சற்றுப்
போததின் முன்னிராமன் புதுமதிவ தனநாடி
மாதவர் வகுத்தவேலை வந்தது நிறுப்பாய் வல்லை
சீதை [2]வாலுகத்தாற்செய்த சிவனருட் குறியை யென்றார்.

ஆற்றுவ னழகிதே யென்றருந் தவரமரரேனோ
ரேற்றமார் சனதிபின்னோ னிவரொடு மெழுந்தவேட்கை
மாற்றரு மகிழ்ச்சியோடும் வரிசிலைக் குரவன் வெள்ளை
நீற்றர னருளின் சின்னநி றுத்துவா னிணைந்தெழுந் தான்.

சூரியன் மிதுனம் வைகச் சுக்கில பக்கமேவுங்
கூரியன் றினத்தோ டத்தங் கூடிய தசமி தன்னிற்
சீரிய வெதி பாகத்திற் றிகழ்தச யோகந் தன்னிற்
காரிகை மதியோ டுற்ற காலையிற் கடுவி னீற்றில்.

சங்கர னூர்தி நாமந் தாங்கிய பவனந் தன்னிற்
பொங்கு நீராடி நித்தம் புரிசெயன் முறையிற் போற்றிக்
கங்கணங் கரத்திற் சேர்த்திக் கண்டிவெண் ணீறணிந்திட்
டங்கரன் பதிட்டைக் கேற்ற வாகமக்கடன் களாற்றி.

அதிர் திரைக் கங்கை நீரிலணிபெற வளர்ந்த வேணி
முதிர்சுடர்ப் பவளக்கொத்தின் முகிழ்த்த வெண்முகிழம் போலக்
கதிரிளநிலவு தோன்றக் கடியராக் கயிற்றிற் கட்டுஞ்
சதுர்மறைக்க ரோடிமுட் டாட்டாமரை வாசம்வீச.

அஞ்சுடர் முகங்க ளைந்திலங்கு தண்சுடர்க் கணொன்றும்
வெஞ்சுடர் விழியிரண்டும் வேறுவே றொளிவிளங்கச்
செஞ்சுடர் மணிப்பை நாகத்திருக் குழைவயங்குகாது
நஞ்சுடைக் களமுங்கண் டோர்நற்றவப் பேறுநல்க.

---

1. கான்மகன் – அநுமான் 2. வாலுகம் – வெண்மணல்

ஐயிரு தடந்தோள் வெற்பி லாடராத் தொடிதயங்கக்
கையிரண் டைந்திலேந்துங் கவின்படைக் கலன்
விறலைப்பச்
செய்யதார் மார்பிற்றான் செய்திருப் பணியாகும் பன்றித்
துய்யதோர் கோடு மாமைத் துளங்கொளி யோடுந்தூங்க.

கடுவுமிழ் வெள்ளெயிற்றுக் கட்செவிக் கச்சியாத்த
வடுவறு மருங்கிற் சாத்தும் வயவரி யுரிவயங்கத்
தொடுகழ லமரர்சென்னித் துணைப்பதந் தன்னிற்றானமு
னிடுமலர் நயனமாழி யெய்திய பேறுணர்த்த.

எழுமனத்தன் பிற்பாவித் திராகவ னிதயநின்றுஞ்
சுழுமுனை நெறியிற் கொண்டு துவாதசாந்தத் திற்போகி
வழுவறு மந்திரத்தால் வந்திடப் பிராணமார்க்கந்
தழுவுதன் கரத்திற் றாங்கிச் சத்தியோ சாதந்தன்னில்.

வடம்பிரியாத கொங்கைமலை வளர்காதன் மங்கை
இடம் பிரியாத காட்சியி லிங்கமாமீ சன்றன்னைக்
கடம்பிரியா விலங்கற்கந்த மாதன மாங்கார்கோட்
டடம்பிரி யாதசேதுத் தன்னிலே தாபித்திட்டான்.

தாவனஞ் செய்ததாணுத் தனக்க பிடேகஞ் செய்வான்
கூவலொன் றகழ்ந்தான் வில்லின் கோடியாற் குழகன்
முன்னிற்
சேவுரு மருவுநந்தி தேவையும் பதிட்டை செய்தான்
காவல னயோத்தி வேந்தன் கவுசலை கண்க ளன்னான்

ஆசனை வருக்குந் தீர்க்குமக் கிணற்று தகமேன்மை
பேசின மு௱க்குமுன்னே பெருந்தவ முனிவீர் பின்ன
ரீசனை யிலிங்க மூர்த்தி யிசைந்தரு ளெம்பி ரானைப்
பூசனை புரியலுற்றான் புரவல னிராக வின்றான்.

பரவுமா னைந்து செந்தேன் பலகனி யிளநீர் முன்னா
விரவுசீ ரபிடேகங்கள் வேண்டியவா றியற்றிக்
கரமலர்முகந்து கூவற் கமழ்நறுந் தெண்ணீராட்டி
யரனையொற் றாடைசேர்த்தி யாடகவறு வைசாத்தி.

சிந்தையால் வருந்தித் தானே தேடியன் றளக்கலாகா
வெந்தையார் பாதங்காணூஉ விளநகை முகத்தனாகி
முந்துதா னிட்ட நாட்டமுன் கமலர்த் துவான்போற்
பைந்துணர் மலர்தோய் நன்னீர்ப் பாத்தியந்தான்
கொடுத்தான்.

கலைநெறி மறைகளோ டாகமங்க ளாங்கருணை வேலை
யலையெறி முகங்க டோறு மாசமனங்க ணல்கித்
தலைமை யோரெனினுஞ் செய்யுந் தகுதி செய்திடுவ தென்னா
வலையுறழ் சடிலச்சென்னிக் குதவினா னருக்கியந்தான்.

கோதிலாக் கலவைகூட்டிக் குங்குமக் குழம்பி னாட்டிக்
சோதிமா மகுடஞ்சூட்டிச் சுடர்மணி யாரம் பூட்டி
யோதனஞ் சுவைக ளாறோ டூட்டிநல்லுசக மூட்டி
நாதனுக் கினியதூப நகையொளித் தீபங் காட்டி.

எண்ணிரண் டுபசாரங்க ளெஞ்சிடா வகையி யற்றிக்
கண்ணிநூன் முறையி னுள்ள கருமங்கள் பிறவ மாற்றி
யுண்ணிறை யன்பினூற் றெட்டுருச் செபித்தஞ் செழுத்தைப்
பண்ணிய பூசைப்பேறு பரமனுக் குதவி னானே.

ஆற்றினீள் குரவன் றன்னை யருச்சனை யங்கிதிக்கின்
மேற்றிசை யோகபீடம் வித்தியா பீடம்பூசித்
தேற்றவுஞ் சலியான் முக்கா லெழின்மல ரிறைத் திறைஞ்சிப்
போற்றினா னிராமன்வேத புனித மந்திரங்க ளாலே.

மும்முறை வலங்கொண் டீசன்முன்பி னின்றன் பினாடிக்
கைம்மலர்த் தட்டமிட்டுக் காகுத்தன் கண்ணீர் காலச்
செம்மனங் கொண்டு நின்றான் சிவபிரான் கவுரியோடு
மிம்மென வெளிவந்தங்க ணிராகவற் கருள்வ தானான்.

கேட்டியா லிராமநம்மைக் கிம்ளர்தனுக் கோடிநீரி
லாட்டியே யன்பினா னீயகன் றுறைச்சேது வின்க
ணாட்டிய விலிங்கந் தன்னை ஞாலமேற் காணப் பெற்றா
ரீட்டிய பாவம் யாவுமில் லையா முண்மையென் றான்.

அன்றிநின் கையிலேந்து மத்தனுக் கோடி முந்நீர்
சென்றதிற் படிந்துநின்னாற் செய்திடு மிலங்கங் கண்டோர்
முன்றரு பவங்களெல்லா முடித்துடன் பெறுவர் முத்தி
யுன்றனக் குரைத்த வாய்மை யுண்மையீ துண்மை யென்றான்.

அந்நிலை முனிவரா னோராம் பையர மரர்சித்த
ரின்னிசை யாணரே னோரி ராமனூ டுற்றா ரெல்லாந்
கன்னிக ரிலிங்கமூர்த்தி தனித் தனி தாபித்திட்டுப்
பன்னுநூன் மரபிற்பூசை பண்ணினா ரண்ண லாரை.

இந்தவே லைதன்னிலே யீசன் வெற்பு நீங்கியே
யந்தண் மூத்திலிங்க மாமவை யிரண்டு கொண்டுதான்
கந்தமா தனப்பெயர்க் கடவுண்மால் வரைக்கணே
வந்துவல்லை யெய்தினான்வந்து வந்தமைந் தனே"

இராமன் சிவபூசை செய்யவில்லையெனப் பலர் சொல்லுகின்ற மையின் அப்புராணத்தினின்றுஞ் செய்யுட் களாகவே எடுத்துக் காட்டப்பட்டது. (11)

333. **அண்டமுமாய்ப் பிண்டமுமாய் அளவிலாத**
ஆருயிருக் கோருயிராய் அமர்ந்தா யானால்
கண்டவரார் கேட்டவரார் உன்னா லுன்னைக்
காண்பதல்லால் என்னறிவாற் காணப் போமோ
வண்டுளப மணிமார்பன் புதல்வ னோடு
மனைவியொடுங் குடியிருந்து வணங்கிப் போற்றும்
புண்டரிக புரத்தினில்நா தாந்த மௌன
போதாந்த நடம்புரியும் புனித வாழ்வே.

(பொ-ரை) வளவிய துளசி மாலையை அணிந்த விஷ்ணுவானவர், தனது புத்திரனோடும், மனையாட்டி யோடும் குடியாயிருந்து கொண்டு வணங்கித் துதி செய்கின்ற பரிசுத்த வாழ்வே! நீ அண்டபிண்டங்களாகியும், அளவிடப் படாத அரிய உயிர்க்குயிராயும் அமர்ந்திருப்பையானால் உன்னைக் கண்டவர்யாவர்? (கண்டதாகச் சொல்லக்) கேட்டவர் யாவர்? உன்னால் உன்னைக் காண்பதல்லாமல் என்னறிவினைக் (காணுங் கருவியாகக் கொண்டு) காணலாகுமோ? ஆகாது. (எ-று)

இறைவன் திருவருட் சத்திபதிவு சிறிது இருந்தாலே காணலா மேயன்றி என்னாற் காணப்படான் என்பார். "உன்னாலுன்னைக் காண்பதல்லா லென்னறிவாற் காணப்போமோ" என்றார். இதனை,

"அவனரு ளாலே யவன்றாள் வணங்கி"

என்பதினா னறிக.

புண்டரிகம்=புலி. புண்டரிக முனிவரால் பூசிக்கப்பட்ட தாதலின் சிதம்பரத்தைப் புண்டரிகபுரம் என்றார். (12)

334. **பொறியிற் செறிஐம் புலக்கனியைப்**
புந்திக் கவராற் புகுந்திழுத்து

மறுகிச் சுழலும் மனக்குரங்கு
மாள வாளா இருப்பேனோ
அறிவுக் கறிவாய்ப் பூரணமாய்
அகண்டா னந்த மயமாகிப்
பிறிவற் றிருக்கும் பெருங்கருணைப்
பெம்மா னேஎம் பெருமானே

(பொ-ரை) அறிவுக்கறிவாகியும், நிறைவாகியும், கண்டிக்கப் படாத இன்ப ரூபமாகியும், எப்பொருளிலும நீங்குதலில்லாமல் இருக்கின்ற மிக்க கிருபையையுடைய பெருமானே! எமது தலைவனே! ஐம்பொறிகளினிறைந்த ஐம்புலக் கனியைப் புத்தியாகிய கப்பாலிழுத்து மறிந்து சுழல்கின்ற மனமாகிய குரங்கு கெடும்படி சும்மாவிருப் பேனோ?(எ-று)

பொறிகளின் விடயங்களே புலன்களாதலின், 'பொறியிற் செறியைம் புலக்கனியை' எனவும், பொறிகள் அவ்வவ் விடயங்களிற் செல்லாவகை புத்தியாலடக்க வேண்டுமென்பார், 'புந்திக்கவராற் புகுந்திழுத்து' எனவும், புத்திக்குக் காரணமாயுள்ள மனத்தையடக்குதலே மௌன நிலைக்குச் சாதன மென்பார். 'மறுகிச்சுழலுமனக்குரங்கு மாளவாளா விருப்பேனோ' எனவுங் கூறினார். (13)

335. **உரையுணர் விறந்து தம்மை உணர்பவர் உணர்வி னூடே**
கரையிலா இன்ப வெள்ளங் காட்டிடும் முகிலே மாறாப்
பரையெனுங் கிரணஞ் சூழ்ந்த பானுவே நின்னைப் பற்றித்
திரையிலா நீர்போல் சித்தந்தெளிவனோ சிறிய னேனே.

(பொ-ரை) வாக்கும் அறிவும் ஒழியப் பெற்றுத் தம்மை உணர்பவரது அறிவின் கண்ணே அளவு சொல்லப்படாத சுகப்பிரவாகத்தைக் காட்டுகின்ற மேகமே! நீங்காத பராசக்தியென்கிற கிரணஞ் சூழ்ந்துள்ள ஞானசூரியனே! அறிவில்லாதவனாகிய நான் உன்னைத் தொடர்ந்து அலையில்லாத சலம்போல் மனத்தெளிவடையப் பெறுவேனோ? (எ-று)

எக்காலத்துஞ் சத்தியின்றிச் சிவமில்லை யென்பார், 'பரையெனுங் கிரணஞ் சூழ்ந்த பானுவே' என்றார், இதனை,

" சத்திதா னாதமாதி தானாகுஞ் சிவமுமந்தச்
சத்திதா னாதியாகுந் தரும்வடி வானவெல்லாஞ்

சத்தியுஞ் சிவமுமாகுஞ் சத்திதான் சத்தனுக்குச்
சத்தியாஞ் சத்தன்வேண்டிற் றெல்லாமாஞ் சத்திதானே"

என்பதினா னறிக.

அலையில்லாத சலந்தெளிந்திருத்தல் போல மன் மனமும் தெளியப் பெறுவேனோ என்பார், 'திரையிலா நீர்போற் சித்தந் தெளிவனோ' எனக் கூறினர். (14)

336. கேவல சகல மின்றிக் கீழொடு மேலாய் எங்கும்
மேவிய அருளின் கண்ணாய் மேவிட மேலாய் இன்பந்
தாவிட இன்பா தீதந் தனியிடை யிருத்தி வைத்த
தேவெனும் மௌனி செம்பொற் சேவடி சிந்தை செய்வாம்.

(பொ-ரை) மறப்பும், நினைப்புமில்லாமல் கீழும் மேலுமாகி எவ் விடத்தும் பொருந்தியுள்ள அருட்கண்ணால் அடியேன் உன்னையடையவும், இன்பமேலிட்டுத் தாவவும் சுகாதீதமாகிய ஒப்பற்ற இடத்தில் என்னை நிற்பித்த தெய்வமென்கிற மௌனகுருவின் செவந்த பொன் போலுந் திருவடிகளைச் சிந்திப்போம்.

இது மௌனகுரு வணக்கம் எனக் கொள்க. (15)

337. நேற்றுளார் இன்று மாளா நின்றனர் அதனைக் கண்டும்
போற்றிலேன் நின்னை அந்தோ போக்கினேன் வீணே காலம்
ஆற்றிலேன் அகண்டா னந்த அண்ணலே அளவில் மாயைச்
சேற்றிலே இன்னம் வீழ்ந்து திளைக்கவோ சிறிய னேனே.

(பொ-ரை) அகண்ட இன்பத்தை விளைக்குந் தலைவனே! நேற்றிருந்தவர் இன்று இறந்தார். அதனைக் கண்டும் அறிவில்லாதவனாகிய நான் (நித்தியனாகிய) உன்னைத் துதி செய்திலேன். ஐயோ! காலத்தை வீணாகக் கழித்தேனே. (ஆகையால்) அளவில்லாத மாயையாகிய சேற்றில் விழுந்து இன்னமுந் துன்பத்தையனுபவிக்கவோ? சதித்திலேன். (எ-று)

தேகம் அநித்தியமாதலின், 'நேற்றுளாரின்று மாளாநின்றனர்' எனவும், அந்நிலையாமையைக் கண்டும் நித்தியனாகிய உன்னையடைய வேண்டு மென்பார், 'அதனைக் கண்டும் போற்றிலே னின்னை யந்தோ போக்கினேன் வீணேகாலம்' எனவும், இங்ஙனமிருத்தலால் மாயையிலழுந்த வேண்டு மென்பார் 'அளவின் மாயைச் சேற்றிலே யின்னம் வீழ்ந்து திளைக்கவோ' எனவுங் கூறினார்.

தேகம் அநித்தியமென்பதை,

" நின்றன நின்றன நில்லா வெனவுணர்ந்
தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று."

எனவும்,

" ஆட்பார்த் துழலு மருளில்கூற் றுண்மையாற்
றோட்கோப்புக் காலத்தாற் கொண்டு யிம்மின்-பீட்பிதுக்கிப்
பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன்
கள்ளங் கடைப்பிடித்த னன்று"

எனவும் வருவனவற்றானறிக. *(16)*

**338. போதம் என்பதே விளக்கொவ்வும் அவித்தை பொய் இருளாந்
தீதி லாவிளக் கெடுத்திருள் தேடவுஞ் சிக்கா
தாத லால்அறி வாய்நின்ற விடத்தறி யாமை
ஏது மில்லையென் றெம்பிரான் சுருதியே இயம்பும்.**

(பொ-ரை) ஞானமே விளக்காகும். அஞ்ஞானமே இருளாகும் (ஆகையால்) குற்றமில்லாத விளக்கை எடுத்து இருளைத் தேடினாலும் (அவ்விருள்) அகப்படாது. (அதுபோல) தான் ஞானமயமாய் நின்றவிடத்தில் அஞ்ஞானமானது சிறிதுமில்லையென்று எம்மிறைவனா லருளிச் செய்யப் பட்ட வேதங்களே சொல்லா நிற்கும். (எ-று)

இருட்டுத் தீபத்தா லோடுதல் போல ஞானத்தால் அஞ்ஞானம் ஒழியும் என்பது கருத்து. இதனை,

" விளக்குப் புகவிருண் மாய்ந்தாங் கொருவன்
றவத்தின்முன் னில்லாதாம் பாவம்."

என்பதனா னறிக. *(17)*

**339. சுருதி யேசிவா கமங்களே உங்களாற் சொல்லும்
ஒருதனிப் பொருள் அளவையீ தென்னவா யுண்டோ
பொருதி ரைக்கடல் நுண்மணல் எண்ணினும் புகலக்
கருத எட்டிடா நிறைபொருள் அளவையார் காண்பார்.**

(பொ-ரை) வேதங்களே! சைவாகமங்களே! உங்களாற் சொல்லப் படுகின்ற ஒரு ஒப்பற்ற பொருளின் அளவையானது இதுதானென்று சொல்ல வாக்குண்டோ?

இல்லை, (ஏனெனில்) கடலிலுள்ள சிறிய மணலை எண்ணித் தொகைக் கணக்கிட்டாலும் இத்தன்மைத்தென்று சொல்லவும், நினைக்கவுங் கூடாத பரிபூரணப் பொருளாகையால், அப்பொருளின் அளவை காணவல்லார் யாவர்? (எ-று) *(18)*

340. மின்னைப் போன்றன அகிலமென் றறிந்துமெய்ப் பொருளாம்
உன்னைப் போன்றநற் பரம்பொருள் இல்லையென் றோர்ந்து
பொன்னைப் போன்றநின் போதங்கொண் டுன்பணி பொருந்தா
என்னைப் போன்றுள ஏழையர் ஐயஇங் கெவரே.

(பொ-ரை) ஐயனே! உலகங்களானவை மின்னலைப் போல் (நிலை யற்றன) வென்றும் உண்மைப்பொருளாகிய உன்னைப் போன்ற நல்ல பரம்பொருளில்லையென்றும் அறிந்து, பொன் போற்றலைப்பட்ட உன்னுடைய ஞானத்தைப் பெற்று, உன்னுடைய திருத்தொண்டு செய்யாத என்னைப்போலிருக்கின்ற அறிவிலிகள் இவ்வுலகத்தில் யார் இருக்கின்றனர்? ஒருவருமில்லை. (எ-று)

உன்னைப்போல் மெய்ப் பொருளுமில்லை. உலகத் தைப் போன்ற பொய்ப் பொருளுமில்லை என்பதாம். *(19)*

341. தாயுந் தந்தையும் எனக்குற வாவதுஞ் சாற்றின்
ஆயும் நீயும்நின் அருளும்நின் அடியரும் அன்றோ
பேய னேன்திரு வடியிணைத் த்ாமரைப் பிடித்தேன்
நாய னேஎனை ஆளுடை முக்கண்நா யகனே.

(பொ-ரை) எனது தலைவனே! என்னை அடிமையாகக் கொண்ட திரிநேந்திரங்களையுடைய நாயகனே! எனக்குத் தாய் உன் திருவருட்சத்தியும், தந்தை நீயும், சுற்றம் உன்னுடைய அடியார்களுமல்லவோ? ஆம். (ஆகையால்) பேயை யொத்தவனாகிய நான் உன்னுடைய இரண்டு தாமரைமலர் போலுந் திருவடிகளைப் பிடித்தேன். (எ-று)

என்னை ஆட்கொள்ள வேண்டும் என்பது குறிப்பு. (20)

342. காந்தமதை எதிர்காணிற் கருந்தாது
செல்லுமந்தக் காந்தத் தொன்றா
தோய்ந்தவிடம் எங்கேதான் அங்கேதான்
சலிப்பறவும் இருக்கு மாபோல்
சாந்தபதப் பரம்பொருளே பற்றுபொரு
ளிருக்குமத்தாற் சலிக்குஞ் சித்தம்

வாய்ந்தபொருள் இல்லையெனிற் பேசாமை
நின்றநிலை வாய்க்கு மன்றே.

(பொ-ரை) சாந்த பதமாகிய பரம்பொருள்! காந்தத்தைக் கண்டவிடத்து இரும்பானது அதிற் போய்ச் சேரும். அந்தக் காந்தத்திற் சேராமல் ஒழிந்த விடமெங்கே. அவ்விடத்தில் சலனமில்லாமல் இருப்பது போல், விடயங்களைப் பற்றுதற்குரிய பொருள் இருப்பதினால் மனமசையும், அப்பொருளில்லை யாயின் மௌனநிலையானது கிடைக்கும். (எ-று)

விடயமில்லையாயின் மௌனநிலை கைகூடும் என்பது கருத்து. (21)

343. **பொற்பு றுங்கருத் தேயக மாயதிற் பொருந்தக்**
கற்பின் மங்கைய ரெனவிழி கதவுபோற் கவினச்
சொற்ப னத்தினுஞ் சோர்வின்றி யிருந்தநான் சோர்ந்து
நிற்ப தற்கிந்த வினைவந்த வாறென்கொல் நிமலா.

(பொ-ரை) பரிசுத்தமானவனே! கற்பினையுடைய மாத ரைப் போல, அழகுமிக்குகருத்தே வீடாகப் பொருந்தவும், கண்ணே கதவாக அழகு செய்யவும், கனவிலுஞ் சோர்வில்லாதிருந்த நான் சோர்ந்து நிற்கும் வண்ணம் இந்தக் கர்மமானது உண்டான காரணம் யாதோ? (எ-று) (22)

344. **வந்த வாறிந்த வினைவழி யிதுவென மதிக்கத்**
தந்தவா றுண்டோ வுள்ளுணர் விலையன்றித் தமியேன்
நொந்த வாறுகண் டிரங்கவும் இலைகற்ற நூலால்
எந்த வாறினித் தற்பரா உய்குவேன் ஏழை.

(பொ-ரை) தற்பரனே! இந்தக் கர்மமானது வந்தவகை இதுவாகு மென்று மதித்துணர உணர்ச்சி தந்தாயில்லை. அல்லாமல் அடியேன் வருந்தினமையைக் கண்டு மிரங்கவுமில்லை. (ஆகையால்) அறிவிலியாகிய நான் எந்த வழியாற் பிழைப்பேன்? (எ-று)

நீயே இரங்கி யருள் செய்யாமல் விட்டுவிட்டால் நான் பிழைப்பது எங்ஙனம் என்பதாம். (23)

345. **சொல்லாலும் பொருளாலும் அளவை யாலுந்**
தொடரவொண்ணா அருள்நெறியைத்
தொடர்ந்து நாடி

நல்லார்கள் அவையகத்தே யிருக்கவைத்தாய்
நன்னர் நெஞ்சந் தன்னலமும் நணுகுவேனோ
இல்லாளி யாயுலகோ டுயிரை யீன்றிட்
டெண்ணரிய யோகினுக்கும் இவனே என்னக்
கல்லாலின் கீழிருந்த செக்கர் மேனிக்
கற்பகமே பராபரமே கயிலை வாழ்வே.

(பொ-ரை) இல்லறத்தவனாய் உலகத்தையும் (அதிலுள்ள) உயிர் களையும் படைத்து நினைத்தற்கரிய யோகத்திற்கும் இவனே உயிர்ந்தவ னென்று சொல்லும்படி கல்லாலமரத்தின் கீழ் எழுந்தருளியிருந்த செவந்த திருமேனியையுடைய கற்பகமரமே! பராபர வஸ்துவே! கயிலைமலையில் வீற்றிருப்பவனே! சொல்லாலும் (அதன்) அர்த்தத்தாலும் அளவையாலும் தொடரக்கூடாத திருவருண்மார்க்கத்தைத் தொடர்ந்து நாடி நல்லவர்கள் சபையினிடத்தில் இருக்கும்படி வைத்தாய், (ஆகையால்) நல்லமனத்தின் தன்மையையும் அடைவேனோ? (எ-று) (24)

பஞ்சாவஸ்தை இலக்கணம்

346. **சாக்கிரமா நுதலினிலிந் திரியும் பத்துஞ்**
சத்தாதி வசனாதி வாயு பத்தும்
நீக்கமிலந் தக்கரணம் புருட னோடு
நின்றமுப் பான்ஐந்து நிலவுங் கண்டத்
தாக்கியசொப் பனமதனில் வாயும் பத்தும்
அடுத்தனசத் தாதிவச னாதியாக
நோக்குகர ணம்புருடன் உடனே கூட
நுவல்வர்இரு பத்தைந்தாம் நுண்ணி யோரே.

(பொ-ரை) ஞானேந்திரியம் ஐந்தும், கர்மேந்திரியம் ஐந்தும், ஞானேந்திரிய விடயங்கள் ஐந்தும், கர்மேந்திரிய விடயங்கள் ஐந்தும், வாயுக்கள் பத்தும், அந்தக்கரணம் நான்கும், புருடனும் ஆக முப்பத்தைந்து கருவிகளும் கல்லாடத்தானத்தில் நின்ற அவஸ்தை சாக்கிரா வஸ்தையாகும். வாயுக்கள் பத்தும் சத்தாதி வசனாதியாகி விஷயங்கள் பத்தும் அந்தக்கரணம் நான்கும் புருடனும் ஆக இருபத்தைந்து கருவிகளும் கண்டஸ்தானத்தில் நின்ற அவஸ்தை சொப்பனாவஸ்தையாகுமென்று நுட்பமாகிய அறிவுள்ளோர் சொல்லா நிற்பார்.

இவ்வாறே சிவஞான சித்தியாரில்,

"சாக்கிர முப்பத்தைந்து நுதலினிற் கனவுதன்னி
லாக்கிய விருபத்தைந்து களத்தினில்"

எனவும்,

திருமந்திரத்தில்,

"இந்திரிய மீரைந்து மீரைந்து மாத்திரையு
மந்தமாய் நின்ற மாருத மீரைந்து
மந்தக் கரணங்க ணான்கு மவற்றுடன்
சந்தித்த சாக்கிர பாலனு மாமே"

எனவும்,

"மனவகத் தேவரு மாத்திரை பத்து
மனவகத் தேவரும் வாயு விரைந்து
மனவகத் தாய கரணங்க ணான்குங்
கனவகத் தேயு மிருபத்தைஞ் சாமே"

எனவும் வருவனவற்றானுணர்க. *(25)*

347. **சுழுத்திஇத யந்தனிற்பி ராணஞ் சித்தஞ்**
சொல்லரிய புருடனுடன் மூன்ற தாகும்
வழுத்தியநா பியில்துரியம் பிராண னோடு
மன்னுபுரு டனுங்கூட வயங்கா நிற்கும்
அழுத்திடுமூ லந்தன்னில் துரியா தீதம்
அதனிடையே புருடனொன்றி அமரும் ஞானம்
பழுத்திடும்பக் குவரறிவர் அவத்தை ஐந்திற்
பாங்குபெறக் கருவி நிற்கும் பரிசுதானே.

(பொ-ரை) பிராணவாயு, சித்தம், புருடன் ஆகிய மூன்றும் இருதயத்தில் நின்ற அவஸ்தை சுழுத்திய வஸ்தை யாகும். பிராணவாயுவும், புருடனும் நாபிஸ்தானத்தில் நின்ற அவஸ்தை துரியா வஸ்தையாகும். புருடன் மாத்திரம் தனியாகக் குதஸ்தானத்தில் நின்ற அவஸ்தை துரியாதீதாவஸ்தையாகும். (ஆகையால்) இங்ஙனம் ஐந்தவஸ் தையில் வரிசைக்கிரமமாகக் கருவிகள் நிற்குந் தன்மையை முதிர்ந்த ஞானத்தையுடையோர் அறிவார்கள். (எ-று)

இதனைச் சிவஞானசித்தியாரிற்,

சுழுனைமூன்று, நீக்கிய விதயந்தன்னிற் றுரியத்தி லிரண்டுநாபி
நோக்கிய துரியாதீத நுவலின்மூ லத்திினொன்றே"

எனவும்

திருமந்திரத்தில்

" சுழுனையிற் சேர்ந்துள மூன்றுள காட்சி
கெழுமிய சித்தம் பிராண னற்சீவ
னெழுமக்க மலத்தி னுள்ளே யிருந்து
விழுமப் பொருளுடன் மேவிநின் றானே"

எனவும்,

" கருவரம் பாகிய காயந் துரிய
மிருவருங் கண்டிடிற் பிறப்பிறப் பற்றவர்
குருவரம் பெற்றவர் கூடிய பின்னை
இருவரு மின்றியொன் றாகிநின் றானே"

எனவும் வருவனவற்றானுணர்க.

இவ்வவஸ்தையைக் கீழாலவஸ்தை யென்பர். (26)

348. **இடத்தைக் காத்திட்ட சுவாவெனப் புன்புலா லிறைச்சிச்**
சடத்தைக் காத்திட்ட நாயினேன் உன்னன்பர் தயங்கும்
மடத்தைக் காத்திட்ட சேடத்தால் விசேடமாய் வாழ
விடத்தைக் காத்திட்ட கண்டத்தோய் நின்னருள் வேண்டும்

(பொ-ரை) காள கண்டத்தை யுடையவனே! இடத்தைக் காத்திருந்த நாய்போல, அற்பமாகிய புலால் நாற்றம் வீசுகின்ற மாமிசத்தாலாகிய சரீரத்தைக் காத்துக் கொண்டிருக்கின்ற நாயினேன் உனது அன்பர்களது மடத்தைக் காத்திருந்து அவர்களாலிடப்பட்ட சேஷ முண்டதனால் விசேடமாய் வாழுதற்கும் அடியேனுக்கு உன்னுடைய திருவருள் வேண்டும். (எ-று) (27)

349. **வாத னைப்பழக் கத்தினான் மனம் அந்த மனத்தால்**
ஓத வந்திடும் உரையுரைப் படிதொழி லுளவாம்
ஏதம் அம்மனம் மாயைஎன் றிடிற்கண்ட எல்லாம்
ஆத ரஞ்செயாப் பொய்யதற் கையமுண் டாமோ.

(பொ-ரை) வாதனைப் பழக்கத்தினால் மனமுளதாகும். அந்த மனத்தினாற் சொல்லுண்டாம். அச்சொல்லின் படியே தொழிலுண்டாம். (ஆகையால்) அம்மனமானது மாயையென்று சொன்னால் காணப்பட்ட எல்லாப் பொருள்களையும் விரும்பத்தகாத மித்தையெயாம். அங்ஙனஞ் சொல்வதற்குச் சந்தேகமில்லை. (எ-று) (28)

350. **ஐய வாதனைப் பழக்கமே மனநினை வதுதான்**
வைய மீதினிற் பரம்பரை யாதினும் மருவும்

மெய்யில் நின்றொளிர் பெரியவர் சார்புற்று விளங்கிப்
பொய்ய தென்பதையொருவிமெய் யுணருதல் போதம்

(பொ-ரை) ஐயனே! வாதனைப் பழக்கமே மனத்தின் எண்ணங்களாம் அதுவே உலகத்தில் பாரம்பரியமாய் எல்லாப் பொருள்களிலும் பொருந்தியிருக்கும். (ஆகையால்) உண்மை நிலையில் நிலைத்துப் பிரகாசிக்கின்ற பெரியோர்களுடைய சார்பையடைந்து விளங்கிப் பொய்யை நீங்கி மெய்யை யுணர்தலே அறிவாகும். (எ-று) (29)

பெரியோர்கள் இலக்கணம்

351. **குலமி லான்குணங் குறியிலான் குறைவிலான் கொடிதாம்**
புலமி லான்தனக் கென்னவோர் பற்றிலான் பொருந்தும்
இலமி லன்மைந்தர் மனைவியில் லான்எவன் அவன்சஞ்
சலமி லான்முத்தி தரும்பர சிவனெனத் தகுமே.

(பொ-ரை) குலமில்லாதவனும், குணமில்லாதவனும், குறியில்லா தவனும், ஒரு குறைவில்லாதவனும், கொடிய விஷயங்களில்லாதவனும் தனக்கென்று ஒரு பற்றில்லாத வனும் பொருந்தும் வீடில்லாதவனும் பிள்ளைகள், மனைவியில்லாதவனும் யாவன்? அவனே துக்கமற்றவனும் மோட்சத்தைத் தருதற்குச் சமைந்த பரசிவனுமாவன் என்று சொல்லத்தகும். (எ-று)

எல்லாவற்றையுந் துறந்த ஞானியே பரமசிவன் என்னலாம் என்பது கருத்து. (30)

352. **கடத்தை மண்ணென லுடைந்தபோ தோவிந்தக் கருமச்**
சடத்தைப் பொய்யெனல் இறந்தபோ தோசொலத் தருமம்
விடத்தை நல்லமிர் தாவுண்டு பொற்போது வெளிக்கே
நடத்தைக் காட்டிஎவ் வுயிரையும் நடப்பிக்கும் நலத்தோய்.

(பொ-ரை) நஞ்சை அமிர்தமாகக் கொண்டு உண்டு பொன்னம்பலத்தில் நடித்து எல்லா உயிர்களையும் நடிப்பிக் கின்ற நன்மையுடையோனே! மட்குடத்தை உடைந்த பொழுதிற்றானோ மண்ணென்று சொல்வது தருமமாகும். (அதுபோல) சரீரத்தை இறந்த பொழுதிற்றானோ பொய்யென்று சொல்வது தருமமாகும். (எ-று) (31)

353. **நானெனவும் நீயெனவும் இருதன்மை**
நாடாமல் நடுவே சும்மா
தானமரும் நிலையிதுவே சத்தியஞ்
சத்தியமென நீதமிய னேற்கு
மோனகுரு வாகியுங்கை காட்டினையே
திரும்பவுநான் முளைத்துத் தோன்றி
மானதமார்க் கம்புரிந்திங் கலைந்தேனே
பரந்தேனே வஞ்ச னேனே.

(பொ-ரை) நானென்றும் நீயென்றும் இருவகையாகப் பிரித்தறியாமல் நடுவாகச் சும்மா அமர்ந்திருக்கும் அரிய நிலையே உண்மை நிலையாகும். இது சத்தியம் என்று நீ தனியேனாகிய எனக்கு மௌனகுருவாகி எழுந்தருளி வந்து சின்முத்திரா மார்க்கமாய்க் காட்டினை (அங்ஙனமிருக்க) மீட்டும் நானென்றும் பொருள்வேறாக முளைத்து வெளிப்பட்டு வஞ்சனாகிய நான் மானஸ மார்க்கத்தை விரும்பி இவ்வுலகத்தில் திரிந்து விஷயங்களிற் படர்ந்தேன். (எ-று) *(32)*

354. **தன்மயஞ் சுபாவஞ் சுத்தந் தண்ணருள் வடிவஞ் சாந்தம்**
மின்மய மான அண்ட வெளியுரு வான பூர்த்தி
என்மய மெனக்குக் காட்டா தெனையப கரிக்க வந்த
சின்மயம் அகண்டா காரந் தட்சிணா திக்க மூர்த்தம்.

(பொ-ரை) தட்சிணா மூர்த்தமானது தன்மயமும், சுபாவமும், சுத்தமும் தண்ணிய அருள் வடிவமும், சாந்தமும், மின் வடிவமான அண்டவெளிக்குள் உருவாகி நின்ற நிறைவும். என்னுடைய வடிவத்தை எனக்குக் காட்டாது என்னை அபகரித்துக் கொள்ள வந்த சின்மயமும், அகண்டாகாரமு மாகும். (எ-று) *(33)*

355. **சிற்ற ரும்பன சிற்றறி வாளனே தெளிந்தால்**
மற்ற ரும்பென மலரெனப் பேரறி வாகிக்
கற்ற ரும்பிய கேள்வியால் மதித்திடக் கதிச்சீர்
முற்ற ரும்பிய மௌனியாய்ப் பரத்திடை
முளைப்பான்.

(பொ-ரை) சிற்றரும்பை யொத்த சிற்றறிவனாகிய ஜீவன் தெளிவடை வானானால் அரும்பு போலவும் மலர் போலவும், பேரறிவுடையவனாகி நூல்களைக் கற்றமையால் உண்டாகிய கேள்விகளால் யாவரும் மதிக்கும்படி மோட்சத்

திற்குரிய சிறப்பு முழுதும் உண்டாகப் பெற்ற மௌன நிலையுடையவனாகி மோட்ச நிலத்தில் முளைப்பான். (எ-று) (34)

356. மயக்கு சிந்தனை தெளிவென இருநெறி வகுப்பான்
நயக்கு மொன்றன்பால் ஒன்றிலை யெனல்நல வழக்கே
இயக்க முற்றிடும் மயக்கத்தில் தெளிவுறல் இனிதாம்
பயக்க வல்லதோர் தெளிவுடை யவர்க்கெய்தல் பண்போ.

(பொ-ரை) மயங்கிய மனமெனவும், தெளிந்த மனமெனவும், உள்ள இரண்டு மார்க்கங்களின் பிரிவினால் விரும்பப்பட்ட ஒன்றிலொன்றில்லை யென்று சொல்லுதல் வழக்கமாகும். (பலவகையாஞ்) சஞ்சாரத்தையடையும் மயக்கத்திலும் தெளிவடைதல் இனிதாகும். பயனைக் கொடுப்பதாகிய தெளிவினையுடையவர்க்கு மயக்கம் வந்து சேர்தல் குணமாமோ? அன்று, (எ-று) (35)

357. அருள்வடி வேழு மூர்த்தம் அவைகள்சோ பான மென்றே
சுருதிசொல் லியவாற் றாலே தொழுந் தெய்வம்எல்லாம் ஒன்றே
மருளெனக் கில்லை முன்பின் வருநெறிக் கிவ்வ ழக்குத்
தெருளின்முன் னிலையாம் உன்னைச் சேர்ந்தியான் தெளிகின்
றேனே.

(பொ-ரை) உனது திருவருளுருவமானது ஏழு மூர்த்தமாயிருக்கும். அந்த மூர்த்தங்கள் (உன்னையடைதற்குப்) படிகளாகும் என்று வேதங்கள் சொன்னமையால் (யாவராலும்) தொழப்படுந் தெய்வம் ஒருவனேயாம். (ஆகையால்) வந்ததும் பின்வருவதுமான மார்க்கங்களில் எனக்கு மயக்க மில்லை. தெளிவாக முன்னிலைப் பொருளாகிய உன்னையடைந்து இந்த வழக்கை நான் தெளிகின்றேன். (எ-று)

ஏழு மூர்த்தம்= சப்தரூபங்கள் அவையாவன:- திருமால், இந்திரன், பிரமன், உபமன்யு, சூரியன், நந்தி, வடுகன், சதாசிவன், அனந்தன், சீகண்டன், அம்பிகை, கந்தர், திருமால், பிரமன் எனக் கூறுவாருமுளர். இதில் பின்னவர்களே ஏழுருவா மூர்த்திகளெனக் கொள்க.

தெய்வம் ஒருவனாயிருக்கப் பல சமயத்தார் பலவேறு நாமங்களால் வணங்குதல் சௌபான நெறியின் இலக்கண மென்பார், 'அருள்வடிவேழு மூர்த்தமவைகள் சோபான மென்றே-சுருதி சொல்லியவாற்றாலே தொழுந் தெய்வ

மெல்லா மொன்றே' எனக் கூறினர். ஆயினும் பலவாம் வேறுபாடு களிருப்பினும் கடையில் அவைய னைத்தும் சிவன் ஒருவனிடத்திலேயே சேருதல் முறைமை யேயொழிய வேறு தெய்வத்தினிடம் சேராவாம். இதனை,

" அலகில்பல் வழியுமூதூ ரணிமையி னொன்றாமாறும்
பலபல மதமுமீற்றி னொருவழிப் படலும்போலும்"

என்பதனா னறிக. *(36)*

358. எத்தனைப் பிறப்போ எத்தனை இறப்போ
எளியனேற் கிதுவரை யமைத்த
தத்தனை யெல்லாம் அறிந்தநீ யறிவை
அறிவிலி அறிகிலேன் அந்தோ
சித்தமும் வாக்குந் தேகமும் நினவே
சென்மமும் இனியெனால் ஆற்றா
வைத்திடிங் கென்னை நின்னடிக் குடியா
மறைமுடி யிருந்தவான் பொருளே.

(பொ-ரை) வேதாந்தத்தில் தங்கியிருந்த மேலான பொருளே! எளியேனுக்கு இதுவரைக்கும் ஏற்படுத்தப் பட்டது எத்தனை சன்மமோ? எத்தனை மரணமோ? அவைகளை யெல்லாம் முற்றுணர்வினனாகிய நீ அறிவாய், அறிவில்லாதவனாகிய நான் அறியேன். ஐயோ! மனவாக்குக் காயங்களும் உன்னுடையயனவே. அப்பிறவிகளை இனி என்னால் சகிக்கமுடியாது. (ஆகையால்) இவ்வுலகத்தில் என்னை உன்னடிமைக்குடியாக வைத்தருளுவாய். (எ-று)

(37)

359. வான்பொரு ளாகி எங்குநீ யிருப்ப
வந்தெனைக் கொடுத்துநீ யாகா
தேன்பொருள் போலக் கிடக்கின்றேன் முன்னை
இருவினை வாதனை யன்றோ
தீன்பொரு ஏ.ான அமிர்தமே நின்னைச்
சிந்தையிற் பாவனைசெய்யும்
நான்பொரு ளானேன் நல்லநல் அரசே
நானிறந் திருப்பது நாட்டம்.

(பொ-ரை) தின்னுதற்குரிய பொருளாகிய அமிர்தமே! மிகவும் நல்ல அரசே! மேலான பொருளாகி எவ்விடத்தும் நீ இருக்கச் செய்து வந்து என்னை உனக்குக் கொடுத்து நான் நீயாந் தன்மையை யடையாமல் சடப்பொருள் போலக்

கிடக்கின்றேனே அது ஏன்? முன் செய்த இருவினைகளின் வாசனையல்லவா? ஆம். (ஆகையால்) உன்னைச் சிந்திக்கும் பொருளாகிய நான் சும்மா விருக்கும் நிலையமே நாடப்படும் நன்னிலையமாம். (எ-று)

நானென்ப திறந்தவிடமே கதிப்பேற்றின் நிலையமாம் என்பது கருத்து. *(38)*

360. நாட்டமூன் றுடைய செந்நிற மணியே
நடுவுறு நாயக விளக்கே
கோட்டமில் குணத்தோர்க் கெளிய நிர்க் குணமே
கோதிலா அமிர்தமே நின்னை
வாட்டமில் நெஞ்சங் கிண்ணமாச் சேர்த்து
வாய்மடுத் தருந்தினன் ஆங்கே
பாட்டளி நறவம் உண்டயர்ந் ததுபோற்
பற்றயர்ந் திருப்பதெந் நாளோ.

(பொ-ரை) திரிநேத்திரங்களையுடைய செந்நிற மாணிக்கமே! நடுவு நிலைமையாய் விளங்கும் தலைமை விளக்கே! குற்றமில்லா நற்குணத்தோர்க் கெளிய நிர்க்குணமே! நல்ல அமிர்தமே! உன்னைத் துன்பமில்லாத மனத்தைக் கிண்ணமாகச் சேர்த்தி வாயால் நிறைய உண்டேன். (உண்ட) அவ்விடத்தின் கண்ணே இசைபாடும் வண்டுகள் மதுவை மாந்தி அயர்ந்தாற் போல் யாதொரு பந்தங்களுமற்று அயர்ந்திருப்பது எந்தக் காலமோ? (எ-று)

இறைவன் சோதி சொரூபனாகலின், 'நாட்டமூன்றுடைய செந்நிற மணியே' எனவும், ஞானிகட் கெளியவனென்பார், 'கேட்டமில் குணத் தோர்க்கெளிய நிர்க்குணமே' எனவுங் கூறினார்.

தேனை நிறைய உண்ட வண்டுகள் பரவசப்பட்டிருப்பன போல் நானும் உன் அனுபவமாகிய அமிர்தத்தையுண்டு பரவசப்பட்டிருக்கும் காலம் எக்காலமென்பார். 'பாட்டாளி நறவமுண்டயர்ந்தது போற் பற்றயர்ந்திருப்ப தெந்நாளோ' எனக் கூறினார். *(39)*

361. என்னுடை உயிரே என்னுளத் தறிவே
என்னுடை அன்பெனும் நெறியாய்
கன்னல்முக் கனிதேன் கண்டமிர் தென்னக்
கலந்தெனை மேவிடக் கருணை

மன்னிய உறவே உன்னைநான் பிரியா
வண்ணமென் மனமெனுங் கருவி
தன்னது வழியற் றென்னுழைக் கிடப்பத்
தண்ணருள் வரமது வேண்டும்.

(பொ-ரை) என்னுடைய உயிரே! என் மனத்தினறிவே! என்னுடைய அன்பென்கிற நெறியையுடையவனே! கரும்பு, முக்கனிகள், தேன், கற்கண்டு, அமிர்தம் ஆகிய இவைகளைப் போல் என்னைக் கலந்து வாழும்படி நிலைத்த கிருபையையுடைய உறவே! உன்னை நான் நீங்கி நில்லாவிதமாக என்னுடைய மனமென்கிற கருவியானது தன்னுடைய குணத்தினின்றும் நீங்கி என்னிடத்துத் தங்கி இருக்கத் தண்ணிய உனது திருவருள் வரம் எனக்கு வேண்டும். (எ-று)

மனத்தை யடக்கி நன்னிலையிலிருந்தாலே மோட்ச சாதனங் கிடைக்குமாயினும் அம்மனத்தை யடக்க உன்னருளே வேண்டும் என்பார். 'என் மனமெனுங் கருவி தன்னது வழியற்றென்னுழைக் கிடப்பத்தண்ணருள் வரமது வேண்டும்' என்றார், இதனை,

" நின்னை யறப்பெறு கிற்கிலே னன்னெஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்-நின்னை
யறப்பெறு சிற்பேனேல் பெற்றேன்மற் றீண்டு
துறக்கத் திறப்பதோர் தாள்"

என்பதனா னறிக. *(40)*

எனக்கெனச் செயல்

362. எனக்கெ னச்செயல் வேறிலை யாவுமிங் கொருநின்
தனக்கெ னத்தகும் உடல்பொரு ளாவியுந் தந்தேன்
மனத்த கத்துள அழுக்கெலாம் மாற்றியெம் பிரான்நீ
நினைத்த தெப்படி யப்படி அருளுதல் நீதம்.

(பொ-ரை) எனக்கென்று வேறு செய்கைகளில்லை, எல்லாச் செய்கைகளும் உனக்கே என்று சொல்லத் தகும். (ஆகையால்) உடல், பொருள், ஆவிகளையும் உனக்குக் கொடுத்தேன். எம்பெருமானாகிய நீ என் மனத்தின் கணுள்ள குற்றங்களையெல்லாம் நீக்கி நீ எப்படி சங் கற்பித்த னையோ அப்படியே கிருபை செய்தல் நீதியாகும். (எ-று) *(1)*

363. உளவ றிந்தெலாம் நின்செய லாமென வுணர்ந்தோர்க்
களவி லானந்தம் அளித்தனை அறிவிலாப் புன்மைக்
களவு நாயினேற் கிவ்வணம் அமைத்தனை கருத்துத்
தளருந் தன்மையில் காரொடு புகலுவேன் தக்கோய்.

(பொ-ரை) தகுதியுடையவனே! உனது உட்கொள்கையை யறிந்து எல்லாம் உன்னுடைய செய்கை களாகுமென்று அறிந்தவர்க்கு அளவு சொல்லப்படாத சுகத்தையளித்தாய் (அங்ஙனமாய்) அறிவில்லாத அற்பத் தன்மையையும், திருட்டுத் தனத்தையுமுள்ள நாயொத்தவனாகிய எனக்கு இவ்வாறாக (துன்பத்தை) அளித்தாய். (ஆகையால்) என்மனந் தளருந் தன்மையை யாவரிடத்தில் எடுத்துச் சொல்லுவேன். (எ-று)

அன்பர்க் கின்ப மளித்தனை, அன்பில்லாத எனக்குத் துன்பமளித் தனை. இது யாரிடத்திற் சொல்லிக் கொள்ளற்பாற்று என்பதாம். (2)

364. என்னைத் தான்இன்ன வண்ணமென் றறிகிலா ஏழை
தன்னைத் தான் அறிந் திடஅருள் புரிதியேல் தக்கோய்
பின்னைத் தானின்றன் அருள்பெற்ற மாதவப் பெரியோர்
நின்னைத் தான்நிக ரார்என வாழ்த்துவர் நெறியால்.

(பொ-ரை) இப்படிப்பட்டவனென்று தன்னைத்தான் அறியாத எளியேனுக்குத் தன்னைத் தானறியும்படி திருவருள் புரிவையானால், பின்னர் உனது திருவருளைப் பெற்ற மகத்தாந்தவத்தினையுடைய பெரியோர்கள் முறைமையாகக் (கருணையால்) உன்னை நிகராவோர் யாவரென்று புகழ்வார்கள். (எ-று)

எனக்குத் தன்னைத் தானறியும்படி திருவருள் செய்வையானால் ஞானிகளெல்லாம் உன்னைப் புகழ்வார்கள் என்பதாம். (3)

365. ஏத மின்றித்தன் அடியிணைக் கன்புதான் ஈட்டுங்
காத லன்பர்க்குக் கதிநிலை ஈதெனக் காட்டும்
போத நித்திய புண்ணிய எண்ணரும் புவன
நாத தற்பர நானெவ்வா றுய்குவேன் நவிலாய்.

(பொ-ரை) குற்றமில்லாமல் தன்னுடைய திருவடி களுக்கு அன்பு வைத்திருக்கின்ற மிக்க அன்பையுடைய அடியவர்களுக்கு மோட்சநிலை யிதுவென்று அறிவிக்கும்

முற்றுணர்வினனே! அழியாதவனே! புண்ணியனே! அளவு சொல்லக்கூடாத புவனங்களுக்குத் தலைவனே! தற்பரனே! நான் எப்படிப் பிழைப்பேன் சொல்லாய்.(எ-று) (4)

366. வேதம் எத்தனை அத்தனை சிரத்தினும் விளங்கும்
பாத நித்திய பரம்பர நிரந்தர பரம
நாத தற்பர சிற்பர வடிவமாய் நடிக்கும்
நீத நிர்க்குண நினையன்றி ஒன்றும்நான் நினையேன்.

(பொ-ரை) எத்தனை வேதங்கள் அத்தனை வேதங்களின் முடிவு களிலும் விளங்காநின்ற திருவடிகளை யுடையவனே! நித்தியனே! பரம்பரனே! என்று முள்ளவனே! உயர்ந்த தலைவனே! தற்பரனே! ஞானவடிவமாய் நடனஞ் செய்கின்ற நீதியையுடையோனே! நிர்க்குணனே! உன்னை யல்லாமல் வேறொரு பொருளையும் நான் சிந்தியேன்.(எ-று) (5)

367. நெறிகள் தாம்பல பலவுமாய் அந்தந்த நெறிக்காஞ்
செறியுந் தெய்வமும் பலபல வாகவுஞ் செறிந்தால்
அறியுந் தன்மையிங் காருனை அறிவினால் அறிந்தோர்
பிறியுந் தன்மையில் லாவகை கலக்கின்ற
பெரியோய்.

(பொ-ரை) அறிவினால் அறிந்தவர்கள் நீங்காத வண்ணம் கலந்திருக் கின்ற பெரியோனே! சமய மார்க்கங்கள் அநேகமாகவும், அந்தந்த மார்க்கங்களிற் கலந்த தெய்வங் களும் அநேகமாகவும் நீ நிறைந் திருப்பையாயின் இவ்வுல கத்தின் உன்னையறியுந் தன்னையோர் யாவர்? (எ-று)

நீ சர்வ வியாபகனா யிருக்க உன்னையறிய வல்லார் யாவர் என்பதாம். (6)

368. பெரிய அண்டங்கள் எத்தனை அமைத்ததிற்
பிறங்கும்
உரிய பல்லுயிர் எத்தனை அமைத்தவைக் குறுதி
வருவ தெத்தனை அமைத்தனை அமைத்தருள்
வளர்க்கும்
அரிய தத்துவ எனக்கிந்த வண்ணமேன்
அமைத்தாய்.

(பொ-ரை) திருவருளைப் பெருக்குகின்ற அரிதாகிய உண்மைப் பொருளாயிருப்பவனே! பெரியனவாகிய அநேக

அண்டங்களை வகுத்து அவ்வண்டங்களுள் விளங்குகின்ற அநேக உயிர்களை வகுத்து, அவ்வுயிர்களுக்கு உறுதி பயப்பனவாகிய அநேக பொருள்களையும் வகுத்தாய். (அங்ஙனம்) வகுத்தும் அடியேனாகிய யானொருவனுக்கே இவ்விதமாக ஏன் வகுத்தாய்? (எ-று) (7)

369. **கணம தேனுநின் காரணந் தன்னையே கருத்தில்**
உணரு மாதவர்க் கானந்தம் உதவினை யொன்றுங்
குணமி லாதபொய் வஞ்சனுக் கெந்தைநிர்க் குணமா
மணமு லாமலர்ப் பதந்தரின் யாருனை மறுப்பார்.

(பொ-ரை) எமது தந்தையே! ஒரு க்ஷணநேரமாயினும் உனது முதற்றன்மையையே எண்ணி அறிகின்ற மகத்தாந்தவத்தோர்க்குச் சுகத்தைத் தந்தனை. சிறிதும் நற்குணமில்லாத பொய்யையும், வஞ்சனையையு முடைய எனக்கு நிர்க்குணமாகிய மணம் வீசப்பெற்ற தாமரைமலர் போலுந் திருவடிகளைத் தந்தால் கொடாதையென்று தடுப்பவர் யாவர்? நீ தந்தை யாதலின் தந்தை மைந்தனுக்குக் கொடுக்கும் பொருளைத் தடுப்பவர் உண்டோ? இல்லை. ஆகையால் நீ எனக்கு உனது திருவடிகளைத் தந்தருளல் வேண்டும் என்பதாம். (எ-று) (8)

370. **கன்னல் முக்கனி கண்டுதேன் சருக்கரை கலந்த**
தென்ன முத்தியிற் கலந்தவர்க் கின்பமா யிருக்கும்
நன்ன லத்தநின் நற்பதந் துணையென நம்பச்
சொன்ன வர்க்கெனா லாங்கைம்மா றில்லைஎன் சொல்வேன்.

(பொ-ரை) முத்தி நிலையிற் கூடினவர்களுக்கு கரும்பும், முக் கனிகளும், கற்கண்டும், தேனும், சர்க்கரையும் கலந்தாற் போல இன்பமாயிருக்கின்ற உன்னுடைய சிறந்த திருவடிகளே துணையாகுமென்று நம்பும்படி உபதேசஞ் செய்த மௌனாசாரியருக்கு என்னாற் செய்யப் படுவதாகிய பிரதியுபகாரம் ஒன்றுமில்லை. (அதற்கு நான்) என்ன சொல்வேன்? (எ-று) (9)

371. **தந்தை தாய்தமர் மகவெனும் அவையெலாஞ் சகத்தில்**
பந்தமாம் என்றே அருமறை வாயினாற் பகர்ந்த
எந்தை நீஎனை இன்னமவ் வல்லலில் இருத்தில்
சிந்தை தான்தெளிந் தெவ்வணம் உய்வணஞ் செப்பாய்.

(பொ-ரை) தந்தை, தாய், சுற்றத்தார், பிள்ளைகள் என்று சொல்லப் படுபவையெல்லாம் உலகத்தின்கண் பந்தமாகு மென்றே சொல்லியருளிய எமது தந்தையாகிய நீ என்னை இன்னமும் துன்பத்தில் இருத்தி வைத்தால், எனது மனந்தெளிந்து எப்படி பிழைப்பேன்? சொல்லாய்.(எ-று)(10)

372. துய்யன் தண்ணருள் வடிவினன் பொறுமையால் துலங்கும்
மெய்யன் என்றுனை ஐயனே அடைந்தனன் மெத்த
நொய்யன் நுண்ணிய அறிவிலன் ஒன்றைநூறாக்கும்
பொய்ய னென்றெனைப் புறம்விடின் என்செய்வேன் புகலாய்.

(பொ-ரை) ஐயனே! பரிசுத்தன், கருணையே திருமேனியாக வுடையவன், பொறுமையால் விளங்கும் மெய்யன், என்றறிந்து உன்னை யடைந்தேன். (அங்ஙனமடைந்த என்னை) மிகவும் புல்லன், மந்தன், ஒன்றை நூறாக்குகின்ற பொய்யன் என்றெண்ணி ஆதரியாமல் விட்டுவிட்டால் நான் என்ன செய்யக் கடவேன்? சொல்லாய்.(எ-று)

என்னைக் கைவிடாதை என்பது கருத்து. (11)

373. ஒன்ற தாய்ப்பல வாய்உயிர்த் திரட்கெலாம் உறுதி
என்ற தாய்என்றும் உள்ளதாய் எவற்றினும் இசைய
நின்ற தாய்நிலை நின்றிடும் அறிஞஎன் நெஞ்சம்
மன்ற தாய் இன்ப வுருக்கொடு நடித்திடின் வாழ்வேன்.

(பொ-ரை) ஒன்றாகியும், பலவாகியும், உயிர்கட்கெல்லாம் உறுதி பயக்கத் தக்கதாகியும், என்றைக்கு முள்ளதாகியும், எப்பொருள்களிலும் பொருந்தியுள்ள தாகியும் இருக்கின்ற முற்றறிவினனே! என்னுடைய மனமானது திருச்சிற்றம்பலமாகக் கொண்டு (அதில்) சுகரூபங்கொண்ட நடனஞ் செய்தாலே நான் உயிர் பிழைப்பேன். (எ-று) அங்ஙனஞ் செய்யாவிடின் பிழையேன் என்பது குறிப்பு. (12)

374. தனியி ருந்தருட் சகசமே பொருந்திடத் தமியேற்
கினியி ரங்குதல் கடனிது சமயமென் னிதயக்
கனிவும் அப்படி யாயின தாதலாற் கருணைப்
புனித நீயறி யாததொன் றுள்ளதோ புகலாய்.

(பொ-ரை) நான் தனியேயிருந்து திருவருட்டுணை யினால் சகசநிட்டையைப் பொருந்துமாறு தனியேனாகிய எனக்கு இனிமேல் மனமிரங்குவது உனக்குக் கடமையாகும். (ஏனெனில்) என்மனத்தின் கரைதலும்படியே யாயிற்றா கையால் கருணாமூர்த்தியாகிய நிர்மலனே! நீ அறியாத காரியம் ஒன்றுண்டோ, சொல்லாய். (எ-று)

நான் சகசநிட்டையை அடையும்படி அருள் செய்ய வேண்டியவன் நீயே என்பதாம். *(13)*

375. திருந்து சீரடித் தாமரைக் கன்புதான் செய்யப்
பொருந்து நாள்நல்ல புண்ணியஞ் செய்யுநாள்
பொருந்தா
திருந்த நாள்வெகு தீவினை யிழைத்தநாள் என்றால்
அருந்த வாவுனைப் பொருந்துநாள் எந்தநாள்
அடிமை.

(பொ-ரை) அரியதவ வடிவத்தையுடையவனே! திருத்தமும் சிறப்பும் வாய்ந்த தாமரைபோலுந் திருவடிகளுக்கு அன்பு வைக்கப் பொருந்திய நாள் நல்ல புண்ணியஞ் செய்த நாளாகும். அன்பு செய்யப் பொருந்தாதிருந்த நாள் மிக்க தீவினை செய்த நாளாகும் என்றால் அடியவனாகிய நான் உன்னை யடையுநாள் எந்த நாள்? (எ-று) *(14)*

376. பின்னும் முன்னுமாய் நடுவுமாய் யாவினும் பெரிய
தென்னுந் தன்மையாய் எவ்வுயிர்த் திரளையும் இயக்கி
மன்னுந் தண்ணருள் வடிவமே உனக்கன்பு வைத்துந்
துன்னும் இன்னல்ஏன் யானெனும் அகந்தையேன்
சொல்லாய்.

(பொ-ரை) பின்னு முன்னுமாகி, நடுவுமாகி, எப்பொருள் களிலும் (இப்பொருள்) பெரியதென்னுந் தன்மையை யுடையதாகி, எல்லாவுயிர்க் கூட்டங்களையும் இயங்கு வித்துத் தான் அசைவற்றிருக்கும் தண்ணிய திருவருள் வடிவமே! உன்னிடத்தில் அன்புசெய்தும் நெருங்கிய துன்பம் (உள்ளது) எற்றுக்கு? நான் என்னும் அகங்காரம் (உள்ளது) எற்றுக்கு, நீ சொல்லாய். (எ-று)

உன்னிடத்தில் அன்புடையவனாகியும் துன்பமும், அகங்காரமும் போகாமைக்குக் காரணம் அறியேன் என்பதாம். *(15)*

377. மின்னை யன்னபொய் வாழ்க்கையே நிலையென மெய்யாம்
உன்னை நான்மறத் தெவ்வணம் உய்வணம் உரையாய்
முன்னை வல்வினை வேரற முடித்தென்று முடியாத்
தன்னைத் தன்னடி யார்க்கருள் புரிந்திடுந் தக்கோய்.

(பொ-ரை) பூர்வவினையைக் கெடுத்து என்றும் அழியாத தன்னைத் தன்னன்பர்க்குக் கொடுத்து அருள் செய்கின்ற தகுதியால் குணமுடையோனே! மின்னலைப் போன்ற நிலையாத பொய்வாழ்க்கையே நிலையுள்ளதாக வெண்ணி உண்மைப் பொருளாகிய உன்னை நான் மறந்து எப்படிப் பிழைப்பேன் சொல்லாய். (எ-று)

உலக வாழ்க்கையை விரும்பி உன்னை மறந்தேனா கையால் எப்படிப் பிழைப்பேன் என்பதாம். (16)

378. எம்ப ராபர எம்முயிர்த் துணைவஎன் றிறைஞ்சும்
உம்பர் இம்பர்க்கும் உளக்கணே நடிக்கின்றாய் உன்றன்
அம்பொன் மாமலர்ப் பதத்தையே துணையென அடிமை
நம்பி னேன்இனிப் புரப்பதெக் காலமோ நவிலாய்.

(பொ-ரை) எமது பராபரனே! எமது உயிர்த் துணைவனே! என்று சொல்லி வணங்குகின்ற அவ்வுலகர்க்கும், இவ்வுலகர்க்கும், அவ்வவர் மனத்தின் கண்ணே நடிக்கின்றனை. (ஆகையால்) உன்னுடைய அழகிய பொன்போன்ற திருவடிகளையே துணையென்று நம்பினேன். இனி என்னைப் பாதுகாப்பது எக்காலமோ? சொல்லாய். (எ-று) (17)

379. பாடி யாடிநின் றிரங்கிநின் பதமலர் முடிமேல்
சூடி வாழ்ந்தனர் அமலநின் னடியர்யான் தொழும்பன்
நாடி யேஇந்த உலகத்தை மெய்யென நம்பித்
தேடி னேன்வெறுந் தீமையே என்னினிச் செய்வேன்.

(பொ-ரை) பரிசுத்தனே! உன்னடியார்கள் (உன்னைப்) பாடி, ஆடி, மனமிரங்கியழுது உன் திருவடியாகிய மலரை முடிமேல் சூடிக் கொண்டு பிழைத்தனர். தொண்டனாகிய நான் இந்தப் பிரபஞ்சத்தை விரும்பி உண்மையானதென்று நம்பி வெறுந் தீவினையையே தேடினேன். (ஆகையால்) நான் இனிமேல் என்ன செய்வேன்? (எ-று)

உன்னடியவர்களெல்லாம் உன்னையே புகழ்ந்து உன் திருவடிபற்றி வாழ்ந்தார்கள். நான் உலகவாழ்க்கையை விரும்பி வாடினேன். ஆகையால் எங்ஙனமுய்வேன் என்பதாம். (18)

380. **களவு வஞ்சனை காமமென் றிவையெலாங் காட்டும்**
அளவு மாயைஇங் காரெனக் கமைத்தனர் ஐயா
உளவி லேஎனக் குள்ளவா றுணர்த்தின்உன் அடிமை
வளரும் மாமதி போல்மதி தளர்வின்றி வாழ்வேன்.

(பொ-ரை) ஐயனே? திருட்டுத்தனம், கபடம், காமம் என்கிற இவற்றை யெல்லாம் காட்டு மளவினையுடைய மாயையை இவ்வுலகத்தில் எனக்குச் சேர்த்து வைத்தவர் யாவர்? உள்ள வகையை எனக்கு மந்தணமாய் அறிவுறுத் தினால் உன்னடிமையாகிய நான் மனங்கலங்குதலில்லாமல் வளர்பிறையைப் போல் வாழ்ந்திருப்பேன். (எ-று)

மாயையின் உளவை எனக்கறிவுறுத்தினால் நான் நன்றாய் வாழ்ந் திருப்பேன் என்பதாம். *(19)*

381. **வான நாயக வானவர் நாயக வளங்கூர்**
ஞான நாயக நான்மறை நாயக நலஞ்சேர்
மோன நாயக நின்னடிக் கன்பின்றி முற்றுந்
தீன னாய் அகம் வாடவோ என்செய்வேன் செப்பாய்.

(பொ-ரை) தேவலோகத்திற்குத் தலைவனே! தேவர்கட்குத் தலைவனே! மிகுந்த வளப்பத்தையுடைய ஞானத் தலைவனே! நான்கு வேதங்களுக்குந் தலைவனே! நன்மைபொருந்திய மௌனநிலைக்குத் தலைவனே! உன்னுடைய திருவடிகட்கன் பில்லாமல் முழுதும் ஏழையாகி மனம் வாடா நிற்கவோ? என்ன செய்வேன்? சொல்லாய். (எ-று)

உன்னடிக் கன்பின்றி வாடி நிற்கத்தகுமோ என்பதாம். (20)

382. **ஏத மற்றவர்க் கின்பமே பொழிகின்ற இறையே**
பாத கக்கருங் கல்மனங் கோயிலாப் பரிந்து
சூத கத்தனா யாதினும் இச்சைமேல் தோன்றும்
வாத னைக்கிட மாயினேன் எவ்வணம் வாழ்வேன்.

(பொ-ரை) குற்றமற்றவர்களுக்குச் சுகமழையையே பொழிகின்ற இறைவனே! பாவவுருவாகிய கருங்கன் மன

மானது கோயிலாக விரும்பி வஞ்சனையுடையவனாய் எப்பொருள்களிலும் அவாமிகுதியாய்த் தோன்றும் லோக வாதனைக்கு இடமாய் இருக்கின்றேன்.(ஆகையால்) எப்படிப் பிழைப்பேன்? (எ-று)

உலக வாழ்க்கையை விரும்பினேன் எப்படிப் பிழைப் பேன் என்பதாம். *(21)*

383. **தெளிவொ டீகையோ அறிகிலான் அறிவிலான் சிறிதும்**
அளியி லான்இவன் திருவருட் கயலென அறிந்தோ
எளிய னாக்கினை என்செய்வேன் என்செய்வேன் எல்லா
ஒளியு மாய்நிறை வெளியுமாய் யாவுமாம் உரவோய்.

(பொ-ரை) ஒளியுடைப் பொருள்களெல்லாமாகியும் நிறைந்த வெளியாகியும், மற்றுமுள்ள வெல்லாமுமாகும் ஞான ரூபனே! தேற்றமும், கொடையும் அறியாதவன், அறிவு இல்லாதவன், சற்றுங் கருணை யில்லாதவன், இப்படிப் பட்டவனாகிய இவன் திருவருளுக்குப் புறமாவா னென்றறிந்தோ, என்னை ஏழையாக்கினாய் (நீ இங்ஙனஞ் செய்தமையால்) நான் என்ன செய்யக் கடவேன்.

நீ எனக்குத் திருவருள் தராமையால் நான் என்ன செய்யக் கடவேன் என்பதாம். *(22)*

384. **கண்ணி னுள்மணி யென்னவே தொழும் அன்பர் கருத்துள்**
நண்ணு கின்றநின் அருளெனக் கெந்தநாள் நணுகும்
மண்ணும் விண்ணும்மற் றுள்ளன பூதமும் மாறாப்
பெண்ணும் ஆணுமாய் அல்லவாய் நிற்கின்ற பெரியோய்.

(பொ-ரை) நிலவுலகமும், வானுலகமும், மற்றுமுள்ள பூதங்களும் நீங்காத பெண்ணும், ஆணுமாகியும், அவையல்லா தனவுமாகியும் நிற்கின்ற பெரியோனே! கண்மணி யென்னும்படி வணங்கும் அன்பர்களது மனத்தில் குடிகொண்டிருக்கின்ற உன்னுடைய திருவருளானது எனக்கு எந்தக்காலம் வந்துகூடும்? (எ-று)

உனது திருவருள் எனக்கு எக்காலத்திற் கிடைக்கும் என்பதாம். *(23)*

385. **சகமெ லாந்தனி புரந்தனை தகவுடைத் தக்கோர்**
அகமெ லாநிறைந் தானந்த மாயினை அளவில்
மகமெ லாம்புரிந் தோரைவாழ் வித்தனை மாறா
இகமெ லாமெனைப் பிறந்திடச் செய்ததேன் எந்தாய்.

(பொ-ரை) நமது தந்தையே! எல்லா உலகங்களையும் காப்பாற்றினை, தகுதியுடைய பெரியோர்களது மனங்களி லெல்லாம் நிறைந்து சுகவடிவ மாயினை. அளவில்லாத யாகத்தைச் செய்தோர்களை வாழ்வித்தனை. என்னை மாத்திரம் இவ்வுலகங்களிலெல்லாம் பிறக்கும்படி செய்தது எற்றுக்கு? (எ-று).

யாவரையுங் காப்பாற்றி என்னை மாத்திரம் பிறவியிற் புகுத்தியதற்குக் காரணம் யாது என்பதாம். (24)

386. ஏய்ந்த நல்லருள் பெற்றவர்க் கேவலாய் எளியேன்
வாய்ந்த பேரன்பு வளர்க்கவுங் கருணைநீ வளர்ப்பாய்
ஆய்ந்த மாமறை எத்தனை அத்தனை அறிவால்
தோய்ந்த பேர்கட்குந் தோன்றிலாத் தோன்றலாந் தூயோய்.

(பொ-ரை) (உன்னை ஆராயப்பட்ட) வேதங்களனைத் தையும் கற்றறிந்த பெரியோர்களுக்குங் காணப்படாத பெரியோனாகிய நிர்மலனே! ஏழையாகிய நான் பொருந்திய திருவருளைப் பெற்றவர்கட்கு ஏவலாளியாகி மிக்க அன்பை வளர்க்கும்படியாகவும் நீ உனது கிருபையை வளர்க்க வேண்டும். (எ-று)

நான் உன்னடியார்க் கேவலாளனாகி அன்பைப் பெருக்கும் பொருட்டு நீயும் கருணையைப் பெருக்க வேண்டும் என்பதாம். (25)

387. தக்க நின்னருட் கேள்வியோ சிறிதின்றித் தமியேன்
மிக்க தெய்வமே நின்னின்ப வெள்ளத்தில் வீழேன்
ஒக்கல் தாய்தந்தை மகவெனும் பாசக்கட் டுடனே
துக்க வெள்ளத்தில் ஆழ்கின்றேன் என்செய்வான்
துணிந்தேன்.

(பொ-ரை) மேலாந் தெய்வமே! தகுந்த உனது திருவருட் கேள்வி கொஞ்சமும் இல்லாமையால் தனியேனாகிய நான் உனது சுகப்பிரவாகத்தில் மூழ்கேன். (ஆனால்) சுற்றத்தார், தாய், தந்தை, புதல்வன் என்கிற பாசக் கட்டுடன் துக்கப் பிரவாகத்தில் மூழ்குகின்றேன். என் செய்யத் தெளிந்தேன்.(எ-று)

இன்பத்தை அனுபவியாமல் துன்பத்தையே அநுபவிக்கின்றேன் என்பதாம். (26)

388. **பவம்பு ரிந்திடும் பாவியேற் கருள்நிலை பதியத்**
தவஞ்செ யும்படித் தயவுசெய் தருள்வதே தருமம்
அவம்பு ரிந்திடார்க் கானந்த அமிர்தத்தை அளிக்க
நவங்கொள் தத்துவத் திரையெறி கடலெனும்
நலத்தோய்.

(பொ-ரை) வீண் காரியத்தைச் செய்யாதவர்களுக்குச் சுகாமிர்தத்தைக் கொடுக்கும் பொருட்டு புதிய தத்துவமாகிய அலைகளை வீசுகின்ற (கருணைக்) கடலென்று சொல்லப்படும் நன்மையை யுடையோனே! பாவத்தைச் செய்கின்ற பாவியாகிய எனக்குத் திருவருள் நிலையானது. பதியும்பொருட்டுத் தவஞ் செய்யும்படி தயவு செய்து திருவருள் செய்வதே தருமமாகும். (எ-று)

இறைவனே எனக்குத் திருவருள்நிலை பதியும்படி தவஞ் செய்யத் தயை செய்ய வேண்டும் என்பதாம். (27)

389. **உற்று ணர்ந்தெலாம் நீயல தில்லையென் றுனையே**
பற்று கின்றனர் எந்தைநின் னடியர்யான் பாவி
முற்று மாயமாஞ் சகத்தையே மெய்யென முதல்தான்
அற்றி ருந்திடத் தொழில்செய்வான் தனைநிக ரானேன்.

(பொ-ரை) எமது தந்தையே! உன்னுடைய அடியார்கள் எல்லா வற்றையும் ஆராய்ந்தறிந்து எல்லாம் நீயேயன்றி வேறு பொருளில்லை யென்று துணிந்து உன்னையே தொடருகின்றார்கள். பாவியாகிய நானோ, முழுதுமித்தையாகிய உலக வாழ்க்கையே மெய்யென்று கொண்டு முதலாக வைத்த பொருள் ஒழிந்திடும்படி ஒரு தொழில் செய்பவனை நிகர்ப்ப வனானேன். (எ-று)

உன்னடியார்களெல்லாம் உன்னையதைலாகிய பிரயோ சனத்தை அடைந்தார்கள். நானோ முதலிழக்கச் செய்யுந் தொழிலாளியை ஒப்பானேன் என்பதாம். (28)

மண்டலத்தின்

இது அந்தாதித் தொடக்காகச் செய்யப்பட்டது

390. **மண்டலத்தின் மிசையொருவன் செய்வித்தை**
யகோவெனவும் வார ணாதி
அண்டமவை அடுக்கடுக்காய் அந்தரத்தில்
நிறுத்துமவ தானம் போல

எண்தரும்நல் லகிலாண்ட கோடியைத்தன்
அருள்வெளியில் இலக வைத்துக்
கொண்டுநின்ற அற்புதத்தை எவராலும்
நிச்சயிக்கக் கூடா ஒன்றை.

(பொ-ரை) உலகத்தில் ஒருவன் செய்த வித்தையானது ஆச்சரியத்தைப் பயக்கத் தக்கது என்று சொல்லவும், கோழி முதலியவற்றின் முட்டைகளை அடுக்கடுக்காக ஆகாயத்தில் நிறுத்துகின்ற சாமர்த்தியம் போல எண்ணுகின்ற நல்ல அகிலாண்ட கோடிகளைத் தனது திருவருளாகிய வெளியில் விளங்கும் படி வைத்துக் கொண்டிருக்கிற ஆச்சரியப் படத்தக்க பொருளை, யாவராலும் நிச்சயிக்கப்படாத ஒப்பற்ற பொருளை, (எ-று)

இது முதல் எட்டுப் பாட்டுங் குளகம், "குளகம் பலபாட் டொருவினைகொள்ளும்" என்றாராகலின். (1)

391. **ஒன்றிரண்டாய் விவகரிக்கும் விவகாரங்**
கடந்தேழாம் யோக பூமி
நின்றுதெளிந் தவர்பேசா மௌனநியா
யத்தைநிறை நிறைவைத் தன்னை
அன்றியொரு பொருளிலதாய் எப்பொருட்குந்
தான்முதலாய் அசல மாகி
என்றுமுள்ள இன்பத்தைத் தண்ணென்ற
சாந்தபத இயற்கை தன்னை.

(பொ-ரை) ஒன்று, இரண்டு என்று விவகரிக்கிற விவகாரங்களைத் கடந்து ஏழாகிய ஞான பூமிகளில் நிலைத்துத் தெளிந்தவர்கள் பேசாமைக்குக் காரணமாகிய மௌனநீதியை, முழுநிறைவை, தன்னையல்லாமல் வேறு பொருளில்லாததாக எல்லாப் பொருள்களுக்கும் தான் முதற்பொருளாகியும் சலியாததாகியும் எக்காலத்துமுள்ள சுகப்பொருளை, குளிர்ந்த சாந்தபதமாகிய சுபாவப் பொருளை. (எ-று) (2)

392. **பதமூன்றுங் கடந்தவர்க்கு மேலான**
ஞானபதப் பரிசு காட்டிச்
சதமாகி நிராலம்ப சாட்சியதாய்
ஆரம்பத் தன்மை யாகி
விதம்யாவுங் கடந்தவித்தை யெனுமிருளைக்
கீண்டெழுந்து விமல மாகி

மதமாறுங் காணாத ஆனந்த
சாகரத்தை மௌன வாழ்வை.

(பொ-ரை) சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று பதங்களையுங் கடந்தவர்களுக்கு உயர்ந்த ஞானபதத்தின் தன்மையை அறிவுறுத்திச் சதமுடைய பொருளாகியும், பற்றுக்கோடில்லாத சாட்சியாகியும், ஆதியாந் தன்மையுடையதாகியும் எல்லா வகைகளையுங் கடந்து அஞ்ஞானமென்கிற இருட்டைக் கிழித்தெழுந்தமையால் மலரகிதமுடையதாகியுமுள்ள ஆறு மதங்களாலுங் காணப்படாத சுகவாரிதியை, மௌன வாழ்க்கையை. *(3)*

393. வாழ்வனைத்துந் தந்தஇன்ப மாகடலை
நல்லமிர்தை மணியைப் பொன்னைத்
தாழ்வறஎன் உளத்திருந்த தத்துவத்தை
அத்துவித சாரந் தன்னைச்
சூழ்பெரும்பே ரொளியையொளி பரந்தபர
வெளியை இன்பச் சுகத்தை மாறா
தேழுலகுங் கலந்தின்றாய் நாளையா
யென்றுமாம் இயற்கை தன்னை.

(பொ-ரை) எல்லா வாழ்வுகளையுங் கொடுத்த பேரின்பக் கடலை, (அக்கடலிற்றோன்றும்) நல்ல அமிர்தத்தை மாணிக்கத்தை, பொன்னை இழிவில்லாமல் என் மனத்திற் குடி கொண்டிருந்த உண்மைப் பொருளை, அத்துவிதத்தின் ரசத்தை, சூழ்ந்து விளங்கும் பேரொளியை, அவ்வொளி பரவியுள்ள பரமாகாயத்தை, ஆனந்தத்தை, ஏழுலகங்களிலும் பிரியாமற் கலந்து இன்றாகி, நாளையாகி, என்றுமாகின்ற இயற்கையை. (எ-று) *(4)*

394. தன்னையறிந் தவர் தம்மைத் தானாகச்
செய்தருளுஞ் சமத்தை லோகம்
மின்னை நிகர்த் திடவழியாச் சொரூபானத்
தச்சுடரை வேத மாதி
என்னையறி வரிதென்னச் சமயகோ
டிகளிடைய இடையறாத
பொன்னைவிரித் திடுமுலகத் தும்பரும்இம்
பரும்பரவும் புனித மெய்யை.

(பொ-ரை) தன்னை அறிந்தவர்களைத் தானாகச் செய்தருள்கின்ற சமநிலையை, பிரபஞ்சமானது மின்னலைப்

போன்றழியத்தான் அழியாத சொரூபானந்தச் சோதியை, வேத முதலியவை (இறைவனை) அறிவதற் கருமையென்று முறையிட (அதையறிந்த) பல சமயங்களும் இடையவும், என்றும் நீங்காத பொன்னுலகத்துள்ள தேவர்களும், இவ்வுல கத்தார்களும் துதிக்கின்ற நிர்மலப் பொருளை. (எ-று) (5)

395. பரவரிய பரசிவமாய் அதுவெனலாய்
நானெனலாய்ப் பாச சாலம்
விரவிநின்ற விசித்திரத்தை ஐக்யபதத்
தினிதிருந்த விவேகந் தன்னை
இரவுபகல் நினைப்புமறப் பெனுந்தொந்தம்
அறியார்கள் இதயம் வேதச்
சிரமெனவாழ் பராபரத்தை ஆனந்தம்
நீங்காத சிதாகா சத்தை.

(பொ-ரை) சிந்தித்தற்கரிய பரசிவமாகி, அதுவென்று சொல்லுவதாகி, நானென்று சொல்லுவதாகி, பாசகாலத்தோடு கூடி நின்ற விசித்திர ரூபத்தை ஐக்யபதத்தில் இனிதாயிருந்த ஞானவடிவை, இராப்பகல்கள் நினைப்பு மறப்புக்கள் என்று சொல்லப்படுகிற தொந்தத்தை அறியாதவர்களுடைய இருதயமே வேதாந்தமென்று (அதன்கண்) வாழ்கின்ற பராபரவஸ்துவை, சுகநீங்காத ஞானாகாயத்தை. (எ-று) (6)

396. அத்துவித அநுபவத்தை அனந் தமறை
இன்னம்இன்னம் அறியேம் என்னும்
நித்தியத்தை நிராமயத்தை நிர்க்குணத்தைத்
தன்னருளால் நினைவுக் குள்ளே
வைத்துவைத்துப் பார்ப்பவரைத் தானாக
எந்நாளும் வளர்த்துக் காக்குஞ்
சித்தினைமாத் தூவெளியைத் தன்மயமாம்
ஆனந்தத் தெய்வந் தன்னை.

(பொ-ரை) அத்துவிதாநுபவமா யுள்ளதை, பலவேதங்களால் இன்னுமறியோமென்று சொல்லப்படும் நித்திய வஸ்துவை, நிராமய வஸ்துவை, நிர்க்குண வஸ்துவை, தனதருளால் மனத்திற்குள் வைத்து வைத்து நோக்குவாரைத் தானேயாகி எக்காலமும் வளர்த்துக் காக்கின்ற சித்துப்பொருளை பெரிய நிர்மலாகாயத்தை, தன்மயமாகிய சுகதெய்வத்தை. (எ-று) (7)

397. தன்னிலே தானாக நினைந்துகனிந்
தவிழ்ந்துசுக சமாதி யாகப்
பொன்னிலே பணிபோலும் மாயை ஒரு
மனமேஉன் புரைகள் தீர்ந்தாய்
என்னினோ யான்பிழைப்பேன் எனக்கினியார்
உன்போல்வார் இல்லை இல்லை
உன்னிலோ திருவருளுக் கொப்பாவாய்
என்னுயிர்க்கோர் உறவு மாவாய்.

(பொ-ரை) பொன்னில் ஆபரணமுண்டானாற் போலும் மாயையினால் உண்டாக்கப்பட்ட மனமே! தன்னிலேதான் ஒடுங்கும்படி நினைந்து கனிந்து அவிழ்ந்து இன்பம் விளைக்குஞ் சமாதியுண்டாகும் பொருட்டு உன்னுடைய குற்றங்களினின்றும் நீங்குவையாயின் நான் பிழைப்பேன். (ஆகையால் நீ அங்ஙனஞ் செய்வையாயின்) இனி எனக்கு உன்னை யாவர் யொப்பாவோர் இருக்கின்றனர். ஒருவருமில்லை. நீ அதனை நினைத்துப் பார்த்தாயானால் திருவருளுக்கொப்பாவாய், எனதுயிர்க்கும் ஒரு உறவாவாய்.(எ-று) *(8)*

398. உறவுடலை எடுத்தவரில் பிரமாதி
யேனும்உனை யொழிந்து தள்ளற்
கறவுமரி தரிதன்றோ இகபரமும்
உன்னையன்றி யாவ துண்டோ
வறிதிலுன்னை அசத்தென்னல் வழக்கன்று
சத்தெனவும் வாழ்த்து வேனென்
சிறுமை கெடப் பெருமையினின் சென்மதே
யத்தினில்நீ செல்லல் வேண்டும்.

(பொ-ரை) மிக்க உடம்பெடுத்தவர்களில் பிரமன் முதலியோரானாலும் உன்னைவிட்டு நீங்கி உன்னை யொழித்தற்கு மிகவும் அருமையல்லவா? இம்மை மறுமைப் பயன்களும் உன்னையல்லாமல் ஆவதுண்டோ? வீணாக உன்னை அசத்தென்று சொல்லுதல் நன்மையன்று. நானே சத்தென்றும் வாழ்த்துவேன். (ஆகையால்) என்னுடைய புன்மை கெடும் பொருட்டு நீ பெருமையோடு உன்னுடைய சென்ம பூமிக்குப் போய்ச் சேர்தல் வேண்டும். (எ-று)

மனமே! நீ என்னைவிட்டொழிய வேண்டுமென்பார், 'பெருமையினின் சென்மதேயத்தினிநீ செல்லல் வேண்டும்' என்றார். *(9)*

399. **வேண்டியநாள் என்னோடும் பழகிய நீ**
எனைப்பிரிந்த விசாரத் தாலே
மாண்டுகிடக் கினும் அந்த எல்லையையும்
பூரணமாய் வணக்கஞ் செய்வேன்
ஆண்டகுரு மௌனி தன்னால் யானெனதற்
றவனருள்நான் ஆவேன் பூவிற்
காண்டகஎண் சித்திமுத்தி எனக்குண்டாம்
உன்னாலென் கவலை தீர்வேன்.

(பொ-ரை) அநேக நாளாக என்னோடும் பழகியிருந்த நீ என்னைப் பிரிந்து போன துக்கத்தில் மாண்டு கிடந்தாலும் (மாண்டுகிடந்த) அந்த இடத்தையும் நான் பூர்த்தியாய் வணக்கஞ் செய்வேன். அன்றி, என்னை யடிமை கொண்ட மௌன குருவினால் நான் என்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் நீங்கி அவனுடைய திருவருளே நானாவேன். அன்றி எனக்கு உலகத்திற் காணும்படி அஷ்டசித்திகளும், மோட்சமும், உண்டாகும் (அப்பொழுது) உன்னால் என் துக்கமுந் தீர்வேன். (எ-று)

(10)

400. **தீராத என்சனன வழக்கெல்லாந்**
தீருமிந்தச் சனைத் தோடே
யாரேனும் அறிவரிய சீவன்முத்தி
யுண்டாகும் ஐய ஐயோ
காரேனுங் கற்பகப்பூங் காவேனும்
உனக்குவமை காட்டப் போமோ
பாராதி யாகஎழு மண்டலத்தில்
நின்மகிமை பகர லாமோ.

(பொ-ரை) ஐயனே! நீங்காத என்னுடைய சென்ம வழக்கெல்லாம் இந்தச் சென்மத்தோடே நீங்கும். யாராலு மறிதற்கரிய சீவன் முத்தி யுண்டாகும். (ஆகையால்) அந்தோ! மேகத்தையாயினும், கற்பகச் சோலையை யாயினும் உனக்கொப்பாகச் சொல்லப்போமோ? பூமி முதலாகச் சொல்லப் பட்ட ஏழு லோகங்களிலும் உன்னுடைய கீர்த்தியை எடுத்துச் சொல்லலாகுமோ? (எ-று)

உன்மகிமை யாவராலுமெடுத்துச் சொல்ல முடியாது என்பதாம். *(11)*

பாயப்புலி

401. பாயப் புலிமுன் மான்கன்றைக் காட்டும் படிஅகில
மாயைப் பெரும்படைக் கேஇலக் காவெனை
வைத்தனையோ
நீயெப் படிவகுத் தாலுநன் றேநின் பெருங்கருணை
தாயொத் தடியர்க் கருள்சச்சி தானந்த தற்பரமே.

(பொ-ரை) உன்னுடைய மிக்க திருவருளைத் தாயின் (கருணை) போன்று அடியர்க்கருள் செய்கின்ற உண்மை யறிவானந்த தற்பரப் பொருளே! பாய்கின்ற அந்தப் புலியின் முன்னர் மானானது தன் கன்றைக் காட்டுதல் போல, உலக மாயையாகிய பெரிய ஆயுதத்துக்கே குறியாக என்னை வகுத்து வைத்தாயோ? நீ எப்படி வகுத்தாலும் நல்லதே. (எ-று)

இது முதல் பத்துப்பாட்டுக்களும் அந்தாதித் தொடக்காகச் செய்யப் பட்டன. (1)

402. தற்பர மாஞ்சிற் பரமாகி மன்றந் தனில் நடித்து
நிற்பர்அம் போருகன் மால்பணி நீதரென் நெஞ்சகமாங்
கற்பரந் தாங்கு கரைந்திட வானொத்த காட்சிநல்கும்
பொற்பர மாயென் வினைக்கருந் தாதைப் பொடிசெய்ததே.

(பொ-ரை) பிரமவிஷ்ணுக்கள் வணங்குகின்ற நீதியுடையவரும் தற்பரமாகிய ஞானமாகிய சிற்றம்பலத்தில் நடனஞ் செய்து நிற்பவருமாகிய (இறைவர்) என்னுடைய மனமாகிய கல்லானது பரவினாற்போல் கரைந்து நிற்க உயர்ந்த தெரிசனத்தைக் கொடுக்கின்ற அழகிய அரமாகி என்னுடைய தீவினையாகிய இரும்பைப் பொடிசெய்தது. (எ-று)

ஈண்டு உயர்திணையை அஃறிணையாகக் கூறியது உவகையானென்க. (2)

403. செய்யுந் தவஞ்சற்று மில்லாத நான்உன் திருவடிக்கே
பொய்யும் புதுமல ரிட்டுமெய் யன்பர் குழாத்துடனே
கையுஞ் சிரமிசைக் கூப்பிநின் றாடிக் கசிந்துருகி
உய்யும் படிக்கருள் செய்வதென் றோபுலி யூரத்தனே.

(பொ-ரை) திருப்புலியூரின் கண் எழுந்தருளியிருக்கின்ற எமது தந்தையே! செய்யுந் தவஞ் சிறிதுமில்லாத நான் உனது திருவடிகளிற் புதிதாய்ப் பறிக்கப்பட்ட நன்மலரைத் தூவி

மெய்யன்பர்களது கூட்டத்தோடு கூடி, கைகளைச் சிரசில் வைத்துக் குவித்து நின்று கூத்தாடி மனங்சிந்துருகிப் பிழைக்கும் படியாகத் திருவருள் செய்வது எக்காலமோ? (எ-று)

நான் உன்னடியார்களுடன் கூடி உன்னைப் பூசித்துப் பரவசப் படுவதெக்காலம் என்பதாம். (3)

404. அத்தனைச் சிற்றம் பலவனை யென்னுயி ராகிநின்ற
சுத்தனைச் சுத்த வெளியா னவனைச் சுகவடிவாம்
நித்தனை நித்த நிராதார மாகிய நின்மலனை
எத்தனை நாள்செல்லு மோமன மேகண் டிறைஞ்சு தற்கே.

(பொ-ரை) மனமே! எமது தந்தையை, சிற்றம்பலத்தில் நடனஞ் செய்பவனை, என்னுயிர்க்குயிராய் நின்ற பரிசுத்தனை, முழு வெளியான வனை, இன்பமே வடிவமான நித்தனை, எக்காலத்தும் நிராதாரமாயிருக்கின்ற நிர்மலனைத் தரிசித்து வணங்குவதற்கு எத்தனை நாட் செல்லுமோ? (நீ சொல்வாயாக) (எ-று)

மனமே! இறைவனைக் கண்டு தரிசிக்க, எத்தனை நாட்செல்லுமோ என்பதாம். (4)

405. கண்டா ருளத்தினிற் காலூன்றிப் பெய்யுங் கருணைமுகில்
அண்டார் புரத்துக்கும் அன்பர் வினைக்கும் அசனிதன்னைக்
கொண்டாடி னார்முனங் கூத்தாடு மத்தன்றன் கோலமெல்லாம்
விண்டாலம் மாவொன்றுங் காணாது வெட்ட வெறுவெளியே.

(பொ-ரை) தன்னைக் கண்டவர்களின் மனங்களிற் காலூன்றிக் கருணை மழையைப் பொழிகின்ற மேகம், பகைவர்களது திரிபுரங்களாகிய, மலைகளுக்கும், அன்பர்களது வினைகளாகிய மலைகளுக்கும் இடியேறு, தன்னைக் கொண்டாடினவர்களுக்கு எதிரில் கூத்தாடுகின்ற அத்தன், (இப்படிப்பட்டவனாகிய) அவன் கோலங்களையெல்லாம் எடுத்துச் சொன்னால், ஒரு பொருளுங் காணப்படாது. (காணப்படுவது) வெறு வெளியேயாகும். (எ-று) (5)

406. வெளியான நீயென் மனவெளி யூடு விரவின்ஐயா
வொளியாருங் கண்ணும் இரவியும் போலநின் றுலாவுவன்காண்
அளியாருங் கொன்றைச் சடையாட அம்புலி யாடக்கங்கைத்
துளியாட மன்றுள் நடமாடும் முக்கட் சுடர்க்கொழுந்தே.

(பொ-ரை) ஐயனே! வண்டுகள் பொருந்திய கொன்றை மலர்களை யணிந்த சடையாடவும்,சந்திரன் ஆடவும், கங்கைத் துளிகள் ஆடவும் சிற்றம்பலத்தில் நடனஞ் செய் கின்ற மூன்று கண்களையுடைய ஒளிக் கொழுந்தே! சிதாகாச வடிவமான நீ என்னுடைய இதயாகாசத்திற் கலந்தால் ஒளி பொருந்திய கண்ணுஞ் சூரியனும் போலிருந்து உலாவுவேன். (எ-று)

சூரியனொளியுங் கண்ணொளியுங் கலந்திருத்தல் போன்று நீ என்னுளத்திற் கலந்திருப்பையானால் நான் என்றும் அழியாநிலை பெற்றிருப்பேன் என்பதாம். (6)

407. கொழுந்தா துறைமலர்க் கோதையர் மோகக் குரைகடலில்
அழுந்தாத வண்ணம்நின் பாதப் புணைதந் தருள்வதென்றோ
எழுந்தா தரவுசெய் எம்பெரு மான்என் றிறைஞ்சி விண்ணோர்
தொழுந்தா தையெவெண் பொடிபூத்த மேனிச் சுகப்பொருளே.

(பொ-ரை) தேவர்கள் எழுந்து நின்று எந்தலைவனே! எங்களுக்கோர் ஆதரவுண்டாக்குக என்று சொல்லித் துதித்து வணங்குகின்ற தந்தையே! திருவெண்ணீறு பூத்த திருமேனியையுடைய சுகவஸ்துவே! செழுமையாகிய மகரந்தம் பொருந்திய புஷ்ப மாலைகளைத் தரித்த பெண்களுடைய மோகமாகிய சமுத்திரத்தில் அமிழ்ந்து போகாதவாறு உன்னுடைய திருவடிகளாகிய தெப்பத்தைத் தந்து கிருபை செய்வது எக்காலமோ? (எ-று)

மாதர்களது மயக்கத்திற் சிக்காதபடி அருள் செய்யவேண்டும். என்பதாம். (7)

408. சுகமாகு ஞானந் திருமேனி யாநல்ல தொண்டர்தங்கள்
அகமேபொற் கோயில் எனமகிழ்ந் தேமன்றுள் ஆடியகற்
பகமேஉன் பொன்னடி நிழல்கண் டாலன்றிப் பாவிக்கிந்தச்
செகமாயை யான் அருங்கோடை நீங்குந் திறமிலையே.

(பொ-ரை) இன்பமுண்டாதற்குக் காரணமாகிய ஞானமே திரு மேனியாகவும், நல்ல அடியவர்களுடைய மனமே அழகிய கோயிலாகவும் கொண்டு (அவ்வடியார்களுடைய இதயமாகிய) சிற்றம்பலத்தில் நடனஞ் செய்த கற்பகமே! உனது பொன் போன்ற திருவடி நிழலைக் கண்டாலல்லாமல் பாவியாகிய எனக்கு இந்தப் பிரபஞ்ச மாயையாகிய அரிய கோடையானது நீங்கும் வகையில்லை. (எ-று)

எனக்குள்ள பிரபஞ்ச மாயையானது உனது திருவடியைத் தந்தாலன்றி நீங்காதென்பதாம் மன்றுளாடிய என்றதற்கு (அவ்வடியவர்களுடைய இதயமாகிய) என்பதை நீக்கிப் பொருள் கொள்ளலுமொன்று. (8)

409. நீங்கா துயிருக் குயிராகி நின்ற நினையறிந்தே
தூங்காமல் தூங்கின்அல் லாதே எனக்குச் சுகமும் உண்டோ
ஓங்கார மாம்ஐந் தெழுத்தாற் புவனத்தை உண்டுபண்ணிப்
பாங்காய் நடத்தும் பொருளே அகண்ட பரசிவமே.

(பொ-ரை) பிரணவ வடிவமாகிய பஞ்சாட்சரத்தினாற் புவனங்களை யுண்டு பண்ணி (அவைகளை நடத்த வேண்டிய) முறைப்படி நடத்தும் பொருளே! அகண்டாகார பரசிவமே! உயிர்க்குயிராய்ப் பிரியாதிருக்கிற உன்னையறிந்து தூங்காமற் தூங்கினாலல்லாமல் அடியேனுக்குச் சிவாநுபவ சுகமுண்டாகாது.

பிரணவமே மந்திரங்களெவற்றிற்கு மூலமென்பது தோன்ற (ஓங்காரம்) மைந்தெழுத்து என்றார். தூங்காமற் றூங்குதல்=சாக்கிரத்தின் கண்ணே சிவாநுபவத்தை யடைந்திருத்தல். (9)

410. சிவமாதி நான்முகக் கோவந்த மாமறை செப்புகின்ற
நவமாய் இலங்கிய ஒன்றே இரண்டற்ற நன்மைபெறா
தவமே தருமஐம் புலப்பொறிக் கேயென் னறிவுபொல்லாப்
பவமே விளைக்கவென் றோவெளி மானைப் பாய்ந்ததுவே.

(பொ-ரை) வேதங்களாற் சிவமுதல் பிரமனீறாகச் சொல்லப்படுகின்ற புதுமையாய் விளங்குகின்ற ஒப்பற்ற பொருளே! என் மனமானது அத்துவித நலத்தைப் பெறாமல் பிறவியைக் கொடுத்தற்காகவோ அவத்தைக் கொடுக்கின்ற ஐம்பொறிப் புலன்களில் வெளிமானைப் போல் குதித்தது. (எ-று)

என் மனம் ஐம்பொறிப் புலன்களின் றொழிலை யடைந்தது என்னைப் பிறவியிற் பகுத்தற்காகவோ என்பதாம். (10)

411. ஆறொத் திலங்கு சமயங்கள் ஆறுக்கும் ஆழ்கடலாய்
வீறிப் பரந்த பரமான ஆனந்த வெள்ளமொன்று
தேறித் தெளிந்து நிலைபெற்ற மாதவர் சிந்தத்திலே
ஊறிப் பரந்தண்ட கோடியெல் லாம்நின் றுலாவியதே.

(பொ-ரை) ஆறுகளையொத்து விளங்குகின்ற அறு சமயங்களுக்கும் ஆழ்ந்த கடலை நிகர்த்ததாய் வீறிப்பரவிய உயர்ந்த ஒரு இன்பப்பெருக்கானது தெளிந்துயர்ந்த நிலையைப் பெற்ற மகத்தாந்தவத்தை யுடையவர்களது மனத்தில் ஊளிப் பரவிச் சர்வாண்ட கோடிகளிலுமிருந்து உலாவியது. (எ-று)

சிவாநுபவ சுகப்பெருக்கானது ஞானிகளுக்குக் கிடைத்ததே யொழிய எனக்குக் கிடைக்கவில்லையே என்பதாம். (11)

412. நடக்கினும் ஓடினும் நிற்கினும் வேறொரு நாட்டமின்றிக்
கிடக்கினுஞ் செவ்வி திருக்கினும் நல்லருட் கேள்வியிலே
தொடக்கும்என் நெஞ்சம் மனமற்ற பூரணத் தொட்டிக்குளே
முடக்குவன் யான்பர மானந்த நித்திரை மூடிடுமே

(பொ-ரை) நடந்தாலும், ஓடினாலும், நின்றாலும், வேறோரெண்ண மில்லாமலிருந்தாலும், நன்றாயிருந்தாலும், உயர்ந்த திருவருட் கேள்வியிலேயே என் மனம் கட்டுப்பட்டிருக்கும் நானோ மனமிறந்த பூரணமாகிய தொட்டிக்குள்ளே முடக்கிக்கொள்வேன். (அங்ஙனம் முடக்கிக் கொண்டால்) பேரின்ப நித்திரையானது என்னை வந்து மூடிக் கொள்ளும். (எ-று) (12)

413. எண்ணாத தெண்ணிய நெஞ்சே துயரொழி
என்னிரண்டு
கண்ணே உறங்குக என்னாணை முக்கட்
கருணைப்பிரான்
தண்ணார் கருணை மவுனத்தி னால்முத்தி சாதிக்கலாம்
நண்ணாத தொன்றில்லை யெல்லா நலமு
நமக்குளவே.

(பொ-ரை) எண்ணக்கூடாத எண்ணங்களையெல்லாம் எண்ணின மனமே! உனது துன்பத்தை நீக்குவாயாக. என்னுடைய இரண்டு கண்களே! நித்திரை செய்வீர்களாக. என்மீது சத்தியம். திரிநேத்திரதாரியாகிய கருணையையுடைய பெருமானது குளிர்ந்த கருணையாற் கிடைக்கும் மௌன நிலையினால் மோட்சநெறியைச் சாதிக்கலாம். (ஆகையால்) நமக்குக் கிடையாத பொருள் ஒன்றுமில்லை, எல்லா நன்மைகளும் நமக்குண்டாகும். (எ-று)

என்னிரண்டு கண்ணே என்றது பன்மையினொருமை வந்த வழுவமைதி சிலர் சாதியொருமை என்பர். (13)

414. நானென் றொருமுத லுண்டென்ற நான்தலை நாணஎன்னுள்
தானென் றொருமுதல் பூரணமாகத் தலைப்பட் டொப்பில்
ஆனந்தந் தந்தென் அறிவையெல் லாமுண் டவச நல்கி
மோனந் தனைவிளைத் தால்இனி யாது மொழிகுவதே.

(பொ-ரை) நான் என்று ஒரு முதற்பொருள் உண்டென்று அகங்காரத் தோடு சொல்லித் திரிந்த நான் வெட்கும்படி என் மனத்திற்குள்ளே தானென்றொரு முதற்பொருளானது நிறைந்து கலந்து இணைசொல்லப்படாத இன்பத்தைத் தந்து என்னுடைய அறிவு முழுமையும் உட்கொண்டு எனக்குப் பரவசத்தைக் கொடுத்து மௌனநிலையையும் அருளிச் செய்தால் இனி நான் சொல்வது யாது?

பூரணமாக என்பது வினையெச்சத் திரிபு. (14)

415. தானந் தவஞ்சற்றும் இல்லாத நான்உண்மை தானறிந்து
மோனம் பொருளெனக் கண்டிடச் சற்குரு மோனனுமாய்த்
தீனன் தனக்கிங் கிரங்கினை யேஇனிச் சிந்தைக்கென்றும்
ஆனந்தந் தானல்ல வோபர மேசச்சி தானந்தமே.

(பொ-ரை) பரம்பொருளே! உண்மையறிவானந்தப் பொருளே! தானமுங் தவமுங் கொஞ்சமுமில்லாத நான் உண்மை நிலையையுணர்ந்து மௌனநிலையே பொருளாகுமென்று அதை உணரும் பொருட்டு மௌன குருவாகி (எழுந்தருளி வந்து) இவ்விடத்தில் எளியேனுக் கிரங்கி அருள் செய்தனையே. இனி என்னுடைய மனத்துக்கு எக்காலத்தும் உள்ளது இன்பமல்லவோ? ஆம். (எ-று)

தானந் தவமில்லாத அடியேனுக்கு மௌனநிலையை யுணரும் பொருட்டு மௌனகுருவாகி எழுந்தருளி வந்தருள் செய்தமையால் என் மனத்தில் இன்பமே சதா குடிகொண்டிருக்கின்றது என்பதாம். (15)

416. எனக்கோர் சுதந்திர மில்லையப் பாஎனக் கெய்ப்பில் வைப்பாய்
மனக்கோ தகற்றும் பரம்பொரு ளேஎன்னை வாழ்வித்திட
நினக்கே பரம்நின்னை நீங்காத பூரண நீள்கருணை
தனக்கே பரமினிச் சும்மா விருக்கத் தகுமென்றுமே.

(பொ-ரை) அப்பனே! அடியேனுக்கு இளைத்தலில்லாத நிதியாகி மனத்தின்கணுள்ள குற்றத்தை நீக்கும் பரவஸ்துவே!

அடியேனுக்கு ஒரு சுதந்தரமுமில்லை. (ஆகையால்) என்னை வாழ்விப்பது உனக்கோ பாரமாகும்? அன்று. உன்னை விட்டுப் பிரியாத பரிபூரணமாகிய மிக்க (திருவருட்) கருணைக்கே பாரமாகும். (ஆகையால்) எனக்குச் சும்மா இருத்தலே தகுதியாஞ் (செய்கையாகும்) (எ-று)

என்னை நீயா வாழ்விக்கின்றாய்? உனது கருணை வாழ்விக்கின்றது என்பதாம். (16)

417. இடம்பெறு வீடும்மின் னார்சேய் சகமும் இருநிதியும்
உடம்பைவிட் டாருயிர் போம்போது கூடி உடன்வருமோ
மடம்பெறு மாயை மனமே இனியிங்கு வாமவுனி
திடம்பெற வைத்த மவுனஞ் சகாயந் தெரிந்தகொள்ளே.

(பொ-ரை) அறிவின்மையைப் பெற்றுள்ள மனமே! நீ இவ்விடத்துவா, (வந்தாயேல் நான் சொல்வதைக் கேள்) விசாலமான வீடும், மாதர்களும், பிள்ளைகளும், பிரபஞ்சமும், (இரண்டு செல்வம் போன்ற) பெரிய செல்வமும் அரிய உயிரானது உடம்பை விட்டு நீங்கிப் போகுங்காலத்தில் நம்மோடு கூடி வருவனவோ? வாரா. (ஆகையால்) (நம்மைக் கரையேற்ற எழுந்தருளி வந்த) மௌனகுருவானவர் நாம் திடம்பெறும் வண்ணம் உபசேதித்த மௌன நிலையே (அப்பொழுது) துணையாகும். ஆகையால் நீ அதை அறிந்து கொள்வாயாக. (எ-று)

“அத்தமும் வாழ்வு மகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட் டேவிம்மி விம்மியிரு
கைத்தலை மேல்வைத் தழுமைந்த ருஞ்சுடு காடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே”

என்றாராகலின், ‘இடம்பெறு வீடுமின்னார் சேய்சகமு மிருநிதியு முடம்பை விட்டாருயிர் போம்போது கூடியுடன் வருமோ’ என்றார். (17)

418. நாற்றச் சடலத்தை ஒன்பது வாசல் நடைமலையைச்
சோற்றுப் பசையினை மும்மல பாண்டத் தொடக்கறையை
ஆற்றுப் பெருக்கன்ன கன்மப் பெருக்கை அடர்கிருமிச்
சேற்றைத் துணையென்ற நாய்க்குமுண் டோகதி சேர்வதுவே.

(பொ-ரை) நாற்றம் வீசுஞ் சடலத்தை நவத்துவாரங் களையுடைய நடக்கும் வீட்டை, சோற்றுப்பசையை, மூன்று மலங்கள் பொருந்தியுள்ள பாண்டமாகிய சிறுவீட்டை,

ஆற்று வெள்ளம் போன்ற கர்ம வெள்ளத்தை, நெருங்கிய கிருமிகளையுடைய சேற்றைத் துணையானதென்று சொல்லி (நம்பியிருந்த) நாயேனாகிய எனக்கும், மோட்சகதியடைவது உண்டோ? இல்லை. (எ-று)

தேகவாஞ்சையுள்ள எனக்கும் மோட்சகதி கிடைக்குமோ என்பதாம். (18)

419. பொய்யா ருலக நிலையல்ல கானற் புனலெனவே
மெய்யா அறிந்தென்ன என்னால் இதனை விடப்படுமோ
கையால் மவுனந் தெரிந்தேகல் லால்நிழற் கண்ணிருந்த
ஐயாஅப் பாஎன் அரசேமுக் கண்ணுடை ஆரமுதே.

(பொ-ரை) கையினால் மௌனநிலையை அறிவுறுத்திக் கல்லால மரத்தின் நிழலில் எழுந்தருளியிருந்த ஐயனே! அப்பனே! என்னுடைய தலைவனே! திரிநேத்திரங் களையுடைய அரிய அமிர்தமே! உலகமானது கானற் சலம்போற் பொய்யாய்ப் போவதாகும். என்று உண்மை யாயுணர்ந்தால்தான் என்ன? என்னால் இவ்வுலகப்பற்றை விட்டுவிடக் கூடுமோ? கூடாது. (எ-று)

உலகத்தைப் பொய்யென்றுணர்ந்தாலும் அதனிடத்தில் என்னால் வைக்கப்பட்ட பற்று நீங்கவில்லை என்பதாம். (19)

420. ஆரா அமுதென மோனம் வகித்துக்கல் லால்நிழற்கீழ்ப்
பேராது நால்வ ருடன்வாழ்முக் கண்ணுடைப் பேரரசே
நீரா யுருகவுள் ளன்புதந் தேசுக நிட்டையைநீ
தாரா விடின்என் பெருமூச்சுத் தானத் தனஞ்சயனே.

(பொ-ரை) தெவிட்டாத அமிர்தம்போலச் சின்முத்திரையைத் தாங்கிக் கல்லாலமரத்தின் கீழ் ஜனகாதி நால்வரோடும் நீங்காமல் வாழ்கின்ற திரிநேத்திரங் களையுடைய பேரரசனே! நான் நீராயுருகும் வண்ணம் எனக்கு மனோவிச்சையைக் கொடுத்துச் சுகநிட்டையைக் கொடாவிடின் நான் இறந்துபடுவேன்.

நீ சுகநிட்டையைத் தாராவிடின் நான் உயிர் பிழைத்திலேன் என்பதாம்.

"பெருமூச்சுத் தானத் தனஞ்சயனே" என்றது தனஞ்சயவாயு உயிர் நீங்கிப்போனாலும் உடம்பை வீங்கச் செய்து தலையைக் கிழித்துச் செல்வதை. இது இறத்தலை விளக்குகின்றது. (20)

421. வாயுண்டு வாழ்த்த மவுனஞ்செய் போது மவுன அருள்
தாயுண்டு சேயென்ன என்னைப் புரக்கச் சதானந்தமாம்
நீயுண்டு நின்னைச் சரண்புக நானுண்டென் நெஞ்சம்ஐயா
தீயுண் டிருந்த மெழுகல வோகதி சேர்வதற்கே.

(பொ-ரை) ஐயனே! உன்னை வாழ்த்துதற்கு (எனக்கு) வாயுண்டு. நான் மௌன நிலையில் அமரும்போது (அதைத் கைகூட்டு விக்க) மௌனமாகிய அருட்டாயுண்டு, பிள்ளையைப்போல் என்னைக் காப்பாற்ற சதானந்தமாகிய நீயுண்டு. உன்னைச் சரணடைதற்கு நானுண்டு நற்கதி யடையும் பொருட்டு என் மனமானது தீயினால் வெதுப்பப்பட்ட மெழுகாமல்லவோ? (எ-று) (21)

422. கல்லால் எறிந்துங்கை வில்லால் அடித்துங் கனிமதுரச்
சொல்லால் துதித்தும்நற் பச் சிலை தூவியுந் தொண்டரினம்
எல்லாம் பிழைத்தனர் அன்பற்ற நான்இனி ஏதுசெய்வேன்
கொல்லா விரதியர் நேர் நின்ற முக்கட் குருமணியே.

(பொ-ரை) கொல்லாமையாகிய விரதத்தையுடைய பெரியோர்களுக்கு நேராக நின்றருள் செய்த திருநேத்திரங் களையுடைய மாணிக்கமே! கல்லால் எறிந்தும், கையிலுள்ள வில்லினாலடித்தும், கனிந்த மதுரவாசகப் பாமாலைகளால் ஸ்துதி செய்தும் நல்ல பச்சிலைகளைத் தூவியும், உனது அடியவர் களெல்லாம் உயர்ந்தார்கள். (அங்ஙனமாய) அன்பில்லாத நான் இனி என்ன செய்வேன்?

அன்பர்கள் கல்லெறிதல் முதலிய பலவகையால் கிரியைகள் செய்து பிழைத்தார்கள். நானோ அக்கிரியைகள் செய்யத்தக்க அன்பில்லாதவனா யிருக்கின்றேன். ஆகையால் எப்படிப் பிழைப்பேன் என்பதாம்.

கல்லால் எறிந்தவர் - சாக்கியநாயனார் கைவில்லால் அடித்தவன் - அருச்சுனன். கனிமதுரச் சொல்லால் துதித்தவர் - மூவர் முதலாயினோர். நற்பச்சிலை தூவினோர் - ஔவையார் முதலானோர். (22)

423. முன்னிலைச் சுட்டொழி நெஞ்சே நின் போதம் முளைக்கில்
ஐயோ
பின்னிலைச் சன்மம் பிறக்குங்கண் டாயிந்தப் பேய்த் தனமேன்
தன்னிலை யேநில்லு தானே தனிச்சச்சி தானந்தமாம்
தன்னிலை வாய்க்கும்எண் சித்தியுங் காணும் நமதல்லவே.

(பொ-ரை) மனமே! முன்னிலைச் சுட்டை ஒழிப்பாயாக. (ஏனெனில்) ஐயோ! உன்னுடையபோதம் வெளிப்படு மானால் பிறகு அநேக கன்மங் களுண்டாகும். ஆகையால் உனக்கு இந்தப் பேய்க்குணமேன்? தன்னிலையின் கண்ணே நிற்பாய் (அங்ஙனம் நின்றால்) தானே சச்சிதானந்த மாதலாகிய நல்வினை உனக்குக் கிடைக்கும். அட்டமா சித்திகளுங் கைகூடும். (ஆயின் இவையனைத்தும்) நமது முயற்சியினால் வருவனவல்ல. (அவனருளேயாம்). (எ-று)

மனமே! உனது சேட்டை ஒழிந்தாலன்றிக் கதி கூடுதலரி தாகலின் உன்னுடைய சேட்டையை யொழியென்பார் 'முன்னிலைச் சுட்டொழி நெஞ்சே நின்போத முளைக்கிலையோ பின்னிலைச்சன்மம் பிறக்குங்கண்டா யிந்தப் பேய்த்தனமேன்' எனக் கூறினார். (23)

424. சொல்லான் மவுன மவுனமென் றேசொல்லிச் சொல்லிக் கொண்ட
தல்லால் மனமறப் பூரண நிட்டையி லாழ்ந்ததுண்டோ
கல்லாத மூடன் இனிஎன்செய் வேன்சகற் காரணமாம்
வல்லாள னான மவுன சதானந்த மாகடலே.

(பொ-ரை) உலகத்திற்கு ஆதிகாரணமாகிய சர்வசத்தியுடையவனான மௌனசாதனந்தத்தை விளைக்கும் (கருணையாற்) பெருங் கடலொப் பானவனே! நான் சொல்லினால் மௌனம் என்று பலமுறை சொல்லிக் கொண்டிருந்ததேயன்றி, மன (சேட்டை) ஒடுங்கப் பூரணநிட்டையாகிய (சிவாநுபவக் கடலில்) மூழ்கின துண்டோ? இல்லை. (ஆகையால்) கல்விகற்று அதனால் விளையும் அறிவில்லாதவனாகிய நான் இனி என்ன செய்வேன்? (எ-று)

மௌனமே ஞானத்திற் காதியென்று சொல்லிக் கொண்டிருந்தேனே யொழிய அம்மௌன நிட்டையில் பதிந்து அதனாலுண்டா மானந்தத்தை அனுபவித்த துண்டோ? இல்லை ஆகையால் எப்படிப் பிழைப்பேன்? என்பதாம். (24)

425. ஆரணம் ஆகமம் எல்லாம் உரைத்த அருள்மவுன
காரண மூலங்கல் லாலடிக் கேயுண்டு காணப்பெற்றால்
பாரணங் கோடு சுழல்நெஞ்ச மாகிய பாதரசம்
மாரண மாய்விடும் எண்சித்தி முத்தியும் வாய்த்திடுமே.

(பொ-ரை) வேதாகமங்கள் அனைத்தையும் திருவாய் மலர்ந்தருளிய திருவருள் மௌனத்திற்குக் காரணமாகிய ஆதிபொருள் கல்லாலமரத்தின் அடியின் கண்ணே உளது. (அப்பொருளைத்) தரிசனஞ் செய்தால் உலக மாயையாகிய துன்பத்துடன் கூடிச் சுழல்கின்ற மனமாகிய பாதரசமானது ஒழிந்துவிடும். அட்டமா சித்திகளும், மோட்சமும் கைகூடும். (எ-று)

ஜனகாதி நால்வர்க்குஞ் சின்முத்திரோபதேசஞ் செய்த கல்லால மரத்தின் கீழெழுந்தருளிய கடவுளை உள்ளபடி தரிசித்தால் மனச்சேட்டை ஒழியும். அட்டமாசித்திகளும், மோட்சமும் கைகூடும் என்பதாம். (25)

426. சித்த மவுனி வடபால் மவுனிநந் தீபகுண்ட
சுத்த மவுனி யெனுமூவ ருக்குந் தொழும்புசெய்து
சத்த மவுன முதல்மூன்று மவுனமுந் தான்படைத்தேன்
நித்த மவுனமல் லாலறி யேன்மற்றை நிட்டைகளே.

(பொ-ரை) சித்தமௌனி, வடபான்மௌனி, நமது தீபகுண்ட சுத்தமௌனி என்று சொல்லப்பட்ட மும்மௌனிகளுக்கும் தொண்டு செய்து சத்தமௌன முதலிய மூன்று மௌனத்தையும் அடைந்தேன். (ஆகையால்) நித்தமும் மௌனநிட்டையே இல்லாமல் வேறு நிட்டைகளை அறியேன். (எ-று)

சத்தமௌன முதல் மௌனம் என்றது-வாக்கு மனோகாயங்கள் அசைவற்றிருத்தலை. (26)

427. கண்டேன் நினதருள் அவ்வரு ளாய்நின்று காண்பதெல்லாம்
உண்டே யதுவும் நின தாக்கி னேன் உவட் டாதஇன்பம்
மொண்டே அருத்தி இளைப்பாறி னேன்நல்ல முத்திபெற்றுக்
கொண்டேன் பராபர மேயெனக் கேதுங் குறைவில்லையே.

(பொ-ரை) பராபரவஸ்துவே! உனது திருவருளைத் தரிசித்தேன். அந்தத் திருவருள் மயமாய் நின்று காணும் பொருள்கள் அனைத்தையும் உன்னுடையனவாக்கினேன். தெவிட்டாத ஆனந்தவெள்ளத்தை முகந்து அருந்தி இளைப்புத் தீர்ந்தேன். சிறந்த முத்தியைப் பெற்றுக் கொண் டேன். (ஆகையால்) எனக்கு இனி ஒன்றுங் குறைவில்லை .(எ-று)

நான் உனது திருவருளைத் தரிசித்தேனாகையால் மோட்சத்தைப் பெறுவேன். இனி, எனக்கொரு குறைவு மில்லை என்பதாம்.

முத்திபெறுவேன் எனற்பாலதை முத்தி பெற்றுக் கொண்டேன் என இறந்தகாலத்தாற் கூறியது துணிவுபற்றி என்க. *(27)*

428. **மேற்கொண்ட வாயுவுங் கீழ்ப்பட மூலத்து வெந்தழலைச்**
சூற்கொண்ட மேக மெனவூமை நின்று சொரிவதைஎன்
னாற்கண்ட தன்று மவுனோப தேசிய ளிக்கையினிப்
பாற்கண்டு கொண்டனன் மேலே அமிர்தம் பருகுவனே.

(பொ-ரை) (மூலாதாரத்தினின்றும் சிரமளவு) மேற்பட்ட வாயுவும் கீழாகும்படி (அம்) மூலாதாரத்திலுள்ள வெவ்விய மூலாக்கினியைக் கர்ப்பங் கொண்ட மேகம்போல் நின்று ஊமையானவன் (மௌனியானவன்) பொழிதலை நானே உணர்ந்து கொண்டேனில்லை. மௌனோபதேசி யானவன் அருளிச் செய்தமையால் இங்ஙனம் உணர்ந்து கொண்டேன். இனி (அங்ஙன முண்டாம்) அமிர்தத்தைப் பருகுவேன். (எ-று)

மேற்கொண்ட வாயுவுங் கீழ்ப்பட என்றது; இரேசக, பூரக, கும்பகங் களை. இதன்வகையை விரிவஞ்சி விடுத்தாம். ஆயினும் யோகநூலார் மாட்டுணர்ந்து கொள்க. *(28)*

429. **சொல்லால் தொடர்பொரு ளால்தொட ராப்பரஞ் சோதிநின்னை**
வல்லாளர் கண்ட வழிகண்டி லேன்சக மார்க்கத்திலுஞ்
செல்லாதென் சிந்தை நடுவே கிடந்து திகைத்துவிம்மி
அல்லான தும்பக லானதும் வாய்விட் டரற்றுவனே.

(பொ-ரை) சொல்லாலும், பொருளாலுந் தொடரப் படாத உயர்ந்த தேஜோமயனே! உன்னை, (அறியுந் தன்மையில்) வல்லவர்கள் கண்டு கொண்ட வழியை நான் உணர்ந்தேனில்லை. (அன்றி) என் மனமானது உலக வழியிலும் செல்லாது.(இவ்விரண்டிற்கும்) இடையே கிடந்து திகைத்துவிம்மி,இரவும், பகலும் வாய்விட்டலறுவேன். (எ-று)

சொல்லும், பொருளும் நாதங்களாயினும் அந் நாத தத்துவத்தையும் கடந்தோனேன்பார். 'சொல்லாற் றொடர் பொருளாற் றொடராப் பரஞ்சோதி' எனக் கூறினார். *(29)*

430. **அறியாத என்னை அறிவாயும் நீயென் றகம்புறமும்**
பிறியா தறிவித்த பேரறி வாஞ்சுத்தப் பேரொளியோ
குறியாத ஆனந்தக் கோவோ அமுதருள் குண்டலியோ
சிறியேன் படுந்துயர் கண்டுகல் லால் நிழற் சேர்ந்ததுவே.

(பொ-ரை) சிற்றறிவினேன் படுந் துன்பத்தைப் பார்த்துக் கல்லால மரத்தினடியில் எழுந்தருளியிருந்தது யாவராலும் அறியப்படாத என்னை அறிகின்றவனும் நீயேயென்று அகத்திலும், புறத்திலும் நீங்காமனின்று (எனக்கு) அறிவுறுத்தின பேரறிவாகிய சுத்தமான பெருஞ்சோதியோ? (இப்படிப்பட்டதென்று) குறித்துச் சொல்லப்படாத சுகத்தலைவனோ? அமிர்தத்தை அருள் செய்கின்ற குண்டலிசத்தியோ? அறிகிலேன், (எ-று)

எனது துன்பத்தைக் கண்டு கல்லானீழலில் எழுந்தருளி வந்தது பெருஞ் சோதியோ? இறைவனோ? குண்டலி சத்தியோ? அறிகிலேன் என்பதாம். (30)

431. எல்லாம் உதவும் உனையொன்றிற் பாவனை யேனுஞ்செய்து
புல்லா யினும்ஒரு பச்சிலை யாயினும் போட்டிறைஞ்சி
நில்லேன் நல்யோக நெறியுஞ்சே யேன்அருள் நீதியொன்றுங்
கல்லேன்எவ் வாறு பரமே பரகதி காண்பதுவே.

(பொ-ரை) பரம்பொருளே! எல்லா நலங்களையுங் (கைம்மாறு கருதாமற்) கொடுக்கின்ற உன்னை, யாதாமொரு விக்ரஹரூபத்தில் பாவித்தாயினும், புல்லையாயினும், ஒரு பச்சிலையையாயினும் போட்டுப் பூசித்து வணங்கி நில்லேன், (அன்றி) நல்ல யோகமார்க்கத்தையும் அநுஷ்டியேன். (அன்றி) திருவருள் சம்பந்தமாகிய நீதி நூல்களில் ஒன்றையேனுங் கல்லேன். (இப்படிப்பட்டவனாகிய நான்) பரகதியையடைவது எப்படி? (எ-று)

" மாயைகாரிய வுருக்களுு மெம்பிரான் வடிவ
மாயவே லவையருண் மயமாகும்"

என்றாராகலின் யாதொரு விக்ரஹரூபத்தைப் பூசித்தலாகிய கிரியா மார்க்கத்தையும் மனமொடுங்குதற் கேதுவாகிய யோகத்தையும் செய்திலேன் என்பார். 'எல்லாமுதவு முனை யொன்றிற் பாவனையேனுஞ் செய்து - புல்லாயினுமொரு பச்சிலையாயினும் போட்டிறைஞ்சி நில்லேனல் யோக நெறியுஞ் செய்யேன்' எனக் கூறினார். அன்றி, பச்சிலையிட் டிறைஞ்சு வோர்க்கு எல்லாப் பதங்களையும் தருவோனாகையால் நானும் அப்பதவிகளையடையப் பச்சிலையிட் டிறைஞ்சினே னில்லை என்றார் எனலுமொன்று. இதனை,

" குடங்கை நீரும் பச்சிலையு மிடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையுந் தருவாய் மதுரைப் பரமேட்டீ
படங்கொள் பாயும்பூவணையுந் தருவாய் கையிற் படுதலைகொண்
டிடங்க டோறு மிரப்பாயென் றேசு வார்க்கென் பேசுவனே"

என்பதனா னறிக. *(31)*

432. ஒன்றுந் தெரிந்திட இல்லைஎன் னுள்ளத் தொருவ எனக்
கென்றுந் தெரிந்த இவை அவை கேள்இர வும்பகலுங்
குன்றுங் குழியும் வனமும் மலையுங் குரைகடலும்
மன்றும் மனையும் மனமாதி தத்துவ மாயையுமே.

(பொ-ரை) என் மனத்தின்கண் எழுந்தருளியுள்ள ஒப்பற்றவனே! அடியேனுக்கு உன்னைக் காணுதற்குரிய வழிகளில் ஒன்றுந் தெரியவில்லை. ஆனால், எனக்குத் தெரிந்திருப்பன இவைகளே, அவைகளை (சொல்லுகிறேன்) கேட்டருள்வாயாக (அவை யாவையெனில்) இரவும், பகலும், சிறுமலையும், குளமும், காடும், பெருமலையும், சந்திக்கின்ற கடலும், அம்பலமும், வீடும், மனமுதலிய தத்துவக் கூட்டங்களாகிய மாயையுமேயாம். (எ-று)

எனக்கு உன் விஷயமான காரியங்கள் ஒன்றுந் தெரியா. மாயா காரியமான விஷயங்கள் தெரியும் என்பதாம். *(32)*

433. பழுதுண்டு பாவையர் மோக விகாரப் பரவையிடை
விழுகின்ற பாவிக்குந் தன்தாள் புணையை வியந்தளித்தான்
தொழுகின்ற அன்ப ருளங்களி கூரத் துலங்குமன்றுள்
எழுகின்ற ஆனந்தக் கூத்தனென் கண்மணி யென்னப்பனே.

(பொ-ரை) (தன்னை) வணங்குகின்ற அன்பர்களது மனம்களிக்கும் பொருட்டு, விளங்குகின்ற சிற்றம்பலத்திற் காணப்படுகின்ற ஆனந்த நடனஞ் செய்வோனம், என் கண்மணியை யொப்பானவனும், என் தந்தையுமாகிய சிவபெருமான், மாதர்கள்மேல் மோகமாகிய விகார சமுத்திரத்தில் பழுது பட்டழுந்துகின்ற பாவியாகிய எனக்கும் தனது திருவடிகளாகிய தெப்பத்தை அதிசயித்துக் கொடுத்தனன். (எ-று)

தில்லையம்பலத்தில் திருநடனஞ் செய்தல் அன்பர்கள் மகிழ்தற் பொருட்டே யென்பார், 'தொழுகின்றவன் பருளங் களிகூரத் துலங்குமன்றுள் - எழுகின்ற வானந்தக் கூத்தன்' என்றார்.

பெண்கள் மயக்கத்திற் சிக்கிக் கிடக்கும் எனக்கும் திருவடியைத் தந்தருளினான். ஆகையால் இவனுடைய பெருங் கருணைக்குக் கைம்மாறென்னை என்பதாம். *(33)*

434. அழுக்கார்ந்த நெஞ்சுடை யேனுக்கை யாநின் அருள்வழங்கின்
இழுக்காகு மென்றெண்ணி யோஇரங் காத இயல்புகண்டாய்
முழுக்காத லாகி விழிநீர் பெருக்கிய முத்தரெனுங்
குழுக்காண நின்று நடமாடுந் தில்லைக் கொழுஞ்சுடரே.

(பொ-ரை) மிக்க அன்பராகிக் கண்ணீர் சிந்திய சீவன் முத்தர்கள் தரிசிக்கும்படி நின்று நடனஞ் செய்கின்ற தில்லை யென்னுஞ் (சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள) செழுஞ்சுடரே? ஐயனே? நீ என்மேல் கருணை வையாத தன்மை, மும்மலக் குற்றங்கள் வாய்ந்த மனமுடையேனுக்கு உனது திருவருளைக் கொடுத்தால் குற்றமாகுமென் றெண்ணியோ? (எ-று) *(34)*

435. ஆலம் படைத்த விழியார்கள் மால்கொண் டவர்செய்இந்த்ர
சாலம் படைத்துத் தளர்ந்தனை யேயென்றுந் தண்ணருள்கூர்
கோலம் படைத்துக்கல் லாலடிக் கீழ்வைகுங் கோவுக்கன்பாங்
காலம் படைக்கத் தவம்படை யாதென்கொல் கல்நெஞ்சமே.

(பொ-ரை) கல்லையொத்த மனமே? எக்காலத்தும் தண்ணிய அருளானது மிகுந்த திருவுருவத்தைப் படைத்துக் கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளியிருக்கின்ற கடவுளுக்கு அன்பைச் செலுத்துதற்காகிய தவத்தைப் பெறும் பொருட்டுத் தவஞ் செய்யாமல் விஷம் பொருந்திய விழிகளையுடைய மாதர்கள் மேல் விருப்பம்வைத்து, அவர் களால் செய்யப்படுகின்ற இந்திர சாலத்தை நீயுமடைந்து தளர்ந்தனையே? இதற்குக் காரணம் என்னவோ? (எ-று)

தட்சிணாமூர்த்தியாகிய இறைவனை வணங்குதற்கான தவத்தைச் செய்யாமற் பெண்கள் மயக்கத்தை யடைதற்குக் காரணம் என்ன என்பதாம். *(35)*

436. சும்மா விருக்கச் சுகஞ்சுக மென்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டும் அறிவின்றியே
பெம்மான் மவுனி மொழியையுந் தப்பிஎன் பேதைமையால்
வெம்மாயக் காட்டில் அலைந்தேன் அந்தோஎன் விதிவசமே.

(பொ-ரை) சும்மாவிருந்தாலே சுகமுண்டாகுமென்று வேதங் களெல்லாஞ் சதாகாலமும் கோட்சிக்கவும், அதைக் கேட்டிருந்தும் அறிவில்லாமையால் எப்பெரு

மானாகிய மௌனகுருவின் உபதேசத்தையுங் கடந்து, எனது அறிவீனத்தால் கொடிய மாயையாகிய காட்டில் (அலைந்து) திரிந்தேன். இது எனது விதிவசமேயாகும். (எ-று)

மௌனமாயிருத்தலே சுகாநந்தோதயமாதற்குக் காரண மென்பார். சும்மாவிருக்கச் சுகஞ் சுகமென்று சுருதியெல்லாம் அம்மா நிரந்தரஞ் சொல்லவும் என்றார். (36)

437. தினமே செலச்செல வாழ்நாளும் நீங்கச் செகத்திருள்சொப்
பனமே யெனவெளி கண்டே யிருக்கவும் பாசபந்த
இனமே துணையென் றிருந்தோம் நமன்வரின் என்செய்கு வோம்
மனமே நம்போல வுண்டோ சுத்தமூடரிவ் வையகத்தே.

(பொ-ரை) மனமே! நாம் நாள் செல்லச் செல்ல, ஆயுள் நாளும் நீங்க உலகவிருளானது சொப்பனமேயென்று சொல்லும் படி வெளிப்படையாய்க் கண்டிருந்தும் பாசபந்த மாகிய கூட்டமே துணையாமென்று நம்பியிருந்தோம். (நம்மைக் கொண்டு போதற் பொருட்டு) காலன் வந்தால் (அப்பொழுது) நாம் என்ன செய்யக் கடவோம்? (ஆகையால்) நம்மைப்போல் முழுமூடர்கள் இவ்வுலகத்தில் (ஏவரெனும்) உண்டோ? இல்லை (எ-று)

நாள் செல்லச் செல்லக் காலன் வருவதுண்மை யாகலான் தினமே செலச்செல வாழ்நாளும் நீங்கச் செகத்திருள் நமன்வரினென் செய்குவோம் என்றார் இதனை

> " தோற்றஞ் சான் ஞாயிறு நாழியா வைகலுங்
> கூற்ற மளந்துநுந் நாளுண்ணும்"

என்பதினா னறிக. (37)

438. கடலெத் தனைமலை எத்தனை அத்தனை கன்மமதற்
குடலெத் தனையத் தனைகடல் நுண்மணல் ஒக்குமிந்தச்
சடலத்தை நான்விடு முன்னே யுனைவந்து சாரஇருட்
படலத்தை மாற்றப் படாதோ நிறைந்த பராபரமே.

(பொ-ரை) எவ்விடத்தும் நீங்காமல் நிறைந்துள்ள பராபரவஸ்துவே! கடல்களையும், மலைகளையும் ஒப்பான பரப்பும், பெருமையும் உள்ளது கர்மமாகும். அந்தக் கர்மத்துக் கீடாயுண்டாகின்ற உடல்கள் அக்கடலின் கணுள்ள நுண்ணிய மணலை யொப்பாகவிருக்கும். (ஆகையால்) இந்த உடலை நான் விட்டு (வெளிப்படு) முன்னே உன்னை

வந்தடையும் பொருட்டு எனது அஞ்ஞான மறைப்பை நீக்கப்படாதோ? (எ-று)

நான் இறக்கு முன்னர் உன்னையடையும் பொருட்டு எனது அஞ் ஞானத்தை நீக்கி ஞானத்தைத் தந்தருளல் வேண்டும் என்பதாம். *(38)*

439. நினையும் நினைவும் நினையன்றி யில்லை நினைத்திடுங்கால்
வினையென் றொருமுதல் நின்னையல்லாது விளைவதுண்டோ
தனையுந் தெளிந்துன்னைச் சார்ந்தோர்க ளுள்ளச்செந் தாமரையாம்
மனையும்பொன் மன்றமும் நின்றாடுங் சோதி மணிவிளக்கே.

(பொ-ரை) தம்மியல்பினையு முணர்ந்து (தாம் அடைதற்குரிய உன்னியல்பினையு முணர்ந்து) உன்னயடைந்தவர்களது உள்ளமாகிய செவந்த தாமரையாகிய வீட்டிலும், பொன்னம்பலத்திலுமிருந்து நடனஞ் செய்கின்ற தேஜோமயமான அழகிய விளக்கே! யோசிக்குமிடத்தில் நான் என்னும் எண்ணங்களும் உன்னையல்லாமலில்லை, வினையென்று சொல்லும் ஒருமுதற் பொருளும் உன்னையல்லாமல் உண்டாவதில்லை. (எ-று)

எல்லாம் உன்னுடைய செய்கைகளாகலின் நான் எண்ணும் எண்ணங்களும், அதனாலுண்டாகும் வினைகளும் உன்னையல்லாமல் இல்லை என்பதாம். *(39)*

440. உள்ளத் தையுமிங் கெனையுநின் கையினில் ஒப்புவித்தும்
கள்ளத்தைச் செய்யும் வினையால் வருந்தக் கணக்கு முண்டோ
பள்ளத்தில் வீழும் புனல்போற் படிந்துன் பரமஇன்ப
வெள்ளத்தின் மூழ்கினர்க் கேயெளி தாந்தில்லை வித்தகனே.

(பொ-ரை) பள்ளத்தில் (விரைவாகப்) பாய்கின்ற சலம்போல (மனமுருக) உனது பரமானந்த வெள்ளத்திற் படிந்து மூழ்கினவர்களுக்கே (அறிதற்) கெளியனாயிருக்கின்ற தில்லைப் பதியில் வாழும் பரிசுத்தனே! இவ்விடத்தில் என் மனத்தையும், என்னையும் உன் கையில் ஒப்புவித்தும். (இன்னும்) கபடத்தைச் செய்கின்ற கர்மத்தினால் துன்பமடையக் கணக்குமுண்டோ? (எ-று)

திரிகரணத்தை யொழித்தும் இன்னும் கர்மவாதனையிருக்கின்றதே, இதற்கென்ன செய்வேன் என்பதாம். *(40)*

**441. கள்ளம் பொருந்தும் மடநெஞ்ச மேகொடுங் காலர்வந்தால்
உள்ளன் பவர்கட்குண் டோஇல்லை யேயுல கீன்ற அன்னை
வள்ளம் பொருந்து மலரடி காணமன் றாடும் இன்ப
வெள்ளச்செம் பாதப் புணையேயல் லாற்கதி வேறில்லையே.**

(பொ-ரை) வஞ்சனையோடு கூடிய மடநெஞ்சமே! கொடியயமபடர்கள் வந்தால் அவர்களுக்கு மனத்தின்கண் அன்புள்ளதோ? இல்லையே. (ஆகையால் நமக்கு) அடைக் கலத்தானமா யிருப்பது பிரபஞ்சமெல்லா வற்றையும் பெற்றெடுத்த தாயினது கிண்ணம் போற் பொருந்தியுள்ள தாமரைப்பாதங்களைத் தரிசிக்கும்படி சிற்றம்பலத்தில் நடனஞ் செய்கின்ற சுகக்கடலாகிய (சிவபெருமானது) சேவடியாகிய தெப்பமே யல்லாமல் வேறில்லை. (எ-று)

மனமே! சிவபெருமானது திருவடிகளே நமக்கு அடைக்கலத் தானமாகும் என்பதாம். (41)

**442. தன்மய மானசு பாவத்தில் மெள்ளத் தலைப்படுங்கால்
மின்மய மான சகம்யா துரைத்தென் வெளியில்உய்த்த
சின்மய முத்திரைக் கையேமெய் யாகத் தெளிந்தநெஞ்சே
நின்மயம் என்மயம் எல்லாம் நிறைந்த நிராமயமே**

(பொ-ரை) வெளிப்படையாக அருள் செய்த சின்முத்திரைக் கையையே உண்மையாகத் தெளிந்துணர்ந்த மனமே! தன்மயமாய் (அமர்ந்திருக்கும்) சுபாவத்தன்மையில் மெல்லச் சேருமிடத்தில் மின்னலைப் போல் நிலை யாமையாயுள்ள உலகத்தார் என்ன சொன்னாலென்னை? உன்னுருவம், என்னுருவமான யாவும் பூரணமாயுள்ள நிராமயப் பொருளேயாம் ஆகையால். (எ-று)

தன் மயமா யமர்ந்திருக்குங்கால் எல்லாம் இறைவன் சொரூபமேயாய் விளங்கும் என்பதாம் ஈண்டு உலகம் இடவாகுபெயர் அதிலுள்ளாருக் காயினமையின். (42)

**443. ஆயுங் கலையுஞ் சுருதியுங் காண்டற் கரியவுனைத்
தோயும் படிக்குக் கருணைசெய் வாய்சுக வான்பொருளே
தாயும் பிதாவுந் தமருங் குருவுந் தனிமுதலும்
நீயும் பரையுமென் றேயுணர்ந் தேனிது நிச்சயமே.**

(பொ-ரை) உயர்ந்த சுகப்பொருளே! தாயும், தந்தையும், சுற்றத்தாரும், குருவும், ஒப்பற்ற முதற்பொருளும், ஆகிய இவர்களெல்லாம் நீயும் பராசத்தியுமென்றே யறிந்தேன். இது

உண்மை (ஆகையால்) ஆராயப்படு கின்ற கலைகளாலும் வேதங்களாலும், காணுதற்கு அருமையான உன்னை வந்தடையும் பொருட்டு நீ கருணை செய்வாய். (எ-று)

இறைவனே எனக்குத் தந்தை தாய் முதலியோராகச் சொல்லப்பட்ட எவரும் நீயும், பராசத்தியுமே யாகையால் உன்னை யடையும்படி எனக்கருள் செய்ய வேண்டும் என்பதாம். (43)

444. அல்லும் பகலும் உனக்கே அபயம் அபயமென்று
சொல்லுஞ்சொ லின்னந் தெரிந்ததன் றோதுதிப்பார் கள்மனக்
கல்லுங் கரைக்கும் மவுனா உனது கருணைஎன்பால்
செல்லும் பொழுதல்ல வோசெல்லு வேனந்தச் சிற்சுகத்தே.

(பொ-ரை) துதி செய்பவர்களுடைய மனமாகிய கல்லையுங் கரைத்து விடுகின்ற மௌனகுருவே! இரவும், பகலும் உனக்கே அபயம், அபயம், என்று சொல்லித் துதிக்கின்ற சொல்லானது இன்னமுங் கேட்கவில்லையோ? உனது கருணை என்னிடத்தில் உண்டாகும் போதல்லவோ நான் அந்த ஞானானந்தத்திற் புகுவேன்.

உன் கருணையை நீ என்னிடத்திற் காட்டின போழ் தல்லவோ நான் ஞானானந்தம் பெறுவேன். அது உண்டாகாத போது நான் என்ன சொல்லியும் நீ உன் செவியிலேற்றுக் கொள்ளாய், என்பதாம். (44)

445. எல்லாஞ் சிவன்செயல் என்றறித் தாலவன் இன்னருளே
அல்லாற் புகலிடம் வேறுமுண் டோஅது வேநிலையா
நில்லாய்உன் னால்தமி யேற்குக் கதியுண்டிந் நீள்நிலத்தில்
பொல்லா மயக்கத்தி லாழ்ந்தாவ தென்ன புகல்நெஞ்சமே.

(பொ-ரை) மனமே! எல்லாஞ் சிவன் செய்கைகளென்றுணர்ந்தால் அடைக்கலத் தானமாயுள்ளது அவனதினிய அருளேயல்லாமல் வேறு முண்டோ? இல்லை (ஆகையால்) அதுவே நன்னிலையாகக் கொண்டு நிற்கக் கடவாய். (அங்ஙனம் நிற்பையாயின்) உன்னால் அடியேனுக்குங் கதியுண்டு. (ஆகையால் நான் சொல்வதைவிட்டு) இவ்வுலகத்திற் கொடிய மயக்கத்தில் அழுந்தினதினால் உண்டாவதாகிய லாபம் என்ன? (எ-று)

மனமே! சிவபெருமானது அருளையடைதலைவிட்டு உலகமாயையில் அழுந்தினதினால் என்ன லாபம்

அடைந்தாய் என்பதாம். ஆழ்ந்து என்பது ஆழ்ந்தினதினால் எனப் பொருளுக் கேற்பக் கொண்டு உரைக்கப்பட்டது. (45)

446. ஒளியே ஒளியின் உணர்வே உணர்வின் உவகைபொங்குங்
களியே களிக்குங் கருத்தே கருத்தைக் கவளங்கொண்ட
வெளியே வெளியின் விளைசுக மேசுகர் வீறுகண்டுந்
தெளியேன் தெளிந்தவரைப் போற்றிடேன் என்ன
செய்குவனே.

(பொ-ரை) ஒளியே! ஒளியையுடைய அறிவே! அவ்வறிவின் கண் சந்தோசம் பெருகாநின்ற களிப்பே! களிக்கின்ற கருத்தே! கருத்தைக் கவளமாகக் கவர்ந்த வெளியே! அவ்வெளியிலுண்டாம் இன்பமே! நான் சுகரது பெருமையைக் கண்டும் தெளிந்திலேன். அங்ஙனந் தெளிந்தவர் களையும் வணங்கேன். (ஆகையால்) இனி என்ன செய்வேன். (எ-று) (46)

447. மறக்கின்ற தன்மை இறத்தலொப் பாகும் மனமதொன்றில்
பிறக்கின்ற தன்மை பிறந்தலொப் பாகும்இப் பேய்ப்பிறவி
இறக்கின்ற எல்லைக் களவில்லை யேஇந்தச் சன்மஅல்லல்
துறக்கின்ற நாளெந்த நாள்பர மேநின் தொழும்பனுக்கே.

(பொ-ரை) பரம்பொருளே! மனமானது மறக்குந் தன்மை இறப்பதற் கொப்பாகும். ஒன்றிற் பற்றுந் தன்மை பிறப்பதற்கொப்பாகும். இந்தப் பேய்ச் சென்மங்கள் இருக்கும் எல்லைக்களவில்லை. (ஆகையால்) தொண்டனாகிய எனக்கு இந்தச் சுகதுன்பத்தை விட்டு நீங்குகின்ற காலம் எந்தக் காலமோ? அறிந்திலேன். (எ-று) (47)

448. காட்டிய அந்தக் கரணமும் மாயைஇக் காயமென்று
சூட்டிய கோலமும் நானா வியங்கத் துறையிதனுள்
நாட்டிய நான்றனக் கென்றோர் அறிவற்ற நான் இவற்றைக்
கூட்டிநின் றாட்டினை யேபர மேநல்ல கூத்திதுவே.

(பொ-ரை) காட்டப்பட்ட அந்தக்கரணங்களும், மாயா காரியமாகிய இக்காயமென்று பெயரிடப்பட்ட உருவமும் நானா பேதமாக இயங்க, (அப்படி யியங்கும்) அத்துறைகளுக்குள் நாட்டப்பட்ட நான் தனக்கென்றொரு சுதந்தர வறிவில்லாதவனென்று எனக்கு இவைகளைக் கூட்டி நின்று ஆட்டுவித்தனையே, இது உனக்கு நல்ல கூத்தாயிருக்கின்றதோ? (எ-று) (48)

**449. பொல்லாத மாமர்க் கடமன மேளனைப் போல் அடுத்த
எல்லாவற் றையும்பற்றிக் கொண்டனை யேயென்னை
நின்மயமா
நில்லாய் அருள்வெளி நீநான் நிற் பேன் அருள் நிட்டையொரு
சொல்லாற் பதிந்து பரிபூர ணானந்தந் தோய்குவனே.**

(பொ-ரை) கொடியதாகிய பெரிய குரங்கு மனமே! என்னைப் பற்றிக் கொண்டது போல் அடுத்த எல்லாவற்றையும் பற்றிக் கொண்டனையே இது வென்னை? நீ அருள் வெளியின்கண் நிர்மலமாய் நிற்கமாட்டாய் (நானோ மௌனகுரு அருளிச் செய்த) ஒரு சொல்லால் பரிபூரண இன்பத்தில் மூழ்குவேன். (எ-று) (49)

**450. வாராய்நெஞ் சேயுன்றன் துன்மார்க்கம் யாவையும் வைத்துக்
கட்டிங்
காராய் அடிக்கடி சுற்றுகின் றாயுன் அவலமதிக்
கோரா யிரம்புத்தி சொன்னாலும் ஓர்கிலை ஓகெடுவாய்
பாரா யுனைக்கொல்லு வேன்வெல்லு வேன் அருட் பாங்கு
கொண்டே.**

(பொ-ரை) மனமே! வருவாயாக, உன் கெட்ட வழிகளை யெல்லாங் கட்டிவை. இவ்விடத்தினின்றும் நல்ல வழிகளை யாராய்வாயாக, அடிக்கடி கழலுகின்றாய். உனது சபல புத்திக்கு ஒரு ஆயிரம் புத்திகளைச் சொன்னாலும் உணர்கிலாய். ஆ! கெடுவாய். அவனது திருவருள் தன்மையைக் கொண்டு உன்னைக் கொலை செய்வேன். (அன்றி) உன்னை வென்றடக் குதலையுஞ் செய்வேன். நீ (இதைப் பார்க்க வேண்டுமானால்) பார்ப்பாயாக (எ-று) (50)

**451. மாதத்தி லேயொரு திங்களுண் டாகி மடிவதைநின்
போதத்தி லேசற்றும் வைத்திலை யேவெறும் புன்மைநெஞ்சே
வேதத்தி லேதர்க்க வாதத்தி லேவிளங் காதுவிந்து
நாதத்தி லேயடங் காதந்த வான்பொருள் நாடிக்கொள்ளே**

(பொ-ரை) சுத்த அறிவில்லாத மனமே! ஒவ்வொரு மாதத்தில் ஒவ்வொரு சந்திரன் தோன்றி யழிவதை உன்னு டைய அறிவின் கண் வைத்து (சற்றும் அதன் நிலைமையை) உணர்ந்தாயில்லை. (அங்ஙன மழியாத) உயர்ந்த பொரு ளானது வேதங்களுள்ளும் தர்க்கவாதத் துள்ளும் விளங்காது. விந்துவிலும், நாதத்திலும் அடங்காது. (ஆகையால் அந்தப் பொருளை) ஆராய்ந்து பிடித்துக் கொள்வாய்.

மனமே! எவற்றிற்கு மதீதனான சிவபெருமானை யாராய்ந்து பிடித்துக் கொள்வாய் என்பதாம். (51)

452. எங்கும் வியாபித் துணர்வாய் உனக்கென் இதயத்துள்ளே
தங்குந் துயரந் தெரியாத வண்ணந் தடைசெய்ததார்
அங்கங் குழைந்துள் ளுருகுமன் பாளர்க் கணை கடந்து
பொங்குங் கருணைக் கடலேசம் பூரண போதத்தனே.

(பொ-ரை) உடல் குழைந்து மனங் கரைகின்ற அன்பர்கட்கு அணையைக் கடந்து பொங்குகின்ற கிருபா சமுத்திரமே! பரிபூரண ஞானத்தனே! எவ்விடத்தும் வியாபித்து எல்லாவற்றையும் உணர்கின்றாயாதலான் உனக்கு என் மனத்தின் கணுள்ள துக்கந் தெரியாதவகை மறைத்ததார்? (ஒருவருமில்லை என்றபடி) (எ-று)

கிருபாசமுத்திரமே! பரிபூரண ஞானமுடையானே! நீ என் மனத்துயரை நீக்காதவண்ணம் யாது என்பதாம். (52)

453. வையக மாதர் சுகத்தையும் பொன்னையும் மாயைமல
மெய்யையும் மெய்யென்று நின்னடி யார்தம் விவேகத்தையும்
ஐயமில் வீட்டையும் மெய்ந்நூலை யும்பொய்ய தாகஎண்ணும்
பொய்யர்தந் நட்பை விடுவதென் றோபரி பூரணமே.

(பொ-ரை) எங்கும் நிறைந்திருக்கின்ற பொருளே1 உலகில் மாதர்கள் சுகத்தையும், பொன்னையும், மாயாகாரிய மாகிய மலசம்பந்தமான சரீரத்தையும் உண்மையுள்ளவை யென்றெண்ணி, உனது மெய்யடியார்களது நல்லறிவை யும்; சந்தேக நீங்கிய மோட்சத்தையும், உண்மையான (வழிகளைச் சொல்லும்) நூற்களையும் பொய்யுடையனவாக எண்ணுகின்ற பொய்யர்களுடைய சிநேகத்தை விட்டொழிவது எக்காலமோ? அறியேன். எ-று) (53)

454. அளியுங் கனியொத் தருவினை யால்நொந் தயர்வுறுவேன்
தெளியும் படிக்குப் பரிபாக காலமுஞ் சித்திக்குமோ
ஒளியுங் கருணையும் மாறாத இன்பமும் ஒருருவாய்
வெளிவந் தடியர் களிக்கநின் றாடும் விழுப்பொருளே.

(பொ-ரை) கீர்த்தியும், கிருபையும் நீங்காத ஆனந்தமும் (ஆகிய இவைகளே) ஒருருவமாகி வெளிப்படையாக வந்து அன்பர்கள் களிக்கும்படி (சிற்றம்பலத்தில்) நின்று நடனஞ் செய்கின்ற மேம்படு பொருளே! நீக்குதற் கரிதாகிய இரு வினையில் அளிந்த கனி போன்று நொந்து துன்பப்படு

வேனாகிய நான் (உனது திருவருள் நிலை இப்படிப் பட்டதென்று) தெளியும் பொருட்டு எனக்குப் பரிபாக காலஞ் சித்திக்குமோ? (எ-று)

ஈண்டு பரிபாக காலத்தை மாத்திரம் கூறினாரேனும், "முதலடியில் அருவினை" யெனக் கூறியதற்கேற்ப இருவினை யொப்பு மலபரிபாகம் எனக் கொள்ளுதலும் பொருந்தும். கீர்த்தியானது சூரியனொளி போல் எங்கும் விளங்கி வருதலின் அதனை ஒளியென்றார். (54)

455. அடையார் புரஞ்செற்ற தேவேநின் பொன்னடிக் கன்புசற்றும்
படையாத என்னைப் படைத்திந்தப் பாரிற் படர்ந்தவினைத்
தடையால் தளையிட்டு நெஞ்சம்புண் ணாகத் தளரவைத்தாய்
உடையாய் உடைய படியன்றி யான்செய்த தொன்றிலையே.

(பொ-ரை) பகைவர்களுடைய திரிபுரங்களையுமழித்த தெய்வமே! என்னை அடிமையாக உடையவனே! உனது பொன் போன்ற திருவடிகளுக்குச் சிறிதும் அன்பில்லாத என்னை (இவ்வுலகத்தில்) சிருட்டித்து, (அச்சிருட்டியினால்) உண்டான கர்மமாகிய விலங்கினால் தளையிட்டு என்மனம் புண்ணாக (வருந்தும்படி) தளர்ச்சி யடைய வைத்தனை. இவையெல்லாம் உள்ளபடி விளைந்ததேயல்லாமல் நானே செய்தது ஒன்றுமில்லை. (எ-று)

இறைவனே! என்னை உலகத்தில் விடுத்து மாயையாற் கட்டிவைத் தனை! எல்லாம் உன்செயலேயல்லாமல் என்செயல் ஒன்றுமில்லை என்பதாம். (55)

456. ஆடுங் கறங்குந் திரிகையும் போல அலைந்தலைந்து
காடுங் கரையுந் திரிவதல் லால்நின் கருணைவந்து
கூடும் படிக்குத் தவமுய லாத கொடியர்எமன்
தேடும் பொழுதென்ன செய்வார் பரானந்த சிற்சுடரே.

(பொ-ரை) உயர்ந்த இன்பத்தைக் கொடுக்கின்ற ஞானதேஜஸே! ஆடுகின்ற காற்றாடியையும், குலாலனது சக்கரத்தையும் போன்று காட்டினும், கரையினும், அலைந்த லைந்து திரிவதல்லாமல் உனது கிருபையானது வந்து காட்டும்

பொருட்டுத் தவஞ் செய்யாத கொடியோர்கள் (தங்களை) யமன் தேடுங்காலத்தில் என்ன செய்வார்கள்? (எ-று)

ஓரிடத்திலிருந்து உன் கருணையைப் பெறுதற்கான தவத்தைச் செய்யாமல் ஊர்தோறுந் திரிந்தலையுங் கொடியோர்கள் யமனுக்கென் சொல்வார்கள் என்பதாம்.

ஈண்டுக், காடு என்றது முல்லை நிலத்தை. 'கரை' என்றது நெய்தனிலத்தை இவ்விரண்டையும் கூறினாரேனும் இனம்பற்றி மலைச் சார்பாயுள்ள குறிஞ்சி நிலத்தையும், நாட்டுச் சார்பாயுள்ள மருதநிலத்தையும், சுடுகாடு சார்பாயுள்ள பாலை நிலத்தையும் உடன் கொள்ளப்படும். ஐந்திணையெனக் கூறுவர் பொருளுணர்ந்தோர். இந்நிலங் களின் தெய்வம் முதலியவற்றை அடியில் வரும் உதாரணச் செய்யுள் முகத்தா னறிக.

" காடாகு முல்லை கழியாகு நெய்தல் கல்லாங் குறிஞ்சி
நாடாகு மருத நடலைவெம் பாலையிந் நாட்டுத் தெய்வங்
கோடார் கரன்வரு ணன்குக னிந்திரன் கூறுதுர்க்கை
மாடாயர் மீன்புல்லர் குன்றவர் கானவர் மள்ளருமே."

என்பதாம். (56)

457. கற்றும் பலபல கேள்விகள் கேட்டுங் கறங்கென்வே
சுற்றுந் தொழில்கற்றுச் சிற்றின்பத் தூடு சுழலின்என்னாங்
குற்றங் குறைந்து குணமே லிடுமன்பர் கூட்டத்தையே
முற்றுந் துணையென நம்புகண் டாய்சுத்த மூட நெஞ்சே

(பொ-ரை) முழு மூட மனமே! பல நூல்களைக் கற்றும், பல கேள்விகளைக் கேட்டும், (இவ்விரண்டையும் விட்டு) காற்றாடி போல் சுழல்கின்ற தொழிலைக் கற்றுச் சிற்றின்பத்திற் சுழன்றால் என்ன பிரயோசனமுண்டாகும். (ஆகையால் அங்ஙனஞ் சுழல்வதைவிட்டு) குற்றங் களொழிந்து குணமேலிடுகின்ற அன்பர்களது கூட்டத் தையே என்றும் துணையென்று நம்புவாயாக. (எ-று)

மனமே! சிற்றின்பத்தைவிட்டு அடியவர்கள் கூட்டத் தையே துணையாக நம்பி அவர்களுடன் கூடியிருக்கக் கடவை என்பதாம். (57)

458. நீயென நானென வேறில்லை யென்னும் நினைவருளத்
தாயென மோன குருவாகி வந்து தடுத்தடிமைச்
சேயெனக் காத்தனை யேபர மேநின் திருவருளுக்
கேயென்ன செய்யுங்கைம் மாறுள தோசுத்த ஏழையனே.

(பொ-ரை) பரம்பொருளே! நீயென்றும், நான் என்றும், வேறில்லை யென்கிற எண்ணத்தை அருளிச்செய்யும் பொருட்டு, மௌன குருவாகி எழுந்தருளி வந்து என்னைத் தடுத்தாண்டு அடிமைக் குழந்தையைப் போல் காப்பாற்றி னையே. (ஆகையால்) உன்னுடைய திருவருளுக்குச் சுத்த அறிவில்லாதவனாகிய நான் செய்யும் பிரதியுபகாரம் யாது உளது? (எ-று)

இறைவனே! சுத்த அறிவில்லாதவனாகிய எனக்கு அத்துவிதத் துண்மையை யறிவுறுத்தற்பொருட்டு மௌனகுருவாகி வந்து தடுத்தாட் கொண்டு காப்பாற்றினையே அதற்கு நான் என்ன பிரதியுபகாரஞ் செய்வேன் என்பதாம். *(58)*

459. ஆத்திரம் வந்தவர் போல் அலை யாமல் அரோகதிட
காத்திரந் தந்தென்னை யேஅன்னை போலுங் கருணை வைத்திம்
மாத்திரம் முன்னின் றுணர்த்தினை யேமவு னாஇனிநான்
சாத்திரஞ் சொன்ன படிஇய மாதியுஞ் சாதிப்பனே.

(பொ-ரை) மௌனாசிரியனே! ஆத்திரம் உண்டானவர்கள் போல் அலையாதிருக்கும்படி நோயற்ற சரீரத்தைத் தந்து தாய் போலுங் கிருபை செய்து என்னையும் ஆதரித்து இம்மட்டு மாயினும் முன்னிலைப் பொருளாக நின்று (நேராக நின்று) அறிவுறுத்தினை. (ஆகையால்) இனி நான் சாத்திரங்களிற் கூறிய வண்ணம் இயம முதலிய அட்டயோகசாதனங் களையுஞ் சாதிப்பேன். (எ-று)

இறைவனே! நீ எனக்கு மௌனகுருவாக எழுந்தருளிவந்து மௌனோபதேசஞ் செய்த (அதைக் கொண்டு) இயமமுதலியயோக உறுப்புக்களைச் சாதிப்பேன் என்பதாம். *(59)*

உடல் பொய்யுறவு

460. உடல்பொய் யுறவாயின் உண்மை யுறவாகக்
கடவாரார் தண்ணருளே கண்டாய்—திடமுடனே
உற்றுப்பார் மோனன் ஒருசொல்லே உண்மைநன்றாய்
பற்றிப்பார் மற்றவெல்லாம் பாழ்

(பொ-ரை) உடம்பே பொய்யுறவானால் மெய்யுறவாகக் கடவர் யாவர்? தண்ணிய திருவருளேயாம் திடமுடனா

ராய்ந்துபார். (அங்ஙனம் பார்ப்பையாயின்) மௌனகுருவினால் அருளிச் செய்யப்பட்ட ஒரு மொழியே உண்மையாக விளங்கும். (இன்னும்) நன்றாகத் தொடர்ந்து பார் (பார்த்தால்) மற்றைய பொருள்களெல்லாம் பாழாக விளங்கும். (எ-று)

மனமே! உடம்பு பொய்யுறவாம். திருவருளே மெய்யுறவாம். (ஆகையால்) மௌனகுருவின் ஒரு மொழியே மெய். மற்றவைகளெல்லாம் பொய் என்பதாம். (1)

461. பாராதி பூதமெல்லாம் பார்க்குங்கால் அப்பரத்தின்
சீராக நிற்குந் திறங்கண்டாய்—நேராக
நிற்குந் திருவருளில் நெஞ்சேயாம் நிற்பதல்லால்
கற்குநெறி யாதினிமேற் காண்.

(பொ-ரை) மனமே! பார்க்குமிடத்தில் பிருதிவி முதலிய பூதங்களனைத்தும் அந்தப் பரவஸ்துவின் சிறந்த வடிவமாகவே இருக்கும் விதத்தைக் கண்டனை. (ஆகையால்) நாம் நேராக நிற்குந் திருவருளினிற் பதல்லாமல் இனிமேல் கற்கவேண்டிய வழியாது? (எ-று)

மனமே! யாவும் இறைவன் வடிவங்களாதலின் நாம் அவனது திருவருள் நிலையில் நிற்பதல்லாமல் கற்கும் வழியில் நிற்பது ஏன்? என்பதாம். (2)

462. மெய்யான தன்மை விளங்கினால் யார்க்கேனும்
பொய்யான தன்மை பொருந்துமோ—ஐயாவே
மன்னும்நி ராசைஇன்னம் வந்ததல்ல உன்னடிமை
என்னும்நிலை எய்துமா றென்.

(பொ-ரை) ஐயனே! எவர்க்காயினும் மெய்க்குணம் விளங்கினால் பொய்க்குணம் நிற்குமோ? நில்லாது (அங்ஙனமிருந்தும்) நிலைபெற்ற அவாவறுதல் இன்னும் வந்தடைந்ததில்லை (ஆகையால்) நான் உன்னடியவன் என்னும் நிலையை அடையுமாறு எங்ஙனம்? (எ-று)

இறைவனே! எனக்கு அவாவறுதல் உண்டாகாமையால் நான் உனக்கடியவனாவது எங்ஙனம் என்பதாம். (3)

463. அறியாமை மேலிட் டறிவின்றி நிற்குங்
குறியேற் கறிவென்ற கோலம்—வறிதேயாம்
நீயுணர்த்த நான் உணரும் நேசத்தா லோஅறிவென்
றேயெனக்கோர் நாமமிட்ட தே.

(பொ-ரை) அஞ்ஞான மேம்பட்டு ஞானமில்லாமல் கிடக்கும் சிறியேனுக்கு அறிவென்கிற வடிவம் வீணேயாம். (ஆயினும்) எனக்கு அறிவென்று ஒரு பெயரிட்டது (தலைவனாகிய) நீ அறிவுறுத்த (அடியவனாகிய) நான் அறிந்து கொள்ளுந் தன்மையினாலே? அறிந்திலேன். (எ-று)

அறிவில்லாத எனக்கு அறிவு என்கிற பெயரிட்டது நீ அறிவிக்க நானறிந்து கொள்ளுந் தன்மையினாலே வேறெதி னாலோ அறியகில்லேன் என்பதாம். (4)

**464. ஏதுக்குச் சும்மா இருமனமே என்றுனக்குப்
போதித்த உண்மைஎங்கே போகவிட்டாய்—வாதுக்கு
வந்தெதிர்த்த மல்லரைப்போல் வாதாடி னாயேயுன்
புந்தியென்ன போதமென்ன போ.**

(பொ-ரை) மனமே! வாது செய்யும்பொருட்டு வந்து எதிர்த்த மல்லயுத்தர்களைப் போல் வாது செய்தனையே அது எற்றுக்கு? சும்மாவிரு, என்று உனக்கு உபதேசிக்க உண்மை நிலையை எவ்விடஞ் செல்ல விட்டனை? (ஆகையால்) உன் புத்தி தானென்ன? அறிவுதானென்ன? (என்முன் நில்லாமல்) ஒழிந்து போவையாக. (எ-று)

மனமே! உனக்கு உபதேசித்த உண்மை நிலையைவிட்டு வாது செய்தனையாகையால் உன் புத்தியும், அறிவும் என்ன குணத்தையுடையன என்பதாம். (5)

**465. சகமனைத்தும் பொய்யெனவே தானுணர்ந்தால் துக்க
சுகமனைத்தும் பொய்யன்றோ சோரா—திகபரத்தும்
விட்டுப் பிரியாத மேலான அத்துவிதக்
கட்டுக்குள் ஆவதென்றோ காண்.**

(பொ-ரை) பிரபஞ்சங்களனைத்தும் பொய்யாமென்று உணர்ந்தால் துக்க சுகங்களெல்லாமும் பொய்யாமல்லவோ? ஆம். (அங்ஙனமே அவற்றைப் பொய்யாமென்றுணராத நான்) இம்மை மறுமைகளிலும் விட்டு நீங்காத உயர்ந்த அத்துவித நிலையாகிய கட்டுக்குட்படுவது எக்காலமோ? (எ-று) (6)

**466. கற்கண்டோ தேனோ கனிரசமோ பாலோஎன்
சொற்கண்டா தேதெனநான் சொல்லுவேன்—விற்கண்ட
வானமதி காண மவுனிமவு னத்தளித்த
தானமதி லூறும்அமிர் தம்.**

(பொ-ரை) ஒளி பொருந்திய சிதாகாயத்திலுள்ள சந்திர மண்டலத்தைக் காணும் பொருட்டு மௌனாசிரியர் மௌனத்தினால் அருளிச் செய்த இடத்தில் சுரக்கின்ற அமிர்தமானது கற்கண்டோ? தேனோ? முக்கனிகளின் ரசமோ? பாலோ? இவைகளில் (இன்னதென்று சொல்ல) எனது சொல்லுக்கடங் காதே ஆகையால் நான் என்னவென்று சொல்லுவேன்? (எ-று)

சந்திர மண்டலத்தினின்றுஞ் சுருக்கின்ற அமிர்த மானது கற்கண்டு முதலிய இனிய வஸ்துக்களில் யாதென்று சொல்லற்பாற்று என்பதாம். (7)

**467. கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறா வுற்பவநோய் மாறுமோ—நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றோதான்
பொய்யாம் பிறப்பிறப்புப் போம்.**

(பொ-ரை) மனமே! மெய்ஞ்ஞானத்தைக் கடைப்பிடித்து அதன் சார்பாயுள்ள சகசநிட்டையில் சதா குடிகொண்டிருப்பவர்களுக் கேயல்லாமல், கேட்டால், சிந்தித்தல், தெளிதல் என்னும் மூவகைச் செய்கைகளை யுடையார்க்குப் பிறப்பிறப்புக்கள் நீங்குமோ? நீங்கா?

இதில் "மாறுமோ" என்பதின்கண்ணுள்ள ஓகாரம் எதிர்மறைப் பொருட்டு.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை என்பன சிவனடியைச் சேர்வதற்கான உபாயங்கள். ஆனால், இந் நூலாசிரியரோ, முன் மூன்றில் முத்திப்பேறு கிடையா தென்றும் கடையிற் கூறிய ஒன்றாகிய நிட்டையினாலேயே முத்திப்பேறு கிடைக்குமென்றும் கூறினர். ஏனென்றால், அந்த நிட்டையில் சதா சிவதியானத்தோடு கூடியிருப்பது சகசமாகையால்; இது நோக்கியே ஸ்ரீ சிவஞானமுனிவரும் நிட்டையாவது யோகமன்றென்றும் சிவனடியிற் பதிந்திருக்கும் பத்தியேயென்றும் கூறியிருக்கின்றனர். இங்ஙனமிருப்பதால் நிட்டையொன்று கைகூடியபோது மற்றைய மூன்றும் அந்நிட்டையிலேயே அடங்கி விடுமென்பது வெளிப்படுகின்றது. இப்படியிருப்பதை யுணராத ஒருவர், கேட்டலுஞ் சிந்தித்தலுமாகிய இரண்டு சாதனங்களையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் கலைஞானமாகிய அபரஞானம் கிடையாதபோது

சிவபாதத்தைத் சிந்திக்கும் சம்பத்து விருத்தித்தற்குக் காரணமாகிய மெய்யுணர்வு கிட்டாதென்றும், தெளிதலும், நிட்டையுமாகிய இரண்டு சாதனங்களையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்ற உணர்வரிய மெய்ஞ் ஞானமாகிய பரஞானங் கிடையாதபோது கலைஞானம் வாயிலாகப் பிறப்பை வேரறக் களைந்தெறிதற்குக் காரணமாகிய பேருணர்வு கிட்டாதென்றும் வரைந்தனர். இவருடைய கல்வித்திறம் சால அழகுடையது போலும். (8)

468. மாயா சகத்தை மதியாதார் மண்முதலா
யேயான தத்துவத்தில் எய்துவரோ—நேயானு
பூதிநிலை நிற்கப் பொருந்துவர்கள் அன்னவர்தம்
நீதியையே ஓர்மனமே நீ.

(பொ-ரை) மனமே! மாய்கையின் காரணமாகிய இந்த உலகத்தை ஒரு பொருளாக நினையாத ஞானிகள் பிருதிவி முதலாகச் சொல்லப்பட்ட தத்துவக்கூட்டங்களிற் சேருவரோ? சேரார். அப்படிப்பட்டவர்கள் எப்படி உய்வார்களென்றால், சகச நிட்டானுபவத்திற் பொருந்தியிருந்து உஜ்ஜீவிப்பார்கள். ஆகையால் நீயும் அவர்களுடைய நன்மார்க்கத்தை மர்க்கடமுஷ்டியைப் போற் பிடித்து ஆராய்ந்து பார்ப்பாயாக.(எ-று)

ஞானிகளுக்கு நிட்டையின் கண்ணே விருப்பமுளது சுபாவமாகையால் இந்நூலாசிரியர் இங்ஙனம் கூறினார். (9)

469. இகமுழுதும் பொய்யெனவே ஏய்ந்துணர்ந்தா லாங்கே
மிகவளர வந்தஅருள் மெய்யே—அகநெகிழப்
பாரீர் ஒரு சொற்படியே அனுபவத்தைச்
சேரீர் அதுவே திறம்.

(பொ-ரை) ஓ உலகர்களே! இந்த உலகங்கள் யாவும், பொய்யானவை யாகுமென்று யாரோருவர் விசாரித்தறி கின்றார்களோ அவர்களுக்கு மிகுதியும் விருத்தியடை வதற்குரிய திருவருளானது மெய்யேயாய் விளங்கும். ஆகையால் அந்தத் திருவருளை மனமுருகிப் பார்ப்பீரானால் அது ஒரு சொல்லின் உண்மையை விளக்கும். அப்படி விளக்கப்பட்ட ஒரு சொல்லின் படியே நிட்டானுபவத்தை அடைவீர்களானால் அது உங்களுக்கு மிகவும் மோட்சத்திற்கு வேண்டிய உறுதியைத் தரும். (எ-று)

உலகத்தைப் பொய்யாகக் கொண்டவர்களுக்குத் திருவருள் மெய்யாய் விளங்கும் என்பது கருத்து. (10)

470. ஆரணங்கள் ஆகமங்கள் யாவுமே ஆனந்த
பூரணமே உண்மைப் பொருளென்னும்—காரணத்தை
ஓராயோ வுள்ளுள்ளே உற்றுணர்ந்தவ் வுண்மையினைப்
பாராயோ நெஞ்சே பகர்.

(பொ-ரை) மனமே! நீ வேதங்களும், சிவாகமங்களும், எவ்விடத்தும் சுக நிறையப் பெற்ற பொருளே உண்மைப் பொருளென்று சொல்லா நிற்கும். அப்படி அவைகள் முறையிட்டு வருகின்ற நியாயத்தைத் தெரிந்திலாயோ? அன்றி, அந்த நூல்களோடு கலந்து அதை ஆராய்ந்து உண்மை இதுவென்று விசாரித் தறியாயோ! இதை நீ எனக்குச் சொல்ல வேண்டும். (எ-று)

வேதங்களாலும், சிவாகமங்களாலும் சொல்லப்பட்டு வருகின்ற பொருள் ஒன்றே யென்பார். 'ஆரணங் களாகமங்கள் யாவுமே யானந்த பூரணமே உண்மைப் பொருளென்னும்' என்றார். (11)

471. நேராயம் மவுனநிலை நில்லாமல் வாய்பேசி
ஆராய் அலைந்தீர்நீர் ஆகெடுவீர்—தேரீர்
திரையுந் திரையுநதிச் சென்னியனை நாவால்
கரையுங் கரையுமனக் கல்.

(பொ-ரை) ஓ உலகர்களே! நீங்கள் தடத்த லட்சணமாயிருந்து மௌனோபதேச நிலையில் இராமல் வீணாக வார்த்தையாடி அலை கின்றீர்கள். அந்தோ! கெடுவீர் அப்படி கெடுவதைவிட்டுக் கங்காதேவியைத் தமது சடாபாரத்தில் வைத்திருக்கும் சிவபெருமானை நாவினால் துதி செய்யுங்கள். அப்படி துதி செய்வீரானால் உங்களுடைய கல்போன்ற மனமானது கரையும். இஃதுண்மை. (எ-று)

உலகர்களே! நீங்கள் சிவபெருமானைத் துதி செய்வீர்க ளானால் முத்திப்பேறு எளிதில் கைகூடுமென்பது கருத்து. (12)

472. அற்ப மனமே அகிலவாழ் வத்தனையுஞ்
சொற்பனங்கண் டாயுண்மை சொன்னேன்நான்—கற்பனை யொன்
றில்லா விடத்தே எனைச்சும்மா வைத்திருக்கக்
கல்லாய்நீ தானோர் கவி.

(பொ-ரை) ஓ! அறிவில்லாமையால் அற்பத் தன்மை வாய்ந்திருக்கின்ற மனமே! இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்வெல்லாம் பொய்யேயாகும். நான் உனக்கு உண்மையைச் சொல்லிவிட்டேன். அங்ஙனம் சொல்லியும் யாதொரு கற்பனையும் இல்லாமல் என்றும் ஒரேதன்மையாயிருக்கும் உண்மையிடத்தில் என்னைச் சும்மா விருக்கும்படி வைப்பதற்கான கல்வியை நீ கற்றா யில்லை. ஆகையால் நீ ஒரு குரங்கு போலிருக்கின்றாய். (எ-று)

குரங்கானது ஒருவழியே நில்லாமல் பலவழியான செய்கைகளுக் குள்ளாகி அலைகின்றமைபோல அலைதலால் அக்குரங்கை மனத்திற்கு உவமித்து, 'நீதானோர்கவி' என்றார்.

அன்றி, என்னைச் சும்மாவிருக்கச் செய்யும்படியான ஒரு நூலைக் கற்கமட்டாய் என்பனவுமாம். (13)

473. எதுந் திருவருளின் இச்சையாம் என்றென்றெப்
போதும் பொருந்தும் புனிதர்பால்—தீதுநெறி
செல்லுமோ செல்லாதே செல்லுமிடம் இன்பமலால்
சொல்லுமோ வேதத் தொனி.

(பொ-ரை) மனமே! எல்லாம் திருவருளின் கிருபையாலே யாகுமென்று சதா நினைத்திருக்கும் ஞானிகளிடத்தில் தீய நெறியின் காரியமானது அணுகாது. ஆனால் அவர்களுக்காகவே தங்களிற் சொல்லப்படுவது நன்மார்க்கங்களேயாகும். ஆகையால் அவர்களிடத்திற் சேருவதும் அதுவே யாகும். (எ-று)

ஞானிகளிடத்தில் கர்மம் அணுகாதென்பது கருத்து.

அவர்கள் சதா இன்பமயமாகவே இருப்பார்கள் என்பது புதைபொருள். (14)

474. கல்லேறுஞ் சில்லேறுங் கட்டியே றும்போலச்
சொல்லேறப் பாழ்த்த துளைச்செவிகொண்—டல்லேறு
நெஞ்சனென நிற்கவைத்தாய் நீதியோ தற்பரமே
வஞ்சனல்லேன் நீயே மதி.

(பொ-ரை) தற்பரவஸ்துவே! கல்லைப் போலவும், ஓடு எறிதலைப் போலவும், மண்ணாங்கட்டியைப் போலவும் கடிய சொற்களைப் பலபேர்கள் சொல்லக்கேட்டு அஞ்ஞானனாயிருக்கும்படி என்னை நீ வைத்தது உனக்கு

நியாயமாகுமோ? ஆகாது. ஆனாலும், அதை நீ நினைத்துப் பார்க்கவேண்டும். (எ-று) (15)

475. அப்பொருளும் ஆன்மாவும் ஆரணநூல் சொன்னபடி
தப்பில்லாச் சித்தொன்றாஞ் சாதியினால்—எப்படியுந்
தேரில் துவிதஞ் சிவாகமமே சொல்லுநிட்டை
ஆருமிடத் தத்துவித மாம்.

(பொ-ரை) மேலே இதுவல்ல பொருள், இதுவல்ல பொருள் என்று பூர்வபட்சஞ் செய்து பின்னர் சித்தாந்தப்படுத்தியுள்ள அந்தப் பரம் பொருளுக்கும். இங்கே சகல தேகங்களிலும் இருக்கும் ஆன்மாவுக்கும், சித்து என்கிற பேர் பொதுவாக இருப்பதால் இரண்டுஞ் சாதியில் ஒன்றேயாகும். ஆகையால் இதுவே வேதத்தின் சம்மதமுமாகும். ஆனால் எந்தவகையில் ஆராய்ந்து பார்த்தாலும், சிவாகமமானது அந்தப் பரம் பொருளுக்கும் ஆன்மாவுக்கும் (அது வேறு இது வேறு) என்னும் துவிதமார்க்கத்தையே சொல்லும். ஆனால் அதுவே இந்த ஆன்மாவானது நிட்டைகூடி நிற்குங் காலத்தில் தான் என்கிற ஒரு பொருள் வேறாகத் தோன்றாதாகையால் அந்த அவசரத்தில் இரண்டு ஒன்றாதலாகிய அத்துவித மார்க்கத்தையும் சொல்லா நிற்கும். (எ-று)

ஈதறியாத சிலர் வேதாந்திகள் எனப் பேர்பூண்டு எந்தக்காலத்திலும் 'நானே பரம், நானே பரம்' என்று சொல்லி வேதத்தின் சம்மதத்தை முழுமையும் உணர்ந்தவர்கள் போலத் திரிந்து வீணே அகம் பிரமவாதத்தைக் கொண்டாடுகின்றனர். ஆகையால் அவர்களை நம்முடைய முன்னோர் களெல்லாம் அகங்காரவாதிகளாவார்களென்று தீர்மானித்துப் பூர்வபட்சஞ் செய்திருக்கின்றார்கள். இது நிற்க, முன்சொன்ன வேதாந்திகள் தங்கள் தலைமேல் தாமே ஏற்றிக்கொண்ட அவ்வகங்காரம் பித்தனை மற்றவர்கள் மேலும் ஏற்றுத் துணிந்து இங்ஙனம் நல்ல சித்தாந்த நூல்களிற் நேர்ந்து நிட்டானுபரராய் விளங்கி வருகின்ற நம்முடைய ஆசாரிய மூர்த்தியாகிய ஸ்ரீ தாயுமான வரையும் வேதாந்தியென்று சொல்லி அவர் மேலும் தங்கள் தலைமேலுள்ள பாரத்தை ஏற்றுகின்றனர். அந்தோ! கொடுமை!! கொடுமை!! அப்படிப்பட்ட பண்டிதசிகாமணிகள் இந்தச் செய்யுளை நோக்கி இந்நூலாசிரியரை எந்த மதத்தர்

என்று கொள்வார்களோ? அறியேன். (எ-று)
(16)

476. வேத முதலாய் விளங்குஞ் சிவவடிவாம்
போத நிலையிற் பொருந்தாமல்—ஏதமிகு
மோகாதி அல்லலிலே மூழ்கினையே நெஞ்சேஇத்
தேகாதி மெய்யோ தெளி.

(பொ-ரை) மனமே! நீ வேதங்களின் அதிகாரணமாய் விளங்கா நின்ற சிவரூபமாயாகும் ஞானநிலையில் எக்காலத்திலும் கலந்திராமல் மிகுந்த குற்றத்தையுடைய மோக முதலாகச் சொல்லப்பட்ட துன்பக் கடலில் அமிழ்ந்துவிட்டனையே. அந்தோ! இந்தத் தேகமுதலியவை உண்மை யாயிருக்கத் தக்கனவோ? நீயே தெளிந்து பார்ப்பாயாக (எ-று)

மோகாதி என்றது காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாற்சரியங்களை. (17)

477. நோக்கற் கரிதான நுண்ணியவான் மோனநிலை
தாக்கற் குபாயஞ் சமைத்தபிரான்—காக்குமுயிர்
அத்தனைக்கும் நானடிமை ஆதலினால் யானெனதென்
றித்தனைக்கும் பேசஇட மில்.

(பொ-ரை) பார்ப்பதற்கு அருமையான சூட்சமமான மௌன நிலையைப் பதித்து வைப்பதற்கு உபாயத்தை அமர்த்தி வைத்த சிவபெருமானாற் காக்கப்பட்டு வருகின்ற வர்களுக்கெல்லாம் நான் அடிமைப்பட்டவனாகையால் நான், எனது என்று அகங்கார மமகாரங்களை எடுத்துப் பேசுவதற்கு இடமில்லை. (எ-று)

அகங்கார மமகாரங்கள் அற்றபோதே ஞானங் கைகூடுவது சுபாவ மாகையால் இந்நூலாசிரியர் இங்ஙனம் கூறினார். (18)

478. ஒன்றுமற நில்லென் றுணர்த்தியநம் மோனகுரு
தன்துணைத்தாள் நீடூழி தாம்வாழ்க—என்றென்றே
திக்கனைத்துங் கைகுவிக்குஞ் சின்மயராந் தன்மையர்க்கே
கைக்குவரும் இன்பக் கனி.

(பொ-ரை) நமக்கு நீர் ஒரு விகற்பமுமில்லாமல் மனத்தை நிறுத்தி நிற்கக் கடவீரென் றறிவுறுத்தின. நம்முடைய மௌன குருவின் இரண்டு திருவடித்

தாமரைகளும் எக்காலத்தும் வாழக்கடவன. என்றும் எப்பொழுதும் எந்தத் திசையிலும் இருந்து கைகுவித்து நமஸ்காரஞ் செய்து வருகின்ற சின்மயமாய் விளங்குதற்கு இருக்கின்ற தன்மையுடையார்க்கே அந்தச் சுகக் கனியானது கைக்குக் கிடைக்கும். (எ-று)

அப்படிப்பட்ட ஞானிகளுக்குக் கிடைக்கும் சிவபெருமான் என்னும் இன்பக் கனியானது அங்ஙனம் கைகுவியாத எனக்குக் கைவருமோ? வராதே அந்தோ! இதற்கு நான் என்னசெய்யவல்லேன் என்பது கருத்து. *(19)*

479. மனத்தாலும் வாக்காலும் மன்னவொண்ணா மோன
இனத்தாரே நல்ல இனத்தார்—கனத்தபுகழ்
கொண்டவரும் அன்னவரே கூறரிய முத்திநெறி
கண்டவரும் அன்னவரே காண்.

(பொ-ரை) மனமே! மனத்தினாலும், வாக்கினாலும் இப்படிப்பட்டதென்று சொல்லுதற்குக் கூடாத மௌனத்தை யடைந்தவர்களும் மிகுந்த கீர்த்தியை அடைந்தவர்களும், சொல்லுதற்கருமையான மோட்ச மார்க்கத்தைக் கண்டவர்களும். நல்ல சாதியாராவார்கள். ஆகையால் இதை நீ நன்றாய்த் தெளிவாயாக. (எ-று)

இங்ஙனம் புகன்றமையால் மற்றவர்கள் உயர்ந்த குலத்திற் பிறந்தவர் களாக இருந்தாலும் நல்ல சாதியாராகார் என்பது போதருகின்றது. *(20)*

480. கண்ணொளியே மோனக் கரும்பே கவலையறப்
பண்ணொளிக்கும் உள்ளொளியாம் பான்மையினை—
நண்ணிடவுன்
சித்த மிரங்கிலதென் சித்தந் தெளியாவே
றித்தனைக்கும் ஆதரவும் இல்.

(பொ-ரை) ஓ! என்னுடைய கண்ணுக்குள் ஒளிக்கும் ஒளி போல்பவனே! மௌன ஞானமென்று சொல்லப்பட்டு வருகின்ற கரும்பே! எக்காலத்தும் துன்பம் நீங்கும்படி அகத்தின்கண் ஒளித்திருக்கும் தேஜோமயத்தை நான் சேர்ந்துய்யும் பொருட்டு உன் மனமானது இரங்கவில்லை. ஆகையால் என் மனமும் தெளியவில்லை. வேறுவிதமாகப் பார்க்குமிடத்தில் இவ்வளவு காரியங்களுக்கும் ஆதாரம் ஒன்றுமில்லை. (எ-று) *(21)*

481. அறியாமை சாரின் அதுவாய் அறிவாம்
நெறியான போததுவாய் நிற்கும்—குறியால்
சதசத் தருளுணர்த்தத் தானுணரா நின்ற
விதமுற் றறிவெனும்பேர் மெய்.

(பொ-ரை) அஞ்ஞானமானது தன்னை வந்து சேருங் காலத்தில் தான் அஞ்ஞானத்தையடைந்தும், ஞானம் வந்து தன்னைச் சேருங்காலத்தில் தான் ஞானத்தையடைந்தும், வியவகரிக்கின்ற குணம் தனக்குச் சுபாவமாயிருத்தலால், அந்த உயிரானது சதசத்து என்னும் பெயரையுடையதாகும். ஆனாற் சிவபெருமானுடைய திருவருளானது உணர்த்தத் தான் அறிந்து செய்கின்ற விதத்தினால் அந்த உயிருக்கு அறிவு என்கிற பேரே உண்மையானதாகும். (எ-று)

ஆனால் மற்றைய கருவிகரணாதிகளெல்லாம் பொய்யாகும் என்பதும் உயிர் ஒன்றே மெய்யாகும் என்பதும் இச்செய்யுளால்வெளிப்படையாகின்றன. (22)

482. குருலிங்க சங்கமமாக் கொண்ட திருமேனி
கருவொன்று மேனி நம்பாற் காட்டா—தருளென்று
கண்டவர்க்கே ஆனந்தங் கண்டுகொள லாம்அலது
கொண்டவர்க்கிங் கென்னகிடைக்கும்.

(பொ-ரை) தாயின் கருப்பாசயத்தில் தங்கியிருந்து பிறக்கும் படியான திருமேனியை நமக்குக் கொடுக்க வேண்டாம். குருலிங்க சங்கமமான திருமேனியே நமக்குக் காட்டவேண்டும் என்று வேண்டிக் கொண்டு அதைத் தரிசித்தவர்களுக்கே சுகோதயத்தைத் தரிசிப்பது கூடும். அப்படிக்கல்லாமல் தாயின் வயிற்றினிடமாகப் பிறந்தவர்களுக்கு அந்தச் சுகோதயம் இல்லை. (எ-று) (23)

483. புலியின் அதளுடையான் பூதப் படையான்
பலியிரந்தும் எல்லாம் பரிப்பான்—மலிபுனல்சேர்
பொன்முடியான் முக்கட் புனிதன் சரண்புகுந்தோர்க்
கென்முடியா தேதுமுள தே.

(பொ-ரை) மனமே! நான் ஒன்று சொல்லுகின்றேன். அதை நீ நன்றாய்க் கேட்பாயாக. ஏனென்றால் புலித் தோலாகிய வஸ்திரத்தைத் தரித்தவனும், பூதகணங்களைச் சேனையாக உடையவனும், பிச்சை யெடுத்தும், எல்லா வற்றையும் தாங்குபவனும், கங்கைதங்கிய சடையை யுடையவனும், ஆகிய திரிநேத்திரங்களையுடைய சிவபெரு

மானின் திருவடிகளில் அடைக்கல மடைந்தவர் களுக்கு எல்லாக் காரியமும் முடிவுபெறும். (எ-று)

நாம் அவனுடைய திருவடிகளைத் தஞ்சமாகக் கொள்ளாமையால் நமக்குக் காரியசித்தி உண்டாகாது. ஆகையால் மனமே! உனக்கு நான் எவ்வளவு புத்தி சொன்னாலும் நீ கேட்கிறாயில்லை. இனியாயினும் நான் சொல்லும் புத்தியைக் கேட்டு அவனுடைய திருவடிகளை யடைவாயானால் உனக்கு எல்லாம் கைகூடும் என்பது கருத்து. (24)

484. சொல்லுக் கடங்காச் சுகப்பொருளை நாமெனவே
அல்லும் பகலும் அரற்றுவதென்—நல்லசிவ
ஞானமயம் பெற்றோர்கள் நாமில்லை என்பர் அந்தோ
மோனமய மான முறை.

(பொ-ரை) மனமே! உலகத்தில் சிலர் வாசகாதீதமாயிருந்து விளங்கிக் கொண்டிருக்கின்ற இன்பவஸ்துவை நாமே அந்த வஸ்துவாவோமென்று ஆகோராந்திரம் சொல்லிச் சொல்லி முறையிடுகின்றனர். அது எற்றுக்கு? நல்ல சிவஞானத்தையடைந்த பெரியோர்களெல்லாம் (நிட்டைகூடி அந்த வஸ்துவை மீது யநுபவிக்குங் காலத்தில்) நாம் என்கிற ஒரு பொருள் இல்லையென்றும், இதுவே ஞான எல்லையின் முறைமைப்பாடு என்றும் சொல்லுவர். (எ-று)

தான் என்னும் அகங்காரம் அற்றவிடமே சுகப்பொருளுதயமாதற்குத் தக்க தாகலான் அக்காலத்தில் நாமில்லையென்றார். ஈதறியாத சிலர் தாங்களே வேதாந்த நூல்களில் மிகவும் தேர்ந்தவர்கள் போல எக்காலத்திலும் நானே பரம், நானே பரம், என்று சொல்லித் திரிகின்றனர். அந்தோ! கொடுமை!! கொடுமை!

முன்னர் ஒருமுறை இப்படியே பொருளெழுதி மீண்டும் எழுதினது 'கூறியது கூறல்' என்னும் குற்றமாகுமென்று யாரொருவராயினும் கடாவு வாரேல், அவர்கள் தாங்கள் கொண்டிருக்கும் அகங்காரவாதத்தினின்றும் இச்செய்யுட்கள் மூலமாக இனியேனும் நீங்கி உய்வாராக என்று வற்புறுத்தி அநுவதித்து எழுதியதெனக் கொள்ளக் கடவர். (25)

485. ஐயா அருணகிரி அப்பா உனைப்போல்
மெய்யாக வோர்சொல் விளம்பினர்யார்—வையகத்தோர்
சாற்றரிதென் றேசற்றார் தன்னனையாய் முக்கண்எந்தை
நாற்றிசைக்குங் கைகாட்டி னான்.

(பொ-ரை) என் தந்தையே! அருணகிரி அப்பனே! உன்னைப் போல் உண்மையாக ஒரு மொழியை அருள் செய்தவர்கள் வேறு யார் இருக்கின்றனர்? ஒருவருமில்லை. ஆகையால் நாம் இந்த மார்க்கமாக உபதேசிப்போமானால் உலகத்தார்கள் தெரிந்து சொல்லக்கூடாமையா யிருக்கு மென்று ஜனகாதியர் நால்வர்களுக்காக திரிநேத்திர தாரியாகிய என்னுடைய தந்தையானவன் நான்கு திசைகளி லுள்ளவர்களுக்கும் தெரியும் படியே சின்முத்தி ரோபதேசஞ் செய்தான். (எ-று)

அவனுடைய பரமகாருணியத்தின் விநோதத்திற்குக் கைம்மா றென்னை? என்பது குறிப்பு. (26)

486. காதற்றுப் போனமுறி கட்டிவைத்தால் ஆவதுண்டோ
தீதற்ற காயமும்அச் செய்கையே—போதமாய்
நிற்பரல்லால் இச்சகத்தில் நேரார்கள் நேர்ந்திடினுந்
தற்பரமாக் கண்டிருப்பார் நாம்.

(பொ-ரை) காதறுந்துவிட்ட ஊசியைக் கட்டிப் பத்திரப்படுத்தி வைப்பதினால் ஒரு பிரியோசனமு மில்லாதவாறுபோல இந்தப் பொய்யான தேகத்தாலும் ஒரு பிரயோசனமுமில்லை. ஆகையால் பெரியோர்களெல்லாம் ஞானமயமாய் நிற்பார்களே யொழிய இவ்வுலக வாஞ்சனையில் இரார். அப்படி இந்த உலகத்திலிருந்தாலும் தங்ளைத் தாம் சின்மயமாகவே சதாகண்டு கொண்டிருப்பார்கள்.

பெரியோர்கள் சதா ஞானத்திலிருப்பார்கள் என்பது கருத்து. (27)

487. வெள்ளங் குலாவுசடை வெள்ளக் கருணையினான்
கள்ளங் குலாவு வஞ்சக் கள்ளனேன்—உள்ளத்தில்
இல்லனென்றால் அன்னவன்றான் எங்கும் வியாபகத்தான்
அல்லனென்றுஞ் சொல்லவழக் காம்.

(பொ-ரை) கங்கை தங்கிய சடாபாரத்தையுடைய மிக்க கிரு பாசமுத்திரனாகிய சிவபெருமானானவன் வஞ்சகம் குடி கொண்டிருக்கும் என்னுடைய மனத்தின்கண் இல்லையென்று சொன்னால். அவன் எங்கும் வியாபகனாக மாட்டான் என்று சொல்லுவதற்கு நியாயமுண்டாகும். (எ-று)

இங்ஙனமிருத்தலாற் சிவபெருமானுக்குப் 'பூரணன்' என்கிற பேர் உண்மையால் அவனுடைய சர்வவியா பகத்திற்குக் குறைவென்னை என்பது கருத்து.

இதற்கு இந்நூலாசிரியரே முன்னர்,

"பூரணனெனும் பெயர் விரிக்கிலுரை வேறுமுளதோ"

என்றார். *(28)*

488. தத்துவப்பே யோடே தலையடித்துக் கொள்ளாமல்
வைத்தஅருள் மோன வள்ளலையே—நித்தம் அன்பு
பூணக் கருதுநெஞ்சு போற்றக் கரமெழும்பும்
காணத் துடிக்குமிரு கண்.

(பொ-ரை) ஓ சிவநேசர்களே! தத்துவமார்க்கங்களில் நுழைந்து அவைகளை விசாரித்து விசாரித்து - விசாரப்பட்டு வருந்தாமல் உபதேச மார்க்கமாக எனக்குத் திருவருளைக் கொடுத்தருளிய மௌனாசிரியனையே எனது மனமானது அன்புடன் தியானிக்கும் கரங்கள் நமஸ்காரஞ் செய்யும். காண்பதற்குக் கண்கள் துடிக்கும். (எ-று)

இங்ஙனமிருத்தலால் எனக்கு வேறோர் தெய்வத் தினிடத்தில் இப்படிப் பட்ட செய்கைகள் உண்டாகா என்பது குறிப்பு. *(29)*

489. தொல்லைவினைக் கீடாய்ச் சுழல்கின்ற நானொருவன்
எல்லையிலா நின்கருணை எய்துவனோ—வல்லவனாம்
மோன குருவே முழுதினையுந் தானுணர்ந்த
ஞான குருவே நவில்.

(பொ-ரை) சர்வ வல்லமைகளை யுடையவனான மௌனாசிரியனே! சர்வகாரியங்களையும் உணர்ந்திருக் கின்ற ஞானாசிரியனே! பூர்வத்திற் செய்த கர்ம பாகுபாட்டிற்கு ஈடாக வருத்தப்படுகின்ற நான் அளவு சொல்லக் கூடாத பேரின்பத்தையடை வேனோ! அடையமாட்டேனோ! அதை நீயே எனக்குத் திருவருள் செய்ய வேண்டுக. (எ-று) *(30)*

490. மூன்றுகண்ணா முத்தொழிலா மும்முதலா மூவுலகுந்
தோன்றக் கருணைபொழி தோன்றலே—ஈன்ற அன்னை
தன்னைப்போல் அன்பு தழைத்தோய் ஒருதெய்வம்
உன்னைப்போ லுண்டோ வுரை.

(பொ-ரை) திரிநேந்திரங்களுடையவனே1 முத்தொழில் களுடையவனே! முத்தேவர்களுக்கும் முதல்வனே! மூன்று உலகத்தார்களும் உண்டாகும்படி திருவருள் செய்த

பெருமையிற் சிறந்தவனே! பெற்ற தாயைப்போல் அன்பு வைத்துப் பரிபாலித்தவனே! உன்னைப்போல் வேறு தெய்வமும் இருக்கின்றதா? இல்லை.(எ-று)

சிவபெருமானைவிட வேறு தெய்வமில்லை என்பது கருத்து. இதனை

" சைவத்தின் மேற்சமய மேதுமில்லையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்றெய்வ மில்'

என்று கூறியிருக்கின்றமையா னறிக. *(31)*

491. நேசிக்குஞ் சிந்தை நினைவுக்குள் உன்னைவைத்துப்
பூசிக்குந் தான் நிறைந்து பூரணமாய்—யோசித்து
நின்ற தல்லால் மோனா நிருவிகற்ப நிட்டைநிலை
என்றுவரு மோ அறியே னே.

(பொ-ரை) விரும்புகின்ற என்னுடைய மனம் உன்னை வைத்துப் பூசிக்கும். அப்படி பூசிப்பதில் தானே நிறைந்து பூரணமாகப் பாவித்து நிற்பதேயல்லாமல் அதில் வேறு பிரயோசனமில்லை. ஆகையால் எனது மௌனாசிரியனே! எனக்கு நிருவிகற்பசமாதியின் உண்மைநிலை எந்தக் காலத்தில் வந்து கைகூடுமோ? தெரியவில்லை. (எ-று) *(32)*

492. அறிவில் அறியாமை அற்றறிவாய் நின்று
பிறிவற ஆனந்தமயம் பெற்றுக்—குறியவிழ்ந்தால்
அன்றைக் குடல்வேண்டேன் ஐயா இவ் ஆக்கையையே
என்றைக்கும் வேண்டுவனே யான்.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! நான் என்னுடைய அறிவின் கண்ணிருக்கும் அஞ்ஞானத்தினின்றும் நீங்கி என்றும் நீங்காத சுகத்தைப் பெற்று நானென்னும் குறியை யொழியப் பெறுவேனானால் அப்பொழுதே நான் என் தேகத்தைப் பொய்யெனத் தள்ளி விரும்பமாட்டேன். அந்தச் சுகம் எனக்குக் கிடைக்காவிட்டால் நான் இந்த அற்ப உடம்பையே வேண்டுவேன். (எ-று)

தேகத்தை ஆதாரமாக வைத்தக் கொண்டே சிவத்தைப் பெற வேண்டியது அத்தியாவசியமாகையால் "இவ்வாக்கையையே யென்றைக்கும் வேண்டுவனே யான்" என்றார். இதுபற்றியே நமது மாதாவாகிய ஔவையாரும் தாம் பாடிய மெய்ஞ்ஞானக் குறளில்,

"உடம்பின் பயனாவ தெல்லாமெஞ் ஞான்றும்
திடம்பெற வீசனைத் தேடு"

என்று சொல்லியிருக்கின்றனர். *(33)*

**493. உடலைப் பழித்திங் குணவுங் கொடாமல்
விடவிடவே நாடுவரோ மெய்யைப்—படபடென
வேண்டுவேன் இந்தவுடல் மெய்யுணராப் பொய்யன்நான்
ஆண்டநீ தானே அறி.**

(பொ-ரை) நல்ல உணர்வுடைய யோகிகள் இந்தத் தேகத்தை யிகழ்ந்து அதற்கு வேண்டிய ஆதாரத்தையுங் கொடாமல் அதை விட்டுவிட விரும்புவார்களா? விரும்பார். ஆகையால் நானும் மிகவும் விரைந்து இதையே விரும்புவேன். ஆகையால் உண்மையை விசாரித்தறியாத பொய்யனாவேன். இங்ஙனம் இருப்பனவற்றையெல்லாம் எங்களை யெல்லாம் அடிமை கொண்டிருக்கும் தயாளுவாகிய நீயே அறிய வேண்டும். (எ-று) *(34)*

**494. அறியாயோ என்னையுநீ ஆண்டநீ சுத்த
வெறியாய் மயங்கவுமேன் விட்டாய்—நெறிமயங்கிக்
குன்றுஞ் செடியுங் குறுகுமோ ஐயாவே
கன்றுகெட்டால் தாயருகே காண்.**

(பொ-ரை) என்னுடைய ஐயனே! கன்றை இழந்த தாய்ப் பசுவினிடத்தில் மலைகளும், செடிகளுமா முன் கன்றுபோல் வரும்? அவை வாரா, அதுபோல என்னை அடிமையாகக் கொண்ட நீ நான் பித்தெடுத்து மயங்கும்படி என்னை விட்டது எற்றுக்கு? ஆகையால் நீ என்னை அறியாய் போலும். (எ-று) *(35)*

**495. ஏதுக் குடற்சுமைகொண் டேனிருந்தேன் ஐயனே
ஆதிக்க மோன அருள்தாயே—சோதியாம்
மன்ன நிருவிகற்ப ஆனந்த நிட்டையிலே
பின்னமற நில்லாதே பின்.**

(பொ-ரை) என்னுடைய தலைவனே! மௌனாதிக்கத்தை யுடைய திருவருட்டாயே! நான் தேஜோமயமான நிருவிகற்ப ஞானத்தால் அநுபவிக்கும் ஆனந்தத்தில் நில்லாதபோது இந்தப் பாரமாகிய தேகத்தைச் சுமந்து கொண்டிருப்பது எற்றுக்கு? (எ-று)

தேகமுள்ள பொழுதே நிருவிகற்ப ஞானத்தையடைய வேண்டு மென்பார், இங்ஙனம் கூறினார்.

இது ஞானத்தைக் கிடைக்கப் பெற்றபின் இந்தத் தேகத்தாற் பயனொன்றுமில்லை என்பதை விளக்குகின்றது. *(36)*

496. பின்னும் உடற்சுமையாப் பேசும் வழக்கதனால்
என்னபலன் நாமுற் றிருந்தோமே—அன்ன தனால்
ஆனந்தந் தானேதா னாகுமெம் மையனே
ஏனிந்தத் துன்பம் இனி.

(பொ-ரை) நம்முடைய தலைவனே! இன்னும் பளுவாகப் பேசிக் கொண்டிருக்கும் உடம்பினால் நாம் என்ன லாபத்தை அடைந்திருந்தோம். ஆனால் அந்த உடம்பினால் ஆனந்தத்தை அநுபவிப்பதற்காகும். ஆகையால் இனி வருத்தம் என்னை? (எ-று) *(37)*

497. துன்பக் கடலில் துளைந்ததெலாந் தீர்ந்ததே
இன்பக் கடலில் இருமென்ன—அன்பில்
கரைந்து கரைந்துருகிக் கண்ணருவி காட்ட
விரைந்துவரும் ஆனந்த மே.

(பொ-ரை) நான் இதுகாறும் துன்ப சாகரத்திலமிழ்ந்து வருத்தப்பட்டமைக்கு அளவில்லை. ஆனால் அவ்வருத்தங்க ளெல்லாம் நீங்கின. என்னுடைய குருசவாமியானவன் எழுந்தருளி வந்து நீ பேரின்பக் கடலிலிருப்பாயாக, வென்று ஒரு மொழி சொல்வானானால், அதைக் கேட்ட என் மனமானது இளகிக் கண்கள் ஆனந்தபாஷ்பம் சிந்த எனக்குப் பேரின்பம் மேலிடும். அதனால் நான் உஜ்ஜீவிப்பேன். (எ-று) *(38)*

498. கரைந்து கரைந் துருகிக் கண்ணீரா றாக
விரைந்தே நிருவிகற்ப மெய்த—நிரந்தரமும்
நின்னையே சிந்திக்க நீகொடுத்தாய் மோனநான்
என்னைமுழு துங்கொடுத்தே னே.

(பொ-ரை) ஓ மௌனாசிரியனே! நான் மனங்கரைந்து கண்களி னின்றும் ஆனந்தபாஷ்பம் பொழிய நிருவிகற்ப சமாதி ஞானத்தையடையும் பொருட்டு உன்னையே சிந்தித்துத் துதிக்கும்படியான அறிவை நீ கொடுத்தாய். நானோ என்னை முழுமையும் உனக்கு அடிமையாகக் கொடுத்து விட்டேன். (எ-று)

ஆசிரியன் சந்நிதானத்தில் உடல், பொருள், ஆவி மூன்றினையும் தத்தம் செய்தாலே மோட்சசாதனத்திற்கு வழிகாட்டுவான் என்பது கருத்து. (39)

499. அல்லும் பகலும்பே ரன்புடனே தானிருந்தால்
கல்லும் உருகாதோ கல்நெஞ்சே—பொல்லாத
தப்புவழி ஏன் நினைந்தாய் சந்தமும் நீஇறந்த
எய்ப்பிலே ஆனந்த மே.

(பொ-ரை) ஓ கல்லைப்போன்ற மனமே! இரவும், பகலும் பெரிய அன்புடனே கூடியிருப்பாயானால் கல்லும் உருகுமல்லவா? ஆகையால் அப்படியிருப்பதை விட்டு கெட்டவழியை ஏன் நினைத்தாய்? அப்படி நினைப்பதை விட்டு உன்னுடைய பாசவறிவு நீங்கின இடத்தில் உண்டாவதே ஆனந்தமென் றெண்ணி அந்த இடத்திலே சதா விருப்பாயாகவும். (எ-று) (40)

500. கொடுத்தேனே யென்னைக் கொடுத்தவுடன் இன்பம்
மடுத்தேனே நீடூழி வாழ்ந்தே—அடுத்தேனே
பெற்றேனே பெற்றுப் பிழைத்தேனே சன்ம அல்லல்
இற்றேனே ஏழைஅடி யேன்.

(பொ-ரை) என்னுடைய ஆசிரியனே! நான் என்னை உனக்குக் கொடுத்து விட்டேன். இன்பத்தைப் பெற்றேன். எப்பொழுதும் அழியாமல் வாழ்ந்தேன். நல்ல ஆனந்தத் தேனையும் பெற்று அதை உண்டிருந்ததினால் பிழைத்தேன். இங்ஙனமெல்லாம் செய்தது உன்னுடைய திருவருளாகையால் இனி எனக்கு வருவதற்காக இருக்கும் பிறவியையும் நீக்கிக் கொண்டேன். (எ-று)

இனி எனக்குப் பிறவித் துன்பமில்லை என்பது கருத்து. (41)

501. பெற்றோம் பிறவாமை பேசாமை யாயிருக்கக்
கற்றோம் எனவுரைக்கக் காரியமேன்—சற்றேனும்
நீக்கற்ற இன்ப நிலைபொருந்தி ஏசற்று
வாக்கற்றார் பேசுமோ வாய்.

(பொ-ரை) ஞானத்தை நன்றாகப் பெற்றவர்கள் இனிமேல் பிறக்கா திருப்பதையும், மௌனமாயிருப்பதையும் நாங்கள் கற்றுக் கொண்டோ மென்று சொல்ல என்ன நியாயமிருக்கின்றது? ஒன்றுமில்லை. ஏனென்றால், சற்றும்

பிரிதலில்லாத பேரின்ப நிலையிற் கூடி கொஞ்சம் மௌனத்தை யடைந்தால் வாய் பேசாதாகையால். (எ-று)

மௌன ஞானிகள் தாமடைந்த பேரின்பத்தை வெளிவிட மாட்டார் என்பது கருத்து. (42)

502. காலன் தனையுதைத்தான் காமன் தலையெரித்தான்
பாலன் பசிக்கிரங்கிப் பாற்கடலை—ஞாலமெச்சப்
பின்னே நடக்கவிட்டான் பேரருளை நாடாதார்க்
கென்னே நடக்கை யினி.

(பொ-ரை) மனமே! எமனை உதைத்தவனும், மன்மதனை எரித்தவனும், பாலனுடைய பசிக்காக மனமிரங்கிப் பாற்கடலை அவனுக்குப் பின்னே போகச் செய்தவனுமாகிய சிவபெருமானுடைய திருவருளை விரும்பி அவனிடத்தில் அன்பைச் செலுத்தாதவர்களுக்கு இனி இவ்வுலகத்தில் நடக்கும் விதம் என்ன இருக்கின்றது? (எ-று)

எமனை யுதைத்தது-மார்க்கண்டேயர் பொருட்டு, காமனை எரித்தது-திரிபுர தகனத்தின் பொருட்டு. பாலன் என்றது-உபமன்யு ரிஷியை. இவருக்குப் பின் பாற்கடல் சென்றமையைக் காஞ்சிபுராணத்திற் காண்க. (43)

503. விண்ணருவி மேன்மேல் விளங்குவபோ லேஇரண்டு
கண்ணருவி வெள்ளமொடு கைகூப்பித்—தண்ணமிர்த
வெள்ளமே ஆனந்த வெற்பே எனத்தொழுவோர்
உள்ளமே ஞான வொளி.

(பொ-ரை) மனமே! இரண்டு கண்களிலும் ஆனந்த பாஷ்பமானது பொழியவும், கைகள் சிரசின்மேற் குவியவும் அமிர்தப்பிரவாகமே! இன்பமலையே! என்று சொல்லித் துதி செய்கின்றவர்களுடைய மனமே ஞான தேஜஸாகும். (எ-று)

மேற்சொன்ன தன்மையுடையார்க்கே ஞானிகளென்று பேரிடப்படும் என்பது கருத்து. (44)

504. பிள்ளைமதிச் செஞ்சடையான் பேசாப் பெருமையினாள்
கள்ளவிழும் பூங்கொன்றைக் கண்ணியான் - உள்ளபடி
கல்லாலின் கீழிருந்து கற்பித்தான் ஓர்வசனம்
எல்லாரும் ஈடேற வே.

(பொ-ரை) மனமே! சந்திரனைத் தரித்த சடாபாரத்தை யுடையவனும், பேசுதற்கு அருமையான பெருமையினை யுடையவனும், தேன் ஒழுகா நின்ற கொன்றைப் பூ மாலை யைத் தரித்தவனுமாகிய சிவபெருமானானவன் உள்ளபடியே

கல்லால மரத்தின்கீழ் தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளியிருந்து ஜககாதி நால்வர்களுக்கு உலகத்திலுள்ள யாவரும் உஜ்ஜீவிக்கும் படி ஒரு மொழியை உபதேசித்தான். (எ-று)

அந்த ஒரு மொழியின் பயனை நான் அறிந்து கொள்ளாமையால் இவ்விடத்தில் வருந்தி நிற்கின்றேன் என்பது குறிப்பு. (45)

505. புலனைந்துந் தானே பொரமயங்கிச் சிந்தை
அலமந் துழலும் அடிமை—நலமிகுந்த
சித்தான மோன சிவனேநின் சேவடிக்கே
பித்தானால் உண்டோ பிறப்பு.

(பொ-ரை) நன்மை மிகுந்த மௌனத்தோர்களால் இப்படிப் பட்டவனென்று அறியப்படும் சிவபெருமானே! ஐம்புலன்களும் என்னைக் கெடுக்க மயங்கி வருந்துகின்ற அடியேனான நான் உன்னுடைய சேவடிகளை நினைப்பதான பயித்தியத்தை அடையும் பட்சத்தில் பிறவியும் என்னை வந்து அணுகுமோ? (எ-று)

சிவபெருமானே! நான் உன்னுடைய திருவடிகளில் அன்பனாவேனேல் என்னைப் பிறவி வருத்தாது என்பது குறிப்பு.1 (46)

506. நிறைகுடந்தான் நீர்கொளுமோ நிச்சயமா மோன
முறையுணர்ந்தார் யாதை முயல்வார்—பிறையணிந்த
மிக்ககயி லாயமலை வித்தகனே வேதியனே
செக்கரணி மேனியனே செப்பு.

(பொ-ரை) சந்திரனைத் தரித்து கைலையில் வீற்றிருக்கும் பரிசுத்தனே! வேதியனே! செவந்த திருமேனியையுடையவனே! நீர் நிறைந்த குடமானது மற்றும் நீரைப் பெற்றுக் கொள்ளாதவாறு போல் மௌன நெறியையுணர்ந்த பெரியோர்கள் எந்தப் பொருளிலும் விருப்பம் வையார். (எ-று) (47)

507. துங்கமழு மானுடையாய் சூலப் படையுடையாய்
திங்களணி செஞ்சடையாய் சேவுடையாய்---
மங்கையொரு
பாலுடையாய் செங்கட் பணியாய்என்
சென்னியின்மேல்
காலுடையாய் நீயே கதி.

(பொ-ரை) பரிசுத்தமான மழுவையும், மானையும், வலத்திலும், இடத்திலுமுடையவனே! சூலாயுதத்தை யுடைய வனே! சந்திரசேகரனே! இருஷபவாகனனே! பார்ப்பதா தேவியை இடது பாகத்திலுடையவனே! செவந்த கண்களை யுடைய சர்ப்பங்களை ஆபரணமாகத் தரித்திருக்கின்றவனே! என்னுடைய தலையினிடத்தில் திருவடிகளை வைத்திருக் கின்றவனே! எனக்கு வேறோர் துணையில்லாமையால் நீயே கதியாவாய். (எ-று)

சிவபெருமானே! நான் உன்னையே நம்பினேனா கையால் என்னை ஆண்டருள் செய்யவேண்டும் என்பது கருத்து. (48)

508. இனிய கருணைமுகில் எம்பிரான் முக்கட்
கனியமிர்த வாரியின்பக் கட்டி—தனிமுதல்வன்
நித்தன் பரமன் நிமலன்நிறை வாய்நிறைந்த
சுத்தன் நமக் கென்றுந் துணை.

(பொ-ரை) மனமே! கருணா மேகம் போன்ற எம்முடைய பெருமானும், மூன்று கண்களையுடைய அமிர்தசமுத்திரம் போல்பவனும், சுகத்தைத் தரத்தக்க கற்கண்டொப்பானும், ஒப்பற்ற முதற் பொருளாயுள்ளவனும், என்றும் அழியாத வனும் மேலானவனும், பரிசுத்தனும், எங்கும் நிறைந்த வனுமான பரிசுத்தனான சிவபெருமானானவன் எனக்கு நீங்காத் துணையாவான். (எ-று) (49)

509. நீதியாய்க் கல்லாலின் நீழலின்கீ ழேயிருந்து
போதியா உண்மையெல்லாம் போதித்தான்—ஏதில்
சனகாதி யாய தவத்தோர்க்கு ஞான
தினகரனாம் மவுன சிவன்.

(பொ-ரை) ஞான சூரியனும் மௌனத்தோர்களால் அறியப்படு பவனுமான சிவபெருமானானவன் கல்லால மரத்தின் கீழ்த் தட்சிணாபிமுகமாக எழுந்தருளியிருந்து குற்றமற்ற தவத்தினையுடைய சனகாதியர் நால்வர் களுக்கும் உண்மை நிலையை உபதேசஞ் செய்தான். (எ-று)

அந்தத் தட்சிணாமூர்த்தியாகிய சிவபெருமானே எனக்குத் துணை யாவான் என்பது கருத்து. (50)

510. தேகச் செயல்தானுஞ் சிந்தையுட னேகுழையில்
யோகநிலை ஞானிகளுக் கொப்புவதோ—மோகநிலை

அல்லலிலே வாழ்வாரோ அப்பனே நீயற்ற
எல்லையிலே சும்மா இரு.

(பொ-ரை) ஓ மாணா! தேகத்தினுடைய செய்கையானது மனத்தோடு ஒன்றுபட்டுக் கரையுமானால் யோகமானது ஞானிகளுக்குச் சம்மதமாகுமோ? ஆகாது. ஆகையால் அவர்கள் துன்பத்திலகப்பட்டு வருத்தப்பட் மாட்டார்கள். ஆகையால் நீயும் உன்னுடைய தற்போத மொழிந்தவிடத்தில் சும்மா விருப்பாயாக. (எ-று)

மௌன ஞானத்தை அடைந்திருவென்பார், "சும்மாவிரு" என்றார். *(51)*

511. சும்மா இருக்கச் சுகமுதய மாகுமே
இம்மாயா யோகமினி யேனடா—தம்மறிவின்
சுட்டாலே யாகுமோ சொல்லவேண் டாங்கன்ம
நிட்டா சிறுபிள்ளாய் நீ.

(பொ-ரை) கர்ம நிட்டாபரனான மாணாக்கனே! நீ மௌன மாயிருப்பாயானால் உனக்குப் பேரின்ப சுகமானது உண்டாகும். ஆகையால் இனி இந்த உலகமாய்கையானது உனக்கு எற்றுக்கு? நீ சீக்கிரமே அதை ஒழித்துவிட வேண்டும். (எ-று) *(52)*

512. நீயற்ற அந்நிலையே நிட்டையதில் நீயிலையோ
வாயற் றவனே மயங்காதே—போயற்
றிருந்தாலும் நீபோகா யென்றுமுள்ளாய் சும்மா
வருந்தாதே இன்பமுண்டு வா.

(பொ-ரை) ஓ மாணா நீ இறந்த அந்த இடமே நிட்டைகூடத் தக்க இடமாகும். ஆகையால் நீ அந்த இடத்திற் போய் மயங்காதிருப்பாயாக. அவ்விடத்தில் ஒருவருத்தமும் வையாதை. அங்குண்டாகும் இன்பாமிர்தத்தைத் தெவிட்ட உண்டு மீண்டும் இங்கே. வா. (எ-று) *(53)*

513. வாவாவென் றின்பம் வரவழைக்குங் கண்ணீரோ
டாவாவென் றேயழுத அப்பனே—நீவாடா
எல்லாம் நமக்கெனவே ஈந்தனையே ஈந்தபடி
நில்லாய் அதுவே நிலை.

(பொ-ரை) வா! வா!! என்று சுகத்தை வரும்படியாகச் செய்கின்ற கண்ணீரோடு கூடி வருத்தப்பட்டு அழுத என்னுடைய நன் மாணாக்கனே! நீ இங்கே வா! உடல்,

பொருள், ஆவி எல்லாம் என்னுடையன வென்றே கொடுத்து விட்டாயல்லவோ? ஆம். அப்படி கொடுத்த அந்த நிலையிலேயே நில்லு. அதுவே உண்மை நிலையாகும். (எ-று) (54)

514. நில்லாப் பொருளை நினையாதே நின்னையுள்ளோர்
சொல்லாப் பொருட்டிரளைச் சொல்லாதே—கல்லாத
சிந்தை குழைந்துசுகஞ் சேரக் குருவருளால்
வந்தவழி நல்ல வழி.

(பொ-ரை) நிலையில்லாப் பொருளை நினைக்க வேண்டாம். வேறொருவரிடத்திலும் மெய்ப்பொருளைச் சொல்ல வேண்டாம். கல்லாத மூடமனமானது குழைந்து சுகத்தை அடைவதற்காக நல்ல ஞானா சிரியனுடைய திருவருளால் கிடைக்கப்பெற்ற வழியே நல்ல வழியாகும். ஆகையால் நீ அந்த வழியை விடாதை. (55)

515. வழியிதென்றும் அல்லா வழியிதென்றுஞ் சொல்லில்
பழிபழியாம் நல்லருளாற் பார்த்தோர்—மொழியுனக்கே
ஏற்றிருக்கச் சொன்னவன்றே எங்கும் பெருவெளியாம்
பார்த்தவிட மெல்லாநீ பார்.

(பொ-ரை) இது நல்ல வழியென்றும், இது நல்ல வழியன்றென்றும் நன்றாக ஆராய்ந்து பார்த்து ஒரு மொழியை உனக்கு உபதேசித்த அன்றே எவ்விடத்திலும் பெருவெளியாயிருக்கும். ஆகையால் நீ முன்பார்த்த விடங்களை யெல்லாம் பார்ப்பாயாக.(எ-று)

"பார்த்தவிட மெல்லாம் பரமவெளி காணுதடி" என்று முன்னோர்கள் சொல்லி இருக்கின்றமையின் 'பார்த்தவிட மெல்லாம் நீ பார்' என்றார்.

516. பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்
போல்
ஆருந் துறக்கை அரிதரிது—நேரே
மனத்துறவும் அப்படியே மாணா இவற்றில்
உனக்கிசைந்த வாறொன்றே ஓர்.

(பொ-ரை) ஓ மாணா! உலகம்யாவும் பொய்யே யாமென்று சொல்லித் துறவறமடைந்த பட்டினத்துப் பிள்ளையாரைப்போல் துறப்பது யாவர்க்கும் அருமை யானதே அன்றி அவருக்கு மனத்துறவு மப்படி யேயாகும்.

இந்த இரண்டில் உனக்குப் பொருந்தினது ஒன்றேயாகும். அதை நீ யுய்ந்துணர்ந்து கொள்வாயாக. (எ-று)

உனக்கிசைந்தவா றொன்றேயென்றது= மனத்துறவினை (57)

517. ஓராம லேஒருகால் உன்னாமல் உள்ளொளியைப்
பாராமல் உள்ளபடி பார்த்திருந்தால்—வாராதோ
பத்துத் திசையும் பரந்தெழுந்தா னந்தவெள்ளத்
தத்திக் கரைபுரண்டு தான்.

(பொ-ரை) யாதொரு பொருளையும் நினையாமலும்,சிந்திக்காமலும் பாராமலும் சதா நிட்டாபரனாய்ப் பார்த்திருப்பாயானால் பத்துத் திசைகளும் தத்திப் புரண்டு மேற்பட்டு ஆனந்த வெள்ளமானது வாராதே? (எ-று)

அங்ஙனம் ஆனந்த வெள்ளத்தை அநுபவிக்கும் பொருட்டு பாராமற் பார்ப்பதாகிய நிலையில் இருக்க வேண்டும் என்பது கருத்து. (58)

518. தானான தன்மைவந்து தாக்கினால் அவ்விடத்தே
வானாதி மாயை வழங்காதோ—ஞானாகேள்
உன்னுள்ளே தோன்றா வுறவாகி நின்றதென
என்னுள்ளே யென்று மிரு.

(பொ-ரை) ஞானமார்க்கத்தில் மிகுதியுள் தேர்ந்துள்ள மாணாக்கனே! நான் சொல்வதை நீ நன்றாய்க் கேட்பாயாக. அது என்னவென்றால், தான் அந்தச் சிவமாகிற குணம் வந்து சேருமானால் ஆகாய முதலிய மாய்கைகள் சஞ்சரித்து நிற்பனவோ? அது எப்படியென்றால், உன்னுடைய மனத்தின் கண்ணிருந்தே உனக்குத் தோன்றாத் துணையா யிருந்தவாறு போல நீ எனக்குள்ளே எக்காலமும் இருத்தல் வேண்டும் என்பதாம். (எ-று) (59)

519. என்னையுன்னை இன்னதிது என்னாமல் நிற்குநிலை
தன்னையருளென்ற தருணத்தில்—அன்னைபெற்ற
பிள்ளைக்குஞ் சொல்லாத பெற்றிகண்டாய் ஐயனே
உள்ளத்தின் உள்ளே உணர்.

(பொ-ரை) என்னையும், எனக்குத் தலைவனான உன்னையும், இது, இதுவென்று பிரித்துப் பாராத அத்துவித நிலையை எனக்குக் கிருபை செய்ய வேண்டும் என்று சொன்ன தருணத்தில் நீ சொன்ன அந்த நிலையானது

தன்னாற் பெறப்பட்ட பிள்ளைக்கும் தாயானவள் சொல்லாத தன்மையை யுடையதாகும். ஆகையால் நீ உன்னுடைய மனத்திலேயே நீ உய்த்துணர்ந்து கொள்ள வேண்டும். (எ-று) *(60)*

520. சொன்னவர் தாம்நிட்டை தொகுத்திரார் நிட்டையிலே
மன்னினவர் போதியார் மாமவுனன்—தன்னுள்
விருப்பாகக் கைகாட்டி மிக்க வடநீழல்
இருப்பான் நிருவிகற்பத் தே.

(பொ-ரை) சனகாதி நால்வர்களுக்குச் சுகநிலையை அருளிச் செய்தவர் யாரென்றாற் பெரிய மௌனியாவானும், வடவால விருட்சத்தின் கீழ் நிருவிகற்ப நிட்டையில் எழுந்தருளியிருந்தவனுமான சிவபெருமானேயாவான். (எ-று)

அப்படிப்பட்ட கருணாமூர்த்தியைச் சதா இடைவிடாமல் துதி செய்தல் பிறவாநெறியை யடையலாமென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை என்பது குறிப்பு. *(61)*

521. இந்த நிருவிகற்பத் தெந்தை யிருக்கநிட்டை
சிந்தைநீ தேறாய் செகமனைத்தும்—வந்ததொடர்ப்
பாடுகெடவன்றோவோர் பாத்திரத்துக் காடல் அல்லால்
ஆடுவதேன் ஆட்டு மவன்.

(பொ-ரை) உலகத்தார்களுக்கெல்லாம் தொன்று தொட்டு வந்திருக்கின்ற பூர்வவினையானது நசிப்பதற்காகவே ஒரு பாத்திரத்தை வைத்துக்கொண்டு பிச்சாண்டியாக ஆடுவதும், ஆனந்தத் தாண்டவஞ் செய்வதுமல்லவா? ஆகையால் ஓ நன்மாணாக்கனே! இந்த நிருவிகற்பசமாதியில் என் தந்தையாகிய சிவபெருமானானவன் எழுந்தருளி யிருப்பதை நீ மனதில் தெளியமாட்டாய். (எ-று) *(62)*

522. அவனே பரமும் அவனே குருவும்
அவனே அகில மனைத்தும்—அவனே தாம்
ஆனவரே சொன்னால் அவரே குருவெனக்கு
நான் அவனாய் நிற்பதெந்த நாள்.

(பொ-ரை) யாதொரு சிவபெருமானிருக்கின்றானோ அவனே பரதெய்வமும், குருவும், உலகமெல்லாமும் ஆவான். ஆகையால் அவனே என்னுடைய ஞானாசிரியனுமாவான். இங்ஙனமிருப்பதால் நான் அவனாகி நிற்பதற்குரிய காலம் எதுவோ அதை நான் அறியேன். (எ-று) *(63)*

523. நாளவங்கள் போகாமல் நாள்தோறும் நந்தமையே
ஆளவந்தார் தாளின்கீழ் ஆட்புகுந்தாய்—மீளஉன்னைக்
காட்டாமல் நிற்குங் கருத்தறிந்தால் நெஞ்சேஉன்
ஆள்தானா னையமில்லை யால்.

(பொ-ரை) மனமே! நீ நாட்களை வீணாகப் போக்காமல் நம்மை அடிமை கொள்ள வந்த சிவபெருமானுடைய திருவடியில் கீழ் அடிமைப் பட்டாய். அப்படி அடிமைப் பட்ட உன்னை நீ யென்கிற ஒரு பொருளுண்டென்று வெளிப்படுத்தாமலிருக்குங் கருத்தினை உணர்வாயானால் உன்னுடைய நாட்டான் நானாவேன். இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. (எ-று) *(64)*

524. யான்தான் எனல்அறவே இன்பநிட்டை என்றருண்ணக்
கோன்றா னுரைத்தமொழி கொள்ளாயோ—தோன்றி
இழுக்கடித்தாய் நெஞ்சேநீ என்கலைகள் சோர
அழுக்கடிக்கும் வண்ணார்போ லாய்.

(பொ-ரை) மனமே! நீ அழுக்கடிக்கும் வண்ணாரைப்போல திருவண்ணாமலையில் எழுந்தருளிய எம்பெருமானுரைத்த உபதேச வாக்கியத்தைக் கொள்ளாமல் என்னைத் துன்பப் படுத்தினாய், இதனால் உனக்கு என்ன பயனோ? அறியேன். (எ-று) *(65)*

525. எங்குஞ் சிவமே இரண்டற்று நிற்கில் நெஞ்சே
தங்குஞ் சுகநீ சலியாதே—அங்கிங்கென்
றெண்ணாதே பாழி லிறந்து பிறந்துழலப்
பண்ணாதே யானுன் பரம்.

(பொ-ரை) மனமே! இரண்டற்ற அத்துவித நிலையை நீயடைந்து நிற்பாயானால் எங்கும் சிவமேயொழிய வேறில்லை. ஆகையால் நீ அம்மார்க்கத்தை யடைவாயானால் சுகோதயமானது உன்னிடத்தில் தங்கா நிற்கும். இப்படியிருப்பதால் நீ வீணெண்ணங் களையெல்லாம் அறவேவிட்டு என்னைப் பிறப்பிலமிழ்த்தாதிருப்பையானால் நான் உனக்குத் தலைவனா வேன். (எ-று) *(66)*

526. மெய்யைப்பொய் என்றிடவும் மெய்யணையாய் பொய்ந் நெஞ்சே
பொய்யைத் தான் மெய்எனவும் போகுமோ—ஐயமறத்
தன்மயத்தை மெய்எனவே சார்ந்தனையேல் ஆனந்தம்
என்மயமும் நின்மயமு மே.

(பொ-ரை) மெய்ப் பொருளைப் பொய்யாகவும், பொய்ப் பொருளை மெய்யாவும், நினைப்பதால் சதா பொய்யே குடிகொண்டிருக்கின்ற மனமே! நீ அப்படி நினைப்பது தகுதியாமோ? அன்று. ஆகையால் இனியானாலும் தானான தற்சொரூபத்தையே மெய்யாக நம்பி அதை அடைய வேண்டிய முயற்சி செய்வாயானால் ஆனந்தமுண்டாகும். அந்த ஆனந்தமானது என் சொரூபமும், உன் சொரூபமுமேயாகும். (எ-று) (67)

**527. பூங்கா வனநிழலும் புத்தமுதுஞ் சாந்தபதம்
வாங்காத ஆனந்த மாமழையும்—நீங்காவாஞ்
சொல்லிறந்து மாண்டவர்போல் தூமவுன பூமியினான்
இல்லையென நின்ற இடம்.**

(பொ-ரை) பேச்சற்றுச் செயலற்று மாண்டவர் போற்றும் மோன நிலத்தில் நான் என்னும் முனைப்பு நண்ணாமல் நின்ற இடமே பேரின்பம் பெருகுமிடமாகும். அவ்விடம் நறுமண நிறைந்துள்ள அழகிய சோலை நிழலும் புதிய அமிழ்த இன்பமும், அமைந்த நிலையும், நீங்காத பேரின்பப் பெருமழையும் நம்மைவிட்டு ஒருகாலமும் நீங்காதென்க. (எ-று) (68)

**528. இடம்கானம் நல்லபொரு ளின்பம் எனக்கேவல்
அடங்காக் கருவி அனைத்தும்—உடனுதவ
மந்தார தாருவென வந்து மவுனகுரு
தந்தானோர் சொற்கொண்டு தான்.**

(பொ-ரை) (நிலையாவுலகில் வாழ்வோர் இடம் பொருள் ஏவலால் செருக்குற்று இன்புறுவர். ஆனால் அவ்வின்பமும் நிலையில்லாததாய்த் துன்பப் பிறப்பினையும் எய்துவர், அவ்வாறின்றி) அடியேனுக்கு மோன குருவாக எழுந்தருளிவந்து ஆட்கொண்டவர், உறையும் இடமாக மரமடர்ந்த காட்டினையும், இன்புறும் பொருளாக நல்ல திருவடிநினைவினையும், ஏனையோர்க்கு எளிதில் வயப்படாத தத்துவக் கூட்டங்களை வயப்படும் ஏவலராக வும் தந்தருளினர்; அவர் மந்தார மரத்தினை யொப்பர்; இவ்வனைத்தும் அவரருளிய சிவ என்னும் ஒரு சொற்கொண்டேயாம். (எ-று) (69)

**529. தானத் தவம்ஞானஞ் சாற்றரிய சித்திமுத்தி
ஆனவையெல் லாந்தாமே யாகுமே—மோனகுரு**

சொன்னவொரு சொல்லாற் சுகமா யிருமனமே
இன்ன மயக்கமுனக் கேன்.

(பொ-ரை) நெஞ்சமே! மோனகுரு திருவாய்மலர்ந்தருளிய ஒப்பற்ற சிவ என்னும் ஒரு சொல்லால், கொடையும் நற்றவமும், மெய்யுணர்வும், சொல்லுதற் கொண்ணாத பேறுகளும் திருவடிப்பேறும் தாமே எளிதாகவும் இனிமையாகவும் வந்தெய்தும், அதனால் நல்லின்பத்துடனிருப்பாயாக; இன்னமும் உனக்கு மயக்க முண்டாவது எதன் பொருட்டு. (எ-று) *(70)*

530. உன்னை உடலை உறுபொருளைத் தாளனவே
என்னை அடிமைக் கிருத்தினான்—சொன்னஒரு
சொல்லை மறவாமல் தோய்ந்தால்நெஞ் சேஉன்னால்
இல்லை பிறப்பதெனக் கே.

(பொ-ரை) நெஞ்சமே! அடியேனுடைய ஆவியும் உடலும் உடைமையும் முன்னே பெற்றுக்கொண்டு எளியேனை மீளா அடிமையில் இருத்தியருளினன். அவன் திருவாய் மலர்ந்தருளிய ஒப்பில்லா ஒரு மொழியை மறவாமல் ஒல்லும்வகை ஓவாது உள்கி வருவாயானால் உன்னால் அடியேனுக்குப் பிறவாமை வந்து கைகூடும். ஆசான் ஆவி, உடல், உடைமை மூன்றனையும் முன்னே பெற்றுக் கொள்ளுதல் எய்தியபின் வீட்டிற் குடியிருப்பர். மூன்றும் பெற்றெய்து வித்தான் தன்னடிமை இன்பு என்பதாகும். (எ-று) *(71)*

531. எனக்கும் உனக்கும்உற வில்லையெனத் தேர்ந்து
நினைக்கஅரி தான இன்ப நிட்டை—
தனைக்கொடுத்தே
ஆசான் மவுனி அளித்தான்நெஞ் சேஉனையோர்
காசா மதியேன்நான் காண்.

(பொ-ரை) நெஞ்சமே! சுட்டுப் பொருளாய் அறிவில்லாதாய்க் காணப்படும் உனக்கும், சுட்டிறந்த நிறைவாய் அறிவுப் பொருளாய் உள்ள எனக்கும் எவ்வகைத் தொடர்பும் எஞ்ஞான்று மில்லை என ஆசானருளால் தெளிந்து நினைப்பதற்கும் அருமையாகிய பேரின்பப் பெரு நிட்டையினை எளியேனுக்குக் கொடுத்தருளி மௌனகுரு அடியேனை ஆட்கொண்டருளினன், இனிமேல் உன்னை ஒரு காசுக்கும் யான்மதியேன் (எ-று) *(72)*

**532. ஆனந்த மோனகுரு வாமெனவே என்னறிவின்
மோனத் தனக்கிசைய முற்றியதால்—தேனுந்து
சொல்லெல்லாம் மோனந் தொழிலா தியும்மோனம்
எல்லாம்நல் மோனவடி வே.**

(பொ-ரை) பேரின்ப வடிவாம் மெளனகுரு தண்ணளியால் எழுந் தருளிவந்து அடியேனை ஆட்கொண்டு என்பால் பேச்சற்ற நிலை யுண்டாகும்படி அருளினன். அப்பொழுதே அடியேன் அறிவின்கண் அம் மோனம் தன்னியல்புக்கு உரித்தாகும் வண்ணம் நிறைந்தது; இன்பத்தேன் ஒழுகித் தரும் சுவை போன்று சுவைதரவல்ல வாய் மொழியும் அடங்கிற்று; பேச்சடங்கவே மூச்சடங்குமாதலால் செயல்களும் அடங்கின. செயல்களும் அடங்கினதால் புற நோக்கங்களும் அறவே நீங்கின. நீங்கவே, அகநோக்கம் முதிர்ந்து சிவனென்ற ஒரே நிலையாகிய இன்ப நிட்டை எளிதாகவும் இனிதாகவும் திருவருளால் கைகூடிற்று. (எ-று) (73)

**533. எல்லாமே மோனநிறை வெய்துதலால் எவ்விடத்தும்
நல்லார்கள் மோனநிலை நாடினார்—பொல்லாத
நானெனஇங் கொன்றை நடுவே முளைக்கவிட்டிங்
கேனலைந்தேன் மோனகுரு வே.**

(பொ-ரை) மெளனமெய்க்குருவே! யாவும் இன்பமாய மைவதற்கு வாயிலாகி நிற்பது மோன மென்றறிந்து, எல்லா இடத்திலும் (செம் பொருட்டுணிவினராம் சித்தாந்தச் செல்வர்கள் நல்லாரெனப் படுவர். அத்தகைய) நல்லார்கள் மேலாம் மோன நிலையினை நாடினர். நல்லறிவு சிறிதுமில்லாத பொல்லாத யான், நான் என்னும் முனைப்பை நடுவே முளைக்கவிட்டு இங்கு ஏன் அலைந்து திரிந்தேன்? (எ-று) (74)

**534. மோன குருவளித்த மோனமே யானந்தம்
ஞானம் அருளுமது நானுமது—வானாதி
நின்ற நிலையுமது நெஞ்சப் பிறப்புமது
என்றறிந்தேன் ஆனந்த மே.**

(பொ-ரை) மவுனகுரு அளித்தருளிய பேச்சடங்கிய மோனமே மிகப் பேரின்பப் பேரறிவு; திருவருளுமதுவே; இத்திருவருளினுள் அடக்கமாகவுள்ள அடியேனும் அதுவே; வான் முதலாகச் சொல்லப்படும் ஐம்பூதங்களின்

இயக்கங்களும் அதுவே; மனந்தோன்றி இயங்குவதும் அதுவே! இத்தகைய மெய்ம்மையினைத் திருவருளாலு ணர்ந்தேன். உணரவே எல்லாம் பேரின்ப மயமாகவே அமைந்துள்ளன. (எ-று)

ஒருவருக்குச் சிவகுருவின் அருண்மொழி கிடைக்கப் பெற்றால், அப்பொழுது இறையருளால் எல்லாம் முறையுற இயங்கும் உண்மை புலனாகும். புலனாக எல்லாவற்றானும் அவர் எய்துவது திருவருளின்ப மேயாம். (75)

535. அறிந்த அறிவெல்லாம் அறிவன்றி யில்லை
மறிந்தமனம் அற்ற மவுனஞ்—செறிந்திடவே
நாட்டினான் ஆனந்த நாட்டிற் குடிவாழ்க்கை
கூட்டினன் மோன குரு.

(பொ-ரை) என்னாலறிந்த அறிவுகளெல்லாம் எனக்கு வேறாக இல்லை. நன்னெறிச் செல்லும் போக்கினுக்குத் தடை செய்து எளியேனைப் புகுத்தும் மனமும் வழிக்கு வந்தது. மௌனம் நிறையவே நிறை பேரின்பத்தினை அவர்க்கு நாட்டினன்; பேரின்பப் பெரு நாட்டிற் கூட்டி இன்புறுத்தருளினன் மோனகுரு. (எ-று) (76)

536. குருவாகித் தண்ணருளைக் கூறுமுன்னே மோனா
உருநீ டுயிர்பொருளு மொக்கத்—தருதியென
வாங்கினையே வேறும்உண்மை வைத்திடவுங் கேட்டிடவும்
ஈங்கொருவர் உண்டோ இனி.

(பொ-ரை) மோனகுருவே! தேவரீர்! அடியேனுக்குக் குருவாக அமைந்து ஆட்கொள்ளுமுன்னமே, எளியேனுடைய உடல் பொருள் ஆவி மூன்றனையும் தருவாயாக என்று மொழிந்து பெற்றுக் கொண்டனையே (பெற்றுக்கொண்டு நின்திருவடியினை எளியேன் உணர்விற் பதித்தருளினை. அதனால்) இனிமேல் வேறுமோ ருண்மையினை வைத்திடவும், அவர் மொழியினைக் கேட்டிடவும் இவ்விடத்து வேறொரு வரும் உளரோ? (இலர் என்பதாம்) (எ-று)

படிப்பிப்பதன் பொருட்டு படிப்பிப்பதற்கு முன்னமேயே மாணவனைப் பள்ளியிற் சேர்ப்பது போன்றாகும்; உடல் பொருள் ஆவி மூன்றும் ஆட்கொள்ள வேண்டி முன்னரே பெறுதல். (77)

537. இனிய கருப்புவட்டை என்னாவி லிட்டான்
நனியிரத மாறாது நானுந்—தனியிருக்கப்
பெற்றிலேன் மோனம் பிறந்தஅன்றே மோனமல்லால்
கற்றிலேன் ஏதுங் கதி.

(பொ-ரை) இனிப்புச் சுவைமிக்க கருப்புவட்டை நாவில் வைத்ததும் அதன் இனிப்புச்சுவை மாறுவதுமில்லை; நாவும் அதற்கு வேறாகப் பிரிந்து நிற்பதுமில்லை. அதுபோல் மோனகுரு எழுந்தருளி வந்து உரையற்ற என் உணர்வினில் பேரின்ப மோனத்தை வைத்தருளியபின் அப்பேரின்ப மோனமல்லாது புதிதான நிலை ஏதுங் கண்டிலேன். (எ-று)

திருவடியின்கண் ஆருயிர் திருவருளுணர்த்தியவாறே உணர்ந்து கலந்து பிரிவறப் புணர்ந்தபின் அவ்வுயிர்க்கு அப்பேரின்பமேயன்றிப் பிறிதொன்றும் தோன்றாதென்க. (78)

538. ஏதுக்குஞ் சும்மா இருநீ எனவுரைத்த
சூதுக்கோ தோன்றாத துணையாகிப்—போதித்து
நின்றதற்கோ என்னையா நீக்கிப் பிரியாமல்
கொன்றதற்கோ பேசாக் குறி.

(பொ-ரை) எளியேனுடைய பெரிய முதல்வனே! எல்லா வற்றிற்கும், நீ பேசாக்குறியாகிய மௌனமாக இருப்பாயாக என்று கட்டளையிட்டருளியது நன்மை பயக்கும். சூழ்ச்சிக்கோ, தோன்றாத் துணையாய் மௌனகுருவாய்த் திருக்கோலங் கொண்டெழுந்தருளி வந்து அருமறையாகிய உபதேசமருளி நின்றதற்கோ, அடியேனை நிலையிலாமாயா மெய்களின் கூட்டத்தினின்றும் பிரித்துத் தன் திருவடியி னின்றும் பிரியாம லிருத்தற் பொருட்டு அம்மாயா காரியப் பொருள்களின் மயக்கத்தினை அடக்கியதற்கோ? (அறிந்திலேன் அனைத்திற்கு மேயாம்)

பெண்பாலார் பிறந்திடத்தினின்றும் பிரிந்து சிறந்தி டமாகிய காதலன் கைப்பற்றி அவன் வீடெய்துவது பொற் புறு கற்புடன் அற்புறுபுணர்ச்சியால் ஆராஇன்பந் துய்ப்பதற் கேயாம். இது போல் ஆருயிர் மௌனகுருவுடன் செல்வது சார்ந்திருந்த மாயைமயக்கினின்றும் நீங்கி நிலை யான அவன் திருவடியிற்சார்ந்து பேரின்பம் உறுதற்கேயாம். (எ-று) (79)

539. குறியுங் குணமுமறக் கூடாத கூட்டத்
தறிவறிவாய் நின்றுவிட ஆங்கே—பிறிவறவுஞ்
சும்மா இருத்திச் சுகங்கொடுத்த மோனநின்பால்
கைம்மாறு நானொழிதல் காண்.

(பொ-ரை) (திருவெண்ணீறு, சிவமணி, திருவைந்தெழுந்து ஆகிய) திருவடையாளங்களும், திருவருட் குணங்களும் ஒரு காலத்தும் நீங்கப் பெறாத (ஏனையோரால்) சென்று கூடுதற்கரிய சிவனடியார் திருக்கூட்டத்து அவர்தம் பேரறிவே அடியேன் அறிவாய் நின்றிடவும், பிரிதலின்றி மோனமாயிருக்கச் செய்து பேரின்பம் நிறைத்தருளிய மோனகுருவே! நின்திருவடிக்கு அடியேன் செய்யும் கைம்மாறு நானொரு தனிமுதல் என்னும் எண்ணமொழிந்து, நின்னொடு புணர்ந்து நீக்கமற நின்று நிறையின்பம் நுகரும் நீங்கா அடிமையென நிற்பதேயாம்.

காதலனை வீட்டைக் களியின்பைச் சார்ந்துணரும், காதலியைக் காதலற்காள் காண் எனக் கூறுவது போன்று ஆருயிர் ஆண்டானுக்கென்றும் அடிமையேயாம். ஆள்-அடிமை. (80)

540. நான்தான் எனும்மயக்கம் நண்ணுங்கால் என் ஆணை
வான்தான் எனநிறைய மாட்டாய் நீ—ஊன்றாமல்
வைத்தமவு னத்தாலே மாயை மனமிறந்து
துய்த்துவிடும் ஞான சுகம்.

(பொ-ரை) மனமே! நான் என்னும் அகப்பற்றும், எனதென்னும் புறப்பற்றும் ஆகிய செருக்கு வந்து பொருந்துமிடத்து என் மேலாணையிட்டுக் கூறுகின்றேன் வான்போன்று பேரறிவின்கண் நீ நிறைந்து நிற்க மாட்டாய்; நீ முன்னிலைச் சுட்டுப் பொருள்களிற் சென்று பற்றி நிற்கும் பற்றிலூன்றாமல் உன்பால் (மோனகுரு) வைத்தருளிய மவுனத்தாலே மாயை மயக்க மடங்கி எங்கு நிறைந்துள்ள பேரின்பப் பேரறிவினைத் துய்த்துக் கொண்டு எங்கும் நிறைந்து நிற்பாயாக. (எ-று)

யான் என்பது அகப்பற்று. அகப்பற்று - அகங்காரம். தான் என்பது புறப்பற்று. புறப்பற்று - மமகாரம். (81)

**541. ஞானநெறிக் கேற்றகுரு நண்ணரிய சித்திமுத்தி
தானந் தருமந் தழைத்தகுரு—மானமொடு
தாயெனவும் வந்தென்னைத் தந்தகுரு என்சிந்தை
கோயிலென வாழுங் குரு.**

(பொ-ரை) அடியேனுடைய உள்ளத்தைப் பெருங் கோயிலாகக் கொண்டு வீற்றிருந்தருளும் சிவகுருவானவரே. திருவடியுணர்வாம் நன்னெறிக்கு வாய்த்த மெய்க்குரு, எளியேன் பெற்றுய்ய வேண்டிய இம்மைப் பயனாகிய சித்தியும் உம்மைப் பயனாகிய முத்தியும் (அம்மைப் பயனாகிய திருவடிப்பேறாம் மெய்ப்புணர்ப்பும்) சிவனடியார்கட்கு வழங்கும் தானமும், செந்நெறி யொழுகும் தருமமும் செழிக்கச் செய்த சிவகுரு; பெருமையுடன் வந்தருளி அடியேனுக்குந் தாய் போன்று தலையளி புரிந்து சிவதீக்கை முறையான் நன்னெறிக்குய்க்கும் நற்பேறு தந்தருளினமையான் எளியேனை ஈன்ற குருவும் அவரேயாவர். (எ-று)

இத்திருப்பாட்டிற் 'குரு' வென்னும் சொல் நான்கிடங்களில் காணப்படுகின்றது. இது நன்னெறி நாற்படிகளின் குறிப்புணர்த்து நலமாகும். நாற்படி: 1. சீலம், 2. நோன்பு, 3. செறிவு, 4. அறிவு என்பன. (82)

**542. சித்துஞ் சடமுஞ் சிவத்தைவிட இல்லைஎன்ற
நித்தன் பரமகுரு நேசத்தாற்—சுத்தநிலை
பெற்றோமே நெஞ்சே பெரும்பிறவி சாராமல்
கற்றோமே மோனக் கரு.**

(பொ-ரை) விளக்க விளங்கும் அறிவுடைப் பொருள்களாகிய அடிமையாம் ஆருயிர்களும், இயக்க இயங்கும் அறிவில்லாத பொருள் களாகிய உடைமையாம் மாயாகாரியப் பொருள்களும் விழுமிய முழு முதல்வனாம் சிவபெருமானின் திருவருட்டுணையின் இயக்கத்தினாலேயே விளக்க முற்றியங்குகின்றன. (அம்முறை பற்றி இவ்விரண்டும் சிவத்தை விடவேறில்லை யென்றோதப்பட்டன.) அதனால் அவை சிவத்தைவிட வேறில்லை யென்று, என்றும் பொன்றா நித்தியனாகிய தனிமுதற் குருவின் பெருந் தண்ணளியால் தூய நன்னிலையைப் பெற்றுள்ளோம்; அப்பேற்றால் நெஞ்சமே, எல்லையில்லாப் பெரும் பிறவிப் பெருங்கடற்றுன்பம் வந்து

பொருந்தாவண்ணம், மோனக் கலையெனப்படும் உரையற்ற உயர்வற உயர்ந்த ஒருநிலையினைக் கற்றுக் கைவரப் பெற்றோம். *(83)*

ஏசற்ற அந்நிலை

கொச்சகக் கலிப்பா

543. ஏசற்ற அந்நிலையே எந்தைபரி பூரணமாய்
மாசற்ற ஆனந்த வாரி வழங்கிடுமே
ஊசற் சுழல்போல் உலகநெறி வாதனையால்
பாசத்துட் செல்லாதே பல்காலும் பாழ்நெஞ்சே.

(பொ-ரை) பயனிலாச் செயல்களில் பாடுபட்டுழலும் பாழ் நெஞ்சே! சிறிதுங் குற்றமில்லாத உரையற்ற மோன நிலையிலேயே எம் தந்தையாகிய சிவபெருமான் முழு நிறைவானதும் மாசில்லாததும் ஆகிய திருவடிப் பேரின்பப் பெருக்கைத் துய்ப்பித்தருளுவன்; நிலையில்லாத உலகியற் பழக்கத்தால் பல முறையும் பாசத்தளையுட் செல்லாது நன்னெறிச் செல்லுவாயாக. (எ-று) *(1)*

544. பாழாகி அண்டப்பரப்பை எலாம் வாய்மடுத்தும்
ஆழாழி இன்பத்தமுந்தப் படியாயோ
தாழாயோ எந்தையருள் தாள்கீழ்நெஞ்
சேஎனைப்போல்
வாழாது வாழ்ந்தழியா வண்ண மிருப்பாயே.

(பொ-ரை) நெஞ்சே, வீணாகி உலக விரிவுகள் அனைத்தையும் நின்னதாக்கி (உழல்வதைவிட்டு) ஆழ்ந்த பேரின்பப் பெருங்கடலுள் திருவருளால் மூழ்கி மாறா இன்பம் எய்தக் கற்றுக் கொள்ளாயோ? காலந்தாழ்க்காது எந்தையாகிய சிவபெருமானின் திருவடிக்கீழ் வணங்கி வாழ்த்தி இணங்கி எளியேனைப்போல் அழிவின்றி நீயும் இருப்பாயாக.(எ-று) *(2)*

545. இருப்பாய் இருந்திடப்பே ரின்பவெளிக் கேநமக்குக்
குருப்பார்வை யல்லாமற் கூடக் கிடைத்திடுமோ
அருட்பாய் நமக்காக ஆளவந்தார் பொன்னடிக்கீழ்
மருட்பேயர் போலிருக்க வாகண்டாய் வஞ்சநெஞ்சே.

(பொ-ரை) எய்ப்பில் வைப்பாங் கருவூலமாய் உண்டாகும் பொருட்டுச் சிவகுருவின் திருக்கடைக் கண்ணோக்கமாம் திருவருள் வந்து கைகூடாமல் பேரின்பப்

பெருவெளியாம் திருச்சிற்றம்பலம் கிடைத்திடுமோ? நம் பொருட்டுத் திருவருள் பரப்பி ஆண்டுகொண்டருள எழுந்தருளிவந்த மோன குருவின் திருவடிக்கீழ் உலக மயக்கத்திலாழ்ந்து பேய் பிடியுண்டார் போலமைந்திருக்க என் நெஞ்சமே! என்னுடன் வருவாயாக. (எ-று)

இருப்பாய்-கருவூலமாய், அருட்பாய்-அருட்டன்மை முற்றும் பரப்பி. பேரின்பவெளி - தில்லைத் திருச்சிற்றம்பலம். (3)

546. வஞ்சமோ பண்டையுள வாதனையால் நீ அலைந்து
கொஞ்சமுற் றாயுன்னைக் குறைசொல்ல வாயுமுண்டோ
அஞ்சல்அஞ்சல் என்றிரங்கும் ஆனந்த மாகடற்கீழ்
நெஞ்சமே என்போல நீயழுந்த வாராயோ.

(பொ-ரை) மனமே, நீ செய்து மிக்க வஞ்சனையோ? அல்லது பழம் பயிற்சியோ? நீ இவ்வுலகில் சிறுமை யெனப் படும் கொஞ்சத் தனை யடைந்தாய்; உன் பேரில் குற்றஞ் சொல்வதற்கு வாயும் உண்டோ? இனிமேல் அஞ்சாதிருப் பாயாக என்று இரக்கங் கொள்கின்ற பேரின்பப் பெருங்கடலில், என்னைப் போன்று நீயும் மூழ்கிப் பேரின் பமுற வாராயோ? (எ-று) (4)

547. வாரா வரவாய் வடநிழற்கீழ் வீற்றிருந்த
பூராயம் நம்மைப் புலப்படுத்த வேண்டியன்றோ
ஓராயோ நெஞ்சே உருகாயோ உற்றிருந்து
பாராயோ அவ்வுருவைப் பார்க்கநிறை வாய்விடுமே.

(பொ-ரை) கிடைத்தற்கரிய பேரருள் வரவாய் எழுந்தருளி வந்து முற்றுணர்வின் திருவடையாளமாம் திருவெள்ளிமலைமீது ஆலமரத்தடியில் வீற்றிருந்தருளியது வரலாற்று முறையால் நம் உண்மையினைப் புலப்படுத்தல் வேண்டியன்றோ? நெஞ்சமே இதனை நீ ஓர்ந்து பார்ப்பாயாக. ஓர்ந்து உருகுதல் செய்யாயோ? அகவுணர் வொடு பொருந்தியிருந்து அத் திருவுருவினைப் பார்த்தல் செய்யாயோ? திருவருளால் அத் திருவுருவினைப் பார்க்கும் போது நம்பால் பேரின்பப் பெருவெள்ளம் முற்றாக நிறைந்துவிடும். (எ-று) (5)

548. வாயாதோ இன்பவெள்ளம் வந்துன் வழியாகப்
பாயாதோ நானும் பயிராய்ப் பிழையேனோ
ஓயாமல் உன்னி உருகுநெஞ்சே அந்நிலைக்கே
தாயான மோனனருள் சந்திக்க வந்திடுமே.

(பொ-ரை) மனமே, பேரின்பப்பெருவெள்ளம் உன் வழியாக வந்து என்னறிவின்கண் பாயாதோ? அடியேனும் அன்புப் பயிராகப் பிழைத்து வளர்ந்து இறவா இன்பச் சிறப்பு எய்தல் செய் துய்யேனோ? ஒல்லும்வகை ஓவாது உள்கி உருகுவாயாக, அவ் வுருக்கத்தால் மோனகுரு நம்மை ஆண்டருளவந்து நேர்படுவர். (எ-று) (6)

549. வந்த வரவை மறந்துலகாய் வாழ்ந்துகன்ம
பந்தமுற உன்னைப் படிப்பிக்கக் கற்றவர்யார்
இந்தமதி ஏன்உனக்கிங் கென்மதிகேள் என்னாலே
சந்ததநெஞ் சேபரத்திற் சாரின்இன்பம் உண்டாமே.

(பொ-ரை) மனமே, நாம் ஏன் இந்நிலவுலகத்தில் திருவருளால் பிறப்பிக்கப்பட்டோம் என்பதை அறவே மறந்து, இவ்வுலகமயக்கில் ஈடுபட்டு ஆணவ முனைப்பால் இருவினைகளைப் புரிந்து மீண்டும் மீண்டும் பிறக்கும்படியான கட்டிற் சிக்கும்படி உனக்குக் கற்பித்தவர் யார்? இத்தகைய பொருந்தாத புல்லறிவேன்? இனிமேல் யான் கூறும் மதியினைக் கேட்பாயாக: என் வாயிலாக என்றும் பொன்றாத தனிப்பெரும் முதல்வன் திருவடியில் நிலைத்த புகலென அடைந்தாயாயின் இறவாத இன்பப் பேறுண்டாகும். (எ-று) (7)

550. இன்பமய மாயுலக மெல்லாம் பிழைப்பதற்குன்
அன்புநிலை என்பார் அதுவும்நினை யன்றியுண்டோ
உன்புலத்தை ஓரின் அருட் கொப்பாவாய் நெஞ்சே நீ
தென்புலத்தா ரோடிருந்து செய்பூசை கொண்டருளே.

(பொ-ரை) மனமே, இவ் வுலகமனைத்தும் துன்பில் இன்பமாய்ப் பிழைத்துய்வதற்கு அன்பு நிலை காரண மென்பார்; அவ்வன்புநிலை உன்னுடைய ஒடுக்கத்தினால் வருதல் வேண்டும்; உன்னுடைய இயல்பான அறிவை ஆராயின் (எல்லாப் பொருள்களினும் ஆருயிர்களின் பொருட்டுக் கலந்து நிற்கும்) திருவருளுக்கு ஒப்பாவை; ஆனால் நீ உன் பேராசையினால் ஒன்று விட்டொன்று பற்றி எல்லாப் பொருள்களுடனும் கலக்கின்றாய். அதனால் நீ இறந்துபட்டுத் தென்புலத்தாருடன் அவர் தங்கும் பிதிர் உலகில் சேர்ந்து விடுவாயானால் ஆங்குள்ளார்க்குச் செய்யும் பூசையுடன் உனக்கும் பூசை செய்வேன். அதனை நீ ஏற்றுக் கொள்வாயாக. (எ-று) (8)

551. அருளேயோ ராலயமா ஆனந்த மாயிருந்த
பொருளோடு யானிருக்கப் போயொளித்த நெஞ்சே நீ
மருள்தீர் முயற்கோடோ வான்மலரோ பேய்த்தேரோ
இருள்தீர நீயுறைந்த தெவ்விடமோ காணேனே.

(பொ-ரை) மனமே தன்னின் நீங்காத் தீயும் வெப்பமுக போன்றுள்ள அறிவாற்றலாகிய திருவருளே தனக்குத் திருக்கோவிலா வாலறிவாம் சிவபெருமான் பேரின்பப் பெருவடிவாயுள்ள மெய்ப் பொருளாவன்; அப் பொருளோடு திருவருளால் அடியேன் போய்ச் சேர்ந்ததும் நீ எங்கேயோ ஒளியைக் கண்ட இருள்போல் ஒளித்தும் கொண்டாய்; அவ்விடத்தைச் சொல்லொண்ணாமையால் இல்பொருளொப்பாக மயக்கம் நீங்கிய முயற்கொம்போ? வானத்தாமரையோ? கானல் நீரோ? எவ்விடமோ? காணேன்.(9)

552. எவ்விடத்தும் பூரணமாம் எந்தைபிரான் தண்ணருளே
அவ்விடத்தே உன்னைநெஞ்சே ஆராயிற் கண்டிலவே
அவ்விடத்து மாயையிலே மாண்டனையோ அவ்விடமுஞ்
செவ்விடமே நீயுஞ் செனனமற்று வாழியவே.

(பொ-ரை) மோனகுருவின் தண்ணருளால், யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்கும் எந்தையாகிய சிவபெருமானின் திருவருள் எய்தப் பெற்றேன்; பெறவே அவ்விடத்தில் உன்னைத் தேடிப் பார்த்தேன்; (உனக்கு உலகியலில் முனைத்து முளைக்கும் செயலடங்கினமையின்) உன்னைக் கண்டிலேன்; எனவே நீ உனக்குக் காரணமாகவுள்ள மாயையின்கண் அடங்கிவிட்டனை போலும்; அம் மாயையும் நீ யொடுங்குவதற்குரிய நல்ல இடமே; அங்கேயே நீ முளையாது அடங்கி விடுவாயாக.(எ-று) (10)

காடுங்கரையும்

553. காடுங் கரையும் மனக்குரங்கு கால்விட்டோட அதன்பிறகே
ஓடுந் தொழிலாற் பயனுளதோ வொன்றாய்ப் பலவாயுயிர்க்
குயிராய்
ஆடுங் கருணைப் பரஞ்சோதி அருளைப் பெறுதற் கண்டநிலை
தேடும் பருவம் இதுகண்டீர் சேரவாருஞ் சகத்தீரே.

(பொ-ரை) உலகத்திலுள்ளவர்களே! மனமென்கிற குரங்கானது காடுகளிலும் கரைகளிலும் உங்களை இழுத்துக் கொண்டோட நீங்களும் அதன்பின் ஓடுகின்றீர்களல்லவா?

அப்படி ஓடுவதினால் உங்களுக்கு ஏதாயினும் ஒரு பிரயோசன முண்டா? இல்லை. ஆகையால் இனியேனும் நீங்கள் ஒன்றாகவும், பலவாகவும், உயிர்க்குயிராகவும் நின்று நடிக்கின்ற கிருபைக்கடலாகிய தேஜோமயனுடைய திருவருளைப் பெற்றுக் கொள்வதற்காக அன்பைத் தேடுதற்கான பருவம் இதுவே யாகும். ஆகையால் நீங்கள் அதைச் சேருவதற்காக வாருங்கள். (எ-று)

உலகர்களே! நீங்கள் மனம் போனவழியே போய்த் திரிவதிற் பயனொன்றுமில்லை. ஆகையாற் சிவபெருமானுடைய திருவருளைப் பெறுதற்காக வாருங்கள் என்பது கருத்து. (1)

554. சைவ சமய மேசமயஞ் சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி காட்டு மிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலுஞ் சமயநெறி புகுதவேண்டாம் முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் சகத்தீரே.

(பொ-ரை) உலகத்திலுள்ளவர்களே1 நான் சொல்லுகின்ற ஒரு உண்மை வார்த்தையைக் கேளுங்கள். அது என்னவென்றால், எல்லாச் சமயங்களிலும் உயர்ந்த சமயம் சைவசமயமேயாகும். அந்தச்சமயத்தில் வெளிப் படுவதான ஒரு பொருளானது அந்தச் சமயத்தையுங்கடந்து நின்று சிதம்பரத்தின்கண் வெளிப்படையாய்த் தெரிசனம் தாரா நிற்கின்றது. ஆகையால் அந்தப் பொருள் கைகூடும்படி செய்து கொள்வதைவிட்டு பொய்ச் சமயங்களிலெல்லாம் போய்ப்புகுந்து வருந்துகின்றீர்கள். இனி அந்தச் சமயங்களிற் சேர வேண்டுவதில்லை. ஆனால் மோட்சத்தையடையும் பொருட்டு இந்தச் சமயத்தில் வந்துகூடிய சீக்கிரத்திற் சேருங்கள் (எ-று)

உலகர்களே! நீங்களெல்லாம் ஒருங்கு கூடி மோட்சமளிப்பதற் குரியதான சைவசமயத்தில் வந்துசேருங்கள். வேறு சமயங்களிற் போகாதீர்கள் என்பது கருத்து. (2)

555. காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டா காரசிவ
போக மெனும்பே ரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாய்க் கிடக்குதையோ இன்புற் றிடநாம் இனிஎடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ் சகத்தீரே.

(பொ-ரை) உலகத்தார்களே! காகமானது தன் சாதியாகிய காகங்களோடு கூடித் தனக்குக் கிடைத்த பொருளை உண்ண நீங்கள் கண்டிருக்கிறீர் களல்லவா? சர்வபரிபூரணமாய் எங்கும் நிறைந்த சிவபோகமென்னும் பேரின்பப் பிரவாகமானது மேலிட்டு வெளிப்பட்டு எங்கும் பரவி ஒரே ரூபமாய்க் கிடக்கின்றது. அந்தோ! சுகத்தைய டைவதன் பொருட்டு நாம் எடுத்துள்ள தேகமானது இறந்து படுவதற்கு முன்னரே அந்தச் சுகாமிர் தத்தைப் புசிப்பதற் காகச் சீக்கிரத்தில் வந்து சேருங்கள். (எ-று)

அற்பமான உணவையும் காகமானது கலந்துண்கிறது. அதுபோலவே பேரின்ப வெள்ளத்தையும் நாமெல்லாம் கூடி அநுபவிப்போம். செகத்தீரே! நீங்கள் வாருங்கள் என்பது கருத்து. (3)

எடுத்த தேகம்

கட்டளைக் கலிப்பா

556. எடுத்த தேகம் பொருளாவி மூன்றும் நீ
எனக்கொன்றில்லை எனமோன நன்னெறி
கொடுத்தபோது கொடுத்ததன் றோபினுங்
குளறி நானென்று கூத்தாட மாயையை
விடுத்த வாறுங்கண் ணீரொடு கம்பலை விலகு
மாறுமென் வேட்கைப்ர வாகத்தைத்
தடுத்த வாறும் புகலாய் சிரகிரித்
தாயு மான தயாபர மூர்த்தியே.

(பொ-ரை) திருச்சிராப்பள்ளியில் எழுந்தருளியிருக்கும் தாயுமானவர் என்னும் திருப்பெயரினையுடைய தயாபர மூர்த்தியே! எனக்கு வந்து வாய்ந்துள்ள உடல், பொருள் ஆவிகளாகிய மூன்றினையும் நீ மௌனோ பதேசஞ் செய்த அன்றே உனக்குக் கொடுத்துவிட்டும் என்னை நான் என்னும் அகங்காரமானது வந்து கிளப்புவதும் என் அன்பினாற் பெருகும் ஆனந்தத்தை வரவொட்டாமல் தடுத்த தும் எற்றுக்கு? நீயே எனக்குத் திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (1)

557. நோயும் வெங்கலிப் பேயுந் தொடர நின்
நூலிற் சொன்ன முறைஇய மாதிநான்
தோயும் வண்ணம் எனைக்காக்குங் காவலுந்
தொழும்பு கொள்ளுஞ் சுவாமியு நீகண்டாங்

ஓயுஞ் சன்மம் இனியஞ்சல் அஞ்சலென்
றுலகங்கண்டு தொழவோ ருருவிலே
தாயுந் தந்தையும் ஆனோய் சிரகிரித்
தாயு மான தயாபர மூர்த்தியே.

(பொ-ரை) உலகத்தார்களெல்லாம் கண்டு தொழும்படி ஒரு ரூபத்திலே தாயும், தந்தையுமாக எழுந்தருளியிருக்கின்ற திரிகிராமலைத் தாயுமானவர் என்னும் தயாபர மூர்த்தியே! நோயும், தரித்திரமும், என்னை வந்து தொடரவும், உன்னூலிற் சொல்லிய பிரகாரம் அடயோகம் செய்யும்படி என்னைக் காப்பாற்றும் காவலும், என்னை அடிமைகொள்ளும் சுவாமியும் நீயேயாவாய். (ஆகையால் என்னைச் சீக்கிரத்தில் அடிமை கொண்டாண்டருள வேண்டும்) (எ-று)

நின்னூல் என்றது நான்கு வேதங்களை. (2)

முகமெலாம்

558. **முகமெ லாங்கணீர் முத்தரும் பிடச்செங்கை முகிழ்ப்ப**
அகமெ லாங்குழைந் தானந்த மாகநல் லறிஞர்
இகமெ லாந்தவம் இழைக்கின்றார் என்செய்கோ எழை
சகமெ லாம்பெற நல்லருள் உதரமாச் சமைந்தோய்.

(பொ-ரை) உலகத்தார்களையெல்லாம் பெற்றுக் காப்பாற்றும் பொருட்டு நல்ல திருவருளையே வயிறாகப் பெற்றிருக்கின்ற கடவுளே! நல்ல ஞானிகள் முகத்திலிருக்கும் கண்களினின்றும் ஆனந்த பாஷ்யம் பொழியவும், செவந்த திருக்கரங்களை சிரசின்மேற் கூப்பி மனங் குழைந்து ஆனந்தமாகிய இப்பிறவியில் தவஞ் செய்யா நிற்கின்றனர். நான் அறிவில்லாதவனாகையால் என்ன செய்ய வல்லவனாவேன். (எ-று) (1)

திடமுறவே

கொச்சகக் கலிப்பா

559. **திடமுறவே நின்னருளைச் சேர்த்தென்னைக் காத்தாளக்**
கடன்உனக்கென் றெண்ணிநின்னைக் கைகுவித்தோன் னானலனோ
அடைவுகெட்ட பாழ்மாயை ஆழியிலே இன்னமல்லல்
படமுடியா தென்னாவிப் பற்றே பராபரமே.

(பொ-ரை) என் உயிர்க்குப் பற்றுக் கோடாயுள்ளவனே! பராபரவஸ்து வானவனே! என்னிடத்தில் உன்னுடைய

திருவருளைக் கூட்டி என்னை அடிமை கொள்ள உனக்கே கடமையிருக்கிறதென்று நினைத்து உன்னைக் கும்பிட்டுத் துதி செய்தவன் நானல்லனோ? அப்படிப்பட்ட என்னால் இன்னும் மாயையில் விழுந்து வருந்த முடியாது. (எ-று)

பெருங்கருணைக் கடலாகிய உன்னைத் துதித்து மாயையில் விழவசமோ என்பது கருத்து. (1)

560. ஆராமை கண்டிங் கருட்குருவாய் நீயொருகால்
வாராயோ வந்து வருத்தமெல்லாந் தீராயோ
பூராய மாகஅருட் பூரணத்தில் அண்டமுதல்
பாராதி வைத்த பதியே பராபரமே.

(பொ-ரை) திருவருள் நிறைவின்கண் அண்டமுதலான பூமிகளை யெல்லாம் இருக்கும்படி வைத்த தலைவனே! பராபரவஸ்துவானவனே! நீ என்னுடைய வருத்தத்தை யெல்லாம் திருக்கண் சாத்திப்பார்த்து எனக்கு ஞானாசிரியனாய்த் திருக்கோலங் கொண்டு எழுந்தருளி ஒரு முறை வந்து என்னுடைய வருத்தமுழுமையும் தீர்த்துவிட மாட்டாயோ? (எ-று) (2)

561. வாழாது வாழஉனை வந்தடைந்தோர் எல்லாரும்
ஆழாழி என்ன அரு ளானார் அழுக்காற்றோ
டேழா யெனவுலகம் ஏசுமினி நானொருவன்
பாழாகா வாறுமுகம் பார்நீ பராபரமே.

(பொ-ரை) பராபர வஸ்துவே! உன்னை வந்து சேர்ந்த பெரியோர் களெல்லாம் திருவருளுக்கிலக்காய் விட்டனர் உலகத்தார்களாற் பழிக்கப்பட்டு வருகின்ற ஒருவனான நானும் அந்தவழியை அடையும்படி நீ உன்னுடைய திருக்கண்களைச் சாத்தியருளல் வேண்டும். (எ-று) (3)

562. உள்ளத்தி னுள்ளே ஒளித்தென்னை ஆட்டுகின்ற
கள்ளக் கருணையையான் காணுந் தரமாமோ
வெள்ளத்தை மாற்றி விடக்குண்பார் நஞ்சூட்டும்
பள்ளத்தின் மின்போற் பதைத்தேன் பராபரமே.

(பொ-ரை) பரபார வஸ்துவே! பள்ளத்தில் அகப்பட்டுத் தவிக்கின்ற மீனைப் போல் பதைக்கின்றவனான நான், மனத்தின்கண்ணே யொளித்திரா நின்ற கள்ளக் கருணையை நான் கண்டு தரிசிக்கும் திறமுடையவனல்லேன். (எ-று) (4)

563. வாவிக் கமலமலர் வண்டாய்த் துவண்டுதுவண்
டாவிக்குள் நின்றவுனக் கன்புவைத்தார்க் கஞ்சலென்பாய்
பூவிற்கும் வான்கடையிற் புல்லிற்போர் போல ஒன்றைப்
பாவிக்க மாட்டேன் பதியே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! பராபரவஸ்துவே! அன்பாற் கரைந்து மனமிளகுவோர்க்கு பயப்படாதேயுங்கள் என்று அபயங்கொடுப்பாய். நானோ அங்ஙனம் செய்யாமையாற் பூ விற்கும் கடைத்தெருவில் புல்விற் பார் போலாய்விட்டேன். (எ-று) *(5)*

564. விண்ணாறு வெற்பின் விழுந்தாங் கெனமார்பில்
கண்ணாறு பாய்ச்சிடுமென் காதல்வெள்ளங் கண்டிலையோ
தண்ணாறு சாந்தபதத் தற்பரமே நால்வேதப்
பண்ணாறும் இன்பப் பதியே பராபரமே.

(பொ-ரை) சாந்த பதத்தினையுடைய தத்பரவஸ்துவே! நால்வேதத்தில் விளங்காநின்ற தலைவனே! பராபர வஸ்துவே! நான் உன்னுடைய திருவருளைப் பெறும்படியாக மனமிளகி அழுவதை நீ காணவில்லையோ? (எ-று) *(6)*

565. கூடியநின் சீரடியார் கூட்டமென்றோ வாய்க்குமென
வாடியஎன் நெஞ்சம்முக வாட்டமும்நீ கண்டிலையோ
தேடியநின் சீரருளைத் திக்கனைத்துங் கைகுவித்துப்
பாடியநான் கண்டாய் பதியே பராபரமே.

(பொ-ரை) பராபர வஸ்துவே! தேடப்பட்ட உன்னுடைய திருவருளைப் பற்றி அட்டதிக்குகளிலும் சென்று பாடி நின்னுடைய அடியார்க்கூட்டம் எனக்கென்று கிடைக்குமென்று மனமிளகி வருந்தியிருந்த என் வருத்தத்தைப் பார்த்தாயில்லையோ? (எ-று) *(7)*

566. நெஞ்சத்தி னூடே நினைவாய் நினைவூடும்
அஞ்சலென வாழுமென தாவித் துணை நீயே
சஞ்சலமாற் றினைஇனிமேல் தாய்க்குபகா ரம்புகன்று
பஞ்சரிக்க நானார் பதியே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! பராபர வஸ்துவே! மனத்தின் கண் உறவாயிருந்து சில காரியங்களை நடத்திக் கொண்டு வாரா நின்ற என் உயிர்க்குத் துணை நீயேயாவாய். ஆகையால் என்னுடைய துக்கங்களை யெல்லாம் நீக்கித் தாய் போல் ரட்சிக்க வேண்டியவனும் நீயேயாவாய்.

(எ-று) பஞ்சரிக்க - உபசாரமாய்ப் பேச. *(8)*

567. புத்திநெறி யாகஉனைப் போற்றிப் பலகாலும்
முத்திநெறி வேண்டாத மூடனேன் ஆகெடுவேன்
சித்திநெறிக் கென்கடவேன் சீரடியார்க் கேவல்செயும்
பத்திநெறிக் கேனுமுகம் பார்நீ பராபரமே.

(பொ-ரை) பராபர வஸ்துவே! நானோ உன்னைச் சதா துதி செய்து மோட்ச வீட்டை விரும்பாத மூடன் அங்ஙனம் செய்யாமையால் ஆ! கேட்டினையடைவதற்கு யாதொரு ஆட்சேபணையுமில்லை. ஆகையால் நான் இனி அடைய வேண்டிய சித்திகளுக்கு என்ன செய்ய வல்லேன். ஒழிய, இனியேனும் உன்னுடைய அடியார்களுக்குப் பணிவிடை செய்வதற்குரிய பத்தி நெறியையானாலும் எனக்குக் கொடுத்தருள வேண்டும். (எ-று) (9)

568. கண்டறியேன் கேட்டறியேன் காட்டும்நினை யேஇதயங்
கொண்ட றியேன் முத்தி குறிக்குந் தரமுமுண்டோ
தொண்டறியாப் பேதைமையேன் சொல்லேநின் தொன்மை யெலாம்
பண்டறிவாய் நீயே பகராய் பராபரமே.

(பொ-ரை) பராபர வஸ்துவே! உன்னுடைய திருவிளை யாடல்களை யெல்லாம் சொல்லித் துதியேன் கண்டும், கேட்டும், அறிந்தேனில்லை. உன்னுடைய திருத்தொண்டைச் செய்யும் திறமையுமிலேன். உன்னை மனத்தினிடத்திற் பாவனா மூர்த்தமாகவும் வைத்துக் காத்திருந்தேனில்லை. ஆகையால் நான் மோட்சத்தைக் குறித்து உன்னை வேண்டிக் கொள்ளும் திறமுடைய வனாவனோ? ஆகேன். (எ-று) (10)

தன்னை

கொச்சகக் கலிப்பா

569. தன்னை அறியத் தன்தருளால் தானுணர்த்தும்
மன்னைப் பொருளெனவே வாழாமற் பாழ்நெஞ்சே
பொன்னைப் புவியைமடப் பூவையரை மெய்யெனவே
என்னைக் கவர்ந்திழுத்திட் டென்னபலன் கண்டாயே.

(பொ-ரை) ஓ கொடுமை மிகுந்த மனமே! தன்னைத் தானுணர்ந்து அப்படி யுணர்ந்த அந்தப் பசு ஞானத்தின் திருவருளால் தனக்குத் தலைவனையுமுணர்ந்து அவனையே மெய்ப்பொருளாக எண்ணி அவன் எழுந்தரு ளியுள்ளஞான நிலத்திலே நீ வாழாதபடி பொன்னையும்,

பூமியையும், பெண்களையும் மெய்யாக எண்ணி என்னையும் உன்வசமாக்கிக் கொண்டனையே, அதனால் நீ என்ன லாபத்தை அடைந்தாய்? (அந்தோ இஃது உனக்குப் பெரிய விபரீத உணர்ச்சியேயாம். இந்த உணர்ச்சி உன்னிடத்திலுள்ள வரைக்கும் நீயும் ஞானமார்க்கத்தை யடையாய், என்னையும் அடைவிக்க மாட்டாய். ஆகையால் நான் இதற்கு என்ன செய்யவல்லேன். ஆ! கடவுளே!! இதுவும் என் தலைவிதியே!!!) (எ-று) (1)

ஆக்குவை

ஈரசை யறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

570. ஆக்குவை மாயை யாவும் நொடியினில் அவற்றை மாள
நீக்குவை நீக்க மில்லா நினைப்பொடு மறப்பு மாற்றிப்
போக்கொடு வரவு மின்றிப் புனிதநல் லருளானந்தந்
தாக்கவுஞ் செய்வா யன்றோ சச்சிதா னந்த வாழ்வே.

(பொ-ரை) உண்மை, யறிவானந்தமான வஸ்துவே! நீ உலக மாயைகளையெல்லாம் உண்டாக்குவாய். அவைகளை யெல்லாம் மீண்டும் ஒரு க்ஷணப் பொழுதிற்குள் அழிப்பாய். நினைப்பு மறப்புக்களை நீக்கி இறப்புப் பிறப்புக்களையும் போக்கி நல்ல திருவருள் உதயமாதற்குக் காரணமான சுக நிலையானது வந்து என்னைத் தாக்கவும் செய்ய வல்லவனல்லவோ? அப்படிப்பட்டவனான நீ என்னிடத்தில் அவைகளையெல்லாம் காட்டாமைக்குக் காரணம் என்னவோ? அறிந்தேனிலலை. (எ-று) (1)

கற்புறு சிந்தை

571. கற்புறு சிந்தை மாதர் கணவரை அன்றி வேறோர்
இற்புறத் தவரை நாடார் யாங்களும் இன்ப வாழ்வுந்
தற்பொறி யாக நல்குந் தலைவநின் னலதோர் தெய்வம்
பொற்புறக் கருதோங் கண்டாய் பூரணா னந்த வாழ்வே.

(பொ-ரை) எங்களுடைய தலைவனே! பரிபூரண சுகவஸ்துவே! கற்பின் தன்மைவாய்ந்த பெண்களெல்லாம் தங்கள் தங்கள் கணவர்களையல்லாமல் வேறொருவரைக் கனவிலும் நினைக்கமாட்டார்கள். அதுபோலவே நாங்களும் யாதொரு சுகநிலையைத்தானே வலிய வந்து கடாட்சித்தருளும் சிவபெருமானான உன்னையல்லாமல் வேறொருதெய்வத்தைஸ்மரிக்கமாட்டோம். (எ-று) (1)

572. முருந்திள நகையார் பார முலைமுகந் தழுவிச் செவ்வாய்
விருந்தமிழ் தெனவ ருந்தி வெறியாட்டுக் காளாய் நாளும்
இருந்தலோ காய தப்பேர் இனத்தனாய் இருந்த ஏழை
பொருந்தவுங் கதிமே லுண்டோ பூரணா னந்த வாழ்வே.

(பொ-ரை) எங்கும் நிறைந்த சுகவஸ்துவே! நான் பெண்கள் மயக்கத்திற் சிக்கி அமிழ்வதாகிய லோகாயத மதத்திற் பட்டுத் தவிக்கின்றவன் போன்ற அறிவில்லாத வனான நான் அடையும் படியான வேறு கதியும் இருக்கின்றதா? (எ-று)

நான் லோகாயத மதத்தார்கள் போலப் பெண்கள் மாயைகளிற் சிக்கித் தவிக்கின்றேன். அப்படிப்பட்ட எனக்கு உன்னருள் கிடைப்பது எங்ஙனம்? என்பது கருத்து. (2)

573. தீதெலாம் ஒன்றாம் வன்மை செறிந்திருட் படலம் போர்த்த
பாதகச் சிந்தை பெற்ற பதகனுன் பாத நீழல்
ஆதர வடைய உள்ளன் பருள்கிலை யாயின் மற்றியார்
போதனை செய்ய வல்லார் பூரணா னந்த வாழ்வே.

(பொ-ரை) எங்கும் நிறைந்த சகவஸ்துவே! தீய மார்க்கங்களெல்லாம் ஒன்றாகக் கூடியதினாற் பாழுஞ் சிந்தையைப் பெற்றவனான அறிவில்லாத நானும் உன்னுடைய திருவடிகளை நிழலாகிய ஆதாரத்தைப் பெறுவதற்கு எனக்குக் கொஞ்சமானாலும் மெய்யன்பைத் திருவருள் செய்யாமல் விட்டுவிடு வாயானால் வேறு யார் எனக்கு உபதேசஞ் செய்யப் போகிறார்? ஒருவரு மில்லை. (எ-று)
(3)

574. நாதனை நாதா தீதநண்பனை நடுவாய் நின்ற
நீதனைக் கலந்து நிற்க நெஞ்சமே நீவா என்றால்
வாதனை பெருக்கி என்னை வசஞ்செய்து மனந்துன் மார்க்க
போதனை செய்தல் நன்றோ பூரணா னந்த வாழ்வே.

(பொ-ரை) எங்கும் நிறைந்த சுக வஸ்துவே! நான் என்னுடைய மனத்தைப் பார்த்து ஓ மனமே! நாதமாத்திரமாய் விளங்குபவனும், அந்த நாதத்தையும் கடந்தவனும், எல்லாவற்றிற்கும் நடுவு நிலைமையாய் நிற்பவனுமான சிவபெருமான் என்னும் உன்னைக் கலந்திருக்கப் போகலாம். வாவென்று அழைத்தால் அந்த மனமானது அவ்வழி வாராமல் என்னைத் தன்வயப்படுத்திக் கொண்டு எனக்கு

மிகுந்த துன்பங்களையெல்லாம் கொடுத்து தீயமார்க்கங்களை எனக்குப் போதிக்கின்றதே? இது நன்றோ? (எ-று)

இம்மனமானது இப்படி என்னைத் தீயமார்க்கத்திற் செலுத்துவதினால் நான் உன்னுடைய திருவருளையடைவது எங்ஙனம்? என்பது கருத்து. *(4)*

575. எண்ணிய எண்ண மெல்லாம் இறப்புமேற் பிறப்புக் காசை
பண்ணிஎன் னறிவை எல்லாம் பாழாக்கி எனைப்பா ழாக்குந்
திண்ணிய வினையைக் கொன்று சிறியனை உய்யக் கொண்டால்
புண்ணியம் நினக்கே யன்றோ பூரணா னந்த வாழ்வே.

(பொ-ரை) எங்கும் நிறைந்த சுகவஸ்துவே! நான் எண்ணுகின்ற எண்ணங்களெல்லாம் இறப்பதற்கும் பிறப்பதற்குமே ஆதாரமாக இருக்கின்றன. ஆகையால் அந்த எண்ணங்களை யெல்லாம் கெடுத்து அவைகளை எனக்கு எழுப்பிக் கொண்டே இருக்கின்ற தீவினைகளையும் ஒழித்து அறிவிற் சிறியவனான என்னை அடிமையாக்கிக் கொள்வாயானால், அந்தப் புண்ணியம் உனக்கேயல்லவோ? ஆம். (எ-று)

என்னைக் காப்பாற்றுவது உனக்குக் கடமையாயிருப்பதால் கூடிய சீக்கிரத்தில் ஆண்டுகொண்டருள வேண்டும் என்பது புதைப்பொருள். *(5)*

576. பத்திநீ பத்திக் கான பலனுநீ பலவாச் சொல்லுஞ்
சித்திநீ சித்தர் சித்தித் திறமுநீ திறமார் மோன
முத்திநீ முத்திக் கான முதலுநீ முதன்மை யான
புத்திநீ எனக்கொன் றுண்டோ பூரணா னந்த வாழ்வே.

(பொ-ரை) எங்கும் நிறைந்த சுகவஸ்துவே! பக்தியும் அந்தப் பக்தியால் அடையப்படும் பயனாயுள்ளவனும், சகலசித்திகளும், அந்தச் சித்திகளின் வல்லமையும், மௌனமுத்தியும், முத்திக்குக் காரணனாயுள்ள முதல்வனும், எல்லாவற்றிற்கும் முதன்மையான புத்தியும் நீயேயாயிருக்கின்றாய். ஆகையால் அவைகளில் ஏதேனுமொன்று எனக்குச் சம்பந்தமுண்டோ? இல்லை (எ-று)

இங்ஙனமிருப்பதால் என்னால் ஒரு காரியமும் நடவாது, எல்லா வற்றையும் நடத்துபவன் நீயே யாவாய், ஆகையால், என்னை ஆண்டருள் செய்ய வேண்டியவனும் நீயே யாவாய் என்பது உட்கிடைப் பொருள். *(6)*

577. தாயினும் இனிய நின்னைச் சரணென அடைந்த நாயேன்
பேயினுங் கடைய னாகிப் பிதற்றுதல் செய்தல் நன்றோ
தீயிடை மெழுகாய் நொந்தேன் தெளிவிலேன் வீணே காலம்
போயின தாற்று கில்லேன் பூரணா னந்த வாழ்வே.

(பொ-ரை) எங்கும் நிறைந்த சுகவஸ்துவே! தாயைப் பார்க்கிலும் இனிய கிருபையைச் செய்கின்ற உன்னை அடைக்கலமான அடைந்த நாயினுங் கடைப்பட்டவனான நான் பேயைப் போற் பிதற்றித் திரிவது உனக்கு நன்றோ? அறிவில்லாதவனான நான் தீயிற்பட்ட மெழுகைப்போல் மனமிளகி வருந்தினேனேயொழிய உன்னை அறிந்தேனில்லை. ஆகையால் காலமெல்லாம் வீணே சென்று விட்டன. இனி சென்ற நாட்களுக்குச் சகிக்க முடியாதவனா யிருக்கின்றேன். (எ-று)

என்னுடைய அறிவு இங்ஙனமிருப்பதால் நீயே திருவருள் செய்ய வேண்டும் என்பது குறிப்பு. (7)

மலைவளர் காதலி

578. பதியுண்டு நிதியுண்டு புத்திரர்கள் மித்திரர்கள்
பக்கமுண் டெக்காலமும்
பவிசுண்ட தவிசுண்டு திட்டா ந்த மாகயம்
படரெனுந் திமிர மணுகாக்
கதியுண்டு ஞானமாங் கதிருண்டு சதிருண்டு
காயசித் திகளுமுண்டு
கறையுண்ட கண்டர்பால் அம்மைநின் தாளில்
கருத்தொன்றும் உண்டாகுமேல்
நதியுண்ட கடலெனச் சமயத்தை யுண்டபர
ஞானஆ னந்தஒளியே
நாதாந்த ரூபமே வேதாந்த மோனமே
நானெனும் அகந்தைதீர் த்தென்
மதியுண்ட மதியான மதிவதன வல்லியே
மதுசூ தனன்தங்கையே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

(பொ-ரை) ஆலகால விஷத்தைத் திருமிடற் றடக்கிய சிவ பெருமானுடைய இடது பாகத்தில் வீற்றிரா நின்ற தாயே! நதிகளையெல்லாம் உண்டு தான் எதிலும் அடங்காது இருக்கின்ற கடலினைப் போற் சமயங்களையெல்லாம்

கடந்திரா நின்ற சகோதயமாதற்குரிய ஞானதேஜஸே! நாத தத்துவத்தின் அந்தத்தில் விளங்கும் ரூபமே! வேதாந்த மதத்திற் சொல்லா நின்ற மௌனப் பொருளே! நான் என்கிற என்னுடைய அகங்காரத்தை நீக்கி என்னுடைய அறியாமையையும் போக்கி ஆட்கொண்ட இந்துமுகீ! திருமாலுக்குத் தங்கையே! இமயமலையரசனுக்கு இரண்டு கண்மணி போலும் உதித்த கயிலாய மலையில் வாழ்கின்ற பெண்ணாகிய உமாதேவியே! உன்னுடைய திருவடிகளில் எனக்குக் கொஞ்சம் அன்பு உண்டாகுமானால் அப்பொழுது நாடு, செல்வம், புத்திரர்கள், சிநேகர்கள், மோட்சகதி, ஞானமயமாய் விளங்கத் தக்க தேஜஸு, சாமர்த்தியம், காயசித்தி முதலிய எல்லாம் எனக்கு உண்டாகும் என்பதற்கு யாதொரு சந்தேகமு மில்லை. (எ-று)

பார்வதீ! உன்னுடைய திருவடிகளிடத்தில் எனக்குக் கொஞ்சம் அன்பு உண்டாகுமானால் எல்லாச் சம்பத்தையும் அடையக்கூடும். ஆனால் அவ்வன்பு உன்னுடைய திருவருள் இருக்கும் பட்சத்தில் எனக்குக் கை கூடுவதற்குத் தடையில்லை என்பது கருத்து. (1)

579. **தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே**
சிற்றிடையி லேநடையிலே
சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே
சிறுபிறை நுதற்கீற்றிலே
பொட்டிலே அவர்கட்டு பட்டிலே புனைகந்த
பொடியிலே அடியிலேமேல்
பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே
புந்திதனை நுழையவிட்டு
நெட்டிலே அலையாமல் அறிவிலே பொறையிலே
நின்னடியர் கூட்டத்திலே
நிலைபெற்ற அன்பிலே மலைவற்ற மெய்ஞ் ஞான
ஞேயத்திலே யுன்இரு தாள்
மட்டிலே மனதுசெல தருளும் அருள்வையோ
வளமருவு தேவை அரசே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

(பொ-ரை) வளப்பம் பொருந்திய தேவையென்னும் நகரத்தில் எழுந்தருளியிருக்கும் தலைவியே! மலையரசனுக்கு இரண்டு கண்மணி போல் உதித்த கயிலாய மலையில்

வாழ்கின்ற பெண்ணாகி உமாதேவியே! நான் இதுவரைக்கும் அநேக உறுப்புக்களால் வெளிமயக்கத்தைத் தருகின்ற பெண்கள் மாயையில் என்னுடைய மனத்தைச் செல்லவிட்டுப் பரதவிதத்துப் போலினியாகமல், மெய்ஞ்ஞானத்திலும், பொறுமையிலும், உன்னுடைய அடியார் கூட்டத்திலும், அன்பிலும், ஞானஞேயத்திலும் உன்னுடைய திருவடிகளிலும் என்னுடைய மனமானது சென்று அவ்விடத்திலே பதிந்திருக்கும்படி நீ என்றைக்குத் திருவருள் செய்வாயோ? நான் அறியேன். (எ-று) (2)

580. **பூதமுதலாகவே நாதபரி யந்தமும்**
பொய்யென் றெனைக்காட்டிஎன்
போதத்தின் நடுவாகி அடியீறும் இல்லாத
போதபூ ரணவெளிக்குள்
ஏதுமற நில்லென் றுபாயமா வைத்துநினை
எல்லாஞ்செய் வல்லசி த்தாம்
இன்பவுரு வைத்தந்த அன்னையே நின்னையே
எளியேன் மறந்துய்வனோ
வேதமுத லானநல் லாகமத் தன்மையை
விளக்கும்உள் கண்இலார்க்கும்
மிக்கநின் மகிமையைக் கேளாத செவிடர்க்கும்
வீறுவா தம்புகலுவாய்
வாதநோ யாளர்க்கும் எட்டாத முக்கணுடை
மாமருந் துக்கமிர்தமே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

(பொ-ரை) விஷ்ணுவினாலும் அறியப்படாத சிவபெருமானுக்கு அமிர்தம் போல்பவனே! மலையரசனுக்கு இரண்டு கண்மணி போலும் உதித்த கயிலாய மலையில் வாழ்கின்ற பெண்ணாகிய உமாதேவியே! பூத தத்துவமுதல் நாத தத்துவம் வரைக்கும் இல்லாமையாகுமென்று எனக்குக் காட்டி என்னுடைய அறிவின் நடுவேயாய் ஆதியந்தமில்லாத சுகவெளிக்குள் என்னை இருக்கச் செய்து எனக்கோர் ஆனந்த வடிவைக் கடாட்சித்தருளிய என்னுடைய தாயே! வேதம், ஆகமம் முதலிய நூல்களின் தன்மையை விளக்கிக் காட்டுதற்குரிய ஞானக் கண்ணில்லாதார்க்கும், அவைகளிற் கூறப்பட்ட மகிமைகளைக் கேளாத செவிடர்களுக்கும், மிக்கவாதத்தைத் திருவருள் செய்வாய். ஆகையால் இப்படிப்

பட்ட பரமகாருணியாகிய உன்னைத் துதியாமல் விட்டுவிடு வேனானால் நான் பிழைக்கும் வழி இல்லை. (எ-று) (3)

581. மிடியிட்ட வாழ்க்கையால் உப்பிட்ட கலமெனவும்
மெய்யெலாம் உள்ளுடைந்து
வீறிட்ட செல்வர்தந் தலைவாயில் வாசமாய்
வேதனைக ளுறவேதனுந்
துடியிட்ட வெவ்வினையை ஏவினான் பாவிநான்
தொடரிட்ட தொழில்க ளெல்லாந்
துண்டிட்ட சாண்கும்பி யின்பொருட் டாயதுன்
தொண்டர்பணி செய்வதென்றோ
அடியிட்ட செந்தமிழின் அருமையிட் டாரூரில்
அரிவையோர் பரவைவாயில்
அம்மட்டும் அடியிட்டு நடைநடந் தருளடிகள்
அடியீது முடியீதென
வடியிட்ட மறைபேசு பச்சிளங் கிள்ளையே
வளமருவு தேவை அரசே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதி த்தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

(பொ-ரை) நல்ல செந்தமிழின் அருமைப் பாடலுக்காகத் திருவாரூரின் கண் பரவையார் திருவாசற்படி வரைக்கும் சுந்தரமூர்த்தி நாயனாருக்காகத் தூது சென்ற காலத்தில் அடிமுடியை உரைத்தருளிய பசிய இளங்கிளிப் பிள்ளையே! வளப்பம் பொருந்திய தேவையென்னும் நகரத்திற்குத் தலைவியே! மலையரசனுக்கு இரண்டு கண்மணிபோல் உதித்த கயிலாயமலையில் வாழ்கின்ற பெண்ணாகிய உமாதேவியே! என்னுடைய தரித்திரத்தினால் என் தேகமானது உப்புப்பாண்டம் போல் உளுத்து மனமிளகி செல்வர்களுடைய தலைவாசற்படியைப் பிடித்துக் கொண்டிருந்து வாதை படும்படி பிரமதேவனும் கொடிய வினையை ஏவிவிட்டான். பாவியாகிய நான் பட்டபாடு களெல்லாம் சாண் வயிற்றின் பொருட்டே யாகின்றன. ஆகையால் இனியேனும் உன்னுடைய திருத்தொண்டர்களுக்குத் தொண்டு செய்யும்படி எனக்குத் திருவருள் பாலிக்கவேண்டும். (எ-று) (4)

582. பூரணி புராதனி சுமங்கலை சு தந்தரி
புரா ந்தகி த்ரியம்பகிஎழில்

பூங்கவி விளங்குசிவ சங்கரி சகத்தரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சத்தி என்றுன்
நாமமே உச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்ச ரிக்கவசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடிஈன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூபமயிலே
வாரணியும் இருகொங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை அரசே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

(பொ-ரை) கங்கையைத் தமது சடாபாரத்தில் தாங்கிக் கொண்டிரா நின்ற சிவபெருமானானவன் ஆரணியே! என்று புகழப்பட்டுவரச் சர்வ அண்டங் களையெல்லாம் பெற்றெடுத்த தாயே! வேதங்களெல்லாம் கன்னி என்று பேசுகின்ற சுகமே ஒரு ரூபமாகவுடைய மயிலே! கச்சை யிறுக்கிக் கட்டிய ஸ்தனபாரத்தையுடைய பெண்களாற் புகழப்பட்டு வருகின்ற கங்காதேவி யாலும் புகழப்படுகின்ற வளப்பம் பொருந்திய தேவையென்னும் நகரத்திற்குத் தலைவியே! மலையரசனுக்கு இரண்டு கண்மணி போலும் உதித்த கயிலாயமலையில் வாழ்கின்ற பெண்ணாகிய உமாதேவியே! பூரணி, புராதனி, சுமங்கலை, சுதந்தரி, புராந்தகி, திரியம்பகி, புங்கவி, சிவசங்கரி, ஆயிரத்தெட்டிதழ்க் கமலத்தில் வீற்றிருக்கும் நாரணி, மனாதீத நாயகி, குணாதீத நாதாந்த சத்தி என்று உன்னுடைய திருநாமங்களையே உச்சரித்துக்கொண்டு வாரா நின்ற உனது திருத்தொண்டர் களது நாமங்களை நான் உச்சரிக்க விதியாமோ? (எ-று) (5)

583. பாகமோ பெறஉனைப் பாடஅறி யேன்மல
பரிபாசம் வரவும்மன தில்
பண்புமோ சற்றுமிலை நியமமோ செய்திடப்
பாவியேன் பாபரூப
தேகமோ திடமில்லை ஞானமோ கனவிலுஞ்
சிந்தியேன் பேரின்பமோ
சேரஎன் றாற்கள்ள மனதுமோ மெத்தவுஞ்
சிந்திக்கு தென் செய்குவேன்

மோகமோ மதமோ குரோதமோ லோபமோ
முற்றுமாற் சரியமோ தான்
முறியிட் டெனைக்கொள்ளும் நிதியமோ தேடஎனின்
மூசுவரி வண்டுபோல
மாகமோ டவும்வல்லன் எனையாள வல்லையோ
வளமருவு தேவை அரசே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

(பொ-ரை) வளப்பம் பொருந்திய தேவையென்னும் நகரத்திற்குத் தலைவியே! மலையரசனுக்கு இரண்டு கண்மணி போலும் உதித்த கயிலைமலையில் வாழ்கின்ற பெண்ணாகிய உமாதேவியே! மலபரிபாகம் வரப்பெற்று உன்னைப் பாடித்துதிக்க அறியமாட்டேன். அந்தப்பாகம் வருவதற்கான குணமும் எனக்கு இல்லை. இயம நியமாதிகளை அநுட்டிக்கலா மென்றாலோ இந்தத் தேகம் நிலையில்லாததாயிருக்கின்றது. ஞானத்தையோ கனவிலும் நினைந்தேனில்லை. பேரின்பத்தை யடைவோமென்றாலோ மனமானது மிகவும் திருட்டுத்தனத்தை நினைக்கின்றது. மோகம், மதம், குரோதம், லோபம், மாற்சரியம் இவைகளிற்பட்டு அவைகளைச் செய்து முடிக்க வல்லமை யுடையேன். ஆகையால் உன்னுடைய திருவருள் எனக்குக் கைகூடுமென்று நம்புவதற்குக் கூடவில்லை. ஆகையால் நான் இனி என்ன செய்ய வல்லேன்? (எ-று) (6)

584. **தூளேறு தூசுபோல் வினையேறு மெய்யெனுந்**
தொக்கினுட் சிக்கிநாளுஞ்
சுழலேறு காற்றினிடை அழலேறு பஞ்செனச்
சூறையிட் டறிவை எல்லாம்
நாளேற நாளேற வார்த்திக மெனுங் கூற்றின்
நட்பேற உள்ளுடைந்து
நயனங்கள் அற்றதோர் ஊரேறு போலவே
நானிலந் தனில் அலையவோ
வேளேறு தந்தியைக் கனதந்தி யுடன்வென்று
விரையேறு மாலைசூடி
விண்ணேறு மேகங்கள் வெற்பேறி மறைவுற
வெருட்டிய கருங்கூந்தலாய்
வாளேறு கண்ணியே விடையேறும் எம்பிரான்
மனதுக் கிசைந் தமயிலே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

(பொ-ரை) மிகவும் கருமை நிறம் பொருந்திய கூந்தலினை யுடையவளே! ஒளி பொருந்திய கண்களையுடையவளே! சிவ பெருமானுடைய மனத்துக்குத் தக்கவாறு பொருந்தி யிருக்கும் மயிலே! மலைராஜனுக்கு இரண்டு கண்மணி போலும் உதித்த கயிலாய மலையில் வாழ்கின்ற பெண்ணாகிய உமாதேவியே! மிகவும் கொடிய தீவினைக ளையெல்லாம் ஏறப் பெற்ற இந்தத் தேகத்தில் நான் அகப்பட்டுக் காற்றிற்பட்ட பஞ்சைப்போல் என்னுடைய நல்லறிவையெல்லாம் கொள்ளை கொடுத்து நாளேற நாளேற விருத்தாப்பியம் என்று சொல்லப்படுகின்ற சிநேக மானது மிகுதியாக அதனால் மனம் வருந்தி அதனாற் குருட்டுப் பன்றிபோல நான் இந்த உலகத்தில் அலைந்து திரிவேனோ! (எ-று) (7)

585. **பூதமொடு பழகிவள ரிந்திரிய மாம்பேய்கள்**
புந்திமுத லானபேங்கள்
போராடு கோபாதி ராட்சசப் பேய்களென்
போதத்தை யூடழித்து
வேதனை வளர்ந்திடச் சதுர்வேத வஞ்சன்
விதித்தானிவ் வல்லலெல்லாம்
வீழும் படிக்குனது மவுனமந் த்ராதிக்ய
வித்தையை வியந்தருள்வையோ
நாதவடி வாகிய மகாமந்த்ர ரூபியே
நாதாந்த வெட்ட வெளியே
நற்சமய மானபயிர் தழையவரு மேகமே
ஞானஆ னந்தமயிலே
வாதமிடு பர சமயம் யாவுக்கும் உணர்வரிய
மகிமைபெறு பெரியபொருளே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித் தமலை
வளர்காத லிப்பெண் உமையே.

(பொ-ரை) நாதரூபமாகிய மகாமந்திர சொரூபியே! நாதாந்தத்தின் முடிந்த பொருளே! நல்ல சமயங்களான பயிர்கள் தழைக்கும்படியாக வந்த திருவருள் மேகமே! ஞானானந்த மயிலே! தர்க்கஞ் செய்கின்ற அந்நிய சமயத்தார் களால் அறியப்படாத கீர்த்தியையுடைய பெரியவஸ்துவே! மலையரசனுக்கு இரண்டு கண்மணிபோலும் உதித்த கயிலாயமலையில் வாழ்கின்ற பெண்ணாகிய உமாதேவியே! பூதங்கள், இந்திரியங்கள், புந்திமுதலியவைகள், கோபம்

முதலியவைகள் ஆகிய இவைகளையெல்லாம் என்னுடைய அறிவைக் கெடுத்து வேதனையை அதிகப்படுத்த பிரம தேவனானவன் ஏற்படுத்தினான். ஆனால் நான் அந்தத் துன்பங்களிலெல்லாம் விழுந்து தவிக்காதாபடி உன்னுடைய மௌன மந்திரமாகிய வித்தையை எந்தக் காலத்தில் எனக்குச் சந்தோஷித்துத் திருவருள் செய்வாயோ? நான் அறியேன். (எ-று) (8)

அகிலாண்ட நாயகி

சந்தவிருத்தம்

586. **வட்ட மிட்டொளிர்பி ராண வாயுவெனு**
நிகள மோடுகம னஞ்செயும்
மனமெ னும்பெரிய மத்த யானையைஎன்
வசம டக்கிடின்மும் மண்டலந்
திட்ட முற்றவள ராச யோகமிவன்
யோக மென்ற றிஞர் புகழவே
ஏழை யேனுலகில் நீடு வாழ்வன்இனி
இங்கி தற்கும் அனு மானமோ
பட்ட வர்த்தனர் பராவு சக்ரதர
பாக்ய மானசுப யோகமும்
பார காவிய கவித்வ நான்மறை
பராய ணஞ்செய்மதி யூகமும்
அட்ட சித்தியு லன்ப ருக்கருள்
விருது கட்டியபொன் அன்னமே
அண்ட கோடிபுகழ் காவை வாழும் அகி
லாண்ட நாயகியென் அம்மையே.

(பொ-ரை) பட்டவர்த்தனர்களால் துதிசெய்யப் படுகின்ற சக்கராயுதத்தை யுடைய ஏகசக்கிராதிபதி யாயிருக்கத்தக்க சுபயோகத்தையும், பெரிய தமிழ்க் காப்பியங்களையெல்லாம் மொழி பெயர்க்கத் தகுந்த வித்தையையும், நான்கு வேதங்களையும் பாராயணஞ் செய்யத்தக்க புத்தி கூர்மையையும், அட்டமாசித்திகளையும், நல்ல அன்பர்களுக்குத் திருவருள் செய்வதாகத் துசங்கட்டிக் கொண்டிருக்கின்ற அன்னமே! சர்வ அண்டங்களிலுள்ளாராற் புகழப்பட்டு வருகின்ற காவை என்னும் நகரத்தில் வாழ்கின்ற அகிலாண்ட நாயகியே! எனக்குத் தாயே! பிராணவாயுவுடன் கூடிச் சம்பந்தப்பட்டு இயங்குகின்ற மனமென்று சொல்லப்பட்டு வருகின்ற மிக

மதங்கொண்ட யானையை நான் என் வசமாக்கிக் கொள்வேனானால், மூன்று மண்டலங்களிலும் பேர் பெற்றிரா நின்ற ராஜயோகத்தில் இவன் மிகவும் சிறந்தவனா வானென்று ஞானிகளெல்லாம் புகழும்படி இவ்வுலகத்தின் கண் நான் எக்காலமும் அழியாமல் வாழ்ந்திருப்பேன். இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. (எ-று)

நான் என்னுடைய மனத்தை என்வசமாக்கிக் கொள் வேனானாற் சர்வ சித்திகளும் எனக்குக் கைகூடும் என்பது கருத்து. *(1)*

பெரியநாயகி விருத்தம்

587. காற்றைப் பிடித்துமட் கரகத் தடைத்தபடி
கன்மப் புனற்குளூறுங்
கடைகெட்ட நவவாயில் பெற்றபசு மட்கலக்
காயத்துள் எனையிருத்திச்
சோற்றைச் சுமத்திநீ பந்தித்து வைக்கத்
துருத்திக்குள் மதுவென்னவே
துள்ளித் துடித்தென்ன பேறுபெற் றேன்அருள்
தோயநீ பாய்ச்சல்செய்து
நாற்றைப் பதித்ததென ஞானமாம் பயிரதனை
நாட்டிப் புலப்பட்டியும்
நாமனான தீப்பூடும் அணுகாமல் முன்னின்று
நாடுசிவ போகமான
பேற்றைப் பகுத்தருளி எனையாள வல்லையோ
பெரியஅகி லாண்டகோடி
பெற்றநா யகிபெரிய கயிலைமா நகர்மருவு
பெரியநா யகியம்மையே.

(பொ-ரை) மிகவும் பெரிய சர்வ அண்டங்களி லுள்ளவர்களை யெல்லாம் பெற்றெடுத்த தலைவியே! கயிலையென்னும் நகரத்தில் வாழ்கின்ற பெரியநாயகி என்னும் திருப்பெயரினையுடைய என் அம்மையே! காற்றைப் பிடித்து மட்பாண்டத்தில் அடைத்து வைத்தது போலக் கர்மபந்தத்திலூறிக் கொண்டிராநின்ற மட்கலம் போன்ற தேகத்திற்குள் என்னை விட்டு என் வயிற்றிற் சோற்றை யடைத்து வைக்க நான் அதனாற் புழுத்துடிப்பது போல் துடித்து வருந்துகின்றேனேயொழிய வேறென்ன லாபத்தை யடைந்தேன்? ஒன்றுமில்லையே. ஆகையால் நீ இனியேனும் உன்னுடைய திருவருளாகிய நீரைப்பாய்ச்சி அதில்

நாற்றுநட்டதுபோல ஞானம் என்கிற பயிரை நட்டு அதில் ஐம்புலன்களாகிய பறவைகள் அணுகாமலும், எமன் என்கிற கெட்டபூண்டு முளையாமலும் நீயே முன்னின்று காவல் செய்து அதில் விளையும் சிவபோகமென்று சொல்லப் படுகின்ற அமிர்தத்தை எனக்குப் பாகித்துக் கொடுத்து என்னை அடிமை கொள்ளாயோ? (அப்படி அடிமை கொள்ளாமல் விட்டு விடுவாயானால் நான் வேறு யாரிடத்தில் அடைக்கலமாவேன்.) (எ-று) (1)

தந்தை தாய்

588. தந்தைதாய் மகவுமனை வாழ்க்கை யாக்கை
சகமனைத்தும் மவுனியருள் தழைத்த போதே
இந்திரசா லங்கனவு கானல் நீராய்
இருந்ததுவே இவ்வியற்கை என்னே என்னே.

(பொ-ரை) மனமே! மௌனாசிரியனுடைய திருவருளானது மேலிட்டு என்னை விழுங்கிய காலத்தில் தந்தை, தாய், பிள்ளைகள், பெண்சாதி, வாழ்வு, தேகம், உலகம் ஆகிய யாவும் இந்திரசாலத்தையும், கனவிற் கண்ட காட்சியையும், கானற்சலத்தையும் ஒப்பாக விருந்தனவே. இவை இப்படியானமைக்குக் காரணம் என்னவோ? (எ-று)

திருவருள் ஞானம் கைகூடின் பந்தவசத்தா னமைந்த பொருள்களில்லை என்பது கருத்து. (1)

589. என்னைநான் கொடுக்கஒருப் பட்ட காலம்
யாதிருந்தென் எதுபோய்என் என்னை நீங்கா
அன்னைபோல் அருள்பொழியுங் கருணை வாரி
ஆனந்தப் பெருமுகிலே அரசே சொல்லாய்.

(பொ-ரை) என்னை எக்காலத்திலும் விட்டுப் பிரியாத தாயைப்போல் திருவருள் மாரியைப் பொழிகின்ற கிருபா சமுத்திரமான சுகத்தையுடைய பெரிய கருணைமுகிலே! என் தலைவனே! நான் என்னை உனக்குத் தத்தஞ் செய்ய மனத்திற் சம்மதங் கொண்டபோது எந்தப் பொருள் இருந்தாலும் என்ன லாபம்? எது இல்லாவிட்டாலும் என்ன நஷ்டம்! ஒன்றுமில்லை. அப்படி ஏதாயினும் இருக்கும் பட்சத்தில் தேவரீரே! சொல்லல் வேண்டும். (எ-று)

ஆசிரியன் சந்நிதியில் உடல், பொருள், ஆவிகளைத் தத்தஞ் செய்து திருவடி ஞானம்பெறும் அவசரத்தில்

முன்னர் தனக்குப் பந்திப்பாயிருந்த பொருள்களெல்லாம் இல்லாமையே யாய்விடும் என்பது கருத்து. *(2)*

590. அரசேநின் திருக்கருணை அல்லா தொன்றை
அறியாத சிறியேன் நான் அதனால் முத்திக்
கரைசேரும் படிக்குனருட் புணையைக் கூட்டுங்
கைப்பிடியே கடைப்பிடியாக் கருத்துட் கண்டேன்.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! உன்னுடைய திருவருளை மேலிட்டல்லாமல் யாதொன்றையும் அறியாத தன்மையையுடையவன் நான், ஆகையால் மோட்சமென்கிற கரையிற் சேரும்படி உன்னுடைய திருவருட் புணையை எனக்குக் கூட்டுவிக்கும் கைப்பிடியே உறுதிப்பிடியாகக் கொள்ளுவதாக நான் மனத்திற் றெளிந்தேன். (எ-று)

எல்லாம் உன்னை முன்னிட்டு நிற்பதால் என்னாலாவது ஒன்று மில்லை என்பது கருத்து. *(3)*

591. கண்டேனிங் கென்னையும்என் றனையும் நீங்காக்
கருணையும்நின் றன்னையும்நான் கண்டேன் கண்டேன்
விண்டேன்என் றெனைப்புறம்பாத் தள்ள வேண்டாம்
விண்டதுநின் அருட்களிப்பின் வியப்பா லன்றோ.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! இங்கே என்னையும், என்னை நீங்காத் திருவருளையும், அத்திருவருட்டாரகனாயிருக்கும் உன்னையும் நான் கண்டு கொண்டேன். பின்னர் சொல்லிவிட்டேன். அப்படி சொன்னது உன்னுடைய திருவருளினிடத்தில் வைத்த ஆனந்தக் களிப்பாலேயாம். ஆகையால் என்னை அப்படி காணப்பட்டவைகளைச் சொல்லிவிட்டானென்று வேறாகத் தள்ளிவிட வேண்டாம். *(4)*

592. ஓவென்ற சுத்தவெளி யொன்றே நின்றிங்
குயிரையெல்லாம் வம்மினென உவட்டா இன்பத்
தேவென்ற நீகலந்து கலந்து முத்தி
சேர்த்தனையேற் குறைவாமோ செகவி லாசம்.

(பொ-ரை) ஓவென்ற நாதமாத்திரமாய் விளங்காநின்ற சுத்தவெளி ஒன்று தானே நின்று இவ்விடத்தில் உயிர் களையெல்லாம் வாருங்கள்! வாருங்கள்!! என்று கூக்குரலிட்டுக் கூப்பிட்டுத் தெவிட்டாத சுகதெய்வம் என்று சொல்லப்படுகின்ற நீயே அந்தந்த உயிர்களிற் கலந்து கலந்து

அந்த உயிர்களை யெல்லாம் மோட்சத்திற் சேர்ப் பித்தா யானால் உன்னுடைய வியாபகத்திற்குக் குறைவாகுமோ? ஆகாது (எ-று) (5)

593. செகத்தையெல்லாம் அணுவளவுஞ் சிதறா வண்ணஞ்
சேர்த்தணுவில் வைப்பை அணுத் திரளை எல்லாம்
மகத்துவமாப் பிரமாண்ட மாகச் செய்யும்
வல்லவா நீநினைத்த வாறே எல்லாம்.

(பொ-ரை) இந்த உலகங்களையெல்லாம் கொஞ்சமும் சிதறிப் போகாதபடி அணுமாத்திரமாகச் செய்துவைப்பாய். அந்த அணுக்கூட்டங் களையெல்லாம் பிரமாண்டமாகவும் செய்து வைப்பாய். இப்படிப்பட்ட செய்கைகளிலெல்லாம் வலிமை யுடையானே! உலகத்திலுள்ள யாவும் நீ நினைத்தவாறே நடக்கின்றன. (ஆகையால் என்னையும் நின்னடிப் படுத்திக் கொள்ள வேண்டியவன் நீயேயாவாய்) (எ-று) (6)

594. சொல்லாலே வாய்துடிப்ப தல்லால் நெஞ்சந்
துடித்திருகண் நீரருவி சொரியத் தேம்பிக்
கல்லாலே இருந்தநெஞ்சுங் கல்லால் முக்கட்
கனியேநெக் குருகிடவுங் காண்பேன் கொல்லோ.

(பொ-ரை) கல்லால் மரத்தினடியில் எழுந்தருளியிருந்த திரிநேத்திரக் கனியே! சொற்களை எடுத்துப் பேசி வாயினாற் கதறினேனேயொழிய என் கண்களானவை நீர் சொரியும்படி தேம்பித் தேம்பி மனமிளகி நின்னுடைய திருவடிகளிற் பத்தி செலுத்தினேனோ? இல்லை. (எ-று)

அங்ஙனம் செலுத்தாமையாலன்றோ உன்னுடைய திருவருள் கிடைக்கவில்லை என்பது குறிப்பு. (7)

பெற்றவட்கே

எண்சீ ரடிப்பாக்கள் காய்-காய்-மா-மா

595. பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளை
பெறாப்பேதை யறிவானோ பேரா னந்தம்
உற்றவர்கே கண்ணீரகம் பலையுண் டாகும்
உறாதவரே கல்நெஞ்ச முடைய ராவார்.

(பொ-ரை) பிள்ளையைப் பெற்ற ஒருத்திக்குத் தான் அடைந்த கஷ்டத்தால் அந்தப்பிள்ளையின் அருமை தெரிய வருமே யொழிய, அப்பிள்ளை பெறாத மலடிக்குத்

தெரியுமோ? தெரியாது. அதுபோல பெரியசுகமானது உதயமானவர்களுக்கே கண்ணீரும், கம்பலையு முண்டாகும். அந்தச் சுகத்தை உதிக்கப் பெறாதவர்கள் யாரோ அவர்களே கல்போலும் மனத்தை யுடையவராவார். (எ-று)

மூடர்களுக்குச் சிவப்பேற்றின் அருமை தெரிய வராது என்பது கருத்து. *(1)*

596. ஆவாவென் றழுதுதொழுங் கைய ராகி
அப்பனே ஆனந்த அடிக ளேநீ
வாவாவென் றவர்கருளுங் கருணை எந்தாய்
வன்னெஞ்சர்க் கிரங்குவதெவ் வாறு நீயே.

(பொ-ரை) ஆ! ஆ!! என்று அன்பினால் மனங் கரைந்து அழுது அஞ்சலி அஸ்தமுடையவர்களாகி எனக்குத் தந்தையே! சுகக் கடவுளே! நீ வந்து எங்களுக்கு அருள் செய்ய வேண்டும் மல்லவோ என்று இரங்குபவர்களுக்குத் திருவருள் செய்கின்ற என் தலைவனே! கல்லைப்போலும் வலிமையுடைய மனத்தனுக்கு நீ எப்படி மனமிரங்கித் திருவருள் செய்வாயோ? நான் அறியேன். (எ-று)

அன்பர்களுக்கே சிவபெருமான் அருள் செய்வான் என்பது கருத்து. *(2)*

597. நீயேஇங் கெளியேற்குந் தாக மோக
நினைவூடே நின்றுணர்த்தி நிகழ்த்த லாலே
பேயேற்குந் தனக்கெனவோர் அன்பு முண்டோ
பெம்மானே இன்னமன்பு பெருகப் பாராய்.

(பொ-ரை) சிவபெருமானே! நீயே அடியேனாகிய எனக்கும், தாகத்தையும், அவாவையும் மென்மேலும் வைத்திராநின்ற மனத்துடனே கூடி நின்று அறிவுறுத்தலாற் பேயினை யொப்பானவனான எனக்கும் உன்னிடத்திற் செலுத்துவதான ஒப்பற்ற அன்பு இருக்கின்றதா? இல்லை. ஆகையாற் பெருமானே இனியேனும் என்னிடத்தில் அன்பானது பெருகும்! படி திருவருள் செய்தல் வேண்டும். (எ-று) *(3)*

598. பாராயோ என்துயரம் எல்லாம் ஐயா
பகருமுன்னே தெரியாதோ பாவியேன்முன்
வாராயோ இன்னமொரு காலா னாலும்
மலர்க்காலென் சென்னிமிசை வைத்தி டாயோ.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! நான் படுந்துயரத்தை யெல்லாம் நீ பார்க்கமாட்டாயோ? நான் எடுத்துச் சொல்லாமுன்னமே உனக்கே தெரியாதோ? பாவஞ் செய்தவனாகிய எனக்கு முன்னர் வெளிப்பட்டு வந்து தரிசனங் கொடுக்க மாட்டாயோ? இன்னும் ஒருதரமானாலும் உன்னுடைய மலர்போலும் திருவடிகளை என் சிரசின்மேல் வைக்க மாட்டாயோ? (எ-று)

சர்வவியாபக னாகையால் எல்லாம் அறியும் திறம் உண்டு என்பார், 'பகருமுன்னே தெரியாதோ? என்றார். (4)

599. வைத்திடுங்கா லைப்பிடித்துக் கண்ணின் மார்பில்
வைத்தணைக்குக் கொண்டுகையால் வளைத்துக்கட்டிச்
சித்தமிசைப் புகஇருத்திப் பிடித்துக் கொண்டு
தியக்கமற இன்பசுகஞ் சேர்வ தென்றோ.

(பொ-ரை) சிவபெருமானே! என் தலைமேல் வைத்துத் திருவடி தீட்சைசெய்யும் காலைக் கட்டிப் பலத்துடன் சேர்த்துப் பிடித்து என்னுடைய கண்ணிலும், மார்பிலும், வைத்து அணைத்துக் கொண்டு கையை வளைத்து அந்தக் காலைக் கட்டிக் கொண்டு என்மனத்தில் நுழைந்து அவ்விடத்தில் இருக்கச் செய்த மயக்கமற்று பேரானந்தச் சுகத்தைச் சேர்வது எந்தக் காலத்திலோ? (எ-று)

சிவபெருமானே! நீதிருவடி தீட்சை செய்யப் பெற்று அதனால் என் மகமாயைகளையெல்லாம் அறவே யொழித்துச் சுகித்திருப்பது எந்தக் காலத்தில் என்பது கருத்து. (3)

600. சேராமற் சிற்றினத்தைப் பிரிந்தெந் நாளுந்
திருவடிப்பே ரினத்துடனே சேரா வண்ணம்
ஆராக நான் அலைந்தேன் அரசே நீதான்
அறிந்திருந்தும் மாயையிலேன் அழுந்த வைத்தாய்.

(பொ-ரை) அரசனே! நான் சிறியர்களாகிய அஞ்ஞானிகளுடன் சேராதபடி என்னை வேறு பிரித்து உனது திருவடியை அடைந்தவர்களாகிய பெரிய அடியார்கள் கூட்டத்திற் சேராமல் அலைந்து திரிந்தேன். நீ என்னுடைய புத்தியை நன்றாயறிந்திருந்தும் என்னை மாயையில் அழுந்தும்படி வைத்தற்குக் காரணம் என்னவோ? அறியேன். (எ-று) (6)

601. வைத்தபொருள் உடலாவி மூன்றும் நின்கை
வசமெனவே யான்கொடுக்க வாங்கிக் கொண்டு
சித்தமிசைப் புகுந்ததுதான் மெய்யோ பொய்யோ
சிறியேற்கிங் குளவுரையாய் திகையா வண்ணம்.

(பொ-ரை) சிவபெருமானே! எனதாக வைத்த உடல், பொருள், ஆவி மூன்றினையும் உன்னுடைய கைவசமாக்கிக் கொடுக்க நீ அவைகளைக் கொண்டு என் மனத்திற் குடி கொண்டது மெய்ம்மையோ? பொய்ம்மையோ? தெரியாது, ஆகையால் நீயே நான் மயங்காதபடி அதனுடைய உண்மையையும் திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (7)

602. திகையாதோ எந்நாளும் பேரா னந்தத்
தெள்ளமுதம் உதவாமல் திவலை காட்டி
வகையாக அலக்கழித்தாய் உண்டு டுத்து
வாழ்ந்தேன்நான் இரண்டுகால் மாடு போலே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! நான் திகைப்படையாதபடி எக்காலத்தும் பேரின்பா மிர்தத்தை எனக்குக் கொடுக்காதபடி நீர்த் திவலையைக் காட்டி ஒருவழியாக என்னைக் கழித்து விட்டாய். ஆகையால் நான் இரண்டு கால்களையுடைய மாடு போல் உண்டு உடுத்துத் திரிந்தேனே யொழிய வேறொரு பிரயோசனத்தையும் அடைந்தேனில்லை. (எ-று) (8)

603. மாடுமக்கள் சிற்றிடையார் செம்பொன் ஆடை
வைத்தகன தனமேடை மாட கூடம்
வீடுமென்பால் தொடர்ச்சியோ இடைவி டாமல்
மிக்ககதி வீட ன்றோ விளங்கல் வேண்டும்.

(பொ-ரை) சிவபெருமானே! மாடு, பிள்ளைகள் பெண் சாதிகள், பொன்வஸ்திரம், இருப்பதாக வைத்த ஆஸ்தி, உப்பரிகை, முதலிய யாவும் என்னைத் தொடர்ந்திருக்கின்றனவோ? இல்லை, ஏனென்றால் எப்பொழுதும் மோட்சசாதனத்தின் பவமாகிய வீடு அல்லவோ தெளிவாக வேண்டும். (எ-று)

மோட்சமே துணையேயொழிய மற்றைய செல்வங்கள் துணையல்ல என்பது கருத்து. (9)

604. விளங்கவெனக் குள்ளுள்ளே விளங்கா நின்ற
வேதகமே போதகமே விமல வாழ்வே
களங்காகி தப்பொருளே யென்னை நீங்காக்
கண்ணுதலே நாதாந்தக் காட்சிப் பேறே.

(பொ-ரை) எனக்கு நன்றாக விளங்கும்படி என் மனத்தின் கண்ணே விளங்கா நின்ற வேதகமே! போதகமே! பரிசுத்த வாழ்வே! குற்றமற்ற வஸ்துவே! என்னை எக்காலத்தும் இடைவிட்டு நீங்காத நெற்றிக்கண்ணை யுடையானே! நாதத்தின் முடிவில் அறிவுடையோர்களால் அறியப்படும் காட்சி மாத்திரத்தின் பிரயோசனமே! நீயேயெனக்கு முன்னின்று திருவருள் செய்ய வேண்டும்.(எ-று)

நாதாந்த முடிவில் நடிக்கும் நீயே என்னைக் காப்பாற்ற வேண்டும் என்பது கருத்து. (10)

605. நாதமே நாதாந்த வெளியே சுத்த
ஞாதுருமே ஞானமே ஞேய மேநல்
வேதமே வேதமுடி வான மோன
வித்தேயிங் கென்னையினி விட்டி டாதே.

(பொ-ரை) நாதவஸ்துவே! நாதத்தின் அந்தத்தில் நடிக்கும் வெளியே! பரிசுத்தமான ஞாதுருவே! ஞானமே! ஞேயமே! நல்லவேதமே! வேதத்தின் முடிவான காரணமே! இவ்விடத்தில் என்னை இனியாயினும் கை சோரவிடாதபடி காப்பாற்ற வேண்டும். (எ-று)

சிவபெருமானே! கழிந்த நாள்போக இனியேனும் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்பது கருத்து. (11)

கல்லாலின்

606. கல்லாலின் நீழல் தனில் ஒருநால் வர்க்குங்
கடவுள்நீ உணர்த்துவதுங் கைகாட் டென்றால்
சொல்லாலே சொலப்படுமோ சொல்லுந் தன்மை
துரும்புபற்றிக் கடல்கடக்குந் துணிபே யன்றோ.

(பொ-ரை) கடவுளே! கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளி இருந்து ஜனகர் முதலிய நான்கு பேருக்கும் நீ அறிவுறுத்தினது கைக்குறியானால் அதுவாக்கினால் வசனிக்கப்படுவதோ? அன்று. அப்படிப்பட்ட அதனைச் சொல்லும் தன்மை எப்படியிருக்கின்றதென்றால் ஒரு துரும்பைக் கைப்பற்றிக் கொண்டு சமுத்திரத்தைக் கடந்து போகத் துணிந்திருப்பதை யொத்திருக் கின்றது. (எ-று)

கடவுள் செய்த சின்முத்திரோப தேசத்தை வாயிற் சொல்வது துரும்பைக் கொண்டு கடலைக் கடக்க நினைப்பதுபோல் இருக்கின்றது என்பது கருத்து. (1)

607. அன்றோஆ மோ எனவுஞ் சமய கோடி
அத்தனையும் வெவ்வேறாய் அரற்ற நேரே
நின்றாயே நினைப்பெறுமா றெவ்வா றாங்கே
நின்னருள் கொண் டறிவதல்லால் நெறிவே றுண்டோ.

(பொ-ரை) சிவபெருமானே! இதுவோ தெய்வம், அதுவோ தெய்வம், என்று சமயத்தார்களெல்லாம் பலபட முறையிட்டு வாதாடவும் நேராக நின்றாய். அப்படிப்பட்ட உன்னை நான் எப்படி அடைவேன்? உன்னருளாலே உன்னைக் காணப் பெறவேண்டுமே யல்லாமல் வேறில்லை. (எ-று)

அவனருளாலே யவன்றாள் வணங்கி என்னுந் திருவாசகத்திற் போல

அவனருளாலே அவனை அறியவேண்டும் என்பது கருத்து. (2)

608. நெறிபார்க்கின் நின்னையன்றி அகிலம் வேறோ
நிலநீர்தீக் கால்வானும் நீய லாத
குறியாதும் இல்லையென்றால் யாங்கள் வேறோ
கோதையொரு கூறுடையாய் கூறாய் கூறாய்.

(பொ-ரை) பார்வதியை இடது பாகத்திலுடையவனே! வழியைப் பார்க்குமிடத்தில் உன்னையல்லாமல் உலகம் வேறாயிருக்கின்றதோ? இல்லை. ஏனென்றால் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்தும் நீயல்லாமலில்லை யாகையால் நாங்களும் உன்னையல்லாமல் வேறாக மாட்டோம். ஆனால் நான் சொல்லும், இஃது உண்மையோ, பொய்யோ நீயே சொல்லியருளல் வேண்டும். (எ-று)

சர்வமும் நீயே யாகையால் நாங்களும் உன்னை யல்லாமலில்லை என்பது வெளியாகின்றது. ஆகையால் எங்களுக்குத் திருவருள் செய்வது உன்னுடைய கடைமையேயாகும் என்பது கருத்து. (3)

609. கூறாய் ஐம்பூதச் சுமையைத் தாங்கிக்
குணமிலா மனமெனும்பேய்க் குரங்கின் பின்னே
மாறாத கவலையுடன் சுழல என்னை
வைத்தனையே பரமேநின் மகிமை நன்றே.

(பொ-ரை) மேலான தெய்வமே! ஐம்பூதத்தாலாகிய இந்தச் சுமையைச் சுமந்து நற்புத்தியென்பதைக் கனவிலும்

இருக்கப் பெறாத மனம் என்னும், பேய்த் தன்மை வாய்ந்த குரங்குக்குப் பின்னே என்றும் நீங்காத துன்பத்துடன் சுழலும்படி என்னை நியமித்துரைத்தாயே இஃது உனக்கு மிகவும் நல்ல மகிமையாயிருக்கின்றது. (எ-று)

எனக்குத் தனுகரண, புவன போகங்களைக் கொடுத்து வருத்துகின்ற மகிமை உனக்கு நன்றாயிருக்கின்றது என்பது கருத்து. (4)

610. நன்றெனவுந் தீதெனவும் எனக்கிங் குண்டோ
நானாகி நீயிருந்த நியாயஞ் சற்றே
இன்றெனக்கு வெளியானால் எல்லாம் வல்ல
இறைவா நின் அடியருடன் இருந்து வாழ்வேன்.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! எனக்கு இது நல்லதென்றும், இது தீயதென்றும் இவ்விடத்திலில்லை, ஏனென்றால் நீ என்னிடத்திருந்த நியாயமானது எனக்குக் கொஞ்சம் வெளியாகும் பட்சத்தில் நான் உன்னுடைய திருத்தொண்டர்களுடன் கூடி வாழ்வேனாகையால். (எ-று) (5)

611. வாழ்வெனவுந் தாழ்வெனவும் இரண்டாப் பேசும்
வையகத்தார் கற்பனையாம் மயக்க மான
பாழ்வலையைக் கிழித்துதறிச் செயல்போய் வாழப்
பரமேநின் ஆனந்தப் பார்வை யெங்கே.

(பொ-ரை) மேலான தெய்வமே! இவ்வுலகத்தார்களால் வசனிக்கப்பட்டு வாரா நின்ற வாழ்வு, தாழ்வுகளாகிய இரண்டு கற்பனைகளையும் அறவே நீக்கிப் பேரானந்தத்தில் வாழ்வதற்காக உன்னுடைய திருக்கண்பார்வையை எனக்கு எந்தக் காலத்திற் கொடுப்பாயோ? (எ-று)

நான் பேரானந்தத்தில் வாழ்வதற்கு உன்னுடைய திருவருணோக்கம் வேண்டும் என்பது கருத்து. (6)

612. எங்கேயெங் அருளென் றெமையி ரந்தான்
ஏழையிவன் எனவுமெண்ணி யிச்சை கூரும்
அங்கேயங் கேயெளிவந் தென்னை ஆண்ட
ஆரமுதே உனைக்காண்பான் அலந்து போனேன்.

(பொ-ரை) அறிய அமிர்தமே! நீயும், உன்னுடைய திருவருளும் எங்கே! எங்கே!! என்று உன்னைத் தேடிய அறிவில்லாதவன் நானென்றுணர்ந்து நான் தேடிய

அந்தந்த விடத்தில் வெளிப்பட்டு வந்து என்னை அடிமை கொண்ட சிவபெருமானே! நான் அப்படியெல்லாம் உன்னைக் காணும்படி மிகவும் வருந்தினேன். (எ-று) (7)

613. போனநாட் கிரங்குவதே தொழிலா இங்ஙன்
பொருந்துநாள் அத்தனையும் போக்கி னேன்என்
ஞான நாயகனே நின்மோன ஞான
நாட்டமுற்று வாழ்ந்திருக்கும் நாளெந் நாளோ.

(பொ-ரை) இதுவரைக்கும் கழிந்த நாட்களுக்கு இரங்கி வருந்துவதே தொழிலாகக் கொண்டு நாட்களையெல்லாம் வீணாக்கிக் கொண்டேன். என்னுடைய ஞானத் தலைவனே! உன்னுடைய மோனஞானத்தை அடையும்படி அதில் நாட்டம் வைத்து வாழ்ந்திருப்பது எந்தக்காலத்திலோ? அறியேன் (எ-று) (8)

614. நாள்பட்ட கமலமென்ன இதயம் மேவும்
நறுந்தேனே துன்மார்க்க நாரி மார்கண்
வாள்பட்ட காயமிந்தக் காய மென்றோ
வன்கூற்றும் உயிர்பிடிக்க வருமந் நீதி.

(பொ-ரை) நாள்சென்ற தாமரைமலர் போன்ற என்னுடைய மனத்திற் குடி கொண்டிருக்கும் நல்ல தேனே! கொடிய செய்கைகளையுடைய பெண்கள் மாயையில் அடிப்பட்ட காயமாகுமென்றல்லவோ எமனானவன் இந்தத் தேகத்தைக் கொண்டுபோக வருகின்றான். இதுவே நீதியன்றோ? (எ-று) (9)

615. நீதியெங்கே மறையெங்கே மண்விண் எங்கே
நித்தியராம் அவர்களெங்கே நெறிதப் பாத
சாதியெங்கே ஒழுக்கமெங்கே யாங் ளெங்கே
தற்பரநீ பின்னுமொன்றைச் சமைப்ப தானால்.

(பொ-ரை) தத்பரவஸ்துவே! நீ யாதானுமொரு பொருளை எங்களுக்குக் கொடுப்பதாக இருந்தால், நியாயம், வேதங்கள், பூமி, ஆகாயம், நித்தியர், நன்மார்க்கத்தினின்றும் நீங்காத சாதி, ஒழுக்கம், நாங்கள் ஆகியயாவும் எவ்விடத்திற் சென்றனவோ? தெரியாது. (எ-று) (10)

616. ஆனாலும் யான்என திங் கற்ற எல்லை
அதுபோதும் அதுகதிதான் அல்ல வென்று
போனாலும் யான்போவன் அல்லால் மோனப்
புண்ணியனே வேறுமொரு பொருளை நாடேன்.

(பொ-ரை) மௌன ஞானப் புண்ணியனே! யான் என்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் அற்றவிடம் எதுவோ அதுவே மோட்சமாகையால் அது எனக்குப் போதும், இதுவே என் துணிவு. அதனால் எனக்கு மோட்சசாதனம் கூடாமற் போனாலும் போகட்டும். வேறொரு பொருளை மாத்திரம் நான் நாடிப் போக மாட்டோன். (எ-று) (11)

617. பொருளேநின் பூரணமே விட்ட காலம்
போக்குவர வுண்டோதற் போத முண்டோ
இருள்தானுண் டோஅல்லால் வெளிதான் உண்டோ
இன்பமுண்டோ துன்பமுண்டோ யாமங் குண்டோ.

(பொ-ரை) உண்மையான வஸ்துவே! உன்னுடைய வியாபகம் மேலிட்ட காலத்தில் இறப்பு, பிறப்பு, அகங்காரம், அஞ்ஞானம், ஞானம், இன்பம், துன்பம் ஆகிய யாவும் இல்லை. (எ-று)

உன் அருள் மேலிட்ட காலத்தில் எல்லாம் உன்னுடைய செயலாயிருத்தலால் எனக்கு ஒன்றும் சுதந்திரமில்லை என்பது கருத்து. (12)

618. உண்டோநீ படைத்தவுயிர்த் திரளில் என்போல்
ஒருபாவி தேகாதி உலகம் பொய்யாக்
கண்டேயும் எள்ளளவுத் துறவு மின்றிக்
காசினிக்குள் அலைந்தவரார் காட்டாய் தேவே.

(பொ-ரை) ஓ தெய்வமே! உன்னால் சிருட்டிக்கப்பட்ட இவ்வுலகத்திலுள்ள ஆன்மகோடிகளில் என்னைப் போன்ற கொடிய பாவியாராவது இருக்கின்றவர்களா? இல்லை. ஏனென்றால் உலகத்தைப் பொய் யென்றுணர்ந்து நல்ல துறவறத்தை அடையாமல் உலக வாஞ்சனையி லலைந்தேனாகையால், ஆனால் அப்படிப்பட்டவர் யாராவது இருந்தால் நீ காட்டி யருளல் வேண்டும். (எ-று) (13)

619. தேவரெலாந் தொழச்சிவந்த செந்தாள் முக்கட்
செங்கரும்பே மொழிக்குமொழி தித்திப் பாக
மூவர்சொலுந் தமிழ்கேட்குந் திருச்செ விக்கே
மூடனேன் புலம்பியசொல் முற்று மோதான்.

(பொ-ரை) தேவர்கள் வணங்கி நமஸ்காரஞ் செய்வதாற் செவக்கப் பெற்ற திருவடிகளையும் மூன்று கண்களை

யுமுடைய சிவபெருமானே! மொழிக்கு மொழி ருசியாகப் பாடப்பட்டிருக்கின்ற மூவர் தேவாரத் திருப்பதிகங்களைக் கேட்டருளிய செவிகள் மூடனான என்னுடைய பாட்டைக் கேட்குமோ? (எ-று) *(14)*

620. முற்றுமோ எனக்கினியா னந்த வாழ்வு
மூதறிவுக் கினியாய்நின் முளரித் தாளில்
பற்றுமோ சற்றுமில்லை ஐயோ ஐயோ
பாவிபடுங் கட்கலக்கம் பார்த்தி லாயோ.

(பொ-ரை) நல்ல ஞானிகளுக்கு இனிப்பைத் தருபவனே! எனக்கு இனியானாலும் சுகவாழ்வு கிடைக்குமா? ஆனால் உன்னுடைய திருவடிகளில் எனக்குக் கொஞ்சமும் அன்பில்லை. அந்தோ! பாவியாகிய நான் படும் வருத்தத்தை நீ அறிய மாட்டாயோ? (எ-று) *(15)*

621. பார்த்தனவெல் லாமழியும் அதனாற் சுட்டிப்
பாராதே பார்த்திருக்கப் பரமே மோன
மூர்த்திவடி வாயுணர்த்துங் கைகாட் டுண்மை
முற்றியென தல்லல்வினை முடிவ தென்றோ.

(பொ-ரை) கண்ணுக்குப் புலப்படுவதாயுள்ள பொருள் களெல்லாம் அழியத் தக்கனவாகுமென்று உணர்ந்து மேலான பரம்பொருளைப் பார்த்திருப்பதாகிய மேலான நிலையிற் பதிந்து அதனால் என்னுடைய துன்பங்களெல்லாம் எக்காலத்தில் ஒழியுமோ? (எ-று) *(16)*

622. என்றுளைநீ அன்றுளம்யாம் என்ப தென்னை
இதுநிற்க எல்லாந் தாம் இல்லை யென்றே
பொன்றிடச்செய் வல்லவன் நீ யெமைப் படைக்கும்
பொற்புடையாய் என்னின் அது பொருந்தி டாதே.

(பொ-ரை) நீ என்றைக்கு இருக்கின்றாயோ அன்றைக்கே நாமும் இருக்கின்றோம் என்பது நூற்றுணிபாயிருத்தலின் நீயே என்னை அழிப்பவனும், படைப்பவனுமென்பது பொருத்தமாமோ? ஆகாது (எ-று) *(17)*

623. பொருந்துசகம் அனைத்தினையும் பொய்பொய் யென்று
புகன்றபடி மெய்யென்றே போத ரூபத்
திருந்தபடி யென்றிருப்ப தன்றே யன்றோ
எம்பெருமான் யான்கவலை யெய்தாக் காலம்.

(பொ-ரை) எம்முடைய சிவபெருமானே! நான் துன்பத்தினின்றுங் நீங்குங் காலம் எதுவென்றால் உலகத்தைப் பொய்யாக்கி உன்னுடைய திருவடிகளை மெய்யாக நம்பி அமர்ந்திருக்குங் காலமல்லவோ? ஆம் அப்படிப்பட்ட காலம் எனக்கு எப்பொழுது கைகூடுமோ? தெரியாது. (எ-று) (18)

624. காலமே காலமொரு மூன்றுங் காட்டுங்
காரணமே காரணகா ரியங்கள் இல்லாக்
கோலமே எனைவாவா என்று கூவிக்
குறைவறநின் அருள்கொடுத்தாற் குறைவோ சொல்லாய்.

(பொ-ரை) காலமே! முக்காலங்களையும் விளக்கிக் கொண்டே வருகின்ற காரணமே! காரணகாரியங்கள் ஒன்று மில்லாத கோலமே! அடியேனான என்னை வா என்று அழைப்பாயானால் உன்னுடைய பரமகாருணிய விலாசத்திற்குக் குறைவு உண்டாகுமோ? தெரியவில்லை. (எ-று) (19)

625. சொல்லாய தொகுதியெல்லாங் கடந்த நின்ற
சொரூபானந் தச்சுடரே தொண்ட னேனைக்
கல்லாகப் படைத்தாலும் மெத்த நன்றே
கரணமூடன் நான்உறவு கலக்க மாட்டேன்.

(பொ-ரை) சொற்பிரபஞ்சத்திற் கட்டுப்படாமல் அதீதப்பட்டு நிற்கின்ற தேஜோமயமே! அடியேனான என்னைக் கல்லாகச் சிருஷ்டித்தாலும் சம்மதமேயாகும். ஏனென்றால் என்னுடைய உட்கரணங்களோடு சேர்ந்து வருந்தமாட்டேனாகையால். (எ-று) (20)

626. கலங்காத நெஞ்சுடைய ஞான தீரர்
கடவுளுனைக் காணவே காய மாதி
புலம்காணார் நானொருவன் ஞானம் பேசிப்
பொய்க்கூடு காத்ததென்ன புதுமை கண்டாய்.

(பொ-ரை) எக்காலத்தும் திறமான மனத்தையுடைய ஞானிகளெல்லாம் தேகத்தை ஒரு பொருளாக நினைக்க மாட்டார்கள். நானோ வாய் ஞானம் பேசி பொய்யாகிய இந்தத் தேகத்தைக் காத்துக் கொண்டிருக்கிறேன். (எ-று)

அங்ஙனமிருப்பதால் எனக்கு முத்திப்பேறு எளிதில் வருவதில்லை என்பது கருத்து. (21)

627. கண்டிலையோ யான்படும்பா டெல்லாம் மூன்று
கண்ணிருந்துந் தெரியாதோ கசிந்துள் ளன்பார்
தொண்டரடித் தொண்டனன்றோ கருணை நீங்காச்
சுத்தபரி பூரணமாஞ் சோதி நாதா.

(பொ-ரை) திருவருள் நீங்காத பரிபூரணனாயிருக்கின்ற தேஜோமயனே! நீ நான் படும் துன்பங்களையெல்லாம் பார்த்தாயில்லையோ? உனக்கு மூன்று கண்கள் இருக்கின்றன வாகையாற் பாராமலிருக்கமாட்டாய், நான் அடியார்களுக்கு அடியவனன்றோ. என்னைக் கைவிட வேண்டாம். (எ-று)(22)

628. சோதியாய் இருட்பிழம்பைச் சூறை யாடுந்
தூவெளியே எனைத்தொடர்ந்து தொடர்ந்தெந் நாளும்
வாதியா நின்றவினைப் பகையை வென்ற
வாழ்வேஇங் குனைப்பிரிந்து மயங்கு கின்றேன்.

(பொ-ரை) இருட் கூட்டங்களை யெல்லாம் தேஜோமயனாய்க் காணப்பட்டுத் துரத்தின வெளியே! என்னைப் பலகாலும் தொடர்ந்து வாதிக்கா நின்ற தீவினைகளையே ஜெயித்த வாழ்வே! நான் உன்னைப் பிரிந்து மயங்கா நிற்கின்றேன். (ஆகையால்) நீயே என்னுடன் சேர்ந்து அம்மயக்கத்தை நீக்கி யாண்டருளல் வேண்டும். (எ-று) (23)

629. மயக்குறுமென் மனமணுகாப் பாதை காட்டி
வல்வினையைப் பறித் தனையே வாழ்வே நானென்
செயக்கடவேன் செயலெல்லாம் நினதே என்று
செங்கைகுவிப் பேன் அல்லாற் செயல்வே றில்லை.

(பொ-ரை) மயக்கத்தையடைந்திருக்கின்ற என் மனமானது போவதற்குக் கூடாத வழியை எனக்குக் காட்டி என்னுடைய தீவினைகளைப் போக்கி ரட்சித்த வாழ்வே! நான் என்ன செய்ய வல்லேன். எல்லாம் உன்னுடைய செய்கைகளே யாகையால் நான் என்னுடைய கரங்களைக் குவித்து நமஸ்காரஞ் செய்வதற்கே யுரியவனேயொழிய வேறில்லை. (எ-று) (24)

630. வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா.

(பொ-ரை) வேறாக உள்ள சமயங்களிலெல்லாம் புகுந்து புகுந்து பார்க்குங் காலத்தில் எல்லாம் உன்னுடைய திருக்கூத்தே வெளிப்படுகின்றதே யொழிய வேறில்லை. ஆகையால் மௌனா சிரியனே! முடிவிற் சமுத்திரத் தினிடத்தில் ஆறுகளெல்லாம் ஒன்றாக வந்து கலப்பதை யொத்திருக்கின்றது. (எ-று)

சைவ சமயமானது எல்லாச் சமயங்களுக்கும் தாயகமாயிருப்பது என்பது கருத்து. மோன-அண்மைவிளி ஈறுகெட்டது. (25)

631. அம்மாஈ ததிசயந்தான் அன்றோ அன்றோ
அகண்டநிலை யாக்கிஎன்னை அறிவாம் வண்ணஞ்
சும்மாவே இருக்க வைத் தாய் ஐயோ ஆங்கே
சுகமயமாய் இருப்பதல்லாற் சொல்வான் என்னே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! என்னை அகண்ட நிலையாகச் செய்து அறிவுமயமாய் விளங்கும்படி வைத்துப் பின் மௌனமா யிருக்கும் படியும் வைத்தாய். அப்படி வைத்த அந்த விடத்திற் பார்த்தாலோ சும்மா விருப்பதே சகமாயிருக்கின்றதே யொழிய வேறில்லை. (எ-று) (26)

632. என்னேநான் பிறந்துழல வந்த வாறிங்
கெனக்கெனஓர் செயலிலையே ஏழை யேன்பால்
முன்னேசெய் வினையெனவும் பின்னே வந்து
மூளும்வினை யெனவும்வர முறையேன் எந்தாய்.

(பொ-ரை) என்னுடைய தந்தையே! நான் இவ்வுலகத்திற் பிறந்தது எற்றுக்கு! ஏனென்றால் முன்னே செய்த வினையெல்லாம் பின்னே வந்து சேரும் வினையெனவும் இப்படி எல்லாம் எனக்கு வந்து வினைகள் சேர்க்கின்றன வாகையால் எனக்கென்று ஒரு செய்கை சுதந்தரமாக இல்லையன்றோ? ஆகையால். (எ-று)

முன்னே செய்தவினை என்றது ஆணவத்தை, பின்னே மூளும் வினை என்றது, காமிய, மாயைகளை. (27)

633. தாயான தண்ணருளை நிரம்ப வைத்துத்
தமியேனைப் புரவாமல் தள்ளித் தள்ளிப்
போயான தென்கொல்ஐயா ஏக தேசம்
பூரணத்துக் குண்டோதான் புகலல் வேண்டும்.

(பொ-ரை) ஐயனே! திருவருட்டாயின் கிருபையை என்மேல் மிகவும் வைத்து அடியேனான என்னைத்

தள்ளிவிடுவது ஏனோ? தெரியவில்லை. ஆனாலும் சர்வவியாபகம் என்கிற தன்மைக்கு பட்சபாதமும் உண்டோ? நீயேதான் எனக்குத் திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (28)

634. புகலரிய நின்விளையாட் டென்னே எந்தாய்
புன்மையறி வுடையஎன்னைப் பொருளைப் பண்ணி
இகல்வினைக்கும் மலமாயை கன்மத் தூடே
இடரூறவுஞ் செய்தனையே இரக்க மீதோ.

(பொ-ரை) என்னுடைய தந்தையே! நான் அறிவில்லாதவனாக இருந்தாலும் என்னை ஒரு பொருளாக உருவகப்படுத்தி மலமாயா, கர்மங்களில் நுழைந்து வருத்தப்படச் செய்தாய். ஆகையால் உன்னுடைய திருவருள் விளையாட்டென்பதும், இரக்கம் என்பதும் இதுதானா? (எ-று) (29)

635. இரக்கமொடு பொறைஈதல் அறிவா சாரம்
இன்லேன் நான் நல்லோர்கள் ஈட்டங் கண்டால்
கரக்குமியல் புடையேன்பாழ் நெஞ்சம் எந்தாய்
கருத்தாதோ வல்லுருக்கோ கரிய கல்லோ.

(பொ-ரை) என்னுடைய தந்தையே! இரக்கம், பொறுமை, ஈதல், அறிவு, ஆகாரம், ஆகிய இவைகளிருக்கப் பெறாதவனும் நல்லவர்களுடைய கூட்டத்தைக் கண்டால் ஒளிக்குந் தன்மை யுடையவனுமாவேன். இவை களையெல்லாம் விளைக்கின்றது என்னுடைய மனமேயாகும். ஆகையால் அந்த மனமானது இரும்போ? எழுகோ? கருங்கல்லோ? தெரியாது. (எ-று) (30)

பராபரக் கண்ணி

636. சீராருந் தெய்வத் திருவருளாம் பூமிமுதல்
பாராதி யாண்ட பதியே பராபரமே.

(பொ-ரை) சிறப்புப் பொருந்திய தெய்வத் தன்மையோடு கூடிய திருவருளாகிய பூமி முதலாக வேறு பூமிகளையும் இரட்சித்த தலைவனே! பராபர வஸ்துவே! (எ-று)

ஒவ்வொரு கண்ணிகளின் பொருள் தோறும் பராபரவஸ்துவே! என்பதைக் கூட்டிக் கொள்க. (1)

637. கண்ணாரக் கண்டோர் கருப்பொருள்கா ணாமலருள்
விண்ணா டிருந்தஇன்ப வெற்பே பராபரமே.

(பொ-ரை) கண்களாற் காணப்பட்டவர்களுக்கு உண்மைப் பொருளைக் காட்டாமல் திருவருளாகிய சிதாகாயத்திற் கலந்திருக்க அருள்மலையே! (எ-று) *(2)*

638. சிந்தித்த எல்லாமென் சிந்தையறிந் தேயுதவ
வந்த கருணை மழையே பராபரமே.

(பொ-ரை) நான் நினைத்த எல்லாவற்றையும் என் மனமானது உணர்ந்து எனக்கு உதவும்படி வெளிப்பட்டு வந்த கிருபை மழையே! (எ-று) *(3)*

639. ஆரா அமுதே அரசேஆ னந்தவெள்ளப்
பேராறே மோனப் பெருக்கே பராபரமே.

(பொ-ரை) தெவிட்டாத அமிர்தமே! தலைவனே! சுகானந்தப் பிரவாகத்தையுடைய பெரிய நதியே! மௌனப் பிரவாகமே! (எ-று) *(4)*

640. ஆரறிவார் என்ன அனந்தமறை ஓலமிடும்
பேரறிவே இன்பப் பெருக்கே பராபரமே.

(பொ-ரை) யார் அறியப் போகிறார் என்று வேதங்களெல்லாம் கோஷித்துக் கொண்டு வாரா நின்ற பெரிய ஞானமயனே! சுகப்பிரவாகமே! (எ-று) *(5)*

641. உரையிறந்த அன்பருளத் தோங்கொளியா யோங்கிக்
கரையிறந்த இன்பக் கடலே பராபரமே.

(பொ-ரை) சொல்லிறந்த அடியார்களுடைய மனத்தின்கண் உயர்ந்த ஒளி ரூபமாயோங்கியும் கரையில்லாத சுகக் கடலாயுமுள்ளவனே! (எ-று) *(6)*

642. எத்திக்குந் தானாகி என்னிதயத் தேயூறித்
தித்திக்கும் ஆன ந்தத் தேனே பராபரமே.

(பொ-ரை) எந்தத் திக்கிற் பார்த்தாலும் தானேயாய் என்னுடைய மனத்திலும் கலந்து ருசிக்காநின்ற சுகத்தேனே! (எ-று) *(7)*

643. திக்கொடுகீழ் மேலுந் திருவருளாம் பொற்பறிந்தோர்
கைக்குள்வளர் நெல்லிக் கனியே பராபரமே.

(பொ-ரை) திசைகளிலும் கீழும், மேலும், திருவருளாகிய அழகை அறிந்த ஞானிகளுடைய கைகளுக்குள் வளர்ந்து கொண்டே வாரா நின்ற நெல்லிக்கனியே! (எ-று) *(8)*

644. முத்தே பவளமே மொய்த்தபசும் பொற்சுடரே
சித்தேஎன் னுள்ளத் தெளிவே பராபரமே.

(பொ-ரை) முத்துப் போன்றவனே! பவளம் போன்றவனே! தழைத்த பொன்னின் தேஜஸை ஒப்பானவனே! சித்தே! என் மனத்தின் தெளிவே! (எ-று) (9)

645. கண்ணே கருத்தேயென் கற்பகமே கண்ணிறைந்த
விண்ணே ஆனந்த வியப்பே பராபரமே.

(பொ-ரை) கண்ணே! கருத்தே! என்னுடைய கற்பகமே! கண்ணுக்குள் நிறைந்திருக்கின்ற விண்ணே! சுகத்தின் சந்தோஷமே! (எ-று) (10)

646. வாக்காய் மன தாய் மனவாக் கிறந்தவர்பால்
தாக்காதே தாக்குந் தனியே பராபரமே.

(பொ-ரை) வாக்காகவும், மனதாகவும் இருந்தே அந்த மனவாக் கிறந்தவர்களிடத்திற் கூடாமல் கூடி நடிக்கும் தனிப்பொருளே! (எ-று) (11)

647. பார்த்தவிட மெல்லாம் பரவெளியாய்த் தோன்றவொரு
வார்த்தை சொல்லவந்த மனுவே பராபரமே.

(பொ-ரை) நான் பார்த்தவிடங்களெல்லாம் மேலான சொரூபமாகத் தோன்றும்படியாக ஒரு மொழியை உபதேசிக்க வந்த ஞானாசிரியனே! (எ-று) (12)

648. வானந்த மண்ணினந்தம் வைத்துவைத்துப் பார்க்களனக்
கானந்தந் தந்த அரசே பராபரமே.

(பொ-ரை) ஆகாயத்தின் முடிவையும், பூமியின் முடிவையும் என் மனத்தில் வைத்துச் சிந்தித்துப் பார்த்து மகிழ என்னிடத்தில் ஆனந்தத்தை ஏவின தலைவனே! (எ-று) (13)

649. அன்பைப் பெருக்கிஎன தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே.

(பொ-ரை) எனக்கு ஆசையை விர்த்திக்கச் செய்து என்னுடைய அரிய உயிரைக் காக்கும் நிமித்தமே திருமேனி கொண்டெழுந் தருளி வந்த சுகவெள்ளமே! என்னுடைய தலைவனே! (எ-று)

அங்ஙனமே என்னைக் காப்பது உன்னுடைய கடமையேயாகும் என்பது குறிப்பு. (14)

**650. வானமெல் லாங்கொண்ட மவுனமணிப் பெட்டகத்துக்
கானபணி யான அணியே பராபரமே.**

(பொ-ரை) ஆகாயத்தை யெல்லாம் தன்னிடத்தில் அடக்கிக் கொண்டிரா நின்ற மௌனமென்று சொல்லப்படுகின்ற இரத்தினப்பெட்டியில் வைப்பதற் குரிய ஆபரணமே! (எ-று)

மௌன ஞானத்தால் அறியப்படுபவ னாகையால் மௌனத்தைப் பெட்டியாகவும் சிவனையே அதில் வைக்கும் ஆபரணமாகவும் கூறினார். *(15)*

**651. ஓடும் இருநிதியும் ஒன்றாகக் கண்டவர்கள்
நாடும் பொருளான நட்பே பராபரமே.**

(பொ-ரை) ஓட்டையும் இரண்டு நிதிகளையும் ஒன்றாக மதித்துணர்ந்த பெரியோர்கள் விரும்பியடையும்படியான நட்பே! (எ-று)

இருநிதி என்றது சங்கநிதி, பதுமநிதிகளை.

இது செல்வம், இஃது ஓடு என்று பகுத்தறியாமல் எல்லாம் ஒன்றே யென்று மதிப்போர் பெரியோர் களாகையால் அவர்களாற் காணப்படுவான் இறைவன் என்பார். இங்ஙனம் கூறினார். *(16)*

**652. சித்த நினைவுஞ் செயுஞ்செயலும் நீயெனவாழ்
உத்தமர்கட் கான உறவே பராபரமே.**

(பொ-ரை) மனத்தில் நினைக்கும் எண்ணமும், அவர்களாற் செய்யப்படும் செய்கையும் நீயேயாவாய் என்று அறிந்துணரும் ஞானிகளுக்குரிய உறவே! (எ-று)

சிவபெருமான் ஞானிகளிடத்திலே மிகுந்த நெருக்க மாக இருப்பான் என்பது கருத்து. *(17)*

**653. போதாந்தப் புண்ணியர்கள் போற்றிசய போற்றியெனும்
வேதாந்த வீட்டில் விளக்கே பராபரமே.**

(பொ-ரை) ஞானானந்தத்தையுடைய புண்ணிய வான்கள் போற்றி, போற்றியென்று நமஸ்கரிக்கும்படியாக இருக்கின்ற வேதாந்தமென்னும் வீட்டிலிட்ட விளக்கே! (எ-று)

வேதாந்திகளால் உணரப்படுபவன் இறைவன் என்பார் இங்ஙனம் கூறினார். *(18)*

654. முத்தாந்த வீதி முளரிதொழும் அன்பருக்கே
சித்தாந்த வீதிவருந் தேவே பராபரமே.

(பொ-ரை) முத்தியென்னும் மோட்சத்தின் அந்தமாகிய தெருவில் நடிக்கின்ற சிவபெருமானாகிய உன்னுடைய திருவடித் தாமரைகளை வணங்கும் அடியார்களுக்கே சித்தாந்த மென்னும் தெருவானது கிடைக்கும். (எ-று)

அப்படியிருப்பதால் எனக்கு அந்தப் பேறு கிடைக்காது என்பது கருத்து. *(19)*

655. ஈனந் தருமுடலம் என்னதுயான் என்பதற
ஆனந்தம் வேண்டி அலந்தேன் பராபரமே.

(பொ-ரை) குற்றத்தைத் தரா நின்று இந்த உடம்பைக் குறித்துயான் என்று மேலிடுகின்ற அகங்காரத்தை அறவே களைந்தெறிந்து சுகானந்தத்தை விரும்பி நான் மிகவும் வருந்தினேன். (எ-று)

சிவபெருமானே! நீ என்னுடைய வருத்தத்தைக் கண்டிருந்தும் இன்னும் அச்சுகத்தைத் திருவருள் செய்யாதிருப்பது எற்றுக்கு? என்பது குறிப்பு. *(20)*

656. என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்துகரைந்
தன்புருவாய் நிற்க அலந்தேன் பராபரமே.

(பொ-ரை) என் தேகத்தின்கண் வாய்ந்துள்ள எலும்புகள் உருகவும், மனங் களையவும், ஆனந்தம்மேலிட்டு அன்பே ஒரு திருமேனியாகக் கொண்டு அமர்ந்திருக்கும் பொருட்டு நான் மிகவும் வருந்தினேன். (எ-று) *(21)*

657. சுத்த அறிவாய்ச் சுகம்பொருந்தின் அல்லால்என்
சிந்தந் தெளியாதென் செய்வேன் பராபரமே.

(பொ-ரை) பரிசுத்தம் பொருந்திய ஞானமயமாகிச் சுகத்தை அடைந்தாலல்லாமல் என் மனமானது தெளிவையடையாது. (எ-று) *(22)*

658. மாறாஅ நுபூதி வாய்க்கின் அல்லால் என்மயக்கந்
தேறாதென் செய்வேன் சிவமே பராபரமே.

(பொ-ரை) எனக்கு எக்காலத்தும் நீங்காத சிவானுபூதி கிடைத்தாலல்லாமல் என்னுடைய மனமயக்கமானது தெளியாது. ஆகையால் இதற்கு நான் என்ன செய்ய வல்லேன்? (எ-று) *(23)*

659. தாகமறிந் தின்பநிட்டை தாராயேல் ஆகெடுவேன்
தேகம் விழுந்திடின்என் செய்வேன் பராபரமே.

(பொ-ரை) என்னுடைய விருப்பத்தை அறிந்து எனக்கு சுகத்தை அடையும்படியான நிட்டையை அருளிச் செய்யா விட்டால் ஆ! கெடுவேன். ஏனென்றால் என்னுடைய தேகமானது இறந்து படுமாகையால். (எ-று)

தேகம் நிலையில்லாததாகையால் அத்தேகம் உள்ளபொழுதே சுகநிட்டையை அருளல் வேண்டும் என்பது கருத்து. (24)

660. அப்பாஎன் எய்ப்பில் வைப்பே ஆற்றுகிலேன் போற்றிஎன்று
செப்புவதல் லால்வேறென் செய்வேன் பராபரமே.

(பொ-ரை) அப்பனே! மௌன நிதியே! என்று துதி செய்வேனேயொழிய வேறு என்ன செய்ய வலிமையை யுடையேன்? (எ-று)

ஆகையால் என் வருத்தத்தைக் கண்டு சீக்கிரம் அருள் செய்ய வேண்டும் என்பது கருத்து. (25)

661. உற்றறியும் என்னறிவும் உட்கருவி போற்சவிமாண்
டற்றும் இன்பந் தந்திலையே ஐயா பராபரமே.

(பொ-ரை) ஐயனே! பொருந்தி அறியத்தக்க என்னுடைய அறிவும் கருவிகள் கேட்டனபோலக் கேட்டும் இன்னும் எனக்குச் சுகத்தைத் தந்தாயில்லை. ஈதென்ன காரியமோ அறியேன். (எ-று) (26)

662. சொல்லால் அடங்காச் சுகக்கடலில் வாய்மடுக்கின்
அல்லால்என் தாகம் அறுமோ பராபரமே.

(பொ-ரை) வாக்கினால் இப்படிப்பட்டதென்று சொல்லக் கூடாத பேரானந்தக் கடலிற் கிடைக்கும் சிவாமிர்தத்தையுண்டு தாகந் தீர்த்தாலே யொழிய வேறு விதமாக என் தாகம் நீங்காது.

வேறு தெய்வங்களை நான் நமஸ்காரஞ் செய்யேன் என்பது கருத்து. (27)

663. பாரயோ என்னைமுகம் பார்த்தொருகால் என்கவலை
தீராயோ வாய்திறந்து செப்பாய் பராபரமே.

(பொ-ரை) சுவாமீ! என்னுடைய முகத்தை ஒருதரமானாலும் திரும்பிப் பார்த்து என்னுடைய

வருத்தத்தைத் தீர்க்க மாட்டாயா? நீயே எனக்குத் திருவருள் செய்ய வேண்டும். (எ-று) *(28)*

664. ஓயாதோ என்கவலை உள்ளேஆ னந்தவெள்ளம்
பாயாதோ ஐயா பகராய் பராபரமே.

(பொ-ரை) என் ஐயனே! என்னுடைய துன்பங்களெல்லாம் நீங்காவோ? அங்ஙனம் நீங்க என் மனதில் இன்ப வெள்ளமானது ஓடிப் பாயாதோ? இப்பொழுது பாயாவிட்டாலும் இன்னும் சில காலத்திற்குள்ளாயினும் பாயாதே? (எ-று) *(29)*

665. ஓகோ உனைப்பிரிந்தார் உள்ளங் கனலில்வைத்த
பாகோ மெழுகோ பகராய் பராபரமே.

(பொ-ரை) ஓ சுவாமீ! உன்னைப் பிரிந்தவர்களுடைய மனமானது நெருப்பிற்குக் கட்டப்பட்ட சர்க்கரைப் பாகோ? மெழுகோ? யாதென்றும் தெரியவில்லை, ஆகையால் அஃது இன்னதென்று நீயே அறிவிக்க வேண்டும். (எ-று) *(30)*

666. கூர்த்தஅறி வத்தனையுங் கொள்ளைகொடுத் துன்னருளைப்
பார்த்தவன்நான் என்னைமுகம் பாராய் பராபரமே.

(பொ-ரை) என்னுடைய அறிவு முழுமையும் உன் கையிற் கொள்ளையாகக் கொடுத்துவிட்டு உன்னுடைய திருவருளை எதிர்பார்த்து இருக்கின்றவன் நானாவேன். ஆகையால் நீ என்னுடைய முகத்தைத் திரும்பிப் பார்க்கவேண்டும். (எ-று) *(31)*

667. கடலமுதே தேனேயென் கண்ணே கவலைப்
படமுடியா தென்னைமுகம் பார்நீ பராபரமே.

(பொ-ரை) சமுத்திரத்தினிடத்திலிருக்கும் அமுதம் போன்றவனே! தேன் போன்றவனே! என்னுடைய கண்ணின் பார்வை யொப்பானே! என்னால் யாதொரு வருத்தத்தையும் அநுபவிக்க இனி முடியாது. ஆகையால் நீ சற்றாயினும் என்னுடைய முகத்தைத் திரும்பிப்பார்க்கவேண்டும். (எ-று) (32)

668. உள்ள மறிவாய் உழப்பறிவாய் நான்ஏழை
தள்ளிவிடின் மெத்தத் தவிப்பேன் பராபரமே.

(பொ-ரை) கடவுளே! நீ என்னுடைய மனம் இப்படிப்பட்ட தென்று தெரிந்து கொண்டிருக்கிறாய். அல்லாமலும் நான் பட்ட பாடுகளையும் அறிந்து

கொண்டிருக்கிறாய். இப்படியிருந்தும் என்னை உனது திருவடிகளில் சேர்த்துக் கொள்ளாமல் தள்ளிவிட்டால் நான் வேறொரு திக்குமில்லைாமையால் மிகவும் வருத்தத்தை அநுபவிப்பேன். (எ-று)

ஆகையால் இவைகளையெல்லாம் தீர்க்காலோசனை செய்து என்னைத் தள்ளிவிடாமல் திருவருள் செய்ய வேண்டும் என்பது கருத்து. *(33)*

669. கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போலஎனக்
கென்றிரங்கு வாய்கருணை எந்தாய் பராபரமே.

(பொ-ரை) என்னுடைய தந்தையே! தான் பெற்ற கன்றுக் குட்டியை இழந்த தாயானபசு மனம் வருந்துவதைப் போல நீபெற்ற பிள்ளையாகிய என்னைக் குறித்து நீ எக்காலத்தில் மனமிரங்குவாயோ? நான் அறியேன். (எ-று) *(34)*

670. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினிப் போதும் பராபரமே.

(பொ-ரை) பராபரவஸ்துவே! நான் எண்ணாத எண்ணங்களையெல்லாம் என்னுடைய மனத்தினிடத்தில் எண்ணி எண்ணி அந்த மனத்தைப் புண்ணாகச் செய்து விட்டேன். இதுவரைக்கும் புண்படுத்தினது போதும். (எ-று)

இனியாயினும் திருவருள் செய்யவேண்டும் என்பது கருத்து. *(35)*

671. ஆழித் துரும்பெனவே அங்குமிங்கும் உன்னடிமை
பாழில் திரிவதென்ன பாவம் பராபரமே.

(பொ-ரை) சமுத்திரத்திலகப்பட்ட ஒரு சிறு துரும்பானது அங்கும் இங்குமாக அலைவது போல உன்னடியவனான நானும் பலவகைப்பட்ட பாழ், மாயையிலகப்பட்டுத் திரிவது என்ன பாவமோ? தெரியவில்லை. (எ-று) *(36)*

672. கற்ற அறி வால்உனைநான் கண்டவன்போற்
கூத்தாடில்
குற்றமென் றென்நெஞ்சே கொதிக்கும் பராபரமே.

(பொ-ரை) நான் கற்றுக் கொண்ட நூல்களின் தேர்ச்சியால் உன்னைத் தரிசித்தவன் போற் கூத்தாடின அது குற்றமாகுமென்று என் மனமே கொதிக்காது நிற்கும். (எ-று)

என் குற்றத்தை என் மனமே அறிந்திருக்கின்றது என்பது கருத்து. *(37)*

673. ஐயோ உனைக்காண்பான் ஆசைகொண்ட தத்தனையும்
பொய்யோ வெளியாப் புகலாய் பராபரமே.

(பொ-ரை) கடவுளே! நான் உன்னைத் தரிசித்து மோட்சத்தை யடைவதற்காக ஆசை வைத்திருந்ததெல்லாம் பொய்யோ! அன்று அப்படி பொய்யாயிருந்தால் நீயே எனக்கு வெளிப்படுத்த வேண்டும். (எ-று) *(38)*

674. துன்பக்கண் ணீரில் துளைந் தேற்குன் ஆனந்த
இன்பக்கண் ணீர்வருவ தெந்நாள் பராபரமே.

(பொ-ரை) துன்பத்தாற் கண்ணீர் சிந்தி அதில் தவித்திருக்கின்ற எனக்கு உன்னை அடைவதினால் உண்டாவதான சுகானந்தக் கண்ணீர் வருவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(39)*

675. வஞ்சனையும் பொய்யும்உள்ளே வைத்தழுக்கா றாயுளறும்
நெஞ்சனுக்கும் உண்டோ நெறிதான் பராபரமே.

(பொ-ரை) கடவுளே! வஞ்சனை, பொய், பொறாமை, இவைகளோடு கூடிய மனத்தையுடைய எனக்கும் உன்னுடைய திருவருள் நெறியானது கிடைக்குமோ? (எ-று) *(40)*

676. பாசம்போய் நின்றவர்போற் பாராட்டி யானாலும்
மோசம்போ னேன்நான் முறையோ பராபரமே.

(பொ-ரை) பாச பந்தத்தை அறவே நீக்கியிருக்கின்ற ஞானிகளைப் போல் நான் நடித்து அதனால் அகங்காரம் மேலிட்டு மோசம் போனேன். (எ-று)

"மோசம் போனேன்" என்றது திருவருள் ஞானத்தை இழந்தேனென்று. *(41)*

677. நன்றறியேன் தீ தறியேன் நானென்று நின்றவானார்
என்றறியேன் நான்ஏழை என்னே பராபரமே.

(பொ-ரை) நானோ, இது நன்மையென்றும், இது தீமையென்றும், அறிந்தவனல்லேன். இந்தத் தேகத்தினுள் நான், நான் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றவன் யாவனென்றும் அறிந்தேனில்லை. ஆகையால் நான்

இப்படிப்பட்ட அறிவீனனாய் விட்டமைக்குக் காரணமென்னவோ? அறியேன். (எ-று) *(42)*

**678. இன்று புதிதன்றே எளியேன் படுந்துயரம்
ஒன்றும் அறியாயோ உரையாய் பராபரமே.**

(பொ-ரை) கடவுளே! நான்படுந் துன்பமானது இன்றைக்குத் தான் புதிதா? அல்லவே. அப்படியிருந்தும் சர்வவியாபகனா இருக்கின்ற நீ அதை அறியாமைக்குக் காரணமென்ன? (எ-று) *(43)*

**679. எத்தனை தான் சன்மமெடுத் தெத்தனை நான் பட்டதுயர்
அத்தனையும் நீயறிந்த தன்றோ பராபரமே.**

(பொ-ரை) கடவுளே! நான் எவ்வளவு சன்மம் எடுத்தேன்? அந்தந்தச் சன்மங்களில் எவ்வளவு துன்பத்தை அடைந்தேன்? இப்படியிருந்தால் அவைகளெல்லாம் உனக்குத் தெரியாவோ? எல்லாம் தெரியும். ஆனாலும் இன்னும் பரிபாகியாகவில்லையென்று அருள் செய்யவில்லையென்று நினைக்கிறேன். (எ-று) *(44)*

**680. இந்தநாட் சற்றும் இரங்கிலையேற் காலன்வரும்
அந்தநாட் காக்கவல்லார் ஆர்காண் பராபரமே.**

(பொ-ரை) இந்தக்காலத்தில் என்மேல் கருணை வைத்துக் காப்பாற்றாமல் விட்டுவிடுவாயானால் எமன் வருகின்ற அந்த நாளில் யாவர் காப்பாற்றுவார்? (எ-று) *(45)*

**681. உற்றுற்று நாடி உளம்மருண்ட பாவியைநீ
சற்றிரங்கி ஆளத் தகாதோ பராபரமே.**

(பொ-ரை) பார்த்துப் பார்த்து மனம் திகைப்படைந்த பாவியாகிய என்னை நீயே கொஞ்சம் மனமிரங்கித் திருவருள் செய்யத் தகாதோ? (எ-று) *(46)*

**682. எள்ளளவும் நின்னைவிட இல்லா எனைமயக்கில்
தள்ளுதலால் என்ன பலன் சாற்றாய் பராபரமே.**

(பொ-ரை) சற்றேனும் உன்னை மறவாமற் பிடித்துக் கொண்டிருக் கின்ற என்னை மாயையிற் றள்ளுவதனால் உனக்கென்ன பிரயோசனம்? அதை எனக்கு நீயே திருவருள் செய்ய வேண்டும். (எ-று) *(47)*

683. பாடிப் படித்துலகிற் பாராட்டி நிற்பதற்கோ
தேடி யெனையடிமை சேர்த்தாய் பராபரமே.

(பொ-ரை) உலகத்தில் என்னைத் தேடி அடிமையாக்கிக் கொண்டது பாடியும், படித்தும், பாராட்டியும் வருந்தி இருப்பதற்குத் தானா? (எ-று) *(48)*

684. சொன்னதைச் சொல்வதல்லாற் சொல்லறவென் சொல்லிறுதிக்
கென்னத்தைச் சொல்வேன் எளியேன் பராபரமே.

(பொ-ரை) எளியவனான நான் சொன்னதைச் சொல்வேனேயல்லாமல் வேறு என்னுடைய அறிவைக் கொண்டு ஒரு உறுதி சொல்ல வழியறியேன்? (எ-று) *(49)*

685. சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலுமெனக் காசை பராபரமே.

(பொ-ரை) கடவுளே! சொல்லும், பொருளும் அற்றுமௌன நிலையை அடைந்திருப்பதற்கே எனக்கு இரவும் பகலும் ஆசையாயிருக்கின்றது. (எ-று) *(50)*

686. நேச நிருவிகற்ப நிட்டையல்லால் உன்னடிமைக்
காசையுண்டோ நீயறியா தன்றே பராபரமே.

(பொ-ரை) உன்னுடைய அடியவனான எனக்கு நிருவி கற்ப நிட்டையில் ஆசையேயல்லாமல் வேறெதனில் ஆசை இருக்கின்றது? இஃது உனக்குத் தெரியாததோ? (எ-று) *(51)*

687. துச்சனென வேண்டாம்இத் தொல்லுலகில் அல்லல்கண்டால்
அச்சம் மிகவுடையேன் ஐயா பராபரமே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! இந்த உலகத்திற் படுந்துன்பங் களை நான் கண்டால் மிகவும் அச்சமுடைய வனாயிருக்கின்றேன். ஆகையால் அப்படிப்பட்ட என்னைத் தள்ளிவிட வேண்டாம். (எ-று)

துச்சன்= அற்பன். *(52)*

688. கண்ணாவா ரேனும்உனைக் கைகுவியா ராயின் அந்த
மண்ணாவார் நட்பை மதியேன் பராபரமே.

(பொ-ரை) எனக்குக் கண்ணானவர்களாக இருந்தாலும் அவர்கள் உன்னை நமஸ்காரஞ் செய்யாமற் போவார்

களானால் அவர்களுடைய சிநேகத்தை நான் மதிக்க மாட்டேன். (எ-று) *(53)*

689. கொல்லா விரதங் குவலயமெல் லாம்ஓங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே.

(பொ-ரை) உலகத்தினிடத்திற் கொல்லாமையாகிய விரதம் விர்த்தி யாகும்படியே எல்லார்க்குஞ் சொல்லித் திரிவதே எனக்கு இஷ்டமாயிருக் கின்றது. (எ-று)

அந்த எண்ணத்தை நீ எனக்கு முடிப்பிக்க வேண்டும் என்பது குறிப்பு. *(54)*

690. எத்தாற் பிழைப்பேனோ எந்தையே நின்னருட்கே
பித்தானேன் மெத்தவுநான் பேதை பராபரமே.

(பொ-ரை) என்னுடைய பிதாவே! ஏழையாகிய நான் உன்னுடைய திருவடிகளி னிடத்திலேயே பித்தாய்விட்டேன். ஆகையால் நான் எந்த மார்க்கத்தாற் பிழைப்பேன்? (எ-று) *(55)*

691. வாயினாற் பேசா மவுனத்தை வைத்திருந்துந்
தாயிலார் போல்நான் தளர்ந்தேன் பராபரமே.

(பொ-ரை) வாக்கற்ற மௌனஞானத்தையே எனக்கொரு பெரும் பொருளாக வைத்திருந்தும் தாயில்லாக் குழந்தைகள் போல் நான் தளர்ச்சி அடைந்தேன். (எ-று)(56)

692. அன்னையிலாச் சேய்போல் அலக்கணுற்றேன் கண்ணார
என்னகத்தில் தாய்போல் இருக்கும் பராபரமே.

(பொ-ரை) என்னுடைய மனத்தின்கண் தாய் போலிருக்கின்ற பராபரவஸ்துவே! நான் தாயில்லாக் குழந்தையோல் வருத்தத்தை அடைந் தேன். (எ-று) *(57)*

693. உற்றுநினைக் கில்துயரம் உள்ளுள்ளே செந்தீயாய்ப்
பற்றநொந்தேன் என்னைமுகம் பார்நீ பராபரமே.

(பொ-ரை) பராபரவஸ்துவே! நெருங்கி நினைத்துப் பார்க்குமிடத்தில் என்னுடைய துயரமானது மனத்தைப்பற்றி எரிக்கின்ற படியால் நான் மிகவும் துன்பத்தை அடைந்தேன். (எ-று) *(58)*

694. பொய்யன்இவன் என்றுமெள்ளப் போதிப்பார் சொற்கேட்டுக்
கைவிடவும் வேண்டாமென் கண்ணே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய கண்மணி போன்றவனே! இவன் பொய்யனாயிற்றே. இவனுக்குந் திருவருள் செய்ய லாமா என்று உனக்குப் போதிக்கின்றவர்களுடைய சொல் லைக் கேட்டு என்னைக் கைவிட்டு விடாதை. (எ-று) (59)

695. எண்ண மறிந்தே இளைப்பறிந்தே ஏழைஉய்யும்
வண்ணத் திருக்கருணை வையாய் பராபரமே.

(பொ-ரை) பராபரவஸ்துவே! என்னுடைய எண்ணத்தையும், வருத்தத்தையும் நீ யுணர்ந்து நான் பிழைக்கும்படியாக என்மேற் கிருபாகடாட்ச வீட்சண்யம் வைத்தருளல்வேண்டும். (எ-று) (60)

696. நாட்டாதே யென்னையொன்றில் நாட்டி யிதமகிதங்
காட்டாதே யெல்லாம்நீ கண்டாய் பராபரமே.

(பொ-ரை) சர்வவியாபகன் நீயாகையால் எல்லாமும் நீயேயாயி ருக்கிறாய். அப்படியிருப்பதால் என்னை எதனிடத்திலும் நாட்டமாக வையாமலும் எதிலும் கூட்டாமலும் திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (61)

697. உன்னைநினைந் துன்நிறைவின் உள்ளே உலாவும்என்னை
அன்னைவயிற் றின்னம்அடைக்காதே பராபரமே.

(பொ-ரை) பராபரவஸ்துவே! சதா உன்னையே சிந்தித்து உன்னுடைய சர்வவியாபகத்துக்குள்ளிருந்து வாசஞ் செய்கின்ற என்னை இன்னும் பிறவாதபடி காத்து இரட்சிக்கவேண்டும். (எ-று) (62)

698. பரமுனக்கென் றெண்ணும் பழக்கமே மாறா
வரமெனக்குத் தந்தருள்என் வாழ்வே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய வாழ்க்கைக்கு ஆதாரப் பொருளாயுள்ளவனே! நீயே பரம்பொருளாவாய் என்று நினைக்கின்ற எண்ணமானது எக்காலமும் என்னை விட்டு நீங்காமலிருக்கும் படி திருவருள் செய்யவேண்டும். (எ-று) (63)

699. வந்தித்து நின்னை மறாவாக் கடனாகச்
சிந்திக்க நின்னதருள் செய்யாய் பராபரமே.

(பொ-ரை) பராபரவஸ்துவே! உன்னைத் துதி செய்து மறவாமலிருக்கும் படியான சிந்தனையும் எனக்கு எக்காலமும் நீங்காமலிருக்கும்படி கிருபைசெய்ய வேண்டும். (எ-று) (64)

700. எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே.

(பொ-ரை) பராபரவஸ்துவே! பரவுயிர்களையும் என்னுயிரைப் போல் நினைத்து அந்த உயிர்களுக்கு ஒரு கெடுதியையும் செய்யாமலிருக்கும்படி உன்னுடைய திருவருளை எனக்குத் தந்தருளல் வேண்டும். (எ-று) (65)

701. வெட்டவெளிப் பேதையன்யான் வேறுகப டொன்றறியேன்
சிட்டருடன் சேர் அனந்த தெண்டன் பராபரமே.

(பொ-ரை) பராபரவஸ்துவே! வெட்டவெளியான அறிவில்லாதவன் நான் ஆகையால் வேறு எவ்வித வஞ்சகமும் என்னிடத்தில் இல்லை. இப்படியிருப்பதால் நீயே என்னை மேலான தவசிரேஷ்டர்களுடன் சேர்த்தருளல் வேண்டும். (எ-று) (66)

702. இரவுபக லற்றவிடக் தேகாந்த யோகம்
வரவுந் திருக்கருணை வையாய் பராபரமே.

(பொ-ரை) பராபரவஸ்துவே! இரவென்பதும், பகலென்பதும் அறவே யொழிந்த மௌனமாகிய இடத்தில் நான் வந்து சேரும்படி திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (67)

703. மால்காட்டிச் சிந்தை மயங்காமல் நின்றுசுகக்
கால்காட்டி வாங்காதே கண்டாய் பராபரமே.

(பொ-ரை) எனக்கொரு மயக்கத்தைக் கொடுத்து அதனால் நான் மயங்காமலிருக்க அதன்மேல் சுகானந்தக் காலைக் காட்டிப் பிறகு மறைய வேண்டாம். (எ-று)

அப்படி மறைந்து விடுவாயானால் நான் உஜ்ஜீவிப்பது எப்படி? என்பது குறிப்பு. (68)

704. எப்பொருளும் நீயெனவே எண்ணிநான் தோன்றாத
வைப்பைஅழி யாநிலையா வையாய் பராபரமே.

(பொ-ரை) எந்தப் பொருளையும் நீயேயாகக் கொண்டு நானென்றும் ஒரு பொருளானது அகங்கரித்து வெளிப்படாத ஒரு மௌன இடத்தையே எனக்கொரு அழியாத நிலையாக வைத்தருளல் வேண்டும். (எ-று) (69)

705. சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரணமென்
றெம்மா லறிதற் கெளிதோ பராபரமே.

(பொ-ரை) சும்மாவிருக்கும் மௌன ஞானமே சுட்டியறிதலற்ற பரிபூரணமென்று எங்களால் அறிவதற்கு இலேசாகுமா? (எ-று) *(70)*

706. முன்னொடுபின் பக்கம் முடியடிநாப் பண்ணறநின்
தன்னொடுநான் நிற்பதென்றோ சாற்றாய் பராபரமே.

(பொ-ரை) பராபரவஸ்துவே! முன், பின், பக்கம், முடி, அடி, நடு ஆகிய யாவும் ஒழிந்து உன்னோடு நான் கலந்திருப்பது என்றைக்கோ? அதை நீயே எனக்கு அறிவுறுத்தல் வேண்டும். (எ-று) *(71)*

707. மைவண்ணந் தீர்ந்த மவுனிசொன்ன தெவ்வண்ணம்
அவ்வண்ணம் நிட்டை அருளாய் பராபரமே.

(பொ-ரை) குற்றமற்ற என்னுடைய மௌன குருவானவர் எனக்கு உபதேசித்தது எப்படியோ அப்படியே அந்த நிட்டை எனக்குக் கைகூடும்படி நீயே திருவருள் செய்ய வேண்டும். (எ-று) *(72)*

708. வித்தன்றி யாதும் விளைவதுண்டோ நின்னருளாஞ்
சித்தன்றி யாங்களுண்டோ செப்பாய் பராபரமே.

(பொ-ரை) பராபரவஸ்துவே! விதையில்லாமல் யாதொரு பொருளும் உண்டாகாவாறு போல சித்தாகிய உன்னருளில்லாமற் போனால் நாங்களு மில்லை. (எ-று) (73)

709. ஆங்கார மற்றுன் அறிவான அன்பருக்கே
தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே.

(பொ-ரை) அகங்காரத்தை ஒழியப் பெற்று அறிவுமயமாயமர்ந் திருக்கும் அன்பர்களுக்கே நீ தூங்காத தூக்கத்தைத் தூங்கச் செய்வாயன்றோ? (எ-று)

அப்படிப்பட்ட தூக்கத்தை அந்த அன்பில்லாத எனக்குத் திருவருள் செய்ய வேண்டும் என்பது கருத்து. (74)

710. சிந்தை அவிழ்ந்தவிழ்ந்து சின்மயமா நின்னடிக்கே
வந்தவர்க்கே இன்பநிலை வாய்க்கும் பராபரமே.

(பொ-ரை) மனங் கரைந்து ஞானமயமாகிய உன்னுடைய திருவடிகளிற் கலந்திருக்கும் அடியார்களுக்கே சுகநிலையானது கைகூடும். (எ-று)

இப்படியிருப்பதால் எனக்குக் கைகூடாதென்பது வெளியாகின்றது என்பது குறிப்பு. *(75)*

711. சொல்லாடா வூமரைப்போற் சொல்லிறந்து நீயாகின்
அல்லால் எனக்குமுத்தி ஆமோ பராபரமே.

(பொ-ரை) பேச்சில்லாத ஊமைகளைப் போல் நான் நீ யானாலே யொழிய வேறுவிதத்தால் எனக்கு மோட்சம் கைகூடாது. (எ-று) (76)

712. பேச்சாகா மோனம் பிறவா முளைத் தென்றற்
காச்சாச்சு மேற்பயனுண் டாமோ பராபரமே.

(பொ-ரை) மௌன நிலையானது வெளிப்பட்டு என்னிடத்தில் வந்த தென்பதற்கு ஞாயமாயிற்று. ஆனால் எனக்கு அதனாலுண்டாகும் பயன் கிடைக்குமோ? கிடையாதோ? (எ-று) (77)

713. கெட்டியென்றுன் அன்பர்மலங் கெட்டயர்ந்தோர் பூரணமாந்
தொட்டிலுக்குட் சேய்போல் துயின்றார் பராபரமே.

(பொ-ரை) மிகவும் வலிமையுடையதென்று சொல்லப் படுகின்ற மும்மலங்களைக் கொடுத்து மேலான அன்பர்கள் பரிபூரணமாகிய தொட்டிலிலிருந்து துணித்தொட்டிலில் நித்திரை செய்யும் பிள்ளைகள் போல் தூங்கினார்கள். (எ-று) (78)

714. காட்ட அருள்இயக்கக் காணா திருள்மலத்து
நாட்ட மெனக்குவரல் நன்றோ பராபரமே.

(பொ-ரை) எனக்கு வெளிப்படையாய்க் காட்டுதற்கு உன்னுடைய திருவருளானது இருக்கவும் அதனை முன்னிட்டு உன்னைத் தெரிசிக்காமற் பல மாயையின் நாட்டம் என்னை வந்து சேர்வது நன்மைதானோ? (எ-று) (79)

715. எத்தன்மைக் குற்ற மியற்றிடினந் தாய்பொறுக்கும்
அத்தன்மை நின்னருளும் அன்றோ பராபரமே.

(பொ-ரை) பிள்ளைகள் எவ்வளவு குற்றங்களைச் செய்த போதிலும் தாயானவள் பொறுப்பள். அதுபோலவே நான் எவ்வளவு குற்றங்களைச் செய்த போதிலும் நீ பொறுத்து ஆட்கொள்ள வேண்டும். (எ-று)

அங்ஙனம் நீயே ஆட்கொள்ளாவிட்டால் வேறு யார் இருக்கின்றார்கள் என்பது குறிப்பு. (80)

716. எத்தனையோ தேர்ந்தாலும் என்னாலே இன்பமுண்டோ
சித்துருவே இன்பச் சிவமே பராபரமே.

(பொ-ரை) நான் ஏவ்வளவு தேர்ச்சியை யடைந்திருந் தாலும் என்னாலே எனக்கொரு சுகநிலையமுண்டோ? இல்லை. ஏனென்றால் ஞான மேனியனும் சுக சொரூபனும் நீயேயாகையால். (எ-று)

இங்ஙனமிருப்பதால் எனக்குச் சுகநிலையைக் கொடுப்பவன் நீயேயாவாய் என்பது கருத்து. (81)

717. மண்ணொடுவிண் காட்டி மறைந்துமறை யா அருளைக்
கண்ணொடுகண் ணாகஎன்று காண்பேன் பராபரமே.

(பொ-ரை) எனக்குப் பூமியையும், ஆகாயத்தையுங் காட்டி மீண்டும் மறைந்தும் மறையாமலுமிருக்கின்ற உன்னுடைய திருவருளைக் கண்ணோடு கண்போல எக்காலத்தில் நான் காணப் பெறுவேனோ? (எ-று)

'கண்ணொடு கண்" என்றது கண்ணினிடத்திலிருக்கும் கண்ணாகிய பார்வையை. (82)

718. பஞ்சரித்து நின்னைப் பலகால் இரந்ததெல்லாம்
அஞ்ச லெனும்பொருட்டே அன்றோ பராபரமே.

(பொ-ரை) நான் பலகாலமும் உன்னை வேண்டிக் கொண்ட தெல்லாம் நீயே வெளிப்பட்டு வந்து என்னைப் பயப்படாதையென்று சொல்லுதற் பொருட்டே யல்லவோ? (எ-று)

அங்ஙனம் நீயே எனக்குத் திருவருள் செய்வாயானால் நான் உஜ்ஜீவிப்பேன் என்பது குறிப்பு. (83)

719. எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ அன்றோ பராபரமே.

(பொ-ரை) நான் பார்க்கும் ஒவ்வொரு இடத்திலும் அந்த உயிர்க்கும் உயிராகி உள்ளீடாகவே அந்தந்த இடத்தில் எழுந்தருளி இருப்பவன் நீயேயன்றோ? ஆம். (எ-று)

அப்படியிருப்ப என்னை ஆண்டுகொள்ளாமைக்குக் காரணம் என்ன? என்பது வினா. (84)

720. அனைத்துமாய் நின்றாயே யான்வே றோநின்னை
நினைக்குமா றெங்கே நிகழ்த்தாய் பராபரமே.

(பொ-ரை) நீயே எல்லாப் பொருளாயிருக்கின்றாய். நானும் அந்தப் பொருள்களில் ஒன்றாயிருக்கின்றேன். ஆகையால் நானும் நீயேயாகின்றாய். இப்படியிருப்பதால் நான் உன்னைத் துதி செய்வது எப்படி? (எ-று) (85)

721. நின்போதத் தாலே நினைப்பு மறப்புமென்றால்
என்போதம் எங்கே இயம்பாய் பராபரமே.

(பொ-ரை) எனக்குள்ள நினைப்பு, மறுப்பு ஆகிய எல்லாம் உன்னுடைய ஞான சத்தியாலேயாக இருக்கின்றபடியால் என்னுடைய அறிவின் காரணத்தால் என்ன நடக்கும்? ஒன்றும் நடவாது. (எ-று) (86)

722. ஒன்றைநினைந் தொன்றைமறந் தோடுமனம் எல்லாம் நீ
என்றறிந்தால் எங்கே இயங்கும் பராபரமே.

(பொ-ரை) ஒரு பொருளை நினைந்தும் ஒரு பொருளை மறந்தும் வியவகரிக்கின்ற மனமானது எல்லாம் நீயேயாவாய் என்று அறியுமானால் அஃது இருப்பது எங்ஙனம்? (எ-று) (87)

723. கொழுந்தில் வயிரமெனக் கோதறவுள் ளன்பில்
அழுந்துமவர்க் கேசுகமுண் டாகும் பராபரமே.

(பொ-ரை) கொழுந்தில் வயிரமிருந்தாற் போல அன்பின் இடத்தில் அழுந்தி இருப்பவர்களுக்கே சுகோதய நிலையானது உண்டாகும். (எ-று) (88)

724. பற்றும் பயிர்க்குப் படர்கொழுந்து போற்பருவம்
பெற்றவர்க்கே நின்னருள்தான் பேறாம் பராபரமே.

(பொ-ரை) தொடர்ந்து ஏறுகின்ற விளைவுக்கும் படர் கின்ற கொழுந்து போன்ற பரிபாகத்தை அடைந்த அடியார்க ளுக்கே உன்னுடைய திரு வருட்பேறு கைகூடும். (89)

725. யோகியர்க்கே ஞானம் ஒழுங்காம்பே ரன்பான
தாகியரும் யோகம்முன்னே சார்ந்தோர் பராபரமே.

(பொ-ரை) ஞானமானது யோகிகளுக்கு உரியதாகும். ஆனால் மிக்க அன்பினையுடைய விரகதாகர்களும் முன்னம் யோகிகளாயிருந்தவர்களே யாவார்கள். (எ-று) (90)

726. அல்லும் பகலும் அறிவாகி நின்றவர்க்கே
சொல்லும் பொருளுஞ் சுமைகாண் பராபரமே.

(பொ-ரை) அகோராத்திரம் ஞானமயமாய மர்ந்திருந்த பெரியோர்கள் சொல்லையும், பொருளையும் அறவே ஒழிப்பார்கள். (எ-று) (91)

727. எச்சிலென்று பூவை யிகழ்ந்தோர்க் குனைப்போற்றப்
பச்சிலையுங் கிள்ளப் படுமோ பராபரமே

(பொ-ரை) புஷ்பத்தைப் பார்த்து இஃது எச்சிற் புஷ்பமென்று சொல்லி இகழ்ந்தவர்களுக்கு உன்னைப் புசிக்கும் பொருட்டுப் பசிய இலையைக் கிள்ளவும் தகுதியாகுமோ? ஆகாது. (எ-று) (92)

728. அந்தக் கரணம் அடங்கத் துறப்பதுவே
எந்தத் துறவினும்நன் றெந்தாய் பராபரமே

(பொ-ரை) மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந்தக் கரணங்கள் தத்தமது கொடுமைகளைச் செய்யாமல் அடங்கி இருக்கும்படியான மனத் துறவடைவதுவே எல்லாத் துறவறங்களிலும் நன்மையுடையதாகும்.(எ-று) (93)

729. தன்னை அறிந்தால் தலைவன்மேற் பற்றலது
பின்னையொரு பற்றும்உண்டோ பேசாய் பராபரமே.

(பொ-ரை) தன்னைத் தானறிந்து தன்னுடைய உண்மை நிலையை உணர்ந்து கொண்டாற் பிறகு தலைவனையுணரும் மார்க்கமே யொழிய வேறில்லை. (எ-று)

தன்னைத் தானறிதல் பசுஞான மெனவும், தலைவனை யறிதல் பதிஞானம் எனவும் சித்தாந்த நூல்களிற் சொல்லப்பட்டு வருகின்றன. (94)

730. அன்பாற் கரைந்துகண்ணீர் ஆறுகண்ட புண்ணியருக்
குன்பால் வரவழிதான் உண்டோ பராபரமே.

(பொ-ரை) அன்பினால் மனத்தை இளகப் பெற்றுக் கண்களில் ஆனந்தபாஷ்பமானது ஆற்றைப்போல் ஓடக் கண்ட புண்ணியவான்களுக்கு உன்னிடத்தில் வரும்படியான மார்க்க முண்டா? இல்லை. (எ-று)

கண்களிற் பொழிகின்ற நீரின் பிரவாகமானது உன்னி டத்தில் வர வழிவிடாதென்றார் இங்ஙனம் கூறினார். (95)

731. தன்னை அறிந்தருளே தாரகமா நிற்பதுவே
உன்னை அறிதற் குபாயம் பராபரமே.

(பொ-ரை) திருவருளையே ஆதாரமாகக் கொண்டு தன்னைத் தானறிந்து அத்திருவருள் நிலையில் நிற்பதே தலைவனாகிய உன்னை அறிவதற்கு உபாயமாகும். (எ-று) (96)

732. கற்றகலை யால்நிலைதான் காணுமோ காண்பதெல்லாம்
அற்றவிடத் தேவெளியாம் அன்றோ பராபரமே.

(பொ-ரை) ஒருவன் கற்ற கலைகளின் தேர்ச்சியால் உண்மைப் பொருளின் சுகநிலையம் வெளியாகுமோ? ஆகாது. ஏனென்றால் யாதொரு மாயையானது அறவேயொழிந்த இடம் எதுவோ? அங்கே வெளிப்படுவது அந்தப்பொருளின் சுபாவ மாகையால், (எ-று) (97)

733. கண்மூடிக் கண்விழித்துக் காண்பதுண்டோ நின்னருளாம்
விண்மூடின் எல்லாம் வெளியாம் பராபரமே.

(பொ-ரை) யாதொரு மெய்ப்பொருளைக் கண்ணை மூடியும், திறந்தும், காண்பதற்காமோ? ஆகாது. ஏனென்றால் உன்னுடைய திருவருளாகிய சிதாகாசமானது கவிந்து கொண்டால் எல்லாம் வெளிப்படுஞ் சுபாவமுடையனவாகையால். (எ-று) (98)

734. நேரே நினதருளென் நெஞ்சைக் கவரின்ஒன்றும்
பாரேன் சுகமும் படைப்போன் பராரமே.

(பொ-ரை) உன்னுடைய திருவருளானது நேராக வந்து என்னுடைய மனத்தைக் கவர்ந்து கொள்ளுமானால் நான் யாதொரு பொருளையும் பார்க்கமாட்டேன். நல்ல சுக நிலையையும் படைப்பேன். (எ-று) (99)

735. வான்காண வேண்டின் மலையேற லொக்கும்உன்னை
நான்காணப் பாவனைசெய் நாட்டம் பராபரமே.

(பொ-ரை) நான் உன்னைக் காணும் பொருட்டுப் பாவனா மூர்த்தமாகப் பாவிப்பது ஆகாயத்தைக் காணவிரும்பும் ஒருவன் அதைக் காணும்பொருட்டு மலைமேல் ஏறுவதை ஒப்பாயிருக்கின்றது. (எ-று)

நான் உன்னை அந்தர் முகத்திலறியாமற் பாவனா மூர்த்தமாய்த் தரிசிக்க நினைப்பது ஆகாயத்தைக் காண மலைமேல் ஏறுவது போன்றிருக் கின்றது என்பது கருத்து. (100)

736. வாதனைவிட் டுன்னருளின் மன்னினல்லால் வேறுமொரு
சாதனைதான் உண்டோநீ சாற்றாய் பராபரமே.

(பொ-ரை) என்னுடைய மயக்க வாசனையை அறவே ஒழித்து உன்னுடைய திருவருளினிடத்திற் சேர்ந்தா லல்லா மல் வேறு ஒரு சாதகமும் எனக்கு இருக்கின்றதா? (எ-று) (101)

737. பாரகமும் விண்ணகமும் பற்றாக நிற்பதருள்
தாரகத்தைப் பற்றியன்றோ சாற்றாய் பராபரமே.

(பொ-ரை) பூவுலகத்தார்களும், தேவலோகத்தார்களும் உன்னுடைய திருவடியில் அடைக்கலம் புகுந்திருப்பது திருவருட்டாரகத்தின் பொருட்டன்றோ? ஆம். (எ-று) (102)

738. விளக்கந் தகளியையும் வேறென்னார் நின்னைத்
துளக்கமறச் சீவனென்று செல்வார் பராபரமே.

(பொ-ரை) விளக்கையும், அகண்டத்தையும் இதுவேறு அதுவேறு என்று சொல்லாதவர்கள் உன்னைச் சீவனென்றே சொல்வார்கள். (எ-று)

ஆனால் இது தற்போத மொழியா ஞானத்தின் செய்கை என்பதை உய்த்துணர்ந்து கொள்க. (103)

739. பாராதி நீயாப் பகர்ந்தால் அகமெனவும்
ஆராயுஞ் சீவனு நீ யாங்காண் பராபரமே.

(பொ-ரை) உலகமுதலிய யாவும் நீயேயாகச் சொல்லும் அவசரத்திற் சீவனும் நீயேயாவாய். (எ-று)

அங்ஙனம் கொள்வதை விட்டு எந்த இடத்திலும் சிவன் சீவனே யாவான் என்னும் ஞானிகளின் பேதைமையை நான் என்னென்று சொல்வேன் என்பது குறிப்பு. (104)

740. பொய்யைப்பொய் யென்றறியும் போதத்துக் காதரவுன்
மெய்யருளே 'அன்றோ விளம்பாய் பராபரமே

(பொ-ரை) பொய்யாக அறியப்படும் பொருள்களை எல்லாம் விலக்கி மெய்ப்பொருளை ஆராயும் அறிவுக்கு உன்னுடைய திருவருளேயல்லவா துணையாக இருப்பது. (எ-று) (105)

741. வருவான்வந் தேன்எனல்போல் மன்னியழி யுஞ்சகத்தைத்
தெரிவாக இல்லையென்ற தீரம் பராபரமே.

(பொ-ரை) நிலைத்து அழிந்துவிடும் உலகத்தைப் பொய்யென்று சொல்லுகின்ற தீரமானது வந்துகொண்டே

யிருக்கும் ஒருவனைப் பார்த்து அழைத்தால் அவன் வந்தேன்-வந்தேன் என்று சொல்லுதலை ஒப்பாக விருக்கின்றது. (எ-று)

போண்ம்=போலும் (106)

742. மாயா சகமிலையேல் மற்றெனக்கோர் பற்றுமிலை
நீயேநான் என்றுவந்து நிற்பேன் பராபரமே.

(பொ-ரை) இந்த மாயையின் காரியமாகிய உலகம் இல்லா விட்டால் எனக்கு ஒரு பந்தமும் இல்லை. அப்பொழுது நீயே நானாவேன் என்று உன்னிடத்தில் வந்திருப்பேன். (எ-று) (107)

743. வானாதி நீயெனவே வைத்தமறை என்னையும்நீ
தானாகச் சொல்லாதோ சாற்றாய் பராபரமே.

(பொ-ரை) ஆகாய முதலாகச் சொல்லப்பட்ட யாவும் நீயேயாவாய் என்று சொல்லி முறையிட்டுக் கொண்டிருக் கின்ற வேதமானது என்னையும் நீயேயாகச் சொல்லாதோ? (எ-று) (108)

744. வெள்ளக் கருணைமத வேழமாம் நின்னருட்கென்
கள்ளக் கருத்தே கவளம் பராபரமே.

(பொ-ரை) கருணை வெள்ளமாகிய மதசலத்தை விடுகின்ற உன்னுடைய திருவருளாகிய யானைக்கு என்னுடைய வஞ்சகத்தோடு கூடிய மனமே வளமாகும். (எ-று) (109)

745. வண்டாய்த் துவண்டு மவுன மலரணைமேல்
கெண்டார்க்கோ இன்பங் கொடுப்பாய் பராபரமே.

(பொ-ரை) மௌனமென்று சொல்லப்படுகின்ற புஷ்ப சயனத்தில் மேல் வண்டுபோல் துவண்டிருக்கின்ற உன்னுடைய அடியார்களுக்குத் தானோ நீ சுகத்தைக் கொடுப்பது. (அதை எனக்குத் தரலாகாதோ?) (எ-று) (110)

746. மாயைமுத லாம்வினைநீ மன்னுயிர்நீ மன்னுயிர்தேர்ந்
தாயும்அறி வானதுநீ அன்றோ பராபரமே.

(பொ-ரை) மாயை முதலிய தநுகரண புவனி போகங்களும், உயிர்களும், அவ்வவ்வுயிர்களால் அறியப் படும் அறிவும் நீயேயல்லவா? ஆம். (எ-டு)

அப்படியிருக்க என்னைக் கைவிட வேண்டியதற்கு நியாயமென்னை? என்பது குறிப்பு. (111)

**747. என்னறிவும் யானும்என தென்பதுவு மாம்இவைகள்
நின்னவையே அன்றோ நிகழ்த்தாய் பராபரமே.**

(பொ-ரை) என்னுடைய அறிவும், நானும், எனதென்று மதிக்கப் படுவனவாகிய பொருள்களும் ஆகிய இவைகளெல்லாம் உன்னுடையனவே யல்லவா? அதை நீயே எனக்குத் திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (112)

**748. பாரறியா தண்டப் பரப்பறியா துன்பெருமை
யாரறிவார் நானோ அறிவேன் பராபரமே.**

(பொ-ரை) உன்னுடைய திருவருள் விலாசப் பிரதாபத்தை உலகத் தார்களும் தேவலோகத்தார்களும், அறியமாட்டார்கள் என்றால் நானோ அறிவதற்கு வல்லமையுடையவனாவேன். (எ-று) (113)

**749. அண்டம் அனைத்திலுமாய் அப்பாலுக் கப்பாலுங்
கொண்டநின்னை யாரறிந்து கொள்வார் பராபரமே.**

(பொ-ரை) சர்வ அண்டங்களுக்கும், அவைகளுக்குப் புறத்திலும் வியாபித்து நிற்கின்ற உன்னை அறிய வல்லவர் யாவர்? (எ-று) (114)

**750. ஒப்புயர்வொன் றின்றி ஒலிபுகா மோனவட்டக்
கப்பலுக்காம் வான்பொருள்நீ கண்டாய் பராபரமே.**

(பொ-ரை) ஒப்பும், உயர்ச்சியுமில்லாமற் சத்தமென்பது சிறிதும் அணுகாத மௌன ஞானமென்கிற கப்பலுக்கு ஏற்று மதி செய்யப்படுகின்ற பொருள் நீயே யாவாய். (எ-று) (115)

**751. என்போல் எளியவரும் எங்கெங்கும் பார்த்தாலும்
உன்போல் வலியவரும் உண்டோ பராபரமே.**

(பொ-ரை) எந்தவிடத்திற் சென்று பார்த்த போதைக்கும் என்னைப் போல் எளியவர்களும் உன்னைப்போல் வலியவர்களும் இருக்கமாட்டார். (எ-று) (116)

**752. பார்க்கின் அண்டபிண்டப் பரப்பனைத்தும் நின்செயலே
யார்க்குஞ் செயலிலையே ஐயா பராபரமே.**

(பொ-ரை) நன்றாய் ஆராய்ந்து பார்க்குமிடத்தில் எல்லாச் செயலும் உன்னுடையதே. மற்ற யாவருக்கும் ஒரு செயலுமில்லை. (எ-று)

ஆகையாற் சர்வசக்தியுடையவன் சிவபெருமானே யாவான் என்பதற்கு இழுக்கென்னை? என்பது வினா. (117)

753. ஒன்றே பலவே உருவே அருவேயோ
என்றே அழைப்பதுன்னை என்றோ பராபரமே.

(பொ-ரை) உன்னை ஒரு பொருளே! எனவும் பலபொருளே! எனவும், உருவே! எனவும்,அருவே! எனவும், அழைத்துத் துதிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (118)

754. செப்புவதெல் லாஞ்செபம்நான் சிந்திப்ப தெல்லாம்நின்
ஒப்பில் தியானமென ஓர்ந்தேன் பராபரமே

(பொ-ரை) நான் என் வாயாற் சொல்லிக் கொண்டிருப்ப தெல்லாம் செபமென்றும், நினைப்பதெல்லாம் தியான மென்றும் ஆராய்ந்தறிந்தேன். (எ-று) (119)

755. ஆரிருந்தென் ஆர்போய்என் ஆரமுதாம் நின்னருளின்
சீரிருந்தால் உய்வேன் சிவமே பராபரமே.

(பொ-ரை) எனக்கு யார் இருந்தால் என்ன பயன்? யார் போனால் என்ன நஷ்டம்? ஒன்றுமில்லை. ஆனாலும் உன்னுடைய திருவருட் கருணை மாத்திரம் எனக்கு இருக்கும் பட்சத்தில் நான் உஜ்ஜீவிப்பேன். (எ-று) (120)

756. வஞ்சநமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சி உனையடைந்தேன் ஐயா பராபரமே.

(பொ-ரை) நான் எமனுடைய சொந்தரைக்கும், பிறப்பு என்னும் கொடிய ஜென்மவாதைக்குமே பயந்து உன்னைத் தஞ்சமென அடைந்தேன். (எ-று)

ஆகையால் நீயே என்னை ஆண்டருள் செய்ய வேண்டும் என்பது கருத்து. (121)

757. எந்தப் படியுன் இதயம் இருந்ததெமக்
கந்தப் படிவருவ தன்றோ பராபரமே.

(பொ-ரை) உன்னுடைய மனமானது எப்படி நிர்மலமாயிருக் கின்றதோ? அப்படியே என் மனமும் எந்தக் காலத்தில் ஆகுமோ? தெரியாது. (எ-று) (122)

758. எந்தெந்த நாளும் எனைப்பிரிய தென்னுயிராய்ச்
சிந்தைகுடி கொண்டஅருள் தேவே பராபரமே.

(பொ-ரை) எந்தக் காலத்திலும் என்னை விட்டுப் பிரியாமல் என்னுடைய உயிர்க்குயிராய் என் மனத்தின்கண் குடிகொண்டிருந்த திருவருள் தெய்வமே. (எ-று) (123)

759. அஞ்சல் அஞ்சல் என்றடிமைக் கப்போதைக் கப்போதே
நெஞ்சில் உணர்த்தும் நிறைவே பராபரமே.

(பொ-ரை) அடியேனாகிய எனக்குப் பயப்பட வேண்டியதில்லை பயப்படவேண்டியதில்லை என்று அப்போதைக்கப் போது மனத்தில் அறிவுறுத்துகின்ற பரிபூரண வஸ்துவே. (எ-று) (124)

760. என்னையுன்றன் கைக்களித்தார் யாவரென்னை யான் கொடுத்துப்
பின்னையுன்னாற் பெற்றநலம் பேசேன் பராபரமே.

(பொ-ரை) என்னை உன்னிடத்தில் ஒப்புவிப்பார் யாவருமின்றி நானே என்னை ஒப்புவித்துவிட்டுப் பிறகு உன்னால் நான் அடைந்த பேரின்பத்தை நான் எடுத்துப் பேசவழியில்லாதவ னாயினேன். (எ-று) (125)

761. வாய்பேசா வூமையென வைக்கவென்றோ நீமவுனத்
தாயாக வந்தருளைத் தந்தாய் பராபரமே.

(பொ-ரை) என்னைப் பார்ப்போரெல்லாரும் இவனென்ன ஊமையோ வென்று சொல்லத்தக்கதான மௌன நிலையில் வைப்பதற்காக நீ எக்காலத்தில் மௌனத்தாயாய் வந்து திருவருள் செய்தாயோ? (எ-று)(126)

762. தன்னைத்தந் தென்னைத் தடுத்தாண்ட நின்கருணைக்
கென்னைக்கொண் டென்னபலன் எந்தாய் பராபரமே.

(பொ-ரை) தலைவனாகிய நீயே உன்னை எனக்குத் திருவருள் செய்து என்னைத் தடுத்தடிமை கொண்ட உன்னுடைய பெருங்கருணைத் திறத்திற்கு என்னால் என்ன பயனுண்டு? (எ-று) -

"தந்ததுன்றன்னைக் கொண்டதென்றென்னை" என்ற திருவாசகத்திற் போல. (127)

763. மார்க்கண்டர்க் காக மறலிபட்ட பாட்டை உன்னிப்
பார்க்கின்அன் பர்க்கென்ன பயங்காண் பராபரமே

(பொ-ரை) பூர்வத்தில் மார்க்கண்ட முனிவரின் பொருட்டு எமனானவன் பட்டதுன்பத்தை ஆலோசித்துப்

பார்க்குமிடத்தில் அடியார்களுக்கு எமனைப் பற்றிய பயம் கொஞ்சமும் இல்லை. (எ-று) (128)

764. சுட்டியுண ராமல் துரியநிலை யாய்வெளியில்
விட்டநின்னை யானோ வியப்பேன் பராபரமே.

(பொ-ரை) குறிப்பிட்டுணர்ந்து கொள்ளாவண்ணம் நான்காவதான துரிய நிலையாகிய சிதாகாயத்தில் என்னைக் கொண்டு போய் விழுங்கிவிட்டிருக் கின்ற உன்னை நான் சிறப்பிக்க வலியுடையனாவேனோ? (எ-று) (129)

765. சூதொன்று மின்றியென்னைச் சும்மா
இருக்கவைத்தாய்
ஈதொன்றும் போதாதோ இன்பம் பராபரமே.

(பொ-ரை) சிறிதும் வஞ்சகமில்லாமல் அடியேனான என்னைச் சும்மா இருக்கும்படி வைத்தாய். ஆகையால் இந்த ஒரு இன்பமே எனக்குப் போதும். (எ-று) (130)

766. வாயொன்றும் பேசா மவுனியாய் வந்தாண்ட
தேயொன்றும் போதாதோ இன்பம் பராபரமே.

(பொ-ரை) வாய் பேசுதல் சிறிதுமில்லாமல் மௌன குருவாய் எழுந்தருளி வந்து அடிமை கொண்டதாகிய ஒரு இன்பமே எனக்குப் போதும். (எ-று) (131)

767. என்று மிருந்தபடிக் கென்னை யெனக்களித்த
தொன்றும்போ தாதோ உரையாய் பராபரமே.

(பொ-ரை) எந்தக் காலத்திலும் நான் இருந்தவண்ணமே எனக்குத் திருவருள் செய்ததாகிய ஒரு இன்பமே எனக்குப் போதும் (எ-று) (132)

768. எண்திசைகீழ் மேலான எல்லாம் பெருவெளியாக்
கண்டவிடத் தென்னையும்நான் கண்டேன் பராபரமே.

(பொ-ரை) சர்வலோகங்களையும் பெருவெளியாகக் கண்ட இடத்தின் கண்ணே என்னையும் அப்படியே கண்டேன். (எ-று)

அப்படியிருந்தமையால் எல்லாம் முடிவிற் சிதாகாயமே என்றாயிற்று. '(133)

769. பித்தனையே தும்மறியாப் பேதையனை ஆண்டவுனக்
கெத்தனைதான் தெண்ட னிடுவேன் பராபரமே.

(பொ-ரை) பித்தனும், அறிவீனனுமாகிய என்னை ஆண்டருள் செய்த உனக்கு எத்தனைத் தெண்டன் சமர்ப்பிப்பேன். (எ-று) *(134)*

770. தாயர்கர்ப்பத் தூடன்னமுற் தண்ணீருந் தந்தருளும்
நேயவுனை யாரே நினையார் பராபரமே.

(பொ-ரை) தாய்மார் கருப்பவறைக்குள் தங்கியிருக்குங் காலங்களிலும் அன்னபானாதிகளைத் தந்து ரட்சித்த உன்னைச் சிந்தியாதவர் யார்? (எ-று) *(135)*

771. விரிந்த மனமொடுங்கும் வேளையில் நானாகப்
பரந்த அருள்வாழி பதியே பராபரமே.

(பொ-ரை) பரவியிருக்கின்ற மனமானது ஒடுங்கும் அவசரத்தில் நானென்று வெளிப்பட்டு முன்னர் வந்து நானே தலைவனாவேன் என்று உணர்த்துகின்ற திருவருளானது வாழக்கடவது. (எ-று) *(136)*

772. சிந்தனைபோய் நானெனல்போய்த் தேக்கஇன்ப
மாமழையை
வந்து பொழிந்தனைநீ வாழி பராபரமே.

(பொ-ரை) சிந்திப்பதும் நானென்னும் அகங்காரமும், ஒழிந்து பேரின்ப நிறைவை அடையும்படி பேரின்ப மழையைப் பொழிந்தனை ஆகையால் நீ வாழ்க் கடவை. (எ-று) *(137)*

773. தந்தேனே ஓர்வசனந் தந்தபடிக் கின்பமுமாய்
வந்தேனே யென்றனைநீ வாழி பராபரமே.

(பொ-ரை) ஒரு மொழியை உபதேசித்தேன். உபதேசித்த படியே ஆனந்தமயமாய் வந்தேன் என்று திருவாய் மலர்ந்தனை யாகையால் நீ வாழக் கடவை. (எ-று) *(138)*

774. மண்ணும் விண்ணும்வந்து வணங்காவோ நின்னருளைக்
கண்ணுறவுட் கண்டவரைக் கண்டாற் பராபரமே.

(பொ-ரை) உன்னுடைய திருவருளை அகக்கண்ணாற் காணப்பெற்ற அடியார்களைக் கண்டாற் பூலோகத்தாரும், தேவலோகத்தாரும் வணங்க மாட்டார்களோ? (எ-று) *(139)*

775. என்றுங் கருணைபெற்ற இன்பத் தபோதனர்சொல்
சென்ற சென்ற திக்கனைத்துஞ் செல்லும் பராபரமே.

(பொ-ரை) உன்னுடைய திருவருளைப் பெற்ற தவசிரேஷ்டர்களுடைய சொல்லானது சர்வதிக்குகளிலும் போய்ப்பரவும்? (எ-று) *(140)*

**776. ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மாகநின்னைத்
தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரமே.**

(பொ-ரை) ஆடுவதும், பாடுவதும், ஆனந்தமாக உன்னைத் தேடுவதுமே உன்னுடைய திருத்தொண்டர்களுடைய செய்கைகளாகும். (எ-று) *(141)*

**777. பொங்கியநின் தண்ணருளைப் புட்கலமாப் பெற்றவர்கட்
கெங்கெழுந்தென் ஞாயி றியம்பாய் பராபரமே.**

(பொ-ரை) மேம்பட்ட உன்னுடைய திருவருளை மேன்மேலும் விருத்தியடையப் பெற்றவர்களுக்குச் சூரியன் எந்தத் திக்கில் உதித்தாலும் என்ன? (எ-று)

புஷ்கலம்=நிறைவு. "எங்கெழிலென் ஞாயிறெமக் கேலோரெம் பாவாய்" என்பது திருவாசகம். *(142)*

**778. பாலரொடு பேயர்பித்தர் பான்மையென நிற்பதுவே
சீலமிகு ஞானியர்தஞ் செய்கை பராபரமே.**

(பொ-ரை) பாலகர், பேயர், பித்தர், ஆகிய இவர்களுடைய தன்மையை யொத்து நிற்பதுவே ஞானிகளுடைய செய்கையாகும். (எ-று) *(143)*

**779. உண்டுடுத்துப் பூண்டிங் குலகத்தார் போல்திரியுந்
தொண்டர்விளை யாட்டே சுகங்காண் பராபரமே.**

(பொ-ரை) உண்டும், உடுத்தும் இங்கே உலகத்தார்கள் போலத் திரியும் அடியார்களுடைய திருவிளையாட்டே பேரின்ப சுகமாகும். (எ-று) *(144)*

**780. கங்குல்பக லற்றதிருக் காட்சியர்கள் கண்டவழி
எங்கும் ஒருவழியே எந்தாய் பராபரமே.**

(பொ-ரை) இராப்பகல்களை ஒன்றாகக் கண்ட பெரியோர்கள் கண்டமார்க்கம் எங்கும் ஒரு மார்க்கமேயாகும். (எ-று) *(145)*

**781. காயநிலை அல்லவென்று காண்பார் உறங்குவரோ
தூயஅருட் பற்றாத் தொடர்வார் பராபரமே.**

(பொ-ரை) இந்தத் தேகமானது நிலையல்லாததென்று உணர்ந்த பெரியோர்கள் என்றும் உறங்காமல் திருவருளையே பற்றாகத் தொடர்வார்கள். (எ-று) (146)

782. அப்பும்உப்பும் போன்ற அயிக்கிய பரா னந்தர்தமக்
கொப்புவமை சொல்லவும்வாய் உண்டோ பராபரமே.

(பொ-ரை) நீரும், அதிற் கரைந்து கலந்த உப்பும் போலச் சிவயோகத் தொன்றான பெரியோர்களுக்கு ஒப்புவமை சொல்லலாமோ? ஆகாது. (எ-று) (147)

783. சிந்தத் தெளிந்து சிவமானோ ரெல்லோர்க்குங்
கொத்தடிமை யான குடிநான் பராபரமே.

(பொ-ரை) மனத் தெளிவடைந்து சிவத்தன்மை வாய்ந்த பெரியோர் களெல்லாருக்கும் கொத்தடிமைக் குடியானவன் நானாவேன். (எ-று) (148)

784. தம்முயிர்போல் எவ்வுயிருந் தானென்று தண்ணருள்கூர்
செம்மையருக் கேவலென்று செய்வேன் பராபரமே.

(பொ-ரை) தம்முயிரைப்போற் பிறவுயிர்களையும் பாதுகாத்துத் தண்ணிய அருள்பூண்ட பெரியோர்களுக்கு நான் எப்பொழுது ஏவலாளி யாவேன்? (எ-று) (149)

785. விண்ணுக்கும் விண்ணாகி மேவும் உனக் கியான்பூசை
பண்ணிநிற்கு மாறு பகராய் பராபரமே.

(பொ-ரை) ஆகாயத்திற்குப் பரமாகாயமாய் விளங்கும் உனக்கு நான் எவ்வாறு பூசைசெய்வேன்? இதை நீயே எனக்குத் திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (150)

786. நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம்அன்பே
மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே.

(பொ-ரை) மனமே கோயிலாகவும், நினைப்பே பரிமள திரவியமாகவும், அன்பே அபிடேக நீராகவும் கொண்டு நான் பூசைசெய்யும் பொருட்டு நீ எழுந்தருளி வரவேண்டும். (எ-று) (151)

787. கெட்டவழி ஆணவப்போய் கீழாக மேலான
சிட்ட ருனைப்பூசை செய்வார் பராபரமே.

(பொ-ரை) கொடிய பிசாசாகிய ஆணவமானது கெடும்படி நல்ல பெரியோர்கள் உன்னைப் பூசிப்பார்கள். (எ-று) முரணணி *(152)*

788. கால்பிடித்து மூலக் கனலைமதி மண்டலத்தின்
மேலெழுப்பில் தேகம் விழுமோ பராபரமே.

(பொ-ரை) மூல நெருப்பை வாயுவால் எழுப்பிச் சந்திரமண்டலம் வரைக்கும் முட்டச் செய்தால் இந்தச் சரீரம் இறந்து படுமோ? படாது. (எ-று) *(153)*

789. பஞ்சசுத்தி செய்துநின்னைப் பாவித்துப்பூசைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே.

(பொ-ரை) பஞ்சசுத்தி செய்து பின்னர் உன்னைப் பாவனா மூர்த்தியாய்ப் பூசித்தால் மேம்பட்ட ஞானமானது விளங்கா நிற்கும். (எ-று) *(154)*

790. அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.

(பொ-ரை) உன்னுடைய அன்பர்களுக்கான திருப்பணியைச் செய்யும்படியாக என்னை அவர்களுக்கு ஊழியனாக்கி விட்டுவிடுவாயானாற் சுகநிலையானது தானே வந்து கைகூடும். (எ-று) *(155)*

791. மூர்த்தி தலந் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

(பொ-ரை) மூர்த்தி தரிசனம், தலயாத்திரை, தீர்த்த ஸ்நானம் ஆகிய இவைகளைக் கிரமப்படி செய்ய ஆரம்பித்தவர்களுக்கு ஒரு மொழியை உபதேசிப்பதற்காக ஒரு குரு வந்து கிடைப்பான். (எ-று) *(156)*

792. விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞான நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே.

(பொ-ரை) யாவராலும் விரும்பப்படுகின்ற சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கும், மொக்கையும் மலரையும் காயையும், கனியையும் போன்றதல்லவா? (எ-று) *(157)*

793. தானந் தவந்தருமஞ் சந்ததமுஞ் செய்வர்சிவ
ஞானந் தனையணைய நல்லோர் பராபரமே.

(பொ-ரை) நல்லவர்கள் சிவஞானத்தையடையும் நிமித்தம் தானம், தவம், தருமம் முதலிய காரியங்களை எக்காலத்துஞ் செய்வர்.

நான் அப்படிச் செய்யாமையால் எனக்குக் கதியில்லை என்பது குறிப்பு. (158)

**794. சொன்னத்தைச் சொல்லித் துடிக்கின்ற ஆணவப்பேய்க்
கின்னல் வருவதெந்நாள் எந்தாய் பராபரமே.**

(பொ-ரை) என்னுடைய தந்தையே! சொன்னதையே சொல்லிக் கொண்டு வெளிப்படுகின்ற ஆணவமானது எந்தக்காலத்தில் நசிக்குமோ? (எ-று) (159)

**795. இன்றோ இருவினைவந் தேறியது நானென்றோ
அன்றே விளைந்ததன்றோ ஆற்றேன் பராபரமே.**

(பொ-ரை) நல்வினை, தீவினைகள் எனக்கு வந்தது இன்றைக்குத் தானா? அன்று; நான் என்று முதல் இருக்கின்றேனோ அன்று முதல் விளைந்ததாகும். ஆகையால் நான் பொறுக்கமாட்டேன். (எ-று) (160)

**796. எண்ணமுந்தான் நின்னைவிட இல்லையென்றால் யான்முனமே
பண்ணவினை யேது பகராய் பராபரமே.**

(பொ-ரை) உன்னைவிட யாதொன்றுமில்லாதிருந்தால் நான் முன்னேசெய்த வினையென்பது ஏது? அதை நீயே திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (161)

**797. என்னைஇன்ன தென்றறியா ஏழைக்கும் ஆகெடுவேன்
முன்னைவினை கூடல் முறையோ பராபரமே.**

(பொ-ரை) என்னை நானே இப்படிப்பட்ட பொருளாவேனென் றறிந்து கொள்ளக் கூடாமையாயிருக்கின்ற எனக்கும் பூர்வவினை வந்து தொடர்வது நியாயமாகுமோ? (எ-று) (162)

**798. அறியாநான் செய்வினையை ஐயோநீ கூட்டுங்
குறியே தெனக்குளவு கூறாய் பராபரமே.**

(பொ-ரை) நான் செய்த வினைகளைப் பகுத்துணராத என்னாற் செய்யப்படுங் காரியங்களை நீ சேர்த்து வைக்கும் இடம் யாது? அதை எனக்குத் திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (163)

799. என்னைக் கெடுக்க இசைந்த இருவினைநோய்
தன்னைக் கெடுக்கத் தகாதோ பராபரமே.

(பொ-ரை) என்னைக் கெடுக்கும்படி எழுந்த இருவினை நோயை நான் கெடுத்துவிடக் கூடாதோ? (எ-று) (164)

800. வல்லமையே காட்டுகின்ற மாமாயை நானொருவன்
இல்லையெனின் எங்கே இருக்கும் பராபரமே.

(பொ-ரை) வலிமையையே காட்டா நின்ற மாயையானது நானொருவன் இல்லாவிட்டால் எங்கே இருக்குமோ? தெரியாது. (எ-று) (165)

801. முக்குணத்தால் எல்லாம் முளைக்கப் பிரகிருதிக்
கிக்குணத்தை நல்கியதார் எந்தாய் பராபரமே.

(பொ-ரை) ராஜஸ, தாமச, சாத்துவீகமென்கிற மூன்று குணங்களால் எல்லாவற்றையும் உண்டாக்கும்படியான குணத்தைப் பிரகிருதி தத்துவத் திற்குக் கொடுத்தவர் யாவர்? (எ-று) (166)

802. ஆற்றப் படாதுதுன்பம் ஐயஎன்னால் என்மனது
தேற்றப் படாதினிஎன் செய்வேன் பராபரமே.

(பொ-ரை) துன்பமோ சகிக்க முடியாது. என்னால் என்மனது தேற்றத்தை அடையாது. ஆகையால் இதற்கு நான் என்ன செய்வேன்? (எ-று) (167)

803. பூராய மாய்மனதைப் போக்க அறி யாமல்ஐயோ
ஆராய் அலைந்தேன் அரசே பராபரமே.

(பொ-ரை) முறைப்படி ஆராய்ந்து மனத்தை அடக்காமல் ஐயோ! நான் என்னை யாராகவோ நினைந்து அலைந்து திரிந்தேன். (எ-று) (168)

804. சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே.

(பொ-ரை) கோபத்தையெல்லாம் அறவேயொழிக்கக் கற்றுக் கொண்டாலும், சர்வசித்திகளையும், அடைந்தாலும் மனத்தைத் துறக்கக் கல்லாதவர்க்கு வாயிருந்தென்ன லாபம்? (எ-று) (169)

**805. வாதுக்கு வந்தெதிர்த்த மல்லரைப்போல் பாழ்த்தமனம்
ஏதுக்குக் கூத்தாடு தெந்தாய் பராபரமே.**

(பொ-ரை) வாதுக்காக வந்து எதிர்த்த மல்லவீரர்களைப் போலப் பாழாகிய மனமானது கூத்தாடுகின்றதே. அஃது ஏதுக்கோ? அறியேன். (எ-று) (170)

**806. சூதாடு வார்போல் துவண்டு துவண்டுமனம்
வாதாடின் என்னபலன் வாய்க்கும் பராபரமே.**

(பொ-ரை) சூதாடுபவர்களைப் போல் மனமானது சோர்ந்து சோர்ந்து வாதாடினால் அதற்கு என்ன பயனுண்டாகும்? (எ-று) (171)

**807. கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க்
கள்ளமனந் துள்ளுவதென் கண்டோ பராபரமே.**

(பொ-ரை) கொள்ளித் தேளானது கொட்டினதனாற் குதிக்கின்ற பேய்க்குரங்கைப் போல மனமானது எதைக் கண்டு துள்ளுகின்றதோ? தெரியவில்லை. (எ-று) (172)

**808. வந்ததையும் போனதையும் வைத்துவைத்துப் பார்த்திருந்தால்
சிந்தை இதமகிதம் சேரும் பராபரமே.**

(பொ-ரை) வரவு, போக்கான பொருள்களை எண்ணி எண்ணிப் பார்ப்பதினால் மனமானது நன்மை தீமைகளைப் பொருந்தா நிற்கும்? (எ-று) (173)

**809. ஏறுமயிர்ப் பாலம் உணர் விந்தவிட யங்கள்நெருப்
பாறெனவும் நன்றாய் அறிந்தேன் பராபரமே.**

(பொ-ரை) உணர்ச்சியே மயிர்ப்பாலமென்றும் விடயங்களே நெருப்பாறென்றும் நான் நன்றாய் உணர்ந்து கொண்டேன். (எ-று) (174)

**810. பொறிவழியே ஏழை பொறியாய் உழல்வதுநின்
அறிவின் விதித்தவிதி ஆமோ பராபரமே.**

(பொ-ரை) அறிவில்லாத நான் ஐம்பொறியின் வழியே போய்ப் பொறியா யலைவது நீ நியமித்த ஏற்பாடாகுமோ? (எ-று) (175)

**811. பாசசா லங்கள்எலாம் பற்றுவிட ஞானவைவாள்
வீசுநாள் எந்நாள் விளம்பாய் பராபரமே.**

(பொ-ரை) பாசபந்தங்களெல்லாம் என்னைவிட்டு நீங்கும்படி நான் ஞானமென்னும் வாளாயுதத்தை வீசுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(176)*

812. எந்தவுட லேனும் எடுத்தவுடல் நல்லதென்று
சிந்தைசெய வந்ததிறஞ் செப்பாய் பராபரமே.

(பொ-ரை) எந்த உடம்பாயிருந்தாலும் அப்பொழுது எடுத்துள்ள உடம்பே நல்லதென்று மனத்தில் நினைக்கும் படி வந்த திறமையை நீயே திருவருள் செய்ய வேண்டும். (எ-று) *(177)*

813. பொய்யெல்லாம் ஒன்றாய்ப் பொருத்திவைத்த பொய்யுடலை
மெய்யென்றால் மெய்யாய் விடுமோ பராபரமே.

(பொ-ரை) பொய்யையெல்லாம் ஒன்றாகத் திரட்டி வைத்திருக்கின்ற பொய்யுடம்பை மெய்யென்று சொன்னால் அது மெய்யாய் விடுமோ? ஆகாது. (எ-று) *(178)*

814. மின்னனைய பொய்யுடலை மெய்யென்று நம்பிஐயோ
நின்னை மறக்கை நெறியோ பராபரமே.

(பொ-ரை) அந்தோ! மின்னலைப் போற் பொய்யாமை உடம்பை நிலையுள்ளதாக நினைத்து உன்னைத் துதியாமல் மறந்து விடுவது சரியாகுமோ? (எ-று) *(179)*

815. நித்தியமொன் றில்லாத நீர்க்குமிழி போன்றவுடற்
கித்தனைதான் துன்பமுண்டோ என்னே பராபரமே.

(பொ-ரை) நீர்க்குமிழிபோல் அழியத்தக்க உடம்புக்காக இவ்வளவு துன்பம் உண்டாக வேண்டிய காரணம் என்னவோ? (எ-று) *(180)*

816. தேகம்இறும் என்றுசடர் தேம்புவதென் நித்திரையில்
ஊகமறிந் தாற்பயந்தான் உண்டோ பராபரமே.

(பொ-ரை) தேகம் இறந்துபடுமேயென்று வியசனப்பட வேண்டிய தில்லை. ஏனென்றால் நித்திரையில் செய்கையை ஆராய்ந்தறிந்தாற் பயமில்லை ஆகையால்.(எ-று) *(181)*

817. ஏதைச் சுமையா எடுப்பார் எடுத்தவுடல்
சேதமுறின் யாதுபின்னே செல்லும் பராபரமே.

(பொ-ரை) எடுத்த சரீரம் இறந்து படுமானால் எந்தக் காரியம் ஆகும்? ஒன்றும் ஆகாது. ஆகையால் வேறெதனைச் சுமையா வெடுப்பார்கள்? (எ-று) *(182)*

**818. தோற்பாவை நாலாட் சுமையாகுஞ் சீவனொன்றிங்
கார்ப்பால் எடுத்ததெவ ராலே பராபரமே.**

(பொ-ரை) தோற் பொம்மையாகிய உடம்பு நான்கு பேர்களால் தூக்கத் தக்க சுமையாகும். ஆனால் சீவனானவன் யாவரால் எடுக்கப்பட்ட வனாயிருக்கின்றான்? அப்படிக் கில்லை. (எ-று) *(183)*

**819. ஞாலத்தை மெய்யெனவே நம்பிநம்பி நாளுமென்றன்
காலத்தைப் போக்கியென்ன கண்டேன் பராபரமே.**

(பொ-ரை) உலகத்தை மெய்யென்று நான் என்னுடைய கால மெல்லாம் நினைத்திருந்தனால் என்ன லாபத்தை அடைந்தேன்? ஒன் று மில்லை. (எ-று) *(184)*

**820. பொய்யுலக வாழ்க்கைப் புலைச்சேரி வாதனைநின்
மெய்யருளின் மூழ்கின் விடுங்காண் பராபரமே.**

(பொ-ரை) பொய்யுலக வாழ்க்கையாகிய பறைச் சேரியின் வாசனை யானது உன்னுடைய மெய்யருளாகிய வெள்ளத்தில் ஸ்நானஞ் செய்தாலே நீங்கிவிடும். (எ-று) வாதனை - வாசனை. *(185)*

**821. நூலேணி விண்ணேற நூற்குப் பருத்திவைப்பார்
போலே கருவிநன்னூற் போதம் பராபரமே.**

(பொ-ரை) கருவி நூல்களும், வீட்டு நூல்களும் எப்படி இருக்கின்றன வென்றால் ஆகாயத்தி லேறுதற்கு நூலேணியையும் நூலை நூற்பதற்குப் பருத்தியையும் வைப்பவர் போலமையும். (எ-று) *(186)*

**822. சின்னஞ் சிறியார்கள் செய்தமணற் சோற்றையொக்கும்
மன்னங் கலைஞான மார்க்கம் பராபரமே.**

(பொ-ரை) நிலைபெற்ற கலைஞான மார்க்கமானது சிறுபிள்ளைகள் சமைக்கும் மணற் சோற்றைப் போற் பயனற்றதாகும். (எ-று) *(187)*

**823. வாசகஞா னத்தால் வருமோ சுகம்பாழ்த்த
பூசலென்று போமோ புகலாய் பராபரமே.**

(பொ-ரை) வாசகயிங்கரியமான ஞானத்தால் ஒருபயனும் உண்டாவதில்லை. ஆகையால் அந்த வாசக ஞானத்தால் விளைக்குஞ் சண்டை எந்தக் காலத்தில் ஒழியுமோ? (எ-று) *(188)*

824. கேட்டதையே சொல்லுங் கிளிபோல நின்னருளின்
நாட்டமின்றி வாய்பேசல் நன்றோ பராபரமே.

(பொ-ரை) கேட்ட சொற்களையே திருப்பிச் சொல்லாநின்ற கிளியைப் போல் உன்னுடைய திருவருளினிடத்தில் நாட்ட மென்பது சிறிதுமில்லாமல் வாய்பேசுவது நன்மையாமோ? ஆகாது. (எ-று) (189)

825. வெளியாய் அருளில் விரவும் அன்பர் தேகம்
ஒளியாய்ப் பிறங்கியதும் உண்டோ பராபரமே.

(பொ-ரை) உன்னுடைய திருவருளினிடத்தில் வெளியாகவே கலந்து உனது அன்பர்களுடைய தேகமானது சோதியாய் விளங்கியதுமுண்டோ? (எ-று) (190)

826. காலமொரு மூன்றுங் கருத்திலுணர்த் தாலும்அதை
ஞாலந் தனக்குரையார் நல்லோர் பராபரமே.

(பொ-ரை) பெரியோர்களெல்லாம் மூன்றுகாலச் செய்திகளையும் அறிந்திருந்தாலும், அதை உலகத்தாருக்குச் சொல்ல மாட்டார்கள். (எ-று) (191)

827. கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே.

(பொ-ரை) கொல்லா விரதத்தை மேற்கொண்டவ்ர் களே நல்லவர்கள். அவ்விரதத்தைக் கொள்ளா தொழிந்தோரை நான் யாரென்று எடுத்துச் சொல்லுவேன்? (எ-று) (192)

828. இல்லாத காரியத்தை இச்சித்துச் சிந்தைவழிச்
செல்லாமை நல்லோர் திறங்காண் பராபரமே.

(பொ-ரை) பொய்க் காரியத்தை விரும்பி மனம் போன வழியிற் போகாமையே நல்லவர்களுடைய திறமையாம். (எ-று) (193)

829. ஏதுவந்தும் ஏதொழிந்தும் என்னதுயான் என்னார்கள்
போதநிலை கண்ட புலத்தோர் பராபரமே.

(பொ-ரை) ஞானநிலையை ஆராய்ந்தறிந்த பெரியோர்களெல்லாம் எதுவந்தாலும், எதுபோனாலும் எனது, நான் என்னும் மமகார அகங்காரங் களை அடையார்கள். (எ-று) (194)

**830. ஆயிரஞ் சொன்னாலும் அறியாத வஞ்சநெஞ்சப்
பேயரொடு கூடிற் பிழைகாண் பராபரமே.**

(பொ-ரை) பலவ்கையாக எடுத்து நியாயங்களைப் போதித்தாலும், கேளாத கபடர்களோடு சிநேகிப்பது பெரும் பிழையாகும். (எ-று) (195)

**831. மாய மயக்கொழிந்தார் மற்றொன்றை நாடுவரோ
நேய அருள்நிலையில் நிற்பார் பராபரமே.**

(பொ-ரை) மாயா பந்தத்தை நீக்கினவர்கள் வேறெதை நாடுவார்கள்? நல்ல திருவருள் ஞானநிலையில் நிற்பார்கள். (எ-று) (196)

**832. நித்திரையிற் செத்தபிணம் நேருமுடற் கிச்சைவையாச்
சுத்தர்களே நல்ல துறவோர் பராபரமே.**

(பொ-ரை) தூக்கத்திற் பிணத்துக்கு ஒப்பாயிருக்கின்ற உடம்புக்கு ஆசை வைக்காத துறவிகளே நல்ல துறவிகள் ஆவார்கள். (எ-று) (197)

**833. எந்நெஞ்ச மேனும் இரங்குமே நின்னருட்குக்
கன்னெஞ் சரும்உள ரோ காட்டாய் பராபரமே.**

(பொ-ரை) உன்னுடைய பரமகாருணியத்தின் பொருட்டு எந்த மனமுமிரங்கும். ஆகையால் அதற்கு இரங்காத கல்மனமுடையவர்கள் யாரேனுமிருந்தால் திருவருள் செய்ய வேண்டும். (198)

**834. மந்த அறி வாகியின்பம் வாயா திருந்தலைந்தால்
சிந்தைமயங் காதோஎன் செய்வேன் பராபரமே.**

(பொ-ரை) அஞ்ஞான வழியிற் பட்டுச் சுகங் கிடைக்காமலிருந்தால் என் மனமானது மயங்காதோ? மயங்கும் ஆகையால் நான் என்ன செய்யக் கடவேன்? (எ-று) (199)

**835. தேடினேன் திக்கனைத்துந் தெண்டனிட்டேன் சிந்தைநைந்து
வாடினேன் என்மயக்கம் மாற்றாய் பராபரமே.**

(பொ-ரை) உன்னை எல்லாத் திசைகளிலும் தேடினேன். அப்படித் தேடித் தேடித் தெண்டனிட்டேன். மனமிளகி வாடினேன். ஆகையால் என்னுடைய மயக்கத்தை நீ மாற்றியருளல் வேண்டும். (எ-று) (200)

836. மடிமையெனும் ஒன்றை மறுத்தன்றோ என்னை அடிமைகொளல் வேண்டும் அரசே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! எனக்குள்ள சோம்பலை நீக்கியல்லாவா நீ அடிமை கொள்ள வேண்டியது? (எ-று) *(201)*

837. காலர்பயந் தீர இன்பக் காற்கபய மென்றெழுந்த மாலை வளர்த்தனையே வாழி பராபரமே.

(பொ-ரை) எமபடாளுடைய பயந் தீரும்படி உன்னுடைய திருவடி களுக்கு அபயமென்று சொல்லிக் கொண்டு வெளிவந்த ஆசையை வளர்த்தாயாகையால் நீ வாழக் கடவாய். (எ-று) *(202)*

838. நீர்ப்புற் புதமாய் நினைவருட்கே நின்றழியப் பார்ப்பதல்லால் வேறுமொன்றைப் பாரேன் பராபரமே.

(பொ-ரை) நீர்க்குமிழிபோல் நிலைத்தலில்லாத என்னுடைய நினைவை உன்னுடைய திருவருளைப் பெறுவதற்காகச் செலவிட்டுப் பார்ப்பேனே யொழிய வேறுவிதம் பாரேன். (எ-று) *(203)*

839. நீர்க்குமிழி போலென் நினைவுவெளி யாக்கரையப் பார்க்குமிடம் எல்லாம்என் பார்வை பராபரமே.

(பொ-ரை) மேலே சொன்ன தன்மையையுடையதான என்னுடைய நினைப்பானது வெளிப்பட்டு அழிந்துபடுவ தற்கே என் பார்வையானது பார்க்கா நின்றது. (எ-று) *(204)*

840. ஆடிஓய் பம்பரம்போல் ஆசையுடன் எங்கும்உனைத் தேடிஓய் கின்றேன்என் செய்வேன் பராபரமே.

(பொ-ரை) நான் மிகுந்த அவாவினால் ஆடி ஓய்ந்துவிடுகின்ற பம்பரத்தைப் போற் சுற்றிச்சுற்றி உன்னைத் தேடித் தேடி ஓய்கின்றேன். ஆகையால் அந்த ஓய்வு நீங்க நான் என்ன செய்யவல்லேன்? (எ-று) *(205)*

841. வேதாந்தஞ் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும் நாதாந்த மோன நலமே பராபரமே.

(பொ-ரை) வேதாந்த சித்தாந்தங்களைச் சமரசமாகக் கொண்ட பெரியோர்களுடைய அகக்கண்ணானது களிக்கின்ற நாதாந்தத்தில் விளையும் மௌன நலமே. (எ-று) *(206)*

**842. ஆனந்த மானநின்னை அன்றியொன்றை உன்னாத
மோனந் தமியேற்கு முத்தி பராபரமே.**

(பொ-ரை) அடியேனான எனக்கு மோட்சமாவது என்னவென்றால் சுகானந்தப் பொருளாகிய உன்னையெல்லாமல் வேறு ஒரு பொருளை நினையாத மௌனமாகும். (எ-று) (207)

**843. ஏதுக்கும் உன்னைவிட இல்லையென்றால் என்கருத்தைச்
சோதிக்க வேண்டாம்நான் சொன்னேன் பராபரமே.**

(பொ-ரை) எந்தக்காரியத்திற்கும் உன்னைவிடச் செய்வோர் வேறொருவரில்லை யென்றால் வேறு எனக்குத் துணையாவோர் யாவர்? ஒருவருமில்லை. ஆகையால் நீ என்னுடைய எண்ணத்தைச் சோதிக்க வேண்டியதில்லை. நான் சொல்லி விட்டேன். (எ-று) (208)

**844. முத்தியிலுந் தேகமிசை மூவிதமாஞ் சித்திபெற்றார்
எத்தனைபேர் என்றுரைப்ப தெந்தாய் பராபரமே.**

(பொ-ரை) என்னுடைய தந்தையே! மோட்சநிலத்திற் சேர்ந்தவர்களும் தேகசம்பந்தப்பட மூன்று வகையான சித்தி பெற்றோர்களும் எத்தனை பேரென்று எடுத்துச் சொல்லக் கூடும்? கூடாமை. (எ-று)

மூவித சித்தியென்றது= காயசித்தி, யோகசித்தி, ஞானசித்திகளை. (209)

**845. நீயன்றி நானார் நினைவார்என் நெஞ்சகமார்
தாயன்றிச் சூலுமுண்டோ சாற்றாய் பராபரமே.**

(பொ-ரை) தாயில்லாவிட்டாற் கர்ப்பமுண்டாகுமோ? உண்டாகாது அதுபோல நீயில்லாமல் நான் யார்? என்னுடைய எண்ணம் யார்? என்னுடைய மனம் யார்? இவைகளை நீயே திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (210)

**846. அங்கமே நின்வடிவ மானசுகர் கூப்பிடநீ
எங்கும்ஏன் ஏனென்ற தென்னே பராபரமே.**

(பொ-ரை) தன்னுடைய சொரூபமே உன்னுடைய சொரூபமாயிருக்கப் பெற்ற சுகமகாரிஷியானவர் உன்னை எவ்விடத்திலும் அழைக்க, அவ்வவ்விடங்களிலும் ஏன்? ஏன்? என்று திருவாய் மலர்ந்தருளியது மிகவும் ஆச்சரியமாக

இருக்கின்றது. ஆனாலும் நீ அங்ஙனம் எதிரொலி காட்டியது எற்றுக்கு? (எ-று) (211)

847. கொள்ளைவெள்ளத் தண்ணருள்மேற் கொண்டுசுழித் தார்த்திழுத்தால்
கள்ளமனக் கப்பலெங்கே காணும் பராபரமே.

(பொ-ரை) உன்னுடைய பெருங்கருணைத் திருவருள் வெள்ளமானது மேம்பட்டுப் பொங்கி வெளிப்பட்டு என்னை இழுத்தாற் கபடமனமாகிய கப்பல் எங்கே போய்விடுமோ? தெரியாது. (எ-று) (212)

848. எக்கலையுங் கற்றுணர்ந்தோ மென்றவர்க்குஞ் சம்மதஞ்சொல்
வக்கணையால் இன்பம் வருமோ பராபரமே.

(பொ-ரை) எப்படிப்பட்ட சாத்திரங்களையும் நாங்கள் கற்றுக் கொண்டோ மென்று சொல்லுகின்றவர்களுக்கும் சம்மதஞ் சொல்லுகின்ற வக்கணையினாற் சுகம் கிடைக்குமோ? கிடையாது. (எ-று) (213)

849. கல்லெறியப் பாசிகலைந்துநன்னீர் காணும் நல்லோர்
சொல்லுணரின் ஞானம்வந்து தோன்றும் பராபரமே.

(பொ-ரை) கல்லை வீசியெறிந்தால் அந்நீரிலுள்ள பாசியானது விலகிப் போய் நல்ல நீரானது வெளிப்படும்; அதுபோல பெரியோர்களுடைய உபதேச வார்த்தைகளை ஆராய்ந்தறிந்தால் மெள்ள ஞானமானது வந்து வெளிப் படும். (எ-று) (214)

850. நின்னையுணர்ந் தோர்கடமை நிந்தித்த பேயறிஞர்
என்ன கதிபெறுவார் எந்தாய் பராபரமே.

(பொ-ரை) உன்னை உள்ளபடியே உணர்ந்த பெரியோர்களை நிந்தித்த அறிவீனர்கள் என்ன நரகத்தையடைவார்களோ தெரியாது? (எ-று) (215)

851. என்னதுயான் என்னல்அற்றோர் எங்கிருந்து பார்க்கினும்நின்
சன்னிதியாம் நீபெரிய சாமி பராபரமே.

(பொ-ரை) எனது யான் என்று சொல்லுவதாகிய மமகார அகங்காரங் களை அறவேயொழித்த பெரியோர்கள் எங்கிருந்து பார்த்தாலும் அவ்வவ் விடங்களில் உன் சந்நிதியாகவே அவர்களுக்குத் தோன்றும். (எ-று) (216)

**852. சோற்றுத் துருத்திச் சுமைசுமப்பக் கண்பிதுங்கக்
காற்றைப் பிடித்தலைந்தேன் கண்டாய் பராபரமே.**

(பொ-ரை) சோற்றுச் சுமையாகிய இந்த உடம்பைப் பாதுகாக்கும் நிமித்தம் நான் அநேக காலம் மூச்சையடக்கி அதனால் வருத்தப்பட்டு திரிந்தேன். (எ-று) (217)

**853. உள்ளபடி யொன்றை உரைக்கின் அவர்க் குள்ளுறவாய்க்
கள்ளமின்றி அன்பாய்க் களிப்பேன் பராபரமே.**

(பொ-ரை) ஒருவர் ஒரு பொருளை உண்மையாகச் சொன்னால் அவர்களுக்குட் கலந்து உறவாகி வஞ்சகமமில்லாமல் விருப்பத்தோடு சந்தோஷிப்பேன்.(218)

**854. அடுத்தஇயல் பாகவொன்றை யான்பகர்வ தல்லால்
தொடுத்ததொன்றை யான்வேண்டிச் சொல்லேன்
பராபரமே.**

(பொ-ரை) நியாயமாக ஒரு பொருளை எடுத்துப் பேசுவேனேயல்லாமற் பட்சபாதமாக மாத்திரம் பேச மாட்டேன். (எ-று) (219)

**855. உள்ளமறி யாதொருவர் ஒன்றை உன்னிப் பேசில்ஐயோ
துள்ளியிளங் கன்றாய்த் துடிப்பேன் பராபரமே.**

(பொ-ரை) ஒருவர் என் மனக்கருத்தையறிந்து கொள்ளாதபடி தங்கள் கருத்துக்கிசையப் பேசுவார் களானால் நானோ இளங்கன்றானது துள்ளுவது போல் துள்ளித் துடிப்பேன். (எ-று) (220)

**856. எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.**

(பொ-ரை) யாவரும் இன்பத்தைப் பெற்றிருக்கும்படி நான் நினைப் பேனேயொழிய வேறுபொருளை நினைக்க மாட்டேன். (எ-று) (221)

அப்படி நினைக்கும் என்னைக் கைவிடுதல் முறையாமோ? என்பது வினா.

**857. முன்னாள் மெய்ஞ் ஞான முனிவர்தவம் ஈட்டுதல்போல்
இந்நாளிற் காணஎனக் கிச்சை பராபரமே.**

(பொ-ரை) பூர்வத்தில் மெய்ஞ்ஞானத்தை அடைந்த முனிவர்கள் தவப்பொருளைத் தேடிச் சேர்த்தலைப்போல

இந்தக் காலத்திலும் நான் சேகரிக்கும்படியான விருப்பம் எனக்கு இருக்கின்றது. (எ-று) (222)

858. கன்மமென்ப தெல்லாங் கரிசறவே மெய்ஞ்ஞான
தன்மநிலை சார்ந்ததன்பர் தன்மை பராபரமே.

(பொ-ரை) அன்பர்களுடைய தன்மையாவது கருமங்களை யெல்லாம் ஒழித்து மெய்ஞ்ஞான நிலையிற் சார்ந்ததுவேயாகும். (எ-று) (223)

859. கண்துயிலா தென்னறிவின் கண்ணூடே காட்சிபெற
மண்டிய பேரொளிநீ வாழி பராபரமே.

(பொ-ரை) எக்காலத்தும் கண்ணுறங்காத என்னுடைய அறிவின்கண் நான் கண்டுகளிக்கும்படியிருந்த மிக்க பேரொளி நீயேயாவாய். ஆகையால் நீ வாழக் கடவாய். (எ-று) (224)

860. நானான தன்மையென்று நாடாமல் நாடஇன்ப
வானாகி நின்றனைநீ வாழி பராபரமே.

(பொ-ரை) நானென்கிற தன்மையை எப்பொழுதும் விரும்பாமல் நீ நாங்களெல்லாம் நாடும்படி சுகவெளியாய் நின்றாய். ஆகையால் நீ வாழக்கடவாய் (எ-று) (225)

861. அகத்தூ டணுவணுவாய் அண்டமெல்லாந் தானாய்
மகத்தாகி நின்றனைநீ வாழி பராபரமே.

(பொ-ரை) என் மனத்தின்கண் அணுவளவாகியும் அண்டங் களெல்லாம் தானேயாகியும் மகத்தாகி நின்றாய். ஆகையால் நீ வாழக் கடவாய். (எ-று) (226)

862. காரகமாங் கர்ப்ப அறைக் கண்ணூடும் என்கண்ணே
வாரம்வைத்துக் காத்தனை நீ வாழி பராபரமே.

(பொ-ரை) கறுப்பான கர்ப்பவறையிலும் என்னிடத்தில் அன்பு வைத்து ரட்சித்தாய். ஆகையால் நீ வாழக் கடவாய். (எ-று) (227)

863. புரந்தோர்தந் தேசமென்பார் பூமியைப் போராடி
இறந்தோருந் தம்மதென்பார் என்னே பராபரமே.

(பொ-ரை) நிலத்தை ஆண்டவர்கள் அதனைத் தம் நாடென்று கூறினர். அந்நிலத்தின் பொருட்டுப் பெரும்போர் செய்து இறந்தவரும் தம்முடைய நில்மென்று கூறினர்.

இஃதென்ன வியப்பு? (இருவரில் எவரும் நிலையாக விருந்து வாழ்ந்தாரல்லர்.) (228)

864. மூர்த்தியெல்லாம் வாழியெங்கள் மோனகுரு வாழிஅருள்
வார்த்தையென்றும் வாழிஅன்பர் வாழி பராபரமே.

(பொ-ரை) உடையாள் எனப்படும் மகேசுரவடிவம் இருபத்து நான்கும் வாழ்க; அடியேனை ஆளாக் கொண்டருளிய மோனகுரு வாழ்க; திருவருள் மொழியாம் "சிவசிவ" என்னும் சித்தாந்தப் பெருமொழி என்றும் வாழ்க. மெய்ம்மை நீங்கா மேலாம் காதல்சேர் சிவனடியார்கள் வாழ்க.

(வி-ம்) மூர்த்தியின் இயல்பு முன்னோன் உணர்வின் கண் முன்னும் முன்னத்தின் குறிப்பு வடிவேயாம். இஃது எழுத்திற்குக் கூறப்பட்ட வரிவடிவு போன்றாகும். தெய்வத் திருவுருவத் தெய்வத்துணர் நினைவாம், உயர் வுலகுயிர்க்காவுற்று. (229)

865. சொல்லும் பொருளுந் தொடரா அருள்நிறைவில்
செல்லும் படிக்கருள்நீ செய்தாய் பராபரமே.

(பொ-ரை) திருவருளை முன்னிட்டல்லாமல் சொல்லாலும் பொருளாலும் தொடரவொண்ணாத நின்திருவடி நிறைவில் அடியேன் சென்று சேரும்படி நீ திருவருள் செய்தனை. (230)

866. இற்றைவரைக் குள்ளாக எண்ணரிய சித்திமுத்தி
பெற்றவர்கள் எத்தனைபேர் பேசாய் பராபரமே.

(பொ-ரை) ஆண்டவனருளால் மீண்டும் உலகு உளவான காலந் தொட்டு இந்நாள்வரை அகத்தவப்பயனாம் எண்பெரும் பேறு பெற்றவர்களும், திருவருளால் செம்பொருட்டுணிவின் சிறப்பாம் திருவடிப் பேறுபெற்றுப் பேரின்பந்துய்ப்பவர்களும் எத்தனைப்பேர்? திருவாய் மலர்ந்தருள்வாயாக, (அளவிலர் என்பதாம்.)

(வி-ம்) சித்தி-அட்டமாசித்தி. முத்தி- சுத்தாத்துவித சித்தாந்த வைதிக சைவ முத்தி. (231)

867. நாடும் நகரும்நிசா னாட்டிய பாளயமும்
ஈடுசெயு மோமுடிவில் எந்தாய் பராபரமே.

(பொ-ரை) ஆட்சிக்குரிய நாடும் நகரும், ஆட்சியின் அடையாளமாகிய கொடியும், நால்வகைப் படைகளும்

முடிவு காலத்தில் பெருமையைக் கொடுக்குமோ? எந்தையே! (கொடா வென்பதாம்.) நிசான்-கொடி. பாளயம் - படை.(232)

868. தேடுந் திரவியமுஞ் சேர்ந்தமணிப் பெட்டகமுங்
கூட வருந்துணையோ கூறாய் பராபரமே.

(பொ-ரை) அரும்பாடுபட்டுத் தேடித் தொகுத்த பெரும் பொருளும், அப் பொருள்களுடன் மணிகளும் வைத்துப் பூட்டப்பட்டுள்ள அழகிய பேழைகளும் ஒருவர் இறக்குங்காலத்து அவருக்கு வழித்துணையாகக் கூட வருவதுண்டோ? திருவாய் மலர்ந்தருள்வாயாக, (வாராஎன்பதாம்.) (233)

869. தேடாத தேட்டினரே செங்கைத் துலாக்கோல்போல்
வாடாச் சமனிலையில் வாழ்வார் பராபரமே

(பொ-ரை) எளிதில் எல்லாராலும் தேடமுடியாத அன்பராயினார்க்குத் திருவருளால் வந்து பொருந்திய திருவடிச் செல்வத்தையுடையவரே, வணிகர்தம் கோடாத செங்கையில் தாங்கும் துலாக்கோல் போல் பெருக்கத்து மகிழாமலும் சுருக்கத்து வருந்தாமலும் சமனிலையாக நிற்பர். அவர்தம் வாழ்வே அருள்வாழ்வாகும். (234)

870. நீராய்க் கசிந்துருகி நெட்டுயிர்த்து நின்றேனைப்
பாராத தென்னோ பகராய் பராபரமே.

(பொ-ரை) நின்திருவடியினைக் காணப் பெறாது உள்ளம் கசிந்து நீராய் உருகிப், பெருமூச்சுவிட்டு நின்ற அடியேனைத் தேவரீர் திருக்கடைக்கண் பாராத தென்னையோ? திருவாய் மலர்ந்தருள்வீராக. (235)

871. உள்ள பொருள்ஆவி உடல்மூன்றும் அன்றேதான்
கொள்ளைகொண்ட நீயென் குறைதீர் பராபரமே.

(பொ-ரை) தேவரீரால் கொடுக்கப்பட்டு அடியேன்பால் இரவாக நின்றுள்ள "ஆவியும் உடலும் உடைமையும்" ஆகிய மூன்றும் தேவரீர் மோன குருவாக எழுந்தருளிய காலத்தே அடியேன் ஒப்புவிக்க ஏற்றுக் கொண்டருளினீர். அத்தகைய நீர் எளியேன் குறைகளைத் தீர்த்தருளுதல் வேண்டும். (236)

872. ஆழ்ந்தாயே யிவ்வுலகில் அல்லலெல்லாந் தீர்ந்தருளால்
வாழ்ந்தாயே என்றனைநீ வாழி பராபரமே.

(பொ-ரை) (நாயனீர் சிவகுருவாய் எழுந்தருளி வந்து அடியேனை ஆட்கொண்டருளிய காலத்தில்) எளியேனை நோக்கி நீ இத்தனை காலமும் இவ்வுலக மயக்கில் சிக்கி ஆழ்ந்துழன்றனையே, அத்துணை அல்லல் அனைத்தும் திருவருளால் நீங்கி வாழ்ந்தனையே என்று நீ திருவாய் மலர்ந்தருளினை; நின் திருவடி வாழ்க. (237)

873. தாரா அருளையெல்லாந் தந்தெனையும் நின்னருளில்
வாராயோ என்றனை நீ வாழி பராபரமே.

(பொ-ரை) அந்நாளில் (தகுதியில்லாத எளியேனுக்குத்) தருதற்குப் பொருத்தமில்லாத நின்திருவருள் முழுவதையுந் தந்து அடியேனையும் நின்திருவருளால் வருவாயாகவென்று கூவி அழைத்தருளினை, அங்ஙனம் திருவாய் மலர்ந்தருளிய நாயனீர் வாழ்க.

(வி-ம்) முதற்கண் திருவருளைத் தருதல் ஒருவன் தூய்மை எய்துதற் பொருட்டு அவனைத் திருத்தநீரின்கண் மூழ்குவித்த லோடொக்கும். பின்னர்த் திருவருளில் வருமாறழைத்தல் தூய்மை எய்தியவன் தொழுது முன்னின்று பத்தராகும் படி செய்த லோடொக்கும். இதுபோன்றதே ஆருயிர்களை அருள்வழிபட்டு ஒழுகுமாறு செய்தல். (238)

874. ஆசையுன்மீ தல்லால் அருளறிய வேறுமொன்றில்
பாசம்வையேன் நின்கருணைப் பாங்காற் பராபரமே.

(பொ-ரை) தேவரீருடைய திருவருட் பாங்கினால் அடியேன் காதல் நின்திருவடிக்கண்ணேயாம்; நின் திருவருளறிய வேறு ஒரு பொருளின் கண்ணும் விருப்பம் வையேன். (239)

875. ஆதியந்த நீகுருவாய் ஆண்டதல்லால் நின்னையன்றிப்
போதனையும் உண்டோ புகலாய் பராபரமே.

(பொ-ரை) தேவரீர் குருவாய் எழுந்தருளி வந்து அடியேனைத் தடுத்தாட்கொண்டருளிய தொடக்கத்திலும் தேவரீரே வந்ததல்லாமல் வேறில்லை. அதுபோல் முடிவிலும் நின்திருவடியை யன்றி வேறு மொரு போதனையுமுண்டோ? புகன்றருள்வாயாக. (240)

876. தானாக வந்து தடுத்தாண் டெனையின்ப
வானாகச் செய்தஇன்ப வானே பராபரமே.

(பொ-ரை) அடியேனை ஆண்டருளும் பொருட்டு நாயனீர் தானாக வலியவந்து தடுத்தாண்டு எளியேனை இன்பவானெனப்படும் திருச்சிற்றம் பலத்தின்கண் ணாக்கின பேரின்பப் பெருவெளியே. *(241)*

877. பற்றற் றிருக்கு நெறி பற்றிற் கடல்மலையுஞ்
சுற்ற நினைக்குமனஞ் சொன்னேன் பராபரமே.

(பொ-ரை) உலகியற் பொருள்களில் பற்றுக் கொள்ளாது (நின்திருவடியே பற்றாக) இருக்கு நன்னெறியில் அடியேன் உறைத்து நிற்க விரும்பினால் எளியேன் மனம் ஆழ நீளம் அகலம் அறிய வொண்ணாக் கடலினும் மலையினும் சுற்றித் திரிய எண்ணி முனைகின்றது. இதனைத் தேவரீர் திருமுன் விண்ணப்பித்துக் கொள்கிறேன். (நின்திருவருள் அம் மனத்தினை அடக்கியருள வேண்டும் என்பது விண்ணப்பம்). *(242)*

878. படிப்பற்றுக் கேள்வியற்றுப் பற்றற்றுச் சிந்தைத்
துடிப்பற்றார்க் கன்றோ சுகங்காண் பராபரமே.

(பொ-ரை) உலகியற் கருவி நூல்களைப் படிப்பதும் அமைந்து படித்தார் சொல்லக் கேட்பது நீங்கி, உலகியற் பொருள்களில் ஒரு சிறிதும் பற்றில்லாமல், உள்ளத் துடிப்புகளும் இல்லாமல் நன்னெறியின்கண் உறைத்து நின்றவர்க் கன்றோ திருவடிப்பேரின்பம் உண்டாகும்? (243)

879. சத்தாகி நின்றோர் சடங்க ளிலிங்கமென
வைத்தாரும் உண்டேயென் வாழ்வே பராபரமே.

(பொ-ரை) அடியேனின் பெருவாழ்வே! சிவமாந் தன்மை அடைந்த சிறப்பினத்தார் என்றும் பொன்றாத் திருவுரு உடையவராவர். அவர்தம் திருமேனியை இவ்வுலகின்கண் சிவக்குறிவடிவமாகத் திருவருளால் வைத்தவரும் உளரோ?

(வி-ம்) பட்டினத்துப் பிள்ளையார் திருவொற்றியூரின் கண் திருவருளால் தம் தூய உடம்பினைச் சிவக்குறியாக அமைத்துத் திருவடி சேர்ந்தனர் என்பது உலகறியுண்மை.
(244)

880. சித்த நிருவிகற்பஞ் சேர்ந்தார் உடல்தீபம்
வைத்தகர்ப் பூரம்போல் வயங்கும் பராபரமே.

(பொ-ரை) உள்ளத்தின்கண் வேறெந் நினைப்புமின்றித் திருவடி நினைப்பு ஒன்றேயாய் நின்றவர் வேறுபாடியல்லாத சமாதியென்னும் நிட்டையினை எய்தியவராவர். அவர்தம் திருமேனி தீபத்தின்கண் வைக்கப் பட்ட கருப்பூரம் போன்று ஒளியாகவே விளங்கும்.

(வி-ம்) மணிவாசகர் என்னும் ஆளுடைய அடிகள் திருவருளால் பாடியருளிய திருவாசகம் திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் இருபெருந் தனித்தமிழ் மறைகளை அந்தணத் திருக்கோலத்துடன் எழுந்தருளி வந்து எழுதியருளிய அம்பலவாணரே அம் மறைகளுக்குரிய செம் பொருளாவர். அவரே இத் தில்லைத் திருச்சிற்றம்பலவரென அம்பலவாணர். திருமுன்நின்று உணர்த்தியருளினர். அக்கணமே அடிகள் கருப்பூர தீபம் போன்ற கூத்தப் பெருமான் பேரொளியில் ஒன்றிக் கலந்து ஒளியாய் உடனானார். (245)

881. ஆதிகா லத்தில்எனை ஆண்டனையே இப்பால்நீ
போதியெனில எங்கேநான் போவேன் பராபரமே.

(பொ-ரை) அடியேனைத் தடுத்தாட்கொண்டருளிய பழங்காலத்தே எளியேனை ஆண்டுகொண்டருளினை; இப்பொழுது ஏழையேனை நீ போவாயாக என்றருளினால், நாயேன் எங்கே போவேன்? (246)

882. நாவழுத்துஞ் சொல்மலரோ நாளுதிக்கும் பொன்மலரோ
தேவையுனக் கின்னதென்று செப்பாய் பராபரமே.

(பொ-ரை) திருவருளால் மெய்யடியார்கள் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் தம் நாவினால் வழுத்திப் பாடும் தூய சொன்மலரோ? அல்லது நீர்ப்பூ, நிலப்பூ, கோட்டுப்பூ, கொடிப்பூ என் சொல்லப்படும் நால்வகை நறுமணப் பூக்களை அவை போதாகி ஒவ்வொரு நாளும் நிற்கும் நிலையில், எடுத்துக் கொண்டு வந்து நறுமணமாலை கட்டி நின்திருவடிக்குச் சாத்தி வழிபடச் செய்யும் பொன்மலரோ? உனக்குப் பெருவிருப்பமுள்ளது. இறைவன் பாமாலைக்கு மிகுந்த பரிவுகொள்வன். (247)

883. கன்னல்தரும் பாகாய்க் கருப்புவட்டாய்க் கற்கண்டாய்
இன்னமுதாய் என்னுள் இருந்தாய் பராபரமே.

(பொ-ரை) தேவரீர் அடியேன் மனத்தகத்து இனிய கரும்பினின்று காய்ச்சி எடுக்கப்படும் வெல்லப் பாகும். வெல்லக் கட்டியும், கற்கண்டும், இனிய அமுதமும் போன்று மாறா இன்பந்தந்து கொண்டிருக்கின்றீர். (248)

884. சிற்பரமே தற்பரமே தெய்வச் சுருதிசொன்ன
அற்புதமே அன்பே அறிவே பராபரமே.

(பொ-ரை) மேலான வாலறிவனே, தன்னொப்பாரில்லா மேலோனே, தெய்வத் தமிழ்மறையாகத் திகழ்வோனே, அம்மறைக் கண் எடுத்தோதப்படும் வியத்தகு மறைப்பெருமானே, அன்புருவானவனே, இயற்கை யுணர் வினனே. (249)

885. அறிவிப்பான் நீயென்றால் ஐம்புலன்க டந்தந்
நெறிநிற்பார் யாரே நிகழ்த்தாய் பராபரமே.

(பொ-ரை) (தேவரீர்) அவரவர் வினைக்கீடாக அவரவர் மனத் தகத்திருந்து அறிவித்தருள்கின்றவன் நீயே ஆவாய். அங்ஙனமாயின் தாமாக ஐம்பொறிகளையும் அடக்கி நன்னெறிப்படர்ந்து அம் மேலான உணர்வு நெறியில் நிற்கும் மேலோர் யாவரோ? நிகழ்த்தியருள்வாயாக. (பள்ளி மாணவன் நல்லாசான் துணைகொண்டு வல்லவாறு முயன்று கற்பதற் கேற்றவாறு அவ்வாசானால் அவன் மேல்வகுப்பின்கண் வைக்கப்படுவன்.) அதுபோல் நன்னெறி நாற்படியிலொழுகு வாரை நாயனே மேல் நிலையில் நிறுத்துவன். (250)

886. அந்தக் கரணமெனும் ஆகாத பேய்கள் எனை
வந்துபிடித் தாட்ட வழக்கோ பராபரமே.

(பொ-ரை) மனத்தின் ஒரு நிலையாகிய தூக்கியெண்ணும் சித்தமும், நினைந்து ஐயுறும் மனமும், முனைந்துகாண முற்பட எழும் ஆங்காரமும், கொள்ளவும் தள்ளவும் வினைக்கீடாக ஆய்ந்து உறுதி செய்யும் புத்தியும் என்று சொல்லப்படும் அந்தக்கரணங்கள் நான்கும், அடியேனுக் கொவ்வாத பேய்களாய் வந்து எளியேனைப் பிடித்து ஆட்டல் முறையோ? (251)

887. ஐவரொடுங் கூடாமல் அந்தரங்க சேவைதந்த
தெய்வ அறிவே சிவமே பராபரமே.

(பொ-ரை) அடியேன் ஐம்பொறிகளின் வழிச் செல்லாமல், நின் திருவருள் வழிச் செல்லுமாறு, தனிப்பெருங் காட்சியினை அடியேனுக்குக் குருவாக எழுந்தருளி வந்து தந்தருளிய தெய்வ அறிவே, "சிவனெனு நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மா"னாகிய செம்பொருளே. *(252)*

888. அருளாகி நின்றசுகம் ஆகாமல் ஐயோ
இருளாகி நிற்க இயல்போ பராபரமே.

(பொ-ரை) திருவருள் விலாசமாயிருந்த இன்பத்தையடையாமல் அஞ்ஞானத்தையடைந்து நிற்பது சுபாவந்தானோ? (எ-று) *(253)*

889. அன்பரெல்லாம் இன்பம் அருந்திடவும் யான்ஒருவன்
துன்புறுதல் நன்றோநீ சொல்லாய் பராபரமே.

(பொ-ரை) உனக்கு வேண்டிய அடியார்களெல்லாம் சுகாமிர்தத்தை உண்டிருக்கவும் நான் ஒருவன் மாத்திரம் துன்பத்தை அடைந்திருப்பது நன்றுதானோ? நீயே திருவருள் செய்ய வேண்டும். (எ-று) *(254)*

890. சந்ததமும் நின்கருணை சாற்றுவதல் லால்வேறு
சிந்தைஅறி யேன்உன் சித்தம் பராபரமே.

(பொ-ரை) நானோ எக்காலத்திலும் உன்னுடைய திருக்கருணையையே எடுத்துப் பேசுவேனேயொழிய வேறு எண்ணம் எனக்கில்லை. ஆனாலும் என்னையாளும் திறத்தைக் குறித்து உன்னுடைய சித்தம் எப்படியிருக்கின்றதோ? தெரியவில்லை. (எ-று) *(255)*

891. நான் நான் எனக்குளறும் நாட்டத்தால் என்னைவிட்டுப்
போனாலும் உன்னைவிட்டுப் போகேன் பராபரமே.

(பொ-ரை) நான் குளறுபடையாகப் பேசுகின்ற அகங்காரத்தினால் நீ எனக்கருள் செய்வதைவிட்டு வேறொருவருக்கு அருள் செய்யப் போய் விட்டாலும் நான் உன்னை விடமாட்டேன். (எ-று) *(256)*

892. இக்காயம் பொய்யென்றோர் ஈட்டத் துனக்கபயம்
புக்காதார் உண்டோ புகலாய் பராபரமே.

(பொ-ரை) இந்தத் தேகமானது நிலையற்றது என்று சொல்லுகின்ற பெரியோர்களுடைய கூட்டத்தில்

உன்னிடத்தில் அடைக்கலம் புகாதாருண்டோ? இல்லை அப்படியிருந்தால் நீயே திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (257)

**893. தானாதல் பூரணமே சாருமிடம் உண்டுயிரும்
வானாதியும் ஒழுங்காய் மன்னும் பராபரமே.**

(பொ-ரை) சர்வ ஜீவராசிகளிலும் கிரமப்படியே வீற்றிரா நின்ற கடவுளே! தானே தன்மயமுதலாகிய உன்னுடைய பரிபூரணமே எனக்குச் சார்ந்தற்குரிய இடமாகும். (எ-று) (258)

**894. உன்னுமனங் கர்ப்பூர வுண்டைபோ லேகரைய
மின்னும்ஆ னந்த விளக்கே பராபரமே.**

(பொ-ரை) நினைக்கின்ற மனமானது கர்ப்பூரவுண்டை கரைவது போற் கரையும்படி விளங்குகின்ற இன்பத் தீபமே. (எ-று) (259)

**895. நாட்பட் டலைந்த நடுக்கமெலாந் தீரவுனக்
காட்பட்டுத் துன்பம்எனக் காமோ பராபரமே.**

(பொ-ரை) நான் நெடுநாளாக அலைந்த துன்ப மெல்லாம் தீரும்படி உனக்கு அடிமைப்பட்டும் எனக்குத் துன்பம் ஒழியாதிருப்பதற்குக் காரணம் என்னவோ? தெரியாது. (எ-று) (260)

**896. பாவிபடுங் கண்கலக்கம் பார்த்துமிரங் காதிருந்தால்
ஆவிக் குறுதுணையார் ஐயா பராபரமே.**

(பொ-ரை) பாவியாகிய நான் அநுபவிக்குந் துன்பத்தை நீ பார்த்திருந்தும் மனமிரங்காதிருப்பாயானால் என்னுயிர்க்குத் துணையாயிருப்பவர் வேறு யாவரிருக்கின்றனர்? (எ-று) (261)

**897. நின்னிறைவே தாரகமாய் நின்றுசுகம் எய்தாமல்
என்னிறைவே பாவித்தேன் என்னே பராபரமே.**

(பொ-ரை) உன்னுடைய பரிபூரணத்தையே ஆதாரமாகக் கொண்டு சுகத்தையடையாமல் என்னுடைய பரிபூரணத்தையே ஆதாரமாக நினைத்தேன். இதுவென்ன விபரீதமோ? தெரியாது (எ-று) (262)

898. நின்னைச் சரண்புகுந்தால் நீகாக்கல் வேண்டுமல்லால்
என்னைப் புறம்விடுதல் என்னே பராபரமே.

(பொ-ரை) நான் உன்னைத் தஞ்சமென்றடைந்தால் நீ என்னைக் காப்பாற்றாமல் வீணே விட்டுவிடுதல் என்ன விபரீதமோ? (எ-று) *(263)*

899. மாறாத துன்பமெல்லாம் வந்துரைத்தால் நின்செவியில்
ஏறாத வாறே தியம்பாய் பராபரமே.

(பொ-ரை) நான் நீங்காத துன்பங்களையெல்லாம் எடுத்துச் சொன்னால் நீ திருச்செவியிற் சார்த்திக் கொள்ளாதது எற்றுக்கோ? அதனை நீயே திருவாய் மலரவேண்டும். (எ-று) *(264)*

900. விஞ்சுபுலப் பாடனைத்தும் வீறுதுன்பஞ் செய்யவந்த
அஞ்சுபுல வேடருக்கும் ஆற்றேன் பராபரமே.

(பொ-ரை) விளங்குகின்ற ஞானத்தை அறவே கெடுக்க வந்த ஐம்புலன்களாகிய வேடர் செய்யும் துன்பங்களுக்கும் நான் சகியேன். (எ-று) *(265)*

901. கன்னங் கரியநிறக் காமாதி ராட்சசப்பேய்க்
கென்னையிலக் காகவைத்ததென்னே பராபரமே.

(பொ-ரை) மிகவும் இருண்ட நிறத்தையுடைய, காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியங்களாகிய ராட்சசப் பிசாசுகளுக்கு என்னை ஒரு அறிகுறியாக வைத்தது எற்றுக்கோ? அறியேன். (எ-று) *(266)*

902. சித்திநெறி கேட்டல் செகமயக்கஞ் சன்மமற
முத்திநெறி கேட்டல் முறைகாண் பராபரமே.

(பொ-ரை) சகல சித்திகளையும் அடையும்படியான மார்க்கத்தைக் கேட்பது உலகமயக்கமாகும். ஆகையாற் பிறவித்துன்பம் ஒழிதற்குக் காரணமான மோட்ச மார்க்கத்தைக் கேட்பதுவே முறைமையாகும்.(எ-று)

மோட்சமார்க்கமே நன்மையைக் கொடுப்பதாகையால் அதையே விரும்ப வேண்டும் என்பது கருத்து. *(267)*

903. சிந்தை சிதையச் சிதையாத ஆனந்தம்
எந்தவகை யாலேவந் தெய்தும் பராபரமே.

(பொ-ரை) மலமானது கசிந்துருகும்படி எப்பொழுதும் அழியாத பேரின்பமானது எனக்கு எந்த வகையில் வந்து கைகூடுமோ? தெரியாது (எ-று)

ஆனால் என்னிடத்தில் உன்னுடைய திருவருளிருக்கும் வரைக்கும் எனக்கு யாதொரு பயமுமில்லை என்பது குறிப்பு. (268)

904. கூர்த்தஅறி வால் அறியக் கூடா தெனக்குரவன்
தேர்த்தபடி தானே திரிந்தேன் பராபரமே.

(பொ-ரை) கூரியபுத்தி இருந்ததினாலேயே எம்பெருமானை அறியக் கூடுமோ? கூடாது என்று என்னுடைய ஆசாரிய சுவாமி திருவாய் மலர்ந்த பிரகாரமே நான் திரிந்தேன். (எ-று) (269)

905. பத்த ரருந்தும் பரமசுகம் யானருந்த
எத்தனை நாள் செல்லும் இயம்பாய் பராபரமே.

(பொ-ரை) கடவுளே! உன்னுடைய அன்பர்களால் அநுபவிக்கப்படும் பேரின்ப சுகத்தை நான் அநுபவிக்க எத்தனை நாள் பிடிக்குமோ? அதை நீயே திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (270)

906. தீரத்தி னால்துறவு சேராமல் இவ்வுலகில்
பாரத் தனம்பேசல் பண்போ பராபரமே.

(பொ-ரை) தைரியத்தினால் துறவறத்தைச் சேர்ந்து திரியாமல் இவ்வுலகத்தினிடமாகப் பெருமிதம் பேசுவது நியாயந்தானோ? (எ-று) (271)

907. இந்த வெளியினையுண் டேப்பமிடப் பேரறிவாத்
தந்தவெளிக் கேவெளியாய்ச் சார்ந்தேன் பராபரமே.

(பொ-ரை) இந்தச் சிதாகாயத்தை உண்டு அநுபவித்து ஏப்பமிடுவதற்குப் பெரிய அறிவாக வந்த பேராகாயத் திலேயே நானும் வெளியாகச் சேர்ந்து விட்டேன். (எ-று) (272)

908. உணர்த்தும் உனைநாடா துணர்ந்தவையே நாடி
இணக்குறுமென் ஏழைமைதான் என்னே பராபரமே.

(பொ-ரை) சர்வகிரியைகளையும் அறிவிக்கும் உன்னை நாடிப் பாராமல் என்னால் உணரப்பட்டவைகளையே

நாடிப்பார்த்து வருந்துகின்ற என்னுடைய அறியாமையை நான் என்னவென்று எடுத்துச் சொல்வேன்? (எ-று) (273)

**909. உண்டுபோல் இன்றாம் உலகைத் திரமெனவுள்
கொண்டுநான் பெற்றபலன் கூறாய் பராபரமே.**

(பொ-ரை) இருப்பது போற் காணப்பட்டு இல்லாமையாய் விடும் இந்த உலகத்தை மெய்யாகவெண்ணி நான் அடைந்த லாபத்தை நீயே திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (274)

**910. உள்ளபடி யாதுமென வுற்றுணர்ந்தேன் அக்கணமே
கள்ளமனம் போனவழி காணேன் பராபரமே.**

(பொ-ரை) நானோ எல்லாம் உள்ளபடியே யாகுமென்று பொருந்தி அறிந்து கொண்டேன். அப்படியறிந்த அந்த நேரமே என்னுடைய கள்ள மனமானது எந்த வழி போயிற்றோ? தெரியவில்லை. (எ-று) (275)

**911. சித்த மவுனஞ் செயல்வாக் கெலாமவுனஞ்
சுத்தமவுனம் என்பால் தோன்றிற் பராபரமே.**

(பொ-ரை) சுத்த மௌன ஞானமானது என்னிடத்தில் உண்டாகும் பட்சத்தில் என்னுடைய சித்தம், செய்கை, வாக்கு ஆகிய மூன்று மௌன ஞானத்தையே அடையும். (எ-று)(276)

**912. எண்ணில்பல கோடிஉயிர் எத்தனையோ
அத்தனைக்குங்
கண்ணிற் கலந்தஅருட் கண்ணே பராபரமே.**

(பொ-ரை) அநேகமான ஜீவராசிகளிலும் கலந்திருக்கின்ற திருவருளை யுடைய கண்மணியே! (எ-று)

நீ என்னிடத்திலும் கலந்து என்னை அடிமை கொள்ள வேண்டும் என்பது குறிப்பு. (277)

**913. எனக்கினியார் உன்போலும் இல்லையென்றால் யானும்
உனக்கினியா னாகா வுளவேன் பராபரமே.**

(பொ-ரை) எனக்கு உன்னைப் போல் இனியவர்கள் யாவர்? ஒருவருமில்லை யென்றால் நானும் உனக்கு இனியவனாகாத உளவு என்னை? (எ-று)

நீ எனக்கு இனியவனாயிருக்க நான் உனக்கு இனியவனாகாதது எற்றுக்கு? என்பது வினா. (278)

914. அண்டபிண்டங் காணேன் அகமும் புறமும்ஒன்றாக்
கண்டஎன்னை நீகலந்த காலம் பராபரமே.

(பொ-ரை) உள்ளிலும், வெளியிலும், ஒன்றாகவே கண்டிருக்கின்ற என்னை நீ கலந்த காலத்தில் அண்ட பிண்டங்களை வெவ்வேறாகக் கண்டேனில்லை. (எ-று)

சர்வவியாபகனான நீயே என்னைக் கலந்தபோது வேறொன்றும் முன்னிலையாயிராது என்பது கருத்து. (279)

915. எத்தனையோ கோடி யெடுத்தெடுத்துச் சொன்னாலுஞ்
சித்தம்இரங் கிலைஎன் செய்வேன் பராபரமே.

(பொ-ரை) நான் எவ்வளவோ கஷ்டங்களை எடுத்தெடுத்து முறை யிட்டாலும் உன்னுடைய மனமானது இரங்கவில்லை. ஆகையால் நான் என்ன செய்யமாட்டுவேன்? (எ-று)

உன் சித்தம் இரங்காமைக்குக் காரணம் எனக்குப் பரிபாகம் வராமையேயாம் என்பது கருத்து. (280)

916. அன்றந்த நால்வருக்கும் அற்புதமாய் நீயுரைத்த
தொன்றந்த வார்த்தையெனக் குண்டோ பராபரமே.

(பொ-ரை) நீ அக்காலத்தில் அந்த நான்கு பேருக்கும் திருவாய் மலர்ந்தருளிய ஒரு மொழியாகிய உபதேசம் எனக்கும் இருக்கின்றதா? (எ-று) (281)

917. அப்பனென்றும் அன்னையென்றும் ஆரியனென்றும் உனையே
செப்புவதும் உன்னிலையின் சீர்காண் பராபரமே.

(பொ-ரை) உன்னை, அப்பனென்றும் தாயென்றும், குருவென்றும் சொல்லித் துதிப்பது உன்னுடைய உண்மை நிலையின் சீர்மையாகும். (எ-று) (282)

918. கட்டுங் கனமும் அந்தக் காலர்வரும் போதெதிர்த்து
வெட்டுந் தளமோ விளம்பாய் பராபரமே.

(பொ-ரை) கட்டு, கனம் முதலிய யாவும் அந்த யமபடர்கள் வரும்போது அவர்களை எதிர்த்து நின்று வெட்டுதற்குரிய சேனைகளாகுமா? ஆகா. (எ-று)

ஆகையால் அவைகளையெல்லாம் துணையாக நினைக்க வேண்டாம் என்பது நெஞ்சொடு கிளத்தல். (283)

**919. பேசாத மோனநிலை பெற்றன்றோ நின்னருளாம்
வாசாம கோசரந்தான் வாய்க்கும் பராபரமே.**

(பொ-ரை) பேசப்படாத மௌனநிலையைப் பெற்றாலல்லவர் உன்னுடைய திருவருளாகிய வாசாம கோசரமானது கிடைக்கும். (எ-று)

மௌன நிலையுடையார்க்கே வாசாமகோசரம் கிடைக்கும் என்பது கருத்து. (284)

**920. கற்றாலுங் கேட்டாலுங் காயமழி யாதசித்தி
பெற்றாலும் இன்பம்உண்டோ பேசாய் பராபரமே.**

(பொ-ரை) நல்ல சாத்திரங்களைக் கற்றாலும், நல்ல கேள்விகளைக் கேட்டாலும், தேகம் அழியா திருக்கும் படியான காயசித்தியைப் பெற்றாலும், சுகானந்தமானது உண்டாகுமோ? அதை நீயே திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (285)

**921. கண்டவடி வெல்லாங் கரைக்கின்ற அஞ்சனம்போல்
அண்டமெல்லாம் நின்னருளே அன்றோ பராபரமே.**

(பொ-ரை) தன்னால் தீண்டப்பட்ட ரூபங் களெல்லாவற்றையும் கரைத்து விடுகின்ற பாதாளமை போலச் சர்வ அண்டங்களெல்லாம் உன்னுடைய திருவருள் ரூபமேயாகுமல்லவா? (எ-று) (286)

**922. தன்செயலால் ஒன்றுமிலை தானென்றால் நான்பாவி
நின்செயலாய் நில்லா நினைவேன் பராபரமே.**

(பொ-ரை) என்னுடைய செய்கையால் ஒன்றுமில்லாத போது நான் உன்னுடைய செயலாய் நில்லாமைக்குக் காரணம் என்னையோ? அறிகிலேன். (எ-று)

**923. கொலைகளவு கட்காமங் கோபம்விட்டால் அன்றோ
மலையிலக்கா நின்னருள்தான் வாய்க்கும் பராபரமே.**

(பொ-ரை) நான் என்னிடத்திலுள்ள கொலை, களவு, கள், காமம், கோபம் ஆகிய இவைகளை விட்டாலல்லவோ உன்னுடைய திருவருளானது மலையிலக்காகக் கிடைக்கும். (எ-று) (288)

**924. தன்னைஅறி யாதுசகந் தானாய் இருந்துவிட்டால்
உன்னை அறிய அருள் உண்டோ பராபரமே.**

(பொ-ரை) உலகமே தானாக எண்ணித் தன்னை யுணராதிருந்து விட்டால் உன்னை உணர்வதுமில்லை. (எ-று)

தன்னைத் தானறிதலாகிய பசுஞானம் வந்தாலே தலைவனை யுணரும் பதிஞானம் கிடைக்கும் என்பது கருத்து. (289)

925. ஒன்றிரண்டென் றுன்னா உணர்வுகொடுத் துள்ளபடி
என்றும்என்னை வையாய் இறையே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே ஒன்றென்றும் இரண்டென்றும் நினைக்கப்படாத உணர்வை எனக்குத் திருவருள் செய்து உள்ளபடியே எக்காலத்திலும் அறியப்பெறாத உண்மைநிலையில் என்னை வைத்தருள வேண்டும். (எ-று)

உண்மைநிலையின் தன்மையை ஒன்றென்றும் இரண்டென்றும் சொல்லக் கூடாதென்பார், 'ஒன்றிரண் டென்றுன்னா உணர்வு கொடுத்து' என்றார்.

இதனை,

"என்னாணை யென்னாணை யென்னாணை யேகமிரண்
டென்னாமற் சும்மா விருவென்று-சொன்னான்
திருஞான சம்பந்தன் சீகாழி நாடன்
அருளாளன் ஞானவிநோ தன்"

எனவரும் ஆன்றோர் வாக்கியத்தா னறிக. (290)

926. கருதுமடி யார்கள்உளங் காண வெளியாகுந்
துரியநிறை வான சுகமே பராபரமே.

(பொ-ரை) நினைக்கின்ற அன்பர்களுடைய மனமானது காணும் படியாக வெளிப்படுகின்ற துரிய நிலத்தில் நிறைந்திருக்கின்ற பரிபூரண வின்பமே என்னைச் சீக்கிரத்திலேயே ஆண்டருள் செய்ய வேண்டும். (எ-று) (291)

927. பொய்குவித்த நெஞ்சன் அருட் பொற்பறிந்து திக்கனைத்துங்
கைகு வித்து நிற்பதெந்தக் காலம் பராபரமே.

(பொ-ரை) பொய்யையெல்லாம் சேர்த்து வைத்திருக்கின்ற மனத்தை யுடைய நான் உன்னுடைய குணத்தை யுணர்ந்தும், அஷ்டதிக்குகளிலும் கைகுவித்து நிற்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (292)

928. அத்துவித மான அயிக்ய அனுபவமே
சுத்தநிலை அந்நிலையார் சொல்வார் பராபரமே.

(பொ-ரை) அத்துவிதம் என்று சொல்லப்படுகின்ற இரண்டறக் கலத்தலாகிய நிலையே இன்பநிலையாகும். ஆனால் அந்த நிலையானது இப்படிப்பட்டதென்று சொல்ல வல்லமை யுடையார் யாவரிருக்கின்றனர்? (எ-று)
(293)

929. வைத்த சுவரலம்பின் மண்போமோ மாயையினோர்க்
கெத்தனைபோ தித்தும்என்னாம் எந்தாய் பராபரமே.

(பொ-ரை) வைக்கப்பட்டதான சுவரைக் கழுவினால் அந்தச் சுவரி லிருக்கும் மண்ணானது போய்விடுமோ? போகாது. அதுபோல மாய சம்பந்தப்பட்டவர்களுக்கு என்ன போதித்தாலும் அந்தச் சம்பந்தம் போகாது. (எ-று)

நானும் மாய சம்பந்தனாகையால் எனக்கு எந்தக் காலத்திற்கதிகை கூடுமோ? தெரியவில்லை என்பது குறிப்பு.
(294)

930. பூட்டற்றுத் தேகமற்றுப் போகுமுன்னே நின்னருளைக்
காட்டத் தகா தோஎன் கண்ணே பராபரமே.

(பொ-ரை) கட்டுக்களெல்லாம் கெட்டுச் சரீரம் இறந்துபடாத முன்னமே உன்னுடைய திருவருளைக் கடாட்சிக்கத் தகாதா? (எ-று)

நீ எனக்குச் சீக்கிரமே திருவருள் செய்யாவிட்டால் நான் உஜ்ஜீ விப்பதில்லை என்பது கருத்து. (295)

931. சொல்லிற் பதர்களைந்து சொல்முடிவு காணாதார்
நெல்லிற் பதர்போல் நிற்பார் பராபரமே.

(பொ-ரை) சொற்களில் அப்பிரயோசனமான சொற்களை நீக்கி சொல்லின் அந்தத்தை யறியாதவர். நெல்லிலுள்ள பதர்போலும் பிரயோசனத்தை அடைய மாட்டார்கள். (எ-று)

சொல்லின் முடிவினையை யறிந்தோர் நற்கதியை யடையார் என்பது கருத்து. (296)

932. அழுக்காற் றால்நெஞ்சம் அழுங்கிய புன்மாக்கள்
இழுக்காற்றால் இன்பநலம் எய்தார் பராபரமே.

(பொ-ரை) பொறாமை மிகுதியில் மனவருத்தங் கொண்ட அறிவீனர்கள் தங்களுடைய தீயமார்க்கத்தால் நன்மார்க்கமாகிய (ஞானத்தை) அடைய மாட்டார்கள். (எ-று) *(297)*

933. தேகாதி பொய்யெனவே தேர்ந்தவுப சாந்தருக்கு
மோகாதி உண்டோ மொழியாய் பராபரமே.

(பொ-ரை) தேக முதலிய பொருள்களைப் பொய்யென்று ஆராய்ந் துணர்ந்த பெரியோர்களுக்கு மோக முதலியவை இருக்கின்றனவா? இல்லை. (எ-று) *(298)*

934. சாதனையெல் லாம்அவிழத் தற்போதங் காட்டாதோர்
போதனைநீ நல்குவதெப் போதோ பராபரமே.

(பொ-ரை) நான் செய்யும் சாதனங்களெல்லாம் ஒழியும் படியாக என்னிடத்திலுள்ள தற்போதத்தை நீக்கி ஒரு உபதேசத்தை எனக்கு எந்தக் காலத்தில் திருவருள் செய்வாயோ? தெரியாது. (எ-று)

தற்போதமற்ற விடமே மோட்சமாகையால் அதை வேண்டி இங்ஙனம் கூறினார். *(299)*

935. ஒன்றுமறி யாவிருளாம் உள்ளம் படைத்தெனக்
கென்றுகதி வருவ தெந்தாய் பராபரமே.

(பொ-ரை) யாதொன்றினையும் அறியக்கூடாத அஞ்ஞானாந்த காரமான மனத்தைப் பெற்ற எனக்கு எந்தக் காலத்தில் மோட்ச சாம்ராஜ்ஜியம் கைகூடுமோ? தெரியாது. (எ-று) *(300)*

936. சிந்திக்குந்தோறும் என்னுள் சிற்சு கமாய் ஊற்றூறிப்
புத்திக்குள் நின்ற அருள் பொற்பே பராபரமே.

(பொ-ரை) நான் நினைக்கும் போதெல்லாம் என்மனத்தில் ஞானானந்தமாய் ஊறி, என் மனத்தின் எழுந்தருளியிருந்த திருவருள் அழகே! (எ-று)

நீ என்னைக் கூடிய சீக்கிரத்தில் திருவருள் செய்து இரட்சிக்க வேண்டும் என்பது குறிப்பு. *(301)*

937. என்றும் அடைந்தோர்கட் கிரங்கார் குறிப்பனைத்துங்
கன்றையுதை காலி கதைதான் பராபரமே.

(பொ-ரை) தம்மை யடைந்து யாதாமொன்றை வேண்டிக் கொள்பவர் களுக்கு இரங்காதவர்களுடைய எண்ணமெல்லாம் தன்னிடத்திற் பால் குடிக்க வரும் கன்றை அணுகவொட்டாமல் உதைத்துத் துரத்துகின்ற பசுவின் தன்மையை யொப்பாகும். (எ-று)

தான் பலகாற் சிவபெருமானை வேண்டிக் கொண்டும் திருவருள் செய்யாமையால் இங்ஙனம் கூறினார் என்பது வெளிப்படுகின்றது. (302)

938. குற்றங் குறையக் குணமே லிட அருளை
உற்றவரே ஆவிக் குறவாம் பராபரமே.

(பொ-ரை) தீமைகள் குறையவும், நன்மைகள் அதிகரிக்கவும், உன்னுடைய திருவருளைப் பெற்றவர்களே என்னுடைய உயிர்க் குயிராவார்கள். (எ-று)

மற்றவர்கள எனக்கு அந்நியர்கள் என்பது குறிப்பு. (303)

939. ஒருரையால் வாய்க்குமுண்மைக் கோரனந்த நூல்கோடிப்
பேருரையாற் பேசில்என்ன பேறாம் பராபரமே.

(பொ-ரை) ஒருமொழியால் அடைய விருக்கும் உண்மை நிலையை அடையும் பொருட்டு அநேக சாத்திரங்களைக் கற்றால் என்ன பயன்? ஒன்றுமில்லை. (எ-று) (304)

940. சொல்லுஞ் சமயநெறிச் சுற்றுக்கு ளேசுழலும்
அல்லல் ஒழிவதென்றைக் கையா பராபரமே.

(பொ-ரை) என்னுடைய ஐயனே! சொல்லப்பட்ட சமயமார்க்கங்களாகிய சுழல்களுக்குள் அகப்பட்டுச் சுற்றிச் சுற்றித் திரியும் துன்பமானது எக்காலத்தில் என்னைவிட்டு நீங்குமோ? தெரியவில்லை. (எ-று) (305)

941. பிடித்ததையே தாபிக்கும் பேரா ணவத்தை
அடித்துத் துரத்தவல்லார் ஆர்காண் பராபரமே.

(பொ-ரை) தான் பிடித்த பொருளையே ஸ்தாபிக்கும் தன்மையுடைய பெரிய ஆணவத்தை அடித்து ஓட்டவல்லவர்கள் யாவரிருக்கின்றனர்? (எ-று)

அங்ஙனம் செய்வோர் ஒருவருமில்லை என்றபடி. (306)

942. நேசத்தால் நின்னை நினைக்கும் நினைவுடையார்
ஆசைக் கடலில் அழுந்தார் பராபரமே.

(பொ-ரை) உன்னை யாரொருவர் அன்பினால் நினைக்கிறார்களோ? அவர்கள் ஆசையாகிய சமுத்திரத்தில் அழிந்து போகார். (எ-று) *(307)*

943. கள்ளாது கட்டுணவுங் காரியமோ நான்ஒருசொல்
கொள்ளாத தோடமன்றோ கூறாய் பராபரமே.

(பொ-ரை) நான் ஒரு சொல்லைப் பெற்றுக் கொள்ளாத தோஷத்தாலல்லவா திருடாமலும் கட்டுப்படலாயிற்று. (எ-று) *(308)*

944. சென்றவிட மெல்லாந் திருவருளே தாரகமா
நின்றவர்க்கே ஆனந்த நிட்டை பராபரமே.

(பொ-ரை) தாங்கள், போன விடங்களெல்லாம் திருவருளையே ஆதாரமாகக் கொண்டு நின்றவர்களுக்கே சுகநிட்டையானது கைகூடும். (எ-று) *(309)*

945. நீட்சி குறுகல்இல்லா நித்யசுகா ரம்பசக
சாட்சியாம் உன்னை வந்து சார்ந்தேன் பராபரமே.

(பொ-ரை) நீளுதலும் குறுகுதலுமில்லாமல் எக்காலத்தும் அழியாத சாஸ்வதப் பொருளான சாட்சியாகிய உன்னையே நான் வந்து சரணடைந் தேன். (எ-று) *(310)*

946. வானாதி தத்துவமாய் மன்னிநின்ற காரண நீ
நானாகி நிற்பதெந்த நாளோ பராபரமே.

(பொ-ரை) ஆகாய முதலாகிய தத்துவங்களாக நிலை பெற்றிருக்கின்ற காரண வஸ்துவாகிய நீயே நானா யமர்ந்திருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(311)*

947. காட்டத்தில் அங்கி கடையவந்தால் என்னவுன்னும்
நாட்ட த்தி னூடுவந்த நட்பே பராபரமே.

(பொ-ரை) விறகினைக் கடைய அதனின்றும் உண்டாகும் நெருப்பைப் போல என்னால் நினைக்கப்பட்ட நினைவினிடத்தி லுண்டான சிநேகமே! (எ-று)

நெருப்பானது விறகினிடத்தில் மறைந்திருந்தும் கடைய வெளிப்படுவது போல நீ என்னுள் மறைந்திருந்தும் நான் நினைக்க வெளிப்படுவாயென்பார், இங்ஙனம் கூறினார். இதனை,

" விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போன்
மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்
உறவுகோ னட்டுணர்வு கயிற்றி னால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்பனே"

என்னும் ஆன்றோர் வாக்கியத்தா னறிக. *(312)*

**948. நித்திரையாய்த் தானே நினைவயர்ந்தால் நித்தநித்தஞ்
செத்தபிழைப் பானதெங்கள் செய்கை பராபரமே.**

(பொ-ரை) தினந்தோறும் தூங்கி மனமயர்ந்துவிட்டால் எங்களுடைய செய்கை செத்த பிழைப்பாய் விட்டது. (எ-று) *(313)*

**949. இன்பநிட்டை எய்தாமல் யாதெனினுஞ் சென்றுமனந்
துன்புறுதல் வன்பிறவித் துக்கம் பராபரமே.**

(பொ-ரை) மனமானது பேரின்ப நிட்டையை அடையாமல் எந்தப் பொருளையும் போய்ப் பற்றி அதனால் வருந்துதல் பிறவித் துன்பத்திற் கேதுவாகும். (எ-று)

அப்பற்றுதல் ஒழிந்தால் மோட்சம் கைகூடும் என்பது குறிப்பு. *(314)*

**950. பொய்யகல மெய்யான போதநிலை கண் டோர்க்கோர்
ஐயமிலை ஐயமிலை ஐயா பராபரமே.**

(பொ-ரை) என்னுடைய தலைவனே! பொய்யானது நீங்கும்படி உண்மையாகிய ஞானநிலையைக் கண்டறிந்தவர்களுக்கு யாதொரு விஷயத்திலும் சந்தேகமே இல்லை. (எ-று) *(315)*

**951. மந்திரத்தை உன்னி மயங்கா தெனக்கினியோர்
தந்திரத்தை வைக்கத் தகாதோ பராபரமே.**

(பொ-ரை) நான் மந்திரத்தை உச்சரித்துச்சரித்து அதனால் பிரமையை யடையாமல் எனக்கு இனியா னாலும் ஒரு தந்திரத்தைச் சொல்லி வைக்கலாகாதா? (எ-று)

நீ அப்படி திருவருள் செய்வாயானால் நான் உஜ்ஜீவிப்பதற்கு யாதொரு ஆசங்கையுமில்லை என்பது கருத்து. (316)

952. விண்கருணை பூத்ததென்ன மேவிஉயிர்க் குயிராய்த்
தண்கருணை தோன்ற அருள் தாய்நீ பராபரமே.

(பொ-ரை) ஆகாயமானது திருவருள் மலரைப் பூத்தது போல சர்வஜீவர்களுக்கும் அவரவர்களுடைய உயிர்க்கு யிராய்ப் பொருந்தி தண்ணிய அருளைக் கொடுக்கின்ற தாயே! (எ-று) (317)

953. தன்மயமாய் நின்றநிலை தானே தானாகிநின்றால்
நின்மயமாய் எல்லாம் நிகழும் பராபரமே.

(பொ-ரை) தானே தானேயாய் நிற்கும் உண்மை நிலையில் நின்றால் எல்லாம் உன்னுடைய திருவுருவமாகவே வெளிப்படும். (எ-று)

ஆனால் எனக்கு அந்தநிலை வரவில்லை என்பது குறிப்பு. (318)

954. ஏங்கிஇடை யும்நெஞ்சம் ஏழையைநீ வாவென்றே
பாங்குபெறச் செய்வதுன்மேற் பாரம் பராபரமே.

(பொ-ரை) ஏக்கத்தையடைந்து வாடுகின்ற மனத்தையுடைய ஏழையாகிய என்னை நீ வா, என்று அழைத்து என்னைச் சீர்ப்படுத்துவது உன்னுடைய பாரமாகும். (எ-று) (319)

955. ஆண்டநின்னை நீங்கா அடிமைகள்யாம் ஆணவத்தைப்
பூண்டதென்ன கன்மம் புகலாய் பராபரமே.

(பொ-ரை) எங்களையெல்லாம் அடிமையாகக் கொண்ட உன்னை எக்காலத்தும் பிரிந்திராத அடிமைகள் நாங்கள். அப்படியிருக்க எங்களுக்கு ஆணவமானது மேலிட்டிருப்பது என்ன கருமமோ? அதைத் தேவரீரே திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (320)

956. எங்கணும்நீ யென்றால் இருந்தபடி எய்தாமல்
அங்குமிங்கும் என்றலைய லாமோ பராபரமே.

(பொ-ரை) நீ சர்வவியாபகனாய் எங்குமிருப்பதால் நாங்கள் இருந்த விடத்திலேயே யிருந்து பயனை

அடையாமல் அங்குமிங்கும் அலைந்து திரிவது எற்றுக்கோ? அறியோம். (எ-று) *(321)*

957. கற்குமது வுண்டு களித் தல்லால் நின்னருளில்
நிற்குமது தந்ததுண்டோ நீதான் பராபரமே.

(பொ-ரை) கற்றலாகிய கல்வித் தேனைப் பருகி நான் களித்தேனே யல்லாமல் உன்னுடைய திருவருளில் நிற்கும் படியான வரத்தைத் தந்தாயில்லையே. இதுவென்ன விபரீதமோ? (எ-று) *(322)*

958. அண்டபகி ரண்டம் அறியாத நின்வடிவைக்
கண்டவரைக் கண்டாற் கதியாம் பராபரமே.

(பொ-ரை) சர்வ அண்டங்களிலுள்ளாராலும் அறியப்படாத உன்னுடைய சர்வ வியாபக சொரூபத்தைத் தரிசித்த ஞானிகளை நான் தரிசிப்பேனானால் எனக்கு மோட்ச முண்டாகும். (எ-று) *(323)*

959. கலக்க முற நெஞ்சைக் கலக்கித் திரும்பத்
துலக்குபவன் நீயலையோ சொல்லாய் பராபரமே.

(பொ-ரை) மனத்தைக் கலங்கும்படி கலக்கிப் பின்னர் அதைத் தெளியச் செய்பவனும் நீயே யல்லையோ? ஆம். (எ-று)

மனத்தை முன்னர் மாயையிற் சம்பந்தப்படுத்துங்கால் அது மயங்கு மென்பார், "கலக்கமுற நெஞ்சைக் கலக்கி" எனவும், பின்னர் திருவருட்சத்தியால் அது தெளியுமென்பார், 'திரும்பத் துலக்குபவன்' எனவும், இங்ஙனம் செய்வோன் இறைவனே யென்பார், 'நீயிலையோ' எனவும் கூறினார். *(324)*

960. சிந்தையும் என்போலச் செயலற் றடங்கிவிட்டால்
வந்ததெல்லாம் நின்செயலா வாழ்வேன் பராபரமே.

(பொ-ரை) நான் உன்னுடைய திருவருட் பிரேரகத்தால் அடக்க முற்றிருப்பது போலவே என் மனமும் அடங்கி நிற்குமானால் எனக்கு நேரிடும் ஒவ்வொரு விஷயமும் உன்னுடைய செய்கைகளாகவே பாவனை செய்து வாழ்வேன். (எ-று) *(325)*

961. பந்தமெலாந் தீராப் பரஞ்சோதி நீகுருவாய்
வந்த வடிவை மறவேன் பராபரமே.

(பொ-ரை) ஓ தேஜோமயனே! என்னுடைய பற்றுக்களெல்லாம் அறவே யொழியும்படி நி ஞானாசிரியனாய் எழுந்தருளி வந்த ரூபத்தை நான் ஒருக்காலும் மறக்கமாட்டேன். (எ-று) (326)

962. தானந்த மான சகச நிருவிகற்ப
ஆனந்த நிட்டைஅருள் ஐயா பராபரமே.

(பொ-ரை) என்னுடைய அப்பனே! தனக்குத் தானே முடிவாயிருக்கின்ற சகசநிர்விகற்ப ஆனந்த நிட்டையை அடியேனுக்குத் திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (327)

963. அல்லலெல்லாந் தீரஎனக் கானந்த மாகவொரு
சொல்லைஎன்பால் வைத்ததையென் சொல்வேன்
பராபரமே.

(பொ-ரை) எனக்கிருந்த துன்பங்களெல்லாம் நீங்கும்படி சுகநிலையமாக ஒரு சொல்லை எனக்கு நீ உபதேசித்த திருவருட் பெருமையை நான் என்னவென்று சொல்லுவேன்? (எ-று) (328)

964. சிந்தை மயக்கமறச் சின்மயமாய் நின்றவுன்னைத்
தந்தவுனக் கென்னையும் நான் தந்தேன் பராபரமே.

(பொ-ரை) என்னுடைய மன மயக்கமானது நீங்கும்படி ஞானமயமாய் நின்ற உன்னை எனக்குக் கொடுத்த உனக்கு நானும் என்னைக் கொடுத்தேன். (எ-று) (329)

965. மைகாட்டு மாயை மயக்கமற நீகுருவாய்க்
கைகாட்ட வுங்கனவு கண்டேன் பராபரமே.

(பொ-ரை) அஞ்ஞானாந்தகாரமாகிய மாயையின் மயக்கமானது ஒழியும்படி நீ ஞானாசிரியனாய் எழுந்தருளி வந்து எனக்குச் சின் முத்திரோபதேசஞ் செய்யவும் நான் சொப்பனங்கண்டேன். (எ-று)

நீ செய்த சின்முத்திரோப தேசத்தால் எனக்கிருந்த மாயையானது நீங்கிப் போய் விட்டது என்பது கருத்து. (330)

966. மால்வைத்த சிந்தை மயக்கறஎன் சென்னிமிசைக்
கால்வைக்க வுங்கனவு கண்டேன் பராபரமே.

(பொ-ரை) ஆசையை நிரப்பி வைத்திருக்கின்ற மனமானது தன்னுடைய மயக்கம் ஒழியும்படி என்

சிரசின்மேல் உன்னுடைய திருவடிகளால் தீட்சை செய்யவும் நான் சொப்பனங்கண்டேன். (எ-று) *(331)*

967. மண்ணான மாயையெல்லாம் மாண்டுவெளி யாகஇரு
கண்ணார வுங்கனவு கண்டேன் பராபரமே.

(பொ-ரை) மண்ணான மாயை முழுமையும் இறந்து வெட்ட வெளியாக நான் என்னுடைய கண்களாரக் கனவு கண்டேன். (எ-று) *(332)*

968. மண்ணீர்மை யாலே மயங்காதுன் கையால்என்
கண்ணீர் துடைக்கவும்நான் கண்டேன் பராபரமே.

(பொ-ரை) நான் உலகமாயையால் மயங்கி அழாதபடி நீ உன்னுடைய திருக்கரங்களால் என்னுடைய கண்களினின்று மிறங்கின ஜலத்தைத் துடைக்கவும் நான் கனவு கண்டேன். (எ-று) *(333)*

969. உள்ளத் துணரா வுணர்விலிமா பாவியென்றோ
மெள்ளமெள்ளக் கைநெகிழ விட்டாய் பராபரமே.

(பொ-ரை) உண்மையை உணராத அறிவில்லாத பாவி இவனென்று தானோ என்னை மெள்ள மெள்ளக் கை சோர விட்டாய்? (எ-று) *(334)*

970. எல்லாம் நினதுசெயல் என்றெண்ணும் எண்ணமும்நீ
அல்லால் எனக்குளதோ ஐயா பராபரமே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! எல்லாம் உன்னுடைய செய்கைகளேயென்று எண்ணும் எண்ணமும் நீயே யல்லாமல் வேறில்லை. (எ-று) *(335)*

971. பந்த மயக்கிருக்கப் பற்றொழிந்தேன் என்றுளறும்
இந்த மயக்கம் எனக்கேன் பராபரமே.

(பொ-ரை) எனக்குச் சென்மவாதனையின் மயக்கமிருக்க அதனை நினையாமல் அந்தப் பிறவிப்பற்றை விட்டொழிந்தேனென்று உளறுகின்ற இந்தமயக்கம் எனக்கு ஏன்? (எ-று) *(336)*

972. காட்சியெல்லாங் கண்ணைவிடக் கண்டதுண்டோ யாதினுக்கும்
ஆட்சி உனதருளே அன்றோ பராபரமே.

(பொ-ரை) காட்சி மாத்திரமா அறியப்படுவதற்குக் கருவி கண்ணை யன்றி வேறு இல்லை. அதுபோல எல்லாவற்றிற்கும் ஆட்சியாயிருப்பது உன்னுடைய திருவருளேயாகும். (எ-று) *(337)*

973. எட்டுத் திசையும்ஒன்றாய் இன்பமாய் நின் றவுன்னை
விட்டுப் பிரியவிடம் வேறோ பராபரமே.

(பொ-ரை) எட்டுத் திசைகளிலும் ஒன்றேயாய் வியாபித்து இன்பே உருவமாய் நிலைத்திருந்த உன்னைவிட்டுப் பிரிவதற்கு எனக்கு வேறிட மில்லை. (எ-று) *(338)*

974. பிரியா துயிர்க்குயிராய்ப் பின்னமற வோங்குஞ்
செறிவே அறிவே சிவமே பராபரமே.

(பொ-ரை) நீங்காமல் உயிர்க்குயிராய்க் கண்டிக்கப்படாமல் நின்ற வியாபகப் பொருளே! அறிவே! சிவமே! (எ-று)

என்னை நீயே ஆட்கொள்ள வேண்டும் என்பது குறிப்பு. *(339)*

975. ஏதேது சொன்னாலும் எள்ளளவும் நீயிரங்காச்
சூதே தெனக்குளவு சொல்லாய் பராபரமே.

(பொ-ரை) நான் எவ்வளவாக என்னுடைய குறைகளை எடுத் தெடுத்துச் சொன்ன போதைக்கும் நீ எள்ளளவானாலும் இரங்கி அருள் செய்யாத சூதென்ன? அதை நீயே எனக்குத் திருவருள் செய்ய வேண்டும். (எ-று) *(340)*

976. கற்பனையாப் பாடுகின்றேன் கண்ணீருங்
கம்பலையுஞ்
சொற்பனத்துங் காணேன்என் சொல்வேன் பராபரமே.

(பொ-ரை) நான் கற்பனையாகப் பாடுகின்றேனே யொழிய என்னுடைய கனவிலானாலும் கண்ணீரும் கம்பலையும் வரப்பாடிக் கண்டேனில்லை, இதுவென்ன தீவினையோ? நான் அறியேன். (எ-று) *(341)*

977. வன்பொன்று நீங்கா மனதிறப்ப மாறாப்பேர்
அன்பொன்றும் போதும்எனக் கையா பராபரமே.

(பொ-ரை) வலிமையினின்றும் சிறிதும் நீங்காத மனமானது இறக்கும்படியாக உன்னிடத்தில் எக்காலத்தும் நீங்குதலில்லாத பேரன்பானது எனக்கு அமைதல் வேண்டும். (எ-று) *(342)*

978. ஏதுந் தெரியா எளியேனை வாவெனநின்
போதநிலை காட்டிற் பொறாதோ பராபரமே.

(பொ-ரை) யாதொரு விஷயமும் தெரியாத என்னை உனது திருவருட் பார்வை கொடு பார்த்து ஞானநிலையையும் கொடுப்பாயானால் உலகத்தார் பொறுக்க மாட்டார்களோ? (எ-று) *(343)*

979. ஓராமல் எல்லாம் ஒழிந்தேற்குன் தெய்வ அருள்
தாரா திருக்கத் தகுமோ பராபரமே.

(பொ-ரை) யாவற்றையும் ஆராய்ச்சி செய்யாம லொழிந்த அடியேனான எனக்கு உன்னுடைய தெய்வீகமான திருவருளைக் கொடாமலிருப்பது தகுதியாமோ? (எ-று) (344)

980. மோனந் தருஞான மூட்டி எனக்குவட்டா
ஆனந்த வாழ்க்கை அருளாய் பராபரமே.

(பொ-ரை) எனக்கு மௌன நிலையைக் கொடுப்பதற்குரிய ஞான போனகத்தை உண்பித்துத் தெவிட்டாத பேரின்ப வாழ்க்கைக் கடாட்சித் தருளல் வேண்டும். (எ-று) *(345)*

981. வாடுமுகங் கண்டென்னை வாடாம லேகாத்த
நீடுங் கருணை நிறைவே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய முகமானது வாட்ட முற்றிருந்ததைத் திருக்கண் சாத்தியருளி அப்படி நான் வாடாத வண்ணமே காத்து ரட்சித்த திருக்கருணைப் பேராறே. (எ-று) *(346)*

982. புந்தியினால் நின்னடியைப் போற்றுகின்ற மெய்யடியார்
சிந்தை யிறப்போநின் தியானம் பராபரமே.

(பொ-ரை) உனது திருவடிகளை மனத்தினிடத்திற் கொண்டு சதா தியானிக்கின்ற மெய்யடியார்களுடைய மனமானது இறக்கும்படியான இடமோ உனக்குரிய தியானம்? (எ-று) *(347)*

983. உனக்குவமை யாக்கருணை உள்ளவரும் வன்மைக்
கெனக்குவமை யானவரும் இல்லை பராபரமே.

(பொ-ரை) உலகத்தினிடத்திற் கருணை செய்வதில் உனக்கொப்பான தேவர்களும் மனவன்மையில் எனக்கொப்பானவர்களும் ஒருவருமில்லை. (எ-று)

ஆகையால் நீயே என்னைக் காத்து இரட்சிக்க வேண்டும் என்பது குறிப்பு. (348)

984. தாயிருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போல் எவ்விடத்தும்
நீயிருந்தும் நான்தளர்ந்து நின்றேன் பராபரமே.

(பொ-ரை) பெற்ற தாயானவள் இருந்தும் குழந்தையானது தளர்ச்சி யடைவது போலச் சர்வ வியாபகனான நீயிருந்தும் நான் மனம் வாடினேன். (எ-று)

ஆனால் இது கொடுமையோ? அறியேன் என்பது குறிப்பு. (349)

985. வாயாற் கிணறுகெட்ட வாறேபோல் வாய்பேசிப்
பேயானார்க் கின்பமுண்டோ பேசாய் பராபரமே.

(பொ-ரை) கிணறானது வாயினாலேயே தான் தூர்ந்தவிதம் போலத் தங்கள் வாயினாலேயே வாசா ஞானம் பேசிப் பேய்க் கோட்பட்டார்க்கு பேசாத மௌன சுகமானது கிடைக்குமோ? கிடைக்காது. (எ-று) (350)

986. பாவமென்றால் ஏதும் பயமின்றிச் செய்யஇந்தச்
சீவனுக்கார் போதந் தெரித்தார் பராபரமே.

(பொ-ரை) பாவமென்று பலரும் சொல்ல அந்தக் காரியத்தையே செய்து முடிக்க இந்த உயிர்க்கு யார் போதித்தாரோ? அதை நான் அறிந்தேனில்லை. (எ-று) (351)

987. இன்ப நிருவிகற்பம் இன்றேதா அன்றெனிலோ
துன்பம் பொறுப்பரிது சொன்னேன் பராபரமே.

(பொ-ரை) சுவாமீ! எனக்குச் சுகத்தை அடையத்தக்க நிருவிகற்ப சமாதியை இப்பொழுதே திருவருள் செய்ய வேண்டும். கொடாமற் போவாயானாலோ என்னால் இத்துன்பம் பொறுப்பரிதாகும். (எ-று)

இதை நோக்கி நீ என்ன செய்வாயோ? அறியேன் என்பது குறிப்பு. (352)

**988. கற்குநிலை கற்றாற் கருவியவி ழாதருளாய்
நிற்குநிலை கற்பதுவே நீதம் பராபரமே.**

(பொ-ரை) கல்விக்கு வேண்டியவைகளைக் கற்றுக் கொள்வதினாற் கருவிகளொடுங்கா. ஆகையால் அருளுருவாய் நிற்கும் நிலைமையைக் கற்பதுவே நீதியாகும். (எ-று) (353)

**989. காய்ச்சச் சுடர்விடும்பொற் கட்டிபோல் நின்மலமாய்ப்
பேச்சற் றவரே பிறவார் பராபரமே.**

(பொ-ரை) காய்ச்சக் காய்ச்சப் பொன்னானது தன்னிடத்துள்ள களங்கம் நீக்கிப் பரிசுத்தத்தை அடைவதுபோலப் பேச்சற்ற மௌன நிலையிற் பதிந்தவரே இனிப் பிறவாதார். (எ-று) (354)

**990. பற்றொழிந்து சிந்தைப் பதைப்பொழிந்து தானேதான்
அற்றிருப்ப தென்றைக் கமைப்பாய் பராபரமே.**

(பொ-ரை) இம்மை, மறுமைப் பற்றுக்களொழிந்தும் மனப் பதைப் பற்றும், தானென்னும் அகங்காரமற்றும் நிற்கும் நிலைமை எனக்கு என்றைக்குக் கொடுப்பாயோ? (எ-று) (355)

**991. உருவெளிதான் வாதவூர் உத்தமர்க்கல் லாலினமுங்
குருவழிநின் றார்க்குமுண்டோ கூறாய் பராபரமே.**

(பொ-ரை) நீ திருவேடந் தாங்கி வெளிப்பட்டு வந்து தரிசனந் தந்தது ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்கே யல்லாமற் குருவின் பணிவிடை மார்க்கத்தால் அடியவர் களானவர்களுக்கு முண்டா? இல்லை. (எ-று) (356)

**992. தேகம்யா தேனுமொரு சித்திபெறச் சீவன்முத்தி
ஆகுநெறி நல்லநெறி ஐயா பராபரமே.**

(பொ-ரை) என்னுடைய தலைவனே! என்னுடைய சரீரமானது ஏதாவது ஒரு சித்தியை யடையவும் நான் சீவன்முத்த திசையை அடைகின்ற மார்க்கமே நல்ல மார்க்கமாகும். (எ-று) (357)

**993. உலகநெறி போற்சடலம் ஓய உயிர்முத்தி
இலகுமெனல் பந்த இயல்போ பராபரமே.**

(பொ-ரை) உலக மார்க்கம் போல உடல் பிரியவும் ஆன்மாமாத்திரம் முத்திதேகமாய் விளங்குமென்று சொல்லுதல் ஜென்மப்பிணிப்பின் சுபாவமோ? (எ-று) (358)

994. பரமாப் பரவெளியாப் பார்ப்பதல்லால் மற்றெவர்க்குந்
திரமேது மில்லைநன்றாய்த் தேர்ந்தேன் பராபரமே.

(பொ-ரை) பரமாகவும், பரவெளியாகவும் பார்த்துத் தரிசிப்பதே யல்லாமல் யாவர்க்கும் வேறு வழியான உறுதி கொஞ்சமுமில்லை. ஆனால் இதை நான் செல்வனே அறிந்து கொண்டேன். (எ-று) (359)

995. தேடுவேன் நின்னருளைத் தேடுமுன்னே யெய்தில்நடம்
ஆடுவேன் ஆனந்த மாவேன் பராபரமே.

(பொ-ரை) நானோ முன்னர் உன்னுடைய திருவருளைத் தேடா நிற்பேன். நான் தேடா முன்னமே உனது திருவருள் கிடைக்குமானால் ஆனந்தத்தால் நடனஞ் செய்வேன். ஆனந்தமும் அடைவேன். (எ-று) (360)

996. உள்ளங் குழைய வுடல்குழைய வுள்ளிருந்த
கள்ளங் குழையஎன்று காண்பேன் பராபரமே.

(பொ-ரை) என்னுடைய மனமிளகவும் தேகங் குழையவும், என் மனத்தின் கண்ணிருந்த கபடமானது நீங்கவும், எக்காலத்தில் உன்னைத் தரிசிப்பேனோ? தெரியவில்லை. (எ-று) (361)

997. பட்டப் பகல்போலப் பாழ்த்தசிந்தை மாளின்எல்லாம்
வெட்ட வெளியாக விளங்கும் பராபரமே.

(பொ-ரை) என்னுடைய கொடிய மனமானது பட்டப் பகலைப் போல் மடிந்து விடுமானால் எனக்கு உலகம் வெட்ட வெளியாய்த் தோன்றும். (எ-று) (362)

998. பார்க்கின் அணுப் போற்கிடந்த பாழ்ஞ்சிந்தை மாளின்என்னை
யார்க்குச் சரியிடலாம் ஐயா பராபரமே.

(பொ-ரை) என்னுடைய அப்பனே! அணுவைப் போலிருந்த மன மானது இறந்துவிடுமானால் என்னை யாருக்கொப்பாகச் சொல்லலாம்? அதை நீயே எனக்குத் திருவருள் செய்ய வேண்டும். (எ-று) (363)

999. பாட்டுக்கோ அன்பினுக்கோ பத்திக்கோ அன்பர்தங்கள்
நீட்டுக்கெல் லாங்குறுகி நின்றாய் பராபரமே.

(பொ-ரை) கடவுளே! நீ அடியார்களுடைய நீட்சிக் கெல்லாம் குறுகி இருக்கின்றாய். அப்படியிருப்பது அவர்கள் பாடும் பாட்டுக்காகவோ? அல்லது அவர்களுடைய பத்திக்காகவோ? தெரியவில்லை. (எ-று) (364)

1000.முத்தாந்த வித்தே முளைக்குநில மாயெழுந்த
சித்தாந்த மார்க்கச் சிறப்பே பராபரமே.

(பொ-ரை) முத்தியின் அந்தத்தின் விதையே! சிவமென்னும் பயிரானது முளைப்பதற்குரிய பூமியாகத் தோன்றிய சித்தாந்த மார்க்கத்தில் அறியப்படும் சிறப்பே! (எ-று)

ஆகையால் நீயே என்னை ஆண்டுகொண்டருளல் வேண்டும் என்பது குறிப்பு. (365)

1001.உன்னா வெளியாய் உறங்காத பேருணர்வாய்
என்னாவிக் குள்ளே யிருந்தாய் பராபரமே.

(பொ-ரை) நினைக்கப்படாத வெளியாகியும், தூங்கப்படாத பெரிய அறிவாயும் என்னுயிருக்குள்ளே இருந்தாய். (எ-று)

ஈதென்ன பெருங் கருணைத் திறமோ? அறியேன். (366)

1002.தத்துவமெல் லாமகன்ற தன்மயர்க்குச் சின்மயமாம்
நித்தமத்த சுத்த நிறைவே பராபரமே.

(பொ-ரை) தத்துவக் கூட்டங்களினின்றும் நீங்கிய ஞானிகளுக்குச் சின்மயமாய்த் தோன்றும் பரிசுத்தமான பூரணவஸ்துவே! (எ-று)

நீ சர்வபரிபூரணனாயிருக்கின்றமையால் என்னை எந்த விடத்தும் ஆண்டருள வேண்டியவன் நீயே யாவாய் என்பது கருத்து. (367)

1003.உள்ளக் கொதிப்பகல வுள்ளுள்ளே ஆனந்த
வெள்ள மலர்க்கருணை வேண்டும் பராபரமே.

(பொ-ரை) என்னுடைய மனப் பதைப்பானது அடங்கும்படி என் மனத்திற்குள் சுகானந்த வெள்ளமாகிய கருணையை ரட்சிக்க வேண்டும். (எ-று) (368)

**1004.என்னைப் புரப்பதரு ளின்கடனாம் என்கடனாம்
நின்னிற் பணியறவே நிற்கை பராபரமே.**

(பொ-ரை) என்னை யாண்டு ரட்சிப்பது திருவருளின் கடமை யாகும்உன்னுடைய திருப்பணியைச் செய்வது என் கடமையாகும்.(எ-று)

இப்படி இருப்பதால் என்னை நீ ஆட்கொள்வதற்கு ஆசங்கமென்னை? என்பது வினா. (369)

**1005.தானேயா நன்னிலையைத் தந்த அருள் ஆனந்த
வானே மனாதீத வாழ்வே பராபரமே.**

(பொ-ரை) தனக்குத் தானேயாய் நிலைக்கும் மௌன நிலையை எனக்குத் திருவருள் செய்த திருவருட் செல்வனே! மனத்துக்கு அதீதப்பட்டு விளங்காநின்ற பெருவாழ்வே! (எ-று)

நீ இங்ஙனமெல்லாமிருக்க என்னை ஆண்டரு ளாமைக்குக் காரணம் என்னவோ? அறிகிலேன் என்பது இரக்கக் குறிப்பு. (370)

**1006.மண்ணாதி பூதமெல்லாம் வைத்திருந்த நின்னிறைவைக்
கண்ணாரக் கண்டு களித்தேன் பராபரமே.**

(பொ-ரை) பிருதிவி முதலாகச் சொல்லப்பட்ட எல்லாப் பூதங்களையும் அடக்கி வைத்திருந்த உன்னுடைய சர்வவியாபகத்தை (திருவருட்சகாயத் தால்) நான் கண்ணாரக் கண்டு ஆனந்தமடைந்தேன். (எ-று) (371)

**1007.அறியாமை ஈதென் றறிவித்த அன்றேதான்
பிறியா அருள்நிலையும் பெற்றேன் பராபரமே.**

(பொ-ரை) நீ எனக்கு எப்பொழுது இஃது அஞ்ஞானமென்று உணர்த்து வித்தனையோ அப்பொழுதே நான் எக்காலத்தும் நீங்காத திருவருள் நிலையையும் பெற்றேன். (எ-று) (372)

**1008.தீதெனவும் நன்றெனவுந் தேர்ந்துநான் தேர்ந்தபடி
ஏதும் நடக்கவொட்டா தென்னே பராபரமே.**

(பொ-ரை) நான் இது நன்றென்றும், இது தீதென்றும், அறிந்தபடியே எதுவும் நடக்கவில்லையே. அது என்ன விபரீதமோ? தெரியவில்லை. (எ-று) (373)

1009.கண்ட அறிவகண்டா காரமென மெய்யறிவில்
கொண்டவர்க்கே முத்தி கொடுப்பாய் பராபரமே.

(பொ-ரை) தங்கள் காட்சி மாத்திரமாக் கண்ட ஞானத்தை அகண்டகாரமென உண்மை அறிவிற் கொண்டவர்க்கே மோட்சமளிப்பாய். (எ-று) *(374)*

1010.ஈறாக வல்வினை நான் என்னாமல் இன்பசுகம்
பேறாம் படிக்கடிமை பெற்றேன் பராபரமே.(பொ-ரை)

(பொ-ரை) முடிவில் வலியவினையின் சம்பந்தமாகு நானென்னும் அகங்காரத்தை அடையாமல் இன்பசுகத்தின் பேற்றை அனுபவிக்கும்படி அடியவனானேன். (எ-று) *(375)*

1011.பெற்றார் அநுபூதி பேசாத மோனநிலை
கற்றார் உனைப்பிரியார் கண்டாய் பராபரமே.

(பொ-ரை) எக்காலத்தும் உன்னைப் பிரியாமலிருக்கும் படியான கல்வியைக் கற்றவர்கள் பேசாதிருக்கும்படியான மௌனநிலையாகிய சிவாநுபூதியை உன்னுடைய திருவருட் பிரேரகத்தாற் பெற்றார்கள். (எ-று)

நானும் அவ்வநுபூதியை எக்காலத்திற் பெறுவேனோ? என்னும் வினா புதைப்பொருள். *(376)*

1012. நீயேநான் என்று நினைப்பும் மறப்புமறத்
தாயே அனையஅருள் தந்தாய் பராபரமே.

(பொ-ரை) எக்காலத்தும் நீயே நானாவேனென்று நினைப்பு மறப்புக் களறும்படி பெற்ற தாய்போல் திருவருள் செய்தாய். (எ-று)

இதற்கு நான் செய்யும் கைம்மாறு என்ன இருக்கின்றது என்பது இரக்கக் குறி. *(377)*

1013.சஞ்சலமற் றெல்லாம் நீ தானென் றுணர்ந்தேன்என்
அஞ்சலியுங் கொள்ளாய் அரசே பராபரமே.

(பொ-ரை) என்னுடைய அரசனே! நான் எல்லாத் துன்பங்களினின்றும் நீங்கி எல்லாம் நீயே என்றுணர்ந்து கொண்டேன். ஆகையால் நான் செய்யும் நமஸ்காரத்தை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும். (எ-று)

அங்ஙனம் ஏற்றுக் கொள்ளாமல் விட்டுவிடுவா யானால் நான் உஜ்ஜீவிப்பது எப்படி? என்பது குறிப்பு. (378)

**1014.பூதமுதல் நாதவரை பொய்யென்ற மெய்யரெல்லாங்
காதலித்த இன்பக் கடலே பராபரமே.**

(பொ-ரை) பூத தத்துவ முதலாக நாத தத்துவம் வரைக்குமுள்ள தொண்ணூற்றாறு தத்துவங்களும் பொய்யேயா மென்று கண்டறிந்த உண்மை ஞானிகளால் விரும்பப்படும் சுகக்கடலே! (எ-று)

அங்ஙனமான குணத்தைப் பெறாத என்னால் நீ எந்தக் காலத்தில் விரும்பப்படுவாயோ? அதை நான் அறிந்தேனில்லை என்பதுவியப்பு. (379)

**1015.வாக்குமணம் ஒன்றுபட்ட வார்த்தையல்லால்
வெவ்வேறாய்ப்
போக்குடைய வார்த்தை பொருந்தேன் பராபரமே.**

(பொ-ரை) வாக்கும், மனமும் ஒன்றாய்ப் பொருந்தின வசனங்களை வசனிப்பேனேயொழிய வேறுவிதமான வசனங்களில் நான் பொருந்த முடையவனாக மாட்டேன். (எ-று) (380)

**1016.வன்மையின்றி எல்லாம் மதித்துணர்வாய்க்
காகெடுவேன்
தன்மையொன்றுந் தோயாத் தடையோ பராபரமே.**

(பொ-ரை) யாதொரு வர்மமுமில்லாதபடி எல்லா வற்றையும் சுபாவமாகவே அறிந்துணரும் உனக்கு நான் ஒரு குணத்தாலும் வழி படாததே தடைபோலும். (எ-று)

அப்படியிருந்தாலும் சர்வபரிபூரணன் நீ யாகையால் அதைப் பொறுத்து என்னை அடிமைகொள்ள வேண்டியவனும் நீயேயாவாய் என்பது கருத்து. (381)

**1017.பத்தர்சித்தர் வாழிபரி பக்குவர்கள் வாழிசெங்கோல்
வைத்தவர்கள் வாழிகுரு வாழி பராபரமே.**

(பொ-ரை) பக்தர்களும், சித்துப் புருடர்களும், உனது திருவடியி னீழலை யடைவதற்கான பரிபாகத்தை யடைந்தவர்களும், அரசனும், ஞானாசிரியனும் வாழக்கடவர்கள். (எ-று) (382)

1018. கல்லாதேன் ஆனாலுங் கற்றுணர்ந்த மெய்யடியார்
சொல்லாலே நின்னைத் தொடர்ந்தேன் பராபரமே.

(பொ-ரை) நான் உன்னைத் தொடருங் கல்வியைக் கல்லாதவனா யிருந்தாலும் அப்படி கற்றுணர்ந்த பெரியோர்களது உபதேச மார்க்கத்தால் உன்னைத் தொடர்ந்தேன். (எ-று)

அப்படி, அவர்களுடைய உபதேசமானது உன்னுடைய திருவருட் பிரேரகத்தால் எனக்குக் கிடைக்காதிருக்கும் பட்சத்தில் நான் உன்னைத் தொடர்ந்திரேன் என்பது கருத்து. (383)

1019. சொல்லிறப்பச் சற்குருவாய்த் தோன்றிச் சுகங்கொடுத்த
நல்லவர்க்கே கொத்தடிமை நான்காண் பராபரமே.

(பொ-ரை) மன வாக்கிறக்கும்படி ஞானாசிரியனாய் வெளிவந்து மௌன சுகத்தை எனக்குக் கொடுத்த உயர்ந்த ஞானோபதேசத்தில் பொருட்டே நான் குடியடிமையாய் விட்டேன். (எ-று) (384)

1020. முத்திக்கு வித்தான மோனக் கரும்புவழி
தித்தித் திடவிளைந்த தேனே பராபரமே.

(பொ-ரை) மோட்சசாதன நிலத்திற்கு விதையா யிருக்கின்ற மௌன மென்னும் கரும்பினின்றும் இழிந்த தித்திக்கும் தேனே! (எ-று)

இறைவன் சிவா நுபவச் செல்வர்களுக்குத் தேன்போல் இனிப்பவன் என்பார் இங்ஙனம் கூறினார். (385)

1021. நித்திரையும் பாழ்த்த நினைவும் அற்று நிற்பதுவோ
சுத்த அருள் நிலைநீ சொல்லாய் பராபரமே.

(பொ-ரை) சதா தூங்குவதும் கொடிய நினைப்பும் நீங்கி இருப்பது தானோ பரிசுத்தமான திருவருணிலையென்பது. இதை நீயே எனக்குத் திருவருள் செய்யவேண்டும். (எ-று) (386)

1022. மண்ணும் மறிகடலும் மற்றுளவும் எல்லாம்உன்
கண்ணில் இருக்கவும்நான் கண்டேன் பராபரமே.

(பொ-ரை) இவ்வுலகமும் மறிகின்ற சமுத்திரமும் இன்னுமுள்ள எல்லாப் பொருள்களும் உன்னுடைய, சர்வ வியாபகத்தில் அடங்கி இருப்பனவாகவே நான் உணர்ந்தேன். (எ-று) (387)

1023.பூட்டிவைத்து வஞ்சப் பொறிவழியே என்றனைநீ ஆட்டுகின்றதேதோ அறியேன் பராபரமே.

(பொ-ரை) என்னை ஒரு கூண்டுக்குள் அடைத்துப் பூட்டி வைத்து வஞ்சகமுடைய பஞ்சேந்திரியங்களின் மூலமாக நீ என்னை இவ்வுலகத்தில் ஆட்டுகின்ற மாயையை நான் இன்னதென்று அறிந்தேனில்லை. (எ-று) (388)

1024.பொய்யுணர்வா யிந்தப் புழுக்கூட்டைக் காத்திருந்தேன் உய்யும் வதையும் உளதோ பராபரமே.

(பொ-ரை) நான் என்னுடைய அஞ்ஞானத்தினால் இந்தப் புழு நெளியத் தகுந்ததான உடம்பைப் பாதுகாத்திருந்தேன். ஆகையால் நான் உஜ்ஜீவிக்கும் வழியும் எனக்கிருக்கின்றதா? (எ-று)

அழியும் தேகத்தை மெய்யென்றபோது அறிவில்லை யென்பார். 'பொய்யுணர்வாயிந்தப் புழுக்காட்டைக் காத்து' என்றார்.

அங்ஙனம் பொய்யை மெய்யா நம்பின எனக்கும் திருவருள் கிடைக்குமோ? என்பது மிக்க விரக்கம். (389)

பைங்கிளிக் கண்ணி

1025.அந்தமுடன் ஆதி அளவாமல் என்னறிவில் சுந்தரவான் சோதி துலங்குமோ பைங்கிளியே.

(பொ-ரை) பசுங்கிளியே! அந்தத்தையும், ஆதியையும், அளவிடப் படாமல் அழகிய தேஜோவடிவமானது. என்னுடைய அறிவினிடத்தில் விளங்குமோ? அதை நீயே செல்லவேண்டும். (எ-று)

ஒவ்வொரு கண்ணியின் பொருடோறும் "பசுங்கிளியே" என்பதைக் கூட்டிக் கொள்க. (1)

1026.அகமேவும் அண்ணலுக்கென் அல்லலெல்லாஞ் சொல்லிச் சுகமான நீபோய்ச் சுகங்கொடுவா பைங்கிளியே.

(பொ-ரை) பரிபக்குவ ஆன்மாக்களுடைய மனத்தின் கட் குடியிருக்கும் சிவபெருமானிடத்தில் என்னுடைய வருத்தத்தை யெல்லாஞ் சொல்லிப் பேரின்பத்தைப் பெற்றுக்கொண்டுவா. (எ-று)

"சுகமான நீ போய்ச் சுகங்கொடுவா" என்றது சொன்னயம்.

நீ அங்ஙனம் பெற்று வராவிட்டால் நான் இறந்து படுவேன் என்பது குறிப்பு. *(2)*

1027.ஆவிக்குள் ஆவிஎனும் அற்புதனார் சிற்சுகந்தான்
பாவிக்குக் கிட்டுமோ சொல்லாய்நீ பைங்கிளியே.

(பொ-ரை) உயிர்க்குயிரா யிருப்பவரான அற்புதனா ருடைய ஞான சுகமானது இந்தப் பாவியாகிய எனக்குங் கைகூடுமோ? கூடாது. (எ-று) *(3)*

1028.ஆருமறி யாமல்எனை அந்தரங்க மாகவந்து
சேரும் படிஇறைக்குச் செப்பிவா பைங்கிளியே.

(பொ-ரை) நீ போய் என்னிடத்தில் எவர்களும் காணாதபடி வரும் படியாக என்னுடைய தலைவனுக்குச் சொல்லி வரவேண்டும். (எ-று) *(4)*

1029.ஆறான கண்ணீர்க்கென் அங்கபங்க மானதையுங்
கூறாத தென்னோ குதலைமொழிப் பைங்கிளியே.

(பொ-ரை) என்னுடைய தலைவன் வராமையால் என் கண் களினின்றும் துக்க நீரானது ஆறுபோல் இறங்கவும், அந்த அளவுக்குத் தேகம் வாடவுமிருந்த என்னுடைய செய்கைகளை நீ என் தலைவனுக்கு முறை யிடாதது என்னையோ? (எ-று)

நீ உண்மையாக முறையிட்டிருப்பாயானால் என் தலைவன் வந்தே இருப்பான் என்பது குறிப்பு. *(5)*

1030.இன்பருள ஆடையழுக் கேறும்எமக் கண்ணல்சுத்த
அம்பரமாம் ஆடை அளிப்பானோ பைங்கிளியே.

(பொ-ரை) அழுக்கடைந்த வஸ்திரத்தைத் தரித்திருக் கின்ற எனக்கு நல்ல சிவஞான சுகத்தைக் கொடுக்கும் பொருட்டு என்னுடைய தலைவனானவன் ஆகாயமாகிய ஆடையைக் கொடுப்பானோ? அதை நீ சொல்லல் வேண்டும். (எ-று) *(6)*

1031.உன்னாமல் ஒன்றிரண்டென் றோராமல் வீட்டுநெறி
சொன்னான் வரவும்வகை சொல்லாய்நீ பைங்கிளியே.

(பொ-ரை) இப்படிப்பட்டவ ரென்று நினையாமலும், ஒன்று, இரண்டு என்று சொல்லாமலும் மோட்சமார்க்கத்தை

எனக்கு உபதேசித்தார். என்னிடத்தில் வரும்படியாக அவருக்குச் செய்ய வேண்டிய ஒரு உபாயத்தை எனக்குச் சொல்லவேண்டும். (எ-று) (7)

1032.ஊருமிலார் பேருமிலார் உற்றார்பெற் றாருடனே
யாருமிலார் என்னை அறிவாரோ பைங்கிளியே.

(பொ-ரை) தமக்கென்று ஒரு ஊரில்லாதவரும், பேரில்லாத வரும் சுற்றத்தாரில்லாதவரும் பெற்றாரில்லா தவரும், வேறு யாருமில்லாதவருமாகிய இறைவர் என்னை முன்பின் அறிவாரா? (எ-று) (8)

1033.ஊரைப்பா ராமல்எனக் குள்ளகத்து நாயகனார்
சீரைப்பார்த் தாற்கருணை செய்வாரோ பைங்கிளியே.

(பொ-ரை) என்னுடைய இறைவர் இருக்கும் ஊரைப் பாராமல் அவருடைய சீர்த்தியைப் பார்த்தால் என்னிடத்திற் பட்சம் வைத்துக் கருணை செய்வாரா? (எ-று) (9)

1034.என்று விடியும் இறைவாவோ என்றென்று
நின்ற நிலைஎல்லாம் நிகழ்த்தாய்நீ பைங்கிளியே.

(பொ-ரை) எனக்கு எக்காலத்தில் இறைவனைக் கூடுங்காலம் வருமென்று நான் வாடியிருக்கும் நிலையை என்னுடைய தலைவனுக்கு நீ சொல்லவேண்டும். (எ-று) (10)

1035.எந்த மடலூடும் எழுதா இறைவடிவைச்
சிந்தைமட லாவெழுதிச் சேர்ப்பேனா பைங்கிளியே.

(பொ-ரை) எந்த ஏட்டிலும் எழுதுதற்கு முடியாத இறைவனுடைய திவ்விய சொரூபத்தை என்னுடைய மனத்தையே ஒரு ஏடாகக் கொண்டு எழுதி அவனை என்னிடத்திற் சேர்த்துக் கொள்வேனா? (எ-று) (11)

1036.கண்ணுள்மணி போல் இன்பங் காட்டி எனைப்பிரிந்த
திண்ணியரும் இன்னம்வந்து சேர்வாரோ பைங்கிளியே.

(பொ-ரை) கண்ணுக்குள்ளிருக்கும் கருமணிபோல் எனக்கொரு இன்பத்தைக் காட்டி என்னைவிட்டும் பிரிந்து போய் விட்ட என்னுடைய தலைவர் இன்னும் வந்து சேர்வாரா? (எ-று) (12)

1037.ஏடார் மலர்சூடேன் எம்பெருமான் பொன்னடியாம்
வாடா மலர்முடிக்கு வாய்க்குமோ பைங்கிளியே.

(பொ-ரை) எம்முடைய சிவபெருமானுடைய திருவடியாகிய வாடா மலரானது நான் சூடிக் கொள்ளும்படி என்னுடைய கூந்தலுக்குக் கிடைக்குமோ? கிடைக்காதோ? ஆகையால் நான் எந்த மலர்களையும் என்னுடைய கூந்தலுக்குச் சூடிக் கொள்வேன். (எ-று) (13)

1038.கல்லேன் மலரேன் கனிந்தஅன்பே பூசைஎன்ற
நல்லோர்பொல் லாஎனையும் நாடுவரோ பைங்கிளியே.

(பொ-ரை) சிலர் ரூபமானது எற்றுக்கு? அந்த ரூபத்திற்கு இடப்படும் மலரானது எற்றுக்கு? இவை யெல்லாம் பயனடையத் தக்கதல்லவாம் என்று கொண்டு மிக்க இளகிய அன்பே பூசையாகும் என்ற நல்லவர்கள் பொல்லாத வனகிய என்னையும் விரும்புவார்களா? விரும்பார்கள். (எ-று) (14)

1039.கண்டதனைக் கண்டு கலக்கத் தவிரெனவே
விண்டபெரு மானையும்நான் மேவுவனோ பைங்கிளியே.

(பொ-ரை) எல்லாப் பொருள்களையும் சிருஷ்டித்த இறைவன் தன்னுடைய நிலைமையைப் பார்த்து உன்னுடைய துன்பங்களெல்லாம் தீர்ப்பாயாக என்று சொன்ன அவனை நான் எந்தக்காலத்திலானாலும் பெறுவேனோ. (எ-று) (15)

1040.காணாத காட்சி கருத்துவந்து காணாமல்
வீணான் கழித்து மெலிவேனோ பைங்கிளியே.

(பொ-ரை) யாவராலும் காணப்படாத சிவபெருமானது காட்சியை என் மனமானது சந்தோஷித்துக் காணாதபடி நான் வீணாக நாள்களைக் கழித்து அதனால் மனம் மெலிவேனோ. (எ-று) (16)

1041.காந்தம் இரும்பைக் கவர்ந்திழுத்தா லென்னஅருள்
வேந்தன் எமைஇழுத்து மேவுவனோ பைங்கிளியே.

(பொ-ரை) இரும்பைக் காந்தமானது தன் வயப்படுத்தி இழுப்பது போலத் திருவருளையுடைய சிவபெருமானாகிய அரசனானவன் எம்மையுங் கிரகித்து சுகானந்த வீட்டில் நிலைபெறுவிப்பானா? (எ-று) (17)

1042.காதலால் வாடினதுங் கண்டனையோ எம்மிறைவர்
போதாவா யின்பம் புசிப்பேனோ பைங்கிளியே.

(பொ-ரை) நான் இறைவர்மேல் ஆசையாய் மனம் வாடி நின்றதை நீ பார்த்தாயன்றோ? ஆகையால் எம்முடைய தலைவர் எம்மிடத்தில் வருவதானால் நான் ஒரு இன்பத்தை அனுபவிப்பேனன்றோ? ஆம். (எ-று)

இப்படியிருப்பதால் அவர் வாராவிட்டால் நான் இறந்துபடுவேன் என்பது களவியற் புணர்ச்சித் தன்மை. (18)

1043. கிட்டிக்கொண் டன்பருண்மை கேளாப் பலவடிகொள்
பட்டிக்கும் இன்பமுண்டோ சொல்லாய்நீ பைங்கிளியே.

(பொ-ரை) அடியார்களை நெருங்கி அவர்கள் சொல்லும் உண்மை மொழியைக் கேளாமற் பல கசையடி களை வாங்குகின்ற முரட்டுக் கடா மாட்டையொத்த அடியேனுக்கும் சுகம் உண்டாகுமோ? அதை நீயே சொல்லவேண்டும். (எ-று) (19)

1044.கிட்டூராய் நெஞ்சிற் கிளர்வார் தழுவஎன்றால்
நெட்டூர் ராவர்அவர் நேசமென்னோ பைங்கிளியே.

(பொ-ரை) சமீப ஊரராய் என்னுடைய இறைவரானவர் என் மனத்தில் தோன்றுவார்; நான் நெருங்கிப் போக நினைத்தால் தூரமான ஊரராய் விடுவார். ஆ! என்னிடத்தில் இவருடைய பிரியம் இருந்தவாறு என்னே! என்னே!! (எ-று) (20)

1045.கூறுங் குணமில்லாக் கொள்கையினார் என்கவலை
ஆறும் படிக்கும் அணைவாரோ பைங்கிளியே.

(பொ-ரை) ஒரு வகுப்பும் ஒரு குணமுமில்லாத தன்மையையுடைய இறைவர் என்னுடைய துன்பம் நீங்கும்படி என்னைச் சேருவரோ? சேராரோ? நான் அறிந்தேனில்லை. (எ-று) (21)

1046.சின்னஞ் சிறியேன்றன் சிந்தைகவர்ந் தார்இறைவர்
தன்னந் தனியே தவிப்பேனோ பைங்கிளியே.

(பொ-ரை) இறைவர் சிறியேனான என்னுடைய மனத்தை கிரகித்துக் கொண்டார். ஆகையால் நான் தனியாயிருந்து தவிப்பேனோ? (எ-று) (22)

1047.சிந்தை மருவித் தெளிவித் தெனையாள
வந்தகுரு நா தன்அருள் வாய்க்குமோ பைங்கிளியே.

(பொ-ரை) அடியேனை ஆளும்படி என்னுடைய மனத்திற் கலந்து வெளிப்பட்ட ஆசிரியனது கிருபையானது இன்னும் ஒருதரம் எனக்குக் கிடைக்குமோ? (எ-று) (23)

1048.சொல்லிறந்து நின்ற சுகரூபப் பெம்மானை
அல்லும் பகலும் அணைவேனோ பைங்கிளியே.

(பொ-ரை) பேச்சு இல்லாமலிருந்த சுகரூபத்தை யுடைய எம் பெருமானை நான் அகோராத்திரம் தழுவப் பெறுவேனோ? (எ-று) (24)

1049.தற்போதத் தாலே தலைகீழ தாகஜயன்
நற்போத இன்புவர நாட்செலுமோ பைங்கிளியே.

(பொ-ரை) என்னுடைய அகங்காரத்தால் நான் தலை கீழாக விவகாரஞ் செய்கிறபடியால் என் தலைவனுடைய ஞானசுகம் உண்டாக நாட்கள் செல்லுமோ? (எ-று) (25)

1050.தன்னை அறியுந் தருணந் தனிற்றலைவர்
என்னையணை யாதவண்ணம் எங்கொளித்தார்
பைங்கிளியே.

(பொ-ரை) என்னுடைய இறைவரை நான் அறியும் சமயத்தில் அவர் என்னைச் சேராதபடி எந்தவிடத்தில் ஒளித்துக் கொண்டாரோ? (எ-று) (26)

1051.தாங்கரிய மையலெல்லாந் தந்தெனைவிட் டின்னருளாம்
பாங்கியைச்சேர்ந் தார்இறைக்குப் பண்போசொல்
பைங்கிளியே.

(பொ-ரை) பொறுக்கக்கூடாத அவாவையெல்லாம் எனக்குக் கொடுத்து என்னை இவ்விடத்தில் தானே விட்டுதான் திருவருளாகிய தோழியைச் சேர்ந்தார். அந்தோ! அஃது இறைவரது பெருங் கருணைத் திறத்திற்குத் தகுந்த தன்மை தானோ? (எ-று) (27)

1052.தாவியதோர் மர்க்கடமாந் தன்மைவிட்டே அண்ணலிடத்
தோவியம்போல் நிற்கின்எனை உள்குவரோ பைங்கிளியே.

(பொ-ரை) ஒன்றைவிட்டொன்றில் தாவுகின்ற குரங்கின் குணம் போன்ற குணத்தைவிட்டு என்னுடைய தலைவனிடத்தில் நான் சித்திரம்போல் அசைவற்று நிற்பேனானால் என்னை அவர் நினைப்பாரோ? (எ-று) (28)

1053. தீராக் கருவழக்கைத் தீர்வையிட்டங் கென்னைஇனிப்
பாரேறா தாண்டானைப் பற்றுவனோ பைங்கிளியே.

(பொ-ரை) என்னிடத்தினின்றும் ஒருகாலமும் ஒழியப் பெறாத ஜென்ம வழக்கைத் தீர்த்து என்னை உலகத்திற் பிரவேசிக்காதபடி அடிமைகொண்டு ரட்சித்தவனை நான் போய்ச் சேருவேனோ? (எ-று) (29)

1054.தூங்கிவிழித் தென்னபலன் தூங்காமல் தூங்கிநிற்கும்
பரங்குகண் டால்அன்றோ பலன்காண்பேன் பைங்கிளியே.

(பொ-ரை) தூங்கி விழிப்பதாற் பயனென்னை? தூங்காமல் தூங்கும் மார்க்கத்தை என்றைக்குக் காண்பேனோ அன்றைக்குப் பயனடைவேன்.(எ-று)

அங்ஙனம் காணாவிட்டாற் பயனடைதலில்லை என்பது கருத்து. (30)

1055.தொல்லைக் கவலை தொலைத்துத் தொலையாத
எல்லைஇலா இன்பமயம் எய்துவனோ பைங்கிளியே.

(பொ-ரை) பூர்வ வினையால் எனக்கு நேரிட்டிருக்கின்ற துன்பங்களை யெல்லாம் அறவே நீக்கி எக்காலத்தும் நீங்காத அளவு சொல்லப்படாத பேரின்பமானது எனக்கு வந்துசேரும்படி நான் எந்தக்காலத்தில் அதன் மயத்தைப் பெறுவேனோ? (எ-று) (31)

1056.நன்னெஞ்சத் தன்பரெல்லாம் நாதரைச்சேர்ந்த தின்பணைந்தார்
வன்னெஞ்சத் தாலேநான் வாழ்விழைந்தேன் பைங்கிளியே.

(பொ-ரை) நல்ல மனத்தையுடைய அடியார் களெல்லாம் என் தலைவனான சிவபெருமானைச் சேர்ந்து சுகத்தை அனுபவித்தார்கள். நானோ கற்போலும் மனத்தையு டையவனா கையால் அவர்கள் அநுபவித்த வாழ்க்கையை இழந்துவிட்டேன்.(எ-று) (32)

1057.நானே கருதின்வர நாடார்சும் மாஇருந்தால்
தானே அணைவரவர் தன்மைஎன் னோபைங்கிளியே.

(பொ-ரை) நானே நினைக்கும்போது என்னுடைய இறைவரானவர் வரமாட்டார். நான் சும்மாவிருந்தால் வருவார். இவருடைய தன்மை என்னவோ? அறியேன்.(எ-று) (33)

**1058. நீர்க்குமிழி போன்றவுடல் நிற்கையிலே சாசுவதஞ்
சேர்க்க அறியாமல் திகைப்பேனோ பைங்கிளியே.**

(பொ-ரை) நீரிற்றோன்றும் முட்டையைப் போன்ற இந்த உடம்பானது இருக்கும்போது நான் சாசுவத நிலையைச் சேர அறியாமல் மனமருட்சி யடைவேனோ? (எ-று) *(34)*

**1059.நெஞ்சகத்தில் வாழ்வார் நினைக்கின்வே றென்றணையார்
வஞ்சகத்தார் அல்லரவர் மார்க்கமென்னோ பைங்கிளியே.**

(பொ-ரை) என்னுடைய மனத்தின் கண்ணே வாழ்ந்திருப்பார். நான் நினைக்கும்போது வேறாக என்முன் வரமாட்டார். ஆனால் வஞ்சகருமல்லர் அவருடைய மார்க்கமென்னோ? நான் அறிகிலேன். (எ-று) *(35)*

**1060.பன்முத் திரைச் சமயம் பாழ்படக்கல் லாலடிவாழ்
சின்முத் திரை அரசைச் சேர்வேனோ பைங்கிளியே.**

(பொ-ரை) பல முத்திரைகளைச் சொல்லிச் சொல்லி மயக்குகின்ற பல சமயங்களும் வீணே கெடும்படி கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளியிருக்கின்ற சின்முத்திரைக்குத் தலைவனே! (எ-று)

எனக்கு எந்தக்காலத்தில் அந்தச் சின்முத்திரையைத் திருவருள் செய்வாயோ என்பது இரக்கம்.

"பல முத்திரை" என்றது சாம்பவி முத்திரை முதலியன. *(36)*

**1061.பச்சைகண்ட நாட்டிற் பறக்கும்உனைப் போற்பறந்தேன்
இச்சைஎல்லாம் அண்ணற் கியம்பிவா பைங்கிளியே.**

(பொ-ரை) பச்சையாயிருக்கின்ற திரவியங்களைக் கண்டாற் பறந்து திரியுந் தன்மையையுடையதான உன்னைப் போல் நானும் பறந்தேன். ஆகையால் நீ எனக்கிருக்கும் ஆசையையெல்லாம் என்னுடைய தலைவனுக்குச் சொல்லிவிட்டு வா. (எ-று) *(37)*

**1062.பாசபந்தஞ் செய்ததுன்பம் பாராமல் எம்மிறைவர்
ஆசைதந்த துன்பமதற் காற்றேன் நான் பைங்கிளியே.**

(பொ-ரை) என்னுடைய பாசபந்தத்தால் விளைந்த துன்பத்தை நோக்காமல் என்னுடைய தலைவரானவர்

எனக்குக் கொடுத்த ஆசை யாலுண்டான துன்பத்திற்கே நான் சகிக்கமாட்டேன். (எ-று) *(38)*

1063.பாராசை அற்றிறையைப் பற்றறநான் பற்றிநின்ற பூராய மெல்லாம் புகன்றுவா பைங்கிளியே.

(பொ-ரை) எனக்கிருந்த உலக வாஞ்சையையெல்லாம் நான் விட்டு என்னுடைய தலைவனைச் சதா பிடித்திருக்கின்ற வரலாற்றையெல்லாம் நீ போய்ச் சொல்லிவிட்டு வா. (எ-று) *(39)*

1064.பேதைப் பருவத்தே பின்தொடர்ந்தென் பக்குவமுஞ் சோதித்த அண்ணல்வந்து தோய்வாரோ பைங்கிளியே.

(பொ-ரை) நான் என்னுடைய அறியாத பருவத்திலேயே அவருக்குப் பின் தொடர்ந்தேன். இப்பொழுது எனக்குப் பருவகாலம் வந்துவிட்டது. ஆனால் அக்காலத்தில் என்னைச் சோதித்த இறைவர் இப்பொழுது வந்து என்னை அணைவாரோ? தெரியவில்லை. (எ-று) *(40)*

1065.பைம்பயிரை நாடும்உன் போற் பார்பூத்த பைங்கொடிசேர் செம்பயிரை நாடித் திகைத்தேன் நான் பைங்கிளியே.

(பொ-ரை) பசிய பயிரை நாடிப் போகின்ற உன்னைப் போலவே நானும் இவ்வுலகத்தினிடத்திற் பசிய கொடியானது சேர்ந்திருக்கின்ற செம்பாப் பயிரை விரும்பி மனந் திகைப்படைந்தேன். (எ-று)

பைங்கொடி=பார்வதி. செம்பயிர்=சிவபெருமான். *(41)*

1066.பொய்க்கூடு கொண்டு புலம்புவனோ எம்மிறைவர் மெய்க்கூடு சென்று விளம்பிவர பைங்கிளியே.

(பொ-ரை) நான் பொய்யாகிய இந்த உடம்பைப் பாதுகாத்து அதனால் வருந்துவேனோ? இதனை எம்முடைய தலைவர் எழுந்தருளியுள்ள திருக்கோயிலினிடத்திற் போய் அவருக்குச் சொல்லி வா. (எ-று)

அங்ஙனம் நீ போய்ச் சொல்லாவிட்டால் என்னைக் காப்பாற்றுவோர் ஒருவருமில்லை என்பது குறிப்பு. *(42)*

**1067.பொய்ப்பணி வேண்டேனைப் பொருட்படுத்தி அண்ணலென்பால்
மெய்ப்பணியுந் தந்தொருகால் மேவுவனோ பைங்கிளியே.**

(பொ-ரை) பொய்யாகிய திருப்பணிகளை விரும்பாத என்னையும் லட்சியஞ் செய்து என்னுடைய தலைவரானவர் என்னிடத்தில் ஞானத் தொழிலைக் கொடுத்து ஒரு நாளைக்கானாலும் வருவாரா? (எ-று) (43)

1068.மண்ணுறங்கும் விண்ணுறங்கும் மற்றுளஎ லாமுறங்குங்
கண்ணுறங்கேன் எம்மிறைவர் காதலாற் பைங்கிளியே.

(பொ-ரை) இவ்வுலகத்தாரும், தேவர்களும், மற்றுமுள்ள பிராணி களெல்லாம் உறங்கும். நானோ எம்முடைய தலைவரிடத்தில் வைத்த ஆசையினால் அகோராத்திரம் நித்திரை செய்யேன். (எ-று) (44)

1069.மட்டுப் படாத மயக்கமெல்லாந் தீரஎன்னை
வெட்டவெளி வீட்டில்அண்ணல் மேவுவனோ
பைங்கிளியே.

(பொ-ரை) அளவு சொல்லக்கூடாத மாயை களெல்லாம் நீங்கும்படி வெறும் வெளியாகிய வீட்டில் எம்முடைய தலைவரானவர் என்னோடு கூடச் சேருவரோ? (எ-று)

அங்ஙனம் சேருவதாகவிருந்தால் இதுகாறும் தாமதிப்பரா? என்பது இரக்கக் குறி. (45)

1070.மாலை வளர்த்தென்னை வளர்த்திறைவர் பன்னெறியாம்
பாலை வனத்தில்விட்ட பாவமென்றோ பைங்கிளியே.

(பொ-ரை) எனக்கோர் மயக்கத்தைக் கொடுத்து என்னையும் வளரச் செய்து என்னுடைய தலைவரானவர் எல்லாம் நெறியாத் தோன்றும் பாலை நிலத்தில் என்னைவிட்டுப் பிரிந்து போய் விட்டது என்ன பாவமோ? அறியேன். (எ-று) (46)

1071.மெய்யில்நோய் மாற்றவுழ்தம் மெத்தவுண்டெம்
அண்ணல்தந்த
மையல்நோய் தீர்க்க மருந்தும்உண்டோ பைங்கிளியே.

(பொ-ரை) தேகத்தினிலுண்டாம் நோயை நிவர்த்தி செய்ய அநேக மருந்துகளிருக்கின்றன. ஆனால் எம்முடைய தலைவர் கொடுத்த காம நோயை நீக்கிக் கொள்ள மருந்தும் இருக்கின்றதா? இல்லை. (எ-று) (47)

**1072.மேவுபஞ்ச வண்ணமுற்றாய் வீண்சிறையால் அல்லலுற்றாய்
பாவிபஞ்ச வண்ணம் பகர்ந்துவா பைங்கிளியே.**

(பொ-ரை) பஞ்சவர்ணங்களைப் பெற்றிருக்கின்றனை. அன்றிச் சிறகினால் துன்பப்பட்டாய். ஆகையால் பாவியாகிய நான் படும் ஐந்து வகைத் துன்பத்தையும் என்னுடைய தலைவனுக்குச் சொல்லி வா. (எ-று)

"பஞ்சவண்ணம்" என்றது மதனவிகாரத்தாற் படும் ஐவகைத் துன்பங்களை. அவைதாம் சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்பன. (48)

**1073.வாய் திறவா வண்ணமெனை வைத்தாண்டார்க்
கென்துயரை
நீதி றவாச் சொல்லின் நிசமாங்காண் பைங்கிளியே.**

(பொ-ரை) என்னை வாய்பேசாதபடி ஆண்டு கொண்டருளின எம்பெருமானுக்கு என்னுடைய துன்பங் களையெல்லாம் நீ வாய் திறந்து சொல்ல வேண்டும். (எ-று) (49)

**1074.வாட்டப் படாத மவுனஇன்பங் கையாலே
காட்டிக் கொடுத்தானைக் காண்பேனோ பைங்கிளியே.**

(பொ-ரை) மனத் தளர்ச்சி வாராமல் அசைவற்றிருக் கின்ற மௌன ஞானசுகத்தைச் சின்முத்திரா மார்க்கத்தால் எனக்குக் காட்டிக் கொடுத்த தலைவனை நான் எந்தக் காலத்திற் காண்பேனோ? (எ-று) (50)

**1075.வாரா வரவாக வந்தருளும் மோனருக்கென்
பேராசை எல்லாம் போய்ப் பேசிவா பைங்கிளியே.**

(பொ-ரை) வாராமலே வந்து திருவருள் செய்கின்ற என்னுடைய ஞானாசிரியனிடத்திற் போய் என்னுடைய மிகுந்த ஆசையெல்லாம் சொல்லிவிட்டு வரவேண்டும். (எ-று) (51)

**1076.விண்ணவர்தம் பாலமுதம் வேப்பங்கா யாகஎன்பால்
பண்ணியதெம் அண்ணல்மயல் பார்த்தாயோ பைங்கிளியே.**

(பொ-ரை) தேவர்களால் அநுபவிக்கப்படும் அமிர்தத்தை எனக்குக் கைப்பாகச் செய்துவிட்ட எம்முடைய தலைவனுடைய மாயையைப் பார்த்தாயோ? (எ-று)

இப்படிப்பட்டவர் என்னையும் காப்பாற்றுவாரோ? என்பது ஐயம். (52)

1077.விண்ணுள் வளியடங்கி வேறற்ற தென்ன அருள்
கண்ணுள் அடங்கிடவுங் காண்பேனோ பைங்கிளியே.

(பொ-ரை) ஆகாயத்தினிடத்திற் காற்றானது அடங்கி நிற்குந் தன்மை போல நான் திருவருட் கண்ணினிடத்தில் அடங்கி இருக்கவுஞ் செய்து கொள்வேனோ?

அவனுடைய திருவருளிருக்கும் பட்சத்திற் செய்து கொள்வேன் என்பது குறிப்பு. (53)

1078.விண்ணார் நிலவுதவழ் மேடையிலெல் லாருமுற
மண்ணான வீட்டிலென்னை வைத்ததென்னோ பைங்கிளியே.

(பொ-ரை) ஆகாயத்திலுள்ள சந்திரன் தவழ்கின்ற மேல் வீட்டில் எல்லாரும் குடியிருக்க என்னை மாத்திரம் இந்தப் பூமியிலிருக்க வைத்தற்குக் காரணமென்னவோ? அறிகிலேன். (எ-று) (54)

1079.உள்ளத்தி னுள்ளே ஒளித்திருந்தென் கள்ளமெல்லாம்
வள்ளல்அறிந் தால்எனக்கு வாயுமுண்டோ பைங்கிளியே.

(பொ-ரை) என்னுடைய தலைவரானவர் என்மனத்தின் கண்ணே யொளித்திருந்து என்னுடைய வஞ்சகங்களை யெல்லாம் உணர்ந்தால் எனக்குப் பேசுதற்கும் வாயிருக்கின்றதா? இல்லை. (எ-று) (55)

1080.ஆகத்தை நீக்குமுன்னே ஆவித் துணைவரைநான்
தாகத்தின் வண்ணந் தழுவுவனோ பைங்கிளியே.

(பொ-ரை) என்னுடைய தேகமானது இறந்து படுவதற்கு முன்னரே என்னுயிர்க்குத் துணைவரான சிவபெருமானை என் மோகத்தினிமித்தம் சேருவேனோ?

நான் இறைவனைச் சேராவிட்டாற் என்ன பயனை அடைந்தேன்? என்பது குறிப்பு. (56)

1081.தானே சுபாவந் தலைப்படநின் றான்ஞான
வானா னவரும் வருவாரோ பைங்கிளியே.

(பொ-ரை) தனக்குத்தானே இயற்கையா யென்றைக்குமுள்ள ஞானவானானவர் என்னைத் தழுவும்படி வருவாரோ? வாராரோ? அறியேன். (எ-று) (57)

1082.கள்ளத் தலைவரவர் கைகாட்டிப் பேசாமல்
உள்ளத்தில் வந்த உபாயமென்னோ பைங்கிளியே.

(பொ-ரை) திருட்டுத் தன்மையையுடைய எனது தலைவரானவர் எனக்கு நேராக வந்து கையைக் காட்டிப் பேசாமல் என் மனத்தில் வந்து சேர்ந்த தந்திரம் என்னவோ? அதை நான் அறிந்தேனில்லை. (எ-று)

இறைவனுடைய உபாயத்தை நான் அறிந்திருந்தால் மோட்ச சாம்ராஜ்ஜியத்தை அடைந்திருப்பேன் என்பது குறிப்பு. (58)

எந்நாட்கண்ணி

1. தெய்வ வணக்கம்

1083.நீர்பூத்த வேணி நிலவெறிப்ப மன்றாடுங்
கார்பூத்த கண்டனையான் காணுநாள் எந்நாளோ.

(பொ-ரை) கங்கையைத் தரித்த சடாபாரத்தின் கண்ணிருந்து நிலவானது பிரகாசிக்கச் சிதம்பரத்தின் கண்ணே நடிக்கின்ற திருநீலகண்டத்தை யுடைய கடவுளை நான் காணுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (1)

1084.பொன்னாரும் மன்றுள்மணிப் பூவைவிழி வண்டுசுற்றும்
என்னா ரமுதின் நலம் இச்சிப்ப தெந்நாளோ.

(பொ-ரை) சிதம்பரத்தின்கண் உமாதேவியோடு கூடி எழுந்தருளி யிருக்குங் கோலத்தை நான் எந்தக் காலத்தில் விரும்புவேனோ? (எ-று) (2)

1085.நீக்கிமலக் கட்டறுத்து நேரேவெளியி லெம்மைத்
தூக்கிவைக்குந் தாளைத் தொழுதிடுநாள் எந்நாளோ.

(பொ-ரை) பந்தத்தை யறுத்து மாயையை நீக்கி என்னை வெளி யிடத்தில் நேராக விடுத்த திருவடிகளை நான் எக்காலத்தில் தரிசிப்பேனோ? (எ-று) (3)

1086.கருமுகங்காட் டாமல்என்றுங் கர்ப்பூரம் வீசுந்
திருமுகமே நோக்கித் திருக்கறுப்ப தெந்நாளோ.

(பொ-ரை) பிறவியிற் புகாதபடி எக்காலத்தும் கற்பூர மணம் வீசா நின்ற திருமுகத்தையே நோக்கி என்னுடைய மயக்கத்தை ஒழிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (4)

1087.வெஞ்சே லெனும்விழியார் வேட்கைநஞ்சுக் கஞ்சினரை
அஞ்சேல் எனுவகைக் கபயமென்ப தெந்நாளோ.

(பொ-ரை) பெண்கள் மயக்கத்திற்குப் பயந்து வந்தவர்களைப் பயப்படாதேயுங்கள் என்று சொல்லியமர்த்தும் கைக்கு அடைக்கலமென்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (5)

1088.ஆறு சமயத்தும் அதுவதுவாய் நின்றிலங்கும்
வீறு பரை திருத்தாள் மேவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) ஆறு சமயங்களுள்ளும் அவ்வச்சமய தெய்வங்களாக இருந்து நடிக்கின்ற பராசத்தியினது திருவடியை நான் எந்தக் காலத்தில் அடைவேனோ? (எ-று) (6)

1089.பச்சைநிற மாய்ச்சிவந்த பாகங் கலந்துலகை
இச்சையுடன் ஈன்றாளை யாங்காண்ப தெந்நாளோ.

(பொ-ரை) தான் பச்சை நிறமுள்ளவளாய்ச் செவந்த நிறமுள்ளவனான சிவபெருமானுடைய பாகத்திற் சேர்ந்து உலகங்களை இச்சையுடன் கூடியிருந்து பெற்றவளை நாம் எந்தக்காலத்திற் காண்போமோ? (எ-று) (7)

1090.ஆதியந்தங் காட்டா தகண்டிதமாய் நின்றுணர்த்தும்
போதவடி வாம்அடியைப் போற்றுநாள் எந்நாளோ.

(பொ-ரை) ஆதிமத்யாந்த ரகிதமாகி அகண்டிதமாயிருந்து எல்லா வற்றையும் அறிவுறுத்துகின்ற ஞானவடிவான் திருவடியைத் துதி செய்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (8)

1091.கங்கை நிலவுசடைக் காட்டானைத் தந்தையெனும்
புங்கவெண்கோட் டானைப தம் புந்திவைப்ப தெந்நாளோ.

(பொ-ரை) கங்கை தங்கிய சடாபாரத்தையுடைய சிவபெருமானைத் தகப்பனாகப் பெற்றிருக்கின்ற தந்தங்களையுடைய விநாயகக் கடவுளின் திருவடிகளை மனத்தில் வைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (9)

1092.அஞ்சமுகங் காட்டாமல் ஆறுமுகங் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச் சிந்தைவைப்ப தெந்நாளோ.

(பொ-ரை) நான் பயப்படும்படியான முகத்தைக் காட்டாமல் ஆறுமுகங்களை எனக்குக் காட்ட வந்த

இளைய பிள்ளை யாருடைய செவந்த திருவடி தாமரைகளை நான் மனத்தில் வைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (10)

1093.தந்தைஇரு தாள்துணித்துத் தம்பிரான் தாள்சேர்ந்த
எந்தைஇரு தாளிணைக்கே இன்புறுவ தெந்நாளோ.

(பொ-ரை) தன் தந்தையின் இரண்டு திருவடிகளையும் வெட்டி எறிந்து சிவபெருமானுடைய திருவடிகளைச் சேர்ந்த என்னுடைய தந்தையாகிய சண்டேசுர நாயனாரது திருவடிகளிடத்தில் நான் விருப்பம் வைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (11)

2. குருமரபின் வணக்கம்

1094.துய்ய கரமலரால் சொல்லாமல் சொன்னவுண்மை
ஐயனைக்கல்லால் அரசை யாமணைவ தெந்நாளோ.

(பொ-ரை) மனமே! நிர்மலமான திருக்கரங்களால் உபதேசித்த சின்முத்திரையின் உண்மையையுடைய தலைவனைக் கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளியிருக்கும் தலைவனை நாம் எந்தக்காலத்தில் அடைவோமோ? (எ-று) (1)

1095.சிந்தையினுக் கெட்டாத சிற்சுகத்தைக் காட்டவல்ல
நந்தியடிக் கீழ்க்குடியாய் நாமணைவ தெந்நாளோ.

(பொ-ரை) மனத்தால் அறிவதற்குக் கூடாத சிற் சுகத்தை நேரே காட்ட வல்லமை யுடையவரான நந்திபிரானுடைய திருவடிகளின் கீழ் குடியிருப்பாக நாம் எந்தக் காலத்திற் சேருவோமோ? (எ-று) (2)

1096.எந்தைச னற்குமர னாதிஎமை ஆட்கொள்வான்
வந்த தவத்தினரை வாழ்ந்துநாள் எந்நாளோ.

(பொ-ரை) எமக்குத் தந்தையாகிய சனற்குமரன் முதலாகச் சொல்லப் பட்ட தவசிரேஷ்டர்களைத் துதி செய்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (3)

1097.பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதன் அருள் மேவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) பொய்ப் பொருளை உண்மையாகக் கண்ட அஞ்ஞானிகளால் அறியப்படாத நிர்மலமான அத்துவித மதத்தில் ஈடுபட்டவனான மெய்கண்ட நாதனுடைய திருவருளைப் பெறுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (4)

1098.பாதிவிருத் தத்தால்இப் பார்விருத்த மாகவுண்மை
சாதித்தார் பொன்னடியைத் தான்பணிவ தெந்நாளோ.

(பொ-ரை) பாதி விருத்தத்தாலே இந்த உலகத்தைப் பொய்ப்படுத்தி உண்மைப் பொருளைச் சாதித்தருளிய சிவஞான சித்தியாருடைய திருவடி களைப் பணிவது எந்தக் காலத்திலோ? (எ-று) (5)

1099.சிற்றம் பலமன்னுஞ் சின்மயராந் தில்லைநகர்க்
கொற்றங் குடிமுதலைக் கூறுநாள் எந்நாளோ.

(பொ-ரை) சிதாகாயத்தில் நடிக்கின்ற ஞானசொரூபியை ஒப்பாயிருக் கின்ற சிதம்பரத்தின் கண்ணுள்ள கொற்றங் குடியில் வாழ்பவரான உமாபதி சிவாசாரியாருடைய திருவடிகளைத் துதிசெய்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (6)

1100.குறைவிலருள் ஞானமுதல் கொற்றங் குடியடிகள்
நறைமலர்த்தாட் கன்புபெற்று நாமிருப்ப தெந்நாளோ.

(பொ-ரை) குறைதலில்லாத திருவருள் ஞானத் தலைவரான கொற்றங் குடி அடிகளுடைய திருவடித் தாமரைகளுக்கு அன்பு செலுத்துவது எந்தக் காலத்திலோ? (எ-று) (7)

1101.நாளவங்கள் போகாமல் நன்னெறியைக் காட்டிஎமை
ஆளவந்த கோலங்கட் கன்புவைப்ப தெந்நாளோ.

(பொ-ரை) நான் என்னுடைய வாழ்நாட்களை வீணே போக்காதபடி ஞானமார்க்கத்தை உபதேசித்து எம்மை அடிமையாக்கிக் கொள்ளுதற் பொருட்டு எழுந்தருளி வந்த குருமூர்த்திகளிடத்தில் அன்பு செலுத்துவது எந்தக் காலத்திலோ? (எ-று) (8)

1102.என்னறிவை உள்ளடக்கி என்போல் வருமவுனி
தன்னறிவுள் குள்ளேநான் சாருநாள் எந்நாளோ.

(பொ-ரை) என்னுடைய அறிவை உள்ளேயே அடங்கச் செய்து என்னைப் போலவே எழுந்தருளி வந்த மௌனாசிரியனுடைய ஞான அறிவுக்குள் நான் போய்ச் சேருவது எந்தக் காலத்திலோ? (எ-று) (9)

1103.ஆறுளொன்றை நாடின்அதற் காறுமுண்டா மென்றெமக்குக்
கூறும் மவுனியருள் கூடுநாள் எந்நாளோ.

(பொ-ரை) அறுசமயங்களுள் ஒன்றை விரும்பி என் மனதுக்கு வழியாயிருக்கிறதென்று எமக்குத் திருவாய் மலர்ந்தருளிய ஞானா சிரியனுடைய திருவருளானது என்னைவந்து சேருவது எந்தக் காலத்திலோ? (எ-று) (10)

1104.நில்லாமல் நின்றருளை நேரேபா ரென்றவொரு
சொல்லால் மவுனியருள் தோற்றுநாள் எந்நாளோ.

(பொ-ரை) நில்லாமல் நிற்கக் கடவை. அப்படி நின்று நேராகவே திருவருளைப் பார் என்று உபதேசித்த ஒரு சொல்லினால் மௌனாசிரியனுடைய திருவருளானது வெளிப்படுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (11)

1105.வைதிகமாஞ் சைவ மவுனிமவு னத்தளித்த
மெய்திகழ்ந்தென் அல்லல் விடியுநாள் எந்நாளோ.

(பொ-ரை) வைதீக சைவத்தையே பொருளாகக் கொண்டிருக்கும் மௌனாசிரியனானவன் மௌன ஞானத்தால் திருவாய்மலர்ந்த உண்மை யானது எனக்கு விளங்கி என்னுடைய துன்பங்களை நீக்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (12)

1106.வாக்கு மனமற்ற மவுனிமவு னத்தருளே
தாக்கவும்என் அல்லலெல்லாந் தட்டழிவ தெந்நாளோ.

(பொ-ரை) வாக்கு, மனம் ஆகிய இரண்டும் அறவே யொழிந்த மௌனாசிரியனானவன் அருளிச் செய்த மௌனஞானத்தின் திருவருளே தாக்கவும் என்னுடைய துன்பங்கள் கேட்டையடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) (13)

3. அடியார் வணக்கம்

1107.வெம்பந்தந் தீர்த்துலகாள் வேந்தன் திருஞான
சம்பந் தனையருளாற் சாருநாள் எந்நாளோ.

(பொ-ரை) கொடிய பாவங்களை நீக்கி உலகத்தை ரட்சிக்கின்ற அரசனான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை நான் திருவருளை மேலிட்டுச் சேர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (1)

1108.ஏரின் சிவபோகம் இங்கிவற்கே என்னஉழ
வாரங்கொள் செங்கையர்தாள் வாரம்வைப்ப தெந்நாளோ.

(பொ-ரை) இவ்வுலகத்திற் சிவபோகமானது இவர்க்கே உரியதாகும் என்று பல பேர்களால் சொல்லப்படுகின்ற உழவாரப்படை தாங்கிய திருக் கரங்களையுடைய திருநாவுக்கரசு நாயனாரது திருவடிகளில் அன்பு வைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(2)*

1109.பித்தரிறை என்றறிந்து பேதைபால் தூதனுப்பு
வித்த தமிழ்ச்சமர்த்தர் மெய்புகழ்வ தெந்நாளோ.

(பொ-ரை) சிவபெருமானானவன் ஒருவாறாக பித்தனாவா னென்றறிந்து பெண்பால் தூதனுப்பிய தமிழில் வல்லமையுடையவரான சுந்தரமூர்த்தி நாயனாரைத் துதி செய்வது எந்தக் காலத்திலோ? (எ-று) *(3)*

1110.போதவூர் நாடறியப் புத்தர்தமை வாதில்வென்ற
வாதவூர் ஐயன் அன்பை வாஞ்சிப்ப தெந்நாளோ.

(பொ-ரை) உண்மைஞான மிருந்தார்களெல்லா மறியும்படி தர்க்கத்தாற் புத்தர்களை வென்று அகமகிழ்ந்த ஸ்ரீமன் மாணிக்கவாசக சுவாமிகளுடைய அன்பை நான் விரும்புவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(4)*

1111.ஓட்டுடன்பற் றின்றி உலகைத் துறந்தசெல்வப்
பட்டினத்தார் பத்ரகிரி பண்புணர்வ தெந்நாளோ.

(பொ-ரை) உலகத்தினிடத்தில் ஒட்டுப்பற்றுகள் சிறிதுமில்லாமல் எல்லாவற்றையும் துறந்த பட்டினத்தார், பத்திரகிரியார், இவர்களுடைய தன்மைகளை அறிவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(5)*

1112.கண்டதுபொய் என்றகண்டா காரசிவம் மெய்யெனவே
விண்டசிவ வாக்கியர்தாள் மேவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) கண்ணுக்குக் காணப்பட்ட பொருளெல்லாம் பொய்யென்றும் சர்வ வியாபகனான சிவபெருமானே மெய்யானவரென்றும் உணர்ந்து வெளிப் படுத்தின சிவவாக்கியருடைய திருவடிகளை அடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(6)*

1113.சக்கர வர்த்தி தவராச யோகியெனும்
மிக்கதிரு மூலன் அருள் மேவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) சக்ரவர்த்தியாகிய ராஜயோகியென்று சொல்லப்பட்டு வருகின்ற திருமூலநாயனாருடைய திருவருளை அடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) (7)

1114.கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொன்ன
எந்தை அருள்நாடி இருக்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) சுப்பிரமணியருடைய திருவருளைப் பெற்று அவர்மீது கந்தரநுபூதி என்னும் அரிய நூலைப் பாடியருளிய என்னுடைய தந்தையின் திருவருளை விரும்பியிருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (8)

1115.எண்ணரிய சித்தர் இமையோர் முதலான
பண்ணவர்கள் பத்தரருள் பாலிப்ப தெந்நாளோ.

(பொ-ரை) கணக்கிட்டுச் சொல்லக்கூடாத சித்தர்கள், தேவர்கள், பண்ணவர்கள் பத்தர்கள் ஆகிய இவர்களுடைய திருவருளை நான் அடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) (9)

4. யாக்கையைப் பழித்தல்

1116.சுக்கிலமும் நீருஞ் சொரிமலமும் நாறும்உடல்
புக்குழலும் வாஞ்சையினிப் போதும்என்ப தெந்நாளோ.

(பொ-ரை) சுக்கிலம், சலம், மலம், இரத்தம் ஆகிய இவைகளால் நாற்றம் வீசா நின்ற தேகத்திலிருந்து வாசஞ் செய்யும் விருப்பமானது ஒழிவது எந்தக் காலத்திலோ? (எ-று) (1)

1117.நீர்க்குமிழி பூணமைத்து நின்றாலும் நில்லாமெய்
பார்க்கு மிடத்திதன்மேற் பற்றறுவ தெந்நாளோ.

(பொ-ரை) ஒரு பூண் போட்டு நிறுத்தி வைத்தாலும் நிற்க மாட்டாது நீர்க்குமிழியின் தன்மையைப் போன்ற, இந்த உடம்பின் மேல் வைத்துள்ள பந்தம் நீங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (2)

1118.காக்கை நரிசெந்நாய் கழுகொருநாள் கூடியுண்டு
தேக்குவிருந் தாம்உடலைச் சீஎன்ப தெந்நாளோ.

(பொ-ரை) காகம், நரி, செந்நாய், கழுகு, இவைகளெல்லாம் ஒன்றாகக் கூடி ஒருநாள் விருந்தாகச் சாப்பிடத்தக்க இந்த உடம்பை வெறுத்து விடுவது எந்தக் காலத்திலோ (எ-று) (3)

1119.செங்கிருமி யாதி செனித்த சென்ம பூமியினை
இங்கெனுட லென்னும் இழுக்கொழிவ தெந்நாளோ.

(பொ-ரை) செவந்த புழுக்கள் முதலிய செந்துக்கள் பிறப்பதற் கிடமாயிருக் கின்ற நிலத்தை என் தேகமென்று சொல்லித் திரியும் குற்றம் என்னைவிட்டு நீங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (4)

1120.தத்துவர்தொண் ணுற்றறுவர் தாமாய்வாழ் இந்நாட்டைப்
பித்தன்நான் என்னும் பிதற்றொழிவ தெந்நாளோ.

(பொ-ரை) தொண்ணூற்றாறு தத்துவத் தலைவர்களுக் குரியதான இந்த உடம்பை என் தேகமென்று சொல்லும் பற்று ஒழிவது எந்தக் காலத்திலோ? (எ-று) (5)

1121. ஊனொன்றி நாதன் உணர்த்தும் அதை விட்டறிவேன்
நானென்ற பாவிதலை நாணுநாள் எந்நாளோ.

(பொ-ரை) என்னுடைய தேகத்திற்குள் கூடியிருந்து எனக்கு எல்லா வற்றையும் உணர்த்துகின்றவன் ஒருவன், இருப்பதை மறந்து எல்லாம் நானேயென்று பாவியாகிய நான் அந்தச் சொல்லுக்கு வெட்கமடைவது எந்தக் காலத்திலோ? சொல்லும் (எ-று) (6)

1122.வேலையிலா வேதன் விதித்த இந்த்ர சாலவுடல்
மாலைவி யாபார மயக்கொழிவ தெந்நாளோ.

(பொ-ரை) யாதொரு வேலையுமில்லாத பிரமனால் உண்டாக்கப்பட்ட இந்திரசாலம் போன்ற இந்தத் தேக வாஞ்சையினின்றும் நீங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (7)

1123.ஆழ்ந்து நினைக்கின் அரோசிகமாம் இவ்வுடலில்
வாழ்ந்து பெரும்பேற்றை மதிக்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) நன்றாய் ஆராய்ந்து பார்த்தால் வெறுப்பாகின்ற இந்த உடம்பிலிருந்தே பெரிய பேரின்பத்தை அடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) (8)

1124.மும்மலச்சே றான முழுக்கும்பி பாகமெனும்
இம்மல காயத்துள் இகழ்ச்சிவைப்ப தெந்நாளோ.

(பொ-ரை) ஆணவ, காமிய, மாயைகளின் கூட்டமான கும்பிபாக மென்று சொல்லப்படுகின்ற இந்த உடம்பை இகழ்ந்து விடுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (9)

1125.நாற்றமிகக் காட்டு நவவாயில் பெற்றபசுஞ்
சோற்றுத் துருத்தி சுமைஎன்ப தெந்நாளோ.

(பொ-ரை) நாற்றத்தை மிகவும் வெளிப்படுத்துகின்ற நவத்துவாரங்களை யுடைய பசிய சோற்றுத் துருத்தியாகிய இந்த உடம்பைச் சுமையென்று வெறுப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (10)

1126.உருவிருப்ப வுள்ளேதான் ஊறும் மலக்கேணி
அருவருப்பு வாழ்க்கையைக்கண் டஞ்சுநாள் எந்நாளோ.

(பொ-ரை) மேலே ரூபந் தாங்கியிருக்க உள்ளே ஊறிக் கொண்டிருக்கும் இந்த மலநிறைந்த குட்டையானது அருவருக்கத்தக்க வாழ்வைப் பார்த்து நான் அஞ்சுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (11)

5. மாதரைப் பழித்தல்

1127. மெய்வீசு நாற்றமெலாம் மிக்கமஞ்ச ளால்மறைத்துப்
பொய்வீசும் வாயார் புலையொழிவ தெந்நாளோ.

(பொ-ரை) தங்கள் தேகத்திலிருந்துண்டாகும் நாற்றத்தை யெல்லாம் மஞ்சள் பூசி மறைத்து பொய்யைப் பேசுகின்ற பெண்கள் மாயையை ஒழியப் பெறுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (1)

1128.திண்ணியநெஞ்சப் பறவை சிக்கக் குழற்காட்டில்
கண்ணிவைப்போர் மாயங் கடக்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) பலம் பொருந்திய மனமாகிய பறவையானது அகப்பட்டுக் கொள்ளும்படி தங்களுடைய கூந்தலாகிய காட்டில் வலை வைப்பவர் களுடைய மாயையை நீக்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (2)

1129.கண்டுமொழி பேசிமனங் கண்டுகொண்டு கைவிலையாக்
கொண்டுவிடு மானார்பொய்க் கூத்தொழிவ தெந்நாளோ.

(பொ-ரை) இனிப்பான சொல்லைக் கொண்டு பேசி ஆடவர்கள் மனத்தை கண்டு அவர்களைக் கைவிலையாகக் கொண்ட பெண்களுடைய பொய்க் கூத்தினின்றும் நீங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (3)

1130.காமனைவா வென்றிருண்ட கண்வலையை வீசும் மின்னா
நாமம் மறந்தருளை நண்ணுநாள் எந்நாளோ.

(பொ-ரை) மன்மதனை வாவென்று சொல்லி அந்தகாரமான கண் வலையை வீசுகின்ற பெண்களுடைய பேரையே மறந்து திருவருளை அடையப் பெறுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (4)

1131.கண்களில்வெண் பீளை கரப்பக் கருமையிட்ட
பெண்கள்மயல் தப்பிப் பிழைக்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) கண்களிற் சேர்கின்ற வெள்ளிய பீளையை மறைக்கும் பொருட்டுக் கண்களுக்கு மையைத் தீட்டுகின்ற பெண்களுடைய மாயை யினின்றும் தப்பிப் பிழைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (5)

1132.வீங்கித் தளர்ந்து விழுமுலையார் மேல்வீழ்ந்து
தூங்குமதன் சோம்பைத் துடைக்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) முன்னர் பெருத்துப் பின்னர் தளர்ந்து விழுந்து விழுந் தன்மையுடைய முலைப்பெண்கள் மேல் விழுந்து தூங்குகின்ற மன்மத விகாரத்தை நீக்கிக் கொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (6)

1133.கச்சிருக்குங் கொங்கை கரும்பிருக்கும் இன்மாற்றம்
வைச்சிருக்கும் மாதர் மயக்கொழிவ தெந்நாளோ?

(பொ-ரை) வாரை இறுக்கிக் கட்டிய ஸ்தனங் களையுடைய மின்னலைப் போலுஞ் சாயையையுடைய பெண்கள் மயக்கத்தை விட்டிருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (7)

1134.பச்சென்ற கொங்கைப் பசப்பியர்பா ழானமயல்
நச்சென் றறிந்தருளை நண்ணுநாள் எந்நாளோ.

(பொ-ரை) மஞ்சளைப் பூசியதனால் பச்சென்று இருக்கின்ற ஸ்தனபாரங் களையுடைய பெண்களது கொடிய மாயையை விஷமென்றுணர்ந்து அதை நீக்கித் திருவருளைச் சேர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (8)

1135.உந்திச் சுழியால் உளத்தைச் சுழித்தகன
தந்தித் தனத்தார் தமைமறப்ப தெந்நாளோ.

(பொ-ரை) தங்கள் அல்குலாகிய சுழியினால் ஆடவர்களது மனத்தை மயக்குகின்ற பெரிய யானையைப் போலுந்தனபாரங்களையுடைய பெண் களை நாம் மறந்திருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (9)

**1136.தட்டுவைத்த சேலைக் கொய்சகத்திற் சிந்தைஎல்லாங்
கட்டிவைக்கும் மாயமின்னார் கட்டழிவ தெந்நாளோ.**

(பொ-ரை) தங்களுக்குத் தட்டில் வைத்துக் கொடுத்த சேலையினது முன்தானையால் ஆடவர்களது மனத்தை யெல்லாம் கட்டி வைக்கின்ற மாயையையுடைய பெண்களது பந்தத்தை நீக்கிக் கொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (10)

**1137.ஆழாழி என்ன அளவுபடா வஞ்சநெஞ்சப்
பாழான மாதர்மயல் பற்றொழிவ தெந்நாளோ.**

(பொ-ரை) ஆழமான சமுத்திரத்தைப் போல் அளவு சொல்லக்கூடாத வஞ்சகம் பொருந்திய மனத்தையுடைய கொடியவர்களது பற்றை நீக்கிக் கொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (11)

**1138.தூய பனித்திங்கள் சுடுவதெனப் பித்தேற்று
மாய மடவார் மயக்கொழிவ தெந்நாளோ.**

(பொ-ரை) பரிசுத்தமான குளிர்ந்த சந்திரனானவன் சுடுவது போல ஆடவர்களுக்கு ஒரு பயித்தியத்தைக் கொடுக்கின்ற இளம் பெண்களது மயக்கம் நீங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (12)

**1139.ஏழைக் குறும்புசெயும் ஏந்திழையார் மோகமெனும்
பாழைக் கடந்து பயிராவ தெந்நாளோ.**

(பொ-ரை) எளிய குறும்புகளை யெல்லாம் செய்கின்ற பெண்களது மோகமென்கிற பாழைத் தாண்டி விளைவது எந்தக் காலத்திலோ? (எ-று) (13)

**1140.விண்டு மொழிகுளறி வேட்கைமத மொண்டுதருந்
தொண்டியர்கள் கட்கடையிற் சுற்றொழிவ தெந்நாளோ.**

(பொ-ரை) சொற்களை வாய் விட்டுக் குழறி அவா வென்கிற மதுவை மொண்டு எனக்குக் கொடுக்கின்ற அல்கு லினையுடைய பெண்களது கண்களாகிய சுழற் காற்றில் சுற்றித் திரிவது நீங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (14)

**1141.மெய்யிற் சிவம்பிறக்க மேவும்இன்பம் போல்மாதர்
பொய்யிலின் பின்றென்று பொருந்தா நாள் எந்நாளோ.**

(பொ-ரை) என்னுடைய மனத்தின்கண் சிவபெருமானா னவன் வந்து தோன்ற பெண்களுடைய பேரின்பம்போற்

காட்டும் சிற்றின்பத்தில் நான் போய்ச் சேராமலிருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(15)*

6. தத்துவ முறைமை

1142.ஐம்பூதத் தாலே அலக்கழிந்த தோடமற
வெம்பூத நாதனருள் எய்துநாள் எந்நாளோ.

(பொ-ரை) பஞ்சபூதங்களால் நானடைந்த துன்பங் களெல்லாம் ஒழியும் பொருட்டு கொடிய பூதநாதனாகிய சிவபெருமானுடைய திருவருளைப் பெறுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(1)*

1143.சத்தமுத லாம்புலனிற் சஞ்சரித்த கள்வரெனும்
பித்தர்பயந் தீர்ந்து பிழைக்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) சத்த முதலாகிய ஐம்புலன்களிற் சஞ்சரித்த கள்வர்களாகிய பித்தர்கள் பயந் தீர்ந்து பிழைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(2)*

1144.நாளும் பொறிவழியை நாடாத வண்ணம்எமை
ஆளும்பொறியால் அருள்வருவ தெந்நாளோ.

(பொ-ரை) தினமும் நான் ஐம்பொறிகளின் வழியை விரும்பாதபடி எம்மை அடிமை கொள்ளும் வழியாற் சிவபெருமானுடைய திருவருள் வருவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(3)*

1145.வாக்காதி யானகன்ம மாயை தம்பால் வீண்காலம்
போக்காமல் உண்மை பொருந்துநாள் எந்நாளோ.

(பொ-ரை) வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபஸ்தம் ஆகிய கர்மேந்திரி யங்களது மாயையால் வீணே காலம் போக்காமல் உம்மைப் பொருளை நாடுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(4)*

1146.மனமான வானரக் கைம்மாலை யாக்காமல்
எனையான் அடிகளடி எய்துநாள் எந்நாளோ.

(பொ-ரை) மனமென்னுங் குரங்கினது கையிலகப்பட்ட பூமாலை யாகாமல் என்னையாளவிருக்கும் சிவபெருமானுடைய திருவடிகளை யடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(5)*

1147.வேட்டைப் புலப்புலையர் மேவாத வண்ணமனக்
காட்டைத் திருத்திக் கரைகாண்ப தெந்நாளோ.

(பொ-ரை) வேட்டையாடுந் தொழிலில் வல்லவர்களான ஐம்புலப் புலையர்கள் என்னிடத்தில் வந்து சேராதபடி மனமென்னும் காட்டைச் சீர்ப்படுத்தி அக்கரையைக் காண்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(6)*

1148.உந்து பிறப்பிறப்பை உற்றுவிடா தெந்தையருள்
வந்து பிறக்க மனமிறப்ப தெந்நாளோ.

(பொ-ரை) மேலிட்டு வருகின்ற பிறப்பிறப்புக் களினின்றும் நீங்கி என் தந்தையுடைய திருவருளானது என்னிடத்திலுண்டாக என் மனமிறப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(7)*

1149.புத்திஎனுந் துத்திப் பொறியரவின் வாய்த்தேரை
ஒத்துவிடா தெந்தையருள் ஓங்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) புத்தியென்று சொல்லுகின்ற படப்பொறி வாய்ந்த பாம்பின் வாயிற்பட்ட தேரையாய் விடாமல் எம்முடைய தந்தையாகிய சிவபெருமானுடைய திருவருள் விர்த்தியாவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(8)*

1150.ஆங்கார மென்னுமத யானைவா யிற்கரும்பாய்
ஏங்காமல் எந்தையருள் எய்துநாள் எந்நாளோ.

(பொ-ரை) ஆங்காரமென்கிற ஒரு மதங் கொண்ட யானையின் வாய்ப்பட்ட கரும்பாகாமல் எம்பெருமா னுடைய திருவருள் கிடைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(9)*

1151.சித்தமெனும் பௌவத் திரைக்கடலில் வாழ்துரும்பாய்
நித்தமலை யாதருளில் நிற்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) சித்தமென்கின்ற சமுத்திரத்தில் வீழ்ந்த துரும்பாகாதபடி நான் சிவபெருமானுடைய திருவருள் நிலையில் நிற்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(10)*

1152.வித்தியா தத்துவங்கள் ஏழும் வெருண்டோடச்
சுத்தபர போகத்தைத் துய்க்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) ஏழு விதமான வித்தியா தத்துவங்களும் பயந்தோடும்படி சுத்தமான பரபோகத்தையுண்டு அநுபவிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(11)*

**1153.சுத்தவித்தை யேமுதலாத் தோன்றுமோர் ஐந்துவகைத்
தத்துவத்தை நீங்கி அருள் சாருநாள் எந்நாளோ.**

(பொ-ரை) சுத்த வித்தியா தத்துவ முதலாகச் சொல்லப்பட்ட ஒரு ஐவகையான தத்துவங்களையும் நீக்கி உன்னுடைய திருவருளைச் சேருவது எந்தக் காலத்திலோ? (எ-று) (12)

**1154.பொல்லாத காமப் புலத்தொழிலில் என்னறிவு
செல்லாமல் நன்னெறியிற் சேருநாள் எந்நாளோ.**

(பொ-ரை) கொடியதான காமமென்கிற புலைத் தொழிலில் என்னறிவைச் செலுத்தாமல் நல்ல மார்க்கத்திற் சேரப்பண்ணுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (13)

**1155.அடிகளடிக் கீழ்க்குடியாய் யாம்வாழா வண்ணங்
குடிகெடுக்கும் பாழ்மடிமைக் கூறெழிவ தெந்நாளோ.**

(பொ-ரை) சிவபெருமானுடைய திருவடிகளுக்கு அடிமைப்பட்டு வாழாதபடி என்னை அறவே கெடுக்கின்ற பாழுஞ் சோம்பல் நீங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (14)

**1156.ஆன புறக்கருவி ஆறுபத்தும் மற்றுளவும்
போனவழி யுங்கூடப் புல்முளைப் தெந்நாளோ.**

(பொ-ரை) தொகையாயிருக்கின்ற புறக்கருவிகள் அறுபதும் இறந்துபட்ட வழியிலும் புல் முளைக்காதா? (எ-று) (15)

**1157.அந்தகனுக் கெங்கும்இரு ளானவா றாஅறிவில்
வந்த இருள் வேலை வடியுநாள் எந்நாளோ.**

(பொ-ரை) கண்குருடனுக்கு எவ்விடத்தும் இருளாயிருப்பது போல என்னுடைய அறிவின்கண் வந்த அஞ்ஞானாந்தகார சமுத்திரமானது வடிவது எந்தக் காலத்திலோ? (எ-று) (16)

**1158.புன்மலத்தைச் சேர்ந்துமல போதம் பொருந்துதல்போய்
நின்மலத்தைச் சேர்ந்துமல நீங்குநாள் எந்நாளோ.**

(பொ-ரை) அற்பமாகிய ஆணவமலத்தைச் சேர்ந்து பந்தமடைவது நீங்கி நிர்மலத்தையடைந்து ஆணவம் நீங்குவது எந்தக்காலத்திலோ? (எ-று) (17)

1159.கண்டுகண்டுந் தேறாக் கலக்கமெல்லாந் தீர்வண்ணம்
பண்டைவினை வேரைப் பறிக்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) பார்த்துப் பார்த்துந் தெளியாத மனக் கலக்கமெல்லாம் நீங்கும்படி பூர்வவினையின் வேரை அறுத்தெறிவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(18)*

1160.பைங்கூழ் வினைதான் படுசாவி யாகஎமக்
கெங்கோன் கிரணவெயில் எய்துநாள் எந்நாளோ.

(பொ-ரை) பயிராகிய பூர்வவினையானது நசித்துப் போகும் படி எம்பெருமானுடைய கிரணங்களையுடைய வெளிலானது தாக்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(19)*

1161.குறித்தவித மாதியாற் கூடும்வினை எல்லாம்
வறுத்தவித் தாம் வண்ணம்அருள் வந்திடுநாள் எந்நாளோ.

(பொ-ரை) மேலே சொன்ன வகை முதலியவைகளால் வந்து சேரும் வினையெல்லாம் வறுத்துவிட்ட விதையைப் போலாகும்படி திருவருள் கிடைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(20)*

1162.சஞ்சிதமே யாதி சரக்கான முச்சேறும்
வெந்தபொரி யாக அருள் மேவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) சஞ்சிதம், ஆகாமியம், பிரார்த்துவங்களான மூன்று சேரும் வெந்துவிட்ட பொரியாகும்படி திருவருள் மேலிட்டு வருவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(21)*

1163.தேகமுதல் நான்காத் திரண்டொன்றாய் நின்றிலகும்
மோகமிகு மாயை முடியுநாள் எந்நாளோ.

(பொ-ரை) தேகமுதல் நான்காக விரிந்து பின்னர் ஒன்றாத் திரண்ட மாயையானது முடிவுபெறுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(22)*

1164.சத்த முதலாத் தழைத்திங் கெமக்குணர்த்துஞ்
சுத்தமா மாயை தொடக்கறுவ தெந்நாளோ.

(பொ-ரை) சத்தம் முதலாக விரிந்து இவ்விடத்தில் நமக்கு அறிவுறுத்து கின்ற சுத்தமாயையின் பிணிப்பு நீங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(23)*

1165.எம்மை வினையை இறையைஎம் பாற்காட்டாத
அம்மை திரோதை அகலுநாள் எந்நாளோ.

(பொ-ரை) எம்மையும், வினையையும், இறைவனையும் எமக்கு வெளிப்படையாய்க் கூட்டாத திரோதாயியானவள் எம்மைவிட்டு நீங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (24)

1166.நித்திரையாய் வந்த நினைவழிக்குங் கேவலமாஞ்
சத்துருவை வெல்லுஞ் சமர்த்தறிவ தெந்நாளோ.

(பொ-ரை) நித்திரை போல் வந்து என்னுடைய நினைப்பைக் கெடுக்கின்ற கேவலாவத்தையாகிய விரோதியை வென்று ஜெயம்பெறுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (25)

1167.சன்னல்பின்ன லான சகலமெனுங் குப்பையிடை
முன்னவன்ஞா னக்கனலை மூட்டுநாள் எந்நாளோ.

(பொ-ரை) சன்னல் பின்னலாகக் கலந்திருக்கின்ற சகலாவத்தை யென்னும் குப்பையில் தலைவனானவன் தன்னுடைய ஞானாக்கினியை மூட்டுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (26)

1168.மாயா விகார மலமொழிசுத் தாவத்தை
தோயா அருளைத் தொடருநாள் எந்நாளோ.

(பொ-ரை) மாய சம்பந்தப்பட்டு விகாரப்படுத்துகின்ற ஆணவத்தை நீக்குகின்ற சுத்தாவத்தையிற் சேர்ந்து திருவருளைத் தொடர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (27)

7. தன்னுண்மை

1169.உடம்பறியும் என்னும்அந்த ஊழலெல்லாந் தீரத்
திடம்பெறவே எம்மைத் தெரிசிப்ப தெந்நாளோ.

(பொ-ரை) உடம்பே அறியத்தக்கதென்று சொல்லுகின்ற அந்த ஊழ்வினையெல்லாம் தீரும்படி திடமாக என்னை நானே தெரிசிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (1)

1170. செம்மையறி வாலறிந்து தேகாதிக் குள்ளிசைந்த
எம்மைப் புலப்படவே யாமறிவ தெந்நாளோ.

(பொ-ரை) நல்ல உண்மையறிவால் உணர்ந்து தேக முதலிய வற்றிற்குள் ளிசைந்திருந்த எம்மைத் தெரியும்படி நாம் அறிவது எந்தக் காலத்திலோ? (எ-று) (2)

1171. தத்துவமாம் பாழ்த்த சடவுருவைத் தான் சுமந்த
சித்துருவாம் எம்மைத் தரிசிப்ப தெந்நாளோ.

(பொ-ரை) தத்துவக் கூட்டங்களாகிய இந்தத் தேகத்தைச் சுமந்திருக்கின்ற ஞான ரூபனாகிய என்னை நான் தெரிசிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (3)

1172. பஞ்சப் பொறியைஉயி ரென்னும் அந்தப் பஞ்சமறச்
செஞ்செவே எம்மைத் தரிசிப்ப தெந்நாளோ.

(பொ-ரை) ஐம்பொறிகளையே உயிரென்று சொல்லும் பேதைமை நீங்க நன்றாக எம்மைத் தெரிசிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (4)

1173. அந்தக் கரணமுயி ராமென்ற அந்தரங்க
சிந்தைக்கணத்தில் எம்மைத் தேர்ந்தறிவ தெந்நாளோ.

(பொ-ரை) அந்தக்கரணங்களே உயிரென்று சொல்லும் இரகசியமான சிந்தைக் கூட்டத்திலிருந்து எம்மைத் தெளிவது எந்தக் காலத்திலோ? (எ-று) (5)

1174. முக்குணத்தைச் சீவனென்னும் மூடத்தை விட்டருளால்
அக்கணமே எம்மை அறிந்துகொள்வ தெந்நாளோ.

(பொ-ரை) மூன்று குணங்களையே உயிரென்று சொல்லும் மூடத் தன்மையை விட்டு அந்த க்ஷணமே எம்மை யறிந்து கொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று)

முக்குணம்: ராஜசம், தாமசம், சாத்துவிகம் என்பன (6)

1175. காலைஉயிர் என்னுங் கலாதிகள்சொற் கேளாமல்
சீலமுடன் எம்மைத் தெளித்துகொள்வ தெந்நாளோ.

(பொ-ரை) பிராணவாயுவையே உயிரென்று சொல்லும் கலைகளின் சொற்களைக் கேளாமற் பரிசுத்தமாக எம்மைத் தெரிந்து கொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (7)

1176. வான்கெடுத்துத் தேடும் மதிகேடர் போலஎமை
நான்கெடுத்துத் தேடாமல் நன்கறிவ தெந்நாளோ.

(பொ-ரை) சுத்த ஆகாயத்தைக் கெடுத்துவிட்டுப் பின்னர் அதைத் தேடியழைக்கின்ற புத்தியீனர் போல எம்மை நானே கெடுத்துத் தேடாமல் நன்றாயறிந்து கொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (8)

8. அருளியல்பு

1177. ஈனந் தருநா டிதுநமக்கு வேண்டாவென்
றானந்த நாட்டில் அவதரிப்ப தெந்நாளோ.

(பொ-ரை) இந்த உலகமானது தீமையை விளைப்பதாகும். ஆகையால் இது நமக்கு வேண்டியதில்லை என்று வெறுத்துப் பேரின்ப வீட்டில் அவதாரஞ் செய்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (1)

1178. பொய்க்காட்சி யான புவனத்தை விட்டருளாம்
மெய்க்காட்சி யாம்புவனம் மேவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) பொய்யாகிய இந்த உலகத்தைவிட்டு மெய்யான திரு வருளுலகத்தை அடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) (20)

1179. ஆதியந்தங் காட்டாமல் அம்பரம்போ லேநிறைந்த
தீதில் அருட்கடலைச் சேருநாள் எந்நாளோ.

(பொ-ரை) ஆதியையும் அந்தத்தையும் எனக்கு வெளிப்படுத்தாமல் ஆகாயம் போல் எங்கும் நிறைந்திருக்கின்ற குற்றமற்ற திருவருள் வாரிதியை யடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) (3)

1180. எட்டுத் திசைக்கீழ்மேல் எங்கும் பெருகிவரும்
வெட்டவெளி விண்ணாற்றின் மெய்தோய்வ
தெந்நாளோ.

(பொ-ரை) அட்டதிக்குகளிலும் கீழும் மேலும் பொங்கி ஆர்ப்பரித்து வருகின்ற வெட்டவெளியாகிய ஆகாய கங்கையில் நான் ஸ்நானஞ் செய்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (4)

1181. சூதான மென்று சுருதிஎல்லாம் ஓலமிடும்
மீதான மானவெற்பை மேவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) வேதங்களெல்லாம் சூதானமென்று சொல்லி முறையிடுகின்ற மிக்க உயர்வான மலையை அடைவது எந்தக் காலத்திலோ? (எ-று). (5)

1182. வெந்துவெடிக் கின்றசிந்தை வெப்பகலத்
தண்ணருளாய்
வந்துபொழி கின்ற மழைகாண்ப தெந்நாளோ.

(பொ-ரை) ரொம்பவும் கொதிப்பினைப் பெற்றுள்ள என் மனமானது தனது வெப்பம் நீங்கும்படி தண்ணிய திருவருளைப் பொழிகின்ற அருள் மேகத்தைக் காண்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (6)

1183. சூரியர்கள் சந்திரர்கள் தோன்றச் சுயஞ்சோதிப்
பூரணதே யத்திற் பொருந்துநாள் எந்நாளோ.

(பொ-ரை) சூரிய சந்திரர்கள் எக்காலத்தும் வெளிவராத சுயஞ்சோதி எழுந்தருளியுள்ள பூரண தேசத்திற் போய்ச் சேருவது எந்தக் காலத்திலோ? (எ-று) (7)

1184. கன்றுமன வெப்பக் கலக்கமெலாந் தீரஅருள்
தென்றல்வந்து வீசுவெளி சேருநாள் எந்நாளோ.

(பொ-ரை) கதறுகின்ற கலக்கத்தையடைந்த மனத்தினது வெப்பங் களெல்லாம் அறவே நீங்கும்படி திருவருளாகிய தென்றற் காற்றானது வந்து அடிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (8)

1185. கட்டுநமன் செங்கோல் கடாவடிக்குங் கோலாக
வெட்ட வெளிப்பொருளை மேவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) யாவரையுங் கட்டுகின்ற எமனுடைய செங்கோலானது கடாவை அடிக்கும் கோலாய் விடும்படி வெறு வெளியாகிய பொருளை நான் விரும்புவது எந்தக் காலத்திலோ? (எ-று) (9)

1186. சாலக் கபாடத் தடைதீர எம்பெருமான்
ஓலக்க மண்டபத்துள் ஓடுநாள் எந்நாளோ.

(பொ-ரை) மிகவும் கபாடத்தின் தடையானது தீரும்படி, எம்பெரு மானுடைய திருவோலக்க மண்டபத்தில் நான் ஓடுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (10)

1187. விண்ணவன் தாளென்னும் விரிநிலா மண்டபத்தில்
தண்ணீர் அருந்தித் தளர்வொழிவ தெந்நாளோ.

(பொ-ரை) தெய்வமே, தானாகவிருக்கும் விரிந்த சந்திர மண்டலத்தில் உண்டாகும் சலத்தைப் பானம் பண்ணி என்னு டைய தளர்ச்சி நீங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (11)

1188. வெய்ய புவிபார்த்து விழித்திருந்த அல்லலறத்
துய்ய அருளில் துயிலுநாள் எந்நாளோ.

(பொ-ரை) கொடிய இந்த உலகத்தைப்பார்த்து விழித் திருந்த துன்ப மானது நீங்கும் பரிசுத்தமான திருவருளி னிடத்தில் நான் தூங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (12)

1189. வெய்ய பிறவிவெயில் வெப்பமெல்லாம் விட்டகல
ஐயனடி நீழல் அணையுநாள் எந்நாளோ.

(பொ-ரை) கொடிய ஜென்மமாகிய வெயிலினுடைய வெப்பமெல்லாம் நீங்கும்படி பரிசுத்தமான சிவபெருமானுடைய திருவடி நிழலை யடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) (13)

1190. வாதைப் பிறவி வளைகடலை நீந்தஐயன்
பாதப் புணைஇணையைப் பற்றுநாள் எந்நாளோ.

(பொ-ரை) வாதனை செய்கின்ற ஜென்மமாகிய சமுத்திரத்தைக் கடக்கச் சிவபெருமானுடைய திருவடிகளாகிய புணையைப் பற்றிக் கொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (14)

1191. ஈனமில்லா மெய்ப்பொருளை இம்மையிலே காணவெளி
ஞானமெனும் அஞ்சனத்தை நான்பெறுவ தெந்நாளோ.

(பொ-ரை) குற்றமற்றதான உண்மைப்பொருளை இப்பிறப்பிலேயே காணும்படி மௌனஞான மென்கிற அஞ்சனத்தை நான் பெற்றுக் கொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (15)

1192. எல்லா மிறந்தவிடத் தெந்தைநிறை வாம்வடிவைப்
புல்லாமற் புல்லிப் புணருநாள் எந்நாளோ.

(பொ-ரை) சர்வ கருவிகரணாதிகளும் இறந்துபட்ட மௌனவிடத்தில் எமது தந்தையினுடைய பரிபூரண சொரூபத்தைப் புல்லாமற் புல்லிச் சேருவது எந்தக் காலத்திலோ? (எ-று) (16)

1193. சடத்துளுயிர் போலெமக்குத் தானுயிராய் ஞானம்
நடத்துமுறை கண்டுபணி நாம்விடுவ தெந்நாளோ.

(பொ-ரை) இந்தத் தேகத்திற்குள்ளிருக்கும் உயிரைப்போல எமக்கு உயிராயிருந்து ஞானத்தைச் செலுத்தும் விதத்தைக் கண்டு பணியுந் தொழிலை விட்டு விடுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (17)

1194. எக்கணுமாந் துன்ப இருட்கடலை விட்டருளாம்
மிக்ககரை ஏறி வெளிப்படுவ தெந்நாளோ.

(பொ-ரை) எந்த இடத்திலும் உண்டாயிருக்கும் துன்பமாகிய அஞ்ஞானக் கடலைத்தாண்டித் திருவருளாகிய அந்தக்கரையையடைந்து வெளிப்படுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(18)*

9. பொருளியல்பு

1195. கைவிளக்கின் பின்னேபோய்க் காண்பார்போல்
மெய்ஞ்ஞான
மெய்விளக்கின் பின்னேபோய் மெய்காண்ப
தெந்நாளோ.

(பொ-ரை) யாதாமொரு பொருளைக் கைவிளக்கைக் கொண்டு காண்பவர் போல உண்மை ஞானமாகிய விளக்கைக் கொண்டு உண்மைப் பொருளை உணர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) *(1)*

1196. கேடில்பசு பாசமெல்லாங் கீழ்ப்படவுந் தானேமேல்
ஆடுஞ் சுகப்பொருளுக் கன்புறுவ தெந்நாளோ.

(பொ-ரை) கெடுதலில்லாத பசு, பாசம் ஆகிய இவைகளெல்லாம் கீழ்ப்பட அவைகளுக்கு மேற்பட்டு நடிக்கின்ற பேரின்பப் பொருளினிடத்தில் அன்பைச் செலுத்துவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(2)*

1197. ஆணவத்தை நீக்கி அறிவூடே ஐவகையாக்
காணவத்தைக் கப்பாலைக் காணுநாள் எந்நாளோ.

(பொ-ரை) என்னுடைய அகங்காரத்தை நீக்கி அறிவின்கண் ஐந்து வகையாகிய அவஸ்தைக் கந்தப்புறத்திலிருக்கும் சிவபெருமானைக் காண்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(3)*

1198. நீக்கப் பிரியா நினைக்கமறக் கக்கூடாப்
போக்குவர வற்ற பொருளணைவ தெந்நாளோ.

(பொ-ரை) நீக்கினாற் பிரியாமலும் நினைப்பதற்கும் மறப்பதற்கும் எட்டாமலும் போக்குவரவில்லாமலும் இருக்கின்ற சிவபெருமானை நான் சேர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) *(4)*

1199. அண்டருக்கும் எய்ப்பில்வைப்பாம் ஆரமுதை என்அகத்தில்
கண்டுகொண்டு நின்று களிக்கும்நாள் எந்நாளோ.

(பொ-ரை) தேவர்களுக்கும் ஒரு சேமநிதி போன்ற அரிய அமிர்தத்தை என் மனத்திற் கண்டுகளிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(5)*

1200. காட்டுந் திருவருளே கண்ணாகக் கண்டுபர
வீட்டின்ப மெய்ப்பொருளை மேவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) எனக்கு அறிவுறுத்துகின்ற திருவருளையே கண்ணாகக் கொண்டு கண்டு மேலான மோட்சத்தின் மெய்ப் பொருளை நான் அடைவது எந்தக் காலத்திலோ? (எ-று)(6)

1201. நானான தன்மை நழுவியே எவ்வுயிர்க்குந்
தானான உண்மைதனைச் சாருநாள் எந்நாளோ.

(பொ-ரை) நான் என்னும் அகங்காரத்தை விட்டு எவ்வுயிர்க்கும் அதுவது வாய் நிற்கும் உண்மையைச் சேர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) *(7)*

1202. சிந்தை மறந்து திருவருளாய் நிற்பவர்பால்
வந்தபொருள் எம்மையுந்தான் வாழ்விப்ப தெந்நாளோ.

(பொ-ரை) மனமிறந்து எல்லாந் திருவருளாகவே நிற்பவரிடத்தில் வெளி வந்த பொருளானது எம்மை வாழ்விப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(8)*

1203. எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் வியாபகமாய்
உள்ளஒன்றை உள்ளபடி ஒருநாள் எந்நாளோ.

(பொ-ரை) எள்ளுக்குள் எண்ணெயிருப்பது போல எங்கும் வியாபக மாயிருக்கின்ற ஒரு பொருளை உள்ளபடியே உணர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) *(9)*

1204. அருவுருவம் எல்லாம் அகன்றதுவா யான
பொருளெமக்கு வந்த புலப்படுவ தெந்நாளோ.

(பொ-ரை) அருவம் உருவம் அருவுருவமாகிய யாவும் நீங்கிய அந்தப் பொருளானது எமக்கு வந்து வெளிப்படுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(10)*

1205. ஆரணமுங் காணா அகண்டிதா காரபரி
பூரணம்வந் தெம்மைப் பொருந்துநாள் எந்நாளோ.

(பொ-ரை) வேதங்களாலும் காணப்படாத அகண்டித ரூபமான பரிபூரண வஸ்துவானது வந்து எம்மைச் சேர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (11)

1206. சத்தொடுசித் தாகித் தயங்கிய ஆனந்தபரி
சுத்த அகண்டசிவந் தோன்றுநாள் எந்நாளோ.

(பொ-ரை) சத்துச் சித்தானந்தமாகிய (சச்சிதானந்தப் பொருளாகி) விளங்கின பேரானந்தத்தையுடைய அகண்ட சிவமானது என்னிடத்தில் வெளிவருவது எந்தக் காலத்திலோ? (எ-று) (12)

1207. எங்கெங்கும் பார்த்தாலும் இன்புருவாய் நீக்கமின்றித்
தங்குந் தனிப்பொருளைச் சாருநாள் எந்நாளோ.

(பொ-ரை) எந்தவிடத்திற் பார்த்த போதைக்கும் சுக ரூபமாய் எங்கும் பிரிதலில்லாமலிருக்கின்ற ஒப்பற்ற வஸ்துவை நான் அடையப் பெறுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (13)

1208. அடிமுடிகாட் டாதசுத்த அம்பரமாஞ் சோதிக்
கடுவெளிவந் தென்னைக் கலக்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) ஆதியையும் அந்தத்தையும் வெளிப்படுத்தாத சுத்த ஆகாயமாகிய தேஜோமயமானது வெளிவந்து என்னைக் கலப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (14)

1209. ஒன்றனையுங் காட்டா உளத்திருளைச் சூறையிட்டு
நின்றபரஞ் சோதியுடன் நிற்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) யாதாமொரு பொருளையும் உண்மையாகக் காட்டப்படாத அஞ்ஞானமாகிய இருட்டைக் கொள்ளையிட்டு நின்ற பரஞ்சோதியுடன் நானும் கூடியிருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (15)

1210. எந்தச் சமயம் இசைந்தும்அறி வூடறிவாய்
வந்தபொரு ளேபொருளா வாஞ்சிப்ப தெந்நாளோ.

(பொ-ரை) எந்தச் சமயத்திலும் என்னறிவிற் கலந்து அறிவுக்கறிவாய் வந்த பொருளையே உண்மைப் பொருளாகக் கொண்டு அந்தப் பொருளை நாடிநிற்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (16)

1211. எவ்வாறிங் குற்றுணர்ந்தார் யாவர் அவர்தமக்கே
அவ்வாறாய் நின்றபொருட் கன்புவைப்ப தெந்நாளோ.

(பொ-ரை) இவ்விடத்தினின்றும் எவ்வெவர்கள் எப்படி யெப்படி அறிந்தார்களோ அவ்வவ்விதமாகவே நின்ற பொருளினிடத்தில் நான் பிரியம் வைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (17)

1212. பெண்ணாண் அலியெனவும் பேசாமல் என்அறிவின்
கண்ணூடே நின்றஒன்றைக் காணுநாள் எந்நாளோ.

(பொ-ரை) பெண், ஆண், அலியென்று சொல்லப்படாமல் என்னறி வினிடத்தில் நின்ற ஒப்பற்ற பொருளைத் தரிசிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (18)

1213. நினைப்பும் மறப்பும் அற நின்ற பரஞ்சோதி
தனைப்புலமா என்னறிவிற் சந்திப்ப தெந்நாளோ.

(பொ-ரை) நினைப்பும், மறப்பும் இல்லாமல் என்றும் ஒரே தன்மையா யிருக்கின்ற உயர்ந்த தேஜோமயத்தையே என்னுடைய அறிவிற் சந்திக்கப் பெற்றுத் தரிசிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (19)

10. ஆனந்தவியல்பு

1214. பேச்சுமூச் சில்லாத பேரின்ப வெள்ளமுற்று
நீச்சுநிலை காணாமல் நிற்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) பேச்சென்பதும், மூச்சென்பதுமில்லாமல் அறவே யொழிந்த பேரின்ப வெள்ளத்திலிருந்து நீச்சுநிலை காணாமல் நிற்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (1)

1215. சித்தந் தெளிந்தோர் தெளிவில் தெளிவான
சுத்த சுகக்கடலுள் தோயுநாள் எந்நாளோ.

(பொ-ரை) மனந் தெளிந்தவர்களுடைய தெளிவில் தெளிவாயிருக்கும் பரிசுத்தமான சமுத்திரத்தில் ஸ்நானஞ் செய்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (2)

1216. சிற்றின்ப முண்டூழ் சிதைய அனந்தங்கடல்போல்
முற்றின்ப வெள்ளம்எமை மூடுநாள் எந்நாளோ.

(பொ-ரை) சிற்றின்பமானது மேலிட்டு வந்த பூர்வவினையானது கெட அநேக சமுத்திரம்போல்

முற்றுகின்ற பேரின்ப வெள்ளமானது வந்து எம்மை மூடிக் கொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (3)

**1217. எல்லையில்பே ரின்பமயம் எப்படிஎன் றோர்தமக்குச்
சொல்லறியா ஊமர்கள்போற் சொல்லுநாள் எந்நாளோ.**

(பொ-ரை) அளவு சொல்லப்படாத பேரின்பமானது எப்படியென்று கேட்பவர்களுக்குச் சொல்லுதற்கு வகைதெரியாத ஊமைகள் போற் சொல்லுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (4)

**1218. அண்டரண்ட கோடி அனைத்தும் உகாந்தவெள்ளங்
கொண்டதெனப் பேரின்பங் கூடுநாள் எந்நாளோ.**

(பொ-ரை) அண்டரண்டங்களெல்லாம் யுக முடிவிலுண்டாகும் சலப்பிரளயத்தைக் கொண்டது போல் இன்ப வெள்ளமானது வந்து கூடுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (5)

**1219. ஆதியந்த மில்லாத ஆதிஅ நாதிஎனுஞ்
சோதிஇன்பத் தூடே துளையுநாள் எந்நாளோ**

(பொ-ரை) முதல், ஈறு என்பவை இல்லாத முதற்பெருளும் அப் பொருளுக்கு முற்பட்ட அநாதிப் பொருளென்று யாவராலும் சொல்லப்பட்டு வாராநின்ற தேஜோமயமான பேரின்பத்திற் சேர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (6)

**1220. சாலோக மாதி சவுக்கியமும் விட்டநம்பால்
மேலான ஞான இன்பம் மேவுநாள் எந்நாளோ.**

(பொ-ரை) சாலோகம், சாமீபம், சாரூப்பியம், சாயுச்சியம், என்பவை களை விட்டு விட்ட நம்மிடத்தில் உயர்ந்த ஞானானந்தமானது வந்து சேர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (7)

**1221. தற்பரத்தி னுள்ளேயுஞ் சாலோக மாதியெனும்
பொற்பறிந்தா னந்தம் பொருந்துநாள் எந்நாளோ.**

(பொ-ரை) தற்பரத்தினுள்ளேயும் சாலோக முதலிய பதவிகளின் தன்மையை உணர்ந்து திருவருள் ஆனந்தத்தை அடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) (8)

**1222. உள்ளத்தி னுள்ளேதான் ஊறுஞ் சிவானந்த
வெள்ளத் திளைந்து விடாய்தீர்வ தெந்நாளோ.**

(பொ-ரை) என் மனத்தின் கண்ணே சுரந்து கொண்டே இருக்கின்ற சிவானந்த வெள்ளத்தில் படிந்து என்னுடைய ஜென்மவிடாய் தீர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) *(9)*

1223. கன்னலுடன் முக்கனியுங் கற்கண்டுஞ் சீனியுமாய்
மன்னும்இன்ப ஆரமுதை வாய்மடுப்ப தெந்நாளோ.

(பொ-ரை) கரும்பு, முப்பழம், கற்கண்டு, சீனாசர்க்கரை இவைகள் போல் இன்பங் கொடுக்கின்ற அரிய அமிர்தத்தைப் பருகுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(10)*

1224. மண்ணூ டுழன்ற மயக்கமெல்லாந் தீர்ந்திடவும்
விண்ணூ டெழுந்தசுகம் மேவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) பூமியில் இதுகாறும் அனுபவித்த துன்பங்களெல்லாம் நீங்கும்படி ஆகாயத்தினிடமாக உண்டான பேரின்ப சுகத்தை அடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(11)*

1225. கானற் சலம்போன்ற கட்டுழலைப் பொய்தீர
வானமுத வாவி மருவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) கானல் நீர்போற் பொய்யாகின்ற பந்தத்துன்பங்களெல்லாம் நீங்கும்படி திருவருளாகாய குளத்திற் சேர்வது எந்தக் காலத்திலோ? *(12)*

1226. தீங்கரும்பென் றால்இனியா தின்றால் இனிப்பனபோல்
பாங்குறும்பே ரின்பம் படைக்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) மதுரமிக்க கரும்பைத் தின்றால் எப்படி ருசிக்குமோ அதுபோலச் சமீபத்திலிருக்கும் பேரின்பத்தைப் பெற்றுக் கொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று) *(13)*

1227. புண்ணிய பாவங்கள் பொருந்தாமெய் யன்பரெல்லாம்
நண்ணியபே ரின்பசுகம் நாமணைவ தெந்நாளோ.

(பொ-ரை) புண்ணிய பாவங்களாகிய இரண்டினிடத்தும் சேராத உண்மையடியார்கள் சேர்ந்திருக்கின்ற பேரின்பசுகத்தை நாம் சேரப்பெறுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(14)*

11. அன்பு நிலைமை

**1228. தக்கரவி கண்ட சரோருகம்போல் என்னிதயம்
மிக்கஅருள் கண்டு விகசிப்ப தெந்நாளோ.**

(பொ-ரை) தகுந்த சூரியனைக் கண்ட தாமரையானது மலர்வதைப் போல என்னுடைய மனமானது திருவருளைக் கண்டு மலர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (1)

**1229. வானமுகில் கண்ட மயூரபட்சி போலஐயன்
ஞானநடங் கண்டு நடிக்குநாள் எந்நாளோ.**

(பொ-ரை) ஆகாயத்திற் செல்லுகின்ற மேகத்தைக் கண்டு மயில் பட்சியானது நடிப்பதுபோல எம்பெருமானுடைய ஞான நடனத்தைக் கண்டு நான் ஆனந்தத்தால் நடிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (2)

**1230. சந்திரனை நாடுஞ் சகோரபட்சி போல் அறிவில்
வந்தபரஞ் சோதியையான் வாஞ்சிப்ப தெந்நாளோ.**

(பொ-ரை) சந்திரனை நாடிப் போகின்ற சகோர பட்சியைப் போல என்னுடைய அறிவினிடத்தில் வந்த பரஞ் சோதியை யாம் விரும்புவது எந்தக் காலத்திலோ? (எ-று) (3)

**1231. குத்திரமெய்ப் புற்றகத்துக் குண்டலிப்பாம்
பொன்றாட்டுஞ்
சித்தனைஎன் கண்ணால் தரிசிப்ப தெந்நாளோ.**

(பொ-ரை) இந்தத் தேகத்தின் கண்ணிருந்து குண்டலியாகிய பாம்பை ஆட்டுகின்ற சித்தனை என்னுடைய கண்ணால் தெரிசிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (4)

**1232. அந்தரத்தே நின்றாடும் ஆனந்தக் கூத்தனுக்கென்
சிந்தை திறைகொடுத்துச் சேவிப்ப தெந்நாளோ.**

(பொ-ரை) சிதாகாயத்திலிருந்து நடிக்கின்ற ஆனந்தக் கூத்தன் பொருட்டு என்னுடைய மனத்தைப் கப்பங் கொடுத்துச் சேவிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (5)

**1233. கள்ளனிவன் என்றுமெள்ளக் கைவிடுதல் காரியமோ
வள்ளலே என்று வருந்துநாள் எந்நாளோ.**

(பொ-ரை) வள்ளலே இவன் திருடனென்று என்னைக் கைவிடுதல் நல்ல காரியமன்றென்று சொல்லி வருத்தப்படுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (6)

**1234. விண்ணாடர் காணா விமலா பரஞ்சோதி
அண்ணாவா வாவென் றரற்றுநாள் எந்நாளோ.**

(பொ-ரை) தேவர்களாற் காணப்படாத விமலனே! அண்ணா! நீர் என்னிடத்தில் வெளிப்பட்டுக் காட்சித் தருளல் வேண்டும் என்று கூவியழைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று)

தேவர்கள் இன்னும் உயர்ந்த பதவியை வேண்டிப் பணிகின்றவர் களாகையால் இறைவன் அவர்களால் அறியப்படான் என்பார் இங்ஙனம் கூறினார்.

இதனை,

**"வாழ்த்துவதும் வானவர்கடாம் வாழ்வான் மனநிற்பாற்
றாழ்த்துவதுந்
தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந்
தாரோயை நாயடியேன், பாழ்த்தபிறப்பறுத் திடுவான்
யானுமுன்னைப் பரவுவனே"**

என்னும் ஸ்ரீமன் மாணிக்கவாசக சுவாமிகள் திருவாக்கினாலறிக. (7)

**1235. ஏதேது செய்தாலும் என்பணிபோய் நின்பணியாம்
மாதேவா என்று வருந்துநாள் எந்நாளோ.**

(பொ-ரை) தெய்வமே! நான் ஏதேது செய்தாலும் என்னுடைய செய்கைகளற்று எல்லாம் நின்னுடைய செய்கைகளாம் என்று சொல்லி நான் வருந்துவது எந்தக் காலத்திலோ? (எ-று) (8)

**1236. பண்டுங்கா ணேன்நான் பழம்பொருளே
இன்றும்உனைக்
கண்டுங்கா ணேன்எனவுங் கைகுவிப்ப தெந்நாளோ.**

(பொ-ரை) தொன்று தொட்டுள்ள வஸ்துவே! நான் உன்னை பூர்வத்திற் கண்டேனில்லை; அதுபோக, இன்னும் கண்டுங் காணாதவனாயினேன் எனக் கைகூப்பி நமஸ்காரஞ் செய்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (9)

**1237. பொங்கேத மான புழுக்கமெலாந் தீரஇன்பம்
எங்கேஎங் கேஎன் றிரங்குநாள் எந்நாளோ.**

(பொ-ரை) நான் பூர்வத்திற் செய்த குற்றங்களால் விளைந்த துன்பங் களெல்லாம் நீங்கும் பொருட்டுப் பேரின்பமானது எங்கே இருக்கின்றதென்று வருந்துவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(10)*

1238. கடலின்மடை கண்டதுபோற் கண்ணீ ராறாக
உடல்வெதும்பி மூர்ச்சித் துருகுநாள் எந்நாளோ.

(பொ-ரை) சமுத்திரத்தினிடத்தில் கட்டிய மடையானது நில்லாமல் உடைவது போலக் கண்களினின்றும் சலமானது ஆற்றைப் போற் பெருகத் தேகம் வெதும்பி மூர்ச்சித்து மனமிளகுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(11)*

1239. புலர்ந்தேன் முகஞ்சருகாய்ப் போனேன் நிற்காண
அலந்தேன்என் றேங்கி அழுங்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) சுவாமி! நான் உன்னைக் காணு நிமித்தம் முகமானது உலர்ந்த சருகைப்போ லுலர்ந்தேன். அன்றி மிகவும் வருந்தினேனென்று சொல்லி வருந்துவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(12)*

1240. புண்ணீர்மை யாளர் புலம்புமா போற்புலம்பிக்
கண்ணீருங் கம்பலையுங் காட்டுநாள் எந்நாளோ.

(பொ-ரை) யாதாமொரு நோய்க் கோட்பட்டார் துக்கப்பட்டு வருந்துவது போல வருந்திக் கண்ணீரும் கம்பலையும் காட்டுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(13)*

1241. போற்றேனென் றாலும்என்னைப் புந்திசெயும் வேதனைக்கிங்
காற்றேன் ஆற்றேனென் றரற்றுநாள் எந்நாளோ.

(பொ-ரை) நான் உன்னைத் துதி செய்யே னென்றிருந் தாலும் என்னுடைய அறிவானது என்னை அடிக்கடி வருத்தப்படுத்துகின்றதின் பொருட்டு நான் சகிக்கமாட் டேனென்று அழுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(14)*

1242. பொய்ம்முடங்கும் பூமிசில போட்டலறப் பூங்கமலன்
கைம்முடங்க நான்சனனக் கட்டறுவ தெந்நாளோ.

(பொ-ரை) பொய்யாகிய பூமிகள் சிலவற்றை நீங்கியல றும்படி பிரம தேவனாற் சிருட்டிக்கப்பட்டு வருகின்ற சென்மத்தின் கட்டறுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(15)*

1243. கற்குணத்தைப் போன்றவஞ்சக் காரர்கள்கை கோவாமல்
நற்குணத்தார் கைகோத்து நான்திரிவ தெந்நாளோ.

(பொ-ரை) கல்லைப் போன்ற வஞ்சக மனத்தை யுடையவர் களது கையைக் கோவாமல் நல்ல மனத்தையுடையவர்களது கையைக் கோத்து நான் திரிவது எந்தக் காலத்திலோ? (எ-று) (16)

1244. துட்டனைமா மாயைச் சுழல்நீக்கி அந்தரமே
விட்டனையோ என்று வியக்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) துட்டனாகிய என்னை எனக்கிருந்த மாமாயைச் சுழலை நீக்கி யந்தர் மார்க்கத்தில் விட்டாயோவென்று சந்தோஷிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (17)

12. அன்பர் நெறி

1245. அத்துவா எல்லாம் அடங்கச்சோ தித்தபடிச்
சித்துவருவாய் நின்றார் தெளிவறிவ தெந்நாளோ.

(பொ-ரை) அத்துவா (மார்க்கங்களெல்லாம்) அடங்கிப் பின் சோதித்த வண்ணமே சித்துருவாய் எழுந்தருளியிருந்த சிவபெருமானுடைய தோற்றத்தை அறிந்து கொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (1)

1246. மூச்சற்றுச் சிந்தை முயற்சியற்று மூதறிவாய்ப்
பேச்சற்றோர் பெற்ற ஒன்றைப் பெற்றிடுநாள் எந்நாளோ.

(பொ-ரை) மூச்சடங்கியும், மனத்தில் யாதொரு சிந்தனையும் இல்லாமலும் மிக்க அறிவாய்ப் பேச்சையுமிழந்த ஞானிகளாற் பெறப்பட்ட ஒப்பற்ற பொருளைப் பெற்றுக் கொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (2)

1247. கோட்டாலை யான குணமிறந்த நிர்க்குணத்தோர்
தேட்டாலே தேடுபொருள் சேருநாள் எந்நாளோ.

(பொ-ரை) மனமிறக்கப் பெற்ற நிர்க்குணத்தையுடைய பெரியோர்கள் தம்முடைய தெளிவால் தேடப்படும் பொருளைச் சேர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (3)

கோட்டாலை=துன்பம்

**1248. கெடுத்தே பசுத்துவத்தைக் கேடிலா ஆனந்தம்
அடுத்தோ ரடுத்தபொருட் கார்வம்வைப்பதெந்நாளோ.**

(பொ-ரை) பசுஞானத்தைக் கெடுத்து சிவஞானம் பெற்று எக்காலத்தும் அழிவில்லாத பேரின்பத்தை விரும்பின வர்களுக்குச் சமீபமாயிருக்கின்ற பொருளினிடத்தில் நான் ஆசைவைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (4)

**1249. கற்கண்டால் ஓடுகின்ற காக்கைபோல் பொய்ம்மாயச்
சொற்கண்டால் ஓடும் அன்பர் தோய்வறிவ தெந்நாளோ.**

(பொ-ரை) கல்லை எறியக்கண்டால் ஓடிப் போய்விடும் காக்கையைப் போலப் பொய்யாகிய உலகமாயை பற்றிய சொல்லைக் கண்டால் நெடுந்தூரம் ஓடிப்போய் விடுகின்ற அடியார்களது பெருமையை அறிந்துகொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (5)

**1250. மெய்த்தகுலங் கல்விபுனை வேடமெலாம் ஓடவிட்ட
சித்தரொன்றுஞ் சேராச் செயலறிவ தெந்நாளோ.**

(பொ-ரை) நல்ல, குலம், கல்வி, வேஷம் ஆகிய எல்லாம் ஒழியவிட்ட சித்தர்கள் யாதொன்றிலும் பற்று வையாத செய்கையை அறிவது எந்தக் காலத்திலோ? (எ-று) (6)

**1251. குற்றச் சமயக் குறும்படர்ந்து தற்போதம்
அற்றவர்கட் கற்றபொருட் கன்புவைப்ப தெந்நாளோ.**

(பொ-ரை) குற்றம் பொருந்திய சமயக் குறும்புக ளடரப் பெற்ற அகங்காரத்தினின்றும் நீங்கினவர்களுக்குரிய பொருளின் மேல் ஆசை வைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (7)

**1252. தர்க்கமிட்டுப் பாழாஞ் சமயக் குதர்க்கம்விட்டு
நிற்குமவர் கண்டவழி நேர்பெறுவ தெந்நாளோ.**

(பொ-ரை) தர்க்கம் செய்து அதனாற் கெட்ட சமயவாதங்களை விட்டு நிற்கின்றவர்கள் கண்டமார்க்கத்திற் சேர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (8)

**1253. வீறியவே தாந்தமுதல் மிக்க கலாந்தம்வரை
ஆறுமுணர்ந் தோருணர்வுக் கன்புவைப்ப தெந்நாளோ.**

(பொ-ரை) மிக்க வேதாந்த முதலிய நூல்களைக் கண்டறிந்த பெரியோர்களுடைய உணர்ச்சிக்கு அன்பு வைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (9)

1254. கண்டஇட மெல்லாங் கடவுள்மயம் என்றறிந்து
கொண்டநெஞ்சர் நேயநெஞ்சிற் கொண்டிருப்ப
தெந்நாளோ.

(பொ-ரை) பர்த்தவிடமெல்லாம் பரம வெளியே யாமென்று உணர்ந்து கொண்ட மனமுடையவர்களுடைய எண்ணத்தை என்மனத்திற் கொண்டிருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (10)

1255. பாக்கியங்க ளெல்லாம் பழுத்து மனம்பழுத்தோர்
நோக்குந் திருக்கூத்தை நோக்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) தமக்கிருந்த சொத்துக்களை யெல்லா மிழந்து மனமொடுங்கப் பெற்றவர்கள் காணும் திருக்கூத்தை நானும் தரிசிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (11)

1256. எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ.

(பொ-ரை) எந்தப் பிராணிகளையும் தங்கள் உயிரைப் போல் எண்ணு கின்ற தபமகிமையுடையவர்களுடைய நல்ல அறிவை விரும்பி அதன்மேல் மனஞ் செலுத்துவது எந்தக் காலத்திலோ? (எ-று) (12)

13. அறிஞருரை

1257. இருநிலனாய்த் தீயாகி என்ற திருப்பாட்டின்
பெருநிலையைக் கண்டணைந்து பேச்சறுவ
தெந்நாளோ.

(பொ-ரை) இருநிலனாய்த் தீயாகி யென்று பாடிய திருப்பாட்டினுடைய பெரிய நிலையைக் கண்டறிந்து அதனிடத்திற் சேர்ந்து மௌனமடைந்திருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (1)

1258. அற்றவர்கட் கற்றசிவன் ஆமென்ற அத்துவித
முற்றுமொழி கண்டருளில் மூழ்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) 'அற்றவர்கட்கற்ற சிவனாம்' என்று பாடிய அத்து விதமான முழுச்சொல்லைக் கண்டு திருவருட்கடலில் மூழ்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (2)

'அற்றவர்க்கற்ற சிவனுறைகின்ற ஆலவாயாவது மிதுவே' -திருஞான. அற்றவர் கற்ற சிவன், சேரமான் பெருமானாயனார் போன் வண்ணத்தந்தாதி -74

1259. **தானென்னை முன்படைத்தாள் என்ற தகவுரையை**
நானென்னா உண்மைபெற்று நாமுணர்வ தெந்நாளோ.

(பொ-ரை) தானென்னை முன்படைத்தான், என்று பாடிய தகுதியான பொருளை அகங்காரத்தை நீங்கப் பெற்று நாமறிவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(3)*

'திருநொடித் தான்மலை = சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1260. **என்னுடைய தோழனுமாய் என்ற திருப்பாட்டின்**
நன்னெறியைக் கண்டுரிமை நாஞ்செய்வ தெந்நாளோ.

(பொ-ரை) என்னுடைய தோழனுமாய்; என்று பாடிய திருப்பாட்டின் நன் மார்க்கத்தைக் கண்டு நாம் உரிமைப்படுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(4)*

1261. **ஆருடனே சேரும் அறிவென்ற அவ்வுரையைத்**
தேரும் படிக்கருள் தான் சேருநாள் எந்நாளோ.

(பொ-ரை) ஆருடனே சேருமறிவுக்கு என்று பாடிய அந்தப் பொருளைத் தெளிந்து அறியும் பொருட்டுத் திருவருளானது சேர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) *(5)*

1262. **உன்னில்உன்னும் என்ற உறுமொழியால் என்னிதயந்**
தன்னில்உன்னி நன்னெறியைச் சாருநாள் எந்நாளோ.

(பொ-ரை) உன்னிலுன்னும் என்று பாடிய மேலாகிய வாக்கியத்தால் என் மனத்தில் நினைந்து நன்மார்க்கத்தைச் சேர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) *(6)*

1263. **நினைப்பறவே தான் நினைந்தேன் என்ற நிலைநாடி**
அனைத்துமாம் அப்பொருளில் ஆழுநாள் எந்நாளோ.

(பொ-ரை) 'நினைப்பறவே தானினைந்தேன்' என்று பாடிய உண்மை நிலையை விரும்பி எல்லாந் தானே யாயிருக்கும் அந்தப் பொருளினிடத்தில் அமர்ந்திருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(7)*

1264. **சென்றுசென் றேயணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாகி**
நின்றுவிடும் என்றநெறி நிற்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) 'சென்று சென்றே யணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாகி நின்றுவிடும்' என்று பாடிய உண்மை மார்க்கத்தில் நான் நிற்பது எந்தக் காலத்திலோ? (எ-று)

திருவாசகம்= கோயிற்றிருப்பதிகம் *(8)*

1265. ஆதியந்த மில்லா அரியபரஞ் சோதிஎன்ற
நீதிமொழி கண்டதுவாய் நிற்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) 'ஆதியந்தமில்லா அரியபரஞ்சோதி' என்று பாடிய நீதி வசனத்தை யுணர்ந்து அதுவாய் நிற்பது எந்தக் காலத்திலோ? (எ-று)

திருவாசகம்= திருவெம்பாவை *(9)*

1266. பிறிதொன்றி லாசையின்றிப் பெற்றிருந்தேன் என்ற
நெறியுடையான் சொல்லில்நிலை நிற்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) 'பிறிதொன்றி லாசையின்றிப் பெற்றிருந்தேன்' என்று பாடிய நெறியையுடையவனது வசனநிலையில் நிற்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (10)

1267. திரையற்ற நீர்போல் தெளிய எனத்தேர்ந்த
உரைபற்றி உற்றங் கொடுங்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) 'திரையற்றநீர் போற்றெளிய' என்று பாடிய தேர்ந்த வசனத்தை உறுதியாகப் பிடித்து அந்த விடத்திலிருந்து ஒடுங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று)

"உரையற்ற... திரையற்ற நீர்போற் சிந்தை தெளிவார்க்கு புரை யற்றிருந்தான் புரிசடையோனே." *(11)*

1268. அறியா அறிவில் அவிழ்ந்தேற என்ற
நெறியாம் உரையுணர்ந்து நிற்கும்நாள் எந்நாளோ.

(பொ-ரை) 'அறியா வறிவி லவிழ்ந்தேற' என்று பாடியே உண்மை நெறியாகிய வசனத்தையுணர்ந்து அதன் பிரகாரமே நிற்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(12)*

1269. எனக்குள் நீஎன்றும் இயற்கையாய்ப் பின்னும்
உனக்குள் நான்என்ற உறுதிகொள்வ தெந்நாளோ.

(பொ-ரை) 'எனக்குள் நீயென்று மியற்கையாய் பின்னுமுனக்குணான்' என்றுபாடிய உண்மை வசனத்தை நான் மனத்திற் கொள்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (13)

1270. அறிவை அறிவதுவே யாகும் பொருளேன்
றுறுதிசொன்ன உண்மையினை ஒருநாள் எந்நாளோ.

(பொ-ரை) 'அறிவை யறிவதுவே யாகும் பொருள்' என்று பாடிய உறுதி வசனத்தை நான் உண்மையாக அறிந்திருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று)

திருப்புகழ்-463 ஆம் பாடல் திருவருணை 'குமரகுருபர'

(14)

14. நிற்குறிலை

1271. பண்ணின் இசைபோலப் பரமன்பால் நின்றதிறன்
எண்ணி அருளாகி இருக்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) பண்ணினிடத்தில் ராகமானது பொருந்தி இருப்பது போலச் சிவபெருமானிடத்தில் அடியார்கள் நின்றிருக்கின்ற திறமையை நினைந்து திருவருளுருவாகி நிற்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (1)

1272. அறிவோ டறியாமை அற்றறிவி னூடே
குறியி லறிவுவந்து கூடுநாள் எந்நாளோ.

(பொ-ரை) ஞானாஞ் ஞானங்க ளற்று என்னுடைய அறிவினிடத்தில் நீ குறியற்று வந்து கூடுவது எந்தக் காலத்திலோ? (2)

1273. சொல்லான் மனத்தால் தொடராச்சம் பூரணத்தில்
நில்லா நிலையாய் நிலைநிற்ப தெந்நாளோ.

(பொ-ரை) சொல்லாலும் மனத்தாலும் தொடர்வதற்குக் கூடாத பரிபூரண வஸ்துவில் நில்லாதபடி நிலைபெற்றிருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (3)

1274. செங்கதிரின் முன்மதியந் தேசடங்கி நின்றிடல்போல்
அங்கணனார் தாளில் அடங்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) செவந்த சூரியனுக்கு முன்னே சந்திரனானவன் தன்னுடைய ஒளி மழுங்கி நிற்பது போல நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானுடைய திருவடி களில் அடங்கி நிற்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (4)

1275.வானூ டடங்கும் வளிபோல இன்புருவாங்
கோனூ டடங்குங் குறிப்பறிவ தெந்நாளோ.

(பொ-ரை) ஆகாயத்தில் அடங்கிவிடும் காற்றைப் போற் சிவபெரு மானுடைய திருவடிகளில் அடங்கியிருக்கும் குறிப்பை அறிவது எந்தக் காலத்திலோ? (எ-று) (5)

1276.செப்பரிய தண்கருணைச் சிற்சுகனார் பூரணத்தில்
அப்பினிடை உப்பாய் அணையுநாள் எந்நாளோ.

(பொ-ரை) சொல்லுதற்கருமையான திருக்கருணையை யுடைய ஞானசொரூபரது பூரணத்திற் சலத்தில் உப்பைப்போல் ஒடுங்கியிருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (6)

1277. தூய அறிவான சுகரூப சோதிதன்பால்
தீயில் இரும்பென்னத் திகழுநாள் எந்நாளோ.

(பொ-ரை) நிர்மல ஞானமான தேஜோமய சிவனிடத்தில் தீயினிரும்பைப் போல் விளங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(7)*

1278. தீ தணையாக் கர்ப்பூர தீபமென நான்கண்ட
சோதியுட னொன்றித் துரிசறுவ தெந்நாளோ.

(பொ-ரை) குற்றமென்பது சேராத கர்ப்பூர தீபத்தைப் போல் என்னாற் காணப்பட்ட சோதியுடன் சேர்ந்து குற்றம் நீங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(8)*

1279. ஆராருங் காணாத அற்புதனார் பொற்படிக்கீழ்
நீரார் நிழல்போல் நிலாவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) எவராலும் காணப்படாத ஆச்சரியத்தை யுடைய வரான சிவபெருமானது அழகிய திருவடிகளின் கீழ் சலத்தில் தோன்றும் நிழலைப் போலிருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(9)*

1280. எட்டத் தொலையாத எந்தைபிரான் சந்நிதியில்
பட்டப் பகல்விளக்காய்ப் பண்புறுவ தெந்நாளோ.

(பொ-ரை) எட்டிப் பிடிக்க முடியாத என் தந்தையாகிய சிவபெருமானுடைய சந்நிதியிற் பகலிலிட்ட விளக்கு ஒளி மழுங்கியிருப்பது போல் நான் அடங்கி யிருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(10)*

1281. கருப்புவட்டை வாய்மடுத்துக் கண்டார்நாப் போல
விருப்புவட்டா இன்புருவை மேவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) கரும்பு வெல்லத்தைத் தின்று இனித்தா ருடைய நாக்கைப் போல விருப்பத்தால் தெவிட்டி மேலான சுகரூபத்தை அடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(11)*

1282.துச்சப் புலனாற் சுழலாமல் தண்ணருளால்
உச்சிக் கதிர்ப்படிகம் ஒவ்வுநாள் எந்நாளோ.

(பொ-ரை) கெடுதியையுடைய ஐம்புலன்களாற் சுழலாமல் தண்ணிய திருவருளைப் பெற்றுப் படிகமணி போலமர்ந்திருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(12)*

1283.இம்மா நிலத்தி லிருந்தபடி யேயிருந்து
சும்மா அருளைத் தொடருநாள் எந்நாளோ.

(பொ-ரை) இந்த உலகத்தின் கண் இருந்தபடியேயிருந்து திருவருளைத் தொடர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (13)

**1284. தானவனாந் தன்மையெய்தித் தண்டமென அண்டமெங்கும்
ஞான மதயானை நடத்துநாள் எந்நாளோ.**

(பொ-ரை) நான் அவனாகுந் தன்மையை யடைந்து தண்டம் போல் இந்த அண்டங்களெல்லாவற்றுள்ளும் ஞானமதங் கொண்ட யானையை நடத்துவது எந்தக் காலத்திலோ? (எ-று) (14)

**1285. ஒன்றிரண்டு மில்லதுவாய் ஒன்றிரண்டு முள்ளதுவாய்
நின்ற சமத்துநிலை நேர்பெறுவ தெந்நாளோ.**

(பொ-ரை) ஒன்றென்பதும், இரண்டென்பதும், இல்லாததாகியும் இருப்பதாகியும் நின்ற சமரச நிலையானது எனக்கு உண்டாவது எந்தக் காலத்திலோ? (எ-று) (15)

**1286. பாசம் அகலாமல் பதியில் கலவாமல்
மாசில் சமத்துமுத்தி வாய்க்குநாள் எந்நாளோ.**

(பொ-ரை) பாசமானது நீங்காமலும், தலைவனிடத்திற் சேராமலு மிருக்கின்ற குற்றமற்ற சமரச முத்தியானது எனக்குக் கிடைப்பது எந்தக் காலத்திலோ (எ-று) (16)

**1287. சிற்றறிவு மெள்ளச் சிதைந்தெம்மான் பேரறிவை
உற்றறியா வண்ணமறிந் தோங்குநாள் எந்நாளோ.**

(பொ-ரை) எனக்குள்ள சிற்றறிவானது மெள்ள மெள்ள நீங்கி எம் பெருமானுடைய பேரறிவைப் பொருந்தி அவனுடைய திருவடியை அறியாம லறிந்துயர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (17)

**1288. தந்திரத்தை மந்திரத்தைச் சாரின்நவை யாம் அறிவென்
றெந்தையுணர் வேவடிவாய் எய்துநாள் எந்நாளோ.**

(பொ-ரை) தந்திரமந்திரங்களைச் சேர்ந்தால் அவையே அறிவாகு மென்று என் தந்தையினுடைய உணர்ச்சியே சொரூபமாகக் கொண்டு அதையடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) (18)

**1289.போக்குவர வற்றவெளி போல்நிறைந்த போதநிலை
நீக்கமறக் கூடி நினைப்பறுவ தெந்நாளோ.**

(பொ-ரை) இறப்புப் பிறப்புக்களில்லாத வெளிபோல் எங்கும் நிறைந் திருக்கின்ற ஞானநிலையை நீக்கமில்லாமற் கூடி நினைந்திருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (19)

1290. காண்பானுங் காட்டுவதுங் காட்சியுமாய் நின்ற அந்த
வீண்பாவம் போய் அதுவாய் மேவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) காண்பவனும், காட்டுவதும், காட்சியும் ஆகநின்ற அந்தக்கொடிய பாவமானது என்னை விட்டு நீங்கி நான் அதுவாய் நிற்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (20)

1291. வாடாதே நானாவாய் மாயாதே எங்கோவை
நாடாதே நாடி நலம்பெறுவ தெந்நாளோ.

(பொ-ரை) வாடாமலும், பலபலவாக மயங்காமலும், எம்முடைய தலைவனை நாடாமலே நாடி நான் நன்மையை அடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) (21)

1292. ஆடலையே காட்டிஎன தாடலொழித் தாண்டான்பொற்
றாள் தலைமேல் சூடித் தழைக்கு நாள் எந்நாளோ.

(பொ-ரை) எனக்குத் தன்னுடைய திருக்கூத்தைப் பல முறையுங் காட்டி என்னுடைய வீணாட்டங்களை யெல்லாம் நீக்கின பெருமானுடைய அழகிய திருவடிகளை என்னுடைய தலைக்குச் சூடிக்கொண்டு அதனால் நான் செழிப்படைவது எந்தக் காலத்திலோ? (எ-று) (22)

1293. மேலொடுகீ ழில்லாத வித்தகனார் தம்முடனே
பாலொடு நீர் போற்கலந்து பண்புறுவ தெந்நாளோ.

(பொ-ரை) மேல், கீழ் இல்லாத நிர்மலனாராகிய சிவபெருமானோடு பாலொடுசலம் போற் கலந்திருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (23)

1294. அறியா தறிந்தெமையாள் அண்ணலை நாமாகக்
குறியாத வண்ணங் குறிக்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) எம்மை அடிமை கொண்டாள விருக்கும் தலைவனை உணராமலுணர்ந்து நாமாகக் குறிப்படையாமற் குறிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (24)

1295. ஓராமல் மந்திரமும் உன்னாமல் நம்பரனைப்
பாராமற் பார்த்துப் பழகுநாள் எந்நாளோ.

(பொ-ரை) யாதொரு பொருளையும், மந்திரத்தையும் நினைக்காமலும், நம்முடைய பரம்பரனைப் பாராமற் பார்த்துப் பழகுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (25)

1296. ஊன்பற்றும் என்னோ டுறவுபற்றும் பூரணன்பால்
வான்பற்றுங் கண்போல் மருவுநாள் எந்நாளோ.

(பொ-ரை) தேகப் பற்றையும் தன்னோடு கலப்பதான உறவுப்பற்றையும் சர்வவியாபகனிடத்தில் வான்பற்றையும் என்னுடைய கண்கள்போல் சேர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (26)

1297. ஆண்டான் மவுனி அளித்தஅறி வாலறிவைத்
தூண்டாமல் தூண்டித் துலங்குநாள் எந்நாளோ.

(பொ-ரை) என்னை அடிமை கொண்டவனான மௌனாசிரியன் திருவருள் செய்த ஞானத்தால் என்னுடைய அறிவாகிய தீபத்தைத் தூண்டாமல் தூண்டி விளங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (27)

1298. ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதஞ் சாருநாள் எந்நாளோ.

(பொ-ரை) ஆணவ சம்பந்தத்துடன் அந்தத் துவிதஞானத்தை யடைந்தது போல் மெய்ஞ்ஞான சொரூபியாகிய எம்பெருமானோடு சேர்ந்து அத்துவித ஞானத்தைப் பெறுவது எந்தக் காலத்திலோ? (எ-று) (28)

15. நிலைபிரிந்தோர் கூடுதற்குபாயம்

1299. கன்ம நெறிதப்பிற் கடுநரகென் றெந்நாளும்
நன்மைதரு ஞானநெறி நானணைவ தெந்நாளோ.

(பொ-ரை) செய்ய வேண்டிய கருமங்களினது மார்க்கம் தவறினாற் கொடிய நரகமானது வந்து சம்பவிக்குமென்று நன்மையைக் கொடுக்கின்ற ஞானமார்க்கத்தை நான் அடைவது எந்தக் காலத்திலோ? (எ-று) (1)

1300. ஞானநெறி தானே நழுவிடினும் முப்பதத்துள்
ஆனமுத்தி நல்குமென அன்புறுவ தெந்நாளோ.

(பொ-ரை) ஞானமார்க்கத்தில் தவறிப் போனாலும் மற்ற மூன்று மார்க்கங்களுக்குத் தக்க பதவி கிடைக்குமென்று அவற்றின் மேல் ஆசை வைப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (2)

**1301. பன்மார்க்க மான பலவடிபட் டேனுமொரு
சொன்மார்க்கங் கண்டு துலங்குநாள் எந்நாளோ.**

(பொ-ரை)பலமார்க்கங்களாகிய அடிகளைப் பட்டா னாலும் ஒரு மொழியாகிய உபதேசத்தின் மார்க்கத்தைக் கண்டு விளங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) (3)

**1302. அத்துவித மென்ற அந்நியச்சொற் கண்டுணர்ந்து
சுத்த சிவத்தைத் தொடருநாள் எந்நாளோ.**

(பொ-ரை) அத்துவிதமென்று சொல்லப்படுகின்ற அந்நிய சொல்லைக் கண்டறிந்து நிர்மல சிவத்தைத் தொடர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (4)

**1303. கேட்டல்முதல் நான்காலே கேடிலா நாற்பதமும்
வாட்டமற எனக்கு வாய்க்குநாள் எந்நாளோ.**

(பொ-ரை) கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை, என்று நான்கு மார்க்கங்களால் சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியங்கள் எனக்குக் கிடைப்பது எந்தக் காலத்திலோ?(5)

**1304. என்னதுயான் என்பதற எவ்விடமும் என்னாசான்
சந்நிதியாக் கண்டுநிட்டை சாதிப்ப தெந்நாளோ.**

(பொ-ரை) எனது என்னும் மமகாரமும் யான் என்னும் அகங்காரமும் நீங்கும்படி எந்த விடத்தையும் என்னுடைய ஞானாசிரியனானவன் உபதேசஞ் செய்த சந்நிதியாகக் கண்டு நான் நிட்டை சாதிப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) (6)

**1305. நாம்பிரம மென்றால நடுவேயொன் றுண்டாமால
தேம்பிஎல்லா மொன்றாய்த் திகழுநாள் எந்நாளோ.**

(பொ-ரை) நாமே பிரமமாவேனென்று சொன்னாலோ நடுவில் ஒரு பொருளுண்டாகுமாதலால் எல்லாப் பொருள் களும் ஒன்றாய்க் கலந்து விளங்குவது எந்தக்காலத்திலோ? (எ-று) (7)

**1306.முச்சகமே யாதி முழுதுமகண் டாகார
சச்சிதா னந்தசிவந் தானென்ப தெந்நாளோ.**

(பொ-ரை) மூன்று லோக முதல் யாவுமே அகண்டாகார சச்சிதானந்த சிவமே யாகுமென் றறிந்துணர்வது எந்தக் காலத்திலோ? (எ-று) (8)

**1307.எவ்வடிவும் பூரணமாம் எந்தையுரு வென்றிசைந்த
அவ்வடிவுக் குள்ளே அடங்குநாள் எந்நாளோ.**

(பொ-ரை) எந்த உருவமும் என் தந்தையினுடைய பூரணமேயாகு மென்று சேர்ந்து அவ்வுருவத்திற்குள்ளே நான் ஒடுங்கி நிற்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(9)*

**1308.சிந்தித்த தெல்லாஞ் சிவபூ ரணமாக
வந்தித்து வாழ்த்தி வணங்குநாள் எந்நாளோ.**

(பொ-ரை) நான் நினைத்த பொருள்களெல்லாம் சிவத்தினது பரிபூரண நிலையாகக் கொண்டு அந்த நிலையை வாழ்த்துதல் செய்து வணங்குவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(10)*

**1309.தாங்கியபார் விண்ணாதி தானேஞா னாக்கினியாய்
ஓங்குமி யோகவுணர் வுற்றிடுநாள் எந்நாளோ.**

(பொ-ரை) ஆதிஷேனாற் சுமக்கப்பட்ட பூமி, ஆகாயம், முதலிய யாவும் தமக்குத்தாமே ஞானாக்கினியாய்த் தழைக்கின்றயோக உணர்வைப் பெறுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(11)*

**1310.ஆசனமூர்த் தங்க ளறஅகண்டா காரசிவ
பூசைசெய ஆசை பொருந்துநாள் எந்நாளோ.**

(பொ-ரை) ஆசனங்களும் மூர்த்தங்களும் அறவேயொழிய அகண்டா காரமாகிய சிவபூசை செய்ய எனக்கு ஆசையுண்டாவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(12)*

**1311.அஞ்செழுத்தின் உண்மை அதுவான அப்பொருளை
நெஞ்சமுத்தி ஒன்றாகி நிற்குநாள் எந்நாளோ.**

(பொ-ரை) பஞ்சாட்சரத்தி னுண்மையாயிருந்து விளங்கும் அந்தச் சிவத்தை என் மனத்தினிறுத்தி நான் அதனோடு ஒன்றாய்க் கலந்திருப்பது எந்தக் காலத்திலோ? (எ-று) *(13)*

**1312.அவ்வுயிர்போல் எவ்வுயிரும் ஆனபிரான் தன்னடிமை
எவ்வுயிரு மென்றுபணி யாஞ்செய்வ தெந்நாளோ.**

(பொ-ரை) அகரவுயிரெழுத்தானது மற்றைய உயிர்களிற் கலந்து எல்லாம் தானேயாய் நிற்பது போல எவ்வுயிர்களிலும் கலந்து எல்லாம் தானேயாய் விளங்கும் இறைவனுக்கு

எல்லா உயிர்களும் அடிமைகளென்று துணிந்து நாம் அவனுடைய திருப்பணிகளைச் செய்வது எந்தக் காலத்திலோ? (எ-று) *(14)*

1313.தேசிகர்கோ னான திறன்மவுனி நந்தமக்கு
வாசி கொடுக்க மகிழுநாள் எந்நாளோ.

(பொ-ரை) குருராஜனான ஜெயம் பொருந்திய மௌன ஆசிரியனா னவன் நமக்கு வாசிஞானத்தைத் திருவருள் செய்ய நாம் மகிழ்வது எந்தக் காலத்திலோ? (எ-று) *(15)*

1314.குருலிங்க சங்கமமாக் கொண்ட திருமேனி
அருள்மயமென் றன்புற் றருள் பெறுவ தெந்நாளோ.

(பொ-ரை) குருலிங்க சங்கமமாகத் திருக்கோலங் கொண்டிருக்கின்ற ரூபத்தைத் திருவருள் மயமாமென்று அந்த ரூபத்தினிடத்தில் அன்பு வைத்துச் சிவபெருமானுடைய திருவருளைப் பெறுவது எந்தக் காலத்திலோ? (எ-று) *(16)*

காண்பேனோ என்கண்ணி

1315.சிந்திக்குந் தோறுந் தெவிட்டா அமுதேஎன்
புந்திக்குள் நீதான் பொருந்திடவுங் காண்பேனோ.

(பொ-ரை) நினைக்குந் தோறும் தெவிட்டாதிருக்கின்ற அமிர்தமே! நீ என் மனத்திற் குடிகொள்ள நான் தரிசிக்கப் பெறுவேனோ? (எ-று) *(1)*

1316.கேவலத்தில் நான்கிடந்து கீழ்ப்படா தின்பஅருள்
காவலன்பா லொன்றிக் கலந்திடவும் காண்பேனோ

(பொ-ரை) நான் கேவலாவத்தையிற் கிடந்து தாழ்வை யடையாதபடி திருவருள் இறைவனிடத்தில் ஒன்றாகக் கலந்திடவும் தரிசிக்கப்பெறுவேனோ? (எ-று) *(2)*

1317.துரியங் கடந்தஒன்றே தூவெளியாய் நின்ற
பெரியநிறை வேஉனைநான் பெற்றிடவுங் காண்பேனோ.

(பொ-ரை) துரியாதீதமான தனிமைப் பொருளே! நிர்மலமாயிருக்கின்ற பரிபூரணமே! உன்னை நான் தரிசிக்கப் பெறுவேனோ? (எ-று) *(3)*

1318.மாசற்ற அன்பர்நெஞ்சே மாறாத பெட்டகமாத்
தேசுற்ற மாமணிநின் தேசினையுங் காண்பேனோ.

(பொ-ரை) குற்றமற்ற அடியார்கள் மனத்தையே ஒரு பெட்டியாகக் கொண்டு அதிலமர்ந்திருக்கின்ற மாணிக்கமே! நான் உன்னுடைய அழகைத் தரிசிக்கப் பெறுவேனோ? (எ-று) *(4)*

1319.மாயா விகார மலமகல எந்தைபிரான்
நேயாநு பூதி நிலைபெறவுங் காண்பேனோ.

(பொ-ரை) மாயா சம்பந்தப்பட்ட குற்றமானது நீங்கி எம்பெருமானுடைய சிவாநுபவத்தைப் பெறவுங் காண்பேனோ? (எ-று) *(5)*

1320.பொய்யுலகும் பொய்யுறவும் பொய்யுடலும் பொய்யெனவே
மெய்யநினை மெய்யெனவே மெய்யுடனே காண்பேனோ.

(பொ-ரை) பொய்யாகிய உலகம், உறவு, உடல் ஆகிய இவைகளைப் பொய்யென்று தள்ளி மெய்யனான உன்னை நான் உண்மையோடு தரிசிக்கப் பெறுவேனோ? (எ-று) *(6)*

1321.வாலற்ற பட்டமென மாயா மனப்படலங்
காலற்று வீழவும்முக் கண்ணுடையாய் காண்பேனோ.

(பொ-ரை) மூன்று கண்களையுடையவனே! வாலறுந்து விழுந்த காற்றாடியைப் போல மாயாசம்பந்தப்பட்ட மனக் கூட்டமானது அடியற்று விழவும் காண்பேனோ? (எ-று) (7)

1322.உள்ளும் புறம்பும் ஒருபடித்தாய் நின்றுசுகங்
கொள்ளும் படிக்கிறைநீ கூட்டிடவுங் காண்பேனோ.

(பொ-ரை) எனது தலைவனே! உள்ளிலும், வெளியிலும் ஒரே தன்மையாவிருந்து பேரின்பத்தை அநுபவிக்கும்படி நீ திருவருள் செய்ய நான் காண்பேனோ? (எ-று) *(8)*

1323.காட்டுகின்ற முக்கட் கரும்பே கனியேஎன்
ஆட்டமெல்லாந் தீரஉன தாடலையுங் காண்பேனோ.

(பொ-ரை) தோன்றுகின்ற மூன்று கணுக்களையுடைய கரும்பே! முக்கனியே! என்னுடைய ஆட்டமெல்லாந் தீரும்படி உன்னுடைய ஆடலை நான் காண்பேனோ! (எ-று) *(9)*

1324.தூங்காமல் தூங்கிச் சுகப்பெருமான் நின்நிறைவில்
நீங்காமல் நிற்கும் நிலைபெறவுங் காண்பேனோ.

(பொ-ரை) தூங்காமற் றூங்கி இன்பவிறைவனுடைய பரிபூரணத்திற் பிரியாமலிருந்து நிலைபெறவும் காண்பேனோ? (எ-று) *(10)*

**1325. வாதவூ ராளிதனை வான்கருணை யால்விழுங்கும்
போதவூ ரேறேநின் பொன்னடியுங் காண்பேனோ.**

(பொ-ரை) திருவாதவூரடிகளை மிக்க கருணையில் விழுங்கும் ஞானமயனே! உன்னுடைய பொன் போன்ற திருவடிகளையும் நான் காணப் பெறுவேனோ? (எ-று) (11)

**1326. சாட்டை இலாப் பம்பரம்போல் ஆடுஞ் சடசால
நாட்டமற எந்தைசுத்த ஞானவெளி காண்பேனோ.**

(பொ-ரை) சாட்டையில்லாத பம்பரம் ஆடுவதுபோல் ஆடுகின்ற இந்தத் தேகப்பற்று நீங்க என் தந்தையினுடைய சுத்த ஞானாகாயத்தைக் காண்பேனோ? (எ-று) (12)

**1327. மன்றாடும் வாழ்வே மரகதஞ்சேர் மாணிக்கக்
குன்றேநின் தாட்கீழ்க் குடிபெறவுங் காண்பேனோ.**

(பொ-ரை) சிற்றம்பலத்தில் நடனஞ் செய்கின்ற என்னுடைய வாழ்வே! மரகதமானது சேர்ந்துள்ள மாணிக்க மலையே? நான் உன்னுடைய திருவடிகளின் கீழ் அடிமைப்படவும் காண்பேனோ? (எ-று) (13)

**1328. பொய்யென் றறிந்தும்எமைப் போகவொட்டா தையஇந்த
வையங் கனமயக்க மாற்றிடவுங் காண்பேனோ.**

(பொ-ரை) ஐயனே! இந்த உலகமாயையானது பொய்யா மென்றுணர்ந்தும் எம்மை மேற்கதிக்குப் போகவொட்டாமல் தடுக்கின்றது. ஆகையால் அந்த மயக்கமானது நீங்கக் காண்பேனோ? (எ-று) (14)

**1329. தாயினும் நல்ல தயாளுவே நின்னைஉன்னித்
தீயின்மெழு கொத்துருகுஞ் சிந்தைவரக் காண்பேனோ.**

(பொ-ரை) தாயைப் பார்க்கிலும் தயாள குணத்தை யுடையானே! நான் உன்னை நினைந்து தீயிற்பட்ட மெழுகாக உருகும்படியான மனம் வரக் காண்பேனோ! (எ-று) (15)

**1330. என்செயினும் என்பெறினும் என்னிறைவா ஏழையன்யான்
நின்செயலென் றுன்னும் நினைவுவரக் காண்பேனோ.**

(பொ-ரை) என் தலைவனே! நான் அறிவில்லாத வனாகையால் என்ன செய்தாலும் என்ன லாபத்தைப் பெற்றாலும், எல்லாம் உன்னுடைய செய்கைகளே யென்று நினைக்கும் நினைப்பு வரக் காண்பேனோ? (எ-று) (16)

1331.எள்ளத் தனையும் இரக்கமிலா வன்பாவி
உள்ளத்தும் எந்தை உலவிடவுங் காண்பேனோ.

(பொ-ரை) எள்ளளவானாலும் இரக்கமில்லாத கொடிய பாவியாகிய என்னுடைய மனத்தின்கண் இறைவன் வசித்திருக்கக் காண்பேனோ? (எ-று) *(17)*

1332.வஞ்சகத்துக் காலயமாம் வல்வினையேன் ஆகெடுவேன்
நெஞ்சகத்தில் ஐயாநீ நேர்பெறவுங் காண்பேனோ.

(பொ-ரை) கபடத்திற்குக் கோயிலாவிருக்கின்ற தீவினையை யுடையேன் நான். ஆ! கெடுவேன். ஆகையால் அப்படிப்பட்ட என்னுடைய மனத்தில் நீ நேர்படக் காண்பேனோ? (எ-று) *(18)*

1333.தொல்லைப் பிறவித் துயர்கெடவும் எந்தைபிரான்
மல்லற் கருணை வழங்கிடவுங் காண்பேனோ.

(பொ-ரை) பூர்வஜென்ம துன்பம் கெட்டொழியவும், எம்பெருமானுடைய மிகுந்த கருணை வழங்கிடவும் காண்பேனோ? (எ-று) *(19)*

1334.வாளாருங் கண்ணார் மயற்கடலில் ஆழ்ந்தேன்சற்
றாளாக எந்தை அருள்செயவுங் காண்பேனோ.

(பொ-ரை) பெண்கள் மாயையிற்பட்டு வருந்துகின்ற என்னை நீ கொஞ்சம் அடிமையாக்கித் திருவருள் செய்யக் காண்பேனோ? (எ-று) *(20)*

1335.பஞ்சாய்ப் பறக்குநெஞ்சப் பாவியைநீ கூவிஐயா
அஞ்சாதே என்றின் னருள்செயவுங் காண்பேனோ.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! பஞ்சு போற் பறக்கு மனத்தை யுடைய பாவியாகிய என்னை நீ பயப்படாதே யென்று திருவருள் செய்யவுங் காண்பேனோ? (எ-று) *(21)*

1336.ஆடு கறங்காகி அலமந் துழன்றுமனம்
வாடுமெனை ஐயாநீ வாவெனவுங் காண்பேனோ.

(பொ-ரை) ஐயனே! ஆடுகின்ற காற்றாடியைப் போல் சுழன்று மனம் வாடப் பெற்ற என்னன நீ வா என்று கூப்பிடவுங் காண்பேனோ? (எ-று) *(22)*

1337.சிட்டர்க் கெளிய சிவனேயோ தீவினையேன்
மட்டற்ற ஆசை மயக்கறவும் காண்பேனோ.

(பொ-ரை) அடியார்க்கெளியவனான சிவபெருமானே! ஓ! கொடிய பாவத்தையுடையவனான நான் என்னுடைய அளவு சொல்லக்கூடாத ஆசையை நீக்கிக் கொள்ளவும் காண்பேனோ? (எ-று) *(23)*

1338. உள்நின் றுணர்த்தும் உலப்பிலா ஒன்றேநின்
தண்ணென்ற சாந்த அருள் சார்ந்திடவும் காண்பேனோ.

(பொ-ரை) என் மனத்தின் கண்ணின்று எனக்கு அறிவுறுத்துகின்ற கெடுதலில்லாத ஒப்பற்ற பொருளே! உன்னுடைய சாந்தத்தோடு கூடிய திருவருளையுங் காண்பேனோ? (எ-று) *(24)*

1339. ஓடுங் கருத்தொடுங்க உள்ளுணர்வு தோன்றநினைக்
கூடும் படிக்கிறைநீ கூட்டிடவுங் காண்பேனோ.

(பொ-ரை) இறைவனே! நீ பலவழிகளில் வியவகரிக்கின்ற என் மனமொடுங்கவும், உள்ளே உணர்ச்சி அதிகரிக்கவும், நின்னைச் சேரும்படி நீ என்னைக் கூட்டிக் கொள்ளவுங் காண்பேனோ? (எ-று) *(25)*

1340. வாக்கால் மனத்தால் மதிப்பரியாய் நின்னருளை
நோக்காமல் நோக்கிநிற்கும் நுண்ணறிவு காண்பேனோ.

(பொ-ரை) வாக்கினாலும் மனத்தினாலும் சொல்லவும் நினைக்கவும் அருமையையுடையாய், அப்படிப்பட்ட உன்னைப் பார்க்காமற் பார்த்திருக்கத் தக்க நுட்பமாகிய அறிவைக் கொடுக்கவுங் காண்பேனோ? (எ-று) *(26)*

1341. இவ்வுடம்பு நீங்குமுனே எந்தாய்கேள் இன்னருளாம்
அவ்வுடம்புக் குள்ளே அவதரிக்கக் காண்பேனோ.

(பொ-ரை) எனக்கு வந்துள்ள இந்தத் தேகமானது நீங்குவதற்கு முன்னரே திருவருளுடம்பை எடுக்கவுங் காண்பேனோ? (எ-று) *(27)*

1342. நித்தமாய் ஒன்றாய் நிரஞ்சனமாய் நிர்க்குணமாஞ்
சுத்தவெளி நீ வெளியாய்த் தோன்றிடவுங் காண்பேனோ.

(பொ-ரை) என்றும் அழியாததாகியும், ஒரு பொருளாகியும் நிரஞ்சன மாகியும், நிர்க்குணமாகியும் இருக்கின்ற சுத்தவெளி நீயேயாவாய். ஆகையால்

அப்படிப்பட்ட நீ என்னிடத்தில் வெளிப்படையாய்த் தோன்றக் காண்பேனோ? (எ-று) (28)

**1343.கண்ணிறைந்த மோனக் கருத்தேஎன் கண்ணேஎன்
உள்நிறைந்த மாயை ஒழிந்திடவுங் காண்பேனோ.**

(பொ-ரை) என் கண்ணுக்குள் நிறைந்திருக்கின்ற மௌனக் கருத்தே! என் கண்மணியே! உன்னுடைய திருவருட் சகாயங் கொண்டு எனக்குள் நிறைந்திருக்கின்ற மாயையானது நீங்கவும் காண்பேனோ? (எ-று) (29)

**1344.அத்தா விமலா அருளாளா ஆனந்த
சித்தா எனக்குன் அருள் செய்திடவுங் காண்பேனோ.**

(பொ-ரை) அத்தனே! பரிசுத்தனே! திருவருளை யாள் பவனே! ஆனந்த சித்தனே! எனக்கு உன்னுடைய திருவருளை நீ கடாட்சிக்கக் காண்பேனோ? (எ-று) (30)

**1345.வீணே பிறந்திறந்து வேசற்றேன் ஆசையறக்
காணேன் இறைநின் கருணைபெறக் காண்பேனோ.**

(பொ-ரை) இறைவனே! நான் வீணாகப் பிறந்திறந்து துன்பமுற்றேன். ஆகையால் அந்த அவாவை அறப் பெற்றேனில்லை; ஆயினும் உன்னுடைய திருவருளைப் பெறக் காண்பேனோ! (எ-று) (31)

**1346.சட்டையொத்த இவ்வுடலைத் தள்ளுமுன்னே நான்சகச
நிட்டையைப் பெற்றையா நிருவிகற்பங் காண்பேனோ.**

(பொ-ரை) ஐயனே! சட்டையைப் போன்ற இந்தவுடலை நான் தள்ளிப் போடு முன்னரே சகச நிட்டையடைந்து நிருவிகற்பத்தைப் பெறக் காண்பேனோ? (எ-று) (32)

**1347.எல்லாந் தெரியும் இறைவாஎன் அல்லலெலாஞ்
சொல்லாமுன் நீ தான் தொகுத்திரங்கக் காண்பேனோ.**

(பொ-ரை) இறைவனே! உனக்கு எல்லாந் தெரியும்.ஆகையால் என்னுடைய துன்பங்களையெல்லாம் நான் எடுத்துச் சொல்லாத முன்னரே நீயே எனக்கிரங்கி அருள் செய்யக் காண்பேனோ? (எ-று) (33)

**1348.அண்டபகி ரண்டம் அனைத்துமொரு படித்தாக்
கண்டவர்கள் கண்டதிருக் சாட்சியையுங் காண்பேனோ.**

(பொ-ரை) அண்டபகிரண்டங்களையெல்லாம் ஒரே தன்மையாகக் கண்டவர்கள் கண்ட அழகிய காட்சியையும் நான் காண்பேனோ? (எ-று) *(34)*

1349.ஊனிருந்த காயம் உடனிருப்ப எந்தைநின்பால்
வானிருந்த தென்னவுநான் வந்திருக்கக் காண்பேனோ.

(பொ-ரை) என் தாயே! மாயா சம்பந்தப்பட்ட தேகமானது என்னோடு கூடவிருப்ப உன்னிடத்தில் ஆகாயமாயிருந்த தென்றறியவும் நான் வந்திருக்கக் காண்பேனோ? (எ-று) *(35)*

1350.தினையத் தனையுந் தெளிவறியாப் பாவியேன்
நினைவிற் பரம்பொருள்நீ நேர்பெறவுங் காண்பேனோ.

(பொ-ரை) தினையளவானாலும் அறிவில்லாத பாவியாகிய என்னுடைய அறிவிற் பரம்பொருளாகிய நீ நேர்ப்படவுங் காண்பேனோ? (எ-று) *(36)*

1351.துன்பமெனுந் திட்டனைத்துஞ் சூறையிட ஐயாவே
இன்பவெள்ளம் வந்திங் கெதிர்ப்படவுங் காண்பேனோ.

(பொ-ரை) என்னுடைய ஐயனே! துக்கமென்கிற மேடுகளையெல்லாம் கொள்ளை கொண்டு போகும்படி பேரின்ப வெள்ளமானது வந்து இங்கே எதிர்ப்படவும் காண்பேனோ? (எ-று) *(37)*

ஆகாதோ என்கண்ணி

1352.கல்லாத நெஞ்சங் கரைந்துருக எந்தொழிற்கும்
வல்லாய்நின் இன்பம் வழங்கினால் ஆகாதோ.

(பொ-ரை) எந்தப் தொழிலிலும் வல்லமையுடையானே! என்னுடைய கல்லாத மனமானது கரைந்துருக உன்னுடைய பேரின்பத்தை எனக்குக் கொடுத்தாலாகாதோ? (எ-று) *(1)*

1353.என்னை அறிய எனக்கறிவாய் நின்றருள்நின்
தன்னை அறிந் தின்பநலஞ் சாரவைத்தால் ஆகாதோ.

(பொ-ரை) என்னை நான் அறியும்படி எனக்கொரு அறிவாய் நின்றருள்கின்ற உன்னையுணர்ந்து என்னை சுகநன்மையிற் சாரும்படி வைத்தாலாகாதோ? (எ-று) *(2)*

1354.பொய்ம்மயமே யான புரைதீர எந்தை இன்ப
மெய்ம்மயம்வந் தென்னை விழுங்கவைத்தால் ஆகாதோ.

(பொ-ரை) என் தந்தையே! பொய்மயமான குற்றம் நீங்க சுகமான உண்மையுணர்வானது வந்து என்னை விழுங்கும்படி வைத்தாலாகாதோ? (எ-று) *(3)*

1355.மட்டில்லாச் சிற்சுகமாம் வாழ்வேநின் இன்பமயஞ்
சிட்டர்போல் யானருந்தித் தேக்கவைத்தால் ஆகாதோ.

(பொ-ரை) அளவில்லாத ஞானசுகமான வாழ்வே! உன்னுடைய பேரின்பமயத்தை நான் அடியார்கள் போலருந்தித் தெவிட்ட வைத்தாலாகாதோ? (எ-று) *(4)*

1356.அத்தாநின் பொற்றா ளடிக்கே அநுதினமும்
பித்தாகி இன்பம் பெருகவைத்தால் ஆகாதோ.

(பொ-ரை) அத்தனே! உன்னுடைய பொன்போலும் திருவடிக்கே அனுதினமும் பித்தாக்கி சுகத்தைப் பெருகுவித்தா லாகாதோ? (எ-று) *(5)*

1357.மெல்லியலார் மோக விழற்கிறைப்பேன் ஐயாநின்
எல்லையில்அ னந்தநலம் இச்சித்தால் ஆகாதோ.

(பொ-ரை) ஐயனே! நானோ பெண்கள் மையலாகிய விழலுக்கு இறைப்பேன். அஃது ஒழிய அளவு சொல்லப் படாத சுகநன்மையை விரும்பினாலாகாதோ? (எ-று) *(6)*

1358.சுட்ட ழகா யெண்ணுமனஞ் சூறையிட்டா னந்தமயக்
கட்டழகா நின்னைக் கலக்கவைத்தால் ஆகாதோ.

(பொ-ரை) சுகானந்த மயக்கட்டினையே ஒரு அழகாயுடையவனே! சுட்டியறியும் என் மனத்தைக் கொள்ளை கொள்ள விட்டுவிட்டு உன்னைச் சேர்ந்துறவாகும்படி வைத்தாலாகாதோ? (எ-று) *(7)*

1359.சோதியே நந்தாச் சுகவடிவே தூவெளியே
ஆதியே நின்னை அறியவைத்தால் ஆகாதோ.

(பொ-ரை) தேஜோமயமே! கெடுதலில்லாத சுகரூபமே! பரிசுத்த ஆகாயமே! முதற்பொருளே! உன்னை நான் அறியும்படி வைத்தாலாகாதோ? (எ-று) *(8)*

1360.நேசஞ் சிறிதுமிலேன் நின்மலனே நின்னடிக்கே
வாசஞ் செயஇரங்கி வாவென்றால் ஆகாதோ.

(பொ-ரை) நிர்மலனே! உன்னிடத்திற் கொஞ்சமும் பிரியமில்லாத என்னை உன்னுடைய திருவடிகளில் வாசஞ் செய்ய இரங்கி வாவென் றழைத்தாலாகாதோ? (எ-று) *(9)*

1361. என்னறிவுக் குள்ளே இருந்ததுபோல் ஐயாவே
நின்னறிவுள் நின்னுடன்யான் நிற்கவைத்தால் ஆகாதோ.

(பொ-ரை) என்னுடைய ஐயாவே! நீ என்னறிவுக் குள்ளிருந்தது போல உன்னுடைய அறிவுக்குள் உன்னோடு என்னையும் கலக்கும்படி வைத்தாலாகாதோ? (எ-று) (10)

1362. ஆதிப் பிரானேஎன் அல்லல் இருளகலச்
சோதிப்பிர காசமயந் தோற்றுவித்தால் ஆகாதோ.

(பொ-ரை) முதற் பொருளானவனே! என்னுடைய துன்பமாகிய இருட்டானது நீங்க உன்னுடைய தேஜோமயமானது எனக்கு வெளிப் பட்டாலாகாதோ? (எ-று) (11)

1363. ஆசைச் சுழற்கடலில் ஆழாமல் ஐயாநின்
நேசப் புணைத்தாள் நிறுத்தினால் ஆகாதோ.

(பொ-ரை) என்னுடைய ஐயனே! நான் ஆசையாகிய சுழற் கடலிற் சிக்கி அலையாமல் உன்னுடைய விஸ்வாசித் தலையுடைய திருவடிப்புணையைத் தந்து என்னைச் சுழலாமல் நிறுத்தினாலாகாதோ? (எ-று) (12)

1364. பாசநிக ளங்களெல்லாம் பஞ்சாகிச் செஞ்செவே
ஈசஎனை வாவென் றிரங்கினால் ஆகாதோ.

(பொ-ரை) ஈசனே! நீ என்னுடைய பாசமாகிய சங்கிலிகளை யெல்லாம் பஞ்சைப் போற் செய்து என்னைச் செம்மை பெற வாவென்றழைத்து என்மேல் இரக்கம் வைத்தாலாகாதோ? (எ-று) (13)

1365. ஓயாவுள் ளன்பாய் உருவிவாய் விட்டரற்றிச்
சேயாகி எந்தைநின்னைச் சேரவைத்தால் ஆகாதோ.

(பொ-ரை) என் தந்தையே! நான் சதாமனத்திற் கொண்ட அன்பினாலுருகி வாய்விட்டுக் கதறி நின்னைச் சேரும்படி செய்தாலாகாதோ? (எ-று) (14)

1366. ஆதியாம் வாழ்வாய் அகண்டிதமாய் நின்றபரஞ்
சோதிநீ என்னைத் தொழும்பனென்றால் ஆகாதோ.

(பொ-ரை) முதல் வாழ்க்கையுடையதாகிய கண்டிதமா யிருக்கின்ற பரஞ்சோதி நீ ஆகையால் என்னை அடியவனென்று சொன்னாலாகாதோ? (எ-று) (15)

1367.விண்ணாரக் கண்ட விழிபோற் பரஞ்சோதி
கண்ணார நின்நிறைவைக் காணவைத்தால் ஆகாதோ.

(பொ-ரை) பரஞ்சோதி! ஆகாயமுழுமையும் பார்த்த கண்ணைப் போல உன்னுடைய பரிபூரணத்தைக் காணும்படி வைத்தாலாகாதோ? (எ-று) (16)

1368.சேராமற் சேர்ந்து நின்று சின்மயனே நின்மயத்தைப்
பாராமற் பாரென நீ பட்சம்வைத்தால் ஆகாதோ.

(பொ-ரை) கூடாமற் கூடியிருந்த ஞானமயனே! உன்னுடைய அருள்மயத்தை நீயே பாராமற் பார் என்று பட்சம் வைத்துச் சொன்னா லாகாதோ? (எ-று) (17)

1369.கண்ணாடி போலஎல்லாங் காட்டுந் திருவருளை
உள்நாடி ஐயா உருகவைத்தால் ஆகாதோ.

(பொ-ரை) ஐயனே! கண்ணாடிபோல் எல்லாவற்றையும் காட்டும் திருவருளை மனத்தின் கண்ணாடி மனமுருக வைத்தாலாகாதோ? (எ-று) (18)

1370.மூலஇருள் கால்வாங்க மூதறிவு தோன்ற அருட்
கோலம்வெளி யாகஎந்தை கூடுவித்தால் ஆகாதோ.

(பொ-ரை) என் தந்தையே! ஜென்மத்திற்குக் காரணமாகிய அஞ்ஞான விருட்டானது நீங்கவும் மிக்க ஞான அறிவு தோன்றவும் திருவருட் கோலத்தை வெளிப்படையாய்க் கூட்டுவித்தாலாகாதோ? (எ-று) (19)

1371.சாற்றரிய இன்பவெள்ளந் தாக்குமதில் நீமுளைக்கில்
ஊற்றமுறு மென்ன அதில் உண்மைசொன்னால் ஆகாதோ.

(பொ-ரை) சொல்லுதற்கரிய இன்பவெள்ளந் தாக்குமிடத்தில் நீ வந்து தோன்றுவாயானால் மிக்க பெருமிதமுண்டாமென்று எனக்கு அதில் உண்மையைச் சொன்னாலாகாதோ? (எ-று) (20)

1372.கையுங் குவித்திரண்டு கண்ணருவி பெய்ய அருள்
ஐயநின் தாள்கீழே அடிமைநின்றால் ஆகாதோ.

(பொ-ரை) திருவருளையுடைய ஐயனே! நான் கைகூப்பி இரண்டு கண்களினின்றும் நீர்பெருக உன்னுடைய திருவடியின் கீழ் அடிமையாக நின்றாலாகாதோ? (எ-று) (21)

இல்லையோ என்கண்ணி

1373.ஏதுந் தெரியா தெனைமறைத்த வல்லிருளை
நாதநீ நீக்கஒரு ஞானவிளக் கில்லையோ.

(பொ-ரை) எனக்கு மெய்ப் பொருளாயுள்ளது எதுவுந் தெரியாதபடி என்னை மறைத்திருக்கின்ற வலிய மாயையை யுடைய என்னுடைய தலைவனே! நீயறவேயொழித்து வழிப்படுத்துவதற்கான ஒப்பற்ற ஒரு ஞானவிளக்கானது உன்னிடத்தில் இல்லையோ? (எ-று) (1)

1374.பணியற்று நின்று பதைப்பற என்கண்ணுள்
மணியொத்த சோதிஇன்ப வாரிஎனக் கில்லையோ.

(பொ-ரை) நான் பணியையும், பதைப்பையும் அறவே யொழித்து நிற்கும்படி என்னுடைய கண்மணி போன்ற தேஜோமயமான சுகக் கடலானது எனக்குக் கைவருதலில்லையோ? (எ-று) (2)

1375.எம்மா லறிவதற எம்பெருமான் யாதுமின்றிச்
சும்மா இருக்கஒரு சூத்திரந்தான் இல்லையோ.

(பொ-ரை) எம்முடைய தலைவனே! நானே ஒரு பொருளைச் சுட்டியறிவது ஒழிந்து நான் யாதொன்றினும் சேராதபடி மௌன மாயிருப்பதற்கு ஆதாரமாக எனக்கொரு சூஸ்திரமுமில்லையோ? (எ-று) (3)

1376.நாய்க்குங் கடையானேன் நாதாநின் இன்பமயம்
வாய்க்கும் படிஇனியோர் மந்திரந்தான் இல்லையோ.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! நானோ நாயைப் பார்க்கிலும் தாழ்ந்தவனாய் விட்டேன். ஆகையால் அப்படிப் பட்ட எனக்கு சுகோதயமானது கை கூடும்படி எனக்காக இனியேனும் ஒரு மந்திரம் தருதற்கு நீ இசை தலில்லையோ? (எ-று) (4)

1377.ஊனாக நிற்கும் உணர்வைமறந் தையாநீ
தானாக நிற்கஒரு தந்திரந்தான் இல்லையோ.

(பொ-ரை) ஐயனே! நான் தேகசம்பந்தப்பட்டு நிற்கும் உணர்ச்சியை மறந்து நீயேயாய் நிற்கும்பொருட்டு ஒரு தந்திரஞ் சொல்லுதற் கிசை தலில்லையோ? (எ-று) (5)

1378.அல்லும் பகலும் அகண்டவடி வேஉனை நான்
புல்லும் படிஎனக்கோர் போதனை தான் இல்லையோ.

(பொ-ரை) அகண்ட பரிபூரண வஸ்துவே! அகோ ராத்திரம் உன்னை நான் சேரும்படி எனக்கு ஒரு ஞானபோதிப்பைத் தருதலில்லையோ? (எ-று)

இங்ஙனம் நான் வேண்டியவற்றைக் கொடாமற் போவையானால் நான் பிழைப்பது இல்லை என்பது கருத்து. (6)

வேண்டாவோ என் கண்ணி

**1379.கண்டவடி வெல்லாநின் காட்சிஎன்றே கைகுவித்துப்
பண்டுமின்றும் நின்றஎன்னைப் பார்த்திரங்க வேண்டாவோ.**

(பொ-ரை) என்னாற் காணப்பட்டுவரும் ரூபங் களெல்லாம் உன்னுடைய சொரூபமே யாகுமென்று பூர்வத்திலும் இப்பொழுதுங் கைகுவித்து நின்ற என்னை நீ கடைக்கண்ணாற் பார்த்து என்மீது இரக்கம் வைக்க வேண்டாவோ? (எ-று) (1)

**1380.வாதனையோ டாடும் மனப்பாம்பு மாயஒரு
போதனை தந் தையா புலப்படுத்த வேண்டாவோ.**

(பொ-ரை) பூர்வ வாசனையினால் ஆடுகின்ற மனமாகிய பாம்பானது தன்னுடைய ஆட்டத்தினின்றும் அடங்கும்படியாக எனக்கொரு உபதேசஞ் செய்து நல்ல ஞானத்தை வெளிப்படுத்த வேண்டாவோ? (எ-று) (2)

**1381.தன்னை அறியத் தனியறிவாய் நின்றருளும்
நின்னை அறிந் தென்னறிவை நீங்கிநிற்க வேண்டாவோ.**

(பொ-ரை) தன்னைத் தானறியத் தான் தனியறி வாகவிருந்து கருணை செய்கின்ற உன்னை உணர்ந்து என்னுடைய அஞ்ஞானத்தினின்றும் நான் நீங்கியிருக்க வேண்டாமோ? (எ-று) (3)

**1382.அள்ளக் குறையா அகண்டிதா னந்தமெனும்
வெள்ளமெனக் கையா வெளிப்படுத்த வேண்டாவோ.**

(பொ-ரை) அள்ளினாலும் குறைவினையடையாத பேரானந்தம் என்று சொல்லப்படுகின்ற வெள்ளத்தை எனக்கு வெளியாக்க வேண்டாவோ? (எ-று) (4)

**1383.அண்டனே அண்ட ரமுதேஎன் ஆருயிரே
தொண்டனேற் கின்பந் தொகுத்திரங்க வேண்டாவோ.**

(பொ-ரை) தேவனே! தேவர்களுக்கு அமிர்தம் போல்பவனே! என்னுடைய அரிய உயிரே! அடியேனாகிய எனக்கு இன்பத்தைக் கொடுத்து இரக்கங் கொள்ள வேண்டாவோ? (எ-று) *(5)*

1384.பாராதே நின்று பதையாதே சும்மாதான்
வாரா யெனவும் வழிக்காட்ட வேண்டாவோ.

(பொ-ரை) பாராமலும்! பதையாமலும் சும்மா வருவாயாக வென்று எனக்கு வழிகாட்ட வேண்டாவோ? (எ-று) *(6)*

நல்லறிவே என் கண்ணி

1385.எண்ணிறைந்த மேன்மைபடைத் தெவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்க்
கண்ணிறைந்த சோ தியை நாங் காணவா நல்லறிவே.

(பொ-ரை) என்னுடைய நல்லறிவே! அளவில்லாத கீர்த்தியைப் பெற்று எவ்வுயிர்க்கும் உயிராய் நின்று விளங்கும் சோதியைக் காண்பதற்கு நீ வருவாயாக. (எ-று) (1)

1386.சித்தான நாமென் சடத்தைநா மென்னஎன்றுஞ்
சத்தான உண்மைதனைச் சாரவா நல்லறிவே.

(பொ-ரை) நல்லறிவே! சித்தின்மயமான நாம் சடத்தை நாமல்லவென்று தள்ளிச் சத்தான உண்மைப் பொருளைச் சார்வதற்கு நீ வருவாயாக.(எ-று) *(2)*

1387.அங்குமிங்கும் எங்குநிறை அற்புதனார் பொற்பறிந்து
பங்கயத்துள் வண்டாய்ப் பயன்பெறவா நல்லறிவே.

(பொ-ரை) நல்லறிவே! எங்கும் பரிபூரணமாயிருக்கின்ற சிவபெருமானுடைய திருவருள் விலாசத்தையுணர்ந்து அந்த அருளை அடையும்படியாக நீ வருவாயாக.(எ-று) *(30)*

1388.கான்றசோறென்ன இந்தக் காசினிவாழ் வத்தனையுந்
தோன்ற அருள்வெளியில் தோன்றவா நல்லறிவே.

(பொ-ரை) நல்லறிவே! கக்கியசோற்றினை வெறுப்பதுபோல் இப் பிரபஞ்ச வாழ்க்கையை வெறுத்து திருவருட் பரமாகாயத்தில் நீ வெளிப்படையாய்த் தோன்றும்படி வருவாயாக.(எ-று) *(4)*

பலவகைக்கண்ணி

1389.என்னரசே கேட்டிலையோ என்செயலோ ஏதுமிலை
தன்னரசு நாடாகித் தத்துவங்கூத் தாடியதே.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! நீ கேட்டாயில்லையோ? அது என்னவென்றால் என்னுடைய செய்கை யொன்றுமில்லை. ஆனால் தத்துவங்களெல்லாம் தாமே அரசாட்சி செய்து கூத்தாடா நிற்கின்றன என்பதே. (எ-று) *(1)*

1390.பண்டொருகால் நின்பாற் பழக்கமுண்டோ எந்தைநினைக்
கண்டொருகாற் போற்றக் கருத்துங் கருதியதே.

(பொ-ரை) என்னுடைய தந்தையே! உன்னை ஒரு தரமானாலும் தெரிசித்துத் துதி செய்யும் பொருட்டு என் மனமானது நினைக்கின்றது. ஆகையால் அது பூர்வ வினைப் பழக்கமாக இருக்கின்றது. (எ-று) *(2)*

வேறு

1391.கண்டனவே காணுமன்றிக் காணாவோ காணாஎன்
கொண்டறிவேன் எந்தைநினைக் கூடுங் குறிப்பினையே.

(பொ-ரை) என்னுடைய தந்தையே! பார்த்த பொருள் களையே பார்க்குமேயொழிய பாராத பொருள்களைப் பாரா. ஆகையால் நான் உன்னைச் சேரும்படியான குறிப்பினை எதை ஆதாரமாகக் கொண்டுணர் வேன்? (எ-று) *(3)*

1392.கல்லா லடியில்வளர் கற்பகமே என்னளவோ
பொல்லா வினைக்குப் பொருத்தந்தான் சொல்லாயோ.

(பொ-ரை) கல்லால மரத்தினடியில் எழுந்தருளி யிருக்கின்ற கற்பகமே! என்னிடத்தில் தானோ? அந்தக் கொடியவினை வந்து சேரவேண்டியது? (எ-று) *(4)*

1393.தப்பிதமொன் றின்றியது தானாக நிற்க உண்மை
செப்பியது மல்லால்என் சென்னியது தொட்டனையே.

(பொ-ரை) குற்ற மொன்றுமில்லாமல் தன்மயமாய் நிற்பதற்கு உண்மைப் பொருளை உபதேசஞ் செய்தது மல்லாமல் என் சென்னிமீதும் பரிசவேதை செய்தாயன்றோ? (எ-று) *(5)*

வேறு

1394. மாசான நெஞ்சன்இவன் வஞ்சனென்றோ வாய்திறந்து
பேசா மவுனம் பெருமான் படைத்துவே.

(பொ-ரை) சிவபெருமானே! நீ நான் குற்றம் பொருந்திய மனத்தை யுடைய வஞ்சகனுமாவேனென்று தானோ என்னிடத்திற் பேசாதபடி மௌனத்தைச் சாதித்தது? (எ-று) *(6)*

1395. கற்பதெல்லாங் கற்றேம்முக் கண்ணுடையாய் நின்பணியாய்
நிற்பதுகற் றன்றோ நிருவிகற்ப மாவதுவே.

(பொ-ரை) மூன்று கண்களையுடையவனே! கற்க வேண்டியவைகளை யெல்லாம் கற்று உன்னுடைய திருப்பணியாக நிற்பதைக் கற்றாலன்றோ நிருவிகற்ப ஞானத்தை அடைதலாகும்? (எ-று) *(7)*

1396. முன்னளவில் கன்மம் முயன்றான் இவனென்றோ
என்னளவில் எந்தாய் இரங்கா திருந்ததுவே.

(பொ-ரை) முன் சென்மத்தில் இவன் கர்மஞ் செய்தவனாவானென்று தானோ என்னிடத்தில் என் தந்தையாகிய நீ இரக்கம் வையாதிருந்தது? (எ-று) *(8)*

வேறு

1397. நெஞ்சகம்வே றாகி நினைக்கூட எண்ணுகின்ற
வஞ்சகனுக் கின்பம்எந்தாய் வாய்க்குமா றெவ்வாறே.

(பொ-ரை) என்னுடைய தந்தையே! மனம் வேறுபட்டு உன்னைக் கூடும்படி நினைக்கின்ற கபடனுக்கு சுகானந்தமானது எப்படி கிடைக்கும்? (எ-று) *(9)*

வேறு

1398. பள்ளங்கள் தோறும் பரந்தபுனல் போல்உலகில்
உள்ளம் பரந்தால் உடையாய்என் செய்வேனே.

(பொ-ரை) என்னை அடிமையாகவுடையவனே! பள்ளங்களி லெல்லாம் சலமானது பரவியிருப்பது போல உலக முழுமையும் நீ பரவியிருந்தால் நான் என்ன செய்ய வலிமையுடைய வனாவேன்? (எ-று) *(10)*

1399. முன்னினைக்கப் பின்மறைக்கும் மூடஇருள் ஆகெடுவேன்
என்னினைக்க என்மறக்க எந்தை பெருமானே.

(பொ-ரை) என்னுடைய தந்தையாகிய சிவபெருமானே! முன்னே நினைக்கப் பின்னே மறைத்துவிடுகின்ற அஞ்ஞானத்தால் அந்தோ! நான் கெடுவேன். ஆனால் அப்படி நினைப்பதும், மறப்பதும் என்னிடத்தில் நிகழ்வது எற்றுக்கோ? (எ-று) *(11)*

1400.வல்லாளா மோனாநின் வான்கருணை என்னிடத்தே
இல்லாதே போனால் நான் எவ்வண்ணம் உய்வேனே.

(பொ-ரை) சர்வ வல்லமையுடையானே! மௌனியே! உன்னுடைய உயர்ந்த கருணையானது என்னிடத்திலில்லா விட்டால் நான் உஜ்ஜீவிப்பது எப்படி? (எ-று) *(12)*

வேறு

1401.வாக்கும் மனமும் மவுனமுற எந்தைநின்னை
நோக்கும் மவுனமிந்த நூலறிவில் உண்டாமோ.

(பொ-ரை) வாக்கு, மனமும் மௌனத்தையடைத்து என் தந்தையாகிய உன்னை நோக்கிப் பார்க்கும் மௌனம் எனக்கு இந்த நூலறிவாலுண்டாகுமோ? உண்டாகாது? (எ-று)

ஆசாரியனுடைய அநுக்கிரகத்தால் உண்டாகும் என்பது கருத்து. *(13)*

1402.ஒன்றாய்ப் பலவாய் உலகமெங்குந் தானேயாய்
நின்றாய் ஐயா எனைநீ நீங்கற் கெளிதாமோ.

(பொ-ரை) ஐயனே! நீ ஒன்றாகவும் பலவாகவும் உலகமெல்லாம் தானேயாய் நின்றாய். ஆகையால் நி என்னை விட்டு நீங்குதற்கு எளிதாகுமோ? (எ-று) *(14)*

1403.ஆவித் துணையே அருமருந்தே என்றனைநீ
கூவி அழைத் தின்பங் கொடுத்தாற் குறைவாமோ.

(பொ-ரை) என் உயிர்க்குத் துணையே! அருமருந்தே! என் னை நீ கூப்பிட்டழைத்து இன்பங் கொடுப்பாயானால் உன்னுடைய பரிபூரணத்திற்குக் குறைவுண்டாமோ? (எ-று) *(15)*

1404.எத்தனையோ நின்விளையாட் டெந்தாய்கேள் இவ்வளவென்
றத்தனையும் என்னால் அறியுந் தரமாமோ.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! நீ செய்கின்ற அநேகமான திருவிளையாடல்களையெல்லாம் நான் அறியப் பாத்திரனாவேனோ? (எ-று) *(16)*

1405.தேடுவார் தேடுஞ் சிவனேயோ நின் திருத்தாள்
கூடுவான் பட்டதுயர் கூறற் கெளிதாமோ.

(பொ-ரை) தேடுவோர்களால் தேடப்படுகின்ற சிவ பெருமானே! நான் உன்னுடைய திருவடிகளை அடைவ தற்குப் பட்டபாட்டை சொல்லுதற் காகாதே? (எ-று) (17)

வேறு

1406.பற்றினதைப் பற்றும்எந்தாய் பற்றுவிட்டாற் கேவலத்தில்
உற்றுவிடும் நெஞ்சம்உனை ஒன்றிநிற்ப தெப்படியோ.

(பொ-ரை) என்னுடைய தந்தையே! என்னுடைய மனமானது பற்றினதையே பற்றாநிற்கும் அப்படி பற்றிய அந்தப் பற்றினை விட்டுவிடும் பட்சத்தில் கேவலத்திற் கேவலத்தைப் போயடையும். இப்படியிருப்பதால் உன்னைத் தொடர்ந்து உன்னுடைய திருவருளைப் பெறுவது எப்படி? (எ-று) (18)

1407.ஒப்பிலா ஒன்றேநின் உண்மையொன்றுங் காட்டாமல்
பொய்ப்புவியை மெய்போற் புதுக்கிவைத்த தென்னேயோ.

(பொ-ரை) ஒப்புச் சொல்லப்படாத தனி வஸ்துவே! உன்னுடைய உண்மையை எனக்கு வெளிப்படுத்தாமற் பொய்யாகிய உலகத்தை மெய்போற் செய்து வைத்து என்னை மயக்குவதற்குக் காரணம் என்னவோ? (எ-று) (19)

1408.காலால் வழிதடவுங் காலத்தே கண்முளைத்தாற்
போலே எனதறிவிற் போந்தறிவாய் நில்லாயோ.

(பொ-ரை) காலினால் வழியைத் தடவித் தடவிக் கண்டு பிடித்துப் போகுங் காலத்திற் கண்ணுண்டானாற் போல என்னுடைய அறிவின்கண் இப்பொழுதாயினுங் கலந்து திருவறிவாய் நிற்கமாட்டாயோ? (எ-று) (20)

1409.தன்னரசு நாடாஞ் சடசால பூமிமிசை
என்னரசே என்னை இறையாக நாட்டினையோ.

(பொ-ரை) என்னுடைய தலைவனே! தான் அரசு செலுத்தத்தக்க நாடாகிய இவ்வுலகத்தில் என்னையொரு தலைவனாக ஏற்படுத்தினாயோ? (எ-று) (21)

வேறு

1410.திங்களமு தாநின் திருவாக்கை விட்டரசே
பொங்கு விடமனைய பொய்ந்நூல் புலம்புவனோ.

(பொ-ரை) சந்திரனிடத்திலிருந்து உண்டாகின்ற அமிர்தம் போன்ற உன்னுடைய உபதேசத்தைவிட்டு மிகுந்த விஷத்துக்கு ஒப்பான பொய் சாத்திரத்தில் நுழைந்து புலம்புவேனோ? (எ-று) (22)

1411.உன்னஉன்ன என்னைஎடுத் துள்விழுங்கு நின்நிறைவை
இன்னமின்னங் காணாமல் எந்தாய் சுழல்வேனோ.

(பொ-ரை) நான் நினைக்குந்தோறும் என்னை எடுத்தெடுத்து விழுங்கு கின்ற உன்னுடைய வியாபகத்தை நான் இன்னமும் காணாதபடி சுழல்வேனோ? (எ-று) (23)

1412.ஆரா அமுதனைய ஆனந்த வாரிஎன்பால்
தாராமல் ஐயாநீ தள்ளிவிட வந்ததென்னோ.

(பொ-ரை) ஐயனே! என்றைக்குந் தெவிட்டாத அமிர்தம் போன்ற பேரின்ப சாகரத்தை எனக்குத் திருவருள் செய்யாமல் என்னைத் தள்ளிவிட வந்த காரணம் என்னவோ? அறியேன். (எ-று) (24)

நின்றநிலை

1413.நின்றநிலை யேநிலையா வைத்தா னந்த
நிலைதானே நிருவிகற்ப நிலையு மாகி
என்றுமழி யாதஇன்ப வெள்ளந் தேக்கி
இருக்கஎனைத் தொடர்ந்து தொடர்ந் திழுக்குமந்தோ.

(பொ-ரை) நான் நின்ற உண்மை நிலையே ஒரு நிலையாக என்னை வைத்து அதில் விளைந்த இன்பமே நிருவிகற்பச் சமாதியாய் என்றைக்கும் கெடுதலில்லாத பேரின்ப வெள்ளமானது தேக்கியிருக்கும்படி என்னைப் பலமுறையும் தொடர்ந்து இழுக்கின்றது. இதுமிகவும் ஆச்சரியம்! (எ-று) (1)

1414.இருக்காதி மறைமுடிவுஞ் சிவாகம மாதி
இதயமுங்கை காட்டெனவே இதயத் துள்ளே
ஒருக்காலே யுணர்ந்தவர்கட் கெக்கா லுந்தான்
ஒழியாத இன்பவெள்ளம் உலவா நிற்கும்.

(பொ-ரை) இருக்கு முதலிய வேதங்களின் முடிவும் சிவாகமங்களும் ஆகிய எல்லாம் வழியாகும் என்று மனத்தின் கண் செவ்வையா யுணர்ந்தவர்களுக்கு எந்தக் காலத்தும் ஒழியப் பெறாத சுகப்பிரவாகமானது ஓடிக் கொண்டே இருக்கும். (எ-று) (2)

1415. **கற்றதுங்கேட் டதுந்தானே ஏதுக் காகக்**
கடபடமென் றுருட்டுதற்கோ கல்லால் எம்மான்
குற்றமறக் கைகாட்டுங் கருத்தைக் கண்டு
குணங்குறியற் றின்பநிட்டை கூட அன்றோ.

(பொ-ரை) உலகத்தில் ஆன்மாக்கள் கற்றதாயும்! கேட்டதாகவுமுள்ள விஷயங்களெல்லாம் எதற்காகவென்றாலோ? கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளியுள்ள எமது சிவபெருமானானவன் சின்முத்திரோ தேசஞ் செய்த கைக்காட்டைக் கண்டு குணத்தையும் குறிப்பையும் ஒழித்துச் சுகநிட்டையைக் கூடுவதற் கன்றோ? ஆம் (எ-று) (3)

பாடுகின்ற பனுவல்

1416. **பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமே**
நாடுகின்ற ஞானமன்றில் ஆடுகின்ற அழகனே.

(பொ-ரை) யாப்பின்படியே அன்பினாற் பாடுகின்ற பாவலர்களால் தேடப்படுகின்ற செல்வமே! அன்பர்களால் விரும்பப்படுகின்ற ஞானாகாயத்தில் நடிக்கின்ற சிவபெருமானே! (எ-று)

நீ என்னைக் காப்பாற்றல் வேண்டும் என்பது குறிப்பு. (1)

1417. **அத்தனென்ற நின்னையே பத்திசெய்து பனுவலால்**
பித்தனின்று பேசவே வைத்ததென்ன வாரமே.

(பொ-ரை) தலைவனாவான் நீயேயென்று சொல்லப் படுகின்ற உன்னை பித்தனான நான் பக்தி செய்து பாமாலை மூலமாய்ப் பேசும்படியாக எனக்கொரு அன்பைக் கொடுத்தமைக்குக் காரணம் என்னவோ? தெரியவில்லை. (எ-று) (2)

1418. **சிந்தையன்பு சேரவே நைந்துநின்னை நாடினேன்**
வந்துவந்து ளின்பமே தந்திரங்குந் தாணுவே.

(பொ-ரை) என் மனத்தின்கண் ஒருவகையான அன்பானது வந்து அடைய அதனால் நான் மனமிளகி

உன்னை நாடினேன். ஆகையால் தாணுவே! நீயெழுந்தருளி வந்து என் மனத்திற்கொரு இன்பத்தைக் கொடுத்து என்மீது இரக்கம் வைக்க வேண்டும். (எ-று) (3)

1419.அண்டரண்டம் யாவுநீ கொண்டுநின்ற கோலமே
தொண்டர்கண்டு சொரிகணீர் கண்டநெஞ்சு கரையுமே.

(பொ-ரை) அண்டபகிரண்டம் எல்லாம் நீ போய் எழுந்தருளி இருக்கும் கோலத்தை அடியார்களெல்லாம் தெரிசித்து அதனாற் சொரிகின்ற ஆனந்த பாஷ்பத்தைக் கண்டு என்னுடைய மனமானது இளகா நிற்கும். (எ-று) (4)

1420. அன்னைபோல அருள்மிகுத்து மன்னுஞான வரதனே
என்னையே எனக்களித்த நின்னையானும் நினைவனே.

(பொ-ரை) தாயைப் போற் கருணைமிகுந்து இருக்கின்ற ஞானவரத்தை அடியார்களுக்குக் கொடுப்பவனே! என்னையே எனக்குக் கொடுத்ததாக உபதேசித்து அதை விளக்கிக் காட்டியருளிய உன்னையே நானும் சதா சிந்திப்பேன். (எ-று)

உன்னைச் சிந்திப்பதைவிட்டு வேறோர் தெய்வத்தைச் சிந்தனை செய்யேன் என்பது கருத்து. (5)

ஆனந்தக் களிப்பு

அந்தாதித் தொடை

சங்கர சங்கர சம்பு-சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு.

1421.ஆதி யநாதியு மாகி - எனக்
கானந்த மாயறி வாய்நின் றிலங்குஞ்
சோதி மவுனியாய்த் தோன்றி - அவன்
சொல்லாத வார்த்தையைச் சொன்னாண்டி தோழி
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) ஓ சகியே! தானே முதல்வனாகியும் தனக்கு மேல் ஒரு முதல்வனை வேண்டாமல் அனாதி யானவனாகியும் (ஏழையாகிய எனக்கு) இன்ப மாகியும் என்னறிவுக்கறிவாகியு மிருக்கின்ற தேஜோ மயனானவன் மேலான சிறியனாய் வெளிவந்த அவனே வாயால் சொல்லுதற்குக் கூடாத ஒரு மொழியாகிய உண்மை நிலையை எனக்கு உபதேசித்தாண்டி. (எ-று) (1)

1422. சொன்னசொல் லேதென்று சொல்வேன் - என்னைச்
சூதாய்த் தனிக்கவே சும்மா இருத்தி
முன்னிலை ஏதுமில்லாதே - சுக
முற்றச்செய் தேளனைப் பற்றிக்கொண்டாண்டி
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) என்னுடைய ஆசிரியனானவன் எனக்கு உபதேசித்தருளிய மொழியின் பெருமை நான் என்னவென்று எடுத்துச் சொல்லுவேன் அவன் என்னைச் சூது மார்க்கத்தால் தனியாக வைத்து எனக்கு முன்னிலையாக ஒரு பொருளையும் வைக்காதபடி நல்ல இன்பத்தைக் கொடுத்து என்னைத் தன் வயப்படுத்திக் கொண்டானேடி. (எ-று) (2)

1423. பற்றிய பற்றற உள்ளே - தன்னைப்
பற்றச் சொன்னான் பற்றிப் பார்த்த இடத்தே
பெற்றதை ஏதென்று சொல்வேன் - சற்றும்
பேசாத காரியம் பேசினான் தோழி
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) பிடித்த பிடிப்பானது உறுதியைக் கொண்டு தன்னைப் பிடிக்கச் சொன்னான். அப்படியே பிடித்துப் பார்த்தபோது நான் பெற்றதை என்னவென்று எடுத்துச் சொல்லுவேன். கொஞ்சமேனும் வேறொருவரிடத்திற் பேசாத மார்க்கத்தை எனக்கு ஆங்கு உபதேசித்தானேடி. (எ-று) (3)

1424. பேசா இடும்பைகள் பேசிச் - சுத்தப்
பேயங்க மாகிப் பிதற்றித் திரிந்தேன்
ஆசா பிசாசைத் துரத்தி - ஐயன்
அடியிணைக் கீழே அடக்கிக் கொண்டாண்டி
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) நான் அந்த அவசரத்தில் யாவராலும் பேசப்படாத இடும்பைகளை யெல்லாம் பேசிப் பிதற்றித் திரிந்தேன். இதைக் கண்ட எம்பெருமானானவன் அப்படியே அதற்குக் காரணமாயிருந்த ஆசையாகிய பிசாசைத் துரத்தி விட்டு என்னைத் தன்னுடைய உபய திருவடிகளில் இருக்கச் செய்து கொண்டானேடி. (எ-று) (4)

1425. அடக்கிப் புலனைப் பிரித்தே - அவ
னாகிய மேனியில் அன்பை வளர்த்தேன்

மடக்கிக்கொண் டான் என்னைத்தன்னுள் - சற்றும்
வாய்பேசா வண்ணம் மரபுஞ்செய் தாண்டி
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) ஐம்புலன்களுடைய சேட்டைகளை நீக்கி அவற்றை வெவ்வேறாகக் களைந்து அவனுடைய திருவருட் சொரூபத்தின்கண் என்னுடைய அவாவை விரத்தி செய்தேன். அங்ஙனஞ் செய்ததாய் நோக்கி எம்மிறைவன் என்னைக் கைவசப்படுத்திக் கொண்டு வாய் பேசாத மார்க்கத்தையும் செய்து விட்டானேடி. (எ-று) *(5)*

1426. மரபைக் கெடுத்தனன் கெட்டேன் - இத்தை
வாய்விட்டுச் சொல்லிடின் வாழ்வெனக் கில்லை
கரவு புருஷனுமல்லன் - என்னைக்
காக்குந் தலைமைக் கடவுள் காண்மின்னே
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) அவனோ என்னுடைய சாதி ஆசாரத்தைக் கொடுத்து என்னைத் தன் கைவசப்படுத்திக் கொண்டதினால் நானும் கெட்டேன். ஆகையால் அவன் செய்த சூதையும் நான் கெட்டமார்க்கத்தையும் அயலாருக்குச் சொன்னாலோ எனக்கு வாழ்வில்லையாய்விடும். ஆனாலும் அவன் யாரென்று கேட்பாயானாலோ? கள்ளப் புருஷனல்லன். என்னை அடிமை கொள்ள இருக்கின்றவனான முதன்மைக் கடவுளென்றறிந்து கொள்ளேடி. (எ-று) *(6)*

1427. கடலின் மடைவிண்ட தென்ன-இரு
கண்களு மானந்தக் கண்ணீர் சொரிய
உடலும் புளகித மாக-என
துள்ள முருக வுபாயஞ் செய்தாண்டி
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) சமுத்திரமானது தனக்குறிய அணையை விட்டு வெளிப் பட்டாற்போல என்னுடைய இரண்டு கண்களும் ஆனந்த பாஷ்பத்தைச் சிந்தவும் தேகமானது புளகாங்கிதத்தை அடையவும் மனமானது உருகவும் ஒருவகையான உபாயத்தைச் செய்தானேடி. (எ-று) *(7)*

1428. உள்ளது மில்லது மாய்முன்-உற்ற
உணர்வது வாயுன் னுளங்கண்ட தெல்லாம்
தள்ளெனச் சொல்லியென் னையன்-என்னைத்
தானாக்கிக் கொண்ட சமர்த்தைப்பார் தோழி
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) உள்ளதும் இல்லதுமாய், உனக்குப் பூர்வ உணர்ச்சியுமாய் உன்னுடைய மனத்திற் காணப்பட்ட பொருள்களையெல்லாம் தள்ளிவிடுவாய் என்று எனக்குச் சொல்லி என்னுடைய தலைவனானவன் என்னை அவனாகச் செய்து கொண்ட சாமர்த்தியத்தைப் பாரேடி. (எ-று) *(8)*

1429.பாராதி பூதநீ யல்லை-உன்னிப்
பாரிந் திரியங் கரணநீ யல்லை
யாரா யுணர்வுநீ யென்றான்-ஐயன்
அன்பா யுரைத்தசொல் லானந்தந் தோழி
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) இன்று அவன் எனக்குப் பிருதிவி முதலிய பூதங்கள் நீ யல்லை நன்றாய்ப் பார். பஞ்சேந்திரியங்களும் அந்தக்கரணங்களும் நீயல்லை. ஆனாற் சர்வபொருள்களையும் ஆராய்ந்தறிகின்ற அறிவே நீயாவாய் என்றான் ஆ! ஆ! என்னுடைய தலைவனானவன் எனக்கு உபதேசித்த சொல்லானது எனக்கு மிகவும் ஆனந்தத்தை விளைவிக்கின்ற தேடி. (எ-று) *(9)*

1430.அன்பருக் கன்பான மெய்யன்-ஐய
னானந்த மோனனருட் குருநாதன்
தன்பாதஞ் சென்னியில் வைத்தான்-என்னைத்
தானறிந் தேன்மனந் தானிறந் தேனே
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) அடியார்களிடத்தில் விருப்பம் வைப்பவனான உண்மைக் கடவுள் மௌனானந்தன் திருவருட் கருணையை யுடைய ஞானாசிரியன் ஆகிய அவன் எனக்குத் திருவடி தீட்சை செய்தான். அவன் செய்த தீட்சையால் நான் என்னை உணர்ந்தேன். உணர்ந்தவுடனே மனமிறந்தேனடி இது வென்ன அதிசயமோ அறியேன். (எ-று) *(10)*

1431.இறப்பும் பிறப்பும் பொருந்த-எனக்
கெவ்வணம் வந்ததென் றெண்ணியான் பார்க்கில்
மறப்பு நினைப்புமாய் நின்ற-வஞ்ச
மாயா மனத்தால் வளர்ந்தது தோழி
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) எனக்கு இறப்புப்பிறப்புக்கள் வந்தவிதம் எப்படி யென்று நான் எண்ணிப் பார்த்தால் மறப்பும்

நினைப்புமாய் இருந்த வஞ்சகத்தையுடைய மாயமனத்தால் வந்தனவேடி. (எ-று) *(11)*

1432.மனதேகல் லாலெனக் கன்றோ-தெய்வ
மௌன குருவாகி வந்துகை காட்டி
எனதாம் பணியற மாற்றி அவன்
இன்னருள் வெள்ளத் திருத்திவைத் தாண்டி

-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) ஒ மனதே! எனக்குக் கல்லால மரத்தின் கீழ் மௌனாசிரியனாய் எழுந்தருளி வந்து சின்முத்திரோபதேசஞ் செய்து என்னுடைய காரியங்களை யெல்லாம் மாற்றி அவனுடைய திருவருள் வெள்ளத்தில் மூழ் விருக்கச் செய்தானேடி. (எ-று)

1433.அருளாள் எவையும்பா ரென்றான்-அத்தை
அறியாதே சுட்டியென் னறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லாற்-கண்ட
என்னையுங் கண்டில னென்னேடி தோழி
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) என்னுடைய ஞானாசிரியனானவன் நீயாவற்றையும் அருள்நோக்கத்தாற் பாரென்று சொன்னான். நானோ அதைவிட்டு என்னறி வாற் பார்த்தேன். அப்பொழுது இருளான பொருள்கள் காணப்பட்டன. ஆனால் என்னை நான் கண்டேனில்லை. இதுவென்னடி? (எ-று) *(13)*

1434.என்னையுந் தன்னையும் வேறா-உள்ளத்
தெண்ணாத வண்ண மிரண்டற நிற்கச்
சொன்னது மோஒரு சொல்லே-அந்தச்
சொல்லால் விளைந்த சுகத்தையென் சொல்வேன்
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) என்னையும் (இறைவனான) தன்னையும் வேறாக நினையாமல் இரண்டற்ற அத்துவித மார்க்கமாக விருக்கச் சொன்னதுவோ அவன் உபதேசித்த ஒரு சொல்லேயாகும். ஆனால் அதனால் உண்டான சுகத்தை நான் என்னவென்று சொல்லுவேனேடி? (எ-று) *(14)*

1435.விளையுஞ் சிவானந்த பூமி-அந்த
வெட்ட வெளிநண்ணித் துட்டவிருளால்

களையைக் களைந்துபின் பார்த்தேன்-ஐயன்
களையன்றி வேறொன்றுங் கண்டிலன் தோழி
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) நல்லஞானப் பயிர் விளையத்தக்க சிவானந்த மென்னும் பூமியினிடத்தில் வெட்ட வெளியாகிய பொருளைச் சேர்ந்து துட்டத் தன்மையையுடைய அஞ்ஞானமாகியகளைகளைப் பிடுங்கியெறிந்து பின்னர் அந்த நிலத்தைப் பார்த்தேன். அப்பொழுது அங்கே எம்முடைய இறைவனாகிய களை இருந்ததே யல்லாமல் வேறொன்றைக் கண்டேனில்லையேடி. (15)

1436.கண்டார் நகைப்புயிர் வாழ்க்கை -இரு
கண்காண நீங்கவுங் கண்டோந் துயில்தான்
கொண்டார்போற் போனாலும் போகும்- இதிற்
குணமேது நலமேது கூறாய்நீதோழி
-சங்கர சங்கர சம்பு.

(பொ-ரை) கண்டவர்களால் நகைக்கப்படும் வாழ்வு இஃது இருப்பது போற் காணப்பட்டு மறையவும் கண்டோம். அன்றி இது தூக்கத்தைப்போல் வீணாகப் போனாலும் போகும். ஆகையால் இதிற் குணமேது? நலம் ஏது? நீ சொல்லாயேடி. (எ-று) (16)

1437.நமமேதும் அறியாத வென்னைச் -சுத்த
நாதாந்த மோனமாம் நாட்டந்தந் தேசஞ்
சலமேது மில்லாம லெல்லாம்- வல்லான்
தாளாலென் றலைமீது தாக்கினான் தோழி
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) யாதொரு சுகத்தையும் அறியாத என்னைப் பரிசுத்தமான நாதாந்த மென்னும் மௌன தேசத்தில் இருக்கச் செய்து யாதொரு சலனமுமில்லாதபடி எல்லாம் வல்ல கடவுள் தன்னுடைய திருவடிகளைக் கொண்டு எனக்குத் திருவடி தீட்சை செய்தானேடி. (எ-று) (17)

1438.தாக்குநல் லானந்த சோதி -அணு
தன்னிற் சிறிய வெனைத்தன் னருளாற்
போக்கு வரவற் றிருக்குஞ்--சுத்த
பூரண மாக்கினான் புதுமைகாண் மின்னே
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) என்னிடத்தில் வந்து தாக்குகின்ற ஆனந்தத்தையுடைய தேஜோமயமானவன் அணுவுக்கும் சிறியவனான என்னைத் தன்னுடைய திருவருளாற் சுத்தபரிபூரணனாக்கினானே? இஃது என்ன ஆச்சரியமேடி. (18)

1439.ஆக்கி அளித்துத் துடைக்குந்- தொழில்
அத்தனை வைத்துமெள்ளத் தனையேனுந்
தாக்கற நிற்குஞ் சமர்த்தன்- உள்ள
சாட்சியைச் சிந்திக்கத் தக்கது தோழி
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) சிருஷ்டி, திதி, சம்ஹாரங்களாகிய யாவற்றையுஞ் செய்தும் அவற்றில் எள்ளளவானாலும் சம்பந்தப்படாமல் நிற்கின்ற சாமர்த்தியனுடைய மனசாட்சியானது நாமெல்லாம் சிந்தனை செய்வதற்குரியதேடி. (எ-று) (19)

1440.சிந்தை பிறந்தது மாங்கே-அந்தச்
சிந்தை யிறந்து தெளிந்தது மாங்கே
எந்த நிலைகளு மாங்கே கண்ட
யான்றா னிரண்டற் றிருந்தது மாங்கே
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) என் மனமானது பிறந்தது அந்த விடமேயாகும். அந்த மனமானது மீண்டும் இறந்து தேர்ச்சியடைந்ததும் அந்த விடமேயாகும். அன்றி வேறெந்த நிலைகளுக்குமிடம் அதுவேயாகும். நான்போய் இரண்டற்றிருந்ததும் அந்த விடமேயாகும். (எ-று) (20)

1441.ஆங்கென்று மீங்கென்று முண்டோ- சச்சி
தானந்த சோதி யகண்ட வடிவாய்
ஓங்கி நிறைந்தது கண்டாற்- பின்னர்
ஒன்றென் றிரண்டென் றுரைத்திட லாமோ
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) அந்த விடத்திலிருப்பதென்றும், இந்த விடத்திலிருப்பதென்று முண்டோ இல்லை. ஆகையாற் சச்சிதானந்த சோதியானது அகண்ட வடிவோடு எங்குநிறைந்த பரம்பொருளைக் கண்டாற் பிறகு ஒன்றென்றும் இரண்டென்றும் உரைக்கலாமா? (எ-று) (21)

1442.என்றும் அழியு மிக்காயம்- இத்தை
எதுக்கு மெய்யென் றிருந்தீருலகீர்
ஒன்று மறியாத நீரோ- யமன்
ஓலைவந் தாற்சொல்ல வுத்தர முண்டோ
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) ஒ உலகத்தவர்களே! இந்தத் தேகமானது எக்காலத்தும் அழியும். ஆகையால் இதை நீங்கள் எதுக்கு மெய்யென்றிருந்தீர்கள். ஆகையால் நீங்கள் ஒன்றுமறியாதவர்களானீர். அப்படிப்பட்ட நீங்கள் யமனுடைய ஓலைவந்தால் என்ன சொல்லுவீர்? (எ-று) *(22)*

1443.உண்டோ நமைப்போல வஞ்சர்- மலம்
ஊறித்ததும்பு முடலைமெய் யென்று
கொண்டே பிழைப் பைதிங் கையோ- அருட்
கோலத்தை மெய்யென்று கொள்ளவேண் டாவோ.
-சங்கர சங்கர சம்பு.

(பொ-ரை) அந்தோ! நம்மைப் போல் வஞ்சகர்கள் இருக்கின்றார்களா? ஏனென்றால் மலமானது ஊறித் ததும்பிக் கொண்டிருக்கும் இந்த உடம்பையே மெய்யென்று நம்பிப் பிழைக்கின்றோமாகையாற் சிவபெருமானுடைய திருவருட் கோலத்தை மெய்யென்று கொள்ள வேண்டுமே? அப்படிக் கொள்வதை விட்டோமல்லவா? ஆகையால் நம்மைப் போலும் பித்தர் களில்லை. (எ-று) *(23)*

1444.வேண்டாம் விருப்பும் வெறுப்பும்- அந்த
வில்லங்கத் தாலே விளையுஞ் சன்னம்
ஆண்டா னுரைத்த படியே- சற்று
மசையா திருந்துகொள் ளறிவாகி நெஞ்சே
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) மனமே! விருப்பு வெறுப்புக்களாகிய இரண்டும் வேண்டாம். அதனாற் சென்மம் உண்டாகுமென்று என்னுடைய ஞானாசிரியன் உரைத்தபடியே கொஞ்சமும் அசையாமல் அறிவின் மயமாய் நிற்றல் வேண்டும். (எ-று) *(24)*

1445.அறிவாரும் இல்லையோ வையோ- என்னை
யாரென் றறியாத வங்கதே சத்தில்
வறிதே காமத்தீவிற்சிக்கி- உள்ள
வான்பொருட் டோற்கவோ வந்தேனான் றோழி
-சங்கர சங்கர சம்பு.

(பொ-ரை) அந்தோ! இங்கே என்னை அறிபவர் ஒருவரு மில்லையா? என்னை இன்னாரென்றறியாத அங்கதேசத்தில் காமத் தீவினிடத்திற் சிக்கி என்னிடத்திலிருந்த உயர்ந்த பொருள்களையெல்லாம் தோற்கும்படியாகவோ நான் இவ்விடம் வந்தது? (எ-று) *(25)*

1446.வந்த வரவை மறந்து- மிக்க
மாதர் பொன்பூமி மயக்கத்தி லாழும்
இந்தம யக்கை யறுக்க- எனக்
கெந்தை மெய்ஞ்ஞான வெழில்வாள் கொடுத்தான்
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) நான் வந்தவரவை மறந்து பெண், பொன், மண் இதே மயக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றேன். ஆகையால் அவைகளை யறுக்கும்படி என் தந்தையாகிய சிவபெருமான் எனக்கொரு ஞானவாளைத் திருவருள் செய்தான்? (எ-று) *(26)*

1447.வாளாருங் கண்ணியர் மோகம்- யம
வாதைக் கனலை வளர்க்குமெய் யென்றே
வேளா னவனுமெய் விட்டான்-என்னின்
மிக்கோர் துறக்கை விதியன்றோ தோழி
-சங்கர சங்கர சம்பு.

(பொ-ரை) பெண்கள் மோகமானது யமவாதைக்குரிய அக்கினியை வளர்க்கும் குணமுடையதாம். இது மெய் யென்றே மன்மதனும் தேக மில்லாதவனாயிருக்கின்றா னென்றாற் பெரியோர்களெல்லாம் தேகத்தை விட்டுவிடுவது நியாயமான்றோ? (எ-று) *(27)*

1448.விதிக்கும் பிரபஞ்ச மெல்லாம்- சுத்த
வெயின்மஞ்ச ளென்னவே வேதாக மங்கள்
மதிக்கு மதனை மதியார்- அவர்
மார்க்கந்துன் மார்க்கஞ் சன்மார்க்கமோ மானே
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) சிருட்டிக்கப்பட்ட இந்த இருவகைப் பிரபஞ்சங்களும் வெயிலைக் கண்ட மஞ்சள்போல் இல்லாமையாய் விடுமென்று சொல்லுகின்ற வேதாகமங்களின் கருத்தை உணராதவர்களுடைய மார்க்கம் சன்மார்க்க மன்று துன்மார்க்கமே? (எ-று) *(28)*

1449.துன்மார்க்க மாதர் மயக்கம்- மனத்
தூயர்க்குப் பற்றாது சொன்னேன் சனகன்
தன்மார்க்க நீதிதிட் டாந்தம்-அவன்
றானந்த மான சதானந்த னன்றோ
-சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) மிக்க கெடுதியைப் பயக்கத் தக்க பெண்கள் மாயையானது மனப்பரிசுத்தத்தை யடைந்த பெரியோர்களுக்குச் சம்மதியாது இதற்குத் தனக்குத்தானே யந்தமாய் விளங்கிய சதானந்தனாகிய சனகனே திருஷ்டாந்தமாவான். (எ-று) *(29)*

1450.அன்றென்று மாமென்று முண்டோ-உனக்
கானந்தம் வேண்டி னறிவாகிச் சற்றே
நின்றாற் றெரியு மெனவே-மறை
நீதியெம் மாதி நிகழ்த்தினான் றோழி
-சங்கர சங்கர சம்பு

சங்கர சங்கர சம்பு -சிவ சங்கர சங்கர சங்கர சம்பு

(பொ-ரை) அன்று என்றும் ஆம் என்றும் இல்லை. ஆகையால் நீ அந்த ஆனந்தத்தை வேண்டுவாயானால் கொஞ்சநேரம் அறிவின் மயமாய் நின்றால் அஃது உனக்குத் தெரியவருமென்று எம்முடைய தலைவன் உபதேசித்தானேடி. (எ-று) *(30)*

அகவல்

நிலைமண்டில ஆசிரியப்பா

1451. திருவருள் ஞானஞ் சிறந்தருள் கொழிக்கும்
குருவடி வான குறைவிலா நிறைவே
நின்ற வொன்றே நின்மல வடிவே
குன்றாப் பொருளே குணப்பெருங் கடலே
ஆதியு மந்தமு மானந்த மயமாஞ்

சோதியே சத்தே தொலைவிலா முதலே
சீர்மலி தெய்வத் திருவரு ளதனாற்
பார்முத லண்டப் பரப்பெலாம் நிறுவி
அண்டசம் முதலா மெண்டரு நால்வகை
ஏழு பிறவியிற் றாழா தோங்கும்

அனந்த யோனியி னினம்பெற மல்க
அணுமுத லகல மான வாக்கையுங்

கணமுத லளவில் கற்ப காலமுங்
கன்மப் பகுதித் தொன்மைக் கீடா
இமைப்பொழு தேனுந் தமக்கென வறிவிலா
ஏழை யுயிர்த்திரள் வாழ்வமைத் தனை
எவ்வுட லெடுத்தா ரவ்வுடல் வாழ்க்கை
இன்ப மெனவே துன்ப மிலையெனப்
பிரியா வண்ண முரிமையின் வளர்க்க
ஆதர வாகக் காதலும் அமைத்திட்
டூக மின்றியே தேகம் நானென
அறிவு போலறி யாமை யியக்கிக்
காலமுங் கன்மமுங் கட்டுங் காட்டியே
மேலு நரகமு மேதகு சுவர்க்கமும்
மாலற வகுத்தனை யேலும் வண்ணம்
அமையாக் காதலிற் சமய கோடி
அறம்பொரு ளாதி திறம்படு நிலையில்
குருவா யுணர்த்தி யொருவர்போ லனைவரும்
தத்தம் நிலையே முத்தி முடிவென
வாததர்க்கமும் போத நூல்களும்
நிறைவிற் காட்டியே குறைவின்றி வயங்க
அங்கங்கு நின்றனை யெங்கு மாகிச்
சமயா தீதத் தன்மை யாகி
இமையோர் முதலிய யாவரும் முனிவருந்
தம்மைக் கொடுத்திட் டெம்மை யாளென
ஏசற் றிருக்க மாசற்ற ஞான
நலமுங் காட்டினை ஞானமிலேற்கு
நிலையுங் காட்டுத னின்னருள் கடனே

(பொ-ரை) அழகிய திருவருள் ஞானமானது சிறந்து சிவசக்தியருளைச் சேர்ப்பிக்கின்ற ஆசிரிய ரூபமான சர்வ பரிபூரணமே! ஒன்றாய் நின்ற ஒப்பற்ற பொருளே! பரிசுத்தவடிவமே! குறையாத வஸ்துவே! குணமென்னுங் கடலே! ஆதியும், அந்தமும், ஆனந்தமயமுமான தேஜோமயமே! ஞானமே! எக் காலத்தும் அழியாத முதல்வனே! சிறப்புப்பொருந்திய தெய்வத் தன்மை வாய்ந்த திருவருளினால் உலகமுதற் சர்வ அண்டங்களையும் நிறுத்தி நால்வகையோனி, எழுவகைப்பிறவிகளிற் குறையாமல் விர்த்தியாகின்ற அனேக யோனிகளது இனத்தைப்

பெறும்படியிருந்து அணுரூபமுதல் அசல்ரூபம் வரைக்குமுள்ள தேகத்தையும் க்ஷணமுதலாகச் சொல்லப்பட்ட அநேக கற்ப காலங்களையும், கர்மப்பாகு பாட்டிற் கீடாக க்ஷணநேரமானாலும் தமக்கென்று சுதந்தர அறிவில்லாத அடியேங்களுடைய உயிர்க்கூட்டங்களை வாழும்படி வைத்தனை எந்த உடம்பை எடுத்தபோதிலும் அந்த உடம்பிலிருந்தும் வாழும் வாழ்க்கைக்குத் துன்பமில்லை. இன்பமே உண்டென்று எங்களைப் பிரியாவண்ணம் உரிமையோடு காப்பாற்றி வளர்க்க ஆசையோடு விருப்பம் வைத்து யுத்தியில்லாமல் தேகமே நானென்று சொல்லுகின்ற அஞ்ஞானத்தைக் கொடுத்துக் காலம், கர்மம், கட்டு இவைகளைக் காட்டி மேலும் நரக சொர்க்கங்களையும் எங்களுக்குப் பொருந்த வகுத்தாய். சமயவாதிகட்கெல்லாம் நீங்காத விருப்பத்தோடு அறம் பொருளாதி விஷயங்களைக் குருவாய் வந்து உணர்த்தி ஒருவரைப்போல் அனைவர்க்கும் தங்கள் தங்களது நிலையே முத்திமுடிவென்று சொல்லும் வாத, தர்க்க,போத நூல்களைக் காட்டி எங்கும் குறைவில்லாமல் விளங்க அங்கங்குமிருந்தனை சர்வவிடத்திலும் உள்ளவனாகிச் சமயங்கடந்தவனாகி, தேவர்களும் முனிவர்களுமாகிய யாவரும் தங்களைக் கொடுத்து எங்களை யாண்டருளவேண்டுமென்று ஏசற்றிருக்க, அவர்களுக்குக் குற்றமற்ற ஞான நன்மையையும் காட்டியருளினால், ஆகையால் அப்படிப்பட்ட ஞானமில்லாத எனக்கும் உண்மை நிலையைக் காட்டுதல் உன்னுடைய திருவருளுக்குக் கடைமையாகும். (எ-று) *(1)*

வண்ணம்

1452. அருவென் பனவுமன்றி உருவென் பனவுமன்றி
அகமும் புறமுமன்றி முறைபிற ழாது
குறியுங் குணமுமன்றி நிறைவுங் குறைவுமன்றி
மறையொன் றெனவிளம்ப விமலம தாகி
அசலம் பெறவுயர்ந்து விபுலம் பெறவளர்ந்து
சபலஞ் சபலமென்றுள் அறிவினர் காண
ஞானவெளியிடை மேவுமுயிராய்.

(பொ-ரை) அருவம், உருவம், அகம், புறம், குறி, குணம், நிறைவு, குறைவு ஆகிய எவையும் அல்லாமலும், வேதம் ஒன்றே யென்று சொல்லும் நிர்மலமாகியும், அசலம்

போலுயர்ந்தும், விபுலம் போல் வளர்ந்தும் சபலம் சபலமென்று ஞானிகளெல்லாம் காணும்படி ஞானாகாயத்திலிருக்கும் உயிராகியும். (எ-று) *(1)*

1453.அனலொன் றிடவெரிந்து புகைமண் டிடுவதன்று
புனலான் றிடவமிழ்ந்து மடிவில தூதை
சருவும் பொழுதுயர்ந்து சலனம் படுவதன்று
சமர்கொண் டழிவதன்றோ ரியல்பின தாகும்
அவனென் பதுவுமன்றி அவளென் பதுவுமன்றி
அதுவேன் பதுவுமன்றி யெழில்கொ டுலாவும்
ஆருநிலை யறியாத படியே.

(பொ-ரை) அக்கினியிற் பட்டெரிந்து புகைவதன்று, சலத்திலமிழ்ந்து சாவதன்று, காற்றடிக்கும் பொழுது உயர்ந்து அசைவதன்று, யுத்தஞ் செய்வதினால் அழிவதன்று, எப்பொழுதும் ஒரே தன்மையையுடையதாகும். அன்றி அவன், அவள், அது என்பனவுமல்லாமல் எவர்களுந் தன்னுடைய உண்மையை அறிந்து கொள்ளாவண்ணம் அழகோடு உலவா நிற்கும். (எ-று) *(2)*

1454.இருளென் பதுவுமன்றி யொளியென் பதுவுமன்றி
எவையுந் தனுளடங்க வொருமுத லாகும்
உளதென் பதுவுமன்றி யிலதென் பதுவுமன்றி
உலகந் தொழவிருந்த வயன்முத லோர்கள்
எவருங் கலைகொண்டு சமயங் களில்விழுந்து
சுழலும் பொழுதிரங்கி யருள்செயு மாறு
கூறரியசக மாயையறவே

(பொ-ரை) இருள், ஒளியாகிய எவையுமில்லாதபடி எவையும் தனக்குள் அடங்கி யிருக்கத் தானொரு முதற்பொருளாயிருக்கும் உள்ளது இல்லது என்பனவுமல்லாமல் உலகத்தார்கள் தொழும் படியிருந்த பிரமன் முதலிய யாவரும் பலபல சமயமார்க்கங்களில் விழுந்து வருந்தும்போது அவர்களுக் கிரங்கித் திருவருள் செய்யும் பொருட்டுச் சொல்லுதற்கரிய சகமாயையானது நீங்க. (எ-று) *(3)*

1455.எனதென் பதையிகழ்ந்த வறிவின் றிரளினின்றும்
அறிவொன் றெனவிளங்கும் முபயம தாக
அறியுந் தரமுமன்று பிறியுந் தரமுமன்று
அசரஞ் சரமிரண்டி னொருபடி யாகி

எதுசந் ததநிறைந்த தெதுசிந் தனையிறந்த
தெதுமங் களசுபங்கொள் சுகவாடி வாகும்
யாதுபர மதைநாடி யறிநீ

(பொ-ரை) அகங்காரத்தை நீக்கிய உயிர்க் கூட்டங்களிலிருந்து அறிவு ஒன்றேயென்று விளங்கும் இரண்டாக உணரும் தரமுடையதன்று. பிரியுந்தரமுடையதுமன்று. அசரம், சரம் என்றும் இரண்டினிடத்தும் ஒரே தன்மையயுடையதாகிச் சதாகாலமும் நிறைந்திருப்பது எது? மனமிறந்தது எது? மங்களகுணத்தைக் கொண்டிருப்பது எது? அதுவே பரமாகும். ஆகையால் நீ அதை விரும்பியறிவாயாக. (எ-று) (4)

1456.பருவங் குலவுகின்ற மடமங்கையர் தொடங்கு
கபடந் தனில்விழுந்து கெடுநினை வாகி
வலையின் புடைமறிந்த மறியென் றவசமுண்டு
வசனந் திரமுமின்றி யவரித மூறல்
பருகுந் தொழிலிணங்கி யிரவும் பகலு மின்சொல்
பகரும் படிதுணிந்து குழலழ காக
மாலை வகை பலசூடி யுடனே

(பொ-ரை) நல்ல பருவத்தை யடைந்துள்ள பெண்களது மோகத்தில் விழுந்து கெடு நினைவாகி, வலையிற் சிக்கிய மானைப்போல வருந்தி வார்த்தையில் திடமில்லாமல் அப்பெண்களுடைய இதழமிர்தத்தைப் பருகுகின்ற தொழிலிற் சம்மதித்து, இரவும் பகலும் நல்ல வார்த்தைகளைப் பேசும்படி துணிந்து அவர்களுடைய கூந்தலின் பொருட்டுப் பலவகையான மாலைகளைச் சூடி உடனே. (எ-று) (5)

1457.பதுமந் தனை யிசைந்த முலையென் றதையுகந்து
வரிவண் டெனவுழன்று கலிலெனவாடுஞ்
சிறுகிண் கிணிசிலம்பு புனைதண் டைகண் முழங்கும்
ஒலிநன் றெனமகிழ்ந்து செவிகொள நாசி
பசுமஞ் சளின்வியந்த மணமுந் திடமுகந்து
பவமிஞ் சிடவிறைஞ்சி வரிசையி னூடு
காலின்மிசை முடிசூடி மயலாய்

(பொ-ரை) தாமரைப் பொகுட்டைப் போன்ற முலையென்று அதை விரும்பி வண்டைப் போல் திரிந்தும், கலிலென்று ஆடுகின்ற சிறிய கிண்கிணி சிலம்பு, தண்டை ஆகிய இவைகள் சந்திக்கும் ஒலியோ நன்றென்று மகிழ்ந்து

காதிற் கொண்டும், நாசியினால் அவர்கள் பூசிக் கொண்டிருக்கும் பசு மஞ்சளின் மணத்தை அறிந்து அதை விரும்பியும் பாவமானது அதிகப்பட வணங்கி முறைமைப்படி அவர்களுடைய காலின்மேல் தன்னுடைய சிரசினைச் சூடி, மிகவும் மயக்கமாய். (எ-று) (6)

1458.மருளுந் தெருளும்வந்து கதியென் பதைமறந்து
மதனன் சலதிபொங்க விரணம தான
அளிபுண் தனைவளைந்து விரல்கொண் டுறவளைந்து
சுரதஞ் சுகமிதென்று பரவச மாகி
மருவுந் தொழின்மிகுந்து தினமுந் தினமும் விஞ்சி
வளரும் பிறை குறைந்த படிமதி சோர
வானரம தென மேனி திரையாய்

(பொ-ரை) மயக்கமேம்பட்டு மோட்சமுண்டென்பதை மறந்து, மன்மதனது மோகசாகரமானது பொங்க, அதனால் பெண்கள் லீலையே சுகமுடையதென்று எண்ணி, அதனிடத்திற் பரவசமடைந்து சம்யோகிக்குந் தொழில் வரவர மேம்பட்டு அதனால் பூரண சந்திரனானவன் தேய்ந்து குறைவது போல் அறிவானது சோர்வடைய குரங்கைப் போல் தேகம் திரைந்தும். (எ-று) (7)

1459.வயதும் படவெழுத்து பிணியுந் திமிதி மென்று
வரவுஞ் செயலழிந்து ளிருமலு மாகி
அனமுஞ் செலுதலின்றி விழியுஞ் சுடர்களின்று
முகமுங் கலைகளின்று சரியென நாடி
மனையின் புறவிருந்த வினமுங் குலைகுலைந்து
கலகஞ் செயவிருண்ட யமன்வரும் வேளை
ஏதுதுணை பழிகார மனமே.

(பொ-ரை) வயசானது கிழத்தன்மையையடைய நோயானது கொள்ளவும், அதனால் தன்னுடைய சுதந்தர அறிவுகெட்டு இருமலும் வேஷமுமுண்டாகி கண்பார்வை குறைந்து முகமும் களைகெட்டு நன்றாகத் தோஷித்திருந்த சாதியார்களெல்லாம் கெட்டுக் கலகஞ் செய்யும்படி அந்த சம்பத்தையுடைய எமனானவன் வருகின்ற அந்த முடி காலத்தில் ஓ மனமே உறவாயிருப்பது எது நீ நன்றா யோசித்து இடைவிடாமற் பற்றிக்கொள்ள வேண்டும் என்பது குறிப்பு. (எ-று) (8)

தாயுமானசுவாமிகள் பாடல் முற்றிற்று

✪ ✪ ✪

தாயுமானவர் திருப்பாடல் முதற் குறிப்பு அகரவரிசை

[பாட்டு எண்]

அகண்ட மென்ன	237
அகத்தூ டணுவணு	861
அகமேவும் அண்ண	1026
அகரவுயி ரெழுத்	25
அங்கமே நின்வடிவ	846
அங்கிங் கெனாதபடி	1
அங்குமிங்கும் எங்கு	1387
அங்கையொடு மலர்	26
அஞ்சு முகங் காட்டா	1092
அஞ்சல் லஞ்ச லென்ற	759
அஞ்செழுத்தின் உண்	1311
அடக்கிப் புலனைப்	1425
அடிகளடிக் கீழ்க்	1155
அடிமுடிகாட் டாத	1208
அடிமுடியும் நடுவு	191
அடியெனு மதுவும்	278
அடுத்த வியல்பாத	854
அடையார் புறஞ் செற்ற	455
அண்டபகி ரண்டமும்	7
அண்டபகிரண்டமனை	1348
அண்டபகி ரண்டமறி	958
அண்டபிண்டங் காணே	914
அண்டமுடி தன்னிலோ	86
அண்டமுமாய்ப் பிண்ட	333
அண்டம் அனைத்திலு	749
அண்டரண்ட கோடி	1218
அண்டரண்ட யாவு	1418
அண்டருக்கு மெய்ப்	1199
அண்டனே அண்டர்	1383
அண்ண லேயுன்	234
அதுவென்றால் எது	154
அதுவென் றுன்னும்	222
அத்தனென்ற நின்னை	1417
அத்த னேயகண்	228
அத்தனைச் சிற்றம்	404
அத்தாநின் பொற்றா	1356
அத்தா விமலா	1344
அத்துவா எல்லா	1245
அத்துவித அநுபவத்தை	396
அத்துவித மான	928
அத்துவித மென்ற	1302
அத்துவிதம் பெறும்	330
அத்துவித வத்துவைச்	3
அந்தகனுக் கெங்கு	1157
அந்தகா ரத்தை	10
அந்தக் கரணமு	1173
அந்தக் கரணமெனு	886
அந்தக் கரண	728
அந்தணர் நால்வர்	174
அந்தமுடனாதி	1025
அந்தரத்தே நின்	1232
அந்தோவீ ததிசய	142
அப்பனென் றும் அன்னை	917
அப்பாவென் னெய்ப்பில்	660
அப்பும்உப்பும் போன்ற	782
அப்பொருளு மான்மாவும்	475
அம்மாஈ ததிஈயந்தான்	631
அரசேநின் திரு	590

அருமறையின் சிரப்பொரு	21	அறிவாகி ஆனந்த	150
அரும்பொனே மணியே	83	அறிவாரும் இல்லையோ	1445
அருவுருவம் எல்லா	1204	அறிவிப்பான நீயென்	885
அருவென் பனவு	1452	அறிவில் லறியாமை	492
அருளாகி நின்றசுகம்	888	அறிவிற் கறிவு	283
அருளால் எவையும்	1433	அறிவை அறிவது	1270
அருளெ லாந்திரண்	261	அறிவோ டறியாமை	1272
அருளேயோ ராலயமா	551	அற்ப மனமே	472
அருள்பழுத்த பழச்சுவை	138	அற்றவர்கட் கற்ற	1258
அருள்வடி வேழு	357	அனந்தபத உயிர்கள்	133
அல்லலாந் தொழில்	170	அனைத்துமாய் நின்றாயே	720
அல்லலெல்லாந் தீர	963	அன்பருக் கன்பான	1430
அல்லும் பகலும்அக	1378	அன்பரெல்லாம் இன்	889
அல்லும் பகலும் அறி	726	அன்பர்பணி செய்யவெனை	790
அல்லும்ப கலும் உனக்கே	444	அன்பாற் கரைந்து	730
அல்லும் பகலும்பே	499	அன்பின்வழி அறியாத	78
அவனன்றி யோரணுவு	89	அன்பை பெருக்கி	649
அவனே பரமு	522	அன்றந்த நால்வ	916
அழுக்கார்ந்த நெஞ்சு	434	அன் றுநால் வருக்கும்	310
அழுக்காற் றாஞ்	932	அன் றுமுதல் இன்றை	161
அளியுங் கனியொத்	454	அன்றெனச் சொல	265
அள்ளக் குறையா	1382	அன்றென் று மாமென்	1450
அறிந்த அறி வெல்லாம்	535	அன்றோவா மோவெனவுஞ்	607
அறியா அறிவி	1268	அன்னே யனேயெனுந்	90
அறியாத என்னை	430	அன்னைபோல அருள்	1420
அறியா தறிந்தெமை	1294	அன்னை யப்பனென்	218
அறியாநான் செய்வினை	798	அன்னையிலாச் சேய்	692
அறியாமை ஈதென்	1007	ஆகத்தை நீக்கு	1080
அறியாமை சாரி	481	ஆகார புவனமின்	132
அறியாமை மேலிட்	463	ஆகியசற் காரியவு	145
அறியாயோ என்னையும்	494	ஆக்கி அளித்து	1439
அறியுந் தரமோ	315	ஆக்கையெனும் இடிகரை	27

ஆங்கார மானகுல	45	ஆத்திரம் வந்தவர்	459
ஆங்கார மென்னு	1150	ஆயிரஞ்சொன் னாலு	830
ஆங்கென் றுமீங்	1441	ஆயுங் கலையுஞ்	443
ஆசனமூர்த் தங்க	1310	ஆயுமறி வாகியுன்னைப்	156
ஆசைக்கொ ரளவில்லை	13	ஆரணங்களாமங்கள்	470
ஆசைச் சுழற் கடலீல்	1363	ஆரண மார்க்கத்	272
ஆசைநிக ளத்தினை	37	ஆரண முங் காணா	1205
ஆசையுன்மீ தல்லால்	874	ஆரணமாகமம்	425
ஆசையெனும் பெருங்	322	ஆரறிவாரென்ன	640
ஆடலையே காட்டி	1292	ஆரா வமிர்தம்	320
ஆடாமல் லோய்ந்திட்ட	114	ஆரா அமுதனைய	1412
ஆடியோய் பம்பரம்	840	ஆரா அமுதென	420
ஆடுக றங்காகி	1336	ஆரா அமுதே	639
ஆடுங் கறங்குந்	456	அராமை கண்டிங்	560
ஆடுவதும் பாடுவது	776	ஆராயும் வேளையில்	6
ஆணவத்தை நீக்கி	1197	ஆராருங் காணாத	1279
ஆணிலே பெண்ணிலே	63	ஆராரெனக் கென்ன	117
ஆண்டநின்னை நீங்கா	955	ஆரிருந்தென் னார்போயென்	755
ஆண்டான் மவுனி	1297	ஆருடனே சேருமறி	1261
ஆதி அனாதியு	1421	ஆருமறி யாம	1028
ஆதிகா லத்தில்	881	ஆலம் படைத்த	435
ஆதிக்க நல்கினவ	39	ஆவாவென் றழுது	596
ஆதிப் பிரானே	1362	ஆவிக்குளாவி	1027
ஆதியந்தங் காட்டா	1179	ஆவித்துணையே	1403
ஆதியந்தங் காட்டா தக	1090	ஆவி யேயுனை	196
ஆதியந்தங் காட்டாத	24	ஆழாழி என்ன	1137
ஆதியந்த நீகுரு	875	ஆழாழி கரையின்றி	12
ஆதியந்த மில்லா	1265	ஆழித் துரும்பெனவே	671
ஆதியந்த மில்லாதவா	1219	ஆழ்ந்தாயே இவ்வுல	872
ஆதியந்தம் எனும்	135	ஆழ்ந்து நினைக்கி	1123
ஆதியாம் வாழ்வா	1366	ஆறான கண்ணீர்	1029
ஆதியாய் நடுவாய்	305	ஆறு சமயத்து	1088

ஆறுளொன்றை நாடி	1103	இருப்பாய் இருந்திடப்பே	545
ஆறொத் திலங்கு	411	இரும்பைக் காந்தம்	217
ஆற்றாப் படாது	802	இருவ ரேபுகழ்ந்	266
ஆனந் தங்கதி	251	இல்லாத காரியத்தை	828
ஆனந்த மானநின்னை	842	இல்லையில்லை யென்னி	152
ஆனந்த மோனகுரு	532	இல்லை உண்டென்	207
ஆன புறக்கருவி	1156	இல்லையென் றிடினிப்	173
ஆனாலும் யானென	616	இவ்வுடம்பு நீங்கு	1341
இகபரமும் உயிர்க்கு	17	இறப்பும் பிறப்பும்	1431
இகமுழுதும் பொய்யென	469	இற்றைவரைக்குள்	866
இக்காயம் பொய்யென்	892	இனிய கருணை முகி	508
இங்கற்ற படியங்கு	56	இனிய கருப்புவட்டை	537
இடத்தைக் காத்திட்ட	348	இனியே தெமக்கருள்	104
இடமொரு மடவாள்	273	இன்பக் கடலில்	285
இடம்கானம் நல்லபொரு	528	இன்பநிட்டை எய்தா	949
இடம்பெறு வீடுமின்	417	இன்ப நிருவிகற்ப	987
இடம்பொருளே வலைக்	188	இன்பமய மாயுலக	550
இடைந்திடைந் தேங்கி	304	இன்பருள ஆடை	1030
இந்தநாள் சற்றும்	680	இன் றுபுதி தன்றே	678
இந்த நிருவிகற்ப	521	இன் று னக்கன்	213
இந்த வெளியினை	907	இன்றென இருப்பே	172
இந்திரசா லங்கனவு	19	இன்றோ இருவினை	795
இப்பிறவி என்னுமோ	112	இன்னம் பிறப்பதற்	108
இமையளவு போதயொரு	103	ஈறாக வல்வினை	1010
இம்மா நிலத்தி	1283	ஈனந் தருநா	1177
இயல்பென் றுந் திரியா	141	ஈனந் தருமுடல	655
இரக்கமொடு பொறை	635	ஈனமில்லா மெய்ப்	1191
இரப்பானங் கொருவ	323	உடம்பறியும் என்னு	1169
இரவுபக லற்றவிட	702	உடலைப் பழித்திங்	493
இருக்காதி மறை	1414	உடல் குழைய	55
இருநில மாதி	294	உடல் பெய்யுறவா	460
இருநிலனாய்த் தீயாகி	1257	உணர்த்தும் உனை	908

உண்டவர்க்கன்றி	263
உண்டுடுத்துப் பூண்டிங்	779
உண்டுபோலின்றா	909
உண்டோ நமைப்	1443
உண்டோ நீ படைத்த	618
உந்திச் சுழியா	1135
உந்து பிறப்பிறப்பை	1148
உய்யும் படிக்குன்	317
உருவிருப்ப வுள்ளே	1126
உருவெளிதான் வாத	991
உரையிறந்த அன்பருளத்	641
உரையிறந்து பெருமை	159
உரையிறந்துள	245
உலகநெறி போற்	993
உலக மாயையி	328
உளவ றிந்தெலாம்	363
உள்நின் றுணர்த்	1338
உள்ளக் கொதிப்பகல	1003
உள்ளங் குழைய	996
உள்ளத் துணரா	969
உள்ள து மில்லது	1428
உள்ளத்தி னுள்ளே	562
உள்ளத்தி னுள்ளே யொளி	1079
உள்ளத் தினுள்ளேதா	1222
உள்ளத் தையுமிங்	440
உள்ளபடி யாது	910
உள்ளபடி யெனனவு	190
உள்ளபடி யொன்றை	853
உள்ளபொருள் ஆவி	871
உள்ளமறி யாதொருவர்	855
உள்ளமே நீங்கா	275
உள்ளும் புறம்பு	1322
உறவுடலை எடுத்தவரில்	398
உற்றதுணை ரீயல்லாற்	181
உற்ற வேளைக்	270
உற்றறியு மென்னறிவு	671
உற்று ணர்ந்தெலா	389
உற்றுநினைக் கிற்றுயர	693
உற்றுற்று நாடி	681
உனக்குநா னடி	296
உனக்குவமை யாக்க	983
உன்மனிக்குள்	231
உன்னவுன்ன என்னை	1411
உன்னாமலொன்றி	1031
உன்னா வெளியாய்	1001
உன்னிலையு மென்னிலையும்	99
உன்னில் உன்னும்	1262
உன்னுமனங் கர்ப்பூர	894
உன்னை உடலை	530
உன்னை நினைத்துன்னிறை	697
ஊரனந் தம்பெற்ற	2
ஊருமிலார் பேரு	1032
ஊரைப்பா ராம	1033
ஊனாக நிற்கும்	1377
ஊனிருந்த காய	1349
ஊனொன்றி நாத	1121
எக்கணுமாந் துன்ப	1194
எக்கலையுங் கற்றுணர்ந்	848
எக்கால முந்தனக்	76
எங்கணும்நீ என்றா	956
எங்கெங்கும் பார்த்	1207
எங்கெங்கே பார்த்தாலு	719
எங்கேயெங் கேஅரு	612
எங்ஙனேயுய்ய	225

எங்குஞ் சிவமே	525
எங்கு மென்னை	262
எங்கும் வியாபித்	452
எச்சிலென் றுபூவை	727
எடுத்த தேகம்இ	259
எடுத்த தேகம் பொ	556
எட்டத் தொலையாத	1280
எட்டுத் திசைக்	1180
எட்டுத்திசையு	973
எண்ண மறிந்தே	695
எண்ண முந்தா னின்னை	796
எண்ணரிய சித்த	1115
எண்ணரிய பிறவிதனில்	60
எண்ணாத எண்ணமெல்லா	670
எண்ணாத தெண்ணிய	413
எண்ணிய எண்ண	575
எண்ணில்பல கோடி	912
எண்ணிறைந்த மேன்	1385
எண்திசைக்கீழ் மேலான	768
எத்தனைதான்சன்மமெடுத்	679
எத்தனைப் பிறப்போ	358
எத்தனையோ காடி	915
எத்தனையோ தேர்ந்தாலு	716
எத்தனையோ நின்விளை	1404
எத்தனை விதங்க	75
எத்தன்மைக் குற்ற	715
எத்தாற் பிழைப்பே	690
எத்திக்குந் தானாகி	642
எந்தச் சமய	560
எந்தநாளுனக்கடிமை	184
எந்த நாளைக்கு	248
எந்தநாள் கருணை	87
எந்தப் படியுன்	757
எந்தமட லூடும்	1035
எந்தவுட லேனு	812
எந்தெந்த நாளும்	758
எந்தை சனற்குமர	1096
எந்நாளும் உடலிலே	88
எந்நெஞ்ச மேனும்	833
எப்பொருளும் நீயெனவே	704
எம்ப ராபர	378
எம்மா லறிவதற	1375
எம்மை வினையை	1165
எல்லாஞ் சிவன்செய	445
எல்லாந் தெரியு	1347
எல்லாமுன் அடிமை	49
எல்லாமே மோனநிறை	533
எல்லாம் அறிந்த	119
எல்லா மிறந்	1192
எல்லாமுதவும்	431
எல்லாம் நினது செய	970
எல்லாரும் இன்புற்	856
எல்லையில் பேரின்ப	1217
எவ்வடிவும் பூரணமா	1307
எவ்வாறிங் குற்று	1211
எவ்விடத்தும் பூரணமாம்	552
எவ்வுயிரும் என்னுயிர்	700
எவ்வுயிருந் தன்னுயிர்	1256
எவ்வுயிர்த் திரளும்	129
எள்ளத் தன்னையு	1331
எள்ளளவும் நின்னை	682
எள்ளுக்கு ளெண்ணெய்	1203
எறிதி ரைக்கட	128
எனக்கினியா ருன்	913

எனக்கும் உனக்கும்	513
எனக்கு ளேஉயி	209
எனக்குள் நீ என்று	1269
எனக்கெ னச்செயல்	362
எனக்கென் றிருந்த	321
எனக்கோர் சுதந்திர	416
எனதென் பதும்பொய்	316
என்செய லின்றி	279
என்செயினுமென்ப	1330
என்புருகி நெஞ்ச	656
என்பெலாம் நெக்குடைய	80
என்போல் எளியவரு	751
என்றுங் கருணை பெற்ற	775
என்றுமிகுந்தபடிக்	767
என்றும் அடைந்தோர்	937
என்றும் அழியு	1442
என்றும் உன்னை	202
என்று விடியு	1034
என்றுளைநீ அன்றுளம்	622
என்னது யான் என்ப	1304
என்ன துயான் என்ன	851
என்னரசே கேட்டிலை	1389
என்னறிவுக் குள்ளே	1361
என்னறிவும் யானு	747
என்னறிவை உள்ள	1102
என்னுடை உயிரே	361
என்னுடைய தோழ	1260
என்னேநான் பிறந்துழல	632
என்னை அறிய	1353
என்னை யின்னதென்றறி	797
என்னைக் கெடுக்க	799
என்னைத் தானின்ன	364
என்னைநான் கொடுக்க	589
என்னைப் புரப்ப	1004
என்னையுந் தன்னையும்	1434
என்னையுன்னை இன்னதிது	519
ஏக மானவுரு	126
ஏங்கி இடையும்	954
ஏசற்ற அந்நிலையே	543
ஏடார் மலர்சூ	1037
ஏத மற்றவர்க்	382
ஏதமின்றித்தன்	365
ஏதுக்குச் சும்மா	464
ஏதுக்குஞ் சும்மா	538
ஏதுக் குடற் சுமைகொண்	495
ஏதுக்கு முன்னை	843
ஏதுந் திருவருளி	473
ஏதுந் தெரியா வெ	978
ஏதுந் தெரியா தெ	1373
ஏதுவந்துமே தொழிந்	829
ஏதேது செய்தாலு	1235
ஏதேது சொன்னா	975
ஏதைச் சுமையா	817
ஏய்ந்த நல்லருள்	386
ஏரின் சிவபோக	1108
ஏழைக் குறும்பு	1139
ஏறுமயிர்ப் பாலமுணர்	809
ஏறுவாம் பரியா	298
ஐந்து பூதமொரு	124
ஐந்துவகை யாகின்ற பே	30
ஐந்துவகை யாகின்ற மூ	38
ஐம்பூதத் தாலே	1142
ஐய மற்ற	224
ஐய வாதனைப்	350

ஐயனே உனை	238	ஓயாவுள் ளன்பாய்	1365
ஐயா அருணகிரி	485	ஓராம லேயொருகால்	517
ஐயோ உனைக்காண்	673	ஓராமல் எல்லா	979
ஐவகை எனும்பூத	29	ஓராமல் மந்திரமு	1295
ஐவ ரென்றபுல	125	ஓருரையால் வாய்க்	939
ஐவரொடுங் கூடாமல்	887	ஓவென்ற சுத்தவெளி	592
ஒட்டுடன் பற்றின்றி	1111	ஔவிய மிருக்க	28
ஒப்பிலா ஒன்றே	1407	கங்குல்பக லற்றதிருக்	780
ஒப்புயர்வொன் றின்றி	750	கங்கை நிலவுசடை	1091
ஒருமைமன தாகியே	95	கச்சிருக்குங் கொங்	1133
ஒருமொழியே பல	186	கடத்தை மண்ணென	352
ஒருவரென்னுனந்	212	கடலமுதே தேனே	667
ஒருவனவன் யானை	160	கடலின் மடைவிண்	1427
ஒளியே ஒளியி	446	கடலெத் தனைமலை	438
ஒன்ற தாய்ப்பல	373	கட்டுங் கனமு	918
ஒன்றையுந் காட்டா	1209	கட்டுநமன் செங்கோல்	1185
ஒன்றாகிப் பலவாகிப்	137	கணம் தேனுநின்	369
ஒன்றாய்ப் பலவா	1402	கண்களில்வெண் பீளை	1131
ஒன்றியொன்றி நின்று	180	கண்ட அறிவகண்	1009
ஒன்றிரண்டாய் விவகரி	391	கண்டஇட மெல்லாங்	1254
ஒன்றிரண்டு மில்லது	1285	கண்ட கண்ணுக்கு	257
ஒன்றிரண்டென் றுன்னா	925	கண்டதனைக் கண்டு	1039
ஒன் றுந் தெரிந்திட	432	கண்டதுபொய் என்ற	1112
ஒன் றுமற நில்லென்	478	கண்டவடி வெல்லாங்	921
ஒன் றுமறி யாவிரு	935	கண்டவடி வெல்லா	1379
ஒன்றே பலவே	753	கண்டறியேன் கேட்டறி	568
ஒன்றைநினைந் தொன்றை	722	கண்டன வல்ல	167
ஓகோ உனைப்பிரிந்தா	664	கண்டனவே காணு	1391
ஓடுங் கருத்	1339	கண்டார் கண்ட	290
ஓடும் இருநிதியு	651	கண்டா ருளத்தினிற்	405
ஓதரிய சுகர்போல	163	கண்டார் நகைப்புயிர்	1436
ஓயாதோ என்கவலை	664	கண்டிலையோ யான்படும்	627

கண்டு கண்டுந் தேறா	1159
கண்டுமொழி பேசி	1129
கண்டேனிங் கென்னை	591
கண்டேன் நினதரு	427
கண்ண கன்றவிக்	249
கண்ணாடி போல	1369
கண்ணாரக் கண்டோர்	637
கண்ணார நீர்மல்கி	93
கண்ணாவா ரேனு	688
கண்ணினுண் மணி	384
கண்ணிற் காண்பதுன்	226
கண்ணிறைந்த மோன	1343
கண்ணுள் மணி போலி	1036
கண்ணே கருத்தே	645
கண்ணொளியே மோன	480
கண் துயிலா தென்னறி	859
கண்மூடிக் கண்விழித்	733
கந்தநு பூதிபெற்று	1114
கந்துக மதக்கரி	118
கருணைமொழி சிறிதில்	176
கருதரிய விண்ணேநீ	158
கருதும் அடியார்	926
கருத்தினுட் கருத்தா	277
கருப்பு வட்டாவாய்	1281
கருமருவு குகையனைய	32
கருமுகங்காட்	1086
கரைந்து கரைந்துருகி	498
கரையிலின்ப	232
கலக்கமுற நெஞ்சை	959
கலங்காத நெஞ்சுடைய	626
கலந்த முத்தி	246
கல்லாத அறிவுமேற்	42
கல்லாத நெஞ்சங்	1352
கல்லாத பேர்களே	66
கல்லாத னானாலு	1018
கல்லா லடியில்	1392
கல்லாலினீழறனி	606
கல்லாலிலெறிந்துங்கை	422
கல்லெறியப் பாசி	849
கல்லே றுஞ் சில்லே றுங்	474
கல்லேனும் ஐயவொரு	79
கல்லேன் மலரேன்	1038
கல்லை யுற்ற	240
களவு வஞ்சனை	380
கள்ளத் தலைவ	1082
கள்ளம் பொருந்தும்	441
கள்ளனிவன் என் று	1233
கள்ளா து கட்டு	943
கற்கண்டாலோடுகின்ற	1249
கற்கண்டோ தேனோ	466
கற்குணத்தைப் போன்ற	1243
கற்குநிலை கற்றா	988
கற்குமது வுண்டு	957
கற்பதெல்லாங் கற்	1395
கற்பனையாப் பாடுகின்	976
கற்பு று சிந்தை	571
கற்றவறி வா லுனை	672
கற்றகலை யானிலை	732
கற்றதுங் கேட்டது	1415
கற்றா லுங் கேட்டா லுங்	920
கற்றுமென்பலன்	229
கற்றும் பலபல	457
கன்மநெறி தப்பிற்	1299
கன்ம மேது	242

கனமமென்ப தெல்லா	858
கன்றினுக்குச் சேதா	669
கன்றுமன வெப்ப	1184
கன்னங் கரிய	901
கன்னலமு தெனிவுமுக்	64
கன்னலுடன் முக்கனி	1223
கன்னல் தரும் பாகாய்	883
கன்னல் முக்கனி	370
காகமா னதுகோடி	94
காக மோடுகழு	122
காகமுறவு	555
காக்கு நின்னருட்	250
காக்கைநரி செந்	1118
காச்சச் சுடர்விடு	989
காடுங் கரையும்	553
காட்சியெல்லாங் கண்ணை	972
காட்டவ ருளிருக்கக்	714
காட்டத்தில் அங்கி	947
காட்டிய அந்த	448
காட்டுகின்ற முக்கட்	1323
காட்டுந் திருவருளே	1200
காணரிய அல்லலெல்	148
காணாத காட்சி	1040
காணுங் கண்ணிற்	198
காண்டல்பெறப் புறத்	144
காண்பானுங் காட்டுவ	1290
காதலால் வாடின	1042
காதற்றுப் போனமுறி	486
காதிலோலையை	332
காந்தமதை யெதிர்	342
காந்தம் இரும்பைக்	1041
காமனைவா வென்றி	1130
காயநிலை அல்லவென்று	781
காயிலை யுதிர்ந்தகனி	70
காரகமாங் கர்ப்ப	862
காராரும் ஆணவக்	72
காரிட்ட ஆணவக்	31
கால மூன்றுங்	254
காலமே காலமொரு	624
காலமொடு தேச	164
காலமொரு மூன்றுங்	826
காலர்பயந் தீர	837
காலன் தனையுதைத்தான்	502
காலால் வழிதடவுங்	1408
காலையுயி ரென்னுங்	1175
கால்பிடித்து மூலக்	788
காற்றைப் பிடித்து	587
கானகம் இலங்குபுலி	43
கானற் சலம்	1225
கான்றசோ றென்ன	1388
கிட்டிக்கொண்டன் ப	1043
கிட்டுராய் நெஞ்சிற்	1044
குடக்கொடு குணக்காதி	101
குத்திர மெய்ப்	1231
குருவிங்க சங்கமமா	482
குருலிங்க சங்கமமா	1314
குருவாகித் தண்ணருளை	536
குருவுரு வாகி	280
குலமி லான்குணங்	351
குறிக ளோடுகுண	123
குறித்தவித மாதி	1161
குறியுங் குணமுமறக்	539
குறைவிலருள் ஞான	1100
குறைவிலா நிறை	293

குற்றங் குறையக் 938
குற்றச் சமயக் 1251
குன்றாத மூவுருவாய் 182
குன்றிடாத 260
கூடியநின் சீரடியார் 565
கூடுத லுடன்பிரித 33
கூர்த்தவறி வத்தனையுங் 666
கூர்த்தவறி வாலறியக் 904
கூறாநின்ற 288
கூறாய ஐம்பூதச் 609
கூறுங் குணமு 1045
கெசதுரக முதலான 62
கெடுத்தே பசுத்துவ 1248
கெட்டவழி ஆணவப் 787
கெட்டியென் றுன் அன்பர் 713
கேடில்பசு பாச 1196
கேட்டதையே சொல்லுங் 824
கேட்டலுடன் சிந்தித்தல் 467
கேட்டல் முதனான் 1303
கேவல சகல 336
கேவலத்தினான் 1316
கைத்தலம் விளங்கு 106
கையினால் தொழு 252
கையுங் குவித் 1372
கையும் மெய்யுங் 201
கைவிளக்கின் பின்னே 1195
கொடிய வெவ்வினை 255
கொடுக்கின் றோர்கள் 327
கொடுத்தேனே யென்னைக் 500
கொந்தவிழ் மலர்ச் 110
கொலைகளவு கட்காம 923
கொல்லாமை எத்தனை 67
கொல்லா விரத 827
கொல்லா வரதங் 689
கொழுந்தா துறைமலர் 407
கொழுந்தில் வயிரமென 723
கொழுந்து திகழ் 286
கொள்ளித்தேன் கொட்டி 807
கொள்ளை வெள்ளைத்தண் 847
கோட்டாலை யான 1247
கோல மின்றி 197
சகத்தின் வாழ்வை 253
சகமனைத்தும் பொய்யெ 465
சகமெ லாந்தனி 385
சக்கர வர்த்தி 1113
சஞ்சலமற் றெல்லா 1013
சஞ்சிதமே யாதி 1162
சடத்துளுயிர் போலெ 1193
சட்டையொத்த 1346
சத்த முதலாத் 1164
சத்தமுத லாம் 1143
சத்தாகி நின்றோர் 879
சத்தொடு சித்தாகி 1206
சந்ததமும் எனது 8
சந்ததமும் நின் 890
சந்தமும் வேதமொழி 53
சந்திரனை நாடும் 1230
சருகுசல பட்சணிக 44
சன்மார்க்கம் ஞான 143
சன்னல்பின்ன லான 1167
சாக்கிரமா நுதலி 346
சாட்டை யிலாப் 1326
சாட்டையிற் பம்பர 324
சாதனையெல் லாம் 934

சாதிகுலம் பிறப்பிறப்	18
சாலக் கபாடத்	1186
சாலோகமாதி	1220
சாற்றரிய இன்ப	1371
சிட்டர்க் கெளிய	1337
சித்த நிருவிகற்பஞ்	880
சித்த நினைவுஞ்	652
சித்தந் தெளிந்து	783
சித்தந் தெளிந்தோர்	1215
சித்த மவுனஞ்	911
சித்த மவுனி	426
சித்தமெனும் பௌவத்	1151
சித்தான நாமென்	1386
சித்திநெறி கேட்டல்	902
சித்துஞ் சடமுஞ்	542
சிந்தனைபோய் நானெனல்	772
சிந்திக்குந் தோறுந்	1315
சிந்திக்குந் தோறுமெ	936
சிந்தித்த எல்லாமென்	638
சிந்தித்த தெல்லா	1308
சிந்தை அவிழ்ந்தவிழ்ந்து	710
சிந்தை சிதையச்	903
சிந்தைத் துயரென்	318
சிந்தை பிறந்தது	1440
சிந்தை மயக்க	964
சிந்தை மருவித்	1047
சிந்தை மறந்து	1202
சிந்தையன்பு சேர	1418
சிந்தையினுக் கெட்	1095
சிந்தையும்என் போல	960
சிவமாதி நான்முக	410
சிவன்செய லாலே	302
சிற்பரமே தற்பரமே	884
சிற்றம் பலமன்னு	1099
சிற்றரும்பன	355
சிற்றறிவு மெள்ளச்	1287
சிற்றின்பம் உண்டு	1216
சினமிறக்கக் கற்றாலு	804
சின்னஞ் சிறியார்கள்	822
சின்னஞ் சிறியேன்	1046
சீராருந் தெய்வத்	636
சுகமாகு ஞான	408
சுக்கிலமும் நீரும்	1116
சுட்டழகா யெண்ணு	1358
சுட்டியுண ராமற்	764
சுத்த வறிவாய்ச்	657
சுத்தமும் அசுத்தமும்	71
சுத்தவித்தை யேமுதலா	1153
சும்மா இருக்க	511
சும்மா இருப்பதுவே	705
சும்மா விருக்கச்	436
சுருதி யேசிவா	339
சுழுத்தி இத யந்த	347
சூட்டி யெனதென்	291
சூதாடு வார் போற்	806
சூதான மென்று	1181
சூதொன்று மின்றி	765
சூரியர்கள் சந்திரர்	1183
செகத்தையெல்லா	593
செங்கதிரின் முன்	1274
செங்கிருமி யாதி	1119
செப்பரிய சமயநெறி	140
செப்பறிய தண்கருணை	1276
செப்புவதெல் லாஞ்	754

செம்பொன் மேனி	204	சோதி யேசுட	215
செம்மையறி வாலறிந்	1170	சோதியே நந்தாச்	1359
செய்யுஞ் செய்கையுஞ்	205	சோற்றுத் துருத்தி	852
செய்யுந் தவஞ்சற்று	403	ஞாலத்தை மெய்யென	819
சென்றவிட மெல்லாந்	944	ஞானநெறிக் கேற்றகுரு	541
சென்று சென்	1264	ஞானநெறி தானே	1300
சேராமற் சிற்றினத்தை	600	ஞானமே வடிவாய்	307
சேராமற் சேர்ந்து	1368	தக்க கேள்வியிற்	219
சைவ சமய	554	தக்க நின்னருட்	387
சொல்லற் கரிய	282	தக்கரவி கண்ட	1228
சொல்லாடா வூமரைப்	711	தட்டுவைத்த சேலை	1136
சொல்லாய தொகுதி	625	தத்துவப்பே யோடே	488
சொல்லாலும் பொருளா	345	தத்துவமாம் பாழ்த்த	1171
சொல்லாலே வாய்து	594	தத்துவமெல் லாமக	1002
சொல்லா லடங்காச்	662	தத்துவர் தொண்ணூற்	1120
சொல்லாற் றொடர்பொரு	429	தந்திரத்தை மந்திரத்	1288
சொல்லால் மனத்	1273	தந்தேனே ஓர்வசனந்	773
சொல்லான திற்சற்றும்	92	தந்தைஇரு தாள்	1093
சொல்லான் மவுன	424	தந்தை தாயுநீ	331
சொல்லிறந்து நின்ற	1048	தந்தைதாய் தமர்தார	113
சொல்லிறப்பச் சற்	1019	தந்தை தாய்தமர்மக	371
சொல்லுங் கடங்கா	484	தந்தைதாய் மகவுமனை	588
சொல்லுஞ் சமய	940	தப்பிதமொன் றின்றி	1393
சொல்லும் பொருளுந்	865	தம்முயிர்போல் எவ்வுயிரு	784
சொல்லும் பொருளுமற்	685	தர்க்கமிட்டு பாழாஞ்	1252
சொல்லை யுன்னி	200	தற்பரத்தி னுள்ளே	1221
சொன்னசொல்வேதென்	1422	தற்பர மாஞ்சிற்	402
சொன்னத்தைச் சொல்லி	794	தற்போதத் தாலே	1049
சொன்னதைச் சொல்வ	684	தனியி ருந்தருட்	374
சொன்னவர் தாம் நிட்டை	520	தனிவளர் பொருளே	301
சோதி யாதெனை	247	தன்செயலா லொன்று	922
சோதியாயிருட்பிழம்பை	628	தன்மயஞ் சுபாவஞ்	354

தன்மயமாய் நின்ற	953
தன்மய மானசு	442
தன்ன தென் றுரை	195
தன்னரசு நாடாஞ்	1409
தன்னிலே தானாக	397
தன்னெஞ்ச நினைப்	325
தன்னை அறிந்தருளே	731
தன்னை அறிந்தால்	729
தன்னை அறியத்தன	569
தன்னை அறியத்தனி	1381
தன்னை அறியாது	924
தன்னை அறியுந்	1050
தன்னைத்தந்த தென்னை	762
தன்னையறிந் தவர்தம்	394
தன்னை யொருவர்க்	312
தாகமறிந் தின்பநிட்டை	659
தாக்குநல் லானந்	1438
தாங்கியபார் விண்ணா	1309
தாயர்கர்ப்பத் தூடன்ன	770
தாயான தண்ணருளை	633
தாயிருக்கும் பிள்ளை	984
தாயினுமினிய	577
தாயினும் நல்ல	1329
தாயுந் தந்தையு	341
தாரா அருளையெல்	873
தாராத அருளெலாந்	34
தாவியதோர் மர்க்	1052
தானந்த மான	962
தானந் தவஞ்சற்று	415
தானந் தவந்தருமஞ்	793
தானந்தவம் ஞானஞ்	529
தானமுந் தவமும்	299
தானவனாந் தன்மை	518
தானாக வந்து	876
தானாதல் பூரணமே	893
தானான தன்மயமே	153
தானா தன்மைவந்து	518
தானென்னை முன்படை	1259
தானே சுபாவந்	1081
தானே யகண்டா	287
தானேயா நன்னிலை	1005
தானேயும் இவ்வுலகம்	193
திகையாதோ வெந்நாலும்	602
திக்கொடுகீழ் மேலுந்	643
திக்கொடு திகந்தமும்	57
திங்களமு தாநின்	1410
திடமுறவே நின்னருளை	559
திண்ணிய நெஞ்சப்	1128
திருந்து சீரடி	375
திவருள் ஞானக்	1451
திருவருள் தெய்வ	241
திரையற்ற நீர்போற்	1267
திரையில்லாக் கடல்	183
தினமே செலச்செல	437
தினையத் தனையும்	1350
தீங்கரும்பெண் றா	1226
தீதணையாக் கர்ப்பூர	1278
தீதெலாமொன்றாம்	573
தீதெனவும் நன்றெ	1008
தீர்த்தி னாற்றுறவு	906
தீராக் கருவழக்	1053
தீராத வென்சனன	400
துங்கமமு மானுடையாய்	507
துச்சனென வேண்டா	687

துட்டனைமா மாயை 1244
துய்ய கரமலரால் 1094
துய்யன் தண்ணருள் 332
துரியங் கடந்த 1317
துள்ளுமறி யாமனது 54
துன்பக் கடலிற் 497
துன்பக் கண்ணீரிற் 674
துன்பமெனுந் திட்ட 1351
துன்மார்க்க மாதர் 1449
தூங்காமல் தூங்கி 1324
தூங்கிவிழித் தென்ன 1054
தூய அறிவான 1277
தூய தான 236
தூயபனித் திங்கள் 1138
தூளேறு தூசுபோல் 584
தெட்டிலே வலியமட 579
தெய்வம் வேறுள 269
தெவிவாக ஊர்வன 5
தெருளாகி மருளாகி 68
தெளிவொ டீகையோ 383
தேகச் செயலானுஞ் 510
தேகமுதல் நான்காத் 1163
தேகமிறுமென் றுசடர் 816
தேகம்யா தேனு 992
தேகாதி பொய்யென , 933
தேக்கி இன்பந் 221
தேசிகர் கோனான 1313
தேடாத தேட்டினரே 869
தேடினேன் திக்க 835
தேடும் திரவியமுஞ் 868
தேடுவார் தேடுஞ் 1405
தேடுவேன் நின்னரு 995
தேவரெலாந் தொழச் 619
தேவர்தொழும் வாதவூர் 162
தேன்முகம் பிலிற்றும் 165
தொல்லைக் கவலை 1055
தொல்லைவினைக் கீடாய் 489
தோற்பாவை நாலாட் 818
நடக்கினு மோடினு 412
நடத்தியிவ் வுலகை 300
நலமேதும் அறியாத 1437
நன்றறியேன் தீதறியேன் 677
நன்றெனவுந் தீதெனவு 610
நன்னெஞ்சத் தன்ப 1056
நாடும் நகரும் 867
நாட்டமூன் றுடைய 360
நாட்டாதே யென்னை 696
நாட்பட் டலைந்த 895
நாத கீதனென் 243
நாதமே நாதாந்த 605
நாதனை நாதா 574
நாம்பிரம மென்றா 1305
நாய்க்குங் கடையா 1376
நாவமுத்துஞ் சொல் 882
நாளவங்கள் போகா ந 1101
நாளவங்கள் போகாமல் நா 523
நாளும் பொறிவழி 1144
நாள்பட்ட கமலமென்ன 614
நாற்றச் சடலத்தை 418
நாற்றமிக்க காட்டு 1125
நானான தன்மை யெ 860
நானானிங் கெனு 179
நானென நிற்க 171
நானெனவும் நீயென 353

நானென் றொருமுத	414	நீர்க்குமிழி பூண	1117
நானென்னும் ஓரகந்தை	146	நீர்க்குமிழி போலென்	839
நானே கருதின்	1057	நீர்க்குமிழி போன்ற	1058
நான்தான் எனும் மயக்	540	நீர்ப்புற் புதமாய்	838
நித்தமாயொன்றாய்	1342	நீர்பூத்த வேணி	1083
நித்தியமாய் நிர்மலமாய்	14	நூலேணி விண்ணேற	821
நித்தியமொன் றில்லா	815	நெஞ்சகத்தில் வாழ்	1059
நித்திரையாய்த் தானே	948	நெஞ்சகமே கோயி	786
நித்திரையாய் வந்து	1166	நெஞ்சகம்வே றாகி	1397
நித்திரையிற் செத்த	832	நெஞ்சத்தி னூடே	566
நித்திரையும் பாழ்த்த	1021	நெஞ்சு கந்துனை	210
நியம லட்சணமும்	127	நெறிகள் தாம்பல	367
நிர்க்குண நிராமய	47	நெறிபார்க்கினின்னை	608
நில்லாத ஆக்கைநிலை	187	நேசஞ் சிறிதுமி	1360
நில்லாது தேகமெனும்	96	நேசத்தால் நின்னை	942
நில்லாப் பொருளை	514	நேச விருவிகற்ப	686
நில்லாமல் நின்ற	1104	நேசிக்குஞ் சிந்தை	491
நிறைகுடந்தான் நீர்	506	நேராயம் மௌனநிலை	471
நிற்கும் நன்னிலை	199	நேரேதான் இரவுபகல்	157
நினைப்பறவே தாள்	1263	நேரே நினதருளென்	734
நினைப்பும் மறப்பும்	1213	நேற்றுளாரின் று	337
நினையு நினைவு	313	நேரக்கற் கரிதான	477
நினையும் நினைவும்	439	நோயும் வெங்கலி	557
நினைவொன் று நினையா	185	பச்சென்ற கொங்	1134
நின்போதத் தாலே	721	பச்சைகண்ட நாட்	1061
நின்றநிலை யேநிலை	1414	பச்சைநிற மாய்	1089
நின்னிறைவே தாரக	897	பஞ்சசுத்தி செய்து	789
நின்னைச் சரண் புகுந்	898	பஞ்சாப் பொறியை	1172
நின்னையுணர்ந்	850	பஞ்சரித்து நின்னைப்	718
நீக்கப் பிரியா	1198	பஞ்சாய்ப் பறக்கு	1335
நீக்கிமலக் கட்டறுந்து	1085	படிப்பற்றுக் கேள்வி	878
நீங்கா துயிருக்	409	பட்டப் பகற்போலப்	997
நீட்சி குறுகலில்லா	945	பட்டப் பகற்பொழுதை	50
நீதியாய்க் கல்லாலி	509	பணியற்று நின் று	1374
நீதியெங்கே மறையெங்கே	615	பண்டுங்கா ணேன்	1236
நீயற்ற அந்நிலையே	512	பண்டொருகால் நின்	1390
நீயென நானென	458	பண்ணினிசை	1271
நீயேஇங் கெளியேற்	597	பண்ணே னுனக்கான	52
நீயே நானென்று	1012	பதமூன் றுங் கடந்த	392
நீராய்க் கசிந்துருகி	870	பதியுண்டு நீதியுண்டு	578

பத்த ரருந்தும்	905
பத்தர்சித்தர் வாழி	1017
பத்திநீ பத்தி	576
பத்திநெறி நிலைநின்றும்	36
பந்த மயக்கிருக்	971
பந்தமறும் மெய்ஞ்ஞான	151
பந்தமெலாந் தீரப்	961
பரமாப் பரவெளி	994
பரமுனக்கென் றெண்ணு	698
பரம்பர மாகிப்	276
பரவரிய பரசிவமா	395
பவம்பு ரிந்திடும்	388
பழுதுண்டு பாவையர்	433
பள்ளங்க மேடாறும்	1398
பற்ற லாம்பொரு	271
பற்றற் றிருக்கு	877
பற்றிய பற்றற	1423
பற்றினதைப் பற்று	1406
பற்றும் பயிர்க்குப்	724
பற்றுவன அற்றிடு	82
பற்றுவெகு விதமாகி	46
பற்றொழிந்து சிந்தை	990
பன்மார்க்க மான	1301
பன்மாலைத் திரளிருக்க	175
பன்மு கச்சமய	131
பன்முத் திரைச்	1060
பாகத்தி னாற்கவிதை	102
பாகமோ பெறவுனை	583
பாக்கியங்க ளெல்	1255
பாசசா லங்க	811
பாசநிக ளங்க	1364
பாசபந்தஞ் செய்	1062
பாசம் அகலாமல்	1286
பாசம்போய் நின்றவர்	676
பாடாது பாடிப்	115
பாடிப் படித்துலகிற்	683
பாடி யாடிநின்	379
பாடுகின்ற பனுவ	1416
பாட்டாளி துதைந்துவளர்	58
பாட்டுக்கோ வன்பி	999
பாதிவிருத் தத்தா	1098
பாயப் புலிமுன்	401
பாரறியா தண்டப்	748
பாரனைத்தும் பொய்யென	516
பாராசை அற்றிறை	1063
பாராதி அண்டங்க	84
பாராதி ககனப்	100
பாராதி நீயாப்	739
பாராதி பூதநீ	1429
பாராதி பூதமெல்லாம்	461
பாராதியண்ட மெலாம்	189
பாராதி விண்ணனைத்	155
பாராதே நின்று	1384
பாராயோ வென்றுயரம்	598
பாராயோ என்னைமுகம்	663
பாரொடுநன் னீராதி	59
பார்க்கின் அணுப்	998
பார்க்கி னண்ட	752
பார்த்தவிட மெல்	647
பார்த்தனவெல் லாமழியு	621
பாலரொடு பேயர்	778
பாவமென்றால்ஏ தும்	986
பாவிபடுங் கண்	896
பாவியேன் இனியென்	303
பாழாகி அண்ட	544
பிடித்ததையே ஸ்தாபிக்	941
பித்தரிறை என்றறி	1109
பித்தனையே தும்மறியாப்	769
பிரியாத தண்ணருட்	116
பிரியா துயிர்க்கு	974
பிள்ளைமதிச் செஞ்சடை	504
பிறிதொன்றி லாசை	1266
பின்னும் முன்னுமாய்	376
புகலரிய நின்விளையாட்	634
புகழுங் கல்வியும்	267
புண்ணிய பாவங்கள்	1227
புண்ணீர்மை யாளர்	1240
புத்தமிர்த போக	121
புத்தியெனுங் துத்திப்	1149
புத்திநெறி யாகஉனை	567

புந்தியினா னின்னடி	982
புரந்தோர்தந் தேச	863
புலர்ந்தேன் முகஞ்	1239
புலனைந் துந்தானே	505
புலியின் அதளுடையான்	483
புன்பு லாுல்நரம்	206
பூங்கா வனநிழலும்	527
பூட்டற்றுத் தேக	930
பூதமுத லாகவே	580
பூதமுதல் நாத	1014
பூதமொடு பழகிவள	585
பூதலய மாகின்ற	9
பூரணி புராதனி	582
பூராய மாய்மனதை	803
பெண்ணாணலி	1212
பெரிய வண்டங்கள்	368
பெருமைக் கேயிறு	230
பெருவெளியாய் யைம்பூதம்	16
பெற்றவட் கே தெரியு	595
பெற்றவர் பெற்ற	309
பெற்றார் அநுபூதி	1011
பெற்றோம் பிறவாமை	501
பேசா வநுபூதி	284
பேசா இடும்பை	1424
பேசாத மோனநிலை	919
பேச்சாகா மோனம்	712
பேச்சுமூச் சில்லா	1214
பேதித்த சமயமோ	85
பேதைப் பருவத்	1064
பேறனைத்தும் அணு	134
பைங்கூழ் நினைதான்	1160
பைம்பயிரை நாடும்	1065
பொங்கியநின் தண்ணருளை	777
பொங்கேத மான	1237
பொய்கண்டார் காணா	1097
பொய்குவித்த நெஞ்ச	927
பொய்க் காட்சியான	1178
பொய்க்கூடு கொண்டு	1066
பொய்திகழும் உலகநடை	61
பொய்ப்பணி வேண்	1067
பொய்ம்மயமே யான	1354
பொய்ம்முடங்கும் பூமி	1242
பொய்யகல மெய்யான	950
பொய்யனிவ னென்று	694
பொய்யா ருலக	419
பொய்யினேன் புலையினேன்	74
பொய்யுணர்வா யிந்த	1024
பொய்யுலக வாழ்க்கை	820
பொய்யுலகும் பொய்	1320
பொய்யெல்லாம் ஒன்றாய்	813
பொய்யென் றறிந்து	1328
பொய்யைப் பொய்யென்	740
பொருந்தசகம் அனைத்	623
பொருளாகக் கண்டபொரு	20
பொருளேநின் பூரணமே	617
பொருளைப் பூவை	319
பொல்லாத காமப்	1154
பொல்லாத மாமர்	449
பொறியிற் செறியைம்	334
பொறிவழியே ஏழை	810
பொற்பினொடு கைகாலில்	113
பொற்பு றுங்கருத்	343
பொன்னாரும் மன்று	1084
பொன்னை மாதரை	194
போக்குவர் வற்ற	1289
போதமென் பதே	338
போதவூர் நாடறிய	1110
போதாந்தப் புண்ணியர்கள்	653
போற்றே னென்றாலு	1241
போனகம் இருக்கின்ற	41
போனநாட் கிரங்குவதே	613
மடிமையெனும் ஒன்றை	836
மட்டிலாச் சிற்சுக	1355
மட்டுப் படாத	1069
மண்டலத்தின் மிசை	390
மண்ணாதி ஐந்தொடு	48
மண்ணாதி பூதமெல்	1006
மண்ணான மாயை	967
மண்ணீரிமை யாலே	968
மண்ணும் மறிகடலும்	1022

மண்ணும் விண்ணும் 774
மண்ணுறங்கும் விண் 1068
மண்ணூ டுழன்ற 1224
மண்ணொடுவிண் காட்டி 717
மதியுங் கங்கையுங் 264
மத்தமத கரிமுகிற் 105
மத்தர் பேயரொடு 130
மந்தவறி வாகி 834
மந்திரத்தை யுன்னி 951
மயக்கு சிந்தனை 356
மயக்குறுமென்மன மணு 629
மரபைக் கெடுத் 1426
மரவுரி யுடுத்துமலை 97
மருமலர்ச் சோலை 111
மலைமலையாங் காட்சி 147
மறக்கின்ற தன்மை 447
மறமலி யுலக 308
மறைமுழக் கொலிப்பத் 169
மற்று னக்கு 244
மனதேகல் லாலென 1432
மனத்காலும் வாக்காலு 479
மனமான வானர 1146
மன்றாடும் வாழ்வே 1327
மாசற்ற வன்பர் 1318
மாசான நெஞ்சனி 1394
மாடு மக்கள் சிற்றிடை 603
மாதத்தி லேயொரு 451
மாய மயக்கொழிந் 831
மாயா சகத்தை 468
மாயா சகமிலையேல் 742
மாயா விகார மலமொழி 1168
மாயா விகார- மலமகல 1319
மாயைமுத லாயவினை 746
மார்க்கண்டாக் காக 763
மாலைவளர்த் தென் 1070
மால்காட்டிச் சிந்தை 703
மால்வைத்த சிந்தை 966
மாறா அனுபூதி 658
மாறாத துன்பமெல் 899
மா றுபடு தர்க்கக் 69
மிடியிட்ட வாழ்க்கை 581
மின்போலுமி டை 120
மின்னனைய பொய் உடலை 40
மின்னனைய பொய்-மெய் 814
மின்னைப் போன்றன 340
மின்னை யன்னபொய் 377
முகமெ லாங்கணிர் 558
முக்குணத்தால் எல்லாம் 801
முக்குணத்தைச் சீவ 1174
மூச்சகமே யாதி 1306
முந்தனைய முரலும் 98
முத்தாந்த வித்தே 1000
முத்தாந்த வீதி 654
முத்திக்கு வித்தான 1020
முத்தியிலுந் தேக 844
முத்தே பவளமே 644
மும்மலச்சே றான 1124
முருந்திள நகையார் 572
முற்றுமோ வெனக்கினியா 620
முன்னுள் மெய்ஞ்ஞான 857
முன்னிலைச் சுட்டொழி தி 329
முன்னிலைச் சுட்டொழி நெ423
முன்னினைக்கப் பின் 1399
முன்னொடுபின் பக்க 706
மூச்சற்றுச் சிந்தை 1246
மூர்த்திதலந் தீர்த்தம் 791
மூர்த்தியெல்லாம் வாழி 864
மூல இருள் கால் 1370
மூன்றுகண்ணா மூத்தொழி 490
மெய்த்தகுலங் கல்வி 1250
மெய்யான தன்மை 462
மெய்யில்நோய் மாற் 1071
மெய்யிற் சிவம் 1141
மெய்யைப் பொய் யென்றிட 526
மெய்விடா நாவுள்ள 51
மெய்வீக நாற்ற 1127
மெல்லியலார் மோக 1357
மேலொடுகீ ழில்லா 1293
மேவுபஞ்ச வண்ண 1072
மேற்கொண்ட வாயுவுங் 428

மைகாட்டு மாயை 965
மையு லாம்விழி 233
மைவண்ணந் தீர்ந்த 707
மோன குருவளித்த 534
மோனந் தருஞான 980
யாதும்மன நினையுமந்த 15
யானெனல் காணேன் 311
யான்றானென 524
யோகியர்க்கே ஞான 725
வஞ்சகத்துக் காலய 1332
வஞ்சகமன் வாதனைக்கும் 756
வஞ்சமோ பண்டையுள 546
வஞ்சனை அழுக்கா 295
வஞ்சனையும் பொய்யு 675
வடிவனைத்துந் தந்த 177
வடிவிலா வடிவாய் 281
வடிவெ லாநின் 227
வட்ட மிட்டொளிர் 586
வண்டாய்த் துவண்டு 745
வந்ததையும் போனவை 808
வந்த வரவை ம 1448
வந்த வரவை 549
வந்தவா றிந்த 344
வந்தித்து நின்னை 699
வந்தெனுடல் பொரு 149
வம்பனேன் கள்ளங் 292
வரும்போமென் பனவு 192
வரும்போமென்னு 314
வருவான்வந்தேன் எனல் 749
வல்லமையே காட்டு 800
வல்லானா மோணா 1400
வழியிதென் றும் அல்லா 515
வளம்பெறு ஞான 274
வன்பொன் று நீங்கா 917
வன்மை யின்றி எல்லாம் 1016
வாக்காதி யான 1145
வாக்காய் மனத்தாய் 646
வாக்கால் மனத் 1340
வாக்குமனம் ஒன் று 1015
வாக்குமனமற்ற 1106
வாக்கு மனமும் 1401
வாசக்ஞா னத்தால் 823
வாசா கயிங்கரிய 4
வாடாதே நானா 1291
வாடுமுகங் கண் 981
வாட்டப் படாத 1074
வாதவூ ராளிதனை 1325
வாதானைப்பழக் 349
வாதனையோ டாடு 1380
வாதனைவிட் டுன்னிருளின் 736
வா துக்கு வந்தெதிர் 805
வாதைப் பிறவி 1190
வாயாதோ இன்ப 548
வாயாற் கிண று 985
வாயிலோ ரைந்திற் 306
வாயினாற் பேசா 691
வாயொன் றும் பேசா 766
வாய்க்குங் கைக்கு 235
வாய்திறவா வண்ண 1073
வாய்பேசா வூமையென 761
வாரா தெலாமொழிய 11
வாராய்நெஞ் சேயுன் 450
வாரா வரவாக 1075
வாரா வரவாய் 547
வாரி ஏழும் 211
வாரிக் கொண்டனை 223
வாலற்ற பட்ட 1321
வாவாவென் றின்பம் 513
வாவிக் கமலமலர் 563
வாழா து வாழஉனை 561
வாழி சோபனம் 326
வாழ்த்து நின்னருள் 214
வாழ்வனைத்தும் தந்த 393
வாழ்வனைத்தும் மயக்க 178
வாழ்வென வயங்கி 297
வாழ்வெனவுந் தாழ் 611
வாளாருங் கண்ணா 1334
வாளாருங் கண்ணி 1447
வான நாயக 381
வானந்த மண்ணி 648

வானமுகில் கண்ட 1229
வானமெல் லாங் 650
வானாதி தத்துவமாய் 946
வானாதி நீயெனவே 743
வானாதி பூதமா 73
வானூட டங்கும் 1275
வானே முதலாம் 280
வானைப் போல 216
வான்காண வேண்டின் 735
வான்கெடுத்துத் தேடு 1176
வான்பொரு ளாகி 359
விஞ்சுபுலப் பாடனை 900
விண்கருணை பூத்த 952
விண்டு மொழிகுளறி 1140
விண்ணருவி மேன்மேல் 503
விண்ணவ நீர்திரன் 139
விண்ணவர்தம் பால 1076
விண்ணவன் றாளென்னு 1187
விண்ணாடர் காணா 1234
விண்ணாதி பூதமெல்லாந்த 22
விண்ணாரக் கண்ட 1367
விண்ணார் நிலவு 1078
விண்ணா று வெற்பின் 564
விண்ணிறைந்த வெளி 23
விண்ணுள் வளியட 1077
விதிக்கும் பிரபஞ்ச 1448
விதியை யும்விதித் 256
வித்தன்றி யா தும் 708
வித்தியா தத்துவங் 1152
விமலமுதற் குணமாகி 136
விரிந்த மனமொடுங் 771
விரும்புஞ் சரியைமுதல் 792
விளக்குந் தகளியை 738
விளங்க வெண்ணீ று 168
விளங்கவெனக் குள் 604
விளையுஞ் சிவானந்த 1435
வீங்கித் தளர்ந்து 1132
வீணே பிறந்திருத் 1345
வீறியவே தாந்த 1253
வெஞ்சே லெனும் 1087
வெட்ட வெளிப் பேதை 701
வெந்துவெடிக் கின்ற 1182
வெந்நீர் பொறாதெ 81
வெம்பந்தந் தீர்த் 1107
வெய்ய பிறவி 1189
வெய்யபுலி பார்த்து 1188
வெளியாய் அருளில் 825
வெளியான நீயென் 406
வெளியில் நின்ற 239
வெள்ளக் கருணைமத 744
வெள்ளங் குலாவு சடை 487
வேட்டைப் புலப்புலை 1147
வேண்டாம் விருப்பும் 1444
வேண்டியநா ளென்னோடும் 399
வேண்டுஞ் சீரருள் 208
வேண்டும் யாவும் 258
வேண்டுவ படைத்தாய் 166
வேதமுடன் ஆகம 91
வேத முதலாய் 476
வேத மெத்தனை 366
வேதாந்தஞ் சித்தாந்தம் 841
வேதாவை இவ்வணம் 109
வேலையிலா வேதன் 1122
வே றுபடுஞ் சமயமெல்லாம் 630
வைதிகமாஞ் சைவ 1105
வைத்தகவரலம் 929
வைத்த தேகம் 203
வைத்தபொருள் உடலாவி 601
வைத்திடுங்கா லைப்பிடித்து 599
வையக மாதர் 453

✪ ✪ ✪

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி. சென்னை - 600 013

அண்மை வெளியீடுகள்	ரூ. பை.
சிலப்பதிகார இலக்கியக் கட்டமைப்பு	160.00
பழந்தமிழரின் பழக்க வழக்கங்கள்	55.00
பேரறிஞர் அண்ணாவின் சமூகப் பொருளாதாரச் சிந்தனைகள்	75.00
தமிழ்ச் செவ்வியல் நூல்களில் அறம். அறிவியல். சமூகம்	70.00
கிறித்தவக் காப்பியங்கள்	225.00
தமிழ் நாளிதழ்களின் மொழிநடை	70.00
சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் அன்றும் இன்றும்	50.00
குலோத்துங்கனின் கவிதை வளம்	60.00
தமிழ்த்தூது (கட்டுரைக் கொத்து)	40.00
தனிநாயக அடிகளாரின் ஆய்வுகள்	50.00
அறிவியல் பார்வையில் வேதாத்திரிய உடல்நலக் கொள்கைகள்	60.00
பழங்குடி மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பாடநூல் மதிப்பீடு	65.00
பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் மனிதவள மேம்பாடும்	50.00
மேலை நாட்டறிஞர்களின் தமிழ்த்தொண்டு	175.00
பெரியார் என்னும் பேரொளி	60.00
சீனக்கவிஞர் குமோரோவின் தேவதைகள் (கவிதைத் தொகுப்பு)	70.00
புலம்பெயர்ந்தோர் படைப்புகளில் செவ்வியல் இலக்கியங்களின் தாக்கம்	100.00
உலகத் தமிழியல் ஆய்வுகள் (தொகுதி1)	450.00
செவ்விலக்கியச் சாரம்	70.00

வெ. எண் : 811

தாயுமான சுவாமிகள் பாடல்கள்

390.00